शाश्वतधर्मगोप्त्रे श्रीमते वासुदेवाय नमः

पातञ्जलयोगसूत्रम्

பாதஞ்ஜலயோக ஸூத்திரம்.

வியாஸபாஷ்யம், வாசஸ்பதிமிச்ரரின் வியாக்யானம்,
நாகோஜிபட்டவிருத்தி, பாவாகணேசீய வியாக்
யானம், ராமானந்தஸ்வாமிகள் வியாக்யானம்,
ஸதாசிவேந்திர ஸரஸ்வதிகளின் விருத்தி,
போஜவிருத்தி ஆகிய 8 வியாக்யானங்க
ளைத் தழுவிய தமிழுரையுடன்
கூடியது.

இச்சிறந்த உரை
மஹாமஹோபாத்யாய
வேதாந்தகேஸரி பங்காளூடு
பிரும்மஸ்ரீ கணபதி சாஸ்திரிகள்
அவர்களின் முக்கிய சிஷ்யரும், வியாகரண
வேதாந்த சாஸ்திரபாரங்கதரும், பாகவத, பகவத்
கீதோபன்யாஸகரும் சோதிட மந்திர சாஸ்திர வித்வானும்
'ஆர்யமத ஸம்வர்த்தனீ' பத்திராதிபருமான

பிரும்மஸ்ரீ, கடலங்குடி நடேச சாஸ்திரிகள்

அவர்களால் இயற்றி பிரசுரஞ் செய்யப்பட்டது.

1927.

[விலை ரூ. 3.

காபிரைட்]

ஆர்யமதஸம்வர்த்தனீ பிரஸ்
72, பெரியதெருவு, திருவல்லிக்கேணி, சென்னை.

॥ शाश्वतधर्मगोप्त्रे श्रीमतेवासुदेवाय नमः ॥

। योगदर्शनम् ।

முகவுரை

दर्शनम्=दृश्यत अनेनेति दर्शनम् "இதனுதவியாலறியப்படுவது பற்றி 'தர்சனம்' எனப்படும்" என்ற உரையால் தர்சனமென்ற க்ஞானமானது எதனாலுண்டாகின்றதோ அது "தர்சனம்" என்று சொல்லப்பட்டதாகவாகின்றது. ஆகவே க்ஞான ஸாதனங்களான, கர்மா முதலியவைகளும், அதையுபதேசிக்கின்ற சாஸ்திரங்களும் தர்சன சப்தத்தாற் சொல்லப்படுகின்றது. அத்தகைய தர்சன பதத்தாற் சொல்லப்படும் சாஸ்திரங்கள், (1) ஸாங்க்யம், (2) யோகம், (3) நியாயம், (4) வைசேஷிகம், (5) பூர்வமீமாம்ஸை, (6) உத்தரமீமாம்ஸை என ஆறுவகைப்படும். கபிலர், பதஞ்ஜலி, கௌதமர், கணாதர், ஜைமினி, வியாஸர் என்ற ஆறு மஹருஷிகள் முறையே இவற்றைச் செய்தவர்களாவர். இவ்வாறு தர்சனங்களுள் முதலாவதான ஸாங்கியதர்சனமானது கபிலமஹருஷியால் சூத்திரவடிவமாய் செய்யப்பட்டது. அதன் பொருளைச் சுருக்கி ஈசுவர கிருஷ்ணர் என்ற மஹான் "ஸாங்கியதத்வகாரிகா" என்ற கிரந்தத்தில் விரிவாயும், தெளிவாயும் உபதேசித்திருக்கிறார். அந்த ஸாங்க்ய காரிகையென்ற கிரந்தத்திற்கு வாசஸ்பதிமிச்ரர் என்ற மஹான் ஸாங்கிய தத்துவ கௌமுதீ என்ற பெயருடன் ஓர் உரை வடமொழியி லெழுதியிருக்கிறார். நாம் இவ்விரு கிரந்தங்களுக்கும் வெகுபாடுபட்டுத் தமிழில் பதவுரை, கருத்துரை, விசேஷவுரை இவைகளை எழுதி வெளியிட்டிருக்கிறோம்.

இரண்டாவதான யோகதர்சனவிஷயமாய் हिरण्यगर्भो योगस्य वक्ता नान्यः पुरातनः । "ஹிரண்யகர்ப்பர்யோகத்தையுபதேசித்தவர், அவர்க்குமுன் எவரும் யோகவிஷயத்தையுபதேசித்தாரில்லை" என யோகயாக்ஞயவல்க்யருபதேசித்திருப்பதிலிருந்து இந்தயோகதர்சனமாது முதன்முதலில் ஹிரண்யகர்ப்பராலேயே செய்யப்பட்டதாய்தெளிவாகின்றது. 2வது அத்தியாயம், 1வதுபாதம், 3வதுபிரும்ம சூத்திரசாங்கரபாஷ்யத்தில் "योगशास्त्रेपि 'अथतत्वदर्शनोपायोयोगः' इति सम्यग्दर्शनाभ्युपायत्वेनैवयोगोऽङ्गीक्रियते॥ என்று கூறியிருப்பதிலிருந்து யோகசாஸ்திரமானது अथ तत्वदर्शनोपायः (அத தத்வதர்சனோபாய:யோக:) என்று தொடங்கியிருப்பதாக வெளியாகின்றது. இதைக்கவனிக்கும்பொழுது முன்னர் சொன்ன யோகயாக்ஞய வல்க்யவசனப்படி, யோகசாஸ்திரகர்த்தாவாக வெளியானஹிரண்யகர்ப்பரே अथतत्वदर्शनोपायोयोगः என்றுதொடங்கி யோகதர்சனத்தை முதன்முதலிற் செய்தருளினர் என்று கொள்வது பொருத்தமாகவாகின்றது. இவ்விதமே ஸம்ப்ரதாயமறிந்த பெரியாரு முபதேசிக்கின்றனர். ஆகவே, ஹிரண்ய கர்ப்பராற் செய்யப்பட்ட யோகசாஸ்திரத்தைச் சுருக்கமாயும், தெளிவாயும் பதஞ்ஜலிமஹருஷியானவர் சூத்திரவடிவமாய் உபதேசித்தருளினர் என்றேற்படுகின்றது. மேலும், இந்தயோகதர்சனத்தைச் செய்த பதஞ்ஜலிமஹருஷியும், வியாகரண மஹாபாஷ்யத்தைச் செய்த பதஞ்ஜலிமஹருஷியும், ஒருவர்தானென்பது

योगेन चित्तस्य पदेन वाचां मलं शरीरस्य तु वैद्यकेन ।
योऽपाकरोत्तं प्रवरं मुनीनां पतंजलिं प्रांजलिरानतोऽस्मि ॥

"யோகசாஸ்திரத்தை வெளியிட்டு சித்ததோஷத்தையும், வியாகரணபாஷ்யத்தைவெளியிட்டு சப்ததோஷத்தையும், வைத்யசாஸ்திரத்தைவெளியிட்டுசரீரதோஷத்தையும்போக்கி உபகரித்த பதஞ்ஜலியை நான் நமஸ்கரிக்கின்றேன்" என ஆதிகாலந்தொடங்கிநாளிதுவரை பண்டிதபரம்பரையிற் சொல்லிவரும் பதஞ்ஜலிமஹருஷியின் நமஸ்கார சுலோகத்தினின்றும் தெளிவாகின்றது. ஆகவே நாம் மொழிபெயர்த்து வெளியிட்ட இந்தயோகசாஸ்திரமானது வியாகரணபாஷ்யம் செய்தருளின பதஞ்ஜலிமஹருஷியாற்றான் செய்யப்பட்டதென்பதில்யாதும் ஐயமில்லை.

சங்கை—அங்ஙனமாயின் சங்கரபாஷ்யத்தில் **योगशास्त्रे** என்றவிடத்தில் இந்தசூத்திரத்தை ஏன்செல்லியிருக்கக்கூடாது? அவ்விதம் கூறுததிலிருந்து சங்கரபகவத்பாதாசாரியாள் காலத்தில் இந்தப்பாதஞ்ஜலயோக சூத்திரத்தையோகதர்சனமாக அங்கீகரிக்கவில்லையென்றோ, அல்லது அக்காலத்தில் இந்தச்சூத்திரங்கள் செய்யப்படாமல் பின்னரே செய்யப்பட்டதென்றோ ஏன் சொல்லக்கூடாது. ஆகவே இந்தச் சூத்திரங்கள் பாஷ்யக் காரர்களுக்குப் பின்னுள்ளவர்களாலேயே செய்யப்பட்டு பதஞ்ஜலிமஹருஷியால் அதுசெய்ததாக ஏதோவழங்கப்பட்டுவருகின்றது என்று சொல்லுவதுதான் பொருத்தமானதாகவாகும் ஏனின்?

உத்தரம்—அதனுண்மை இங்கு கூறுவாம், வியாஸாசாரியஸ்வாமிகளாலியற்றப்பெற்ற பிரும்ம சூத்திரத்திற்குப் பாஷ்யஞ் செய்யப்புகுந்த சங்கர பகவத்பாதாசாரிய ஸ்வாமிகளவர்கள் எதற்கும் முதன்மையான உபனிஷத்வாக்கியங்களையே ஆங்காங்கு பிரமாணமாகக் காட்டுவது போலவே இந்த யோகவிஷயத்திலும் முதன் முதலில் யோகதர்சன கர்த்தாவான ஹிரண்யகர்ப்பரால் செய்யப்பட்ட யோகதர்சனாரம்ப சூத்திரத்தை மட்டும் எடுத்துக் காட்டியிருக்கின்றனர் என்று கொள்ளுவதில் யாதும் தடையில்லை. மேலும், பாஷ்யகாரரவர்கள் பிருஹதாரண்யகோபநிஷத் முதலாவது அத்தியாயம், நான்காவது பிராம்மணத்தில், **आत्मेत्येवोपासीताऽत्रह्येते सर्वे एकं भवन्ति** என்றமந்திரத்திற்குப் பாஷ்யம் செய்யுமிடத்தில் **अथ योगाऽनुशासनम्, योगश्चित्तवृत्तिनिरोधः, तदा द्रष्टुः स्वरूपेऽवस्थानम्,** என்ற 3 சூத்திரங்களின் பொருளையும் தெளிவாயுபதேசித்திருக்கின்றனர். மேலும் பிரும்ம சூத்திரம் 1வது அத்தியாயம் 3வதுபாதம். 33 வது சூத்திரபாஷ்யத்தில் **स्वाध्यायादिष्टदेवता संप्रयोगः,** என்றயோகசூத்திரம் 2. வதுபாதம் 44வது சூத்திரத்தை உதாஹரித்து மிருக்கின்றனர். ஆகவே பாஷ்யக்காரர் அவர்களாலும் இந்தப் பாதஞ்ஜலயோக சூத்திரமானது ஒப்பப்பட்டிருப்பதால் இந்தப் பாதஞ்ஜலயோகதர்சனமானது அனுதியென்றும், அதன்படி யோகதர்சனத்தைத் தெரிந்துகொள்வது அவசியந்தானென்றும் ஏற்பட்டது. மேலும் சங்கரபகவத்பாதாள் ஸாங்க்யதர்சனத்தைப்பற்றிப்பேசுமிடத்து

கபிலமஹருஷியாற் செய்யப்பட்ட ஸாங்க்ய ஸூத்திரங்களை உதாஹரிக்காமல், ஈசுவரகிருஷ்ணராற் செய்யப்பட்ட ஸாங்க்யகாரிகையை உதாஹரித்திருப்பதற்காக கபிலஸூத்திரமே, பாஷ்யக்காரர் காலத்திலில்லை என்று சொல்லிவிடமுடியுமோ? ஒருபொழுதும் முடியாது. பாஷ்யக்காரர் அவர்களோ பாதஞ்ஜலயோக ஸூத்திரங்களை உதாஹரித்து மிருக்கின்றனர் என்பதைமுன்னரே சொல்லியுமிருக்கிறோம். மேலும். வித்யாரண்யஸ்வாமிகள் தமது "ஸர்வதர்சனஸங்க்ரஹம்" என்ற கிரந்தத்தில் இந்தப் பாதஞ்ஜலயோக ஸூத்திரங்களை யொப்பியிருப்பதிலிருந்தும் மேற் கூறியதை உறுதிசெய்ய இடமேற்படுகின்றது. ஆகவே முற்கூறிய ஆசங்கைக்கிடமில்லை.

சங்கை—அங்ஙனமாயின் இந்தயோகதர்சனத்தை வியாஸாசாரியாளும், சங்கரபகவத்பாதாசாரியாளும் ஒப்பாததன் காரணம்யாது எனின்? உத்தரம்—அதனுண்மை இங்குகூறுவாம். சாங்கர ஸூத்திரபாஷ்யம், 2வது அத்தியாயம். 1வதுபாதம் 3வது ஸூத்திரத்தில் **द्वैतिनो हि ते सांख्या योगाश्च नात्मैकत्वदर्शिनः** என்றதால் ஸாங்கியதர்சனக்காரர்களும், யோகதர்சனக்காரர்களும் ஆத்மாவைநித்யமென்று சாதித்தும், பிரபஞ்சகாரணமாகப்பிரதானம் என்றப் பிரகிருதியை அங்கீகரித்தும் இருப்பதுடன் ஆத்மா, பிரகிருதி ஆகிய இவ்விரண்டும் உண்மையில் வேறானதென்றும், இவ்விரண்டும் நித்தியமான தென்றும் சாதித்தும் இருக்கின்றனர். ஆகவே ஆத்மாவை நித்திய மென்று சொல்லுவதை ஏதோஒருவாறு அங்கீகரிக்கலாமாயினும், பிருகிருதியை நித்யமாகக் கூறுவது சுருதி, யுக்தி, அனுபவங்களால் ஒப்பக் கூடாததாக இருப்பதே அவ்விருஸாங்கிய, யோகசித்தாந்தங்களை ஒப்பாததில் முக்கியகாரணமாகும் என்றும் கூறியிருக்கினறனர். மேலும், **निराकरणन्तु न सांख्यज्ञानेन वेदनिरपेक्षेण योगमार्गेणवा निश्रेयसमधिगम्यत इति**சாங்க்யயோகங்களைநிராகரிப்பதன்காரணம், யாதெனில். ஸாங்க்யஞானத்தினுலோ,வேதநிரபேக்ஷமான யோகக்ஞானத்தாலோ மோக்ஷத்தையடைய முடியாதென்பதாம். என்றும் கூறியிருக்கின்றனர். மேலும் இவ்விதம் ஸாங்க்ய, யோகதர்சனங்களையே முற்றிலும் தள்ளிவிட்டால் அத்தர்சனங்கள் அடி

யோடுவீணாகிவிடுமன்றோ ? என்ற சங்கைக்குப்பதில் கூறுமிடத்து "येन त्वंशेन नविरुध्येते तेनेष्टमेव सांख्ययोगस्मृत्योः सावकाशत्वम्॥ எந்தவிஷயம் வேதாந்தங்களுக்குவிரோதமில்லாதிருக்கின்றதோ அவ்விஷயத்தை யுபதேசிப்பதன்வாயிலாக அவ்விருதர்சனங்களும் ஒருவாறு பயனுள்ளனவாகவே ஆகிவிடுகின்றன." என்று கூறியுமிருக்கின்றனர். ஆகவே சங்கரபகவத்பாதாசாரியாளவர்கள் இவ்விருதர்சனங்களிலும் சுருதிக்கு விருத்தமான அம்சங்களை நிராகரித்திருக்கின்றனரேயன்றி, சுருதிக்கு ஒத்ததாக எந்தெந்தவிஷயங்கள் இவ்விருதர்சனங்களிலு முபதேசிக்கப்பட்டிருக்கின்றனவோ அவற்றை யப்படியே ஒப்பியுமிருக்கின்றனர் என்றும் ஏற்படுகின்றது. ஆகவே வேதவிருத்தமான பாகங்களைத் தவிற வேதானுரூபமான பாகங்களைக் கூறும் இவ்விருதர்சனங்களும், மோக்ஷார்த்திகளால் அங்கீகரிக்கவேண்டியதாகவே தான் ஆகின்றது.

மேலும், முற்காலத்திலுள்ள மஹான்களான மஹருஷிகள் முக்காலமும் கண்டவர் (த்ரிகாலக்ஞர்) களாக இருந்தனர் என்பதையும், நெருப்பில் நடக்கவோ ஜலம், முள்ளு இவற்றில் தரையிற் போலவே நடக்கவோ திறமையுள்ளவர்களாயிருந்தனர் என்பதையும், மற்றும் இதுபோன்ற தூர சிரவணம், ஆகாசகமனம், முதலிய ஸித்திவிசேஷங்களையும் அடைந்திருந்தனர் என்பதையும் இதனாலறிந்து கொண்டு அதற்குத் தக்கதான ஸாதனங்களில் பிரவிருத்தியை அதிகாரியானவன் அடையக்கூடும். மேலும், வேதாந்தாதி சாஸ்திரங்களில் ஒரு ஜீவனுக்கு நம்பிக்கையுண்டாகி அவற்றில் தீவ்ரப்ரவிருத்தி யுண்டாகவேண்டுமானால் இந்த யோகதர்சனத்திற் சொல்லிய யாதானுமொரு ஸாதனானுஷ்டானஞ் செய்து அதன்மூல மேற்படும் ஸித்தியைப்பெற்றாலன்றி அவனுக்குச் சாஸ்திரங்களில் பூர்ண நம்பிக்கையுண்டாவது சிரமசாத்தியமானது பற்றி இந்தயோகதர்சனத்தை நன்கு படித்தறிந்து கொள்ளுவது மிக்க மிக்க அவசியமாகின்றது. இதையே 1-வது பாதம், 35-வது சூத்திரத்தின் வியாஸபாஷ்யத்தில்

यद्यपि हि तत्तच्छास्त्रानुमानाचार्योपदेशैरवगतमर्थतत्वं सद्भूतमेव भवति, एतेषां यथाभूतार्थप्रतिपादनसामर्थ्यात्, तथापि यावदेकदेशोपि

कश्चिन्नस्त्रकरणसंवेद्यो भवति तावत्सर्वं परोक्षमिवाऽपवर्गादिषु सूक्ष्मेष्वर्थेषु न दृढां बुद्धिमुत्पादयति। तस्माच्छास्त्राचार्योपदेशोपोद्बलनार्थमेवाऽवश्यं कश्चिदर्थविशेषः प्रत्यक्षीकर्तव्यः। तत्र तदुपदिष्टार्थैकदेशप्रत्यक्षत्वे सति सर्वं सूक्ष्मविषयमपि आऽपवर्गाच्छ्रद्धीयते। एतदर्थमेव चित्तपरिकर्म निर्दिश्यते ॥

என்றதாற் சொல்லப்பட்டிருக்கிறது. மேலும், "ஸாதன மின்றி யொன்றைச் சாதிப்பாருலகிலில்லை யாதலாலிந்த நான்கு மடைந்தவர்க்கறிவுண்டாகும்" என்றபடி வேதாந்த சாஸ்திர சிரவணத்திலோ, சிரவணப்பொருளைத்தானே சிந்திப்பதிலோ, இன்றியமையாச் சாதனமான நித்யா நித்யவஸ்து விவேகம், வைராக்யம், ஸமதமாதி ஸாதனஸம்பத்து, மோக்ஷ இச்சை ஆகிய இந்நான்கையும் இந்த யோகதர்சன வுதவியின்றி சுளுவில் ஒருவனடைந்துவிட முடியாது. ஆனது பற்றியும் இந்த யோகதர்சனத்தை அப்யஸிக்க வேண்டுவது மிக்க அவசியமாகின்றது. ஆகவே ஆஸ்திகராகவுள்ள எவரும், இந்த யோகதர்சனத்தைப் படித்து அதன்படி முறையே சக்திக்குத் தக்கபடி பழக்கத்திற் கொண்டுவரவேண்டுவது அவசியமாகிவிட்டது. ஆகவே மேலான நிலையையுண்டுபண்ணும் இந்தப்பாதஞ்ஜலயோக சூத்திரத்தை, (1) வியாஸபாஷ்யம் (2) வாசஸ்பதி மிச்ரவ்யாக்யானம், (3) நாகோஜிபட்டவிருத்தி, (4) பாவாகணேசீயவிருத்தி, (5) போஜவிருத்தி, (6) ராமாநந்த ஸ்வாமிகளின்விருத்தி, (7) ஸதா சிவப்பிரும்மேந்திராளின் விருத்தி, (8) போஜவிருத்தி ஆகிய 8 வியாக்கியானங்களைத் தழுவி எளிய தமிழ் நடையில் நாமறிந்தவரை இதற்கு உரையெழுதி யிருக்கிறோம். ஆகவே இம்மொழி பெயர்ப்பின் மூலம் இந்த யோகதர்சனத்தை ஒவ்வொரு ஆர்யசிகாமணிகளும் படித்தறிந்து நற்பயன் பெறுவதுடன், இவ்வழியில் பாடுபடும் நமக்கு ஊக்கமளித்து உபகரிக்க வேண்டுமாயும் வேண்டுகிறோம்.

யோக சூத்திர கர்த்தாவான பதஞ்ஜலி மஹருஷி எக்காலத்திலிருந்தார்; யோகதர்சனம், வியாகரண பாஷ்யம், வைத்யம் முதலிய கிரந்தங்களைத் தவிரவேறு என்னென்ன கிரந்தங்களைச் செய்தார் என நிச்சயமாய் கூறமுடியாவிட்டாலும், ஒருவாறு அவர்காலத்தை கண்டுபிடிக்க இடமிருக்கிறது. அதாவது:—

तिष्ये प्रयात्यनलशेवधिबाणनेत्रे यो नन्दने दिनमणावुदगध्वभाजि ।
राधेऽदितेरुडुनि निर्गतमस्तलग्ने प्याहूतवान् शिवगुरुः स च शंकरेति ॥

என்றப்ராசீன சங்கரவிஜய சுலோகப்படி, கலிபுறந்து 2593 வருஷம் சென்றபிறகு நந்தன வருஷத்தில் அதாவது: இன்று முதல் 2436 வருஷத்திற்கு முந்தி (கி-மு, 502 வருஷத்திற்கு முந்தி) சங்கர பகவத்பாதாள் அவதரித்ததாக ஏற்படுகின்றது. சங்கர பகவத்பாதாளோ இந்த யோகசூத்திரங்களைத் தமது பிரும்மசூத்திர பாஷ்யம் முதலியவற்றில் மேற்கோளாகக் கூறியிருப்பதுடன் வேதாந்த விருத்தமில்லாத விஷயங்களில் இந்த சூத்திரங்களைப் பிரமாணமாகவும் அங்கிகரித்திருப்பதிலிருந்து, பதஞ்ஜலி மஹாருஷியானவர் சங்கரபகவத் பாதாளுக்கு முந்தியிருந்தவர் என்று கொள்ளுவதில் யாதும் தடையில்லை. ஆனால் பாஷ்யக்காரர் அவர்கள்தான் செய்த பாஷ்யக்கிரந்தங்களில் தனக்கு முன்னுள்ள புராதனமான கிரந்த வசனங்களை மேற்கோளாகக் காட்டி யிருக்கின்றனரே யின்றி ஸாமான்னியமான நூற்களின் வசனங்களை ஒருயிடத்திலாவது மேற்கோளாகக் காட்டவில்லை. இதைக்கவனிக்கும்பொழுது கலிபுறந்ததற்கு முந்திதுவாபரயுகத்தின் முடிவிலிருந்த வியாஸர், முதலியோரின் வசனத்தைப் பிரமாணமாக ஆங்காங்கு காட்டியிருக்கும் முறையில் இந்தயோக ஸூத்திரத்தையும் மேற்கோளாகக்காட்டியிருப்பதைக்கவனிக்கும்பொழுது, இந்தப்பதஞ்ஜலிமஹாருஷியானவர் வியாஸாசாரியாளுக்கு ஸமகாலமான துவாபராந்தத்தில் அதாவது: இன்றுமுதல் 5000வருஷங்களுக்குக்கீழ் 6000வருஷத்தித்துக்குள் இருந்தவரென்று ஒருவாறு கூறலாம்.

மேலும் இந்த யோகசூத்திரத்திற்கு வியாஸா சாரியாள் செய்திருக்கும் பாஷ்யம் ஈளிதுவரை பிரசாரத்திலுமிருந்து வருகிறது. இதைக்கவனிக்கும் பொழுதும். இந்தப் பதஞ்ஜலி மஹாருஷியானவர் பிரும்ம சூத்திரகர்த்தாவும், 18 புராணகர்த்தாவுமான வியாஸாசாரியாள் அவர்களுக்கும் முந்தியகாலத்திலோ, அல்லது அவர்கள் ஸமகாலத்திலோ இருந்திருக்கவேண்டும் என்று கொள்ளுவதில்யாதும் தடையில்லை. ஆகவே இம்முறைப்படி பார்க்கும்பொழுது பதஞ்ஜலி மஹாருஷியானவர்

கலிபிறப்பதற்குமுன்னரே உலகிலிருந்துயோகதர்சனத்தைச்செய்
திருக்கிறார் என்றும் ஏற்படுகிறது. ஆனால் தற்காலம் சிலஸாதுக்
கள், யோகசூத்திரபாஷ்ய கர்த்தாவான வியாஸரும்; பிரும்மசூத்
திரம் முதலியவற்றைச்செய்த வியாஸரும் உண்மையில் ஒருவரா
ல்ல எனச் சொல்லுகின்றனர். ஆயினும் நாம் அதையங்கீகரிப்ப
தற்கில்லை. ஏனெனில் இவ்விருவரும் ஏன் ஒருவராக இருக்கக்
௫ கூடாது ? என்பதற்கு மேற்கூறிய ஸாதுக்கள் எவ்விதகாரணமும்
கூறாமல் ஏதோ வடமொழியின் மணமின்னதென்றுமேயறியாத
மேனாட்டு ஸாதுக்கள் சொல்வதையே வேதவாக்கியமாக நம்பி
எதையும் யுக்திக்கும், வசனங்களுக்கும் பொருத்தமில்லாமுறை
யிற் சொல்லுவதே இவர்கள் வழக்கமாகிவிட்டமையால் சாஸ்திர
வசனங்களையும், அதற்கனுகுணமான யுக்தி, அனுபவங்களையும்
கண்டறிந்த நாம் அவர்சொல்லுவதை எவ்விதம் அங்கீகரிக்கமுடி
யும். ஒருபொழுதும் முடியாது. ஆகவே பதஞ்ஜலிமஹருஷியான
வர் கலிபுறப்பதற்குமுந்தியிருந்தவர் என்றுதான் நாம் எண்ணுகி
றோம், ஆயினும் சங்கரர் அவதரிப்பதற்குமுந்தி அதாவது இன்று
முதல் 2436 வருஷங்களுக்குமுன் இருந்தார் என்று கொள்ளு
வதில் எவர்க்கும் ஆக்ஷேபமிருக்க யிடமில்லை. சங்கரபகவத்பா
தாள் காலமோ, மேற்கூறிய பிராசீனசங்கரவிஜயவசனப்படி இன்
றுமுதல் 2436 வருஷங்களுக்குமுன்னர்தான் எனஉறுதிசெய்யப்
பட்டவிஷயமாகும். ஆகவே புராதனகாலத்திலுள்ள இம்மஹா
னின் யோகதர்சனத்தைப் படித்தறிந்து அதன்படி நடந்து இம்
மை மறுமை க்ஷேமங்களை நாம் அடைவோமாக.

கடலங்குடி நடேச சாஸ்திரிகள்,
ஆர்யமதஸம்வர்த்தனீ பத்திராதிபர்.
72 பெரிய தெரு, திருவல்லிக்கேணி, சென்னை.
[11-5-1921.]

விஷய அட்டவணை.

	பக்கம்.
யோகதர்சனாரம்ப ஸமர்த்தனமும், ஸாங்கிய யோகதர்சனங்களுக்குள்ள விஷயபேதமும் ...	2–3
अथयोगानुशासनम् என்ற முதல் ஸூத்திரம் ...	4
"யோகம்" என்ற சப்தத்தின் அர்த்தம் ...	5
க்ஷிப்தம், விக்ஷிப்தம், மூடம், ஏகாக்ரம், நிருத்தம் என்ற 5விதமான அந்தக்கரண நிலைகளை விரிவாய் நிரூபித்தல் ...	5–9
எல்லாவிதமான சித்தவிருத்திகளுக்கும் நிரோதமேற்பட்ட பிறகுள்ள புருஷனின் ஸ்வரூபத்தை யுபதேசித்தல் ...	9
அஸம்ப்ரக்ஞாத ஸமாதி ஏற்படாத நிலையில் புருஷனின் ஸ்வரூபம் எவ்விதமிருக்கும் என்பது ...	10
சித்தவிருத்திகள் எவ்வளவு, எவை எவைகளை நிரோதம் செய்யவேண்டும் என்பதை நிரூபித்தல் ...	12
சித்தத்திலுண்டாகும் 5 விருத்திகளின் பெயரை யுபதேசித்தல் ...	14
பிரமாணம் என்ற விருத்தியைப் பிரத்யக்ஷம், அனுமானம், ஆகமம் என்று மூன்று விதமாகப் பிரித்தலும், அவற்றின் விரிவான ஸ்வரூபநிரூபணமும் ...	14–18
விபர்யயம் என்ற 2வதான சித்த விருத்தியை நிரூபித்தல்	18
விகல்பம் என்ற 3வதான சித்தவிருத்தியை நிரூபித்தல்...	19
நித்திரை என்ற 4வதான சித்தவிருத்தியை நிரூபித்தல்...	21
ஸ்மிருதி என்ற 5வதான சித்தவிருத்தியை நிரூபித்தல்...	24
பிரமாணம் முதலிய 5வித சித்தவிருத்திகளை நிரோதம் செய்வதற்குரிய உபாயம் ...	25
விஷயங்களில் தோஷங்களைக் கவனிப்பதால் வைராக்ய	

*

பக்கம்.

முண்டாகின்றதென்பதில் உதாஹரணமாய்கதை கூறல் ... 26

அப்யாஸத்தின் ஸ்வரூப நிரூபணம் ... 27

அப்யாஸத்தின் தார்ட்யத்தை யடைவதற்குரிய உபாயம் ,,

வைராக்யத்தின் ஸ்வரூபம் ... 29

வைராக்யத்தின் 4விதமான பிரிவுகளும், அவற்றின் தனித்தனியான ஸ்வரூபமும் ... 30

பரவைராக்யத்தின் ஸ்வரூப நிரூபணம் ... 31

ஸம்ப்ரக்ஞாத ஸமாதி நிரூபணம் ... 32–35

அஸம்ப்ரக்ஞாத ஸமாதி நிரூபணம் ... 36

ஸுஷுப்திக்கும், அஸம்ப்ரக்ஞாத ஸமாதிக்கும், மோக்ஷத்திற்குமுள்ள பேதஸ்வரூப நிரூபணம் ... 36–37

வைதிக யோகத்திற்கும், பாதஞ்ஜல யோகத்திற்கும் நிர்விகல்ப ஸமாதி விஷயத்திலுள்ள பேதத்தைக் கூறல் ... 37–38

அஸம்பிரக்ஞாத ஸமாதியின் பிரிவான பவத்ப்ரத்யயத்தை நிரூபித்தல் ... 38

அஸம்பிரக்ஞாத ஸமாதியின் பிரிவான உபாய பிரத்யய நிரூபணம் ... 41

தீவ்ரஸம்வேகர்களுக்கு ஸமாதிலாபம் சீக்கிரமாயுண்டாகும் என்பது ... 43

ஸமாதி, அதன் பலன் இவற்றையடைவதிலுள்ள வேக தாரதம்ய நிரூபணம் ... 44

ஈசுவர பக்தியால் ஸமாதிலாபம் சீக்கிரமாயுண்டாகும் என்பது. ... ,,

ஈசுவரஸ்வரூப நிரூபணம் ... 46

ஈசுவரனை யங்கீகரிப்பதற்குப் பிரமாணம் ... 49

ஈசுவரனை யங்கீகரிப்பதற் குரியவேறு பிரமாணம் ... 50

ஈசுவரன் எதற்காக பிரபஞ்சத்தைப் படைக்கிறுன் என்ற ஆசங்கையும், அதன் ஸமாதானமும் ... 51–52

பக்கம்.

பிரகிருதியே ஜகத்தைப் படைக்கட்டும் என்ற ஆசங்கையும், அதற்குச் சமாதானமும் ... 53
பிரும்மாதி தேவர்களைவிட ஜகத்காரணமான பகவானுக்குரிய விசேஷம் ... 55
ஈசுவரனுடைய ரஹஸ்யநாமத்தை யுபதேசித்தல் ... 56
"ஈசுவரப் பிரணிதானம்" என்ற விடத்திலுள்ள ப்ரணிதான பதத்தின் அர்த்தம் ... 58
பிரணவஜபம், பிரணவத்தின் பொருளான பரமாத்மாவைச்சிந்தித்தல் இவற்றின் பலனை யுபதேசித்தல்... 59
ஈசுவரப் பிரணிதானத்தால் ஜீவஸ்வரூபக்ஞானம் எவ்விதமுண்டாகும் என்ற ஆக்ஷேபமும் ஸமாதானமும் 60
வியாதி முதலிய 9 யோக விக்னங்களை நிரூபித்தல் ... 61
துக்கம் முதலிய இடையூறுகளைக் கூறல் ... 62
ஈசுவரனிடம் திருடபக்தியோக மேற்படாதவனுக்கு வியாதி முதலிய யோக விக்னத்தைத் தடுப்பதற்குரிய உபாயம் ... 63
சித்தம் ஓரிடத்தில் நிருத்தப்படின் வியாதி முதலியவற்றால் துக்கமுண்டாகா தென்பதை உதாஹரணத்துடன் கூறல் ... 64
அஸூயை முதலிய சித்ததோஷங்கள் விலகுவதற்குரிய உபாயம் ... 65
பிராணாயாமத்தால் சித்ததோஷம் விலகுமென்பது ... 66
விஷயவதீ என்ற பிரவிருத்தியால் மனத்திற்கு நிலையுண்டாகும் என்பது ... 68
சித்தம் நிலைபெறுவதற்குரிய ஜ்யோதிஷ்மதீ என்ற பிரவிருத்தியை யுபதேசித்தல் ... 70
வியாஸர், சுகர் முதலிய ஸித்தபுருஷ தியானத்தாலும் சித்தத்திற்கு நிலை ஏற்படும் என்பது ... 71
ஸ்வப்னத்திலும், நித்ராகாலத்திலுமனுபவித்த விஷயத்தைச் சிந்தனம் செய்வதாலும் சித்தம் நிலைபெறுமென்பது ... 72

பக்கம்.

அவனவனுக்குப் பிடித்தமான வஸ்துவின் தியானத்தாலும் சித்தம் நிலைபெறும் என்பது ... 73
சித்தம் நிலைபெறுதலின் அடையாளத்தை யுபதேசித்தல் ,,
நிலைபெற்ற சித்தத்திலுண்டாகும் சாக்ஷாத்காரம் எத்தகைய ரூபமுள்ளது, அதில் தோன்றும் விஷயம் யாது? என்பதை நிரூபித்தல் ... 74
ஸவிதர்க்க ஸமாதியின் லக்ஷணம் ... 76
நிர்விதர்க்க ஸமாதியின் லக்ஷணம் ... 78
ஸூக்ஷ்ம விஷயமான ஸவிசார நிர்விசாரஸமாதிநிரூபணம் 80
ஸமாதி ஸூக்ஷ்ம விஷயமாயிருப்பதென்றால் யாது என்று நிரூபித்தல் ... 81
ஸம்ப்ரக்ஞாத ஸமாதி என்பது யாதென்று நிரூபித்தல் ... 81
நிர்விசார ஸமாதியின் பலனையுபதேசித்தல் ... 84
நிர்விசார ஸமாதியின் பலனுக்கு யோகிகளாலிடப்பட்ட ருதம்பரா என்ற பெயரை யுபதேசித்தல் ... 85
ருதம்பரா என்ற பிரக்ஞைக்கும், மற்றபிரக்ஞைக்குமுள்ள பேதத்தை நிரூபித்தல் ... 85–89
ருதம்பரா பிரக்ஞையின் பலனை நிரூபித்தல் ... 90
ருதம்பரா பிரக்ஞையையும் நிரோதம் செய்தால் அஸம்பிரக்ஞாத ஸமாதியின் மேலான நிலையுண்டாகின்றதென்பது ... 91
முதல் பாதத்திலுள்ள விஷயச்சுருக்கம் ... ,,

இரண்டாவது பாதம்.

சித்த சுத்திக்குச் சாதனமான கிரியாயோகம் என்பது யாது என்று நிரூபித்தல் ... 93
கிரியாயோகத்தின் பலனை நிரூபித்தல் ... 94
கிலேசங்கள் என்பது எத்தனை பிரிவுள்ளதென்று நிரூபித்தல் ... 95
ராகம், துவேஷம் முதலிய கிலேசங்களுக்கு அவித்யையே காரணமென்பது ... ,,

பக்கம்.

அஸ்மிதை, ராகம், த்வேஷம், அபிநிவேசம் இவற்றிற்கு ப்ரஸுப்தாவஸ்தா, தன்வவஸ்தா, விச்சேதாவஸ்தா, உதாராவஸ்தா என்ற நான்கு அவஸ்தைகளை நிரூபித்தல் ... 96

அவித்யாஸ்வரூபம் ... 98

அவித்யை என்பது பாவவஸ்துவே யொழிய அபாவவஸ்துவாக வாகமாட்டதென்று விரிவாய் நிரூபித்தல் ..100-101

அஸ்மிதையின் ஸ்வரூபம் ... 102

அஸ்மிதைக்கும், அஹங்காரத்திற்குமுள்ள பேதம் ... 103

ராகம் என்ற கிலேசத்தின் ஸ்வரூபம் ... ,,

ராகத்தைக் கிலேசவகுப்பிற் சேர்த்தற்குரிய காரண நிரூபணம் ... 104

துவேஷஸ்வரூபம் ... ,,

துவேஷத்தை கிலேசவகுப்பில் சேர்த்ததின் காரணம்... 105

அபிநிவேசஸ்வரூபம் ... ,,

மரணபயம் யாவர்க்கு முண்டென்றும், ஆனதுபற்றியே ஜீவனுக்கு பலஜன்மங்களுண்டென்றும் நிரூபித்தல் ..106-107

சூக்ஷ்மமான கிலேசங்கள் நிவிருத்தியை யடைவதற்குரிய உபயம் ... 108

கிரியாயோகானுஷ்டானத்தால் தேயும்படி செய்யப்பட்ட ஸ்தூல கிலேசவிருத்திகளை முற்றிலும் அழிப்பதற்குரிய உபாய நிரூபணம் ... 109

அவித்யாதிகளை க்காரணமாயுடைய கர்மவாஸனைகளையும்,சிலகர்மங்கள் அவைய னுஷ்டிக்கப்பட்ட ஜன்மத்திலேயே பலனைத்தருகின்றன வென்றும், சில கர்மங்கள் வேறுஜன்மத்தில் பலனைத்தருகின்றன வென்றும் நிரூபித்தல் .111-112

அவித்யாதிகளிருக்கும் பொழுதே கர்மவாஸனைகள். ஜன்மம், ஆயுஸ், சுகதுக்கம் என்ற பலனைக்

பக்கம்.
கொடுக்கின்றன வென்று நிரூபித்தல் ... 113
அநேகம் கர்மங்கள் ஒன்றுசேர்ந்தே ஒருஜன்மத்தைக் கொடுக்கின்றன வென்பதை விரிவாய்க் கூறல் ... 114
மற்றும் கர்மஸ்வரூபத்தைப்பற்றிய பல அருமையான விஷயங்களைக் கூறல் ... 116
கர்மங்களின் பலனான ஜன்ம, ஆயுள், போகம் இவைகள் சுகம், துக்கம் இவற்றைப்பயனாக வுடையன வென்று நிரூபித்தல் ... 119
விவேகிக்கு விஷயசுகமும் துக்கமாகவே தோன்றுகின்றதென்பதை நிரூபித்தல் ... 119
விலக்கத்தக்கது இன்னதென்பதை நிரூபித்தல் ... 126
விலக்கத்தக்க துக்கத்தின் காரணமின்னதென்று நிரூபித்தல் ... 126
திருச்யஸ்வரூப நிரூபணம் ... 128
பிரகிருதி, மஹத் முதலிய 24தத்துவங்கள் ஸத்வாதி குணங்களின் மாற்றுருவே என்று நிரூபித்தல் ... 131
ஸிருஷ்டிக்கிரமம், லயக்கிரமம் இவற்றைப்பற்றியநிரூபணம் ..131–134
ஆத்மஸ்வரூப நிரூபணம் ... 134
திருச்ய வஸ்துக்கள் யாவும் புருஷனுக்கு போக்யமாகின்றன வென்பதை நிரூபித்தல் ... 137
ஒருவன் மோக்ஷத்தை யடைவதால் மட்டும் எல்லோருக்கும்வன் முக்தி ஏற்படக்கூடாதென்ற ஆக்ஷேபத்திற்கு ஸமாதானம் ... 138
ஸம்ஸாரகாரணமான திரஷ்ட்ருதிருச்யஸம்யோகத்தின் ஸ்வரூப நிரூபணம் ... 140
த்ரஷ்ட்ருதிருச்ய ஸம்யோக மேற்பட்டதற்குரிய காரண நிரூபணம் ... 141
மோக்ஷஸ்வரூப நிரூபணம் ... 142
மோக்ஷத்தின் அந்தரங்க ஸாதனம் ... 143
விவேகக்கியாதியை யடைந்தவனுக் குண்டாகின்ற 7

பக்கம்.
விதமான பிரக்ஞையின் அவஸ்தைகளை நிரூபித்தல். 144
யமம் நியமம் முதலிய யோகங்களை யனுஷ்டிப்பவனுக்கு விவேகக்யாதி யுண்டாகின்றதென்பது ... 146
யோகாங்க நிரூபணம் .. 150
யோகாங்கங்களுள் யமம் என்ற யோகாங்கத்தைப்பிரித்தல் ... ,,
ஸத்யம் பேசுவதென்றால் என்ன வென்பதை சத்யதபஸ் என்ற மஹருஷியின் சரித்திரமூலம் நிர்ணயித்தல் ... 151
திருட்டு என்பது யாதென்பதை சங்கர் லிகிதர் என்ற மஹருஷிகளின் சரித்திரம் வாயிலாக நிரூபித்தல்... 154
துராசாரமுள்ளவனின் அன்னத்தைப் புஜித்தலானது தோஷத்தை விளைவிக்கின்றதென்பதை ஒருஸன்யாஸியின் விருத்தாந்தம் வாயிலாகக் கூறல் ... 156
அஹிம்ஸை, அஸ்தேயம் முதலியவற்றை யோகிகள் எவ்விதமனுஷ்டிக்க வேண்டுமென்பது ... 157
நியமம் என்ற யோகாங்க நிரூபணம் ... 159
யம, நியமாதிகளை யனுஷ்டிக்கும் பொழுது விக்கினங்கள் நேருமாயின் அவற்றைத் தடுப்பதற்குரிய உபாயம் ... 160
யோகாங்க விக்னங்களின் உட்பிரிவுகளையும், அவற்றை விலக்கிக் கொள்வதற்குச் செய்யவேண்டிய பிரதிபக்ஷபாவனத்தின் ஸ்வரூபத்தையு முபதேசித்தல்... 161
அஹிம்ஸா என்ற யோகாங்கம் ஸித்தி பெற்றதற்கறிகுறியை யுபதேசித்தல் ... 163
ஸத்யம் என்ற யோகாங்கம் ஸித்திபெற்றதற்கறி குறி... 163
அஸ்தேயம் என்ற யோகாங்கம் ஸித்திபெறின் ஏற்படும் பலன் ... 165
அஸ்தேய பிரதிஷ்டா விஷயமாய் கதை கூறல் ... ,,
பிரும்மசர்யம் என்ற யோகாங்கம் ஸித்திபெறின் ஏற்படும் பலன் ... 167

பக்கம்.

அபரிக்கிரஹம் என்ற யோகாங்கம் ஸித்திபெறின் ஏற்படும் பலன் ... 168
சௌசம் என்ற யோகாங்கம் ஸித்தி பெறின் ஏற்படும் பலன் ... 169
சௌசம் என்ற யோகாங்க ஸித்தியாலுண்டாகின்ற வேறு பலன்கள் ... 170
ஸந்தோஷம் என்ற யோகாங்கம் ஸித்திபெறுதலின் பலன் ... 171
தபஸ் என்ற யோகாங்கம் ஸித்திபெறுதலின் பலன் ... 172
ஸ்வாத்யாயம் என்ற யோகாங்கம் ஸித்தி பெறுதலின் பலன் ... ,,
ஈசுவரப் பிராணிதானம் என்ற யோகாங்கம் ஸித்தி பெறுதலின் பலன் ... 173
ஆஸனம் என்ற யோகாங்கத்தை நிரூபித்தல் ... ,,
ஆஸனத்தை 11 விதமாகப்பிரித்து ஒவ்வொன்றின் ஸ்வரூபத்தையு முபதேசித்தல் ... 174
ஆஸனஜயமேற்படுவதற்குரிய உபாயத்தை யுபதேசித்தல் 175
ஆஸன ஜயத்தின் பலன் ... ,,
பிராணுயாமம் என்ற யோகாங்க நிரூபணம் ... 176
பிராணுயாமத்தின் உட்பிரிவுகளைக்கூறல் ... 177
துரீய (4வதான) பிராணுயாம நிரூபணம் ... 179
பிராணுயாம ஸித்தியின் அவாந்தரபலனை யுபதேசித்தல்... 180
ப்ரத்யாஹாரம் என்ற யோகாங்கத்தைக் கூறல் ... 181
பிரத்யாஹாரத்தின் பலன் ... 182

மூன்றாவது பாதம்.

தாரணை என்ற யோகாங்க நிரூபணம் ... 183
தியானஸ்வரூப நிரூபணம் ... 184
யோகாங்கமான ஸமாதியின் ஸ்வரூபம் ... 187
ஸம்யமத்தின் ஸ்வரூபம் ... 188
ஸம்யமஸித்தியின் பலன் ... ,,

பக்கம்.

ஸம்பிரக்ஞாத ஸமாதிக்கு, தாரணை தியான ஸமாதிகள் அந்தரங்க ஸாதனம் என்பது ... 189

தாரணை தியான ஸாதனங்கள் அஸம்பிரக்ஞாத ஸமாதிக்குப் பஹிரங்கஸாதனமென்று நிரூபித்தல் ... 190

நிருத்தாவஸ்தையிலுள்ள சித்தபரிணாமம் எத்தகையதென்பது ... 191

வ்யுத்தான ஸம்ஸ்காரம்குறைந்ததும் சித்தத்தின்பரிணாமம் எத்தகையதென்பது ... 192

ஸமாதிகாலத்திய சித்தபரிணாமத்தையுபதேசித்தல் ... 193

தர்மம், லக்ஷணம், அவஸ்தை என்றமூன்றுவித பரிணாமங்களையுபதேசித்தல் ... 195

" தர்மீ " என்றதின் லக்ஷணம் ... 196

ஒரேதர்மியில் அனேகவிதமான மாறுதலுண்டாவதற்குரியகாரணம் ... 197

சென்றது, வரப்போகின்றது இவற்றையறிவதற்குரிய ஸம்யமநிரூபணம் ... 199

ஈ, எறும்புமுதலிய ஸகலப்பிராணிகளும் பேசுவதையறிவதற்குரிய ஸம்யமஸ்வரூபம் ... ,,

முற்பிறவியை யறிவதற்குரிய உபாயம் ... 202

பிறருடைய சித்தத்தையறிவதற்குரிய உபாயம் ... 203

பிறர் சித்தத்திலிருக்கின்ற ராகாதிகளை யறியமுடியாதென்பது ... ,,

ஒருவருமறியாது மறைந்திருப்பதற்குரிய உபாயம் ... 204

தனக்கு மரணம் இன்னஸமயத்திலேற்படுமென்பதை முன்னதாகவே அறிவதற்குரிய உபாயம் 205

மைத்ரீ, கருணை முதலியவற்றில் ஸம்யமம் செய்வதின் பலன் ... 208

யானை, குதிரை முதலியவற்றின் பலத்தையடைவதற்குரிய உபாயம் ... 209

ஸூக்ஷ்மவஸ்து, மறைந்திருக்கின்றவஸ்து, வெகுதூரத்திலிருக்கின்ற வஸ்து இவற்றையறிவதற்குபாயம்... ,,

உலகங்களைப்பற்றிய அறிவுண்டாவதற்குரிய உபாயம் ... 209

வியாஸபாஷ்யத்திற்கூறியபடி லோகத்தின் அமைப்பை விரிவுபடுத்திக் கூறல் ... 211

**

பக்கம்.

நக்ஷத்திரங்களைப் பிரித்தறிவதற்குரிய உபாயம் ... 215

நக்ஷத்திரங்களின் ஸஞ்சாரத்தை யறிவதற்குபாயம் ... 216

சரீரத்தின் அமைப்பை நேரில் காண்பதற்குபாயம் ... ,,

பசி தாகம் இவற்றை முற்றிலும் விலக்குவதற்குபாயம்... ,,

மனத்திற்கு ஸ்தைர்யமேற்படுவதற்குரிய உபாயம் ... 217

சித்தபுருஷர்களை நேரில்காண்பதற்குபாயம் ... ,,

ஊஹத்தாலுண்டாகின்ற ஸித்தி ... ,,

சித்தத்தையும், அதிலுள்ள வாஸனையையுமறிவதற்கு பாயம் ... 218

ஜீவனை ஸாக்ஷாத்கரிப்பதற்குபாயம் ... ,,

ஜீவஸாக்ஷாத்காரத்திற்குரிய ஸம்யமத்தா லுண்டாகின்ற வேறுபலன்கள் ... 219

மேற்கூறிய ஸித்திகள்யாவும் ஸமாதிக்கு விக்னங்களே என்பது ... 220

பிறருடையசரீரத்திற்குள் தான்பிரவேசிப்பதற்குபாயம்... 221

ஜலம், சேறு, முள் இவற்றின்மேல் படுத்தாலும் அவை தன்மேல் ஸம்பந்திக்காமலிருப்பதற்கும்,ஆகாசத்தில் பறந்து செல்லுவதற்குமுபாயம் ... 222

அக்னிபோல்ஜ்வலிப்பதற்குபாயம் ... 223

திவ்யசுரோத்ரம் முதலியவற்றையடைவதற்குபாயம் ... 224

ஆகாசகமனத்தையடைவதற்குபாயம் ... 227

மற்றவனின் சரீரத்திற்குள் பிரவேசத்தையுடைவதற்கு வேண்டியவேறு உபாயத்தையும், க்லேசம், கர்மம் இவற்றின் நாசத்தையடைவதற்குவேண்டிய உபாயத்தையுமுபதேசித்தல் ... 228

பூதங்களைத்தன் வசமாக்குவதற்குபாயம் ... 229

பூதஜயத்தின் பலனுன அணிமாமுதலிய ஸித்திகளையுபதேசித்தல் ... 234

'காயஸம்பத்' என்பது இன்னதென்று நிரூபித்தல் ... 235

இந்திரியங்களைத் தன்வசமாக்குவதற்குபாயம் ... 236

இந்திரியஸித்தியின் பலன்கள் ... 237

விவேகக்யாதியின் அவாந்தரபலன்கள் ... 238

பக்கம்.

விவேகக்கியாதியின் முக்கியபலனையுபதேசித்தல் ... ,,
கைவல்யவிக்னங்களை விலக்குவதற்குபாயம் ... 139
விவேகக்ஞான முண்டாவதற்குபாயம் ... 241
விவேகஜ க்ஞானத்திற்கு உதாஹரணம் ... 242
விவேகஜ க்ஞானத்தின் லக்ஷணம் ... 244
இதுவரை கூறிய ஸித்திகள் ஏற்படாவிடினும் மோக்ஷ முண்டாகலாம் என்பது ... 246

நான்காவது பாதம்.

ஸித்திகள் 5விதமென்று நிரூபித்தல் ... 247
மானிடசரீரமேதேவசரீரமாய் மாறுவதற்குபாயம் ... 249
புண்யகர்மம்பிரகிருதிப் பிரவிருத்தியில் காரணமாகும்முறை 250
காயவ்யூஹஸ்தலத்தில் சித்தம் ஒன்று அனேகமா என்று நிரூபித்தல் ... 251
காயவ்யூஹஸ்தலத்தில் அனேகசித்தங்களைக் கல்பிப்பதுடன் அவைகள் ஒருமுகப்பட்டுநடப்பதற்காக வேறுசித்தத்தையுமங்கீகரித்தல் ... 252
த்யானத்தால் ஸம்ஸ்கரிக்கப்பட்டசித்தமே மோக்ஷத்தையடையத் தகுதியுள்ளதாயாகும் என்பது ... 253
மேற்கூறியதற்குக் காரணம் ... ,,
கர்மங்களிருந்தபோதிலும் த்யான ஸம்ஸ்கிருத சித்த மற்றவர்களுக்கும் ஏன்மோக்ஷமுண்டாகக் கூடாதென்ற ஆக்ஷேபத்திற்குச் சமாதானம் ... 255
அந்தந்தப்பிறவிக்குத்தகுதியானகர்மங்களே அந்தந்தப் பிறவியில் அபிவ்யக்தியையடைகின்றனவென்பது... 256
ஜன்ம வாஸனைகள் அனாதி என்று ஸாதிப்பதன்மூலம் நாஸ்திக்யவாதகண்டனம் ... 258
ஜன்மவாஸனைஎன்பது அனாதியாகவிருந்தபோதிலும் அவைகளைமுற்றிலுமழித்தல்என்பது ஸாதிக்கக் கூடியதே என்று நிரூபித்தல் ... 259
ஸத்தானவஸ்துவுக்கு ஒருபொழுதும் முற்றிலும் அழிவுண்டாகாதென்பது ... 260
கார்யங்களின் உண்மையான ஸ்வரூபத்தையுபதேசித்தல் 262
எல்லாம் திரிகுணாத்மக மாகவிருந்தபோதிலும் வஸ்

பக்கம்.

துவில் ஒருமையேற்படுவதற்குநிமித்தம் ... 264
க்ஞானத்திற்கும், விஷயத்திற்கும் பேதநிரூபணம் வாயிலாக விக்ஞானவாத கண்டனம் ... 266
திருஷ்டி ஸிருஷ்டிவாத கண்டனம் ... 269
சித்தம் விபுவாயினும், ஒருவஸ்து அறியப்பட்டதாயும், அறியப்படாததாயுமாவதற்குரிய நிமித்தம் ... 271
சித்தத்திற்கும், புருஷனுக்குமுள்ள பேதத்தைநிரூபித்தல் 272
சித்தவிருத்தி ஸ்வப்ரகாச மாயாகாதென்பது ... 273
சித்தவிருத்தியானது மற்றொருசித்தவிருத்தியால் கிரஹிக்கப்படுவதாயங்கீகரிப்பதில் தோஷம் ... 275
யோகிகளின் ஸித்தாந்தப்படி புருஷனுக்கு போக்திருத்வம் எத்தகையதென்பது ... 277
சித்தத்தினும்வேறாய்புருஷன் ஒருவனிருக்கிறான் என்பதை பிரத்யக்ஷப்பிரமாணத்தாலும் ஸாதித்தல் ... 278
சித்தத்தினும் வேறாய் புருஷனிருக்கிறான் என்பதில் வேறு பிரமாணத்தையுபதேசித்தல் ... 279
மோக்ஷாதிகாரி நிரூபணம் ... 280
ஆத்மதத்துவத்தையறிந்தவனின் சித்தம் எவ்விதமிருக்குமென்பது ... 281
விவேகக்கியாதியிலேயே பற்றுள்ளவனுக்கும் வேறுபிரத்யயங்களுண்டாகலாமென்பது ... 282
வ்யுத்தான பிரத்யய ஸம்ஸ்காரத்தை அழித்தற்குபாயம் 283
தர்மமேகஸமாதியுண்டாகும் முறை ... 284
தர்மமேக ஸமாதியின்பலன் ... 285
எந்தப்புருஷன் விஷயத்தில் போகம், விவேகக்யாதி இவற்றைப் பிரகிருதியானது உண்டுபண்ணிவிட்டதோ அவன் விஷயத்தில் மறுபடியும்பிரவிருத்திப்பதில்லை என்பது ... 286
புருஷனைத்தவிர்த்து மற்றவஸ்துக்களில் ஒவ்வொருக்ஷணத்திலும்பரிணாமக்கிரமத்தைஸ்வீகரிப்பதின்காரணம் 287
மோக்ஷஸ்வரூப நிரூபணம் ... 289

श्रीः

शाश्वतधर्मगोप्त्रे श्रीपते वासुदेवाय नमः ।

॥ पातञ्जलयोगदर्शनम् ॥

பாதஞ்ஜலயோக தர்சனம்.

चिदानन्दाकारं जलदरुचि सारं श्रुतिगिरां
व्रजस्त्रीणां हारं भवजलधिपारं कृतधियाम् ।
विहन्तुं भूभारं विदधदवतारं मुहुरहो
महो वारं वारं भजत कुशलारंभकृतिनः ॥

यस्त्यक्त्वारूपमाद्यं प्रभवति जगतोऽनेकधाऽनुग्रहाय
प्रक्षीणक्लेशराशिर्विषमविषधरोऽनेकवक्त्रः सुभोगी ।
सर्वज्ञानप्रसूतिर्भुजगपरिकरः प्रीतये यस्य नित्यं
देवोऽहीशः स वोऽव्यात्सितविमलतनुर्योगदो योगयुक्तः ॥

(ப - ரை) यः=எவர் आद्यम्=ஆதியிலுள்ள रूपम्=ஆதிசேஷ ரூபத்தை त्यक्त्वा=விட்டு जगतः=உலகிற்கு अनेकधा = பலவிதமாக अनुग्रहाय=அருள் புரிவதற்கு प्रभवति=ஸமர்த்தராயாகின்றாரோ, यः=எவர் प्रक्षीणक्लेशराशिः-प्रक्षीण=முற்றிலும் தேய்ந்த क्लेश=அவித்தை, அஹங்காரம், ராகம், த்வேஷம், அபிநிவேசம் முதலியவற்றின் राशिः=சமூஹத்தையுடையவரோ विषमविषधरः=பயங்கரமான விஷத்தைத் தரிக்கின்றவரோ अनेकवक्त्रः=வெகுதலைகளையுடையவரோ सुभोगी=அழகியவுடலையுடையவ்ரோ सर्वज्ञानप्रसूतिः=எல்லா க்ஞானத்திற்கு மிருப்பிடமானவரோ यस्य=எவருடைய प्रीतये=பிரஸாதமுண்டாவதற்காக भुजगपरिकरः = பாம்புகளாகிற

பரிஜனம் **नित्यम्**=எப்பொழுதும் (**सेवते**=ஸேவிக்கின்றதோ) **सित-विमलतनुः**=வெளுத்தும் சுத்தமுமான சரீரமுள்ளவரும் **योगदः**= யோக சாஸ்திரத்தை வெளியிட்டவரும் **योगयुक्तः**=தானும் யோகத்தையனுஷ்டிக்கின்றவரும் **अहीशः** = ஸர்ப்பராஜனுமான **सदेवः**= அந்த ஆதிசேஷன் **वः**=உங்களை **अव्यात्**=ரக்ஷிக்கட்டும்.

குறிப்பு.—யோகசாஸ்திரப் பிரவர்த்தகரான பதஞ்ஜலியின் வணக்கம் இந்தச் சுலோகத்தாற் செய்யப்படுகின்றது. இந்தச் சுலோகம் வியாஸபாஷ்யத்தின் ஆரம்பத்தில் இப்பொழுது அச்சிடப்பட்ட புஸ்தகங்களில் காணப்படுகின்றது. ஆயினும் வாசஸ்பதிமிச்ரர் இந்தச்சுலோகத்திற்கு வியாக்யானம் செய்யாது விடுத்திருக்கின்றார். இதனால் இந்தச்சுலோகம் வியாஸரால் செய்யப்பட்டதல்லவென்று சிலர் அபிப்பிராயப்படுகின்றனர்.

அவதாரிகை.—சாங்கியம், யோகம், நியாயம் வைசேஷிகம், பூர்வமீமாம்ஸா, உத்தரமீமாம்ஸா என்ற ஆறு தர்சனங்களை முறையே கபிலர், பதஞ்ஜலி, கௌதமர், கணாதர், ஜைமினி, வியாஸர் என்ற ஆறுமஹருஷிகள் செய்தருளினர். அவற்றுள் முதலாவதான சாங்கியதர்சனத்தைப் படித்தறிந்ததால்—பிரகிருதி, மஹத், அஹங்காரம், பஞ்சதந்மாத்திரை, 5 கர்மேந்திரியம், 5 ஞானேந்திரியம், 5 பிராணன்கள், இவற்றிற்குவேறாய புருஷன் எனப்படும் ஜீவதத்துவம் ஆக 25 தத்துவங்களின் ஸ்வரூபம், ஸ்வபாவம் இவைகள் நன்கறியப்பட்டதாயாகின்றன. ஆனால் ஷை சாங்கிய சித்தாந்தத்தினால் ஜீவன், சத்ரூபியும் சித்ரூபியுமாவனே யின்றி ஆனந்த ரூபியார்கானென்றும், ஆனந்தம் என்பது பிரகிருதியின் கார்யமான விஷயாதிகளாலுண்டாகக்கூடியதென்றும், அவ்வானந்தம், உண்டாவதும் அழியக்கூடியதுமான தன்மையுள்ளதென்றும் பெறப்படுகின்றது. மேலும் சாங்கிய சித்தாந்திகள் பிரகிருதி, பிராகிருத பதார்த்தங்களான 24 தத்துவங்களுக்குப் புறம்பாய் ஜீவனொருவனுண்டென் றங்கீகரிக்கின்றனரேயன்றி ஈசுவரன் ஒருவனிருப்பதா யங்கீகரிப்பதில்லை. பிராணிகளாற் செய்யப்படும் புண்ய பாபகர்மங்களுக்குத் தகுந்த சுகதுக்கரூபமான பலனைத்தரத்தக்க கருணைக்கடலான ஈசுவரனுண்டென் றங்கீ

கரிப்போமாயின், எல்லாப் பிராணிகளையும் சுகிகளாகவே, அவர்படைக்க வேண்டியிருக்க சிலரைச் சுகிகளாகவும், சிலரைத்துக்கிகளாகவும் படைத்தது கருணையுள்ள வரின் காரியமாக எங்ஙனம் ஒப்பமுடியும்? கருணையால் சிருஷ்டியும், சிருஷ்டித்த பிறகுள்ளப் பிராணிகளின் நிலையிலிருந்து கருணையுமுண்டாக வேண்டுமெனனதுபற்றி அன்யோந்யாச்ரயதோஷ மேற்படுவதால் இயற்கையில் கருணையுள்ளவன் என்றும் ஸாதிக்கமுடியாது. மேலும் ஈசுவரனை யொப்புகின்றவர்களும் பிராணிகளின் கர்மத்தைமுன்னிட்டே அவர் எதையும் செய்யச்சக்தி வாய்ந்தவரென்பதையொப்பவேண்டி வருவதால் எவ்விதகர்மத்தை முன்னிட்டு ஈசுவரனிவ்விதம் படைக்கிறனென்பதை யொப்ப வேண்டிவருகின்றதோ அக்கர்மமூலம் அசேதனமானப்பிரகிருதியே அந்தந்தக் கர்மபலானு பவத்திற்குரிய சரீரம் முதலியன உண்டாகுமாறு பிரவிருத்தியையடைவதாயங்கீ கரிப்பதால் ஈசுவரன் என்ற வேறு தத்து வத்தை யங்கீகரிக்கவேண்டுவதில்லை * எனத்தெளிவாய்க் கூறியிருப்பதிலிருந்து சாங்கிய சித்தாந்தம் நிரீச்வரசாங்கியம் என்றும் சொல்லப்படும். ஆகவே சாங்கிய சித்தாந்தப்படி பிரகிருதி, பிராகிருத பதார்த்தங்கள் ஜீவன், இவைகள் நன்கு அறியப் படக்கூடுமேயன்றி ஈசுவரஸ்வரூபமறியப்பட மாட்டாது. சாங்கியர்கள் சொல்லுகின்றபடி ஈசுவரனொருவனில்லை என்று கூறுவது முற்றிலும் பொருத்தமுள்ளதல்லவென்றும், ஈசுவரனை யொப்பியே தீரவேண்டும் என்றும் கருத்துக்கொண்ட பதஞ்சலி மஹருஷி இந்தச்சாஸ்திரத்தைச் செய்யத்தொடங்கி இருக்கிறார்.

மேலும் குரு, சாஸ்திரம் இவர்களாலுபதேசிக்கப்படும் தத்துவம்உண்மைதானுபினும் அதில்யாவர்க்கும் பற்றுண்டாவதற்கு வேண்டிப்பலசித்தி விசேஷங்களையும் இந்தத்தர்சனத்தில் உபதேசித்துச்சாஸ்திர விச்வாஸத்தையுண்டாக்குவான் கருதி

---

* இவ்விஷயம் நம்மால் தமிழில் உரையெழுதி வெளியிடப்பட்ட சாங்கியதத்துவகௌமுதீ என்ற புஸ்தகத்தில் 57-வது சுலோகம் முதல் சில சுலோகங்களால் தெளிவாய் கூறப்பட்டிருக்கின்றது. அங்கு அதைக் கண்டு தெளிக.

யும் இந்தத்தர்சனத்தைத் தொடங்கியிருக்கிறார். ஆகவே சாஸ்திரம், குரு இவர்களிடத்து நம்பிக்கையை யடையவேண்டியும், ஈசுவரனது சுவரூபஸ்வபாவாதிகளை யறியவேண்டியும் இந்த யோகசாஸ்திரத்தை யாவரும்படித்தறியவேண்டுவ தவசியமாகிவிட்டது. ஆதலால் அதைச் சுலபமா யாவரு மறியுமாறு உரை எழுதிவெளியிட நாம் ஆரம்பிக்கின்றோம். இந்தப் பாதஞ்ஜல யோகஸூத்திரம் 4 பாதங்களையும், மொத்தமாய் 195 ஸூத்திரங்களையுமுடையது. அவற்றுள் ஸமாதிபாதம் என்ற முதல் பாதத்தின் முதல் ஸூத்திரத்தை உபதேசிக்கிறார்.

सू० ॥ अथ योगाऽनुशासनम् ॥ १ ॥

(ஸூ) அதயோகானு சாஸனம். (1)

(ப - ரை) **योगाऽनुशासनम्**=(யோகானுசாஸனம்) யோகசாஸ்திரம். **अथ**=(அத) தொடங்கப்படும்.

(தா - ம்) இந்தச் சூத்திரத்திலுள்ள **अथ**=(அத) என்றபதம் 'ஆரம்பம்' என்ற பொருளை நேராகவும், *பிரஸங்க நியாயத்தால் மங்களத்தையும் குறிக்கின்றது **हिरण्यगर्भो योगस्य वक्ता नान्यः पुरातनः** "யோகசாஸ்திரத்தை முதன் முதலிற் செய்தவர் பிரும்மதேவனே ; அவருக்கும் முன் ஒருவரும் யோக சாஸ்திரத்தைச் செய்யவில்லை" என்று யோகயாக்ஞயவல்க்ய ஸ்மிருதியில் கூறப்பட்டிருப்பதால் **अथ तत्वदर्शनाभ्युपायो योगः** என்று தொடங்கி

---

* நாம் முக்கியமாய் ஓர் பலத்தில் விருப்பங்கொண்டு ஓர் காரியத்தைச் செய்வதால் அதனின்றும் நமக்கு முக்யோத்ச்யமாயில்லாத மற்றும் சில பலன்க ளேற்படுமாயின் அந்தப்பலன்கள் பிராஸங்கிகம் எனப்படும். இதுவே பிரஸங்க நியாயமாகும். உதாஹரணம்:—நாம் செடிகள் வளர்வதற்காகத் தண்ணீர் பாய்ச்சினால் அதன் பாத்தியில் முளைத்திருக்கின்ற புற்களுக்கும் தண்ணீர் விட்டு உபகரித்ததாயாகின்றது. நமது வீட்டு வாயிற்படிக்கு ஒளிவேண்டுமென்று விளக்குப்போட்டால் அந்த வொளி தெருவிலும் பட்டு வழியிற் செல்வோருக்குமுபகரிக்கின்றது. இது போலப் பல உதாஹரணங்களைக் காண்க.

பிரும்மதேவனால் இயற்றப்பட்ட நூலை முதன் நூலாகக்கொண் டே நான் இன்னூலை யியற்றுகிறேன் என்பதைத் தெரிவிப்பதற் காக योगशासनम् என்று கூறாது अनु என்றபதத்தைச் சேர்த்து योगाऽनुशासनम् என்று கூறப்பட்டது. ஆகவே ஹிரண்யகர்ப்பரா லியற்றிய சாஸ்திரத்தை யொட்டி என்னாற்செய்யப்படும் இன்னூ லும் யோகசாஸ்திரமாகவாகும். இந்தச் சாஸ்திரத்தால் யோக மும் அதன் சாதனங்களும் உபதேசிக்கப்படும். இந்தச்சாஸ்திர த்தில் கூறப்படுகின்ற சாதனத்துடன்கூடிய யோகானுஷ்டானத் தால் கைவல்யம் என்ற பலனுண்டாகும். (எ - று.)

(அ-கை) "யோக" என்றபதத்தால் சொல்லப்படும் பொ ருளை யுபதேசிக்கிறார்—

सू०|| योगश्चित्तवृत्तिनिरोधः || २ ||

(ஸூ-ம்) யோக: சித்தவ்ருத்தி நிரோத: (2)

(ப - ரை) चित्तवृत्तिनिरोधः = (சித்தவ்ருத்தி நிரோத:) चित्त= (சித்த) மனத்தினுடைய वृत्ति = (வ்ருத்தி) மாறுதலை निरोधः= (நிரோத:) அடக்குதல், அதாவது: மாறுதலில்லாது செய்தல் योगः=(யோக:) "யோக" என்றபதத்தின் பொருளாகும்.

(தா - ம்) நிர்மலமான சத்வகுணத்தின் பரிணமரூபமான அந்தக்கரணத்தினுடைய விருத்திகளின் (மாறுதல்களின்) நிவி ருத்தியானது (அந்தக்கரணத்தில் குணமூலமான மாறுதலில்லா திருத்தலானது) யோகம் எனப்படும். பொதுவாய் அந்தக்கர ணத்திலுண்டாகும் நிலைகள் (அவஸ்தைகள்) க்ஷிப்தம், மூடம், விக்ஷிப்தம், ஏகாக்ரம், நிருத்தம் என ஐந்துவகைப்படும். அவற் றுள் ரஜோகுணத்தின் மேலீட்டால் அந்தக்கரணம் நிலையற்ற தாய் பஹிர்முகப்பட்டு சமீபத்திலோ தூரதேசத்திலோ இருக் கின்ற சுகதுக்காதி விஷயங்களிற் சென்றலைதல் க்ஷிப்தம் எனப்படும். இவ்வித மனோநிலை எப்பொழுதுமே * தைத்யர்

* திதி என்ற ஸ்திரீயின் புத்திரர் தைத்யரென்றும், தனு என்ற அஸுரரின் புத்திரர் தானவர் என்றும் சொல்லப்படுவர்.

தானவர் முதலியோருக்குண்டு. தமோகுணத்தின் மேலீட்டால் இஃது செய்யத்தகுந்தது, இஃது செய்யத்தகாததெனப் பகுத்தறிவின்றி கோபம் முதலியவைகளுடன் மாறான கார்யத்திலும், தூக்கம் சோம்பல் முதலியவற்றிலும் அந்தக்கரணம்நிலை பெற்றிருத்தல் இரண்டாவதான "மூடம்" எனப்படும். இன்னிலை * ராக்ஷஸர், பிசாசம் அஸுரர் முதலிய ஜாதிகளுக்கு இயற்கையிலமைந்துள்ளது. அந்தக்கரணமானது ரஜோகுணத்தினால் பிரவிருத்திமார்க்கத்தில் பற்றுள்ளதாகவும், தமோகுணத்தினால் பாபகார்யத்தில் பற்றுள்ளதாகவும், சத்வகுணத்தினால் ஸுகமயமாகவுமிருக்கும் நிலையையடைதல் 3வதான "விக்ஷிப்தம்" எனப்படும். இம்மூன்று நிலைகளுள் க்ஷிப்தம் மூடம் என்ற நிலைகள் மோக்ஷத்திற்குச் சாதனமாகாதபடியால் க்ஷிப்தநிலையில் ஸத்வம், தமஸ் இவற்றின் விருத்திக்கும், மூடநிலையில் ஸத்வம், ரஜஸ் இவற்றின் விருத்திக்கும் நிரோதமிருந்த போதிலும் அன்னிலைகள் யோகமாக வாவதில்லை. விக்ஷிப்தநிலையில் ஓர் சமயம் ஸத்வகுணத்தின் மேலீட்டால் சுகமயமாயாவதுடன் ரஜஸ்தமோகுணமூலமுண்டாகின்ற நிலையற்றிருத்தலையு மடைந்து சத்வஸ்து (உண்மைப் பொருளில்) வில் நிலையையு மடையக்கூடுமாயினும் அது நிச்சேயஸ ஸாதனமானயோகத்திற்குவிரோதி கோடியைச் சேர்ந்திருப்பதால் யோகமாயாவதில்லை. இவ்விதமே विक्षिप्ते तु चेतसि विक्षेपोपसर्जनीभूतस्समाधिर्न योगपक्षे वर्तते என்றதால் வியாஸபாஷ்யத்திலும் கூறப்பட்டிருக்கின்றது.

தியானஞ் செய்யத்தகுந்த வஸ்துவைத் தவிர்த்து வேறு வஸ்து வினிடத்து அந்தக்கரணத்திற்கு விருத்தி யில்லாதிருத்தல் "ஏகாக்ரம்" என்ற 4-வது நிலையாகும். இவ்வித நிலையில் கூடஸ்தனும், நித்யனும், சித்ஸ்வரூபியாயுமுள்ள தியேய வஸ்துவின் ஸாக்ஷாத்காரமுண்டாகின்றது. அவ்வஸ்துவின்

* தனக்குப் பிரயோஜன மிருப்பினு மில்லாதிருப்பினும் பிறரை ஹிம்ஸிப்பதையே முக்கியநோக்கமாகக்கொண்டவர் 'ராக்ஷஸர்' என்றும், பிசாசம் என்றும்சொல்லப்படுவர். தனதுபிரயோஜனத்தை நாடிப்பிறரை ஹிம்ஸிப்பவர் அஸுரர் எனப்படுவர்.

ஸாக்ஷாத்காரமுண்டாகுங்கால் அவித்தையின் நாசமேற்படுவதால் அவித்தையை மூலகாரணமாகக் கொண்ட அஸ்மிதை, ராகம், த்வேஷம், அபிநிவேசம் என்றக் கிலேசங்கள் நாசமடைகின்றன. ஆனதுபற்றி இந்நிலையை "ஸம்பிரக்ஞாதஸமாதி" என்பர். ரஜஸ்தமோமயமான விருத்திகளுக்கு முற்றிலும் நாசமேற்படுகின்றது. ஸத்வகுணமயமான ஸாத்விக விருத்தியொன்றே இந்நிலையில் மீதமாயிருக்கும். இந்நிலையானது தியேயவஸ்துவான புருஷனது சாக்ஷாத்காரத்தை யுண்டாக்கும் வாயிலாக கிலேசாதிகளைப் போக்குவதால் இது முறையே மோக்ஷத்திற்கு ஹேதுவாகவாகும் தன்மையை யடைகின்றது. இனி எல்லாவற்றிலும் சிறந்ததான "நிருத்தம்" என்ற ஐந்தாவது நிலையைக்கூறுவாம். ரஜஸம், தாமஸம், ஸாத்விகம் என்ற எவ்வித விருத்தியுமற்று அவ்வவற்றின் ஸம்ஸ்காரம்மட்டும் மீதமாகி அவற்றுடன் அந்தக்கரணம் நிற்றலே நிருத்தம் என்ற ஐந்தாவதான நிலையாகும். இதில் எல்லா விருத்திகளுமற்று விடுவதால் இது "அஸம்பிரக்ஞாதஸமாதி" எனப்படும். மேலும் இதில் ஸகலவிருத்திகளின் ஸம்ஸ்காரங்களுமற்று விடும் வாயிலாக பிராரப்தகன்ம முமற்றுவிடுவதால் இந்நிலை நேரில் மோக்ஷத்திற்குச் சாதனமாயாகின்றதென்பதைப்பின்னர் கூறுவாம். இவ்விதமே

एकाग्रताचेद्ग्राह्यादौ निरोधश्चेच्चिदात्मनि ।
क्षिप्तादित्रिभुवस्त्यागात्कस्य मोक्षोऽत्र दूरतः ॥

"தியானிக்கத்தக்க வஸ்துவினிடம் சித்தத்திற்கு ஏகாக்கிரதை ஏற்பட்டு, பின்னர் சிதாத்மாவைப்பற்றிய விருத்தியினுடையவும் நிரோதமேற்பட்டு க்ஷிப்தம், மூடம், விக்ஷிப்தம் என்ற நிலைகளும் விலகிவிடுமானுல் மோக்ஷம் என்பது எவனைக்குத்தூரத்திலிருக்கும்" என்றதால் பெரியாரும் கூறியுள்ளார். ஆகவே தமோகுணமானது எப்பொழுது ரஜோகுணத்தை ஜயித்து முக்குணவடிவமான சித்தத்திலிருக்கின்ற முக்கியமான சத்துவகுணத்தைமறைக்கின்றதோ அப்பொழுது சித்தமானது ரஜஸ்தமோ குணங்களைப் போக்குவதற்குச் சக்தியற்றதாகி அதர்மம்,

அவைராக்யம் (வைராக்யமின்மை) இவற்றை யடைகின்றது. இவ்விதமே எங்கும் இச்சைக்குத்தடையுண்டாவதென்ற அனீசுவர்யத்தையு மடைவதுடன் அக்ஞானத்தையுமடைகின்றது. இந்நிலையே "மூடம்" எனப்படும். எப்பொழுது ஸத்வகுணமானது தன்னைவிடக் குறைந்தவைகளாகவான ரஜஸ் தமோகுணங்களின் சேர்க்கையை யடைகின்றதோ அப்பொழுது அணிமா மஹிமா, லகிமா, கரிமா, பிராப்தி:, பிராகாம்யம், ஈசித்வம், வசித்வம், என்ற ஐசுவர்யங்களிலும், விஷயங்களிலும் பிரியமுள்ளதாயாகின்றது. இந்நிலை "க்ஷிப்தம்" எனப்படும். எப்பொழுது சித்தமானது தமோகுணம் குறைந்து ரஜோகுண சம்பந்தம் பெற்ற ஸத்வகுணமுள்ளதா யாகின்றதோ அப்பொழுது, தர்மம், க்ஞானம், வைராக்யம், ஐசுவர்யம் இவற்றில் பற்றுதலையடைகின்றது. இந்நிலை "விக்ஷிப்தம்" எனப்படும். எப்பொழுது சித்தமானது கொஞ்சமும் ரஜஸ்தமோகுண ஸம்பந்தமற்ற ஸத்வகுணமுள்ளதாயாகின்றதோ அப்பொழுது பிரகிருதியை விடப்புருஷன் வேறு என்ற விவேகக்ஞானத்தில் பற்றுதலை யடைந்து அவ்விஷயமாகவே விருத்தியையடைகின்றது. இந்நிலை "ஏகாக்ரம்" எனப்படும். இதன்மேலான நிலையே "தர்மமேக ஸமாதி" என்று வழங்கப்படும். இந்தத் தர்மமேக ஸமாதியால் தியானம் ஒன்றில்மட்டும் சித்தத்திற்குப் பற்றுண்டாகின்றது. மேலும் விவேகக்யாதியானது கேவலம் ஸத்வவடிவமானதுபற்றி உண்மையில் எவ்வித குணஸம்பந்தமுமற்ற சித் சக்தி என்ற ஆதமஸ்வரூபத்தை விடத் தாழ்ந்ததேயாகும். சித் சக்தியோ வெனில் புருஷன் என்ற பெயரையுடையது. எவ்வித பரிணாமுமற்றது. ஆனதுபற்றியே எவ்விதக்கிரியையுமற்றது. மேலும் குணவடிவமான புத்தியைப்போல விஷயமுள்ள வெளிதேசத்திற் செல்லுதல் என்ற சஞ்சாரமும், விஷய சம்பந்தமு மற்றது. மேலும் தனது விருத்திகள் மூலம் புத்தி தத்துவத்தால் காண்பிக்கப்படும் விஷயத்துடன் அதாத்விக (உண்மையில்லாத) மான சம்பந்தம் பெற்றது இவ்விதமே சுகதுக்க மோஹரூபமான அசுத்தியற்றதாயிருப்பதுடன் அனந்தமாயுமுள்ளது. விவேகக்யாதியோ வெனில் சத்துவகுணத்தின் கார்

யமாயினும் பரிணாமமுள்ளதாயும், தீபஜ்வாலையைப்போல் விஷய தேசத்திற் பரவுந்தன்மையுள்ளதாயும், சுவயம் ஜடரூபமாயும், சுகம் துக்கம் முதலிய அசுத்தியுள்ளதாயும், முடிவுள்ளதாயுமிருக்கக்கூடியது. விவேகிக்குச் சுகமும், துக்கம்போலவே விலக்கத்தக்கதாகவே யாகின்றதென்ற காரணத்தால் முற்கூறிய விவேகக்யாதியிலும் சித்தத்திற்கு வைராக்யம் (வெறுப்பு) உண்டாகின்றது. அப்பொழுதுதான் எல்லா விருத்திகளுக்கும் நிரோதமுண்டாகின்றது. இஃதே "நிருத்தம்" எனப்படுகின்றது. ஆகவே இந்த இரண்டாவது சூத்திரத்தால் ஐந்தாவதான நிருத்தாவஸ்தையையே முக்கியமாகச் சொல்லப்படுகின்றதாயினும் 4வதான ஏகாக்ராவஸ்தையும் ஒருவாறு சொல்லப்பட்டதாகக் கொள்ளல்தகும். (எ - று)

(அ - கை) எல்லாவிருத்திகளின் நிரோதமுமேற்பட்ட பிறகுள்ள புருஷனுடைய ஸ்வரூபத்தை உபதேசிக்கிறார்—

सू० ॥ तदाद्रष्टुः स्वरूपेऽवस्थानम् ॥ ३ ॥

(ஸூ) ததா த்ரஷ்டு: ஸ்வரூபே வஸ்தானம். (3).

(ப - ரை) तदा=(ததா) எல்லாவிருத்திகளின் நிரோதகாலத்தில் द्रष्टुः=(த்ரஷ்டு:) சைதன்யமாத்திரவடிவமுள்ள புருஷனுக்கு स्वरूपे=(ஸ்வரூபே) சொந்த ஸ்வரூபத்தில் अवस्थानम्=(அவஸ்தானம்) இருப்பானது भवति=(பவதி) ஏற்படுகின்றது.

(தா - ம்) முற்கூறிய முறைப்படி அஸம்பிரக்ஞாத ஸமாதிநிலையிற் சித்தத்திலுள்ள எல்லாவிருத்திகளும் நிவிருத்தமாயாகிவிட்டபடியால் சைதன்யமாத்திரத்தைச்சுவபாவமாயுடையவனான புருஷனுக்குத் தனது ஸ்வரூபத்திலேயே ஸ்திதி ஏற்படுகின்றது. அதாவது: தனது ஸ்வரூபத்திற்குப் பிரதிபந்தகமான ஸாத்விக, ராஜஸ, தாமஸங்களான எல்லாவிருத்திகளும் ஒடுங்கினதும் தனது நிலையைப் புருஷனடைகின்றான் என்பதாம். எவ்விதமெனின், ஸ்படிகக்கல்லானது இயற்கையிற் சுத்தமானதாயினும் தனதருகிலுள்ள சிவந்த புஷ்பத்தால் சிவந்ததான தோற்றத்தை

2

யடைகின்றது. அச்சிவந்த புஷ்பம் அதனருகினின்றும் விலகிய பொழுது இயற்கையிற்றனக்குள்ள ஸ்வரூபத்தை ஸ்படிகம் மறு படியுமடைவது போலென்க, ஆகவே சித்தத்திலுள்ள எல்லா விருத்திகளின் நிரோதமானது, புருஷன் அழியாத தனது ஸ்வ ரூபத்திலிருப்பதற்கு ஹேதுவாகின்றதென்று இதனால் பெறப் பட்டது. (எ - று)

(அ - கை) இதுவரை கூறியதிலிருந்து அஸம்பிரக்ஞாத ஸமாதி காலத்தில் ஸர்வாநர்த்த நிவிருத்தியும் புருஷனுக்குண்டா கின்றதென்பது பெறப்பட்டது. இனி இவ்விதயோகமில்லாத காலத்தில் மேற்கூறியதற்குமாறான நிலையுண்டாகி உபாதியான மனத்தின் மூலம் புருஷன் எல்லாவிதமான கஷ்டங்களையு மடை வதால் அக்கஷ்டங்களை விலக்கவேண்டி யோகாப்யாஸத்தில் பிர விருத்தித்தல் அவச்யமெனத் தெரிவிப்பான்கருதி மாறான நிலை யை உபதேசிக்கத் தொடங்குகிறார்—

सू०॥ वृत्तिसारूप्यमितरत्र ॥ ४ ॥

(ஸூ) வ்ருத்தி ஸாரூப்ய மிதரத்ர (4)

(ப - ரை) इतरत्र=(இதரத்ர) யோகமில்லாதகாலத்தில் (द्रष्टुः= (த்ரஷ்டு:) புருஷனுக்கு) वृत्तिसारूप्यम्=(வ்ருத்திஸாரூப்யம்) वृत्ति= (வ்ருத்தி) ஸாத்விகம், ராஜஸம், தாமஸம் முதலிய விருத்திக ளோடு सारूप्यम्=(ஸாரூப்யம்) ஒன்றாயிருக்கும் தன்மையானது அதாவது: புத்தி விருத்தியும் புருஷனும் ஒன்றென்ற தோற்ற மானது (भवति=(பவதி) உண்டாகின்றது)

(தா - ம்) ஸமாதி நிலையென்ற யோகமில்லாத காலத்தில் திரஷ்டாவான புருஷனுக்குச் சித்தத்திலுண்டாகின்ற ஸாத் விகம், ராஜஸம், தாமஸம் என்ற விருத்திகளோடு ஒன்றாயிருக் கும் தன்மையானது உண்டாகின்றது. எவ்விதமெனின் அழுக் கடைந்த கண்ணாடியில் முகம் பிரதி பலித்தபொழுது முகமும் அழுக்குள்ளதென்ற தோற்றமுண்டாவதால் அதைக்கொண்டு எனது முகம் அழுக்காக விருக்கின்றதென வெண்ணிச் சோகப்

படுவது போலென்க. ஆனால் இந்த விடத்தில் புருஷனுக்கு விருத்தியில் ஆரோபமென்பது சப்தம் முதலிய விஷயங்களின் விக்ஞானமுள்ள புத்தி தத்துவத்தின் விருத்தியென்றே, பிர கிருதி கார்யமாயிருப்பதுபற்றி அசேதனமாகையால் அனுப விக்கத் தக்கதென்றே சொல்லக் கூடுமாயினும் மேற்கூறிய புருஷனது விருத்தியாரோபத்தால் புத்திக்குப் புருஷத்தன்மை யுண்டாவதுபோல் தோற்றமுண்டாகி புருஷனது விருத்தி போலும் அனுபவம் போலும் தோற்றமுண்டாகின்றது.

ஆகவே இவ்வித சித்த விருத்திகள் யாவும் தீபஜ்வாலைகள் போல் புதிது புதிதாயுண்டாகி அதே க்ஷணத்தில் அழியக்கூடிய ஒருவித மாறுதலென்றேற்படுமேயன்றி எவ்விதமாறுதலு மில் லாத புருஷனுடையவைகளாக ஒருபொழுது மாகா. ஏனெனில் புத்தியால் தெரிவிக்கபட்ட விஷயத்தை யுடைத்தாயிருத்தலே தத்துவத்தின் இயற்கையாவதாலென்க. இங்கு புத்தி விஷயத் தைத் தெரிவிப்பதாவது—விருத்தியில் சம்பந்த மடைந்த விஷ யத்தையுடைய புத்திதத்துவத்தில் புருஷனுக்குப் பிரதிபிம்ப மேற்படுவதால் புத்தியிலுள்ள புருஷப் பிரதிபிம்பத்திற்கும் அதே புத்தியிலுள்ள விஷயத்திற்கும் ஏற்படும் சம்பந்தமே யா மென்க. ஆனால் புத்திதத்துவத்திலுண்டாகும் புருஷப் பிரதி பிம்பத்தை ஸ்படிகத்திலுண்டாகும் புஷ்பப் பிரதி பிம்பத்தைப் போல் எண்ணுவதற்கில்லை. பின்னை யோவெனில் அவித்தையா லுண்டாகும் அபிமானமே யாகுமென்றறியவேண்டும். ஆகவே த்ரஷ்டாவானவன் அப்பொழுது சித்தத்துடன் கூட விருத்தியும் தானும் வேறில்லாத ரூபமுள்ளவனாக வாகின்றான் என்பது கருத்து. ஆனதுபற்றி புத்திக்கும், அதில் பிரதிபிம்பத்தை யடைந்த புருஷனுக்கும் சேர்ந்திருத்தல் மூலம் ஒன்றான தோற்ற மேற்படுவதிலிருந்து புத்தியிலுள்ள விருத்திகள் மூலம் புருஷ னும் விருத்தி யுள்ளவன்போலும், உண்மையாக கர்த்தாவாக இல்லாவிடினும் கர்த்தாபோலும், போக்தாவாக இல்லாவிடினும் போக்தாபோலும், துக்காதிகளற்றவனாயினும் துக்காதிகளுள்ள வன்போலும், விவேகக்யாதி யற்றவனாயினும் விவேகக்யாதியுள் ளவன் போலும் தோற்றத்தையடைகிறான்.

இங்கு புத்தி புருஷன் இவ்விரண்டும் உண்மையில் ஒன்றுடனொன்று சேர்ந்த சுவபாவமுள்ளதாயினும் சித்தம் போக்யமென்றும் புருஷன் போக்தாவென்றுமுள்ள சம்பந்தமானது அவித்தையை நிமித்தமாகக் கொண்டு அனாதியாக ஏற்பட்டதென்றே கொள்ளவேண்டும். கால் முதலியவற்றில் ஓர் இரும்பு ஆணி முதலியன தைத்துக்கொண்டதென வைத்துக் கொள்வோம். அப்பொழுது அயஸ்காந்தக் கல்லுக்கெதிரில் இரும்பு தைத்த புருஷனது அவயவத்தைக் காட்டினால் காந்தமானது புருஷ சரீரத்திலுள்ள இரும்பைத் தன்னிடம் இழுத்துக் கொண்டு விடுகின்றது. ஆகவே புருஷனது சல்லியத்தை (இரும்பை) எடுத்து விடுவதிலிருந்து புருஷனுக்குபகாரியாகவும், புருஷனுடைய சொத்தாகவும், காந்தமாகி விடுகின்றது போலவே சித்தமும் இரும்புக்கொப்பான விஷயாதிகளைத் தன தருகில் தானிழுத்துக்கொண்டு திருச்யத்வரூபமான உபகாரத்தை யுண்டுபண்ணுவதாலும், போகத்திற்குச் சாதனமா யிருப்பதாலும் புருஷனது சொத்தாகவாகி விடுகின்றது என்றறிய வேண்டும். (எ - று.)

(அ - கை) முன்னர் கூறப்பட்ட விருத்திகள் எவ்வளவு; எம்மாதிரியான விருத்தியை நாம் நிரோதம் செய்யவேண்டும் என்றால்? பதிலளிக்கிறார்:—

सू०॥ वृत्तयः पञ्चतय्यः क्लिष्टाक्लिष्टाः ॥ ५ ॥

(ஸூ) வ்ருத்தய: பஞ்சதய்ய: க்லிஷ்டா க்லிஷ்டா: (5)

(ப - ரை) **क्लिष्टाऽक्लिष्टाः** = (க்லிஷ்டாக்லிஷ்டா:) **क्लिष्ट**=(க்லிஷ்ட) தாமஸங்களும் ராஜஸங்களும் **अक्लिष्टाः** = (அக்லிஷ்டா:) ஸாத்விகங்களுமான **वृत्तयः**=(வ்ருத்தய:) விருத்தி ஸமுதாயங்கள் **पञ्चतय्यः**=(பஞ்சதய்ய:) ஐந்து அவயவங்கள் (உட்பிரிவுகள்) உள்ளன.

(தா - ம்) சித்தத்தில் அஸ்மிதை, ராகம், த்வேஷம், அபிநிவேசம், இவைகளைக்காரணமாகக் கொண்டிருப்பதாலோ, (இவைக

ளாலுண்டாவதாலோ) அல்லது புருஷார்த்தத்தையே முக்கியமாகக் கொண்ட சித்தத்திற்கு ரஜஸ்தமோமய விருத்திகள் வீண் கிலேசத்தை யுண்டுபண்ணுவதாலோ க்லிஷ்டங்களென்று சொல்லப்படும் விருத்திகளும், ரஜஸ்தமோ குணங்கள் குறைந்து ஸத்வ குணமே மேலிட்ட சித்தத்திலுண்டாகும் ஸாத்விகங்களான அக்லிஷ்டங்களெனப்படும் விருத்திகளும் உண்டாகின்றன. அவ் விருத்திகள் ஐந்து வகைப்படும். அவற்றுள் க்லிஷ்டம் என்ற விருத்திகளால் தர்மம் அதர்மம் இவற்றின் பெருக்கும், தர்மா தர்ம பலன்களான சுகதுக்கங்களும் ஏற்படுகின்றன. அக்லிஷ்டம் என்ற விருத்திகளால் சத்வத்தை விடப்புருஷன் வேறு என்ற விவேகக்யாதிக்கு (க்ஞானத்திற்கு)ச் சாதனமாயுள்ளவைகளை விஷயங்களாகக் கொண்ட க்ஞானங்களுண்டாகின்றன. ஆகவே இரண்டாவதான அக்லிஷ்ட விருத்திகள் முறையே மோக்ஷ ஹேதுவாகவுமாகின்றன. இவற்றுள் க்லிஷ்ட விருத்திகளுக்கு அக்லிஷ்ட விருத்திகளால் நிரோதமும் அக்லிஷ்ட விருத்திகளுக்கு *பரவைராக்யத்தால் நிரோதமு முண்டாகு மென்றறிய வேண்டும்.

சங்கை—க்லிஷ்ட விருத்திகளுக்கிடையே அக்லிஷ்ட விருத்திகளுமுண்டாகக் கூடுமானதுபற்றி க்லிஷ்டம், அக்லிஷ்டம், க்லிஷ்டா க்லிஷ்டம் என விருத்திகளை மூன்று விதமாகப் பிரிக்க வேண்டியிருக்க க்லிஷ்டம், அக்லிஷ்டம் என இரண்டு விதமாகப் பிரித்தது எங்ஙனம்?

உத்தரம்:—க்லிஷ்டமான விருத்திகளுக் கிடையிலுண்டாகும் அக்லிஷ்ட விருத்திகள் க்லிஷ்ட விருத்திகளால் தடை செய்யப்படாதவைகளாய்க்கொண்டு நாளடைவிலுண்டாகும் அக்லிஷ்ட விருத்தி ஸம்ஸ்காரத்தின் மேலீட்டால் க்லிஷ்ட விருத்திகளைத் தடைசெய்து விடுகின்றன. ஆனதுபற்றி க்லிஷ்டம் அக்லிஷ்டம் இரண்டும் கலந்தவைகளைத் தனி விருத்திகளெனச் சொல்லவேண்டுவதில்லை. மேலும் விருத்திகளால் ஸம்ஸ்காரங்

* तत्परं पुरुषख्यातेर्गुणवैतृष्ण्यम् 1-வது பாதம் 16-வது சூத்திரத்தில் பரவைராக்ய சுவரூபத்தைக் கண்டு கொள்ளவும்.

களும் ஸம்ஸ்காரங்களால் விருத்திகளுமுண்டாகக் கூடுமானது பற்றி விருத்தி ஸம்ஸ்கார சக்கிரம், நிரோத ஸமாதி யுண்டாகும் வரைசுழன்றுகொண்டேதா னிருக்குமென்று மறியவேண்டும்.

(அ - கை) சித்தத்திலுண்டாகும் 5 விருத்திகளின் பெயரை உபதேசிக்கிறார்.

सू० । प्रमाण-विपर्यय-विकल्प-निद्रास्मृतयः ॥ ६ ॥

(ஸூ) ப்ரமாண, விபர்யய, விகல்ப, நித்ரா, ஸ்ம்ருதய: (6)

(த - ம்) பிரமாணம், விபர்யயம், விகல்பம், நித்திரை, ஸ்மிருதி இவைகளே चित्तवृत्तयः=(சித்தவ்ருத்தய:) சித்தத்தின் விருத்திகளாக भवन्ति=(பவந்தி) ஆகின்றன. (எ - று)

(அ - கை) பிரமாணம் முதலிய ஐந்து விருத்திகளின் லக்ஷணத்தை முறையே ஐந்து ஸூத்திரங்களா லுபதேசிப்பான் தொடங்கி அவற்றுள் முதலாவதான பிரமாணத்தின் லக்ஷணத்தையும் அதன் பிரிவையும் உபதேசிக்கிறார்:—

सू०॥ प्रत्यक्षानुमानागमाः प्रमाणानि ॥ ७ ॥

(ஸூ) ப்ரத்யக்ஷானு மானாகமா: ப்ரமாணானி (7)

(ப - ரை) प्रत्यक्षानुमानागमाः=(ப்ரத்யக்ஷானுமானாகமா:) பிரத்யக்ஷம், அனுமானம், ஆகமம் இவைகள் प्रमाणानि=(ப்ரமாணானி) பிரமாணங்களெனப்படும்

(கா - ம்) प्रमाकरणं प्रमाणम्=प्रकर्षेणमीयते घटादिर्विषयः अनेनेतिप्रमा तत्करणं प्रमाणम् இதுவரை எதனாலு மறியப்படாத தத்துவத்தை விஷயமாகக்கொண்ட அறிவே பிரமை எனப்படும். அவ்விதப் பிரமை எதனாலுண்டாகின்றதோ அது பிரமாணம் எனப்படும் எனப் பிரமாணத்தின் பொதுலக்ஷணம் ஏற்பட்டது. இத்தகையப் பிரமாண ஸாமான்யலக்ஷணம் பிரசித்தமானதுபற்றி அவற்றின் உட்பிரிவைமட்டும் பதஞ்ஜலி இங்குகூறி இருக்கிறார் என்று

கொள்ளவேண்டும். அவ்விதம் "பிரமையை யுண்டாக்குவது பிரமாணம்" என்ற பொதுலக்ஷணம் வாய்ந்த பிரமாணங்களுள் முதலாவதான பிரத்யக்ஷத்தின் ஸ்வரூபம் பின்வருமாறு. இந்திரியங்கள் வாயிலாகவோ, நேரிலோ மனத்திற்கும் விஷயத்திற்கும் சம்பந்தமுண்டாகி அதன் மூலம் பதார்த்தத்தின் விசேஷ நிச்சயம் எதனுலுண்டாகின்றதோ அவ்வித மனோவிருத்தியே பிரத்யக்ஷம் எனப்படும். இந்திரியங்கள் வாயிலாக விஷயமிருக்கின்ற தேசம் செல்லுகின்ற சித்தத்திற்கு இந்திரியங்களுடன் சேர்ந்தே விஷயாகாரமான பரிணும முண்டாகின்றதென்பதை அனுபவத்தைக்கொண்டு ஒப்பவேண்டுவதவச்யமாகின்றது. மஞ்சட்காமாலை என்ற தோஷமுள்ள சக்ஷுரிந்திரியத்தால் சங்கம் முதலியவற்றைப் பார்க்குமிடத்து "சங்கம் பொன்னிறமானது" என்ற தோற்ற முண்டாகின்றது. இங்கு காமாலை என்ற தோஷமுள்ள சக்ஷுரிந்திரியத்தின் சேர்க்கை சங்கவடிவமான விருத்தியை யடையும் சித்தத்திற்கும் இருக்கின்றதென்பதே மேற்கூறிய அனுபவமாகும். ஆனதுபற்றியே ரூபம் முதலிய விஷயத்தைப்பற்றிய விருத்திகள் மனத்திலுண்டாவதற்கு சக்ஷுஸ் முதலிய இந்திரியங்கள் காரணங்களாக வாகின்றன வென்று சொல்லப்படுகின்றது. மேலும் *ஜாதி வியக்தி வடிவமான உலகிலுள்ள விஷயங்களுள் ஜாதியைச்சாமான்யம் (பொது) என்றும், வியக்தியை விசேஷம் (தனியாய் அறியக்கூடியது) என்றும் சொல்வதுண்டு. இவற்றுள் விசேஷமாகச் சொல்லப்படும் வியக்தியை நிச்சயம் செய்வதற்குரிய சித்த விருத்தியானது பிரத்யக்ஷம் என்ற பிரமாணமாகும். இவ்வித விருத்தியில் சாமான்யம் என்ற ஜாதியும் தோற்றக் கூடுமாயினும் விசேஷம் என்ற வியக்தி முக்யமாயும், ஜாதி அதிலடங்கினதாயும் தோற்றத்தை யடைவதால் விசேஷ நிச்சயம் செய்வதை முக்கியமாகக் கொண்ட விருத்தியே பிரத்யக்ஷப் பிரமாணம் என்று கூறப்பட்டது. இவ்விதமே வியாஸபாஷ்யத்திலும்

*घटत्वम्=குடத்தின் தன்மை "ஜாதி" எனப்படும். இது எல்லாக் குடத்திலுமொன்று யனுபவிக்கக் கூடியது. 'घटः மண் முதலியவற்ருல் செய்யப்பட்ட ஒரு மாதிரி அவயமுள்ள வஸ்து "வியக்தி" எனப்படும்.

इन्द्रियप्रणालिकया चित्तस्य बाह्यवस्तूपरागात्तद्विषया सामान्यविशेषात्मनोऽर्थस्यविशेषावधारणप्रधानावृत्तिः प्रत्यक्षं प्रमाणम् ॥

"இந்திரியங்கள் வாயிலாக சித்தத்திற்கு வெளியிலுள்ளவஸ்துவின் ஸம்பந்த முண்டாகி அவ்வெளி வஸ்து விஷயமாயும் ஸாமான்ய விசேஷ (ஜாதி வியக்தி) வடிவமான வஸ்துவினது விசேஷ வியக்தி நிச்சயம் செய்வதைப் பிரதானமாயுடையதாயுமானவிருத்தி 'பிரத்தியக்ஷம்' என்ற பிரமாணமாகும்" என்றதால் சொல்லப்பட்டிருக்கிறது,

இனி அனுமானப் பிரமாணத்தை நிரூபிப்பாம்—அனுமானப்பிரமாணம் பிரத்யக்ஷப் பிரமாணத்தின் கார்யமாயிருப்பது பற்றி பிரத்யக்ஷலக்ஷணம் கூறிய பின்னர் அனுமான லக்ஷணம் கூறுவது பொருத்தமுள்ள தாயாகின்றது. அனுமிதிக் ஞானத்திற்குக் காரணமாயுள்ளது அனுமானப் பிரமாணம் எனப்படும். மலையினருகிற் சென்ற புருஷன் மலையிற் புகையைக் கண்டதும் "மலை நெருப்புள்ளது" எனவூஹிக்கின்றான். இவ்விடத்தில் புகை "ஹேது" வென்றும், நெருப்பு "ஸாத்யம்" என்றும் மலை "பக்ஷம்" என்றும் வழங்கப்படும். நேரில் கண்கூடாகக்கண்ட ஹேதுவானபுகைக்கும் ஸாத்யமான நெருப்பிற்கும் இயற்கையில் ஒருவித ஸம்பந்தம் (சேர்க்கை) இருக்கின்றது அஃதே ஹேது (புகை) விருக்கின்ற விடங்களிலெல்லா மிருக்கின்ற ஸாத்யத்துடன் சேர்ந்திருத்தல் என்ற "வியாப்தி" எனப்படும். இவ்வித வியாப்தியுடன் கூடிய ஹேதுவானபுகை, ஸாத்யமான நெருப்பு இவற்றுளொன்றான புகையைக்கண்டதும் புகையுடன் சேர்ந்திருக்கவேண்டிய நெருப்பு இம்மலையிலிருக்கின்றது என ஊஹவடிவமான ஒருவிதக் ஞானமுண்டாகின்றது. இஃதே அனுமிதி எனப்படும்.

அனுமானத்தை மறுபடியும் விரித்துக் கூறுவாம்—சமையல் அறையில் புகை, நெருப்பு இரண்டையும் சேர்த்தனுபவித்ததாலுண்டான ஸம்ஸ்காரத்துடன் கூடிய புருஷன் மலையருகிற் சென்றபொழுது மலையில் புகையைக் கண்டதும் புகையுடன்

சேர்த்தனுபவித்த நெருப்பு இம்மலையி லிருக்கின்றதென ஊஹிக்கிறான். இவ்விடத்தில் புகையை மலையில் பார்த்ததும் முன்னர் சமயலறையில் புகை, நெருப்பு இவ்விரண்டையும் சேர்த்தனுபவித்ததிலிருந்துண்டான ஸம்ஸ்காரத்தினின்றும் "மலை நெருப்புள்ளது" என்ற ஊஹவடிவமானக் ஞானத்திற்குக் காரணமாக சித்தத்தில் ஓர்வித விருத்தி யுண்டாகின்றது. இஃதே "அனுமானம்" எனப்படும். ஆகவே நெருப்பு, புகை, இரண்டையும் ஓரிடத்தில் சேர்த்தனுபவித்தல், அவ்வனுபவத்தினின்றும் ஸம்ஸ்கார முண்டாதல், இவ்வித ஸம்ஸ்காரத்துடன் கூடிய புருஷன் மலையினருகிற் சென்றதும் முன்னர் நேரில் சேர்த்தனுபவித்த இரண்டிற்குள் ஒன்றைக் காணல், அதனின்றும் புகையுடன் சேர்ந்திருக்கும் நெருப்பு இம்மலையிலிருக்கின்றது என ஊஹத்திற்குக் காரணமான ஒருவித விருத்தி சித்தத்தி லுண்டாதல், அதனின்றும் மலை நெருப்புள்ளது என்ற அனுமிதி ஏற்படுதல் எனக்கிரமம் ஏற்பட்டது.*

இனி ஆகமம் எனப்படும் சப்தப் பிரமாணத்தை நிரூபிப்பாம்—தத்துவத்தைக் காணல், கருணை, காணங்களிற்றிறமை இவை முதலிய நற்குணங்கள் பொருந்திய ஆப்த புருஷனால் தானே நேரில் கண்டதாகவோ அல்லது கேட்டதாகவோ, ஊஹிக்கப்பட்டதாகவோ வுள்ள பொருளைப்பற்றிய சித்த விருத்தியைப் பிறற்குண்டுபண்ணுவதற்காக வுபதேசிக்கப்படும் சப்தம் யாதுண்டோ அதன் மூலம் அந்தப் புருஷனுக்குண்டாகக்கூடியதும், அப்பொருளை விஷயமாகக் கொண்டதுமான சித்த விருத்தி ஆகமம் எனப்படும். எவன் தன்னால் நேரில் அனுபவிக்கப்படாததும், கேட்கப்படாததும், நன்கு ஊஹிக்கப்படாததுவுமான பொருளை யுபதேசிக்கின்றானோ அவனிடம் சிரத்தை யுண்டாகாதானதுபற்றி அவனா லுபதேசிக்கப்படும் ஆக

* நம்மால் தமிழுரையுடன் வெளியிடப்பட்ட "சாங்கியதத்துவ கௌமுதீ" என்ற கிரந்தம் 5-வது சுலோகத்தில் அனுமானம் முதலியப் பிரமாண விஷயமாய் விரிவாய்க் கூறப்பட்டிருக்கிறது. அங்கு அதைக் கண்டு கொள்க.

மம் பிரமாணமாயாகா. மனுமுதலிய மஹ ருஷிகளா லுப தேசிக்கப்பட்ட பொருள்களோ வெனில் வேதத்தை யாதாரமா கக் கொண்டிருப்பதாலும், மூல பூதமான அவ்வேதம் எல்லா வற்றையும் நேரில் கண்ட ஆண்டவனு லுபதேசிக்கப்பட்டிருப் பதாலும் பிரமாணங்களாயாகுமென வறியவேண்டும். ஆகவே இதுவரை கூறியதிலிருந்து சுகாதிகளை யுடைய மனையாள் கண வனுக்குப் போல ரூபம் முதலியவற்றை யுடைய சித்த விருத்தி கள் புருஷனெனப்படும் ஜீவனுக்குப் போக்யங்களாகவாகின்றன வெனப் பெறப்பட்டது. (எ - று)

(அ - கை) இதுவரை ஐந்து விருத்திகளுள் முதலாவதான பிரமாணம் என்ற விருத்தியை நிரூபணம் செய்து இந்தச் சூத்தி ரத்தால் இரண்டாவதான "விபர்யயம்" என்ற விருத்தியை யுபதேசிக்கிறார்.

सू०॥ विपर्ययो मिथ्याज्ञानमतद्रूपप्रतिष्ठम् ॥ ८ ॥

(ஸூ.) விபர்யயோ மித்யாக்ஞான மதத்ரூப ப்ரதிஷ்டம். (8)

(ப - ரை) **अतद्रूपप्रतिष्ठम्**=(அதத்ரூபப்ரதிஷ்டம்) **तस्यरूपं, तद्रूपम्, तद्रूपे प्रतिष्ठा यस्य तत्। तद्रूपप्रतिष्ठम्। तद्रूपप्रतिष्ठं न भवतीत्यतद्रूपप्रतिष्ठम्॥** அந்த வஸ்துவினுடைய உண்மையான சுவரூபத்தில் நிலையை யடையாத (அதாவது வஸ்துவின் உண்மையான ஸ்வரூ பத்தைப்பிரகாசப்படுத்தாத) **मिथ्याज्ञानम्**-(மித்யாக்ஞானம்) பொய் யானக்ஞானமானது **विपर्ययः**-(விபர்யயः) விபர்யய மெனப்படும்.

(தா - ம்) எந்த வஸ்துவினது ஸ்வரூபம் எவ்வித முள் ளதோ அவ்விதமே அந்த வஸ்துவைத் தெரிவிக்கின்றக் ஞானம் "யதார்த்தக் ஞானம்" எனப்படும். வஸ்துவின் உண்மையான ஸ்வரூபத்தை மாற்றி அதற்கு மாறுன ஸ்வரூப முள்ளதாக எந்தக் ஞானம் தெரியப்படுத்துகின்றதோ அது "மித்யாக் ஞானம்" என்றும், "விபர்யயம்" என்றும் சொல்லப்படும். அதா வது: சிப்பியில் "இது வெள்ளி" என்ற க்ஞானமுண்டாகின்றது. இங்கு சிப்பியினிடத்து "இது சிப்பி" என்றக் ஞானமுண்டாக

வேண்டுவ தவசியமாயிருக்க அதை மாற்றி "இது வெள்ளி" என்ற தோற்றமேற்படுவதால் இதை மித்யாக் ஞானமென்கி றோம். இவ்விதமுண்டாகும் மித்யாக் ஞானமானது பின்ன ருண்டாகும் "இது சிப்பி" என்ற தத்துவக்ஞானத்தால் பாதிக்க (மாற்ற)ப் படுகின்றது. பிரமாணத்தால் அப்ரமாணமா யுள்ளது மாற்றப்படுகின்றதென்பது மிக்க வனுபவத்தில் வந்த விஷயமே. இந்த மித்யாக் ஞானத்தையே **अविद्यास्मिता-राग-द्वेषाऽभिनिवेशाः पंचक्लेशाः** என்ற சூத்திரத்தால் 5-படியுள்ள அவித்தை என உப தேசிக்கப் போகிறார். மேலும் இவ்விதமே

तमो मोहो महामोहस्तामिस्रोऽप्यंधसंज्ञितः ।
अविद्यापञ्चपर्वैषा प्रादुर्भूता महात्मनः ॥

என்று விஷ்ணு புராணத்தில் பராசரரும் உபதேசித்திருக் கிறார். இதுவரை கூறியதிலிருந்து "தாணுவா புருஷனா" வென்றுண்டாகும் ஸம்சயக்ஞானமும் விபர்யய மென்றே ஏற் பட்டது. எந்தக் ஞானமானது பின்னர் மாற்றக் கூடியதோ அது மித்யாக் ஞானமாகும் என்பது விபர்யயத்தின் சுருக்கமான லக்ஷணமாகும்.

(அ - கை) விகல்பம் என்ற விருத்தியை நிரூபணஞ் செய் கிறார்.

सू०॥ शब्दज्ञानाऽनुपाती वस्तुशून्यो विकल्पः ॥ ९ ॥

(ஸூ) சப்தக்ஞானானுபாதீ வஸ்து சூன்யோ விகல்ப: (9)

(ப - ரை) **शब्दज्ञानानुपाती**=(சப்தக்ஞானானுபாதீ) **शब्दज्ञान**-(சப்தக்ஞான) சப்தத்தை விஷயமாக வுடைய க்ஞானத்தை **अनु-पाती**:- (அனுபாதீ) அனுஸரித்துண்டாகின்றதும். **वस्तुशून्यः**= (வஸ்து சூன்ய:) உண்மையில் விஷயமற்றதுமான [**वृत्तिविशेषः**- (விருத்தி விசேஷ:) விருத்தி விசேஷமானது] **विकल्पः**-(விகல்ப:) விகல்பம் எனப்படும்

(தா - ம்) சப்தத்தா லுண்டுபண்ணப்பட்ட க்ஞானத்தை யனுஸரித்துண்டாகும் சுவபாவமுள்ளதும், வஸ்துவின் உண்மையை எதிர்பாராததுமான விருத்தியானது "விகல்பம்" எனப் படும். தேவதத்தனுடைய கம்பளம் என்ற விடத்தில் தேவதத்தனுக்கும் கம்பளத்திற்கும் உண்மையில் பேதமும் (வேற்றுமையும்) ஓர் விதமானசம்பந்தமும் தோற்றுவது போலவே, "புருஷனுடைய சைதன்யம்" என்ற சப்தப்பிரயோகம் செய்யுமிடத்து, உண்மையில் புருஷனே சைதன்யமாயினும் "புருஷனுடைய" என்ற விடத்திலுள்ள ஆறும்வேற்றுமையால் சைதன்யம் புருஷனைவிட வேறு என்றும், சைதன்யத்திற்கும், புருஷனுக்கும் ஓர் வித சம்பந்தமிருக்கின்றதென்றும் ஒருவித க்ஞானமுண்டாகின்றது. இவ்விருத்திரூபமான க்ஞானம் "விகல்பம்" எனப் படும்.

சங்கை:—சப்தக் ஞானத்தை யொட்டி இந்த விருத்தியுண்டாகின்றதெனின் ஆகம விருத்தியில் சேர்ந்ததா யேற்படும். வஸ்து வில்லாதுண்டாகின்ற தென்றாலோ, விபர்யயம் என்ற விருத்தியில் சேரும். இவ்விதமிருக்க ஆகமம், விபர்யயம் இவ்விரண்டு விருத்திக்கும் புறம்பாய் இந்த விகல்பம் என்ற விருத்தியை அங்கிகரிக்க வேண்டுவதசியமில்லை எனின்?

உத்தரம்—அதனுண்மையை இங்கு கூறுவாம். இந்த விகல்ப விருத்தியானது அபேத முள்ளவிடத்தில் பேதத்தையும், உண்மையில் பின்னங்களான வஸ்துக்களுக்கு அபேதத்தையும் போதிக்கின்றது. ஆகவே ஒரு வஸ்துவுக்குப் பேதமும், அபேதமும் சம்பவிக்காதானதுபற்றி உண்மையில்லாத பேதம் அபேதம் இரண்டையும் போதிக்கும் இந்த விகல்பத்தை பிரமாணமான ஆகமத்தில், சேர்ப்பதற்கில்லை என்பதால் இவ்வித மனுபவத்திலிருந்து வரும் இது தனி விருத்தி என்று கூறப்பட்டதெனக் கொள்ளல் வேண்டும். மேலும் விபர்யய விருத்தியிலுமிதைச் சேர்க்க முடியாது. ஏனென்றால் விபர்யய விருத்தியானது அதற்கு விரோதமான விஷயத்தை நேரில் கண்ட காலத்தில் மாறி விடுகின்றது. "இது வெள்ளி" என்ற

விருத்தியானது சிப்பியில் பிரமத்தா லுண்டாகின்றது. "இது சிப்பி" என்ற உண்மையானக் ஞானமுண்டானதும் "இது வெள்ளி" என்றக்ஞானம் பாதிக்கப்படுகின்றது. இங்கு "புருஷனுடைய சைதன்யம்" என்ற விடத்திலோவெனில், சாஸ்திர மூலம் சைதன்யம் புருஷனுடைய சுவரூபமேயின்றி புருஷனை விட வேறன்று, என்றுணர்ந்த மகாயோகிகளுக்கும் கூட "புருஷனுடைய சைதன்யம்" என்ற சப்தத்தைக் கேட்கும் கால் புருஷனைவிட சைதன்யம் வேறு என்ற ஒரு மாதிரி தோற்ற மேற்படுவதால் வஸ்துவின் உண்மை தெரிந்த பின்னரும் இந்த விகற்ப விருத்தியானது மாறுதிருக்கின்றதுபற்றி விபர்யயத்தைவிட இதுவேறான தென்று கொள்ளல் அவசியமாகி விட்டது. மேலும் இந்த விகற்பத்திற்கு "ராகுவின் தலை" "மலடியினுடைய புத்திரன்" என்ற இவ்விரண்டும் கூட உதாஹரணங்களாகும். தலையே ராகுவாக இருக்க பேதமற்ற விடத்தில் 'ராகுவினுடைய தலை' எனப் பேதக் ஞானத்தையும், மலடியைத் தனியாகவும், பிள்ளையைத் தனியாகவும் கண்ட நமக்கு 'மலடியினுடைய பிள்ளை' என்ற சப்தத்தைக் கேட்ட காலத்தில் சித்தத்தில் சப்த மூலம் ஒரு மாதிரி வஸ்துவற்ற விருத்தியையும் நாம் அடைவது அனுபவத்திலிருப்பதால் இந்த விகல்ப விருத்தியைத் தனியாய் அங்கீகரித்தே தீரவேண்டும் எனப்பெறப்பட்டது. (எ. - று.)

(அ - கை) இனி நான்காவதான "நித்திரா" விருத்தியை யுபதேசிக்கிறார்.

मू०।। अभावप्रत्ययालंबना वृत्तिर्निद्रा ।। १० ।।

(ஸூ) அபாவப்ரத்யயாலம்பனா வ்ருத்தி: நித்ரா (10)

(ப - ரை) **अभावप्रत्ययालंबना** - (அபாவப்ரத்யயாலம்பனா) **अभाव**-(அபாவ) முற்கூறிய விருத்திகளின் இல்லாமைக்கு **प्रत्यय**-(ப்ரத்யய) காரணமான தமோகுணத்தை **आलंबना** - (ஆலம்பனா) விஷயமாகவுடைய **वृत्तिः**-(வ்ருத்தி:) விருத்தியானது **निद्रा**-(நித்ரா) நித்திரை என்ற விருத்தி எனப்படும்.

(தா - ம்) ஜாக்கிரத், ஸ்வப்னம், என்ற இரண்டு நிலைகளி லும் சித்தத்தில் சத்வகுணம், ரஜோகுணம் இவற்றால் பல விருத் திகளுண்டாகின்றன. அவ்வித முண்டாகும் விருத்திகள் யாவை யும் தமோகுணமூல முண்டாகும் விருத்தியானது அழித்து விடு கின்றது. ஆகவே ஜாக்கிரத் ஸ்வப்ன காலத்திய விருத்திகள் யாவையும் அழித்து விடுவதற்குக் காரணமாகவான தமோகுண த்தையே விஷயமாக வுடையதும், தமோகுணத்தால் மறைக்கப் பட்ட சித்தத்திலுள்ள சுகாதிகளை விஷயமாக வுடையதுமான சித்தவிருத்தி யாதுண்டோ அதுவே "நித்திரை" எனப் பெறப்பட்டது.

சங்கை—**वृत्तय:** என்ற ஐந்தாவது சூத்திரத்திலுள்ள பதம் ஒவ்வொரு சூத்திரத்திலும் தொடர்ச்சியாக வந்து கொண்டிருப்ப தால் இந்தச் சூத்திரத்திலும் அதே **वृत्ति** என்றபதத்தைச் சேர்த் துக்கொண்டு 'நித்திரை விருத்தி எனப்படும்' என்று பொருள் கொண்டாலே போதுமானதாகவிருக்க இங்கு **वृत्तिः** என்று திரும் பவும்சொன்ன பதஞ்ஜலியின் கருத்து யாது ? எனின் ? உத்தரம் கூறுவாம். நித்திரையைவிருத்தி எனப் பல ஆசிரியர் ஒப்புவ தில்லையாயினும் நாம் அதை விருத்தி என்றே எண்ணுகிறோம் என்று காட்டவே தொடர்ச்சியாய் வரும் விருத்தி பதத்திற்குப் புறம்பாய் திரும்பவும் சூத்திரத்தில் **वृत्तिः** என்றபதத்தைப் பிரயோகித்திருக்கிறார் என்றுக்கொள்ளல் வேண்டும். இவ்விதமே

जाग्रत्स्वप्नः सुषुप्तं च गुणतो बुद्धिवृत्तयः ॥

என்ற ஸ்மிருதிவசனமும் நித்திரையை விருத்தி என்றே யுபதே சிக்கின்றது. மேலும் முக்குண வடிவமான புத்தி தத்துவத்தி லுள்ள சத்வம், ரஜஸ் இவ்விரு குணங்களையும் மறைத்து எல் லாக் கரணங்களையும் மறைக்கும் தமோகுணமானது எப்பொ ழுது ஆவிர்ப்பாவத்தை (அதிகத்தோற்றத்தை) யடைகின்றதோ அப்பொழுது புத்திக்கு விஷயவடிவமான பரிணாமம் (மாறுதல்) அற்றுவிடுவதால் அதிகத்தோற்றத்தை யடைந்த தமோகுண வடிவமாகவே புத்தி தத்துவமாகி விடுகின்றது. அவ்விதம்

தமோகுணவடிவமாகவான புத்தி தத்துவத்தை அன்னிலையில் பிரகாசப்படுத்தும் புருஷன் "ஸாக்ஷாப்தன்" என்றும் "அந்தஸ்ஸம்க்ஞன்" என்றும் சொல்லப்படுகிறுன். மேலும், நிருத்தம், கைவல்யம் என்ற இவ்விரண்டிற் போலவே எவ்வித விருத்தியுமில்லாதிருத்தலே "நித்திரை" என்றும் சொல்லுவதிற்கில்லை. ஏனெனில் தூங்கி எழுந்தபிறகுண்டாகும் ஸ்மரணத்தால் தூக்க காலத்தில் இவ்வித நினைவுக்குக் காரணமான ஓர்வித அனுபவ ரூபமான விருத்தியானது இருந்தேதீரவேண்டும் என்று ஏற்படுவதே அதன் காரணமாகும். ஆகவே நித்திரையை விருத்தி என்றே தீர்மானம் செய்கிறோம். நித்திரையை விட்டெழுந்தவனுக்குச் சத்வகுணத்தின் உதவியை யடைந்த தமோகுணம் ஆவிர்ப்பாவத்தை (அதிகப்பிரகாசத்தை) யடையுங்கால் சுகமாய் "நான் தூங்கினேன், எனது மனது தெளிந்து எனது அறிவு விசாலப்பட்டிருக்கிறது" என்ற தோற்ற முண்டாகின்றது. இது போலவே ரஜோகுணத்தின் உதவியை யடைந்த தமோகுணம் அதிகப்பிரகாசத்தை யடையுங்கால் "துக்கமாகவே நான் தூங்கினேன், எனது மனம் நிலையை யடையாது இங்குமங்கு மலைவதால் எவ்வித வேலைக்கும் தகுதியற்றிருக்கின்றது" என்ற தோற்றமுண்டாகின்றது. இவ்விதமே ரஜஸ் தமோகுணங்கள் முற்றிலுமற்று தமோகுணமே மேலிட்ட நித்திரையை யடைந்த புருஷனுக்கு "மிக்க மூடனாய் நான் தூங்கினேன், எனது அங்கங்கள் தடித்திருக்கின்றன, எனது சித்தம் வாட்டத்தை யடைந்திருக்கிறது, திருடப்பட்டது போல எவ்விதத் தோற்றத்தையுமடையாததாய் நிற்கின்றது" என்ற தோற்ற முண்டாகின்றது. ஆகவே மேற்கூறிய நினைவினின்றும் அதற்கனுகுணமான அனுபவம் நித்திரா காலத்திலிருந்தே தீரவேண்டும் என்றும், அவ்வித அனுபவம் விருத்தியின்றி நிகழாதானதுபற்றி நித்திரையை "விருத்தி" என்றே தீர்மானம் செய்வதவசியமாகின்றது. ஆகவே சமாதிசித்திப்பதற்கு வேண்டி பிரமாணம் முதலிய விருத்திகளை நிரோதம் செய்வது போலவே இந்த நித்திரா விருத்தியையும் நிரோதம் செய்ய வேண்டுவதவசிய மாகிவிட்டது. (எ - று)

(அ-கை.) ஸ்மிருதி என்ற விருத்தியை நிரூபணம்செய்கிறார்.

सू०॥ अनुभूतविषयाऽसंप्रमोषः स्मृतिः ॥ ११ ॥

(ஸூ-ம்) அநுபூத விஷயா ஸம்ப்ரமோஷ: ஸ்மிருதி : (11)

(ப - ரை) अनुभूतविषयाऽसंप्रमोषः= (அநுபூதவிஷயாஸம்ப்ர மோஷ:) **अनुभूतविषय=** (அநுபூதவிஷய) அநுபவிக்கப்பட்ட விஷயத்தின் **असंप्रमोषः =** (அஸம்ப்ரமோஷ:) நாசமின்மையை யுடைத்தான **प्रत्ययः=**(ப்ரத்யய:) அறிவானது **स्मृतिः=**(ஸ்மிருதி:) நினைவு எனப்படும்.

(தா - ம்.) அநுபவம் என்றக்ஞானத்திற்கு எதெது விஷய மாகின்றதோ அந்தந்த விஷயத்தைவிட அதிகமான விஷயம் ஸ்மிருதியில் தோன்றுவதில்லை. அதாவது: அநுபவத்திற்கு ஈது விஷயமாகின்றதோ அதுவே ஸ்மிருதிக்கும் விஷயமாகின்றது என்பதாம். அநுபவமானது ஸ்தூல விஷயத்தை விஷயீகரிக் கின்றது. ஸ்மிருதியோவெனில் அநுபவத்தால் சித்தாரூடமாக வான ஸூக்ஷ்மவிஷயத்தை விஷயீகரிக்கின்றது. ஆனது பற்றியே அநுபவத்தினின்றும் ஸ்மிருதியானது வேறு விருத்தியாகக் கொள்ளப்படுகிறது.

சங்கை—ஸ்வப்னத்தில் தன்னை யானையாகவும், காக்கை யாகவும் ஒருவன் அநுபவிக்கின்றான். ஆகவே ஜாக்கிரத்தில் அநுபவிக்கப்படாத பொருளும் ஸ்வப்னகாலிக ஸ்மிருதியில் விஷயமாகத் தோன்றுவதால் அநுபவிக்கப்பட்டதற்குப் புறம் பான வஸ்துவானது ஸ்மிருதியில் விஷயமாவதில்லை'' என்று சொன்ன ஸ்மிருதிலக்ஷணத்திற்கு இது விலக்காகிவிடு மன்றோ எனின் ?

உத்தரம்—ஸ்வப்ன ஸ்மிருதியில் ஜாக்கிரத்தில் அநுப விக்கப்பட்ட வஸ்துவும் விஷயமாகலாமே யன்றி ஸ்வப்பனத்திற் றோன்றுவதெல்லாம் வேறு நிலையில் அநுபவிக்கப்பட்டுத் தானி ருக்கவேண்டும் என்ற நியமமில்லை. யாதலால் ஸ்வப்பன தசையி

லுண்டாகும் "நான் யானை என்ற" தோற்றத்தை மித்யாக் ஞான ரூபமான அனுபவம் என்று தீர்மானிக்கிறோம்.

(அ - கை.) இதுவரை ப்ரமாணம், விபர்யயம், விகல்பம், நித்திரை, ஸ்மிருதி என்ற ஐந்து விருத்திகளை நிரூபணஞ் செய்து இனி இவ்வித விருத்திகளின் நிரோதத்திற்குரிய உபாயத்தை உபதேசிக்கிறார்

सू०।। अभ्यासवैराग्याभ्यां तन्निरोधः ।। १२ ।।

(ஸூ) அப்யாஸவைராக்யாப்யாம் தன்னிரோத:(12)

(ப - ரை.) **तन्निरोधः** = (தன்னிரோத:) **तत्**=(தத்) முற்கூறிய விருத்திகளுடைய **निरोधः**=(நிரோத:) தனது காரணமான சித்தத்தில் சக்திமாத்திர வடிவமுள்ளதாக விருத்தலானது **अभ्यासवैराग्याभ्याम्** = (அப்யாஸவைராக்யாப்யாம்) அப்யாஸம் வைராக்கியம் இவ்விரண்டினாலும் [**भवति**=(பவதி) உண்டாகின்றது.]

(தா - ம்.) பின்னர் கூறப்படும் லக்ஷணமுள்ள அப்யாஸம், வைராக்யம் என்ற இவ்விரண்டினாலும் சித்தத்திலுண்டாகும் பிரகாசபிரவிருத்தி,ஸ்திதிரூபமானமுற்கூறியவிருத்திகளை நிரோதம் செய்தல்வேண்டும். அதாவது:சப்தாதிவிஷயம் தோஷத்தைத்தரத் தக்கது என்ற எண்ணம் உதயமானதும் அவ்விஷயத்தில் ஆசை குறைகின்றது. இதுவே வைராக்யமாகும். ஆகவே வைராக்யத்தால் விஷயத்தில் பற்றுதல் முறையே குறைந்து விடுகின்றது. ஆகவே குணதோஷ விமர்சனம் என்ற விவேகக்ஞானத்தை இடைவிடாது பழக்கி வருவதிலிருந்து சித்தத்திற்கு விஷயப்பற்றுதல் என்ற பஹிர்முகப்பிரவிருத்தி குறைந்துவிடவே முற்கூறிய விருத்திகள் யாவும் சக்திமாத்திர வடிவமுள்ளனவாயாகித் தனது காரணமான சித்தத்துடனேயே நிலைத்து நின்று விடுகின்றன. இவ்வித நிலையே 'விருத்தி நிரோதம்' எனப்படும்.

குறிப்பு—விஷயத்தில் தோஷதர்சன முண்டாவதிலிருந்து அதிலுள்ள பேராவல் குன்றிவிடும் என்றவிஷயமாய் நமது சாஸ்திரங்களில் ஓர்கதை கூறப்பட்டிருக்கிறது. அதை இங்கு எழு

றுகிறோம். ஒரு மனிதன் அநேக தினங்களாய் உண்ணவுணவு கிடையாதவனாய் ஒரு காட்டின் வழியே போய்கொண்டிருக்கும் பொழுது ஒருவிடத்தில் ஒருதோட்டத்தைக் கண்டான். அங்கு சென்று பார்க்கும் பொழுது அத்தோட்டம் மிக்கவழகு பொருந்தியதாய் காணப்பட்டது. அதன்மத்தியில் அழகியதோர் வீட்டைக்கண்டான். அவ்வீட்டின் வாயிற்றிண்ணையில் ஒரு பெரிய வாழை இலையை விரித்து அதில் அறுசுவையுடன் அன்னம் பரிமாரியிருக்கக்கண்டு பரமானந்தமடைந்து இங்கு எவருமில்லாததால் நாமே இதையுட்கொண்டு நமது பசியைத் தீர்த்துக்கொள்வோம் என வெண்ணினவனாய் நாலாபக்கத்திலும் சுற்றிப்பார்த்து ஒருவருமில்லாததைக்கண்டு பரமானந்தமடைந்து அவ்விலையினருகிலுட்கார்ந்து அந்த இலையிலுள்ள ஆகாரத்தைக் கையிலெடுத்து அதைத் தனது வாயிற்போட்டுக்கொள்ள யத்னம் செய்யும் தருணத்தில் அங்கு ஒரு மனிதன் ஓடோடியும் வந்து இப்பசியாளரை நோக்கி, "அடே மூடா! இக்காட்டில் ஒருவனுமில்லாதவிடத்தில் அறுசுவையுடன் கூடிய அன்ன மிருக்கின்றதே, இதை ஏன் ஒருவரும் உட்கொள்ளவில்லை? இதில் ஏதேனும் தோஷமிருக்குமோ என்றும் யோஜியாது இதை யுட்கொள்ளவாரம்பிக்கின்றனையே! உனது மூடத்தன்மையை நான் என்னென்று சொல்வது இவ்வன்னம் விஷங்கலந்த தாயிற்றே" என்றான். அது கேட்டதும் அவனுக் கவ்வன்னத்தை யுட்கொள்வதிலிருந்த ஆவல் நீங்கி தான்பிழைத்தால் போதுமென்று அங்கிருந்து வேறிடம் போய்விட்டான். இதிலிருந்து விஷயத்தில் எவ்வளவுபற்றிருந்தபோதிலும், அவ்விஷயம் தோஷத்தைத் தரக்கூடியது என்று தெரியுமானால் அதனின்றும் மனது திரும்பிவிடுமாதலால் இஃதே விஷயதோஷ தர்சனத்தாலுண்டாகும் வைராக்கியம் எனப்படும். இவ்விதம் தோஷதர்சனத்தால் வைராக்கிய முண்டானபோதிலும் விவேகஞானப்யாசம் செய்யாவிடில் லயம், விக்ஷேபம் இவற்றைச் சுவபாவமாயுடைய சித்தத்திற்கு வைராக்கியத்தினால் விக்ஷேப சுவபாவத்திற்குப் பங்கமேற்பட்டதும் லயம் என்றசுவபாவம் மேலோங்கி நித்திரையை யடைந்துவிடும். ஆனதுபற்றியே லயச்சுவபாவம் அழிவதற்கு

அப்பியாசமும், விக்ஷேப சுவபாவம் அழிவதற்கு வைராக்கிய மும் மிகவு மவசியமானது. ஆகவே அப்யாஸம் வைராக்யம் என்ற இவ்விரண்டிற்கும் பிரயோஜனம் வெவ்வேறாக விருப்பி னும் நிரோதம் என்ற கார்யமுண்டாவதற்கு இவ்விரண்டும் சேர் ந்தே சாதனமாயாகின்றது என்று மேற்பட்டது.

(அ - கை) அப்யாஸத்தின் ஸ்வரூபத்தை இதனாலுபதேசிக் கிறார்.—

सू०।। तत्र स्थितौ यत्नोऽभ्यासः ॥ १३ ॥

(ஸூ) தத்ர ஸ்திதௌ யத்னோப்யாஸ: (13)

(ப - ரை) **तत्र**-(தத்ர) முற்கூறிய அப்யாஸம், வைராக்யம் இவ்விரண்டிற்குள் **स्थितौ**-(ஸ்திதௌ) ரஜஸ்தமோவிருத்தி சூன்ய மான சித்தத்திற்கு ஏகாக்ரதை என்ற நிலை ஏற்படும் விஷயத்தி லுள்ள **यत्नः**-(யத்ன:) யமம் முதலிய சாதனங்களையடிக்கடி அனு ஷ்டானம் செய்வதிலுள்ள முயற்சியானது **अभ्यासः**-(அப்யாஸ:) அப்யாஸம் எனப்படும்.

(தா - ம்) சித்தத்தில் ரஜோகுணத்தாலுண்டாகும் விக்ஷேப விருத்தியும், தமோகுணத்தா லுண்டாகும் லய விருத்தியும், குறைந்து ஏகாக்ரதை என்ற விருத்தி யுண்டாவதற்குரிய யமாதி சாதனானுஷ்டான விஷயமான மேன்மேலுள்ள முயற்சியானது யாதுண்டோ அஃதே அப்யாஸம் எனப்படும்.

(அ - கை) அனாதிகாலம்தொட்டு அனுபவத்திலிருக்கின்ற விரோதிகளான விக்ஷேப லயரூபமான ராஜஸ தாமஸமான விருத்திகளால் யமாதி சாதனானுஷ்டான விஷயமாயுண்டாகும் முயற்சி தடைசெய்யப்படக் கூடுமாதல் பற்றி அப்யாஸத்தால் ஸ்திதி என்ற ஏகாக்ரதையுண்டாவது எப்படி எனின்? அதற்கு இந்தச் சூத்திரத்தால் பதிலளிக்கிறார்.—

सू०॥ स तु दीर्घकाल-नैरन्तर्य-सत्काराऽऽसेवितो दृढभूमिः ॥१४॥

(ஸூ) ஸது தீர்க்ககால-நைரந்தர்ய-ஸத்காரா ஸேவிதோ த்ருடபூமி: (14)

(ப - ரை) **सः,तु** - (ஸ: து) அந்த அப்யாஸமோ வெனில் **दीर्घकालनैरन्तर्यसत्कारासेवितः–दीर्घकाल** = (தீர்க்ககால) நீண்டகால முள்ளதாயும் **नैरन्तर्य** = (நைரந்தர்ய) இடைவிடாமலும் **सत्कार**= (ஸத்கார) சிரத்தை, பிரும்மசரியம், தவம் முதலியவற்றுடனும் **आसेवितः**=(ஆஸேவித:) பலவழியிலும் பழக்கப்பட்டதாயின் **दृढ-भूमिः**= (த்ருடபூமி:) திருடமான நிலையையுடையதாக (விஷய சுக வாஸனையால் அசைக்கமுடியாததாக) [**भवति**=(பவதி)ஆகின்றது.]

(தா - ம்) விரோதிகளான ரஜஸ் தமோமயமான விக்ஷேப லயங்களால் யமாதி சாதனானுஷ்டான விஷயமான முயற்சி தடை செய்யப்படலாமாயினும் குருசாஸ்திர விசுவாஸத்துடனும், எவ்வித இடையூறையும் பொருட்படுத்ாது மேன்மேலு முள்ள முற்சியுடனும் இடைவெளியில்லாதும் நீண்டகாலப் பழக்கத்தால் அதே அப்யாஸமானது மெள்ள மெள்ளப்பழக்கத்தில் வரவாரம் பித்து நிலைத்ததோர் ஸ்திதியை யடைந்து ஏகாக்கிரதையை முறையே யுண்டாக்கிவிடும் என்பதில் யாதும்தடையில்லை. காட்டில் தனதிஷ்டப்படி அங்குமிங்கும் அலைந்து திரிந்ததும், தன திஷ்டப்படி உறங்கினதுமான புலிக்கொளம் மாடொன்றைப்பிடித்து அதைத் தனதிஷ்டப்படிசாந்தமாக்கி வண்டியிற்கட்டி சவாரி செய்ய விருப்பமுள்ள மனிதன் தனதிஷ்டப்படி அதை ஓடும்படி விடாமலும், வண்டியில் கட்டும்பொழுது கீழேவிழுந்து எழுந்திருந்து சண்டித்தனம் செய்ய விடங்கொடாமலும் செய்யமெள்ள மெள்ள விடாமுயற்சியாலும், எப்பாடுபட்டும் அதைச்சாந்தமாக்கித்தான் தீருவதென்ற திருட விசுவாஸத்தாலும், அவ்வழியில் பாடுபட்டுலாபமடைந்த மற்றவனைப் பார்த்துக்கொண்டும் எவ்விதம் வெகுகாலம் பாடுபடுவனோ அவ்விதமே இந்தச்சித்தமென்ற இக்காளையை தனது வசமாக்க விரும்பியவனும், இது இந்தப்பவாரண்யத்தில் தனது வெகுகால பழக்கத்திற்கேற்ப வெளியில் அலைதல் என்ற விக்ஷேபத்தையும் அதனின்றும் திருப்பினால் லயம் என்ற நித்திரையையும் அடையும் சுவபாவம் வாய்ந்திருப்பதால் அச்சுவபாவத்தை விலக்கி எப்பாடுபட்டேனும் இதை ஏகாக்ரதை என்ற சாந்த நிலைக்கு கொண்டுவந்து இதனின்றும் நாம் கோரியதை யடைந்துதான் தீருவதென்ற

திருடகம்பிக்கையுடன் அம்முறையை யுபதேசிக்கும் குருனுத னிடத்தும், அவனுனுபதேசிக்கப்படும் சாஸ்திரங்களிடத்தும் பூர்ண விசுவாசத்துடன் இடையிடையே நேரும் இடையூறு களைச்சற்றேனும் பொருட்படுத்தாது மெள்ளமெள்ள நீண்ட காலம் பழக்கி வரவேண்டும். இவ்விதம் பழக்கிவருவோமாயின் அவ்வப்யாசமானது விஷயசுகவாசனையால் அடக்க முடியாத நிலை என்ற திருடபூமியை யுடையதாகவாகி அதனின்றும் நாம் கோரிய ஏகாக்ரதையைச் சுருவில் அடைந்துவிடக்கூடும் என்று கண்டுகொள்ளவேண்டும். இவ்விதமே பதஞ்சலி தமது பாஷ் யத்தில் "**दान्तो बलीवर्दयुवा वहनयोग्यः** அடக்கப்பட்ட இளங்காளை சுமையைச் சுமக்க யோக்கியதையை யடைந்துவிடுகின்றது" என்றதால் உபதேசித்திருக்கிறார். (எ - று.)

(அ - கை) வைராக்கியத்தின் ஸ்வருபத்தை இதனுனுப தேசிக்கிறார்.

सू०॥दृष्टाऽऽनुश्रविकविषयवितृष्णस्य वशीकारसंज्ञा वैराग्यम् ॥१५॥

(ஸூ) த்ருஷ்டானுச்ரவிகவிஷயவித்ருஷ்ணஸ்ய வசீகாரஸம்க்ஞா வைராக்யம் (15)

(ப - ரை) **दृष्टाऽऽनुश्रविकविषयवितृष्णस्य**=(த்ருஷ்டானுச்ரவிக விஷய வித்ருஷ்ணஸ்ய) **दृष्ट**=(**विषय**) = [த்ருஷ்ட (விஷய)] ஸ்திரீ கள், அன்னம், பானம், ஐசுவர்யம் முதலிய திருஷ்ட விஷயங் களிலும், **आनुश्रविक विषय**=(ஆனுச்ரவிகவிஷய) வேதத்திற் சொ ல்லிய சுவர்க்கம் பிரகிருதிலயம் முதலிய விஷயங்களிலும் **वितृ-ष्णस्य**=(வித்ருஷ்ணஸ்ய) ஆசையற்றதாயிருக்கின்ற சித்தத்திற்கு **वशीकारसंज्ञा**=(வசீகாரஸம்க்ஞா) "இவைகள் என்னைச் சேர்ந்த வைகளேயன்றி நான் இவைகளைச் சேர்ந்தவனல்லன்" என்ற வசிகாரரூபமான (**उपेक्षाबुद्धिः**=உபேக்ஷாபுத்தி:) விஷயங்களையுபே க்ஷை செய்யும் புத்தியானது அதாவது: விஷயவிலக்கைச் செய் யும் நிச்சயரூபமான புத்தியானது யாதுண்டோ அதுவே **वैराग्यम्**=(வைராக்யம்) வைராக்கியம் எனப்படும்.

(தா - ம்) वैराग्यम्-என்ற பதத்திற்கு विगतो रागो यस्मात्तत् विरागं, विरागस्य भावः वैराग्यम्। ஆசையானது எதனின்றும் விலகி இருக்கின்றதோ அதுவிராகம் எனப்படும் என்றும், எவ் விதத்திலும் ஆசையற்றிருத்தலே வைராக்யம் என்றும் பொது வாய்பொருள் ஏற்படுகின்றது. இவ்வைராக்கியமானது அபர வைராக்கியம் என்றும், பரவைராக்கியம் என்றும் இருவகைப் படும். அவற்றுள் இரண்டாவதான பர வைராக்கியத்தின் லக்ஷணம் அடுத்த ஸூத்திரத்தாலுபதேசிக்கப்படும். முதலாவ தான அபரவைராக்கியமானது (1) யதமானம் (2) வியதிரேகம், (3) ஏகேந்திரியம் (4) வசீகாரம் எனநான்கு வகைப்படும். அவற்றுள் உலகில் எது சாரமானது, எது அசாரமானது, என்பதை குருநாதன் மூலமும், சாஸ்திரங்களைக் கொண் டும் அறிந்துகொள்ளுகிறேன் எனச்சங்கற்பித்து அதற் குத்தக்க முயற்சியாதுண்டோ அதுவே முதலாவதான யதமான வைராக்கியம் எனப்படும். சித்தத்தில் முன்னரிருந்த தோஷங் களுள் விவேகாப்யாசத்தால் விலகினவை இன்னதென்றும்,விலக வேண்டியதாக மீதமுள்ளது இன்னது என்றும், வைத்தியன் போல பகுத்தறிவதானது இரண்டாவதான வியதிரேக வைராக் யம் எனப்படும். வெளியிலுள்ள விஷயங்களில் ராகம், துவே ஷம் இவைகள் அற்றுவிடினும் மனம் ஒன்றில்மட்டும் இயற் கையிலுண்டாகக்கூடிய மானத்தில் (பூஜை முதலியவற்றில்) ஆசையையும், அவமானத்தில் துவேஷத்தையும் விலக்குதல் மூன்றாவதான ஏகேந்திரிய வைராக்யம் எனப்படும். இம்மூன்று வைராக்யத்தின் அப்யாஸத்தால் விஷயச்சேர்க்கை யுண்டான போதிலும் தடங்கலின்றி தோஷக்ஞான முண்டாகக் கூடும் என்பதில் யாதும் தடையில்லை, ஆகவே நான்காவதான வசீகாரம் என்ற வைராக்கியத்திற்கே இந்தச் ஸூத்திரத்தால் லக்ஷணம் சொல்லப்படுகின்றது. கண்கூடாகக்கண்ட ஸ்திரீ, பானம், அன்னம், ஐசுவர்யம் முதலிய விஷயங்களிலும், அனுச்ரவம் என்ற சாஸ்திரத்தால்மட்டும் அறியக்கிடக்கின்ற சுவர்க்கம், பிர கிருதிலயம், அணிமாதி அஷ்டைசுவர்யம், முதலியவற்றிலும் ஆசையொழிந்த சித்தத்திற்கு அதாவது மேற்கூறிய விஷயங்

கள் கிட்டியபோதிலும் கலங்காததும், முற்கூறிய மூன்றுவித மான வைராக்கியத்துடனும் கூடியது மானசித்தத்திற்கு இந்த விஷயங்கள் எனக்கு வசப்பட்டனவேயின்றி நான் ஒருபொழுதும் இவ்விஷயங்களுக்கு வசப்பட்டவனல்லன் என சமீபத்திலுள்ள சிறந்த விஷயங்களில் உபேக்ஷாரூபமான விருத்தியானது யாதுண்டோ அதுவே நான்காவதான வசீகாரம் என்ற வைராக்கியம் எனப்படும். இந்த நான்காவதான வசீகார வைராக்கியத்தையே சூத்திரக்காரரும் அபர வைராக்கியமாகக் கூறியிருக்கிறார். ஏனெனில் முற்கூறிய மூன்று வைராக்கிய முள்ளவனுக்கும் விஷய சான்னித்திய முண்டாகுங்கால் முயற்சி தளர்ந்து விடக்கூடும் என்பதுபற்றியே என்க. (எ - று.)

(அ - கை.) பரவைராக்கியத்திற்கு லக்ஷணம் கூறப்படுகின்றது.

सू०॥ तत्परं पुरुषख्यातेर्गुणवैतृष्ण्यम् ॥ १६ ॥

(ஸூ) தத்பரம் புருஷக்யாதேர்குணவைத்ருஷ்ண்யம். (16)

(ப - ரை) **पुरुषख्यातेः**=(புருஷக்யாதே:) புருஷ ஸாக்ஷாத்கார முண்டானதற்குப் பிறகு **गुणवैतृष्ण्यम्** = (குணவைத்ருஷ்ண்யம்) **गुण**=(குண) ஸ்தூலசூக்ஷ்ம ரூபங்களான குணங்களினின்றும் **वैतृष्ण्यम्** = (வைத்ருஷ்ண்யம்) பற்றற்றிருத்தலானது [**यत्**=(யத்) யாதுண்டோ] **तत्**=(தத்) அதே **परम्**=(பரம்) பரவைராக்கியம் எனப்படும்.

(தா - ம்) முதலாவதான வசீகார வைராக்கியமானது இரண்டாவதான பரவைராக்கியத்திற்குக் காரணமாகின்றது. அதாவது: தோஷதர்சனமூலம் வசீகார வைராக்கிய முண்டானதும் குருஜனமூலமும், சாஸ்திரமூலமும், புருஷவிஷயமான க்ஞானமுண்டாகின்றது. இத்தகைய புருஷக் ஞானப்யாஸமே தர்மமேகத்தியானமாகும்., இதனின்றும் ரஜஸ்தமோ ரூபமான மலமானது முற்றிலும் விலகி சத்துவகுணம்மட்டும் மீதமாகி

சித்தமானது மிக்க தெளிவையடைந்து விடுகின்றது. சித்ததர்ம ரூபமான இத்தெளிவானது தர்மமேகத்தியானத்தின் கடைசி எல்லையாகவும், அந்தத் தர்மமேக சமாதிக்கே பயனுகவுமாகின் றது. இந்தப்பர வைராக்கியமானது க்ஞானப்பிரகாச மாயா கின்றதுபற்றி பரவைராக்கிய ரூபமான க்ஞானப்பிரகாச முண் டானதும் யோகியானவன் அடையவேண்டிய கைவல்யமடை யப்பட்டது, போக்கப்படவேண்டிய கிலேசங்கள் யாவும் போக் கப்பட்டன. தொடர்ந்து வந்திருக்கின்ற ஸம்ஸாரபந்தமானது அடியோடு அறுக்துவிடப்பட்டது என்று எண்ணுகிருன். ஆகவே ஞானத்தின் பராகாஷ்டை (மேலான நிலை) பரவைராக் கியம் என்று பெறப்பட்டது. கைவல்யமென்பது இத்தகைய நிலையைவிட வேருனதன்று. (எ - று)

(அ - கை) அப்யாஸம், வைராக்கியம் என்ற சாதனங்களை யுபதேசித்து இவ்விரண்டிற்கும் சாத்தியமான (பயனுன) சமா தியை யுபதேசிக்கத் தொடங்குகிருர். பலனுன சமாதியானது ஸம்ப்ரக்ஞாதம், அஸம்ப்ரக்ஞாதம் என இருவகைப்படும். அவற் றுள் முதலாவதான சம்ப்ரக்ஞாத சமாதியை அதன் விஷயத் துடன் இந்தச் சூத்திரத்தாலுபதேசிக்கிருர்.

सू०॥ वितर्क-बिचाराऽऽनन्दाऽस्मितारूपानुगमात्संप्रज्ञातः ॥ १७ ॥

(ஸூ) விதர்க்க-விசாரானந்தாஸ்மிதாரூபானு கமாத் ஸம்ப்ரக்ஞாத: (17)

(ப - ரை) वितर्कविचाराऽऽनन्दाऽऽस्मितारूपानुगमात्-(விதர்க்க விசாரானந்தாஸ்மிதாரூபானுகமாத்) वितर्क-(விதர்க்க) விதர்க்கம் विचार-(விசார)விசாரம் आनन्द-(ஆனந்த) ஆனந்தம் अस्मिता=(அஸ் மிதா) அஸ்மிதை இவற்றின் रूपानुगमात्-(ரூபானுகமாத்) சுவரூப த்துடன் சேர்ந்திருத்தலால் உண்டாவது संप्रज्ञातः-(ஸம்ப்ரக்ஞா த:) ஸம்ப்ரக்ஞாதசமாதி எனப்படும்.

(தா - ம்) संप्रज्ञातः=सम्यक्-संशय-विपर्ययाऽनध्यवसायरहितत्वेन प्र-प्रकर्षेण, विशेषरूपेण ज्ञायते भाव्यस्य स्वरूपं येन सः, संप्रज्ञा

तत्समाधिः भावनाविशेषः । **संप्रज्ञात** என்றவிடத்திலுள்ள **सम्** என்ற பதத்தால் ஸம்சயமற்றதும், பொய்யில்லாததும், உறுதியற்றதாயில்லாதது மானது என்று கூறப்பட்டதாயாகின்றது. **प्र** என்ற பதத்தால் விசேஷ வுருவத்துடன் கூடியதுஎன்று கூறப்பட்டதாயாகின்றது **ज्ञात** என்ற பதத்தால் விஷயத்தினுடைய ஸ்வரூபம் எதனால் அறியப்படுமோ அவ்விதபாவனா (சித்தவிருத்தி) விசேஷம்என்று சொல்லப்பட்டதாயேற்பட்டது. ஓர் பாவ்யத்தை (விஷயத்தை) வேறு விஷயத்தின் கலப்பில்லாது சித்தத்தில் வைத்தலே பாவனை எனப்படும். மேற்சொல்லிய பாவனையானது க்ராஹ்யம் என்றும், க்ரஹணம் என்றும், க்ரஹீத்ரு வென்றும் மூன்று வகைப்படும். அவற்றுள் கிராஹ்யமானது ஸ்தூலம், சூக்ஷ்மம் என்ற பேதத்தால் இருவகைப்படும். அவற்றுள் மஹா பூதங்கள், இந்திரியங்கள் இவை வடிவமான 16 விகாரரூபமான ஸ்தூல வஸ்துக்களை விஷயமாகக்கொண்டு முன்பின் தோற்றத்துடனும், சப்தார்த்தானுசந்தானத்துடனும், செய்யப்படும் பாவனையாதுண்டோ அதே 'ஸவிதர்க்க சமாதி' எனப்படும். முற்கூறிய ஸ்தூல விஷயத்தில் முன் பின் இவற்றின் தோற்றமில்லாமலும், சப்தார்த்தானுசந்தானமில்லாமலும் செய்யப்பட்ட பாவனை "நிர்வி தர்க்க ஸமாதி" எனப்படும். இந்த விதர்க்க நிர்விதர்க்க சமாதிகள் இரண்டுமே சூத்திரத்திலுள்ள விதர்க்க என்றபதத்தால் கிரஹிக்கப்பட்டதாயறிய வேண்டும். மேலும், தன்மாத்திரை அந்தக்கரணம் இவற்றின் வடிவமான சூக்ஷ்மமான வஸ்துவை விஷயமாக்கிக் கொண்டு தேசம், காலம் இவற்றின் தர்மத்தையும், சேர்த்துக்கொண்டு செய்யப்படும் பாவனை ஸவிசாரம் எனப்படும். முற்கூறிய ஆலம்பனத்தில் தேசகாலசம்பந்த மின்றி செய்யப்படும் பாவனை நிர்விசாரம் எனப்படும். இவ்வித ஸவிசாரம், நிர்விசாரம் இரண்டுமே சூத்திரத்திலுள்ள 'விசார' என்றபதத்தால் கிரஹிக்கப்பட்டதாயறியவேண்டும். விதர்க்கம், விசாரம் ஆகிய இரண்டு விஷயமான பாவனையே கிராஹ்யசமாதி (தியானம்) எனப்படும். மேலும் சித்தசத்துவமானது ரஜஸ்தமோலேசத்துடன் கூடியதாகமட்டும் ஆகி தியானம் செய்யும்படி எப்பொ

மூது செய்யப்படுகிறதோ, அப்பொழுது சிதிசக்தி என்ற புருஷ ரூப சைதன்ய மானது மேற்கூறிய தியானத்தில் அடங்கியே தோற்றக்கூடுமாதலால் அப்பொழுது சுகம், பிரகாசம் இவற்றின் வடிவமானதும், தியேயமானதுமான சித்தசத்துவத்தின் தோற்றம் அதிகமாயிருப்பதுபற்றி ஆனந்தம் என்ற சமாதியுண்டாகின்றது. இதுவே இரண்டாவதான கிரஹணசமாதி எனப்படும். பிறகு ரஜஸ்தமோ குணத்தின் லேசமேனும் சம்பந்தமற்று சுத்தஸத்துவ மாத்திரத்தைபவலம்பித்துச் செய்யப்படும் சமாதி ஸாஸ்மிதா என்ற சமாதியாகும். இது கிரஹீத்ரு சமாதியாகும். ஆனால் இந்த யோகசித்தாந்தத்தில் அஸ்மிதை என்று சொல்லப்படுவதும், அஹங்காரம் என்று சொல்லப்படுவதும் ஒன்று தான் எனக்கொள்வதற்கில்லை. ஏனெனில் எங்கு அந்தக்கரணமானது நான் என்ற அபிமானத்துடன் விஷயங்களையறிகின்றதோ அங்கு அது அஹங்காரம் எனப்படும். பிரதிலோமபரிணமத்தால்சித்தமானது பிரகிருதிலயத்தை யடையும் நோக்கமுள்ளதாகவிருக்கும் தருணத்தில் சித்தத்தின் ஸ்வரூபம் மட்டும் (சித்தம்என்பதுஒன்றிருக்கின்றது என்றதோற்றம் மட்டும்) ஏற்படுமோ அது அஸ்மிதை என்று சொல்லப்படும். ஆனது பற்றியே அஹங்காரம் அஸ்மிதை இவ்விரண்டும் உண்மையில் வேறு பட்டதென்றே சொல்லப்பட்டது. இதுவே மூன்றாவதான கிரஹீத்ருசமாதியாகும். ஆகவே இவ்வித ஸமாதியானது ஸம்ப்ரக்ஞாதசமாதியாகக் கூறப்பட்டது. (எ - று)

குறிப்பு—ராமானந்தர் சொல்லியவற்றையும் இங்கு எழுதுகிறோம். அதாவது: லோகத்திற் சிறந்த வில்லாளியானவன் முதலில் ஸ்தூலமானலக்ஷ்யத்தைப்பிளந்து பின்னர் சூக்ஷ்மமானலக்ஷ்யத்தைஎவ்விதம்பிளப்பானோ அவ்விதமேமுதற்படியிலுள்ளயோகியானவன் ஸ்தூலமான ஸாளக்கிராமம் முதலியவற்றைதியானத்தால் சாக்ஷாத்கரிக்கின்றான். ஸ்தூலசாக்ஷாத்காரமானது விதர்க்கம் எனப்படும். முற்கூறியஸ்தூலவஸ்துவுக்குக் காரணமான பஞ்சதந்மாத்திரை முதலியன சூக்ஷ்மம் எனப்படும். தியானத்தால் அந்தச் சூக்ஷ்மவஸ்துவினுடைய சாக்ஷாத்காரமே விசாரம் எனப்படும். மேலும் பிரகாசவடிவங்களாயிருப்பதுபற்றி சத்துவ

வடிவங்களாகவான இந்திரியங்களும் ஸ்தூலங்களேயாகும். தியானத்தால் அந்த இந்திரியங்களின் சாக்ஷாத்காரம் ஆனந்தம் எனப்படும். அவ்விந்திரியங்களுக்குக் காரணமான புத்தியானது கிரஹீதாவான புருஷனுடன் கூட ஒன்றாகும் பொழுது அஸ்மிதா என்றழைக்கப்படும். அந்த அஸ்மிதையின் சாக்ஷாத்காரமும் அஸ்மிதை என்றே சொல்லப்பட்டதாயறிய வேண்டும். ஆகவே ஸ்தூலமான கிராஹ்யமும், கிரஹணங்களான இந்திரியங்களும் அஸ்மிதையாகிற கிரஹீதாவுமான கிராஹ்யம், கிரஹணம், கிரஹீதா, இவ்விஷயங்களிலேற்படும் தியானபரிபாகமே ஸம்பிரக்ஞாதம் என்ற சமாதி என இந்தச் சூத்திரத்தாலுபதேசிக்கப்பட்டதாயேற்பட்டது. அந்த ஸம்பிரக்ஞாத சமாதியானது விதர்க்கம், விசாரம், ஆனந்தம் அஸ்மிதை என்ற இன்னான்கின்ஸ்வரூபத்துடன் கூடியிருப்பதால் ஸவிதர்க்கம் (விதர்க்கத்துடன் கூடியது) என்றும், ஸவிசாரம் (விசாரத்துடன் கூடியது) என்றும், ஸாநந்தம் (ஆனந்தத்துடன் கூடியது) என்றும், ஸாஸ்மிதா (அஸ்மிதையுடன் கூடியது) என்றும், நான்கு விதமாயாகின்றது. ஆகவே ஸ்தூலயோகமானது ஸ்தூலம், சூக்ஷ்மம், இந்திரியம், அஸ்மிதை இன்னான்கையும் விஷயமாயுடையதென்றும், சூக்ஷ்மம், இந்திரியம், அஸ்மிதை இம்மூன்றைமட்டும் விஷயமாயுடையதென்றும், இந்திரியம் அஸ்மிதை இவ்விரண்டை மட்டும் விஷயமாயுடையதென்றும, அஸ்மிதை என்ற ஒன்றை மட்டும் விஷயமாயுடையதென்றும் நான்குவித முள்ளதாகவேற்பட்டது. இன்னான்கிலும், சூக்ஷ்மம் முதலிய விஷயங்களையுடைய யோகத்தில் ஸ்தூலம் தோற்றத்தையடைவதில்லை என்றும், இந்திரியம், அஸ்மிதை இவற்றை விஷயமாகவுடைய யோகத்தில் ஸ்தூலம் ஸூக்ஷ்மம் இரண்டும் தோற்றத்தையடைவதில்லை என்றும், அஸ்மிதையை விஷயமாகக்கொண்ட யோகத்தில் ஸ்தூலம், சூக்ஷ்மம், இந்திரியம், இம்மூன்றுமே தோற்றத்தையடைவதில்லை என்றும் கொள்ளவேண்டும்.

(அ - கை) அஸம்பிரக்ஞாத ஸமாதியை அதன் உபாயத்துடன் உபதேசிக்கிறார்—

सू०॥ विरामप्रत्ययाभ्यासपूर्वः संस्कारशेषोऽन्यः ॥ १८ ॥

(ஸூ) விராமப்ரத்யயாப்யாஸபூர்வ:ஸம்ஸ்கார ஸேஷோன்ய : (18)

(ப-ரை) **विरामप्रत्ययाभ्यासपूर्वः** = விராமப்ரத்யயாப்யாஸபூர்வ: **विराम** = (விராம) விருத்தியின் அபாவத்திற்கு (இல்லாமைக்கு) **प्रत्यय**=(ப்ரத்யய) காரணமான பரவைராக்கியத்தினுடைய **अभ्यास** (அப்யாஸ) அப்யாஸத்தை **पूर्वः** = (பூர்வ:) உபாயமாயுடையதும் **संस्कारशेषः** = (ஸம்ஸ்காரசேஷ :) ஸம்ஸ்காரத்தைமட்டும் மீதமாயுடையதுமான யோகமானது **अन्यः** = (அன்ய:) அஸம்பிரக்ஞாத சமாதியாகும்.

(தா - ம்) தத்துவக் ஞானரூபமான விருத்தியும் இல்லா திருத்தல்வேண்டும் என்ற தத்துவக் ஞானவிருத்தியிலும் பற்றுதலற்ற பரவைராக்கிய ரூபமான அறிவுயாதுண்டோ அதைய திகப் பழக்கத்தில் கொண்டுவருதலினின்று முண்டாகும் ஸம்ஸ்கார மாத்திர சேஷமான விருத்திநிரோத மானது அஸம்பிரக்ஞாத சமாதியாகும். இங்கு ஸம்ஸ்கார மாத்திர சேஷவிருத்தி நிரோதம் எனக்கூறியதிலிருந்து மோக்ஷகாலத்திலுள்ள நிரோதத்தைக்காட்டிலும், அஸம்பிரக்ஞாத சமாதிகாலத்திய விருத்தி நிரோதமானது வேறுபட்டதெனத் தெளிவாயேற்படுகின்றது. அஸம்பிரக்ஞாத காலத்தில்ஸம்ஸ்காரத்தை மட்டுமுடைய சித்தம் மிச்சமிருக்கின்றதே யொழியவிருத்தியானது அக்காலத்திலிருப்பதில்லை. மோக்ஷத்திலோவெனில் சித்தமானது முற்றிலும் விலகிவிடுவதால் சித்தத்தை யாச்ரயித்த சம்ஸ்காரமும் விலகிவிடுகிறது. ஆகவே அஸம்பிரக்ஞாத சமாதிநிலைக்கும் மோக்ஷநிலைக்கும் உள்ளவேற்றுமை இதனு லுபதேசிக்கப்பட்ட தாயாகின்றது. பரவைராக்கியத்தின் பழக்கத்தால் அதற்கு முந்தியுள்ள ஸம்ஸ்கரமானது நாசமடைந்த போதிலும், இந்தப்பரவைராக்கியத்தினுடைய அப்யாஸத்தாலுண்டாகும் ஸம்ஸ்காரம் மட்டும் மீதமிருக்கக்கூடும். ஆயினும் பரவைராக்கியாப்யாஸ மஹிமையால், இத்தகைய ஸம்ஸ்காரத்தினின்றும் புதிதாய் ஓர்விருத்தியானது

உண்டாவதில்லை. இன்னிலையே அஸம்பிரக்ஞாத நிலையாகின்றது. இன்னிலையில் யோகபலத்தால் அடக்கப்பட்டதாயும் முற்கூறிய ஸம்ஸ்காரத்துடன் மட்டும்கூடியதுமான சித்தம்மட்டும் விருத்தி முதலிய தனது கார்யங்கள் எதுவுமின்றி நிலைபெறுகின்றது. ஸுஷுப்தி காலத்திலோவெனில், சித்தத்திற்கு பிரகிருதியில் லயம் ஏற்பட்டுவிடுகின்றது. ஆனதுபற்றியே அஸம் பிரக்ஞாத சமாதியை யனுபவிக்கும் யோகியினுடைய சரீரம் கீழே படுத்துவிடாததுடன் என்னிலையில் யோகாப்யாஸம் செய்ய வாரம்பித்ததோ அன்னிலையிலேயே இருக்கும். சுஷுப்திகாலத் திலோ வெனில் சித்தமானது பிரகிருதியில் லயத்தையடைவதி விருந்து சுஷுப்தனுடைய சரீரம் கீழேவிழுந்து விடுகிறது. இத்தகைய அனுபவத்தினின்றும் ஸுஷுப்திக்கும் அஸம்பி ரக்ஞாத சமாதிக்கு முள்ளவேற்றுமை நன்குபுலப்படும். இது வே இதுவரைகூறிய யோகிகளின் சித்தாந்தப்படி யேற்படும் பேதமாகும். வேதாந்த சித்தாந்தத்தின்படியோ வெனில், உத்பத் திக்கிரமத்திற்கு மாறாக எல்லாக்கார்யத்திற்கும் காரணத்தில்லயம் சொல்லபட்டிருக்கிறது. இம்முறைப்படி ஔபனிஷத யோகி யானவன்

जनिविपरीतक्रमतो बुद्ध्या प्रविलाप्य पञ्च भूतानि ।
परिशिष्टमात्मतत्वं पश्यन्नास्ते यतिः कोऽपि ॥

ஆகாசாதி பஞ்சபூதங்களை அவ்வவற்றின் கார்யத்துடன்கூட உத்பத்திக் கிரமத்திற்கு மாறான முறையில் ஒவ்வொன்றையும் தனது காரணத்தில் லயமாக்கி ஸர்வபிரபஞ்ச பரிணாம யுபாதான காரணமான அவித்தையை சர்வாதிஷ்டானமான ஆத்மவஸ்து வினிடத்தில் லயமாக்கிவிடுகிறான். இவ்விதநிலையே வைதிகமு றையில் நிர்விகல்பசமாதி எனப்படும். இன்னிலையில் ஆத்மவஸ்து வுக்குப் புறம்பாய் வேறெந்த வஸ்துவுமே யில்லாததாகி விடுகின் றது. இத்தகைய நிர்விகல்ப யோகியினுடைய சரீரமும், கீழே விழாமல் என்னிலையில் யோகாப்யாஸம் செய்யவாரம்பித்ததோ அன்னிலையிலேயே தானிருக்கும் என்றுகண்டுகொள்ள வேண் டும். ஆகவேயோக சித்தாந்தப்படி அஸம்பிரக்ஞாத சமாதிகா

லத்தில் ஸம்ஸ்காரமோ, அதன்மூலம் விருத்தியோ ஒன்றுமே யில்லாது சித்தம்மட்டும் புருஷசம்பந்தம் விட்டுவிலகி தனித்துத் தனது காரணமான பிரகிருதியுடன் சேர்ந்திருக்கும். பிரகிருதி யானது கிருதார்த்தனுய புருஷன் விஷயத்தில் தனக்கு எவ்வித வேலையுமற்றதாய்க்கொண்டு கிருதார்த்தனல்லாத வேறுபுருஷன் விஷயத்தில் பிரவிருத்தியையடைகின்றது எனக்கூறப்பட்டிருக்கி றது. ஆகவேவைதிக யோகத்திற்கும், பாதஞ்ஜல யோகத்திற் கும் நிர்விகல்ப சமாதி சுவரூபத்தில் மேற்கூறியபடி வேற்று மையிருப்பதையும் இதனுல் பகுத்தறியவும். (எ-று)

(அ-கை) மேற்கூறிய அஸம்பிரக்ஞாத சமாதியானது பவப்ரத்யயம் என்றும், உபாயப்ரத்யயம் என்றும் இருவகைப்ப டும். அவற்றுள் முதலாவதான பவப்ரத்யய சமாதியானது முமுக்ஷுக்களால் விலக்கத்தக்கது என்பதை உபதேசிக்கிருர்.

ஸூ०॥ भवप्रत्ययो विदेहप्रकृतिलयानाम् ॥ १९ ॥

(ஸூ) பவப்ரத்யயோ விதேஹப்ரக்ருதிலயா நாம் (19)

(ப-ரை) भवप्रत्ययः=(பவப்ரத்யய:) भव=(பவ) அவித்தை யை प्रत्यय=(ப்ரத்யய) காரணமாகவுடைய [समाधिः=(ஸமாதி:) சாமாதியானது] विदेह=(விதேஹ) ஷாட்கௌசிக தேஹமற்றவர் களுக்கும் प्रकृतिलयानाम्=(ப்ரகிருதிலயாநாம்) பிரகிருதியில் லய மடைந்தவர்களுக்கும் [भवति=(பவதி) உண்டாகின்றது.]

(தா-ம்) விதேஹர்களென்றும், பிரகிருதியில் லயமடைந்த வர்களென்றும் ஜீவர்கள் இருவகைப்படுவர். அவர்களுள் ஸ்தூல தேஹா பேக்ஷையில்லாமலே லிங்கதேஹத்தால் மட்டும் எல்லா வியவஹாரங்களையும் செய்யக்கூடிய திறமையுள்ளவர்கள் "விதே ஹர்" எனப்படுவர். அதாவது: தோல், ரக்தம், மாம்ஸம், மே தஸ், எலும்பு, மஜ்ஜா என்ற இவ்வாறும் ஸ்தூலசரீரத்திலுள்ள கோசங்களாகும். இவ்வாறுகளுடன் கூடியஸ்தூல தேஹமே "ஷாட்கௌசிகதேஹம்" எனப்படும். 11 இந்திரியங்கள், பஞ்ச

பூததந்மாத்திரைகள், அஹங்காரம், மஹத்தத்துவம், இவைக ளாலமைக்கப் பெற்ற சரீரங்களே மேற்கூறிய ஷட்கோச சூன்ய மான சூக்ஷ்மசரீரங்களாகும். இச்சூக்ஷ்ம சரீரத்தையுடையவர் கள் இந்திராதி அதிகாரப்பதவியை யடைந்த தேவர்களாவர். ஆகவேதோல் முதலிய ஆறு கோசமமைந்தஸ்தூலசரீரமற்றவர் களும், சூக்ஷ்மசரீரத்தையடைந்தவர்களும், அதிகாரப்பதவியிலி ருக்கின்றவர்களுமான இந்திராதிதேவர்கள் இந்தச் சூத்திரத்தி லுள்ள "விதேஹ" என்றபதத்தால் சொல்லப்படுவர். ஆகவே பஞ்சபூதங்களின் தந்மாத்திரைகள், 11 இந்திரியங்கள், அஹம் தத்துவம், மஹத்தத்துவம், இவைகளுள்யாதானுமொன்றிலே யே ஆத்மபுத்தியையடைந்து அதையேஉபாஸித்து வருபவர் கள் அவ்விஷய ஸம்ஸ்காரத்தையடைந்த மனத்துடன் கூடினவர் களாய்க்கொண்டு முன்னுள்ள சரீரம் நாசத்தை யடைந்த பிறகு, மேற்கூறியபடி பஞ்சபூத*தந் மாத்திரை முதலியவற்றிலேயே லயத்தை யடைந்தவர்களாயும், ஸ்தூல தேஹமற்றவர்களாயும் கைவல்யத்திற் கொப்பான நிலையை யனுபவிக்கின்றவர்களாயு மாகின்றனர். தந்மாத்திரை முதலியவற்றில் லயமடைந்திருப்ப தற்குரிய புண்யகர்மம் முடிந்தவுடன் மறுபடியும் ஸம்ஸாரபந்தத் தை யடைகின்றனர்.

குறிப்பு:—உலகில் மழையடியோடற்றுவிடும் காலத்தில் மண்ணுடன் மண்ணாகச் சேர்ந்தழிந்த தவளைகள் மழை பொழிய வாரம்பித்த பொழுது மறுபடியும் தவளை சரீரத்தை யடைந்து விடுகின்றனவென்பதை நாம் அனுபவத்திற் கண்டி ருக்கிறோம். † இவ்விதமே இந்திரியம் முதலியவற்றை ஆத்மா வாக உபாஸிப்பவர்களும் தைனந்தின பிரளயத்திலோ, சில சம யம் சிருஷ்டி காலத்திலோ தனது ஸம்ஸ்காரத்துடன் மட்டும் கூடிய சித்தத்துடன் கைவல்யம் போன்ற நிலையை யடைந்தவர்

---

* ஸ்தூலமான ஆகாசாதி பஞ்சபூதங்களுண்டாவதற்கு முன்னுள்ள பஞ்சபூதங்களின் சூக்ஷ்மமான நிலை தந் மாத்திரைகள் எனப்படும்.

† இந்தத் திருஷ்டாந்தம் யோக சாஸ்திரங்கள் யவற்றிலும் காணப் படுகின்றது.

களாய் கொஞ்ச காலமிருந்து, அக்காலம் முடிந்தவுடன் அன்னிலையினின்றும் எழுந்து தேவ தி பதவியைத் தருகின்ற ஸம்ஸ்காரததால் தேவத்தன்மை முதலியவற்றை யடைந்து, அதன் பலனான ஐசுவர்யம் முதலியவற்றை யனுபவித்துப் பின்னர் அதனின்றும் முக்தியை யடைகின்றனர். இவ்விதமே வாயுபுராண ச தியுமே

दश मन्वन्तराणीह तिष्ठन्तीन्द्रियचिन्तकाः ।

भौतिकाश्च शतं पूर्णं सहस्रं त्वाभिमानिकाः ॥

बौद्धा दशसहस्राणि तिष्ठन्ति विगतज्वराः ॥

"இந்திரியங்களை யாத்மாவாக வுபாஸிப்பவர்கள் 10 மன்வந்தர காலம் அதிலேயே லயத்தை யடைந்திருக்கின்றனர் பஞ்சபூத தந்மாத்திரைகளையே ஆத்மாவாக வுபாஸிப்பவர்கள் 100 மன்வந்தர காலம் பஞ்சபூத தந்மாத்திரைகளிலும், அஹங்காரத்தை யாத்மாவாக வுபாஸிப்பவர்கள் 1000 மன் வந்தரகாலம் அஹங்காரத்திலும், புத்தி தத்துவத்தை யாத்மாவாக வுபாஸிப்பவர்கள் 10000 மன் வந்தர காலம் புத்தி தத்துவத்திலும் லயத்தை யடைந்தவர்களா யிருக்கின்றனர்" என்றதால் கூறப்பட்டிருக்கிறது. ஆகவே மேற்கூறிய இந்திராதி தேவர்கட்கு ஆதிகாரிக தேஹம்போய் தத்தமது அதிகாரம் முடியும் சமயத்தில் புதிதாய்வேறொரு ஆதிகாரிக சரீரமானதுண்டாவதற்குமட்டும் இந்திரியாதிகளின் உபாஸனம் காரணமாவதால் இவ்விந்திரியாதிகளின் உபாஸனம் 'பவப்ரத்யயம்' (அவித்யா மூலமுண்டாகும் பிறவிக்குக்காரணமானது) என்றுகூறப்பட்டது. இவ்விதமே பிரகிருதியின் உபாஸனத்தாலோ, பிரகிருதி விசிஷ்ட ஈசுவரோ பாஸனத்தாலோ இச்சரீரம் போனதும் பிருமாண்டத்தைப் பிளந்து கொண்டு மஹத்தத்துவம் வரையுள்ள ஆவரணங்களைக் கடந்து பிரகிருதியாகிற ஆவரணத்தை யடைந்தவர்களாயும், பிரகிருதியினுபாஸனத்தா லுண்டான ஸம்ஸ்காரத்துடன் கூடிய சித்தமுள்ளவர்களாயுமாகி பிரகிருதிலயததை யடைந்து (அதாவது: பிரகிருதியு மிவர்களும் ஒன்றாகவே யாகி) விடுகின்றனர். அவ்

விதம் பிரகிருதிலயத்தை அடைந்த இவர்கள் வேறு ஸாதனங்களை யனுஷ்டித்தல் என்ற சிரமமின்றி அதிலுண்டாகும் ஜன்மத்தினின்றே மேற்கூறியபடி யாகின்றனர். இவர்களே "பிரகிருதி லீனர்கள்" எனப்படுவர். இவ்விதமே வாயுபுராணத்திலும்

पूर्णं शतसहस्रं तु तिष्ठन्त्यव्यक्तचिन्तकाः ।

என்றதா லுபதேசிக்கப்பட்டிருக்கின்றது. ஆகவே மேற்கூறிய பிரகிருதிலயத்தை யடைந்தவர்கள் அவர்களுக்குரிய நூறாயிரம் வருஷம் முடிந்ததும் தேவாதி ஜன்மத்தை யடைந்து அதனின்றும் முக்தியை யடைகின்றனர். அன்னிலையிலுள்ள அவர்கள் விவேகக்யாதியற்றவர்களா யிருப்பதுபற்றி அத்தகைய ஆதிகாரிக பாவத்திற்குரிய சித்தத்தை யடைந்தவர்களாய் கைவல்யத்திற்போன்ற சுகானுபவமுள்ளவர்களாகின்றனர். ஆனதுபற்றியே இந்திரியாதிகளை யுபாஸிப்பவர்களுக்கு அந்தந்த இந்திரியங்களுக்கு அபிமானிகளான சூரியாதிகளின் சுவரூப பிராப்தி யானது பயனாகச் சொல்லப்பட்டிருக்கிறது. விதேஹலயத்தை யடைந்தவர்களுக்கு ஐசுவர்யம் அற்பமாயும், மழுங்கின விஷயமுமே இருக்கும். பிரகிருதிலயத்தை யடைந்தவர்களோவெனில் முற்கூறிய விதேஹலயர்களுக்கும் ஈசர்களாகவும், தமது சங்கற்ப மாத்திரத்தால் மனது, அதற்குரிய விஷயம், அவற்றின் அனுபவம் இவற்றை சிருஷ்டித்துக் கொள்ளும் திறமை வாய்ந்தவர்களாகவுமாகின்றனர். ஆகவே விதேஹலயத்தை யடைந்தவர்களுக்கும் பிரகிருதிலயத்தை யடைந்தவர்களுக்கும் முற்கூறியதே வேற்றுமை என்றறியவேண்டும். இந்த ஸமாதியானது பிறவிக்குக் காரணமாயாவதுபற்றி முமுக்ஷுக்களால் விலக்கத் தக்கதாகவே யாகும். (எ-று.)

(அ-கை) முக்கியமான உபாய பிரத்யத்தையுபதேசிக்கிறார்

सू०॥ श्रद्धा-वीर्य-स्मृति-समाधि-प्रज्ञा-पूर्वक इतरेषाम् ॥ २० ॥

(ஸூ) ச்ரத்தா, வீர்ய - ஸ்ம்ருதி - ஸமாதி பிரக்ஞாபூர்வக இதரேஷாம் (20)

(ப - ரை) **इतरेषाम्**=(இதரேஷாம்) முற்கூறிய விதேஹலயர், பிரகிருதிலயர் இவர்களைவிட வேறான யோகிகளுக்கு **श्रद्धावीर्यस्मृतिसमाधिप्रज्ञापूर्वकः**--श्रद्धा=(ச்ரத்தா) ஆஸ்திக்ய புத்தியால விவேகக்கியாதியோகத்திலுண்டாகும் பேராவல், **वीर्य**=(வீர்ய) விவேகக்யாதியிலாவலுள்ளவனுக்கு அவ்விஷயமாயுண்டாகும் தாரணை **स्मृति**=(ஸ்மிருதி) தாரணையாலுண்டாகும் தியானம் **समाधि**-(ஸமாதி) தியானத்தாலுண்டாகும் தியேய ஸாக்ஷாத்காரத்தை யுண்டாக்கும் ஸாமாதி **प्रज्ञा**=(ப்ரக்ஞா) சமாதியாலுண்டாகும் ஸம்பிரக்ஞாத ஸமாதி ஆகிய இவற்றை **पूर्वकः**=(பூர்வக:) காரணமாயுடைய [**असंप्रज्ञातसमाध्युपायः** = (அஸம் பிரக்ஞாத ஸமாத்யுபாய:; அஸம்பிரக்ஞாதசமாதி யுண்டாவதற்குரிய உபாயமானது **भवति**=உண்டாகின்றது]

(தா-ம்) "சாதனமின்றி யொன்றைச் சாதிப பாருலகிலில்லை என்றபடி அஸம்பிரக்ஞாதசமாதியுண்டாவதற்கு அடியிற் கூறப்படுவனவே உபாயங்களாகும். இவ்வுபாயங்களைக் கொண்டே உபேயமான அஸம்பிரக்ஞாத சமாதி உண்டாகின்றமையின் பின்னர் கூறப்படுவது உபாயபிரத்யய சமாதியாகின்றது. அவ்வுபாயங்கள் சிரத்தை முதலியவைகளேயாம். அவற்றுள் ஆஸ்திக்ய புத்தி வற்பட்டு அதனின்றும் ஆசார்யனையண்டி அவனுபதேசிக்கப்படும் ஆகமம், அதற்கனுகுணயுக்தி இவற்றை முன்னிட்டு அறியப்பட்ட தத்துவத்தை விஷயமாகக்கொண்டு சித்தத்திலுண்டாகும் ஓர்விதத்தெளிவே, அதாவது: அந்தத்தத்துவானுபவத்திலாசையே சிரத்தை எனப்படும். இந்தச் சிரத்தையே நற்குணமமைந்த தாயானவள் தனது குழந்தையைப் போல யோகாப்பியாஸவழியில் செல்லும் மனிதனைச் சகலவித இடையூறுகளையும் போககி காக்கின்றது. இத்தகைய சிரத்தையுண்டானதும் தத்துவாப்யாசத்திலீடுபட்டிருக்கும் யோகிக்கு அந்தத்தத்துவ விஷயமான தாரணையில் பிரவிருத்தியுண்டாகின்றது இஃதேவீரியம் எனப்படும். இத்தகைய தாரணாரூபமான வீரியமுண்டானதும் அதனின்றும் தத்துவ தியான சித்தியுண்டாகின்றது. இதுவே ஸ்மிருதி எனப்படும். தியான ரூபமான இந்த ஸ்மிருதியினின்றும் சமாதியுண்டாகின்றது. இதனின்றும்

ஸம்பிரக்ஞாதஸமாதியுண்டாகின்றது. ஆகவேமேற்கூறிய உபாய பரம்பரையை முன்னிட்டே யோகிகளுக்கு அஸம்பிரக்ஞாத சமாதியானது சித்திக்கின்றது. ஆதலால் சிரத்தை முதல் பிரக்ஞைவரையுள்ளவைகளாலுண்டாகும் அஸம்பிரக்ஞாத சமாதியானது உபாயபிரத்யயமாக ஏற்பட்டது. (எ - று)

(அ - கை) இது வரை கூறிய உபாயானுஷ்டானம் செய்யும் யோகிகள் மிருதூபாயர் என்றும், மத்யோபாயர் என்றும், அதிமாத்ரோபாயர் என்றும் மூன்றுவகைப்படுவர். முற்கூறிய மூவருள் முதலாவதான மிருதூபாயர் மிருதுஸம் வேகர், மத்ய ஸம் வேகர், தீவ்ரஸம்வேகர் என மூவகைப்படுவர். இப்பெயர்களி லுள்ள ஸம்வேகஎன்றபதம் உபாயானுஷ்டானத்திலுள்ள வேகத்தைக்குறிக்கும். இரண்டாவதான மத்யோபாயர் மிருதுமத்யஸம் வேகர், மத்யமத்யஸம் வேகர், மத்யதீவ்ரஸம் வேகர்என மூன்று வகைப்படுவர். மூன்றாவதான அதிமாத்ரோபாயர், மிருது அதி மாத்திரஸம் வேகர், மத்யாதி மாத்ரஸம் வேகர், தீவ்ராதிமாத்ர ஸம்வேகர் என மூன்றுவகைப்படுவர். ஆகவே மேற்கூறிய மிருது, மத்ய, அதிமாத்திர உபாயர்களுள தீவ்ரஸம் வேக முள்ளவர்களுக்கு சமாதிலாபமானது வெகுசீக்கிரமுண்டாகும் என்பதை இந்தச் சூத்திரத்தாலுபதேசிக்கிறார்.

सू०॥ तीव्रसंवेगानामासन्नः ॥ २१ ॥

(ஸூ) தீவ்ரஸம் வேகாநுமாஸன்ன: (21)

(ப - ரை) **तीव्रसंवेगानाम्** = (தீவ்ரஸம் வேகாநும்) உபாயத்தை யனுஷ்டிப்பதில் சீக்கிரமான வேகமுள்ளவர்களுக்கு [**समाधिलाभः**=(ஸமாதிலாபஃ) ஸமாதி கிடைப்பதானது] **आसन्नः**=(ஆஸன்ன:) தாமதமற்றதாக [**भवति**=(பவதி) உண்டாகின்றது.] உபாயத்தை விரைவில் அனுஷ்டிப்பவர்களுக்கு சமாதிலாபமும், அதன் பல லாபமுமுண்டாவதில் கால தாமத மேற்படாது என்று கருத்து.

(அ - கை) சமாதி லாபமோ, அதன் பல லாபமோ யுண்டாவதிலுள்ள வேகதாரதம்யத்தை யுபதேசிக்கிறார்.

सू०॥ मृदुमध्याधिमात्रत्वात्ततोऽपि विशेषः ॥ २२ ॥

(ஸூ.) ம்ருதுமத்யாதிமாத்ரத்வாத் ததோபி விசேஷ: (22)

(ப - ரை) [तीव्रसंवेगेऽपि=(தீவ்ரஸம் வேகேபி; உபாயானுஷ்டானத்திலுள்ள தீவ்ரவேகத்திலும்] मृदुमध्याधिमात्रत्वात्=(ம்ருது மத்யாதி மாத்ரத்வாத்) மிருது தீவ்ரமென்றும், மத்ய தீவ்ரமென்றும், அதிமாத்ர தீவ்ரம் என்றும் பிரிவிருப்பதால் ततोऽपि= (ததோபி) சீக்கிரமாக சமாதியும், அதன் பலனுமுண்டாவதாக முற்கூறியதைக் காட்டிலும் विशेषः = (விசேஷ) வேற்றுமையானது [भवेत्=(பவேத்) உண்டாகும்.]

(தா - ம்) மிருது தீவ்ரமென்றும் மத்யதீவ்ரமென்றும், அதிமாத்திர தீவ்ரமென்றும், சாதனுனுஷ்டானத்திலுள்ள வேகம் மூன்று வகைப்படுமாதலால் மிருது தீவ்ர சாதனுனுஷ்டானஞ் செய்பவர்களுக்கு பல சித்தியுண்டாவதில் தாமதமேற்படும், என்றும், மதயதீவ்ரசாதனுனுஷ்டானஞ் செய்பவர்களுக்கு முற்கூறியவற்குப் பலனுண்டாவதைவிட வேகமாகவேயுண்டாகும் என்றும், அதிமாத்ர தீவ்ரசாதனுனுஷ்டானஞ் செய்பவர்களுக்கு இவ்விருவருக்கும் பலனுண்டாகும் காலத்தை விட வெகு சமீப காலத்திலேயே பல சித்தியுண்டாகும் என்று மறியவேண்டும். (எ - று.)

(அ - கை) ஸம்பிரக்ஞாத சமாதி விரைவிலுண்டாவதற்கு வேண்டி இதுகாறும் கூறிய வழியைவிடச் சுலபமான மற்றொரு வழியையுபதேசிக்கிருர்.

सू०॥ ईश्वरप्रणिधानाद्वा ॥ २३ ॥

(ஸூ) ஈச்வரப்ரணிதானுத்வா. (23)

(ப - ரை) ईश्वरप्रणिधानात्–ईश्वर = (ஈச்வர) ஈசுவரனுடைய प्रणिधानाद्वा=(ப்ரணிதானுத்வா) பக்தி விசேஷத்தினின்றுமாவது (आसन्नतमः समाधिलाभः=மிக்கவிரைவில் சமாதி லாபமுண்டாகின்றது.

(தா - ம்) இதுகாறும் கூறியுள்ள உபாயங்களைவிட இந்த 23-வது சூத்திரம் தொடங்கி 28 வது சூத்திரம் முடியவுள்ள 6 சூத்திரங்களா லுபதேசிக்கப்படும் உபாயம் மிகவும் சிறந்ததாகும். அவற்றுள் இந்த 23-வது சூத்திரத்தால் ஆண்டவனிடத்துள்ள அன்பு மிகுதியால் விரைவில் சமாதி சித்தியுண்டாகும் என உபதேசிக்கப்படுகின்றது. ஆகவே எந்த ஜீவன் ஆண்டவனிடத்து மனமொழி மெய்களால் அன்புசெலுத்துகின்றானோ அவன் விஷயத்தில் அன்பு வசப்பட்ட ஆண்டவன் "இவ்வன் பன் விரைவில் ஸமாதியைப் பெறக்கடவது" எனச் சங்கற்பிக்கிறான். ஆண்டவனருள் பெற்றவன் ஒருபொழுதும் பந்தப்படான் என்பது சாஸ்திரங்களில் வெளிப்படை. ஆகவே ஆண்டவனுக்கு இவ்விதம் அருள் சுரக்குமாறு செய்யும் அன்பே மிக்க மேலான ஸாதனமென இதனால் பெறப்பட்டது. மேலும், முன்னர் ஜீவ விஷயமான ஸம்பிரக்ஞாத ஸமாதியை யுபதேசித்து அத்தகைய ஸம்பிரக்ஞாத ஸமாதியினின்றும் அங்கு கூறிய உபாயங்களால் அஸம்பிரக்ஞாத ஸமாதி விரைவி லுண்டாவதற்குரிய மார்க்க முபதேசிக்கப்பட்டது. இங்கு ஆண்டவனிடத்துச் செய்யும் ஸம்பிரக்ஞாத ஸமாதியினின்றும் இடையிற் கூறப்படுமுபாயா னுஷ்டானக் கிலேசமின்றியே அஸம்பிரக்ஞாத ஸமாதி லாபம் விரைவிலுண்டாகும் என்று உபதேசித்ததாக வேற்படுகின்றது. ஆனதுபற்றியே ஆண்டவனிடத்து அன்பு செலுத்தல் என்ற இவ்வழியானது இடையிலுள்ள உபாயானுஷ்டானக் கிலேச மில்லாமைபற்றி சுலபசாத்தியமா யிருப்பதாலும், மிக்க விரைவில் அஸம்பிரக்ஞாத ஸமாதி, அதன் பயனான பந்தநிவிருத்தி இவற்றைத் தருவதாலும் இவ்வழியே எல்லாவற்றினும் சிறந்ததாகும் என்று பெறப்பட்டது. சூத்திரத்திலுள்ள **வா** என்ற பதத்தால் முற்கூறிய உபாயத்தாலோ, அல்லது இங்கு கூறிய உபாயத்தாலோ விரைவில் ஸமாதி சித்தியைப் பெறலாம் என்று ஏற்படுமாயினும் முற்கூறிய ஸம்பிரக்ஞாத ஸமாதி சித்திக்குப் பிறகு 19, 20, 21, 22 வது சூத்திரங்களால் சொல்லிய இடையிலுள்ள உபாயானுஷ்டானக் கிலேசம் இவ்வழியில்லாமைபற்றியும், உபனிடதங்களிற் பெரும்பாலும் பரமாத்ம தத்

துவக்ஞானம் என்ற பக்தியோகத்தையே மோக்ஷோபாயமாக கூறியிருப்பதிலிருந்தும் இதுவே மேலான ஸாதனமென்பது தெரிவிக்கப்படுகின்றது. ஆகவே அன்பினால் ஆண்டவன் அருள் சுரக்க, அதனின்றும் அஸம்பிரக்ஞாதஸமாதிப் பேற்றையும் அதன் பயனான முக்தியையும் ஜீவன் விரைவில் பெறுகிறான் என்பதி லையமில்லை. (எ-று)

(அ - கை) ஜீவனுக்கு விலக்காய ஈசுவரனுடைய சுவரூபத்தை உபதேசிக்கிறார்.

मू०॥ क्लेशकर्मविपाकाशयैरपरामृष्टः पुरुषविशेष ईश्वरः ॥ २४ ॥

(ஸூ) க்லேசகர்ம விபாகா சயை ரபராம்ருஷ்ட: புருஷ விசேஷ ஈச்வர : (24)

(ப - ரை) क्लेशकर्मविपाकाशयैः—क्लेश = (க்லேச) அவித்யை, அஸ்மிதை, ராகம், த்வேஷம், அபினிவேசம் ஆகிய இவ்வைந்துகளாலும் कर्म=(கர்ம) தர்மம், அதர்மம் இவற்றாலும், विपाक= (விபாக) கர்ம பலன்களான ஜன்மம், ஆயுள், போகம் இவற்றாலும், आशय=(ஆசய) சித்தாரூடமான ஸம்ஸ்காரங்களாலும் अपरामृष्टः=(அபராம்ருஷ்ட:) முக்காலத்திலும் ஸம்பந்தம் பெறாதவனும் पुरुषविशेषः = (புருஷ விசேஷ:) ஜீவனைவிட வேறானவனுமான [यः=(ய:) எவனுண்டோ सः=(ஸ:) அவனே] ईश्वरः = (ஈச்வர :) ஈசுவரன் எனப்படுவன்.

(தா - ம்) அவித்யை, அஸ்மிதை, ராகம், த்வேஷம், அபினிவேசம் என்ற கிலேசங்களும், கர்மம் என்ற தர்மா தர்மங்களும், விபாகம் என்ற அதன் பயனான சுகதுக்கங்களும், ஆசயம் என்ற அதன் ஸம்ஸ்காரமும் எவரிடத்தில் முக்காலத்திலும் ஸம்பந்திப்பதில்லையோ, எவர் உண்மையில் ஜீவனைவிட வேறானவரோ அவரே ஈசுவரன் என்றேற்பட்டது.

குறிப்பு:—இந்த யோக சித்தாந்தத்தில் உண்மையில் பிரகிருதி ஸம்பந்த மற்ற கைவல்யம் என்றதொரு நிலையுண்டு. அன்

ணிலையை யடைந்தவர்களு மனேகருண்டு. ஆயினும கைவல் யத்தை யடைந்தவர் ஈசுவரன் எனச் சொல்லப்படார் என்ப தைக் காட்டவே இந்தச் சூத்திரத்தில் ‘கிலேசாதிகளுடன் முக் காலத்திலும் சம்பந்தம் பெருதவர்’ என்ற பொருளுள்ள **अपरामृष्टः** என்ற பதம் போடப்பட்ட தெனக் கொள்ளல் வேண்டும். மேலும் பிரகிருதிலயத்தை யடைந்தவர் பிராகிருத பந்தமுள்ள வர் என்றும், விதேஹலயத்தை யடைந்தவர் வைகாரிகபந்த முள்ளவரென்றும், திவ்யமாயும் மானுஷமாயுமுள்ள விஷயபோக முள்ளவர் தாக்ஷிணிகபந்த முள்ளவர் என்றும் கொள்ளப்படுவர். ஆகவே யோக சித்தாந்தப்படி கைவல்யம் என்ற முக்தி நிலையை யடைந்தவர் முற்கூறிய பிராகிருதபந்தம், வைகாரிகபந்தம், தாக்ஷி ணிகபந்தம் என்ற மூன்று பந்தங்களையும் முன்னரடைந்து பின் னர் அதனின்றும் விடுபட்டு இக்கைவல்ய நிலையையடைந் திருக் கின்றனர். ஆனதுபற்றி இச் சூத்திரத்தால் சொல்லபபடும் ஈசு வரனைவிட கைவல்யத்தையடைந்த ஜீவர்கள் வேறுபட்டவர்களா கின்றனர் என்பதைக் காட்டவே **अपरामृष्टः** என்ற பதம் போடப்பட்டது. ஈசுவரனேவெனில் முக்காலத்திலும் மேற் கூறிய பந்தங்களற்றவன். ஆனதுபற்றி புருஷன் என்ற பதத் தால் சொல்லப்படும் ஜீவனைவிட உண்மையில் வேறுனவனுகவே யாகின்ருன். இந்த யோக சித்தாந்தத்தில் ஜீவர்கள் சுத்தசை தன்ய வடிவமுள்ளவர்க ளெனச் சொல்லப்பட் டிருப்பதால் கிலேசம், கர்மம், விபாகம், ஆசயம் இவைகள் உண்மையில் ஜீவ னைச்சார்ந்தனவாகா. ஆகவே ஈசுவரனுக்குக் கூறிய லக்ஷணத் திலிருந்து ஜீவனே ஈசுவரன் என்று சொன்னதாகச் சங்கை உதயமாகலாம். ஆயினும் அதனுண்மை பின்வருமாறு—

இச் சித்தாந்தத்தில் உண்மையில் கிலேசாதிகள் ஜீவதர் மங்களன்று தாஞயினும் இந்தக் கிலேசாதிகளுக்கு ஆசிரயமான அந்தக் கரணத்திற்கு சுவாமியாக ஜீவனிருப்பதுபற்றி அந்தக்கர ணத்திலுள்ள கிலேசாதிகளின் பலஞன சுகதுக்கங்களின் சம்பந்த முள்ளவனு யாகின்ருன். இவ்விதமே யோக சூத்திர பாஷ்யத் திலும் **सहि तत्फलस्य भोक्ता, यथा योद्धृषु वर्तमानौ जयपराजयौ तत्स्वामिनि व्यपदिश्येते।** “ஜீவனே அக்கர்ம பலனை யனுபவிப்பவன்.

யுத்த வீரனிடமுள்ள ஜயமோ, தோல்வியோ சுவாமியினிடத்தில் சொல்லப்படுவது போல'' என்றதால் கூறப்பட் டிருக்கிறது. அதாவது: யுத்த வீரர்கட்கும் அவர்களால் நடத்தப்படும் யுத்த கார்ய பலனான சுகாதி யனுபவத்திற்கும் சுவாமியான அரசனிடத்தில் ஜயத்தையோ பராஜயத்தையோ சொல்வதுபோல அந்தக் கரணத்தின் சுவாமியான ஜீவனிடம் சுகதுக்காதிக ளிருப்பன வாய் கூறப்படுகின்றன. ஈசுவரனுக்கோ கிலேசாதிகளோ அதன் பலனான சுகதுக்கங்களோ அந்தக் கரணதுவாராவாகவும் ஒரு பொழுதும் ஏற்படுவதில்லை. இதுவே **विपाकैरपरामृष्टः** என்றதால் கூறப்பட்டிருக்கிறது.

மேலும் ஆண்டவனுடைய ஈசுவரத் தன்மையானது யாது எனின்? இச்சையால் மட்டும் சகல பதார்த்தத்தையும் உத்தாரணம் செய்வதற்குப் போதிய திறமை வாய்ந்திருத்தலேயாம். அத் திறமையானது க்ஞானம், கிரியை, ஸாமர்த்தியம் இவற்றின் விசேஷ நிறைவின்றி நிகழா. ஞானாதிகளின் விசேஷ நிறைவானது ரஜஸ்தமோ குணங்களின் சம்பந்தமற்ற சுத்தஸத்வ குணத்தின் ஸம்பந்தமின்றி நிகழா. ஆனது பற்றியே ஆண்டவன் சுத்த ஸத்வப் பிரதான பிரகிருதியை யங்கீகரிக்கிறார். ஆகவே ஈசுவரன் பிரகிருதிக்கு பிரேரகனாகின்றான் என்பது, லோகோத்தாரணம் செய்யவேண்டி அப் பிரகிருதியை யங்கீகரித்தல் என்பதாகும். ஆனால் பிரதானத்தை யங்கீகரிக்கும் ஆண்டவன் ஜீவன் போல் அதன் தத்துவமறியா திருப்பதா யங்கீகரிப்பதில்லை. உலகில் ராம வேடம்பூண்டு நடிக்கும் நடன் ராமனது அந்தந்த லீலைகளைக் காண்பிக்கும் பொழுது பிரமம் பிடித்தவன் என அவனை நாம் கூறுவோமா? ஒருபொழுதும் கூறோம்.

சங்கை—லோகோத்தாரணேச்சையால் சத்துவகுணத்தை யங்கீகரிக்க வேண்டும். சத்துவ குணத்தை யங்கீகரித்த பின்னரே இச்சையுண்டாக வேண்டும். ஆகவே ஒன்றை யொன்று ஆச்ரயித்தல் என்ற அன்யோன்யாச்ரய தோஷம் வருமே எனின்?

உத்தரம்—விதையும் மரமும்போல இவ்விரண்டும் அநாதியாகையால் அன்யோன்யாச்ரய தோஷம் வாராது. இவ்விதமே பிரபஞ்சஸம் ஹாரகாலத்தில் தமோ குணத்தை யங்கீகாரம்செய்யும் விஷயத்திலும் காண்க. மேலும், பிரகிருதியினிடத்தில் சிருஷ்டி சக்தி என்றும், லய சக்தி என்றுமிரண்டு சக்திகளியற்கையிலடங்கி யிருக்கின்றன. அவற்றுள் ஈசுவரன் ஸத்வகுணத்தை யங்கீகாரம் செய்யுங் காலத்தில் பிரகிருதியிலுள்ள சிருஷ்டி சக்தியானது தலை தூக்குகிறது. இவ்விதமே ஸம்ஹார காலத்தில் தமோ குணத்தை யங்கீகாரம் செய்யுங்கால் பிரகிருதியிலுள்ள லய சக்தியானது தலை தூக்குகின்றது. தமோ குணத்தை யங்கீகரித்தலையே யோக நித்திரை என்றும் கூறுவர். ஆகவே இவ்வித சக்திகள் மூலம் சிருஷ்டி, லயம் இவ்விரண்டையும் பிரதானம் செய்கின்றது. அதாவது: பிரகிருதியிலுள்ள சிருஷ்டி சக்தி, லயசக்தி இவைகளிலொன்று உத்போதத்தை (தலைதூக்குதலை) யடைந்தபொழுது அநாதிவாஸனையின் உதவியைக்கொண்டு அந்தந்த ஜீவர்களின் போகத்திற்கு வேண்டி பிரதானம் என்ற பிரகிருதியானது விஷயம், இந்திரியம், தேஹம் முதலிய அந்தந்த வடிவமாய் பரிணமத்தை யடைகின்றது. ஆகவே இதனின்றும் ஒருவனை யொருவிதமாயும், மற்றொருவனை மற்றொருவிதமாயும் படைத்தல் என்ற 'வைஷம்யம், நைர்கிருண்யம்' என்ற தோஷம் ஆண்டவனுக்கு ஒரு பொழுதும் ஸம்பவிப்பதற்கில்லை என்பது உறுதியாகின்றது

மேற் கூறியபடி ஸ்வரூப ஸ்வபாவாதிகளுள்ளவனாய் ஈசுவரனை யங்கீகரிபபதில் பிரமாணம் என்னை எனின், கூறுவாம், சுருதி, ஸ்மிருதி முதலிய சாஸ்திரமே ஈசுவரனை அவ்விதம் யங்கீகாரம் செய்வதில் பிரமாணமாகும். பாம்பு, தேள், முதலிய விஷஜந்துக்கள் தீண்டியபொழுது ஆண்டவனால் வெளியிடப்பட்ட மந்திரங்களை முறைப்படி நாம் ஜபிப்போமாயின் அவ் விஷம் நீங்கி விடுவதை கண் கூடாகக் கண்டிருக்கிறோம். ஆகவே ஆண்டவன் வெளியிட்ட சுருதியின் ஒருபாகமான மந்திரங்களின் பிராமாண்யத்தை (உண்மையை) நேரில் கண்டதிலிருந்து ஆண்டவனால் வெளியிடப்பட்டதும், அவனது சுவபாவம், சுவரூபம் இவற்றை

ப்போதிக்கின்றதுமான எனைய சுருதி பாகங்களும் பிரமாணங்கள் தாமெனக் கொள்ளுதலவச்யமாகின்றமையின் உண்மையறிவைப் புகட்டும் சுருதிகளாலுபதேசிக்கப்படும் ஆண்டவன் மேற்கூறிய ஸ்வரூப ஸ்வபாவ முள்ளவராய் இருந்துதான் தீரவேண்டும் என்பதில் யாதும் தடையில்லை.

यो ब्रह्माणं विदधाति पूर्वं यो वै वेदांश्च प्रहिणोति तस्मै ।
तंऽहदेवमात्मबुद्धिप्रकाशं मुमुक्षुर्हं वै शरणमहं प्रपद्ये ॥

"எவர் முதலில் பிரும்ம தேவனைப் படைத்து அப்பிரும்ம தேவனுக்கு அனுதியான வேதம் தோற்றத்தை யடையவேண்டும் என்று சங்கல்பித்தாரோ அத்தகைய ஸர்வாந்தர் யாமியான ஆண்டவனை முக்தியில் விருப்பமுள்ள நான் சரணமடைகிறேன்" என்றும் சுருதிகள் கூறுகின்றன. ஆகவே இத்தகைய சுருதிகளினின்றும் முழுமுதற் கடவுளான ஆண்டவன் ஆதியிலிருப்பவரென்றும், அவரே புருஷ சப்தத்தால் சொல்லப்படும் ஜீவனை விட எவ்விதத்தானும் வேருனவரென்றும். அவரே ஈசுவரனென்று கொள்ளுத லவசியமென்றும் ஏற்பட்டு விட்டது. ஆனதுபற்றியே அவரது ஐசுவர்யம் ஒப்புயர்வற்றது என்றும், ஜீவர்களுக்குக்கூறும் ஐசுவர்யம் ஒப்புயர் வுள்ளதென்றும் பெறப்பட்டது. (எ-று)

(அ - கை) ஈசுவரனை யங்கீகாரம் செய்வதில் வேறு பிரமாணத்தையு முபதேசிக்கிருர்.

सू०॥ तत्र निरतिशयं सर्वज्ञबीजम् ॥ २५ ॥

(ஸூ) தத்ர நிரதிசயம் ஸர்வக்ஞபீஜம். (25)

(ப - ரை) **सर्वज्ञबीजम्** = (ஸர்வக்ஞபீஜம்) **सर्वज्ञ**=(ஸர்வக்ஞ) எல்லாவற்றையுமறிந்தவனுயிருக்குந் தன்மைக்கு **बीजम्** = (பீஜம்) காரணமான (**ज्ञानस्यसातिशयत्वम्**=(க்ஞானஸ்ய ஸாதிசயத்வம்) அறிவினுடைய உயர்வு, தாழ்வு தன்மையானது **तत्र**= அந்த ஈசுவரனிடத்தில் **निरतिशयम्**=(நிரதிசயம்) முடிவடைந்ததாக [**भवति**=(பவதி) ஆகின்றது.]

(தா-ம்) உலகில் இவனுடைய அறிவைவிட அவனது அறிவு மேலானது என்ற அனுபவ மிருக்கின்றது. இதிலிருந்து க்ஞானத்திலுள்ள உயர்வு தாழ்வானது ஏதோ ஓரிடத்தில் முடிவடைந்தே தீரவேண்டும் என்றேற்படுகின்றது. ஆகவே அவனைவிட அவன் அதிக க்ஞானமுள்ளவன். அவனைவிட மற்றொருவன் அதிக க்ஞானமுள்ளவன் என இவ்விதம் போகும்பொழுது க்ஞானத்தின் உயர்வு தாழ்வு ஓரிடத்தில் முடிவுபெற்றே தீரவேண்டும். இவ்விதம் எந்தவிடத்திலுள்ள க்ஞானத்திற்கு மேலான க்ஞானம் மற்றவிடத்தில் கிடையாவென்று க்ஞான பரம்பரைக்கு முடிவுஏற்படுமோ அவனேஈசுவரன்எனப்படுவன். ஆகவே "க்ஞானமானது ஓரிடத்தில் முடிவுடையதா யிருக்க வேண்டும்,க்ஞான விஷயமான உயர்வு தாழ்வு இருத்தலால், உலகிலுள்ள பரிமாணம்போல' என்ற அனுமான முண்டாகின்றது. ஆகவே இவ்வித அனுமான பிரமாணத்தாலும் यस्सर्वज्ञस्सर्ववित् என்ற சுருதியாலும் க்ஞானத்தின் உயர்வு தாழ்வற்றவனை, அதாவது: ஸர்வ க்ஞனை ஈசுவரனிருக்கிறான் எற்றேற்பட்டு விடுகிறது. இதனின்றும் சென்றது, நடக்கின்றது, நடக்கப் போகின்றது ஆகிய முக்காலத்திலுமுள்ள விஷயங்களை ஒரே சமயத்தில் விஷயீகரிக்கின்ற க்ஞானமானது எவரிடமிருக்குமோ அவரே ஈசுவரன் என இவ்வித அனுமானப் பிரமாணத்தைக் கொண்டே ஈசுவரனை ஸ்தாபித்துவிடக் கூடுமாதல்பற்றி ஈசுவரனை ஸ்தாபிப்பதற்கு சுருதி முதலிய சப்த பிரமாணம் வேண்டுவதில்லை என எண்ணுவதற்கில்லை. மேற்கூறிய அனுமானப் பிரமாணத்தால் ஸர்வ க்ஞனை ஒருவன் இருக்கக்கூடும் என்று மட்டுமேற்படுமே யொழிய மற்று மவரது குணவிசேஷங்களை எந்த உயர்ந்த ஜீவனாலும் அறிய வியலாவாகலின் அவற்றை சுருதி முதலிய சப்த பிரமாணத்தைக் கொண்டுதான் அறிதல் கூடும். ஆகவே இவ்விஷயத்தில் சுருதி முதலிய சப்த பிரமாண மவசியமாகி விடுகின்றது.

சங்கை—அங்ஙனமாயின் நித்யதிருப்தனான ஈசுவரனுக்கு தனக்கென ஓர் ஆசை நிகழாவாகலின் பயனற்ற பிரபஞ்ச சிருஷ்டியில் பிரவிருத்தி ஏற்படுவதற்கில்லை. பிராணிகளிடத்துக் கரு

ணையாலோ, அல்லது அவ்விதம் பிரவிருத்தித்தலே அவருக்கு நித்யமானதென்று சொல்லியோ மேற்சொன்ன தோஷத்தைப் பரிஹரிக்க முடியாது. ஏனெனில் ஈசுவரன் ஸர்வக்ஞனும், தயையுள்ளவனுமானதுபற்றி துக்கத்தையே வெகுவாகவுடைய லோக சிருஷ்டியில் பிரவிருத்தி ஏற்படுவதற்கிடமில்லை என்பதுபற்றியே எனின்?

உத்தரம்—அதனுண்மையை இங்கு கூறுவாம் பொதுவாய் சிருஷ்டி, ஸ்திதி, லயம் எனப் பிரபஞ்சத்திற்கு மூன்று நிலையுண்டு இம்மூன்று நிலையையும் பிரபஞ்சமடைவதற்கு அப்பிரபஞ்சத்திலுள்ள ஜீவர்களின் புண்ணிய பாப கர்மத்தை முன்னிட்ட பிரதானத்தின் (பிரகிருதியின்) பிரவிருத்தியே காரணமாகின்றது. இந்த யோக சித்தாந்தத்திலும், மற்றுமுள்ள நியாய வைசேஷிக சித்தாந்தத்திலும் ஈசுவரன் நிமித்த காரணமாக மட்டுமாவரெனச் சாதிக்கப்பட்டிருக்கிறது. ஆகவே இந்தச் சித்தாந்தப்படி பிரபஞ்ச பரிணாமயுபாதான காரணமான பிரகிருதியானது தன்னிடத்தில் பிரளய காலத்தில் தத்தமது கர்ம க்ஞான வாஸனையுடன் லயமடைந்த ஜீவர்களின் லயப்ரதமான காலம் முடிந்து அக்கர்ம க்ஞானங்கட்கு சிருஷ்டி ப்ரத கால முற்பவிக்கும் பொழுது அந்தந்த ஜீவர்களுடைய அக்கர்ம க்ஞான வாஸனையை யொட்டி அசேதனமான பிரகிருதியானது அந்தந்த ஜீவர்களின் கர்மக் ஞான வாஸனைக்குரிய போகத்திற்கு வேண்டி மஹத், அஹங்காரம், பஞ்சதந் மாத்திரை, பாஞ்ச பௌதிகமான சரீராதிகள் இவைகளின் வடிவமாக மாறுதலையடைகின்றது. இஃதே சிருஷ்டி எனப்படும். இவ்விதம் மாறின பிறகு சிருஷ்டி பிரதமான கர்மாவும், அதன் காலமும் முடிந்து ஜீவர்களின் லயப்ரதமான கர்மாவானது உதயமாகும் பொழுது ஒவ்வொரு காரியமும் முன்போலவே தனது காரணத்திலொடுங்கும்முறையாக ஸர்வகாரணமான பிரதானத்திலொடுங்கிபிரதான வடிவமாகவே ஆகிவிடுகின்றது. ஆகவே பிரபஞ்ச சிருஷ்டியானது ஜீவர்களின் கர்ம க்ஞான வாஸனையை யொட்டி பிரதான (பிரகிருதி) காரியமே யொழிய ஈசுவரனுடைய காரியமில்லையாதலால் ஸர்வக்ஞனும் தயாமூர்த்தியுமான ஈசுவரன் துக்கபஹுளா

மான பிரபஞ்சத்தை ஏன் படைக்கவேண்டும் என்ற கேள்விக்கே இடமில்லாமலாகி விடுகின்றது.

சங்கை — அங்ஙனமாயின் சாங்கிய சித்தாந்தம் போலவே யோக சித்தாந்தமுமாவதால் இதில் தனியாக கிலேசாதிகளற்றவனும் ஸர்வக்ஞனுமான, ஈசுவரனொருவ னுண்டென்று இவ்வளவு பாடுபட்டு ஸ்தாபித்ததின் கருத்து என்னை எனின்?

உத்தரம்— கூறுவாம், ஒரு மண் குடத்தை எடுத்துக்கொள்வோம். இங்கு குடமென்பதைக் காரியம் என்று சொல்வதுண்டு. இந்தக் குடமாகிற காரியமுண்டாவதற்கு முன்னிருந்த மண்ணே இக்குடமாக மாறி இருப்பதால் இம் மண்ணையே பரிணும்யுபாதானம் என்று சொல்லுகிறோம். இம் மண்ணனது தான் குடமாக மாறுவதற்கு ஜலம் முதலிய வேறு வஸ்துவின் உதவியாலேயே அவ்விதம் குடமாக மாறுகின்றது. அவ்விதம் மாறுவதற்கு மண்ணையும் ஜலத்தையும்விட வேருன குலாலன் என்ற குயவன் வேண்டப்படுகிறுன். அவனே இம்மண்ணைக் குடமாக்குகிறுன். இக்குயவன் நிமித்த காரணம் என்று சொல்லப்படுவன் ஆகவே பரிணும்யுபாதான காரமான ஜலத்திலுள்ள குணதோஷத்திற்குத் தக்கபடியே குடம் முதலிய காரியமுண்டாகின்றது. அதாவது: மண்ணுடன் ஸமுத்திரத்திலுள்ள உப்பு ஜலத்தைவிட்டு மண்ணைத் துகைத்து குடம் செய்வோமாகுல் உண்டான குடமும் உபபுப் பூத்து கொஞ்சநாளில் வீணுகி விடுவதை நாமனுபவத்தில் காண்கிறோம். இவ்விடத்தில் நிமித்த காரணமாகக் கூறப்படும் குயவன், குடம் உப்புப் பூத்துப் போவதற்குக் காரணமாக மாட்டான். சமுத்திரஜலமே காரணமாகின்றது. ஆனுல் குயவன் சமுத்திர ஜலத்தை மண்ணிற் கலக்காது வேறு நல்ல ஜலத்தை ஏன் கலக்கக்கூடாது எனலாம். ஆயினும் குடம்செய்யும் குயவனிருக்கு மிடத்தில் உப்பு ஜலத்தைத் தவிர்த்து வேறு ஜலமே கிடைக்காவிட்டால் அப்பொழுது குயவனிடத்து எவ்விதம் தோஷம் கூறக்கூடும். ஆகவே இந்த உதாஹரணத்தில் நிமித்த காரணமாகக் கூறிய குயவன்போலவே இப்பிரபஞ்ச விஷயத்திலும் மண்ணேபோன்ற

பிரகிருதியானது தன்னிடத்தில் பிரளய காலத்தில் லயமடைந்த ஜீவர்களின் புண்ய பாப கர்மத்திற்கேற்ப அந்தந்த ஜீவர்களின் சுகானுபவத்திற்குரிய சரீரமாக மாறுவதாலும், அவ்விஷயத்தில் ஈசுவரன் நிமித்த காரணமாக மட்டுமிருந்து அவ்வித மாறுதலுக்குச் சாக்ஷியாக விருப்பதாலும், ஆண்டவனிடத்தில் வைஷம்யம், நைர்கிருண்யம் என்ற எவ்வித தோஷமும் கூற இடமில்லாததாகிறது. மேலும் ஸர்வக்ஞனும் தயாமூர்த்தியுமான ஈசுவரன் சுத்த ஸத்துவமயமான தனது சித்தத்தில் பிரளய காலத்திலடங்கியுள்ள சாஸ்திரங்களை பிரபஞ்ச முண்டாகுங் காலையில் எல்லா ஜீவர்களுக்கும் முதலிலுண்டான நான்முகனுக் குபதேசித்து அவன் மூலம் பின்னருண்டாகும் ஜீவர்களுக்குள் அதைப் பரவச்செய்து அதனுதவியால் தன்னைப் பக்தி வைராக்கியத்தாலுபாஸிப்பவர்களுக்கு இந்தப் பிரகிருதி பந்தத்தை விலக்கி கைவல்யம் என்ற முக்தியை யுண்டாக்குகிறார். ஆகவே அசேதனமான பிரகிருதி ஜகத் வடிவமாய் மாறுவதற்கும், மாறின பிரபஞ்சத்தில் கர்மாவையொட்டி சரீரத்தையடைந்த ஜீவர்கட்கு கைவல்யத்தை யடைவதற்குரிய வழிகளை யுபதேசிக்கும் வேதத்தை பிரளய காலத்திற்குப் பின்னர் வெளியிடுவதற்கும் தயையுள்ளவனை ஆண்டவன் வேண்டுவது அவசியமாகின்றமையின் சாங்கிய சித்தாந்தத்தைவிட இந்த யோக சித்தாந்தத்தில பதஞ்சலி மஹருஷியானவர் ஈசுவரனைத் தனியாய் ஸ்தாபித்திருக்கிறார் என்றேற்பட்டது.

மேலும் இந்தச் சூத்திரத்தால் பொதுவாய் ஈசுவரன் ஒருவன் உண்டென்று ஏற்படினும் அதர்வசிகை முதலிய உபநிடதங்கள் இவரை மஹாதேவனென்றும், நாராயணோபநிடதம் மஹோபநிடதம் முதலியவைகள் நாராயணன் என்றும் பிரித்து உபதேசிக்கின்றன. இவ்விதமே—

सर्वज्ञता तृप्तिरनादिबोधः स्वतन्त्रता नित्यमलुप्तशक्तिः ।
अनन्तशक्तिश्च विभोर्विधिज्ञाः षडाहुरङ्गानि महेश्वरस्य ॥

ज्ञानं वैराग्यमैश्वर्यं तपस्सत्यं क्षमा धृतिः ।

स्रष्टुत्वमात्मसंबोधो ह्यधिष्ठातृत्वमेव च।
अव्ययानि दशैतानि नित्यं तिष्ठन्ति शंकरे ॥

என்று வாயு புராணத்திலும்

अनादिनिधनं विष्णुं सर्वलोकमहेश्वरम् ।
लोकाध्यक्षं स्तुवन्नित्यं सर्वदुःखातिगो भवेत् ॥

என்று மஹாபாரதத்திலு முபதேசிக்கப்பட் டிருக்கிறது. ஆகவே எந்தெந்த பக்தனுக்கு எந்தெந்த மூர்த்தியில் இயற்கையில் பக்தி ஏற்பட்டிருக்கின்றதோ அவரவர் அந்தந்த மூர்த்தியை ஸர்வக்ஞனுகவும் ஈசுவரனுகவு முபாஸித்து க்ஷேமமடையலா மென்பதே ஸர்வ சாஸ்திரங்களின் ஸமரஸமான கருத்து. (எ-று)

(அ - கை) பிரும்மாதி தேவர்களைவிட ஜகத் காரணமான பகவானுக்குரிய விசேஷத்தை இந்தச் சூத்திரத்தா லுபதேசிக்கிறுர்.

सू०॥ स पूर्वेषामपि गुरुः कालेनाऽनवच्छेदात् ॥ २६ ॥

(ஸூ) ஸ பூர் வேஷாமபி குரு : காலேன அனவச் சேதாத் (26)

(ப - ரை) **सः**=(ஸ:) அந்த ஈசுவரன் **पूर्वेषामपि**-(பூர்வேஷாமபி) ஸர்க்காதியிலுண்டான பிரும்மா முதலியவர்களுக்கும் **गुरुः** (குரு:) உபதேஷ்டாவாயும் சிருஷ்டாவாயு மிருக்கின்றுர். ஏனென்றல் **कालेन**-(காலேன) காலத்தினுல் **अनवच्छेदात्** - (அனவச்சேதாத்) ஆயுளின் அளவு கூறப்படாதிருத்தலால் என்க

(தா - ம்) அந்த ஈசுவரன் சிருஷ்டாவாகவும், வேதம் முதலியவற்றை உபதேசிக்கும் வாயிலாக ஞானேபதேசம் செய்கின்றவராகவு மிருப்பதுபற்றி சிருஷ்டியின் ஆரம்பத்திலுண்டான பிரும்மா முதலிய தேவர்கட்குக் குருவாகவுமாகிறுர். ஏனெனின்—

चतुर्युगसहस्रं तु ब्रह्मणो दिनमुच्यते
रात्रिं युगसहस्रान्तां तेऽहोरात्रविदो जनाः ॥

"நான்கு சதுர்யுகங்கள் கொண்டது பிரும்மதேவனுக்குப் பகலென்றும், அவ்விதமே இரவின் அளவென்றும் சொல்லுகின்றனர்" என்ற புராண வசனங்கள் மூலம் பிரும்மதேவனுக்கு ஆயுளில் ஒரு காலவரையறை யேற்பட் டிருக்கிறது. ஈசுவரனுக்கோ ஆயுளில் கால வரையறை கூறாமல் எப்பொழுது மிருப்பவர் என்று சாஸ்திரங்களில் கூறப்பட் டிருக்கிறது. இதுவே அதன் காரணம் என்க. (எ-று)

(அ - கை) இவ்விதம் ஈசுவரனை நிரூபித்து ஈசுவரனிடத்து பக்திசெய்யும் முறையை யுபதேசிப்பான் கருதி ஈசுவரனுடைய ரஹஸ்ய நாமாவை யுபதேசிக்கிறார்.

सू० ॥ तस्य वाचकः प्रणवः ॥ २७ ॥

(ஸூ) தஸ்ய வாசக : ப்ரணவ: (27)

(ப - ரை) **प्रणवः**=(பிரணவ:) பிரணவமானது **तस्य**=(தஸ்ய) அந்த ஈசுவரனுக்கு **वाचकः**=(வாசக:) வாசகமானது, பெயராகவுள்ளது.

(தா-ம்) **प्रणवः—प्र=प्रकर्षेण, नूयते अनेनेति नवः प्र × नव, प्रणवः,** இதனால் அதிகம் துதிக்கப்படுவதுபற்றி இது பிரணவம் எனப்படும் எனப் பிரணவ பதத்திற்குப் பொருள் கொள்ளப்படுகின்றது. நற்குணம் நிறைந்தவனிடமுள்ள குணங்களைக் கூறலே ஸ்துதி எனப்படும். ஆகவே ஆண்டவனிடத்துள்ள அனந்த கல்யாண குணங்களை எடுத்துக் காட்டும் வாயிலாக அவரது பிரஸாதமுண்டாகுமாறு செய்யக்கூடிய சப்தம் பிரணவம் என்றேற்பட்டது. அல்லது **प्र=प्रकर्षेण, नवः=नवीनः, प्रणवः** அதாவது மிக்க(எப்பொழுதும்) புதிதான பொருளையுடைய சப்தம் பிரணவம் எனப்படும். ஆகவே பிரணவத்தின் பொருளான பரம்பொருளானது என்றும் மாறுதலின்றிப் புதிதாகவே ஒரே மாதிரியாகவே) இருப்பது

பற்றி என்றும் மாறாத பரமாத்மாவை வாச்யமாகவுடைய இப்பிரணவமும் மிக்கப் புதிதாகவேயாகின்றது. என்றும் பொருள் கொள்ளலாம். பொதுவாய் சப்தத்திற்கும், அதன் அர்த்தத்திற்கும் (பொருளுக்கும்) உள்ள சம்பந்தம் (தொடர்பு) என்று முள்ளதென்றே கூறவேண்டும். पिता என்றபதம் தந்தையைக் குறிக்கின்றது. இவ்விடத்தில் பிதா என்ற பதத்திற்கும் தந்தை என்ற பொருளுக்கும் ஓர் சம்பந்தமிருத்தல் வேண்டும். அவ்வித சம்பந்தத்தை முதன் முதலில் (அதாவது பிரபஞ்சாரம்பத்தில்) ஏற்படுத்தியவர் ஈசுவரனே யாவர். அவ்விதம் ஈசுவரனால் சப்தத்திற்கும் அதன் பொருளுக்கும் ஏற்படுத்தப்பட்ட முதன் முதல் சம்பந்தமே "சங்கேதம்" என்றும் "சக்தி" என்றும் சாஸ்திரங்களிற் சொல்லப்படுகின்றது. ஆகவே சப்தத்திற்கு மர்த்தத்திற்கு முள்ள சம்பந்தம் நித்தியம்(என்றும் உள்ளது)என்றேற்பட்டது.

ஸ்தூல ரூபமான சகல பிரபஞ்சமும் பிரளயகாலத்தில் சர்வ பிரபஞ்ச பரிணாம்யுபாதான காரணமான பிரகிருதியில் ஒடுங்கிப் பின்னர் அதனதன் கர்ம க்ஞான வாஸனைக்கேற்ப ஈசுவரனால் சிருஷ்டிக்கப்படுவது (ஸ்தூல மாக்கப்படுவது) போலவே ஸ்தூல ரூபமான சகல சப்தங்களும் பிரளய காலத்தில் சுத்த சத்துவ ரூபமான ஈசுவரனுடைய ஸூக்ஷ்மமான மனத்தில் லயமடைந்துவிடுகிறது. பிறகு ஸர்வக்ஞனை ஈசுவரன் தனது சங்கற்பத்தை முன்னிட்டு அந்தந்த சப்தங்களை வெளியிடும்பொழுது இன்னின்ன சப்தம் இன்னின்ன பொருளைக் குறிக்கின்றனவென்பதை முதன் முதலி லுண்டான பிரும்மதேவனுக்கு உபதேசித்து அவர் மூலமாக உலகில் சப்தத்திற்கு மர்த்தத்திற்குமுள்ள சங்கேதத்தை வெளியிட் டிருக்கிறார். இம்முறையில் பிரணவம் எனப்படும் "ஓம்" என்ற பதத்திற்கும் தனக்குமுள்ள சம்பந்தத்தை அவ்வீசுவரனே வெளியிட் டிருக்கிறார். ஒரு பிதா தனது குழந்தைக்கு உலகிலுள்ள சப்தங்களுக்கும் அர்த்தங்களுக்குமுள்ள சங்கேதத்தைத் தெரிவிக்குமிடத்து பிதாவென்ற பதத்திற்கும் தனக்குமுள்ள சம்பந்தத்தையும் அக் குழந்தைக்கு உபதேசித்து, தன்னை அக்குழந்தை 'அப்பா' என்றழைப்பதைக் கேட்டு சந்தோஷிப்பது போலவே ஈசுவரனும் தனக்குப் பிடித்

த பெயரான பிரணவத்தைச் சொல்லி தன்னை யுபாஸிக்கும் பக்த ஜீவன் விஷயத்தில் சந்தோஷித்து அந்த ஜீவனுக்குவேண்டிய கைவல்யம் முதலிய நன்மைகளைச் செய்கிறார் என்று கொள்ள வேண்டும். இவ்விதமே—

यथा प्रियनामग्रहणेन देवदत्तः प्रीणाति तथैवेश्वरोपि प्रणवोच्चारणेन भक्ताननुगृह्णाति ॥

என்றதால் பாஷ்யாதிகளிலும் கூறப்பட் டிருக்கிறது. ஆகவே ஈசுவரனுடைய அருளைப்பெற விரும்பும் ஒவ்வொரு ஜீவனும் அவரது பெயரான பிரணவத்தின் பொருளறிந்து அதை முறைப்படி ஜபித்து வரவேண்டுவ தவசியம் என்று ஏற்பட்டது. (எ-று)

(அ - கை) ईश्वरप्रणिधानाद्वा என்ற 23-வது ஸூத்திரத்தி லுள்ள ஈச்வர பதத்தால் குறிக்கப்பட்ட ஈசுவரனுடைய சுவரூபத்தை நான்கு ஸூத்திரங்களா லுபதேசித்து அந்தச் ஸூத்திரத்திலுள்ள ப்ரணிதான என்ற பதத்தால் சொல்லப்படும் பொருளை யுபதேசிக்கிறார்.

सू०॥ तज्जपस्तदर्थभावनम् ॥ २८ ॥

(ஸூ) தஜ்ஜப ஸ்ததர்த்த பாவனம் (28)

(ப - ரை) तज्जपः=(தஜ்ஜப:) அந்தப் பிரணவத்தை ஜபித்தலும் तदर्थभावनं-(ததர்த்தபாவனம்)பிரணவத்தின் பொருளான பரமாத்மாவை அடிக்கடி மனத்திலிருத்தலென்ற தியானித்தலும் [प्रणिधानं-(பிரணிதானம்) பிரணிதானம் எனப்படும்]

(தா - ம்) जपमानसेच என்ற தாதுப்படி மந்திராக்ஷரங்களை மனத்தில் வாங்கி மனோவிருத்தியை யாவிருத்திசெய்தலே ஜபம் என்ற பதத்தின் முக்கியார்த்தமாக ஏற்படுகின்றது. இதற்கடுத்த படியிலுள்ளது உபாம்சு ஜபமாகும். அதற்கடுத்த படியிலுள்ளது வாசிக ஜபமாகும். ஆகவே முதற்படியிலுள்ள முறைப்படி பிரணவத்தை மனத்தில் வாங்கி மனோவிருத்தியையும் பிரணவத்தையு

மொன்றுக்கி மனோவிருத்தியை யாவிருத்திசெய்தும், அவ்விதமா விருத்தி செய்யுங்கால் பிரணவத்தின் பொருளான பரம்பொருளே யும், அடிக்கடி மனத்தால் தியானித்தும் வரவேண்டும். இவ் விதம் வருவதே பிரணிதானமாகும் இவ்விதம் பழகிவரும் யோகிக்கு சித்தமானது ஏகாக்ர நிலையை யடைந்துவிடும். இதையே வியாஸரும்,

> स्वाध्यायाद्योगमासीत योगात्स्वाध्यायमामनेत् ।
> स्वाध्याययोगसंपत्त्या परमात्मा प्रकाशते ॥

பிரணவம் முதலிய மஹா மந்திரங்களே ஜபித்தலினின்றும் ஏகாக் ரதை என்ற யோகத்தைப் பழக்கத்திற் கொண்டுவர வேண்டும். இம்முறையில் ஏகாக்ரதைக்குரிய பழக்க மேற்பட்ட பின்னர் ஸ்வாத்யாயம் என்ற பிரணவம் முதலிய மந்திரங்களின் பொரு ளான பரமாத்ம வஸ்துவை குருபதேச மூலம் மனத்தில் வாங்கி அடிக்கடி மனனம் செய்தல்வேண்டும். இவ்விதம் ஸ்வாத்யாயம், யோகம் இவ்விரண்டும் சித்தியாவதினின்றும் உண்மையில் தே ஹாதிகளேவிட வேறான ஜீவாத்ம ஸ்வரூபமானது நன்கு பிரகா சிக்கத் தொடங்கிவிடுகின்றது என்றதா லுபதேசித்திருக்கிறார்.

குறிப்பு—ஜபவிஷயமான மற்றும் சில விசேஷங்களே நமது மூன்று வேதிகளின் ஸந்தியா வந்தனம் என்ற புஸ்தகத்தில் 112 வது பக்கத்திற காண்க.

(அ - கை) மேலும் பிரணவ ஜபம், பிரணவத்தின் பொரு ளான பரமாத்மாவைச் சிந்தித்தல் என்ற இக் கார்யத்தா லுண் டாகும் வேறு பலனே இந்தச் சூத்திரத்தா லுபதேசிக்கிறார்.

सू० ।। ततः प्रत्यक्चेतनाधिगमोऽप्यन्तरायाऽभावश्च ।। २९ ।।

(ஸூ) தத: ப்ரத்யக் சேதனாதிக
மோப்யந்த ராயாபாவ: ச (29)

(ப - ரை) ततः (தத:) முற்கூறிய ஈசுவர ப்ராணிதானத்தி னல்) **प्रत्यक्चेतनाधिगमोऽपि** (ப்ரத்யக் சேதனாதிகமோபி) **प्रत्यक्चेतन**

(ப்ரத்யக்சேதன) தேஹாதிகளைவிட வேருக அறியப்படுகின்றவனும், சேதனனுமான ஜீவனுடைய अधिगमोऽपि = (அதிகமோபி) உண்மையான அறிவும் [भवति=(பவதி) உண்டாகின்றது.] अन्तराया ऽभावश्च=(அந்தராயாபாவச்ச) வியாதி முதலிய யோகாப்யாஸ விக்கினங்களின் நிவிருத்தியு முண்டாகின்றது.

(தா - ம்) ஈசுவரனிடம் செய்யப்படும் பிரணிதானத்தால் (தியானத்தால்) யோகாப்யாஸத்திற்கு விரோதிகளான வியாதி முதலியவைகளுண்டாகாம லிருப்பதுடன் யோகாப்யாஸம் செய்கின்றவர்க்குத் தனது (ஜீவனது) ஸ்வரூப க்ஞானமு முண்மையாயுண்டாகின்றது.

சங்கை—எவன் எவ்வஸ்துவைத் தியானம் செய்கின்றானே அவனுக்கு அவ்வஸ்துவின் உண்மையான க்ஞானமுண்டாகின்றது என்பது நியாயத்திற்குப் பொருத்தமானது. இவ்விதமிருக்க ஈசுவரனைத் தியானம் செய்வதால் ஜீவனுடைய ஸ்வரூப க்ஞானமுண்டாகும் என்று சொல்லுவது எப்படிப் பொருந்தும், உலகில் குடத்தைத் தியானம்செய்பவன் துணியின் தத்துவ க்ஞானத்தை அடைகின்றான் என்பதற்கு நிகருகவன்றோ இந்த உபதேசமிருக்கின்றது எனின்?

உத்தரம்—அதனுண்மையை இங்கு கூறுவாம். எவ்விதம் ஈசுவரன்கூட ஸ்த நித்யனாகவும், உண்மையில் அவித்யை முதலிய கிலேசங்களற்றவனாகவும், புண்ய பாப கர்ம ஸம்பந்த மற்றவனாகவும், ஆனதுபற்றியே ஜாதி ஆயுள், போகம் என்ற சுகதுக்கானுபவம் இவையற்றவனாகவு மிருக்கின்றானோ இவ்விதமே இந்த ஜீவனும் உண்மையில் தர்மா தர்ம சம்பந்தமற்றவனாகவும், கர்மமூலமான ஜாதி, ஆயுள், போகம் இவையற்றவனாகவும் இருப்பதால் ஈசுவரத் தியானத்தால் அவருக்கொப்பான சுவரூபம் வாய்ந்த தன்னுடைய (ஜீவனுடைய) உண்மையான க்ஞானம் இவனுக்கு வரக்கூடும் என்றேற்படுகின்றது. ஆகவே ஒன்றிற்கொன்று நேர் விருத்த தர்மமுள்ள இரண்டு வஸ்துக்களுள் ஒன்றை யறிவதிலிருந்தே மற்றொன்றை யறியமுடியாதென்று

சொல்வது பொருந்துமேயன்றி சமான தர்மமுள்ள இரண்டு வஸ் துக்களுள் ஒன்றை யறிந்துவிட்டால் அதற்கொப்பானதர்மமுள்ள மற்றொரு வஸ்துவின் க்ஞானமுண்டாகும் என்பதில் யாதும் தடையில்லை. எவ்விதமெனின்—சமானமான விஷயங்களையுடைய இரண்டு சாஸ்திரங்களுள் ஒன்றையறிந்து விடுவதிலிருந்து மற் றொரு சாஸ்திரார்த்த க்ஞானமுமுண்டாகி விடுகின்றது போலெ ன்க. மேலும் இந்த யோக சித்தாந்தத்தில் ஜீவன் ஈசுவரன் இவ்விருவரின் ஸ்வரூபமும் ஒன்றாகவே உபதேசிக்கப்பட் டிருப் பினும் உண்மையில் இவ்விருவரும் வேறுபட்டவர்க ளென்றே கொள்ளப்படுகின்றது. இதையே ஸூத்திர பாஷ்யத்தில் **द्वैतिनो हि ते सांख्या योगाश्च** 'ஜீவேச்வரபேதத்தைப் பிரதானமாயங்கீ கரிக்கின்றவர்களன்றோ, சாங்கியர்களும், யோகிகளும்,'' என சங்கர பகவத் பாதாசாரிய சுவாமிகளவர்கள் உபதேசித்திருக் கின்றனர். (எ-று)

(அ - கை) 29-வது சூத்திரத்தில் குறிப்பிட்ட வியாதி முத லிய ஒன்பது அந்தராயங்களை இந்தச் சூத்திரத்தா லுபதேசிக் கிறார்.

सू०।। व्याधि - स्त्यान-संशय-प्रमादाऽऽलस्याऽविरति - भ्रान्तिदर्शनाऽलब्धभूमिकत्वाऽनवस्थितत्वानि चित्तविक्षेपास्तेऽन्तरायाः।। ३०

(ஸூ) வ்யாதி, ஸ்த்யான, ஸம்சய, ப்ரமாத
ஆலஸ்ய, அவிரதி, பிராந்திதர்சன,
அலப்தபூமிகத்வ, அனவஸ்திதத்வானி
சித்தவிக்ஷேபா: தே அந்தராயா: (30)

(ப - ரை) **व्याधि...त्वानि**—(வ்யாதி...த்வானி) **व्याधि**=(வ்யா தி) சரீரத்திலுள்ள வாதம், பித்தம், சிலேஷ்மம் என்ற தாதுக் களுடையவும், அன்னரஸமான ரக்தத்தினுடையவும் இந்திரியங் களுடையவும் வைஷம்யமும், அதாவது : தனது இயற்கை நிலை க்குமாறான நிலையும் **स्त्यान** = (ஸ்த்யான) கர்மம் செய்வதற் குத் தகுதியற்ற சித்தத்தின் நிலையும், **संशय**=(ஸம்சய) சாஸ்தி

ரங்களிற் சொல்லிய சாதனங்களில் இது இவ்விதமிருக்குமோ, இராதோ என்ற சந்தேகமும் **प्रमाद**=(ப்ரமாத) யோகாங்கங்களை யனுஷ்டிக்கா திருத்தலும் **आलस्य**=(ஆலஸ்ய) சித்தத்திலோர் விதத் தடிப்புண்டாகி எதிலும் பிரவிருத்தி யற்றிருத்தலும் **अविरति**=(அவிரதி) விஷயத்திலாவலும் **भ्रान्तिदर्शन**=(ப்ராந்திதர்சன) சாஸ்த்திரார்த்தமொரு விதமாக விருக்க அதை வேறுவிதமாக நிச்சயித்தலும் **अलब्धभूमिकत्व**= (அலப்தபூமிகத்வ) சமாதிப் படியையடையாமையும் **अनवस्थितत्वानि**= (அனவஸ்திதத்வானி) கிடைத்த ஸமாதி வழியில் சித்தம் நிலையற்றிருத்தலும் [**इति**= என்ற **ये**=எந்த **चित्तविक्षेपाः**=(சித்தவிக்ஷேபா:) மனத்தை ஆட்டி வைக்கின்ற தோஷங்களுண்டோ **ते**=(தே) அவைகளே] **अन्तरायाः**= (அந்தராயா:) யோகப்பயிர்ச்சிக்கு இடையூறுகளாகும்.

(அ - கை) வேறு சில அந்தராயங்களை (இடையூறுகளை) உபதேசிக்கிறார்.

सू०॥ दुःख-दौर्मनस्याङ्गमेजयत्व-श्वास-प्रश्वासा विक्षेपसहभुवः ॥ ३१ ॥

(ஸூ) துக்க, தௌர்மனஸ்ய, அங்கமேஜயத்வ, சுவாஸ ப்ரச்வாஸா, விக்ஷேப ஸஹ புவ: (31)

(ப - ரை) **दुःख......भुवः**=(துக்க...புவ:) **दुःख**=(துக்க)* ஆத்யாத்மிகம், ஆதிபௌதிகம், ஆதி தைவிகம் என்ற துக்கமும் **दौर्मनस्य**=(தௌர்மனஸ்ய) இச்சைக்குத் தடையேற்பட்ட காலத்தில் மனத்திலுண்டாகும் கலக்கமும் **अङ्गमेजयत्व** = (அங்கமேஜயத்வ) சரீராவயவத்தி லாட்டமும் **श्वास** (ச்வாஸ) இஷ்டமில்லாவிடினும் வெளியிலுள்ள வாயு உள் செல்லுதலும் **प्रश्वासाः**=(ப்ரச்வாஸா:) இஷ்ட மில்லாவிடினும் உள் சென்ற வாயு வெளியிற் செல்லுதலும் ஆகிய இந்நான்கும் **विक्षेपसहभुवः**=(விக்ஷேபஸஹபுவ:) சித்தசாஞ்சல்யத்துடன் கூட வுண்டாகின்றவைகளாகும்.

---

*இதன் விவரணத்தை நமது "ஸாங்கிய தத்துவ கௌமுதீ" என்ற புஸ்தகத்திற் காண்க.

(தா - ம்) 30, 31.வது ஸூத்திரங்களா லுபதேசிக்கப்பட்ட யோகாப்யாஸ விக்னங்கள் விலக வேண்டுமானல் ப்ரணவாதி மஹா மந்திர ஜபமும் ப்ரணவாதிகளின் பொருளான பரமாத்ம வஸ்துவை இடைவிடாது சிந்தித்தலுமாகிய ஈசுவரப் பிரணி தானம் என்ற பக்தி யோகத்தை அவசியம் அப்பசிக்க வேண்டு மென்றும், இதைவிடச் சிறந்த ஸாதனமில்லை என்று மேற்பட்டது. (எ-று)

(அ - கை) ஈசுவரனிடம் செய்யப்படும் பக்தி யோகத்தால் வியாதி முதலிய விக்னங்கள் தாமே விலகி விடுகின்றனவென்று உபதேசிக்கப்பட்ட தாயினும், அவ்வித மீசுவரனிடத்து திருட பக்தியோக மில்லாதவனுக்கு முறையே ஈசுவர பக்தி யுண்டாவதற்கும், அதுவரை வியாதி முதலியவற்றைத் தடுப்பதற்கு முரிய உபாயத்தை உபதேசிக்கிருர்.

सू०॥ तत्प्रतिषेधार्थमेकतत्वाभ्यासः ॥ ३२ ॥

(ஸூ.) தத்ப்ரதி ஷேதார்த்த
மேகதத்வா ப்யாஸ: (32)

(ப - ரை) **तत्प्रतिषेधार्थम्**-(தத்ப்ரதி ஷேதார்த்தம்) முற்கூறிய வியாதி முதலியவற்றைத் தடுப்பதற்கு வேண்டி **एकतत्वाभ्यासः**= (ஏகதத்வாப்யாஸ:) யாதேனுமொரு தத்துவத்தில் மனத்தை நிறுத்தி தாரணை, தியானம் இவற்றைச் செய்து பழகுதல் [**कार्यः**= (கார்ய:) செய்யவேண்டும்.]

(தா-ம்) ஈசுவரன் தன்னிடத்தில் திருடபக்தியோக முள்ளவன் விஷயத்தில் அவனது பக்திக்கிணங்கி யோகவிரோதிகளான வியாதி முதலியவற்றைப் போக்கிவிடுகிருர் என்று முந்திய 29-வது சூத்திரத்தா லுபதேசிக்கப்பட்டது. இந்த சூத்திரத்தால் அவ்வித திருட பக்தியோக மில்லாதவன் யாதேனு மொரு மூர்த்தியில் தனது மனத்தை நிறுத்தி தாரணை, தியானம் இவற்றைச் செய்துவந்தால் அக்காலம் சித்தம் வேறு வஸ்துவினிடம்சென்று விட்டபடியால் வியாதி முதலியவற்ருலுண்டாகும் துக்கவுணர்ச்சி

யற்றுவிடும். இவ்விதமே மெள்ள மெள்ள விட்டுவிட்டோ தொடர்ச்சியாகவோ பழகி வருகின்றவனுக்கு சரீரத்திற் றோன்றும் வியாதி முதலியவற்றின் உணர்ச்சியே அற்று யோகானுஷ்டானத்திற்றிறமை ஏற்படும் என்று ஏற்பட்டது.

இவ்விஷயத்தில் லோகானுபவமொன்று கூறுவாம். ஒருவனுக்குச் சரீரத்தில் பிளவை முதலிய சிரங்குண்டாகி அவஸ்தைப் படுவதாக வைத்துக் கொள்வோம். இவன் இவ்வித மவஸ்தைப்படும் பொழுது வைத்யர்கள் குளோரபாரம் என்ற மயக்க வஸ்துவால் சரீரத்திற்கும் மனத்திற்குமுள்ள சம்பந்தத்தைப் பிரித்து விட்டு அவனது சரீரத்திலுள்ள சிரங்கு முதலியவற்றிற்குச் சிகித்ஸை செய்கின்றனர். அவ்விதம் செய்யும்பொழுது மனத்திற்குச் சரீரவுணர்ச்சியில்லாதிருத்தல் காரணமாய் சரீரத்திற் செய்யப்படும் கத்தியாலறுத்தல் முதலிய கார்யங்களால் அவனுக்கு துக்க மேற்படாதிருப்பதை நாம் அனுபவத்திற் காண்கிறோம். இவ்விதமே மனத்தை யாதேனுமோர் தத்துவத்திற் செலுத்தி தாரணை, தியானம் இவற்றைச செய்து பழக்கி வருவோமாயின் சரீரத்திற்கும் மனத்திற்குமுள்ள உணர்ச்சியற்றிருத்தல் காரணமாய் வியாதிகளாலுண்டாகும் துக்கம் இவனைப் பீடியாமல் போய்விடும். இவ்விதமே வேறிடத்தில் தாரணை, தியானம் இவைகளை அடிக்கடி பழக்கி வருவதன் மூலம் சரீரத்திற்கும் மனத்திற்குமுள்ள சம்பந்தம் முற்றிலும் குன்றி யோகாங்கானுஷ்டானத்தில் சக்தி யேற்படும் என்பதில் யாதுமாக்ஷேபமில்லை என்பதாம். (எ-று.)

குறிப்பு:—வியாஸ பாஷ்யத்தில் तस्मादेकमनेकार्थमवस्थितं चित्तं (தஸ்மாதேகமனேகார்த்தமவஸ்திதம்சித்தம்) ஆனதுபற்றி ஒன்றாயும், அனேக பிரயோஜன முள்ளதாயும், நிலைத்த வுருவமுள்ளதாயும் சித்தமிருக்கின்றது.'' என்றதால் பொதுவாய் சித்தமென்பது (மனது) எங்குமொன்று தானென்றும் அந்தந்த ஜீவர்களின் கர்மங்களாகிற உபாதிகளால் வெவ்வேறாய்த் தோன்றுகின்றது என்றும் சொல்லியிருப்பதுடன், பின்னும் சித்தமானது நிலையற்றது அதாவது: க்ஷணிகமானது என்றும், ஒவ்வொரு சரீ

ரத்திலு முண்மையில் வெவ்வேறாகவே இருக்கின்றது என்றும் கூறும் வாதங்களை விரிவாய்மறுத்து மிருக்கிறார்.

(அ - கை) சித்தத்தைச் சுத்தஞ் செய்யாவிடில் அசூயை முதலிய தோஷங்களுதயமாகி விடும். அஸூயாதிகள் நிறைந்த சித்தத்தில் சமாதியோ, அதற்குரிய உபாயஸம்பத்தோ உண்டாவதில்லையாதலால் சித்தம் சுத்தமாவதற்குரிய உபாயங்களை உபதேசிக்கத் தொடங்குகிறார்

सू०॥ मैत्री, करुणा, मुदितोपेक्षाणांसुखदुःखपुण्यापुण्यविषयाणां भावनातश्चित्तप्रसादनम् ॥ ३३ ॥

(ஸூ) மைத்ரீ, கருணா, முதிதோ பேக்ஷாணாம்
ஸுக துக்க புண்யா புண்யவிஷயாணாம்
பாவநாத சித்தப்ரஸாதனம். (33)

(ப - ரை) सुख......णाम्—सुख=(ஸுக) ஸுகமுள்ளவர்கள் दुःख=(துக்க) துக்கமுள்ளவர்கள் पुण्य=(புண்ய) புண்யம் செய்கின்றவர்கள் अपुण्य=(பாப) பாபம் செய்கின்றவர்கள் இவர்களை विषयाणाम्=விஷயமாயுடைய मैत्री...णाम्—मैत्री=(மைத்ரீ)சினேகம் करुणा=(கருணா),தயை मुदिता=(முதிதா) சந்தோஷம் उपेक्षा=(உபேக்ஷா)ஔதாஸீன்யம் இவைகளுடைய भावनातः(பாவனாத:) சிந்தனத்தால் चित्तप्रसादनम्=(சித்தப்ரஸாதனம்) மனத்தெளிவானது [भवति=(பவதி) உண்டாகின்றது.]

(தா-ம்) சுகிகளிடத்து ஸ்னேஹத்தை எண்ணவேண்டும். இவ்விதம் பாவிப்பதால் பொறாமை என்ற சித்தத்திலுள்ள களங்கமானது விலகி விடுகிறது. துக்கிகளான பிராணிகளிடத்து கருணையை எண்ணவேண்டும். அதாவது நமக்குண்டான துக்கத்தைப் போக்கவேண்டுமென எவ்விதம் எண்ணுவோமோ இவ்விதமே பிறர் துக்கத்தையும் போக்கவேண்டுமென்ற சங்கற்பத்தைச் செய்யவேண்டும். இவ்வித மெண்ணுவதால் பிறர்க்கு அபகாரம் செய்யவேண்டுமென்ற அழுக்கானது சித்தத்தினின்

றும் விலகி விடுகின்றது. இவ்விதமே புண்யசீலர்களிடத்து ப்ரீதியைப் பாவிப்பதால் அஸூயை என்ற தோஷமானது மனத்தினின்றும் விலகிவிடுகின்றது. பாபிகளிடத்து ஔதாஸீன்யத்தை (நடுநிலையை) எண்ணுவதால் பொறாமை என்ற அழுக்கானது மனத்தினின்றும் விலகிவிடுகின்றது. ஆகவே ரஜோகுணத்தாலும், தமோ குணத்தாலு முண்டாகும் தோஷம் விலகிவிடவே சுத்த ஸத்வ குணமயமான தர்மமானது சித்தத்தி லுதயமாகி விடுகின்றது. இம்முறையில் ஸத்வகுணம் பெருகப் பெருக சித்தத்திலுள்ள விருத்திகள் (மாறுதல்கள்) முறையே குறைய வாரம்பமாகி விடுகின்றன. சித்தத்திலுள்ளமற்ற விருத்திகள் குறைந்தபொழுது சுத்த ஸத்வமயமான சித்தமானது இயற்கையில் நிலைபெற்று தெளிவு பெறுகின்றது. இவ்வித மியற்கையான நிலையையடைந்த சித்தமானது பின்னர் கூறப்படும் உபாயானுஷ்டானத்தால் ஏகாக்ர நிலையை யடைந்துவிடுகின்றது. ஆகவே மைத்ரீ முதலிய உபாயங்களை அனுபவத்திற்கொண்டு வரவேண்டுமென்றும், இந்த மைத்ரீ முதலிய உபாயங்களை யனுஷ்டிக்கத் தவறினால் சித்தம் நிலைபெறாதென்றும் இதனின்றும் பெறபட்டது. (எ-று.)

सू०॥ प्रच्छर्दनविधारणाभ्यां वा प्राणस्य ॥ ३४ ॥

(ஸூ)ப்ரச்சர்த்தன விதாரணாப்யாம்
வா ப்ராணஸ்ய (34)

(ப-ரை) **प्राणस्य**=(ப்ராணஸ்ய) வாயுவினுடைய **प्रच्छर्दनविधारणाभ्यां वा**—**प्रच्छर्दन**=(ப்ரச்சர்த்தன) உள்ளிருக்கும் வாயுவை யோக சாஸ்திரத்திற் சொல்லிய முறைப்படி வெளியில் விடுதல் **विधारण**=(விதாரண) உள்ளிழுத்த வாயுவை யோகசாஸ்திரமுறைப்படி கும்பகம் செய்தல் இவற்றாலாவது [**चित्तप्रसादो भवति**=(சித்தப்ரஸாதோ பவதி) மனதிற்குத் தெளிவு ஏற்படுகின்றது.]

(தா-ம்) ரேசகம், கும்பகம் இவற்றால் மனம் தெளிந்துவிடும் என்று இந்த ஸூத்திரத்தா லுபதேசிக்கப்பட்டது. இங்கு ரேசகம், கும்பகம் என்ற இவ்விரண்டை மட்டுமே சொல்லியிருந்

தபோதிலும் முதலில் ரேசகத்தையும், பிறகு பூரகத்தையும், அதன் பிறகு கும்பகத்தையும் செய்யவேண்டும். இவ்விதமே

इन्द्रियाणां बलंप्राणाः तेषां यत्नेन निग्रहात् ।
विक्षेपहेतवोऽक्षाणां दह्यन्ते दोषराशयः ॥

"இந்திரியங்களின் வலுவே பிராணன்களாகும். அப்பிராணங்களை முயர்ச்சி செய்து நிக்ரஹம் செய்வதால் இந்திரியங்களுடைய விக்ஷேபகாரணங்களான தோஷ ராசிகள் நாசமடைந்து விடுகின்றன" என்றதால் ஸ்மிருதியிலு முபதேசிக்கப்பட்டிருக்கிறது. அல்லது **प्रच्छर्दन** என்றால் ரேசகமென்றும் **विधारण** என்றால் பூரகம் என்றும் பொருள்கொண்டு ரேசகம் பூரகம் இவ்விரண்டையும் பழக்கி வருவதாலேயே சித்தம் பிரஸன்னமாகி விடும் என்றும் பொருள் கொள்ளலாம். இவ்விதமே வஸிஷ்ட ஸம்ஹிதை முதலிய கிரந்தங்களில் "ரேசகம், பூரகம் இவ்விரண்டினுலுமே சித்தப்ரஸாத முண்டாகிவிடும்" என்றதாலுபதேசிக்கப்பட்டிருக்கிறது. இந்த சூத்திரத்தில் "விகல்பம்" என்ற அர்த்தமுள்ள "வா" என்ற பதம் போடப்பட்டிருப்பதைக் கொண்டு 33-வது சூத்திரத்திற் சொல்லிய மைத்ரீ முதலியவற்றினுலாவது, இந்த 34-வது சூத்திரத்திற் சொல்லிய ப்ராணுயாமத்தினுலாவது சித்தப்ரஸாதத்தை யடையலாமென்று பொருள் கொள்ளல் தகா. ஏனென்றால் 33-வது சூத்திரத்திற் சொல்லிய மைத்ரீ முதலிய ஸாதனங்கள் மேற்சொல்லப்படும் எல்லாவற்றோடும் சேர்ந்தே இருக்குமாதலால் இந்த 34-வது சூத்திரத்தால சொல்லப்படும் பிராணுயாமமானது பின்னர் சித்தப்ரஸாதத்திற்காக வுபதேசிக்கப்படும சாதனங்களோடு விகற்பங்களாக வுபதேசிக்கப்பட்டதாகக் கொள்ளல் வேண்டும். ஆகவே பிராணுயாமத்தினுலாவது பின்னர் சொல்லப்படும் உபாயங்களாலாவது சித்தப்ரஸாதத்தை யடையலாம் என்று பொருள் ஏற்பட்டது.

(அ - கை) சித்தப்ரஸாதத்திற்குரிய வேறு உபாயத்தை உபதேசிக்கிறுர்.

सू० ॥ विषयवतीवा प्रवृत्तिरुत्पन्ना मनसस्स्थिति निबंधनी ॥ ३५ ॥

(ஸூ) விஷயவதீ வா ப்ரவ்ருத்தி ருத்பன்னா மனஸ: ஸ்திதி நிபந்தனீ (35)

(ப - ரை) **उत्पन्ना**-(உத்பன்னா) உண்டான (**विषयवती**-(விஷயவதீ) யோகசாஸ்திரங்களிற் சொல்லியவிஷயங்களையுடையதான **प्रवृत्तिः**-(ப்ரவருத்தி:) பிரவிருத்தியானது **मनसः**-(மனஸ:) மனத்தினுடைய **स्थितिनिबंधनी**=(ஸ்திதிநிபந்தனீ) அசைவற்ற நிலைக்குச் சாதனமாகின்றது.

(தா - ம்) *தாரணை, தியானம், ஸமாதி இம்மூன்றிற்கும் ஸம்யமம் எனப்பொதுப் பெயரிடப்பட்டிருக்கிறது. ஆகவே நாஸிகையின் நுனியில், அதாவது இரண்டு புருவங்களின் நடுவில் தாரணை, தியானம் ஸமாதி என்ற இம்மூன்றையும் செய்வதால் திவ்யகந்தானுபவ முண்டாகின்றது. இதுவே கந்தரூபமான விஷயமுள்ள பிரவிருத்தியாகும். இது கந்தவதீப்ரவ்ருத்தி எனப்படும். இவ்விதமே நாக்கின் நுனியில் ஸம்யமம் செய்வதால் திவ்யரஸானுபவ முண்டாகின்றது. இது ரஸப்ரவ்ருத்தி எனப்படும். தாலுவில் (உள்மோவாய் கட்டையில்) ஸம்யமம் செய்வதால் திவ்ய ரூபானுபவ முண்டாகின்றது. இது ரூபப்ரவிருத்தி எனப்படும். நாக்கின் நடுவில் ஸம்யமம் செய்வதால் திவ்ய ஸ்பர்சானுபவ முண்டாகின்றது. இது ஸ்பர்சபிரவிருத்தி எனப்படும். நாக்கின் மூலத்தில் அதாவது நாக்கின் அடியில் ஸம்யமம் செய்வதால் திவ்ய சப்தானுபவம் உண்டாகிறது இது (சப்தப்ர விருத்தி) எனப்படும். இவ்விதப் பிரவிருத்திகள் உண்டானதும், சித்தமானது அந்தந்த விஷயங்களில் நிலை பெறுகின்றது. அதனின்றும் சாஸ்திரங்களிற் சொல்லிய ஸாதனங்களில் ஸம்சயம் விலகிவிடுகின்றது. பயம், ஸம்சமயம் முதலியன விலகவே சாஸ்திரங்களில் சொல்லிய விவேக க்யாதி முதலிய பலன்களில் நம்பிக்கை யேற்பட்டு அவ்வழியில் மனத்திற்குத் திருட—

* 3-வது பாதம் 1, 2, 3, 4-வது ஸூத்திரங்களில் முறையே இவற்றின்பொருள் விளக்கப்பட்டிருக்கிறது. அங்கு அதைக் காண்க.

ப்ரவிருத்தியுண்டாகின்றது. ஆகவே சாஸ்திரங்களில் மனிதனு டைய க்ஷேம லாபத்திற்காக உபதேசிக்கப்பட்டவை யாவும் உண்மை தானுயினும் அவ்விஷயங்களுள் யாதானுமொன்றை அனுபவத்திற் கொண்டுவர முயற்சி செய்வோமாயின் அதனின் றும் சாஸ்திரங்களிற சொல்லிய எல்லா விஷயங்களிலும் நம் பிக்கை ஏற்பட்டு விவேகக்யாதி வரையுள்ள பலன்களை யடைந்து விடலாமென்பதில் யாதும் தடையில்லை என இதனு லுபதேசிக் கப்பட்டதா யறியவேண்டும். இவ்விதமே வியாஸ பாஷ்யத்திலும்

यद्यपि तत्तच्छास्त्रानुमानाचार्योपदेशैरवगतमर्थतत्वं सद्भूतमेव भवति, एतेषां यथाभूतार्थप्रतिपादनसामर्थ्यात्। तथापि यावदेकदेशोऽपि न स्वकरणसंवेद्यो भवति तावत्सर्वं परोक्षमिवापवर्गादिषु सूक्ष्मेष्वर्थेषु न दृढां बुद्धिमुत्पादयन्ति। तस्माच्छास्त्रानुमानाचार्योपदेशोपोद्बलनार्थमेवाऽवश्यं कश्चिदर्थविशेषः प्रत्यक्षीकर्तव्यः। तत्र तदुपदिष्टार्थैकदेशप्रत्यक्षत्वे सति सर्वं सूक्ष्मविषयमपि आ अपवर्गाच्छ्रद्धीयते। एतदर्थमेवेदं चित्तपरिकर्म निर्दिश्यते

என்றதா லுபதேசிக்கப்பட்டிருக்கிறது. சந்திரன், ஸூரியன், கிரஹங்கள், ரத்னம், தீபரச்மி இவைகளில் ஸம்யமம் செய்தலும் முற்கூறிய முறைப்படி "விஷயவதீப்ரவ்ருத்தி:" என்றே சொல் லப்படும். ஆகவே அணியதமான விருத்திகளி லப்யாஸம் செய்த லால் வசீகார முண்டாவதிலிருந்து நியதமான அந்தந்த விஷயங் களின் வசிகாரத்தை யடைந்து கொள்வதற்கு இதுமிகவு முப யோகமாகவே ஆகிவிடுகின்றது. இதனின்றும் சிரத்தை, வீர்யம், ஸ்மிருதி, ஸமாதி இவைகள் இவனுக்கு எவ்விதத்தடையுமின்றி சித்தித்து விடுகின்றன என்பதில் யாதும் தடையில்லை. (எ - று)

குறிப்பு:—இந்தச் சூத்திரத்தில் நாஸிகாக்ரம் முதலிய விடங்களில் சொல்லிய ஸமாதியால் திவ்யகந்தம் முதலியவற்றின் அனுபவ முண்டாவதாகக் கூறியதைச் சாஸ்திரோபதேசத்தி னின்றும் அறியவேண்டுமே யொழிய யுக்தியைக் கொண்டு இது இவ்வித முண்டாகலாம் என்று ஊஹிப்பதற்கு இடமில்லை என வாசஸ்பதி மிச்ரர் தமது உரையில் சொல்லியிருக்கிருர்.

8

(அ - கை) சித்தம் நிலைபெறுவதற்குரிய மற்றொருபாயத்தை யுபதேசிக்கிறார்.

सू०। विशोका वा ज्योतिष्मती ॥ ३६ ॥

(ஸூ) விசோகாவா ஜ்யோதிஷ்மதீ (36)

(ப - ரை) **विशोका** = (விசோகா) **वि**=(வி) விலகின **शोका** = (சோகா) ரஜோகுணத்தின் பரிணாமமான துக்கத்தையுடையதான, அதாவது: துக்கமற்ற **ज्योतिष्मती**=(ஜ்யோதிஷ்மதீ) அதிக ஸாத்விக பிரகாச முள்ளதாயிருக்கிற **प्रवृत्तिः**=(ப்ரவ்ருத்தி:) பிரவிருத்தியானது (மனத்திற்கு நிலையை யுண்டாக்குகின்றது.)

(தா - ம்) வயிற்றிற்கும், மார்புக்கும் நடுவில் எட்டிதளமுள்ளதாயும், தலைகீழாயும் ஓர் பத்மம் தொங்குகின்றது. இதுவே ஹிருதயம் எனப்படும். அந்தப் பத்மத்தை ரேசக ப்ராணயாமாப்யாஸத்தால் ஊர்த்வமுகமாகச் செய்துகொண்டு அந்தப் பத்மத்தில் சித்தத்தை நிருத்த வேண்டும். பிறகு அப்பத்மத்தின் நடுவில் ஜாகரிதஸ்தானமான அகாரம் சூரியமண்டலம் இவையும், அதற்கு மேல்பாகத்தில் ஸ்வப்னஸ்தானமான உகாரம் சந்திரமண்டலம் இவையும், அதற்கு மேற்பாகத்தில் ஸுஷுப்திஸ்தானமான மகாரம் வன்ஹிமண்டம் இவையும், அதற்குமேல் பாகத்தில் பரமவ்யோம வடிவமான பிரும்ம நாதம், அர்த்தமாத்திரை யுருவமுள்ள துரீயஸ்தானம் இவையு மிருப்பதாக யோகிகள் அனுபவிக்கின்றனர். அந்த ஹிருதய பத்மத்தின் தாதில் ஊர்த்வ முகமாயும், முற்கூறிய சூரியாதி மண்டலத்தின் நடுவை யடைந்ததாயும் பிரும்மநாடி என்றொரு நாடி இருக்கிறது. ஸுஷும்ணை என்ற நாடியானது அதற்கு மேலும் செல்லுகின்றது. இத்தகைய ஸுஷும்ணை நாடிக்கும் வெளியிலுள்ள ஸூரியாதி மண்டலங்களுக்குமே சம்பந்தமிருக்கிறது. ஆகவே அத்தகைய ஸுஷும்ணை நாடியே சித்தத்திற்குச் சொந்த ஸ்தானமாகும். அவ்விடத்தில் சித்தத்தை நிருத்துகின்ற யோகிக்கு சித்தத்தில் ஓர்வித பிரகாசமுண்டாகின்றது. அந்தப் பிரகாசமானது ஆகாசம்போல வியாபக மாயுள்ளது. அவ்விடத்தில் சித்தத்

திற்கு நிலைத்ததும் களங்க மற்றதுமான ஸ்திதி ஏற்பட்டவுடன் சூரியனுடைய பிரபை போலும், இவ்விதமே சந்திரன், கிரஹங்கள், ரத்னங்கள் இவைகளின் ஒளிபோலும் தோற்றத்தை யடைகிறது. இதுவே அஸ்மிதை என்ற தத்துவத்தின் காரியமான மனத்தில் செய்யும் ஸமாதியாகும். இவ்விதமே சித்த காரணமான அஸ்மிதை என்ற தத்துவத்திலேயே ஸமாதி செய்யலாம். அவ்விதம் அஸ்மிதையில் ஸமாதி செய்வதால் ரஜஸ், தமஸ் இவைகளாலுண்டாகும் அலைகள்போன்ற சாஞ்சல்யம் முற்றிலுமற்று விடுவதுடன் சித்தமானது அஸ்மிதையோடு அஸ்மிதையாகவாகி விடுகின்றது. அதாவது: வேறு எந்த விதமான தோற்றமுமற்றதாயாகி விடுகின்றது.

சங்கை—ஆத்ம ஸாக்ஷாத் காரமுண்டாகும் விஷயத்தில் மேற்சொன்ன சித்தத்தின் நிலை எவ்வித முபயோகப்படும் எனின்?

உத்தரம்—கூறுவாம். அஸம் ப்ரக்ஞாத ஸமாதிக்குக் காரணமான பரவைராக்ய முண்டாவதற்கு இது முக்கிய ஸாதனமாகும். இம்மாதிரியான ஸாக்ஷாத்காரம் வேறிடத்தில் சித்தத்திற்குண்டாகாவிடில் மித்யாக்ஞான வாஸனையானது வேறுடன் நாசமாகாதாகையால், அம்மித்யாக்ஞானத்தை நாசம் செய்யவும் அதன் வாயிலாக பரமாத்மாவினிடம் சித்தத்தைச் செலுத்தவும் இது உபயோகப்படும் என்று கொள்ளவும். (எ - று)

(அ - கை) மனது நிலை பெறுவதற்குரிய வேறு ஸாதனத்தை யுபதேசிக்கிறார்.

सू०। वीतरागविषयं वा चित्तम् ॥ ३७ ॥

(ஸூ) வீதராக விஷயம் வா சித்தம் (37)

ப - ரை) **वीतरागविषयम्**—(வீதராக விஷயம்) **वीत** - (வீத) விலகின **राग**=(ராக) ஆசையையுடையவர்களின் சித்தத்தை **विषयम्**=(விஷயம்) விஷயமாகவுடைய, அதாவது: அச்சித்தத்தைத் தியானிக்கின்ற **चित्तं**=(சித்தம்) சித்தமானது [**स्थितिपदं भवति** - (ஸ்திதிபதம்) நிலைபெற்றதாக வாகின்றது.]

(தா - ம்) வியாஸர், சுகர் முதலியோர்களின் ஆசையற்ற சித்தத்தை இடைவிடாது தியானித்து வருபவனுடைய சித்தமானது நிலைபெற்றிருத்தலை யடைந்த தாகவாகும். காமுகனுடைய சித்தத்தையே எப்பொழுதும் தியானித்து வருகிற சித்தமானது தானும் அதிகம் காமனையை யடைந்து விடுகின்றது என்பது எவ்விதமோ அவ்விதமே இவ்விஷயத்திலு மறிதல் பொருந்தும்,

(அ - கை) சித்தம் நிலை பெறுவதற்குரிய வேறு காரணத்தை யுபதேசிக்கிறார்.—

सू०। स्वप्ननिद्राज्ञानालंबनं वा ॥ ३८ ॥

(ஸூ) ஸ்வப்ன நித்ராக்ஞானாலம்பனம்வா (38)

(ப - ரை) स्वप्न...नं, वा=(ஸ்வப்ன..... நம், வா) स्वप्न=(ஸ்ப்ன) ஸ்வப்னத்திலும் निद्रा=(நித்ரா) ஸுஷுப்தியிலும் ज्ञान=(க்ஞன) அறியப்பட்ட வஸ்துவை आलंबनं=(ஆலம்பனம்) விஷயீகரித்த, அதாவது: தியானம் செய்கின்றதாகவாவதுள்ள चित्तम्=(சித்தம்) மனது [स्थितिपदं=(ஸ்திதிபதம்) நிலைத்து நிற்றலை யடைந்ததாக भवति= (பவதி) ஆகின்றது.]

(தா - ம்) ஸ்வப்னமும், ஸுஷுப்தியும், ஸாத்விகம், ராஜஸம், தாமஸம் என மூன்று வகைப்படும். அவற்றுள் சுத்த ஸத்துவமயமாயும் மிக்கமிக்க ரமணீயமாயு முள்ள ஆண்டவனுடைய ஸ்ரீமூர்த்தியை ஆவலுடன் பூஜிப்பதாக ஸ்வப்னங் கண்டு உடன் விழித்து எழுந்ததும் ஸ்வப்னத்தில் கண்ட ஆண்டவனுடைய ஸ்ரீ மூர்த்தியை இடைவிடாது தியானித்து வருவதாலோ, அல்லது ஸாத்விகமான ஸுஷுப்தியில் ஏற்படும் ஸுகானுபவத்தைத் தூங்கி எழுந்தபின்னர் மனத்தால் சிந்தித்து வருவதாலோ சித்தமானது நிலையை பெற்றுவிடும். ஆகவே இவ்விரண்டு விதமான அப்யாஸத்தால் சித்தத்தை நிலைக்கும்படி செய்துவிடலாம் என்பது இதனின்றும் பெறப்பட்டது.

(அ - கை) சித்தம் நிலைப்பதற்குரிய வேறு உபாயத்தை உபதேசிக்கிறார்.

सू०। यथाभिमतध्यानाद्वा ॥ ३९ ॥

(ஸூ) யதாபிமத த்யாநாத்வா. (39)

(ய - ரை) **यथाभिमतध्यानात्, वा**=(யதாபிமத த்யஞத்,வா) **यथाभिमत**=(யதாபிமத) *தனக்குப் பிடித்தமான ராம - கிருஷ்ண - சிவ - ஸ்கந்தாதி ரூபங்களுமொன்றை* **ध्यानात्, वा**=(த்யாஞத்வா) *தியானம் செய்வதினின்றுவது (சித்தம் நிலை பெறுகின்றது.)*

(தா - ம்) ஒருவனது சித்தமானது நிலைபெறுவதற்குச் சாஸ்திரங்களிற் பலவழிகள் உபதேசிக்கப் பட்டிருக்கின்றன. அவற்றுள் சிலவை ஆந்தரமாயும், சிலவை பாஹ்யமாயு மிருக்கின்றன. 34வது ஸூத்திரம் முதல் 38வது ஸூத்திரம் முடியவுள்ள 5 ஸூத்திரங்களாலுபதேசிக்கப் பட்டவைகள் ஆந்தரமார்க்கங்களாகும். அதாவது: சரீரத்திற்குப் புறம்பாயுள்ளதைப் பற்றது சரீரத்திலுள்ள விஷயங்களையே வுடையதாகவாகும். இந்த 39வது ஸூத்திரத்தால் சரீரத்திற்கு வெளியிலுள்ள ராம - கிருஷ்ண - சிவஸ்கந்தாதி ரூபங்களைச் சாஸ்திரங்களிற் சொல்லிய லக்ஷணப்படி விக்கிரஹாதிகளிலமைத்து அம் மூர்த்தியில் இடைவிடாது மனத்தை நிருத்தி வருதல் என்ற பாஹ்யோபாயம் உபதேசிக்கப்பட்டது. (எ - று)

(அ - கை) இதுவரைச் சொல்லிய உபாயங்களால் சித்தமானது நிலைபெற்று விட்டதெனக் கண்டு கொள்வதற்குரிய ஓர் அடையாளத்தை உபதேசிக்கிறார்.

सू०। परमाणु-परममहत्वान्तोऽस्य वशीकारः ॥ ४० ॥

(ஸூ) பரமாணு பரமமஹத்வாந்தோ அஸ்ய வசீகார: (40)

(ப - ரை) **अस्य**=(அஸ்ய) *ஸூக்ஷ்மவிஷயத்திற் பிரவேசித்த இந்தச் சித்தத்திற்கு* **परमाणु-परममहत्वान्तः** = (பரமாணு-பரமமஹத்வாந்த:) **परमाणु**=(பரமாணு) *பரமாணுவையும்* **परममहत्व**=(பரம மஹத்வ)*மஹாமேருவையும்* **अन्तः**=(அந்த:)*முடிவாகவுடைய[?]தான*

वशीकारः-(வசீகார:) தடங்குதலில்லாமையானது (வசிகாரம் என்ற வைராக்யம் என்று நாகோஜி பட்டர் சொல்லுகிறார்) [**भवति**-(பவதி) உண்டாகின்றது.]

(தா - ம்) பரமாணுவரையுள்ள ஸூக்ஷ்ம வஸ்துக்களிலும், பரம மஹத்பரிமாணமுள்ள ஆகாசம் முடிவாகவிருக்கின்ற ஸ்தூல வஸ்துக்களிலும் மனத்திற்குத் தங்குத் தடங்குதலின்றி பிரவேச மேற்படுமாயின் அதைக்கொண்டு சித்தம் நிலைத்து விட்டதாகக் கருதிசித்தம் நிலைபெறுவதற்குரிய உபாயானுஷ்டானத்தைநிருத்திவிடலாம் (எ - று)

(அ - கை) நிலைபெற்ற சித்தத்திற்குண்டாகும் ஸாக்ஷாத்காரமானது எத்தகைய ரூபமுள்ளது ? அதில் தோன்றும் விஷயம் யாது? என்பதை இந்தச் சூத்திரத்தா லுபதேசிக்கிறார்.

सू०। क्षीणवृत्तेरभिजातस्येव मणेर्ग्रहीतृग्रहणग्राह्येषु तत्स्थ-तदंजनता-समापत्तिः ॥४१॥

(ஸூ) க்ஷீணவ்ருத்தே: அபிஜாதஸ்யேவமணே: க்ரஹீத்ரு க்ரஹணக்ராஹ்யேஷு தத்ஸ்த ததஞ்ஜனதாஸமாபத்தி: (41)

(ப-ரை) **क्षीणवृत्तेः**-(க்ஷீணவ்ருத்தே:) தேய்ந்த ராஜஸதாமஸ விருத்திகளையுடைய [**चित्तस्य**-(சித்தஸ்ய) மனத்திற்கு [**अभिजातस्य**=(அபிஜாதஸ்ய) இயற்கையில சுத்தமான **मणेः**, **इव** = (மணே:, இவ) ஸ்படிகம் முதலிய மணிக்குப் போல (**ग्रहीतृग्रहणग्राह्येषु**—(க்ரஹீத்ருக்ரஹண க்ராஹ்யேஷு) **ग्रहीतृ**-(க்ரஹீத்ரு) ஆத்மாவினிடத்தும், **ग्रहण**=(க்ரஹண) இந்திரியங்களிடத்தும் **ग्राह्य**=(க்ராஹ்ய) விஷயங்களிடத்தும் **तत्स्थ, तदंजनता, समापत्तिः**=(தத்ஸ்தத தஞ்ஜனதாஸமாபத்தி:) **तत्स्थ**=(தத்ஸ்த) அவற்றிலேயே ஏகாக்ரதாவடிவமாயும் **तदञ्जनता**=(ததஞ்ஜனதா) மேற்கூறிய விஷயம் வடிவமாயே இருத்தல் வடிவமாயுமுள்ள **समापत्तिः**=(ஸமாபத்தி:) ஸமாபத்தி யானது அதாவது: மேற்கூறிய விஷயங்களின் ஸாக்ஷாத்காரமானது [**भवति**-(பவதி) உண்டாகின்றது.]

இயற்கையில் களங்கமற்ற ஸ்படிகம் முதலிய மணியானது தனதருகிலிருக்கும் செம்பரத்தைப் பூ முதலியவற்றின் பிரதி பிம்பத்தால் எவ்விதம் சிவந்ததானத் தோற்றத்தை யடைகின்றதோ, இவ்விதமே இயற்கையில் சுத்த ஸத்துவகுண வடிவமுள்ளதும், இடையில் நேர்ந்த ரஜோ குணதமோகுண ஸம்பந்தமற்றதுமான சித்தத்திற்கு முதலில் கிராஹ்யமான விஷயங்களில் பிரவேசமுண்டாகி பின்னர் மெள்ள மெள்ள அவ்விஷயங்களின் தோற்றமே அதிகமாகி சித்தமானது அவ்விஷயங்களைவிடத் தனித் தோற்றத்தை யடையாததாகவாகி விடுகின்றது. இதுவே ஸ்தூலமானக் கிராஹ்யஸமாபத்தி (ஸமாதி) எனப்படும். இங்கு கூறிய கிராஹ்யம் என்ற விஷயமானது, ஸ்தூலமென்றும், ஸூக்ஷ்மமென்றும், ஸூக்ஷ்மதரம் (மிக்க ஸூக்ஷ்மம்) என்றும் மூன்றுவகைப்படும். அவற்றுள் ஐந்து மஹாபூதங்கள் ஸ்தூல விஷயங்களென்றும், பஞ்சதந்மாத்திரைகள் ஸூக்ஷ்மவிஷயங்களென்றும், மூலபிரகிருதியானது மிக்க ஸூக்ஷ்மமான விஷயம் என்றும் சொல்லப்படும். ஆகவே பஞ்சமஹா பூதம் முதலிய விஷயமாக சித்தத்திற்குண்டாகும் விருத்தியானது (மாறுதலானது) கிராஹ்ய ஸமாதி என்றேற்பட்டது. இத்தகைய ஸமாதி யுண்டான பின்னர் சித்தத்திற்கு கிரஹணங்களான (அறிவுண்டாவதற்குச் சாதனங்களாகவான) இந்திரியங்களில் பிரவேச முண்டாகி மெள்ள மெள்ள இந்திரியங்களாகிற விஷயங்களின் தோற்றமே அதிகமாகி சித்தமானது அவ்விஷயத்தைவிடத் தனியான தோற்றத்தை யடையாத தாயாகி விடுகின்றது. இதுவே ஸ்தூலமான க்ரஹணஸமாபத்தி (ஸமாதி) எனப்படும்.

இங்கு கூறிய கிரஹணம் என்ற விஷயம் கர்மேந்திரியம் 5, ஞானேந்திரியம் 5, மனஸ், புத்தி, அஹங்காரம் 3, ஆக 13 விதங்களாகும். இப்பதின் மூன்றும் அஹம்தத்துவத்தின் காரியங்களாக வுள்ளனவென்றும் கொள்ளவேண்டும். இவற்றிலுண்டாகும் ஸமாதியானது கிரஹணஸமாதி என்று கூறப்பட்டதா யறியவும். இத்தகைய ஸமாதி யுண்டானதும் சித்தத்திற்கு க்ரஹீதாவென்ற ஆத்மாவினிடத்தில் பிரவேசமுண்டாகி மெள்ள மெள்ள நாளடைவில் பழக்கத்தால் ஆத்மாவாகின்ற விஷயத்தின் தோற்

றமே அதிகமாகி சித்தமானது அவ்விஷத்தைவிடத் தனியாகத் தோற்றத்தை யடையாததாயாகி விடுகின்றது. இதுவே ஸூக்ஷ்மமான கிரஹீத்ருஸமாதி எனப்படும். (எ - று)

குறிப்பு—இந்தச் சூத்திரத்தில் ग्रहीतृ ग्रहण, ग्राह्येषु என முதலில் கிரஹீதாவையும், பின்னர் கிரஹணத்தையும், அதற்குப் பின்னர் கிராஹ்யத்தையும் படித்திருக்கிறாராயினும் "பாடக்ரமாத் அர்த்தக்ரமோ பலீயான்" (பொருள்களைப் போதிக்கின்ற பதங்களின் கிரம மூல மேற்படுகின்ற கிரமத்தினும், பிரயோஜனத்தை முன்னிட்டு ஏற்படுகின்ற கிரமம் மேலானதாகும்) என்ற நியாயப்படி முதலில் கிராஹ்யத்தையும், பின்னர் கிரஹணத்தையும், அதற்குப் பின்னர் கிரஹீதாவையும் வைத்துத் தாத்பர்யம் எழுதியிருக்கிறோம் என்று கண்டு கொள்ளவேண்டும்.

(அ - கை) இதுவரைக் கூறிய ஸமாதியானது ஸவிதர்க்கம், நிர்விதர்க்கம், ஸவிசாரம், நிர்விசாரம் என நான்கு விதமாகும் என உபதேசிப்பான் தொடங்கி இந்த 42வது ஸூத்திரத்தால் ஸவிதர்க்க ஸமாதியின் லக்ஷணத்தையு பதேசிக்கிறார்.

सू०। तत्र शब्दाऽर्थज्ञानविकल्पैस्संकीर्णा सवितर्का समापत्तिः ॥४२॥

(ஸூ) தத்ரசப்தார்த்த க்ஞான விகல்பை: ஸங்கீர்ணா ஸவிதர்க்கா ஸமாபத்தி: (42)

(ப - ரை) तत्र-(தத்ர) முற்கூறிய ஸமாதிகளுள் शब्दार्थज्ञानविकल्पैः- (சப்தார்த்தக்ஞானவிகல்பை:) சப்தம், அர்த்தம், அர்த்தத்தைப் பற்றியக் ஞானம் இவற்றின் அபேதப்ரமத்துடன் संकीर्णा-(ஸங்கீர்ணா) ஒப்பான समापत्तिः-ஸாக்ஷாத்காரமானது सवितर्का-ஸவிதர்கம் எனப்படும்.

(தா - ம்) 44வது ஸூத்திரத்தால் ஸூக்ஷ்மவிஷயமான ஸமாதியைப் பிரித்து உபதேசிக்கப் போவதால் இந்த 42,43வது ஸூத்திரங்களா லுபதேசிக்கப்படும் ஸமாதிகள் ஸ்தூலஸமாதிகளென்றே கொள்ளவேண்டும்.

शब्दज्ञानानुपाती वस्तुशून्यो विकल्पः ॥ (पा. १. सू० ९)

என்றதால் விகல்ப க்ஞானத்தின் ஸ்வரூபமுபதேசிக்கப் பட்டிருக்கின்றது. "பசு" என்றதொரு சப்தத்தை எடுத்துக் கொள்வோம். "பசு" என்ற இந்தச் சப்தமானது ஒரு பதத்தை யும், அதன் பொருளான மாட்டையும், அம்மாட்டைப்பற்றிய சித்தத்திலுண்டான ஞானத்தையும் குறிக்கும். "பசு" என்ற சப்தமும், "பசு"என்ற அர்த்தமும் (மாடும்)"பசு" என்ற க்ஞான மும் (அறிவும்) ஒன்றுக்கொன்று உண்மையில் வேறுபட்டவை களேயன்றி இம்மூன்றும் ஒன்ருகாது. இவ்விதம் இம் மூன்றும் வேருக விருக்க இவற்றின் அபேதத்தை விஷயீகரிக்கின்ற விகல்பக்ஞானத்திற்கு ஒப்பான ஸமாதியானது ஸவிதர்க்க ஸமா திஎனப்படும். விதர்க்கம் என்ருல் உண்மையில் பொருத்தமில் லாதது என்று பொருள். ஸவிதர்கம் என்ருல் உண்மையில் பொருத்தமில்லாத விஷயத்தையுடையது என்றேற்பட்டது.

"பசு" என்ற சப்தத்தைக் கேட்டவுடன் "பசு என்ற சப் தம், பசு என்ற அர்த்தம், பசு என்ற க்ஞானம்" என மூன்று வித விகல்பங்களுண்டாகின்றன. "பசு என்ற சப்தம்" என்ற விகல்பமானது அர்த்தமான மாடு, அதைப்பற்றிய க்ஞானம் இவற்றுடன் "பசு" என்ற சப்தத்திற்கு அபேதத்தை விஷயீக ரிக்கின்றது.

"பசு என்ற அர்த்தம்" என்ற விகல்பமானது "பசு" என் றபதம், அர்த்தமான மாட்டைப்பற்றிய க்ஞானம் இவற்றுடன் அர்த்தமான மாட்டிற்கு அபேதத்தை விஷயீகரிக்கின்றது. "பசு என்ற க்ஞானம்" என்ற விகல்பமானது "பசு" என்ற சப்தம், "மாடு" என்ற பொருள் இவற்றுடன் பசு க்ஞானத்தின் அபேத த்தை விஷயீகரிக்கின்றது. அபேதத்தை விஷயீகரிக்கின்றது என்ருல் மேற்கூறியவிஷயங்கள் ஒன்ருகவே தோன்றுகின்றன என்று பொருள்.

ஆனல் த்வனியின் பரிணும (மாறுதலான) மான சப்தத்தி ற்கு உதாத்தம் முதலியன தர்மங்களாகும். ஜடத்தன்மை, கார்

யத்திற்கு உபயோக மாயிருத்தல் முதலியன அர்த்தத்தின் தர்மங்களாகும். பிரகாசம், ஆகிருதியற்றிருத்தல் முதலியன க்ஞானத்தின் தர்மங்களாகும். ஆகவே தத்தமது தர்மங்களால் தர்மியான சப்தம், அர்த்தம், ஞானம் இம் மூன்றும் உண்மையில் வேறானவைகளென்பது சுருதி, யுக்தி, அனுபவங்களால் அறியப்படுகின்றதாயாகும். ஆதலால் எந்த ஸமாதியில் சப்தம், அர்த்தம், ஞானம் இம்மூன்றும் வெவ்வேருகத் தோற்றத்தை யடையாது இம் மூன்றும் ஒன்றுடன் ஒன்ருய்க் கலந்ததாகவே அதாவது: அபின்னமாகவே, தோற்றத்தை யடையுமோ அந்தச் சமாதியானது ஸவிதர்க்க சமாதியாகும் என்றேறப்பட்டது.

(அ - கை) நிர்விதர்க்க ஸமாதியையுபதேசிக்கிருர்.—

ஸூ०। स्मृतिपरिशुद्धौ स्वरूपशून्येवाऽर्थमात्रनिर्भासा निर्वितर्का ॥४३॥

(ஸூ) ஸ்மிருதி பரிசுத்தெள ஸ்வரூப சூன்யேவ அர்த்த மாத்ர நிர்ப்பாஸா நிர்விதர்க்கா (43)

(ப - ரை) **स्मृतिपरिशुद्धौ** - (ஸ்மிருதி பரிசுத்தௌ) ஸங்கேத (சக்தி) ஸ்மிருதி விலகியபொழுது [**समाधिप्रज्ञा** = (ஸமாதிப்ரக்ஞா) ஸமாதிபிரக்ஞையானது] **स्वरूपशून्येव** - (ஸ்வரூபசூன்யேவ) **स्व**= (ஸ்வ) தனக்குரிய **रूप**-(ரூப) கிராஹகத்வம் என்ற பிரக்ஞாரூபத்தால் **शून्येव**-(சூன்யேவ) இல்லாததுபோல [**भूत्वा**-(பூத்வா) ஆகி **अर्थमात्रनिर्भासा**-(அர்த்தமா த்ரநிர்ப்பாஸா) அபேதமற்ற பசுமுதலிய க்ராஹ்யத்தோடு (அர்த்தத்தோடு) மட்டும் பிரகாசிக்கின்றதான [**समापत्तिः**-(ஸமாபத்தி:) ஸமாதியானது] **निर्वितर्का**=(நிர்விதர்க்கா) நிர்விதர்க்கமென [**उच्यते**=(உச்யதே) சொல்லப்படுகின்றது.]

(தா - ம்) "பசு" என்று சொல்லுமிடத்து "பசு" என்ற சப்தம், அதன் பொருளானமாடு, அதைப்பற்றிய அறிவு ஆகிய இம் மூன்றும் அபின்னங்களாகவே, அதாவது: இம்மூன்றும் உண்மையில் ஒன்றைவிட மற்றென்று வேறானது என்ற தோற்றமில்லாமல் ஒன்ருகவே தோற்றத்தை யடைகின்றதென முன்னர் சொல்லப்பட்டது. இவ்விதத் தோற்றம் ஏற்படுவதற்கு சங்கேதம் என்ற சக்திக்ஞானமானது காரணமாகின்றது. அதாவது

ஆண்டவன் உலகத்தைப்படைத்து அவ்வுலகிலுள்ள பசு முதலிய வஸ்துக்களை பிராணிகள் விவஹரிப்பதற்கு வேண்டி பற்பலபதங் களை வெளியிட்டு இன்ன சப்தம் இந்த வஸ்துவைக்குறிக்கும், அதாவது: இந்த சப்தத்தைக் கொண்டு இந்த வஸ்துவை யறியக் கடவது என ஆதியில் சப்தத்திற்கும் அதன் பொருளான வஸ்து வுக்கும் ஓர்வித சங்கேதத்தை ஏற்படுத்தியிருக்கிறார். இவ்விதம் ஆண்டவனால் ஆதியிலேற்படுத்தப்பட்ட சப்தத்திற்கும், அர்த்த திற்கு முள்ள சங்கேதமே சக்தி எனப்படும். இத்தகைய சங் கேதத்தை யொட்டியே பின்னர் உலகில் சப்தார்த்த வியவஹா ரமேற்படுகின்றது. இத்தகைய வியவஹாரம் நிகழுமிடத்து சப் தமோ, அர்த்தமோ அர்த்தத்தைப்பற்றிய அறிவோ உண்மை யில் வேருகவிருப்பதன் மூலம் இவைகள் ஒன்றுக்கொன்றுவேறு பட்டவைகள் என்ற க்ஞானத்தை யடையாமல் ஒன்றை மற்றொ ன்ருக வெண்ணுதல் என்ற அபேத பிரமத்தை யடைகிறேம் இவ்விதம் சப்தம் அர்த்தம், ஞானம் இவற்றின் அபேத பிரமத்து டன் உண்டாகும் சமாதியை ஸவிதர்க்க ஸமாதி என 42வது ஸூத்திரத்தாலுபதேசித்து இந்த 43வது ஸூத்திரத்தால் சப் தத்திற்கு மர்த்தத்திற்கு முள்ள சங்கேதம் என்ற அபேதக்கிர ஹமானது விலகிவிடும் பொழுது அர்த்தம் மட்டும் தோற்றத்தை யடைகின்றது. ஆகவே சுத்தமான அர்த்த மாத்திரத்தின் தோற் றத்தையுடைய ஸமாதியானது நிர்விதர்க்க ஸமாதியென இதனு லுபதேசிக்கப்பட்டது. இத்தகைய நிர்விதர்க்க ஸமாதியையே பரப்ரத்யக்ஷம் என்றும், யோகஜப்ரத்யக்ஷம் என்றும் சாஸ்திரங் கள் கூறுகின்றன. (எ - று)

குறிப்பு—பசு முதலிய அர்த்தங்கள் யாவும் பரமாணுக்க ளின் கூட்டங்களேயன்றி பரமாணுக்களைத் தவிர்த்து அவயவியா யும், நிலைத்த தாயுமுள்ள வஸ்துக்களே உலகிலில்லை எனச்சில பௌத்த சித்தாந்திகள் கூறுவதற்கு யோகஸூத்திரபாஷ்யத் தில் "பெரிதாயும் ஒன்ருயுமுள்ள குடமிருக்கின்றது" என்ற அனுபவமிருப்பதால் பௌத்த சித்தாந்திகள் சொல்லும் பர மாணு புஞ்ஜ வாதம் ஒப்பத்தக்கதில்லை என விரிவாய் மறுப்புக் கூறப்பட்டிருக்கிறது. இவ்விஷயமாய்ப் பின்னும் விரித்துக் கூறு

வதாலுல் கிரந்தம் விரிவடையும் என்றஞ்சி நாமதை விரிக்காது விடுக்கின்றனம்.

(அ - கை) 42, 43வது ஸூத்திரங்களால் ஸ்தூலமானவிஷயங்களேயுடைய ஸ்தூலஸமாதியை யுபதேசித்து இந்த 44வது ஸூத்திரத்தால் ஸூக்ஷ்மமான விஷயத்தையுடைய ஸூக்ஷ்ம ஸமாதியைச் சொல்லுவாரு் தொடங்கி, இநதச் சூக்ஷ்மமான ஸமாதியும் ஸவிசாரம், நிர்விசாரம் என இரண்டு விதமாகும் என உபதேசிக்கத் தொடங்குகிருர்—

सू०। एतयैव निर्विचारा सविचारा च सूक्ष्मविषया व्याख्याता ॥४४

(ஸூ) ஏதயைவ நிர்விசாரா, ஸவிசாரா சஸூக்ஷ்மவிஷயா வ்யாக்யாதா (44)

(ப - ரை) **एतयैव**=(ஏதயைவ) ஸ்தூலமான விஷயத்தையுடையதும் முன்னர் கூறப்பட்டதுமான ஸவிதர்க்க நிர்விகல்ப ஸமாபத்தியைக்கொண்டே **सूक्ष्मविषया**=(ஸூக்ஷ்மவிஷயா) பரமாணு முதலிய ஸூக்ஷ்ம வஸ்துக்களே விஷயமாயுடைய **सविचारा**=(ஸவிசாரா) ஸவிசாரம் என்றும், **निर्विचारा च**=(நிர்விசாராச) நிர்விசாரம் என்றும் சொல்லப்படும் **समापत्तिः** = (ஸமாபத்தி:) ஸமாதியானது **व्याख्याता**=(வ்யாக்யாதா) தெளிவாயுபதேசிக்கப்பட்டதாக [**भवति**=(பவதி) ஆகின்றது.]

(தா - ம்) ஸ்தூலமான பரிணமத்தையடைந்த குடம் முதலியவற்றில் தொடர்ந்திருக்கின்ற வைகளும், அவற்றின் உபாதான காரணங்களும், பஞ்சதந்மாத்திரைகளின் காரியங்களுமான பரமாணுக்கள் இந்தச் சூத்திரத்துள்ள ஸூக்ஷ்ம பதத்தால் குறிக்கப்படும். ஆகவே ஸூக்ஷ்மமான அந்த ப்பரமாணுக்களில் பரமாணுவாசக சப்தம், அதன் பொருளான பரமாணுக்கள், பரமாணுக்களேப் பற்றிய க்ஞானம் இவற்றின் அபேதத்தை விஷயீகரிக்கின்ற ஸமாதியானது ஸவிசாரம் என்றும், சப்தம், அர்த்தம், க்ஞானம் இவற்றின் அபேதத்தை விஷயீகரிக்காமல், அதாவது: இம்மூன்றையும் ஒன்ருக எண்ணுமல் ஸூக்ஷ்மமான

பரமாணுக்கள் மாத்திரத்தை விஷயமாயுடைய ஸாமாதியானது நிர்விசாரம் என்று முபதேசித்ததாயேற்பட்டது. (எ - று)

(அ - கை) ஸூக்ஷ்ம ஸமாதிக்கு விஷயமாவது பரமாணு மட்டுமல்ல, பின்னேயோவெனில் அதற்கு பஞ்சதந்மாத்திரை முதல் பிரகிருதி வரையுள்ள தத்துவங்களும் விஷயமாகலாம். ஆகவே அவற்றைப் பற்றிய ஸமாதியும் ஸூக்ஷ்மஸமாதி என்றே சொல்லப்படும் என இந்தச் சூத்திரத்தாலுபதேசிக்கிறார்.

ஸூ०। सूक्ष्मविषयत्वं चालिङ्गपर्यवसानम् ॥ ४५ ॥

(ஸூ) ஸூக்ஷ்ம விஷயத்வம் சாலிங்கபர்யவ ஸானம் (45)

(ப - ரை) [अस्याः समापत्तेः=(அஸ்யா:,ஸமாபத்தே:) மேற்கூறிய ஸமாதிக்கு]सूक्ष्मविषयत्वं च=(ஸூக்ஷ்மவிஷயத்வம்ச) ஸூக்ஷ்மமான விஷயத்தை யுடைத்தாயிருக்கும் தன்மையையும் अलिङ्ग-पर्यवसानम्=(அலிங்கபர்யவஸானம்) பிரதானத்தைமுடிவாக வுடையது.

(தா - ம்) பார்த்திவம், ஆப்யம், தைஜஸம், வாயவ்யம், நாபஸம் என பரமாணுக்கள் 5 வகைப்படும். இவற்றுள் முதலாவதானபார்த்திவ பரமாணுக்களுக்கு கந்ததந்மாத்திரை அஸாதாரண (தனிப்பட்ட) காரணமாகும். இவ்விதமே ஜலபரமாணுக்களுக்கு ரஸதந் மாத்திரையும், தைஜஸபரமாணுக்களுக்கு ரூபதந் மாத்திரையும், வாயுபரமாணுக்களுக்கு ஸ்பர்சதந் மாத்திரையும், ஆகாசபரமாணுக்களுக்கு சப்ததந் மாத்திரையும் தனிப்பட்ட காரணங்களாகும். இவ்விதம் அந்தந்த பரமாணுக்களுக்கு அந்தந்த தந் மாத்திரைகள் தனிக் காரணமாக ஆவதில் கந்தாதிதந் மாத்திரைகள் முக்கிய காரணங்களாகவும், மற்றவைகள் அங்கங்களாகவு மாகின்றன. அதாவது: பிருதிவீபரமாணுக்கள் ரஸதந்மாத்திரை, ரூபதந்மாத்திரை, ஸ்பர்சதந்மாத்திரை, சப்ததந்மாத்திரை இவற்றை அங்கமாயுடைய கந்ததந்மாத்திரையினின்று முண்டாகின்றன. இவ்விதமே ஜலபர

மாணுக்கள் ரூபதந்மாத்திரை, ஸ்பர்சதந்மாத்திரை, சப்ததந்மாத்திரை இவற்றை அங்கமாயுடைய (தனக்குள்ளடங்கியதாகவுடைய) ரஸதந்மாத்திரையினின்று முண்டாகின்றன. தைஜஸபரமாணுக்கள் ஸ்பர்சதந்மாத்திரை, சப்ததந்மாத்திரை இவற்றை அங்கமாயுடைய ரூபதந்மாத்திரையினின்று முண்டாகின்றன. வாயவ்யபரமாணுக்கள் சப்ததந்மாத்திரையை அங்கமாயுடைய ஸ்பர்சதந் மாத்திரையினின்று முண்டாகின்றன. இவ்விதமே நாபஸ பரமாணுக்கள் சப்தந்மாத்திரையினின்று முண்டாகின்றன.

இங்கு காரியங்களான பரமாணுக்களைவிட அவற்றின் காரணங்களான தந்மாத்திரைகள் ஸூக்ஷ்மங்கள் எனப்படும். இந்த தந்மாத்திரைகள் அஹம்தத்துவத்தினின்று முண்டாவதால் காரியங்களான தந்மாத்திரைகளைவிட அஹம்தத்துவம் ஸூக்ஷ்மம் எனப்படும். இந்த அஹம்த தத்துவம் மஹத்தத்துவத்தினின்று முண்டாவதால் காரியமான அஹம்தத்துவத்தை விட மஹத்தத்துவம் ஸூக்ஷ்மம் எனப்படும். இந்த மஹத்தத்துவம் பிரகிருதியினின்று முண்டாவதால் காரியமான மஹத்தத்துவத்தைவிட பிரகிருதி பரமஸூக்ஷ்மம் எனப்படும். ஆகவே பரமாணு முதல் பிரகிருதி முடியவுள்ள வஸ்துக்கள் ஒன்றைவிடமற்றொன்று சூக்ஷ்மங்களென்றே ஏற்படுவதால் இந்தச் சூத்திரத்தாலுபதேசிக்கப்பட்ட சூக்ஷ்ம விஷயமான ஸமாதியானது பிரகிருதிவரையுள்ள ஸூக்ஷ்மவஸ்துக்களை விஷயமாகக் கொண்ட ஸமாதி என்றே சொன்னதாகக் கொள்ளல் வேண்டும் (எ - று)

(அ - கை) இதுவரை ஸ்தூலமான விஷயத்தையுடையதாயும், ஸூக்ஷ்ம மானவிஷயத்தை யுடையதாயுமுள்ள 4வித ஸமாதிகள் உபதேசிக்கப்பட்டன. இந் நான்குவித ஸமாதிகளும் ''ஸம்பிரக்ஞாத ஸமாதிகள்'' என்று சொல்லப்படும் என இந்தச் சூத்திரத்தாலுபதேசிக்கிறார்.

सू०। ता एव सबीजस्समाधिः ॥ ४६ ॥

(ஸூ) தாஏவ ஸபீஜ: ஸமாதி: (46)

(ப - ரை) ताः एव-(தா: ஏவ) முற்கூறிய ஸமாதிகள்யாவுமே सबीजः=(ஸபீஜ:) ,பந்தஹேதுவான கிராஹ்யத்தையுடையதான समाधिः=(ஸமாதி:) ஸமாதியாகும். அதாவது ஸம்பிரக்ஞாத ஸமாதி எனப்படும்.

(தா - ம்) ஸவிதர்க்கம், நிர்விதர்க்கம், ஸவிசாரம், நிர்விசாரம் ஆகிய இந்நான்கு சமாதிகளிலும் ஆதியோடு அவித்தைவிலகி விவேகக்யாதி ஏற்பட்டு அதன்மூல மோக்ஷமுண்டாவதற்கு இடமில்லாமைபற்றி இந்நான்கு ஸமாதிகளும் ஸம்பிரக்ஞாத ஸமாதிகளென்றே கூறப்படும். (எ - று)

குறிப்பு—41வது ஸூத்திரத்திற் சொல்லிய கிரஹீத்ரு, க்ரஹணம், க்ராஹ்யம் இம்மூன்றுக்குள் கிராஹ்யத்தை ஸ்தூலம் என்றும், ஸூக்ஷ்மம் என்றும் இரண்டுவகையாகப் பிரித்து அவற்றுள் ஸ்தூலவிஷயமாக ஸவிதர்க்கம், நிர்விதர்க்கம் என இரண்டு ஸமாதியையும், ஸூக்ஷ்மவிஷயமாக ஸவிசாரம், நிர்விசாரம் என்ற ஸமாதியையும் 42, 43, 44, 45 என்ற இந்த நான்கு ஸூத்திரங்களாலுபதேசித்திருக்கிறார். 41வது ஸூத்திரத்திற் சொல்லிய மூன்றுக்குள் கிராஹ்யம் போக மீதமுள்ளது க்ரஹீதா, க்ரஹணம் இவ்விரண்டுமே. மேற்கூறிய க்ரஹீதா, க்ரஹணம் இவ்விரண்டையும் விஷயமாயுடைய ஸமாதியானது ஸவிகல்பம், நிர்விகல்பம் என்ற பேதத்தால் இரண்டுவிதமாகும். மேலும் க்ரஹணஸமாதியானது ஸானந்தம் (ஆனந்தத்துடன் கூடியது) என்றும், ஆனந்த மாத்திரம் என்றும் இரண்டுவிதமாகப் பிரிக்கப்படும். இரண்டாவதான கிரஹீத்ரு ஸமாதியும் ஸாஸ்மிதை (அஸ்மிதையுடன் கூடியது) என்றும் கேவல அஸ்மிதை என்றும் இரண்டுவகைப்படும். இவற்றுள் சப்தம் அர்த்தம், க்ஞானம் இவற்றுடன் கூடியது ஸவிகல்பம் என்றும், அர்த்தத்துடன் மட்டு முள்ளது நிர்விகல்பம் என்றும் முற்கூறியபடியே இங்கும் கண்டு கொள்ளவேண்டும்.

ஆகவே—கிராஹ்ய ஸ்தூல ஸமாதியில் ஸவிதர்க்கம், நிர்விதர்க்கம் என்ற பிரிவும், கிராஹ்யஸூக்ஷ்ம ஸமாதியில் ஸவிசாரம், நிர்விசாரம், என்ற பிரிவும், க்ரஹணஸமாதியில் ஸானந்தம்,

ஆனந்தமாத்ரம் என்றபிரிவும், க்ரஹீத்ரு ஸமாதியில் ஸாஸ்மிதா, கேவல அஸ்மிதா என்றபிரிவும் ஆக ஸமாதிகள் 8விதமாகும் என்றுபிரித்து உபதேசிக்கப்பட்டதாக வேற்பட்டது.

(அ - கை) இதுவரைச் சொல்லிய ஸமாதிகளுள் அதிசயித்த பலனுள்ளதாயிருப்பதுபற்றி நிர்விசார ஸமாதியே மேலானதாக வாகின்றது என்பதை இந்தச் சூத்திரத்தாலுபதேசிக்கிறார்.

सू०। निर्विचारवैशारद्ये अध्यात्मप्रसादः ॥ ४७ ॥

(ஸூ) நிர்விசார வைசாரத்யே அத்யாத்மப்ரஸாத: (47)

(ப - ரை) निर्विचारवैशारद्ये=(நிர்விசாரவைசாரத்யே) நிர்விசார ஸமாதிக்கு ஆதிக்யம் உண்டாகும் பொழுது अध्यात्म प्रसादः= (அத்யாத்ம ப்ரஸாத:) கிலேசவாஸனைகளற்ற சித்தத்தில் தெளிவானது - விவேக க்யாதியானது [भवति=(பவதி) உண்டாகின்றது]

(தா - ம்) நிர்விசார ஸமாதியைத் திருடமாயப்யஸித்து வருபவனுக்கு அவ்வப்யாஸ மஹிமையால் ரஜஸ்தமோ குணங்கள் விலகி சுத்த ஸத்துவகுணம் மேலோங்கவே அவித்யாதி கிலேச வாஸனைகளற்ற சித்தத்தில் தெளிவான அறிவானது ஒரே ஸமயத்திலுதயமாகின்றது. இந்தகைய அறிவுண்டானதும் தனது ஆத்மாவை எல்லாவற்றிற்கும் மேலானவனாக பார்க்கின்றவனாகி அத்தகையக் ஞானமில்லாத ஜனங்களைக் குறித்து துக்கிக்கிறான் இவ்விதமே யோகபாஷ்யத்திலும்

प्रज्ञाप्रासादमारुह्याऽशोच्यश्शोचतो जनान् ।
भूमिष्ठानिव शैलस्थो सर्वान्प्राज्ञोऽनुशोचति ॥

அனாத்மாவினின்றும், ஆத்மாவைப் பிரித்தறிந்த விவேகியானவன் எதனாலும், தான் சோகத்தை யடையாதவனாயிருந்து கொண்டு மலையின் நுனியிலிருப்பவன் சங்கடமான பூமியிலிருப்பவர்களைக் குறித்துப்போல அறிவாகிற மேல்மாடியிலேறிக்

கொண்டு தாபத்ரயத்தை யடைந்த எல்லா ஜனங்களையும் குறித்து சோகத்தையடைகிறான்'' என்றதாலுபதேசிக்கப்பட்டிருக்கிறது. ஆகவே இத்தகைய நிர்விசார ஸமாதியை யடைவதற்கு ஒவ்வொருவனும் முயற்சி செய்யவேண்டுவது மிகவுமவசியமானது.

(அ - கை) இத்தகைய சித்தத்தெளிவுக்கு யோகிகளாலிடப்பட்ட பெயரை இந்தச் சூத்திரத்தாலுபதேசிக்கிறார்.

सू०। ऋतंभरा तत्र प्रज्ञा ॥ ४८ ॥

(ஸூ-ம்) ருதம்பரா தத்ர ப்ரக்ஞா (48)

(ப - ரை) तत्र-(தத்ர) தெளிவு ஏற்பட்டபொழுது [जाता-(ஜாதா) உண்டான] प्रज्ञा-(ப்ரக்ஞா) அறிவானது ऋतंभरा-(ருதம்பரா) ருதம்பரா என்ற பெயரையுடையதாக வாகின்றது.

(தா - ம்) இன்னிலையில் எவ்வழியிலும் ஸத்யமான வஸ்துவே தோற்றத்தை யடைவதால் இதற்கிட்டருதம்பரா என்ற பெயரானது பொருந்த முள்ளதாகவேயாகின்றது. இவ்விதமே வேறுயோக சாஸ்திரங்களிலும்

आगमेनाऽनुमानेन ध्यानाभ्यासरसेन च ।
त्रिधा प्रकल्पयन्प्रज्ञां लभते योगमुत्तमम् ॥

''வேதவிஹிதமான சிரவணத்தாலும், அனுமானம் என்ற மனனத்தாலும், தியானுப்யாஸரஸம் என்ற நிதித்யாஸனத்திலுள்ள பழக்கத்தில் ஆதரவினாலும், ஆகிய இம்மூன்றினாலும், முற்கூறிய பிரக்ஞையைப்பெற்ற யோகியானவன் மேலானயோகத்தையடைகிறான்'' என்றதாலுபதேசிக்கப்பட்டிருக்கிறது. எ-று

(அ - கை) மேற்கூறிய ருதம்பரா ப்ரக்ஞையிலுள்ள மற்றொரு விசேஷத்தை இந்தச் சூத்திரத்தாலுபதேசிக்கிறார்.

सू०॥ श्रुतानुमानप्रज्ञा सामान्यविषया विशेषार्थत्वात् ॥ ४९ ॥

(ஸூ-ம்) ச்ருதானுமான ப்ரக்ஞா ஸாமான்ய விஷயா விசேஷார்த்தத்வாத். (49)

(ப-ரை) **श्रुतानुमानप्रज्ञा**-(ச்ருதானுமானப்ரக்ஞா) **श्रुत**-(ச்ருத) *சப்தத்தாலும்* **अनुमान**-(அனுமான) *அனுமானத்தாலுமுண்டான* **प्रज्ञा**-(ப்ரக்ஞா) *அறிவானது* **सामान्यविषया**=(ஸாமான்ய விஷயா) *ஸாமான்யம் என்ற ஜாதியை விஷயமாயுடையது.* [**इयं, तु, पुनः प्रज्ञा**-(இயம்து புனஃ ப்ரக்ஞா) *இந்தருதம்பரா ப்ரக்ஞையோ வெனில்*] **विशेषार्थत्वात्**-*அவைகளுக் கெட்டாத விஷயத்தை விஷயமாயுடைத்தாயிருப்பதுபற்றி* [**ताभ्यां, अन्या** = (தாப்யாம், அன்யா) *சுருதம், அனுமானம்* [*இவற்றாலுண்டாகும் பிரக்ஞையைவிட வேறானது*]

श्रुतानुमानप्रज्ञाभ्यामन्यविषया विशेषार्थत्वात् ।

ச்ருதானுமான ப்ரக்ஞாப்யா மன்யவிஷயா விசேஷார்த்தத்வாத்

என்றும் பாடமுண்டு. இதன்படி—[**सा** - (ஸா) *அந்தருதம்பராப்ரக்ஞையானது* **विशेषार्थत्वात्**-(விசேஷார்த்தத்வாத்) *வியக்தி விசேஷத்தை விஷயமாயுடைத்தாயிருப்பதுபற்றி*[**सामान्यविषयाभ्याम्**-(ஸாமான்ய விஷயாப்யாம்)*ஜாதி மாத்திரத்தை விஷயமாயுடையவைகளான* **श्रुतानुमानप्रज्ञाभ्यां** = (ச்ருதானுமான ப்ரக்ஞாப்யாம்)*சப்தத்தாலுண்டாகும் க்ஞானம், அனுமானத்தாலுண்டாகும் க்ஞானம்இவற்றைக்காட்டிலும்* **अन्यविषया**-(அன்யவிஷயா) *தனியான விஷயத்தையுடையதாக* [**भवति**-(பவதி) *ஆகின்றது*] *எனப் பொருள் கொள்ளவேண்டும்.*

(*தா - ம்*) *பிரத்யக்ஷம், அனுமானம், சப்தம் என மூன்று பிரமாணங்கள் முன்னர் நிரூபிக்கப்பட்டன. அம்மூன்று பிரமாணங்களாலும் மூன்றுவித க்ஞானங்களுண்டாகின்றன. அவற்றுள் அனுமானம், சப்தம் இவற்றால் அந்தந்த வஸ்துக்களைப் பற்றிய ஸாமான்ய க்ஞானமே யுண்டாகின்றது. அதாவது: மலையினருகிற் சென்ற மனிதன் மலையில் புகையைக் கண்டதும் மலையில் நெருப்பிருப்பதாக ஊஹிக்கிறான். இவ்விடத்தில் நெருப்பைப்பற்றிய ஸாமான்ய க்ஞானம் (பொதுவான க்ஞானம்) உண்டாகின்றதே யொழிய, "அது எத்தகையது, எவ்வித முண்டாயிற்று" என்பது முதலிய விசேஷத்தைப் பற்றிய க்ஞானமுண்*

டாவதில்லை. இவ்விதமே "நதியின் கரையில் 5 பழங்களிலிருக்கின்றன" என்று உண்மை பேசும் ஓர் மனிதன் சொல்லுகிறான் என்று வைத்துக் கொள்வோம். இவ்விடத்தில் அந்த வார்த்தையைக் கேட்டதும், நதிக்கரையில் ஐந்து பழங்களிருப்பதாக பொதுவான க்ஞான முண்டாகின்றது. பழங்களைப் பற்றிய விசேஷ க்ஞான முண்டாவதில்லை. ஆகவே அனுமானம், சப்தம் என்ற இவ்விரு பிரமாணத்தாலும் ஸாமான்ய க்ஞான முண்டானதும், அதைப் பற்றிய விசேஷ க்ஞானத்திற்காக வேறு விதமாக நாம் முயற்சி செய்ய வேண்டியவர்களா யிருக்கிறோம்.

முதலாவதான ப்ரத்யக்ஷமானது ஸாமான்ய ப்ரத்யக்ஷம் என்றும், யோகப் பயிற்சியா லுண்டாகும் பிரத்யக்ஷம் என்றும் இருவகைப்படும். அவற்றுள் முதலாவதான ஸாமான்ய பிரத்யக்ஷத்தினால் வஸ்துக்களைப் பற்றிய விசேஷ க்ஞான முண்டாகின்றதாயினும், காணங்களின் தோஷம் முதலியவற்றால் அந்த ப்ரத்யக்ஷ க்ஞானமானது பல விஷயங்களில் பொய்யாகவே ஆகிவிடுகின்றது. அவ்விதம் பொய்யாகாது உண்மையான க்ஞான முண்டாகு மிடத்திலும் கூட, ஸாமான்ய பிரத்யக்ஷத்தால் வஸ்துவைப் பற்றிய விசேஷம் யாவுமே அறியப்படுகின்றதென்பதில்லை. த்வக், சக்ஷுஸ், சுரோத்திரம், ஜிஹ்வா, கிராணம், என்ற ஐம் புலன்களுள் கண்ணால் பார்த்தறியவேண்டியது மற்ற விந்திரியங்களா லறியக் கூடாததாகவும், இவ்விதமே ஒவ்வொரு இந்திரியத்தாலுமறியப்படுவது மற்றவிந்திரியங்களாலறியப்படாததாகவு மிருக்கின்றது. ஆகவே பிரத்யக்ஷம் முதலிய பிரமாணங்களைக் கொண்டு நம்மாலறியப்படுவது வஸ்துக்களைப் பற்றிய பொது (ஸாமான்ய) க்ஞானமாகுமே யொழிய விசேஷ க்ஞானமாக ஒரு பொழுது மாவதில்லை.

யோகப் பயிற்சியால் ஏற்படும் இரண்டாவதான பிரத்யக்ஷ க்ஞானத்தாலோ எந்த இந்திரியங்களின் உதவியுமின்றி ஒரே ஸமயத்தில் பிரகிருதிவரையிலுள்ள ஸூக்ஷ்ம வஸ்துக்களும், மறைந்திருக்கின்ற வஸ்துக்களும், விலகி வேறு தேசத்திலிருக்கின்ற வஸ்துக்களும் கிரஹிக்கப்படுகின்ற படியால்

இந்த ப்ரக்ஞையை ருதம்பரா (ஸத்தியமான வஸ்துவை விஷயமா யுடையது) என்று முந்திய ஸூத்திரத்தா லுபதேசித்தார். ஆகவே இந்த ருதம்பரா ப்ரக்ஞையையே "யோகஜ ப்ரத்யக்ஷம்" என்று யோக சாஸ்திரங்களில் உபதேசிக்கின்றனர். ஆனதுபற்றியே இந்தச் சூத்திரத்தால் சப்தம், அனுமானம் இவ்விரண்டினுலுமுண்டாகும் அறிவைவிட இந்த ருதம்பரா ப்ரக்ஞையானது வேறு விஷயத்தை (பிரகிருதி வரையுள்ள சூக்ஷ்ம வஸ்துவை) விஷயமாக வுடையதென்றும், யோகப் பயிற்சி பெருதவர்க்குண்டாகும் சாமான்யமான பிரத்யக்ஷத்திற்கு பிரகிருதிவரையுள்ள ஸூக்ஷ்ம வஸ்துக்கள் விஷயமாவதில்லை என்றும் உபதேசித்தார் என்றும் கொள்ளல் வேண்டும். மேலும், சப்தப் பிரமாணம் அனுமானப் பிரமாணம் இவற்ருல் அறியப்படுகின்றதை விட சூக்ஷ்மமாயும் மறைந்திருக்கின்றதாயும் வெகு தூரத்திலிருக்கின்றதாயும் உள்ள வஸ்துக்களேக்கூட யோகப் பயிற்சி பெற்றவர் தமது யோகஜ பிரத்யக்ஷத்தால் நேரில் கண்டு கொள்ளுகிருர். அதாவது: மிக்க சூக்ஷ்மமான பிரகிருதியையும், மறைந்து பூமிக்குள்ளிருக்கும் புதையல் முதலியவற்றையும், வேறு விடத்திலுள்ள வைகுண்டம் முதலியவற்றையும்கூட தமது யோகப் பயிற்சியாலுண்டான யோகஜ பிரத்யக்ஷத்தால் அறிந்து கொள்ளுகிருர்.

சங்கை—சப்தம், அனுமானம் இவ்விரண்டு பிரமாணங்களாலும் பிரகாசப் படுத்தப்பட்ட பிரகிருதி முதலிய சூக்ஷ்ம வஸ்துக்களேப் பற்றிய அறிவை யுண்டாக்கும் இந்த ருதம்பரா பிரக்ஞையானது தனக்கு (ருதம்பரா பிரக்ஞைக்கு) மூல காரணமான சப்தம், அனுமானம் இவற்றிற்கு விஷயமாகாத வஸ்துவின் அறிவை எவ்வித முண்டாக்கக் கூடும் எனின்?

உத்தரம்---அதனுண்மையை இங்கு கூறுவாம். புத்தியானது இயற்கையில் எல்லா வஸ்துக்களேயும் அறியும் சக்தியுள்ளதாயிருப்பது பற்றியே என்க. அதாவது: இயற்கையில் சுத்த ஸத்துவகுணமுள்ள புத்தியானது பிரகாச ஸ்வபாவமுள்ளதாயிருப்பது பற்றி எல்லா வஸ்துக்களேயும் பிரகாசப்படுத்தக் கூடியதானுயி

னும் தமோ குணத்தால் மறைக்கப்பட்டதாய்க் கொண்டு மற்ற இந்திரியங்களின் உதவியை முன்னிட்டு அவ்விந்திரியங்களாலறியக்கூடிய அற்பமான விஷயங்களையே பிரகாசப்படுத்துகின்றது. ஆகவே யோகப் பயிற்சியின் முதிர்ச்சியால் தமோகுணத்தின் சேர்க்கையானது விலகினதும் இந்திரியங்களுடைய எவ்வித உதவியுமின்றி ஒரே ஸமயத்தில் எல்லா விஷயங்களிலும் பிரவிருத்தித்து அவ்விஷயங்கள் எவ்வளவு ஸூக்ஷ்மமாகவோ வேறு தேசத்திலுள்ளதாகவோ, மறைந்ததாகவோ, எவ்வித மிருப்பினும் அவையாவற்றையும் பிரகாசப்படுத்தும் என்பதில் யாதும் தடையில்லை. ஆனது பற்றியே சப்தம் அனுமானம் இவற்றுலிது உண்டாயிற்றாயினும் அந்த சப்தானுமான பிரமாணங்களுக்கு விஷயமாகாத சூக்ஷ்மம் முதலிய விஷயங்களைப் பிரகாசப்படுத்துகின்றதென உபதேசிக்கப்பட்டது. இதையே வேறிடத்திலும்

प्रज्ञाप्रासादमारुह्य शोच्यश्शोचतो जनान् ।
भूमिष्ठानिव शैलस्थस्सर्वान्प्राज्ञोऽनुशोचति ॥

"மேற் கூறிய ருதம்பரா பிரக்ஞையையடைந்த யோகியானவர் யோகப் பயிற்சி பெற்று அதனுதவியால் இந்திரியங்களின் உதவியின்றி பிரகிருதி முதலிய மிக்க ஸூக்ஷ்மமான வஸ்துக்கள் முதலியவற்றையும் சுளுவில் அறியக்கூடிய யோகஜ பிரத்யக்ஷம் பெற்று மேலான நிலையை யடையவேண்டியவர்களாயிருக்க அவ்விதமின்றி மிக்கத் தாழ்ந்த நிலையிலிருந்து கொண்டு இந்திரியங்களின் உதவியின்றி எதையும் அறியக்கூடாதவர்களாகவு மிருக்கின்றனரே என யோகப் பயிற்சி பெறாத ஜனங்களைக் குறித்து சோகப்படுகின்றான்" என்றதா லுபதேசிக்கப்பட்டிருக்கிறது. (எ - று)

(அ - கை) இதுவரை உபதேசிக்கப்பட்ட ருதம்பரா ப்ரக்ஞையின் பலனை இந்தச் சூத்திரத்தா லுபதேசிக்கிறார்.

सू०॥ तज्जस्संस्कारो अन्यसंस्कारप्रतिबंधी ॥ ५० ॥

(ஸூ-ம்) தஜ்ஜ: ஸம்ஸ்கார: அன்யஸம்ஸ்கார ப்ரதிபந்தீ (50)

(ப - ரை) **तज्जः**-(தஜ்ஜ:) மேற்கூறிய ருதம்பரா ப்ரக்ஞை யாலுண்டான **संस्कारः**=(ஸம்ஸ்கார:) நிரோத ஸம்ஸ்காரமானது **अन्यसंस्कारप्रतिबंधी** = (அன்யஸம்ஸ்காரப்ரதிபந்தீ) வேறான வ்யுத்தான ஸம்ஸ்காரத்தைத் தடைசெய்கின்றதாக [**भवति** - (பவதி) ஆகின்றது.]

(தா - ம்) வெகு ஜன்மப் பழக்கத்தால் சித்தமானது தத்துவப் பழக்கமில்லாமை காரணமாய் தனது நிலைவிட்டு வெளியிலுள்ள சப்தாதி விஷயங்களையே நோக்கிச் சென்ற பழக்கமிருந்த போதிலும் இங்கு கூறிய வைராக்யம் முதலிய ஸாதனங்கள் மூலம் தத்துவப் பழக்கம் பெற்று அதன் மூலம் நிரோதம் பெற (தங்நிலைக்குவர) ஆரம்பித்து முன்னர் கூறிய ருதம்பரா என்ற பிரக்ஞையை யடைந்த பொழுது தத்துவ ஸம்பந்தம் பெற்ற இந்த ருதம்பரா ப்ரக்ஞையின் ஸம்ஸ்காரம் மேன்மேலு முண்டாகும் பொழுது இந்த நிரோத ஸம்ஸ்காரத்தின் மஹிமையால் வ்யுத்தான ஸமஸ்கார (வெளிக் கிளம்பும் வாஸனை) மேயற்றதாயாகி விடுகின்றது. மேன்மேலுள்ளப் பழக்கத்தால் நிரோத ஸம்ஸ்காரம் (நிரோத வாஸனை) பெருகி வருவதினின்றும் அவித்தை முதலிய கிலேசங்கள் குறைய வாரம்பிப்பதால் வெளியிலுள்ள விஷய போகத்திலாசைகுன்றி சித்தமானது புருஷாபிமுகமாகின்ற விவேக க்யாதியை யடைந்து கிருத கிருத்யமாக (செய்ய வேண்டிய கார்யம் எதுவு மற்றதாய்க்) கொண்டு தனது காரணத்தில் லயத்தை யடைந்துவிடுகின்றது. இந்நிலையில் சித்தத்திற்குரிய அதிகாரம் முடிவடைந்ததாகவே யாகின்றமையின் சித்தமானது தனது கார்யம் எதையும் இம்மாதிரியான முக்தன் விஷயத்தில் செய்யச் சக்தியற்றதா யாகிவிடுகின்றது. (எ - று)

(அ - கை) 50-வது ஸூத்திரத்தால் ஸம்பிரக்ஞாத ஸமாதி பலத்தாலுண்டான விசேஷத்தை யுபதேசித்து இந்த 51-வது ஸூத்திரத்தால் அஸம்பிர க்ஞாத ஸமாதியினாலுண்டாகும் பல விசேஷத்தை யுபதேசிக்கிறார்.

सू०॥ तस्यापि निरोधे सर्वनिरोधान्निर्बीजस्समाधिः ॥ ५१ ॥

[ஙு-ஒ] தஸ்யாபி நிரோதே ஸர்வ நிரோதாத், நிர்ப்பீஜ: ஸமாதி: (51)

(ப - ரை) **तस्यापि**=(தஸ்யாபி) ஸம்ப்ரக்ஞாத ஸமாதி ஸம்ஸ்காரத்தினுடையவும் அதன் பிரக்ஞையினுடையவும் **निरोधे** = (நிரோதே) நிரோதமானது உண்டான பொழுது **सर्वनिरोधात्**= (ஸர்வ நிரோதாத்) பிரக்ஞை அதன்ஸம்ஸ்காரம் யாவும் அடியோடு நிரோதமாகிவிடுவதால் **निर्बीजः**=(நிர்ப்பீஜ:)தன்னிலேவிட்டு மாறுவதற்குரிய காரணமற்ற **समाधिः**=(ஸமாதி:) அஸம்பிரக்ஞாத ஸமாதியானது [**भवति**=(பவதி) உண்டாகின்றது.]

(தா - ம்) யோக சாஸ்திர சிரவணத்தாலும், கேட்ட பொருளை மனனம் செய்வதாலும், புருஷனைமட்டும் தியானம் செய்யும் பழக்கமென்ற தர்மமேகஸமாதியுண்டாகின்றது. பின்னர் அவ்வழியிலுள்ள ருசியாகிற பரவைராக்யமென்ற ப்ரக்ஞையின் தெளிவு ஏற்படுகின்றது. அதன் மூலம் புருஷ ஸாக்ஷாத்காரமுண்டாகி நிர்பீஜ யோகத்தை யடைகின்றது. காலக் கிரமத்தில் நிர்பீஜ நிரோத ஸம்ஸ்காரம் மேலிட்டு சித்தமானது இனி பிரயோஜன மெதுவுமில்லாமை பற்றி தனது காரணமான பிரகிருதியில் லயத்தை யடைந்துவிடுகின்றது. செய்யவேண்டிய காரியம் ஏதேனு மிருந்தாலன்றோ சித்தம் காரணத்தை விட்டு வெளிக்கிளம்புவதற்கு ஹேதுவாகும். மேற் கூறியபடி சிறந்த பலனை விவேக க்யாதியை யடைந்த பிறகு செய்யவேண்டிய காரியமெதுவும் சித்தத்திற்கு மீத மிருப்பதற்கு நியாயமில்லை. ஆகவே சித்தமானது தனது காரணமான பிரகிருதியில் லயத்தை யடைந்ததும் புருஷன் ஸ்வரூபமாத்திரத்தில் நிலைபெற்றவனாகவும், கேவலனாகவும், முக்தனாகவுமாகின்றான். (எ - று)

முதற்பாதத்திலுள்ள விஷயச் சுருக்கம்.

இந்த முதற்பாதத்தில் யோகத்தின் லக்ஷணத்தையும், சித்த விருத்தி நிரோதம் என்பது யாது என்பதையும்; அப்யாஸம், வைராக்யம் என்ற யோகோபாயங்களின் சுவரூபத்தையும் முறையே உபதேசித்து, பின்னர் ஸம்பிர க்ஞாதம் என்றும்,

அஸம்பிர க்ஞாதம் என்றும் யோகத்தை இரண்டாகப் பிரித்து அவற்றுள், ஸம்பிர க்ஞாத ஸமாதியானது அமுக்யமென்றும், அஸம்பிர க்ஞாத ஸமாதியானது முக்யமானது என்றும் உபதேசித்து, பிறகு யோகாப்யாஸத்திற்குரிய உபாய விசேஷங்களையும் விரிவா யுபதேசித்து, பின்னர் யோக விஷயத்தில் சுலபமான உபாயத்தை யுபதேசிப்பான் தொடங்கி ஈசுவரனுடைய ஸ்வரூபம், அதற்கு பிரமாணம், அவரது பிரபாவம், ஈசுவர வாசக சப்தம், அவரது உபாஸனம், அதன் பலன் இவற்றையும் விரிவா யுபதேசித்து, பின்னர் சித்த விக்ஷேபத்தைத்தரக் கூடிய வியாதி முதலியவற்றையும், அதை யொட்டி யுண்டாகும் துக்காதிகளையும், அதைத் தடுப்பதற்கு வேண்டி ஏகதத்துவாப்யாஸம் செய்ய வேண்டு மென்பதையும், மைத்ரீ முதலிய சித்த பரிகர்மத்தையும், பிறகு பிராணயாமம் முதலியவற்றையும் உபதேசித்துப் பின்னர் ஸம்பிரக்ஞாதம், அஸம்பிரக்ஞாதம் என்ற இவ்விரு ஸமாதிகளுக்கும் பூர்வாங்கமான விஷயவதீ பிரவிருத்தியையும் உபதேசித்து லக்ஷணம், பலன், அதற்குரிய விஷயம் இவற்றுடன் ஸமாபத்திகளையும் எடுத்துக் காட்டி, ஸம்பிர க்ஞாத, அஸம்பிரக்ஞாத ஸமாதிகளின் முடிவையு முபதேசித்து ஸபீஜ ஸமாதியை முன்னிட்ட நிர்பீஜ ஸமாதியையும் உபதேசித்திருக்கிறார்

முதலாவது சமாதிபாதம் முற்றிற்று.

இரண்டாவது ஸாதன பாதம்.

(அ - கை) முதலாவது பாதத்தில் சித்தவிருத்தி நிரோதம் என்ற யோக முபதேசிக்கப்பட்டது. அதற்கு அப்யாஸம், வைராக்யம் இரண்டும் காரணமாகவு முபதேசிக்கப்பட்டது. யோக ஸாதனமான அப்யாஸமோ, வைராக்யமோ உண்டாக வேண்டுமானால் சித்த சுத்தியைப் பெறவேண்டுவது அவசியமாகின்றது. சித்த சுத்தியோ

कषाये कर्मभिः पक्के ततो ज्ञानं प्रवर्तते ॥

''கர்மங்களால் சித்தத்திலுள்ள தோஷங்கள் விலகினதும் க்ஞான முண்டாகின்றது'' என்றபடி கர்ம யோகானுஷ்டானத் தாலுண்டாக வேண்டியதாக விருக்கிறது. ஆனதுபற்றி சித்த சுத்திக்குக் காரணமான கர்மயோகத்தை யுபதேசிக்கிருர்.

सू० ॥ तपस्स्वाध्यायेश्वरप्रणिधानानि क्रियायोगः ॥ १ ॥

(ஸூ) தப: ஸ்வாத்யாய ஈச்வர ப்ரணிதாஞனி க்ரியாயோக: (1)

(ப-ரை) **तपः...नि** (தப:...ணி) **तपः**=(தப:) தபஸ்ஸூம் **स्वाध्याय**=(ஸ்வாத்யாய) பிரணவாதி மந்திரஜபமும் **ईश्वरप्रणिधानानि**= (ஈசுவரப்ரணி தாஞனி) பலாபேக்ஷயின்றி செய்யப்பட்ட கர்மங் களை ஈசுவரார்ப்பணம் செய்தலும் **क्रियायोगः**=(க்ரியாயோக:) கர்ம யோகமாகும்.

(தா - ம்) தபஸ், ஸ்வாத்யாயம், ஈசுவர பிரணிதானம் இம் மூன்றும் கிரியா யோகம் என்று இதனு உபதேசிக்கப்பட்டது. பிரும்மசர்யம் (இந்திரிய நிக்ரஹம்) குருஸேவை, உண்மை பேசல், காஷ்டமவுனம், ஆகார மவுனம் இவற்றை யனுஷ்டித் தல் (வாய் பேசாதிருத்தல் காஷ்டமவுனமாகும். தனது சரீரத் திலுள்ள எந்த அவயவங்களைக் கொண்டும் தனது அபிப்ராயத் தை வெளியிடாதிருத்தல் ஆகார மவுனமாகும்) தத்தமது ஆச் ரம தர்மங்களை யனுஷ்டித்தல், சீதோஷ்ணம் முதலிய துக்கங் களைப் பொருத்தல், மிதமான ஆஹாரத்தை யுட்கொள்ளல் ஆகிய இவைகள் தப: என்ற பதத்தா லுபதேசிக்கப்பட்டதாய் கொள்ள வேண்டும். தப: என்றதற்கு ''காயபரிசோஷணம்'' காயத்தை உணரச் செய்தல்என்ற பொருளை இங்கு கொள்ளல் தகா. ஏனெ னில் காயசோஷணம் செய்பவனுக்கு யோகப் பழக்கமே அஸா த்யமாகும் என்பது பற்றியே என்க. ப்ரணவம், ஸ்ரீருத்திரம், புருஷஸூக்தம் முதலிய மஹா பரிசுத்தமான மந்திரங்களை ஆவிருத்தி செய்தலோ, மோக்ஷ சாஸ்திரத்தை ஆசார்யனிடமிரு ந்து அத்யயனம் செய்தலோ ஸ்வாத்யாயம் என்றதால் சொல்லப் பட்டதாகக் கொள்ளவேண்டும். தான் செய்யும் எந்தக் கார்யத்

தையும் ஈசுவரனிடம் ஸமர்ப்பணம் செய்தல், அல்லது எந்தப் புண்யகர்மத்திற்கு எந்தப் பலன் சாஸ்திரங்களில் உபதேசிக்கப் பட்டிருக்கின்றதோ அப்பலனில் ஆசை கொள்ளாது அக்கர் மங்களைச்செய்தல் "ஈசுவர பிரணிதானம்" என்றதா லுபதேசிக் கப்பட்டதாய் கொள்ளவேண்டும். (எ - று)

(அ - கை) க்ரியா யோகத்தின் பலனை இந்தச் சூத்திரத்தா லுபதேசிக்கிறார்.

सू०॥ समाधिभावनार्थः क्लेशतनूकरणार्थश्च ॥ २ ॥

(ஸூ) ஸமாதி பாவனார்த்த: க்லேச தனூ கரணார்த்தச்ச. (2)

(ப-ரை) [क्रियायोगः = (க்ரியாயோக:) கர்மயோகமானது **क्लेशतनूकरणार्थः** = (க்லேசதனூகரணார்த்த:) **क्लेश** = (க்லேச) அவித்யை முதலிய கிலேசங்களின் **तनूकरण** = (தனூகரண) குறைத்தலை **अर्थः** = (அர்த்த:) பிரயோஜனமாயுடையதாயும் **समाधिभावनार्थश्च** = (ஸமாதிபாவனார்த்தச்ச) **समाधि** = (ஸமாதி) ஸமாதியின் **भावन** = (பாவன) உற்பத்தியை (அர்த்த:) பிரயோஜனமாயுடையதாயும் [भवति = (பவதி) ஆகின்றது]

(தா - ம்) முதல் ஸூத்திரத்தா லுபதேசிக்கப்பட்ட கிரியா யோகத்தால் கிலேசங்கள் குறைய வாரம்பிக்கின்றன. அவித்யை முதலிய கிலேசங்கள் குறையக் குறைய சமாதி மார்க்கத்தில் பிரவிருத்தியுண்டாகின்றது. ஆகவே க்ரியாயோகத்தினல் கிலே சங்கள் குறைந்த சந்தர்ப்பத்தில் ஸமாதி மார்க்கத்தில் புத்தி திரும்பிவிடுகின்றது. அதனின்றும் நாளடைவில் சமாதிக்குரிய சாதனங்களை யனுஷ்டித்தல் வாயிலாக கிலேச சம்பந்தமே அடி யோடு ஒழிந்து விவேக க்யாதியை யுண்டாக்கி கிலேசங்களும் அதன் வாஸனைகளும் முற்றிலும் விலகி விடுகின்றன. (எ - று)

(அ - கை) இரண்டாவது ஸூத்திரத்திற் சொல்லிய கிலே சங்கள் யாது? அவை எவ்வளவு? என்பதை உபதேசிக்கிறார்.

सू०॥ अविद्याऽस्मितारागद्वेषाऽभिनिवेशाः पञ्च क्लेशाः ॥ ३ ॥

(ஸூ) அவித்யா அஸ்மிதா ராக த்வேஷ அபிநி வேசா: பஞ்ச க்லேசா: (3)

(ப - ரை) अवि...शाः (அவித்யா...சா:) अविद्या= (அவித்யை) अस्मिता=(அஸ்மிதா) அஸ்மிதை राग=(ராக) ராகம் द्वेष = (த்வேஷம்) अभिनिवेशाः=(அபிநிவேசா:) அபிநிவேசம் ஆகிய पञ्च=பஞ்ச இவ்வைந்தும் क्लेशाः= கிலேசங்களெனப்படும்.

(தா - ம்) அவித்யை, அஸ்மிதை, ராகம், துவேஷம், அபிநிவேசம், ஆகிய இவ்வைந்தும் கிலேசங்களெனப்படும்.

क्लिश्यन्ति कर्मतत्फलप्रवर्तकास्सन्तः पुरुषं दुःखाकुर्वन्ति इति क्लेशाः

கர்மம், அதன்பலனுன ஜாதி, ஆயுள், போகம் இவைகளை யுண்டு பண்ணுகின்றவைகளாய்க் கொண்டு புருஷனைத் துக்கப்படுத்துகின்றது பற்றி இவ்வைந்தும் கிலேசங்களாகின்றனவென் றேற்பட்டது. (எ-று)

(அ - கை) அஸ்மிதை முதலிய நான்குகளும் அவித்யையின் கார்யமா யிருப்பதுபற்றி அவித்யை வடிவங்களாகவே ஆகின்றன வென்பதை இதனுலுபதேசிக்கிருர்.

सू०॥ अविद्याक्षेत्रमुत्तरेषां प्रसुप्ततनुविच्छिन्नोदाराणाम् ॥ ४ ॥

(ஸூ) அவித்யா க்ஷேத்ரம் உத்தரேஷாம் ப்ரஸுப்த தனுவிச் சின்னோதாராணும். (4)

(ப-ரை) प्रसुप्त, तनु, विच्छिन्न, उदाराणाम्=(ப்ரஸுப்த, தனு விச்சின்ன, உதாராணும்) ப்ரஸுப்தம், தனு, விச்சின்னம், உதாரம் என ஒவ்வொன்றிலும் நான்கு பிரிவையுடைய उत्तरेषां=(உத்தரேஷாம்) அவித்யைக்கு மேலுள்ள அஸ்மிதா, ராகம், துவேஷம், அபிநிவேசம் என்ற இந்நான்கிற்கும் अविद्या = (அவித்யா) அவித்யையானது क्षेत्रम् = (க்ஷேத்ரம்) உத்பத்திஸ்தானமாக [भवति= (பவதி) ஆகின்றது]

(தா - ம்) பொதுவாய் ஒவ்வொன்றிற்கும் ப்ரஸுப்தா வஸ்தா என்றும், விச்சேதா வஸ்தா என்றும், தன்வவஸ்தா என்றும், உதாராவஸ்தா என்றும், நான்கு அவஸ்தைகளுண்டு. அவற்றுள் இல்லாத வஸ்துவானது உண்டாவதில்லை யாதல் பற்றி அபிவ்யக்த மாகாத உருவத்துடன், அதாவது: இந்திரியங்களுக்கு புலப்படாத வுருவத்துடன் இருத்தலே ப்ரஸுப்தா வஸ்தா எனப்படும். வஸ்துவானது அபிவ்யக்தியை (இந்திரியங்களுக்குப் புலப்படக் கூடிய நிலையை) அடைந்திருப்பினும் தான் ஒரு கார்யத்தைச் செய்வதற்கு வேண்டிய ஸஹகாரி (உதவி) காரணமில்லாமைபற்றி தனது கார்யத்தைச் செய்யாதிருக்கும் நிலை தனு என்ற அவஸ்தை எனப்படும். இந்திரியங்களுக்குப் புலப்படக் கூடிய நிலையை யடைந்திருப்பினும், தனது கார்யத்தைத் தான் செய்யக்கூடியதா யிருப்பினும் கூட இது காரியத்தைச் செய்யாதபடி வலுவுள்ள மற்றொன்றினாலேற்படும் தடையானது விச்சேதா வஸ்தை எனப்படும். அபிவ்யக்தியை யடைந்ததாயும், தான் கார்யத்தைச் செய்வதற்கு வேண்டிய உதவிகள் யாவையும் அடைந்ததாயு மிருக்கின்றதற்கு எவ்விதத் தடங்கலுமின்றி தனது கார்யத்தைச் செய்யும் தன்மையானது உதாராவஸ்தா எனப்படும். ஆகவே மேற் கூறிய (1) ப்ரஸுப்தா வஸ்தா (2) தன்வவஸ்தா (3) விச்சேதா வஸ்தா (4) உதாராவஸ்தா என்ற நான்கு அவஸ்தைகளையும், அஸ்மிதை, ராகம், த்வேஷம், அபிநிவேசம் என்ற இந்த நான்கும் தனித் தனியே அடைகின்றது, அதாவது: அஸ்மிதையானது ப்ரஸுப்தாஸ்மிதை என்றும், தனுவான அஸ்மிதை என்றும், விச்சின்ன அஸ்மிதை என்றும், உதார அஸ்மிதை என்றும் 4 விதமாகப் பிரிக்கப்படும். இவ்விதமே ராகமும் ப்ரஸுப்த ராகம் என்றும், தனுராகம் என்றும், விச்சின்ன ராகம் என்றும், உதார ராகம் என்றும், 4 விதமாகும். இதுபோலவே த்வேஷமும் ப்ரஸுப்த த்வேஷம் என்றும், தனுத்வேஷம் என்றும், விச்சின்ன த்வேஷம் என்றும், உதார த்வேஷம் என்றும் 4 விதமாகும். இம்மாதிரியே அபிநிவேசமும், ப்ரஸுப்தாபிநிவேசமென்றும், தனு அபிநிவேசமென்றும், விச்சின்ன அபிநிவேசம்

என்றும், உதார அபிநிவேசம் என்றும் 4 விதமாகும். ஆகவே இவ்விதம் நான்குவித உட்பிரிவுடன் கூடிய அஸ்மிதை முதலிய 4-க்கும் அவித்யையானது உத்பத்தி காரணமாக ஆகின்றது. அதாவது: அவித்யை யில்லாவிடில் மேற் கூறிய அஸ்மிதை முதலியன உண்டாவதற்கிடமில்லை. ஆனது பற்றியே அவித்யையானது க்ஷேத்திரமாக (பிரஸவ பூமியாக) உபதேசிக்கப்பட்டது.

மேலும் முற்கூறிய கிலேசங்கள் பிரகிருதி லயத்தையடைந்தவர் விஷயத்தில் ப்ரஸுப்தங்களாகவும், யோகிகள் விஷயத்தில் ப்ரதிபக்ஷ பாவனை (அதற்கு விரோதி பாவனை) யால் தனுக்களாகவும், கிலேசங்களின் ஸூக்ஷ்ம விருத்திகளும், அதன் கார்யங்களான ஸ்தூல விருத்திகளும் விட்டுவிட்டு அதனதன் உருவத்துடன் வருமானால் விச்சின்னங்களாகவும், உதாரங்களாகவுமாகின்றன. அதாவது: ராக (ஆசையுள்ள) காலத்தில் குரோதமானது ஸூக்ஷ்மமாக இருந்தபோதிலும் வெளிப்படையாகத் தெரியாததால் விச்சின்னம் எனப்படும். மனிதன் ஒரு ஸ்திரீயினிடத்தில் மிக்க ஆசையுள்ளவனாக இருக்கும் பொழுது வேறு ஸ்திரீயினிடத்தில் விரக்தன் (ஆசையற்றவன்) எனக் கூறமுடியுமா? ஒரு ஸ்திரீ விஷயத்தில் ராகமானது பிரகாசத்தையடைந்தும், வேறு ஸ்திரீ விஷயத்தில் பின்னர் பிரகாசத்தை யடையப்போவதாயுமிருக்கலாம். ஆனதுபற்றி அவனது விஷயத்தில் ராகமானது விச்சின்னம் என்று சொல்லப்படுகின்றது. இதிலிருந்து எந்தக்லேசங்கள் ஸர்வ விதத்தாலும் விஷயங்களில் பூர்ணமான பிரகாசத்தை யடைந்திருக்கின்றனவோ அவைகள் உதாரங்கள் எனப்படும் என்றேற்பட்டது. ஆகவே பிரஸுப்தம், தனு என்ற இவ்விரண்டு அவஸ்தைகளை யடைந்த கிலேசங்கள் ஸூக்ஷ்மங்களென்றும், விச்சின்னம், உதாரம் என்ற இவ்விரண்டு அவஸ்தைகளை யடைந்த கிலேசங்கள் ஸ்தூலங்களென்றும் சொல்லப்படும்.

அவற்றுள் ஸ்தூலங்களான விச்சின்ன உதாரங்கள் சுத்த ஸத்வ குணத்தாலுண்டான பகவத்யானத்தால் விலக்கவேண்டியவைகளாகின்றவேயன்றி மனோ நிரோதத்தால் போக்கத்தக்கவைகளல்ல. மனோ நிரோதத்தால் ஸூக்ஷ்மமான கிலேசங்களே போக்கத் தக்கவைகளாகும். ஆகவே பிரஸுப்தம், தனு, விச்சின்

னம், உதாரம் என்ற ரூபங்களுடன் எல்லா க்லேசங்களும் எப்பொழுதுமே இருக்கக்கூடும் என்று ஏற்படுகின்றது. அவற்றுள் கிலேசங்களின் உதார நிலையானது எவனோ ஒருவனுக்கு ஏதோ ஒரு ஸமயத்தில்தான் இருக்கக்கூடும் என்பது உதாரத்திலுள்ள தனி விசேஷமாகும். இவைகள் துக்கத்தை யுண்டுபண்ணுவது பற்றி கிலேச சப்தத்தால் சொல்லப்பட்டன. இதுவரை சொல் லியதை வாசஸ்பதி மிச்ரர் என்ற மஹானும்

प्रसुप्तास्तत्वलीनानां तन्ववस्थाश्च योगिनाम् ।
विच्छिन्नोदाररूपाश्च क्लेशा विषयसंगिनाम् ॥

"கிலேசங்கள் பிரகிருதி லயத்தை யடைந்தவர் விஷயத்தில் பிரஸுப்தங்களாகவும், யோகிகள் விஷயத்தில் தனுக்களாகவும், விஷயப் பற்றுள்ளவர் விஷயத்தில் விச்சின்னங்களாகவும் உதாரங்களாகவும் ஆகின்றன" என்றதால் தமதுயோக பாஷ்ய வியாக்யானத்தில் உபதேசித்திருக்கிறார் (எ-று.)

(அ-கை) அவித்யை முதலியவற்றின் சுவரூபத்தை யுபதேசிப்பான் தொடங்கி இந்த ஐந்தாவது ஸூத்திரத்தால் அவித்யையின் ஸ்வரூபத்தை யுபதேசித்திருக்கிறார்.

सू०॥ अनित्याऽशुचिदुःखाऽनात्मसु नित्य-शुचि-सुखाऽत्मख्याति रविद्या ॥ ५ ॥

(ஸூ) அநித்யாசுசி துக்காநாத்மஸு
நித்ய, சுசி, ஸுகாத்மக்யாதி ரவித்யா (5)

(ப - ரை) अनित्य, अशुचि, दुःख, अनात्मसु - (அநித்ய அசுசி துக்க, அநாத்மஸு) அனித்யமாயும், அசுத்தமாயும், துக்கமாயும், அநாத்வாயுமுள்ளவைகளில் नित्य-शुचि-सुख-आत्मख्यातिः-(நித்ய, சுசி, சுக, ஆத்மக்யாதி:)முறையே நித்யமென்றும், சுத்தமென்றும், ஸுகமென்றும், ஆத்மாவென்றுமான க்ஞானமானது अविद्या- (அவித்யா) அவித்யை எனப்படும்.

(தா-ம்) அநித்யமான கார்யத்தில் நித்யம் என்ற க்ஞானம், அவித்யை எனப்படும். அதாவது : அனித்யமான பூமியில் நித்யம் (அழிவற்றது) என்றும், அனித்யர்களான தேவர்களிடத்து அமரர் (மரண மற்றவர்கள், ஆனதுபற்றியே நித்யர்) களென்றும், எண்ணிக்கொண்டு அந்தந்த தேவசரீரத்தையடைய வேண்டி அதர்க்குரிய உபாஸனத்தையோ, ஸோமயாகம் முதலியவற்றையோ சிலர் அனுஷ்டிக்கிறனர். ஆகவே இஃதே அனித்யத்தில் நித்யக்ஞானம் என்ற அவித்யையாகச் சொல்லப்பட்டது என்பதாம். இவ்விதமே அசுசியான சரீரத்தில் "சரீரம் சுத்தமானது" என்ற எண்ணமும் அவித்யையாகும்.

स्थानाद्बीजादुपष्टंभान्निष्यन्दान्निधनादपि ।
कायमाधेयशौचत्वात्पण्डिताह्यशुचिं विदुः ॥

"மலமூத்திரம் நிறைந்த தாயின் வயிற்றில் வஸித்தல், பிதா மாதா இவர்களின் சுக்லம், சோணிதம் இவைகளாகிற பீஜஸம்பந்தம் பெறல், ஆஹார பரிணாமமான வாதபித்த சிலேஷ்மம் முதலியவற்றால் வளர்தல் இடையிடையே வியர்வை யுண்டாதல், பின்னும் சரீரத்திலுள்ள நவத்துவாரங்களினின்றும், மலம் வடிதல், மிக்க பரிசுத்தனான சுரோத்திரியனுடைய சரீரத்தையும் அசுத்தமாக்கக் கூடிய மரணத்தை யடைதல் (மிருத சரீரத்தைத் தொடுவதால், இறந்தவன் சுரோத்ரியனாயினும் மற்றவர்க்கு அசுத்தியுண்டென்று சாஸ்திரம் கூறுவதால் இவ்விதம் சொல்லப்பட்டது.) அவ்வப்பொழுது சாஸ்திரத்திற் சொல்லிய முறைப்படி சுத்தியை யுண்டுபண்ண வேண்டியதா யிருத்தல் ஆகிய இக்காரணங்களை யுற்று நோக்குங்கால் சரீரமானது இயற்கையில் அசுத்தமானதாகவே யிருக்கின்றது என பண்டிதர்கள் எண்ணுகின்றனர்." என வியாஸ பகவான் சொல்லி யிருப்பதால் அதற்கு நேர் விரோதமாக சரீரத்தைச் சுத்தமானது என்று எண்ணுவதுடன் மிக்க அசுத்தமான ஒரு ஸ்திரீயின் சரீரத்தைப் பார்த்ததும்

नवेव शशाङ्कलेखा,कमनीयेयं कन्या। मध्वमृतावयवनिर्मितेव,चन्द्रं भित्वानिस्सृतेव ज्ञायते । नीलोत्पलपत्रायताक्षी हावगर्भाभ्यां लोचनाभ्यां जीवलोक-

माश्वासयन्तीवेति कश्चिन्मन्यते, अत्र कस्यकेन अभिसंबंधः ॥

என பற்பலவிதமாய் அவளது சரீரத்தை வர்ணித்து அதில் ஒருவன் மோஹம் கொள்வானுயின் அங்கும் அசுத்தமான சரீரத்தில் சுத்தம் என்ற எண்ணமிருப்பதால் அதுவும் அவித்யை என்றே சொல்லப்படும் என உபதேசிக்கப்பட்டது. முடிவில் துக்கத்தைத் தருகின்ற விஷயத்தைச் சுகம் என்றும், சுகத்தைத் தரக் கூடியதென்றும் எண்ணுதலும் அவித்யையேயாகும். அனாத்மாவான சரீரேந்திரியங்களில் ஆத்மா என்ற எண்ணமும் அவித்யையாகவே கொள்ளப்படும். ஆகவே உண்மையில் எந்த வஸ்து எவ்விதமிருக்குமோ, அதற்கு நேர் விரோதமாக அவ் வஸ்துவை எண்ணுதல் அவித்யையாகும். சுருங்கச் சொல்லின் வித்யை என்ற தத்துவ ஞானத்திற்கு நேர் விரோதமாயும், தத்துவ ஞானத்தால் நிவிருத்தியை யடையக் கூடியதாயு முள்ளது எதுவோ அதுவே அவித்யை எனப் பெறப்பட்டது.

இங்கு ஆத்மா என்றதற்கு ஆத்மீயம் (தன்னைச் சேர்ந்தது) என்றும் பொருள்கொள்ள இடமிருப்பதால் உண்மையில் தன்னைச் சேர்ந்ததாக இல்லாத புத்திர பார்யாதிகளைத் தன்னைச் சேர்ந்தவர்களாக எண்ணி அவர்களது ஸுகதுக்கங்களைத் தனது ஸுகதுக்கங்களாக எண்ணுவதும் அவித்யை என்றே உபதேசிக்கப்பட்டதாய்க் கொள்ளவேண்டும். அனாத்மாவான சரீரத்தை ஆத்மாவாக எண்ணுதல் அவித்யை என்ற விஷயத்தில் மஹான்களா லுபதேசிக்கப்பட்ட சுலோகத்தை மட்டு மிங்கு எழுதுகிறோம்.

रेतोरक्तप्रसूतं जडमशनचितं षड्विकारं त्वगस्थि
स्नायुश्रेण्यान्त्रमज्जारुधिरमयमतिस्वल्पमाध्यामयाढ्यम् ।
प्राणा पाये मृदादिप्रतिममपिच विट्कीटभस्मावशेषं
देहं तं मूढ कस्मादहमिति मनुषे केन ववञ्चितोऽसि ॥

குறிப்பு—அவித்யை, அக்ஞானம் என்றபதங்களால் வித்யையினுடையவும், ஞானத்தினுடையவும் அபாவம் (இல்லாமை மட்

டும் சொல்லப்படுமேயன்றி, தனிப்பட்டதாய் க்ஞான-விரோதியான பாவவஸ்து சொல்லப்படுவதில்லை எனத் தார்க்கிகர் முதலியோர் வாதாடுகின்றனர். ஆயினும் அவர்கள் சொல்வதை நாமங்கீகரிப்பதற்கில்லை. ஏனெனில் "अमित्रः आगतः (அமித்ர: ஆகத:) மித்ரனல்லாதவன் வந்தான், अगोष्पदमस्ति (அகோஷ்பதமஸ்தி) மாட்டுக் கொட்டிலாக இல்லாமலிருக்கின்றது" என்ற விடத்தில் மித்திரனல்லாத வேறு மனிதன், அதாவது: சத்ரு மனிதன் வந்தான் என்றும், கோஷ்பதம் (மாட்டுக் கொட்டில்) இல்லாமல் வேறு இடமாக இருக்கின்றது என்றும் பொருள் ஏற்படுகின்றதே யொழிய மித்திரனின் அபாவம் மட்டுமோ, (இல்லாமைமட்டுமோ) கோஷ்பதத்தின் அபாவம் (இல்லாமை) மட்டுமோ இவ்விரண்டிடங்களிலும் தோற்றத்தை யடைவதில்லை. ஆகவே अमित्रः (அமித்ர:) अगोष्पदम् (அகோஷ்பதம்) என்ற விடத்திலுள்ள "நஞ்" என்றதன் மாற்றுருவமான "அ" என்றதற்கு,

तत्सादृश्यमभावश्च तदन्यत्वं तदल्पता ।
अप्राशस्त्यं विरोधश्च नञर्थाः षट् प्रकीर्तिताः ॥

என்ற வசனப்படி மித்திரத் தன்மைக்கு மாறான தன்மை (சத்துருத்தன்மை) யுள்ளவனும், மித்திரன் போலவே மனிதன் வகுப்பிற் சேர்ந்தவனும், வடிவத்தில் பெரும்பாலும் மித்திரன் போலவே இருப்பவனுமான மனிதனே வந்தான் என்று பொருள் கொள்ளுகிறோம். இவ்விதமே "அகோஷ்பதம்" என்ற விடத்திலும் மாட்டுக் கொட்டில் போலில்லாததும், மாட்டுக் கொட்டியின் தன்மைக்கு நேர்மாறான தன்மையுள்ளதுமான ஒரு ஸ்தான விசேஷமிருக்கின்றது எனப்பொருள் ஏற்படுகின்றது. ஆகவே அவித்யா, அக்ஞானம் என்ற விடத்திலுள்ள नञ् என்றதின் மாற்றுருவமான अ என்றதால் வித்யை, க்ஞானம் இவற்றால் சொல்லப்படும் பொருளுக்கு மாறானதும், வித்யை, க்ஞானம் இவற்றிற்கு நேர் விரோதியானதும், வித்யை, க்ஞானம் இவற்றால் நாசமாக்கக் கூடியதாயுமுள்ள பாவவஸ்துவே சொல்லப்பட்டதாக ஏற்படுமேயன்றி, வித்யையின் அபாவம், க்ஞானத்தின் அபாவம் இவைமட்டு முபதேசிக்கப் பட்டதாகக் கொள்ளல் தகா

தென யோக பாஷ்யத்தில் விரிவாயுபதேசிக்கப் பட்டிருக்கிறது. (எ-று)

(அ - கை) அவித்யையைஉபதேசித்து, அவித்யையின் காரியமான அஸ்மிதையை உபதேசிக்கிறார்.

सू० ॥ दृग्दर्शनशक्त्योरेकात्मतेवाऽस्मिता ॥ ६ ॥

(ஸூ) த்ருக் தர்சன சக்த்யோ ரேகாத்மதேவ அஸ்மிதா (6)

(ப - ரை) दृग्दर्शनशक्त्योः= (த்ருக் தர்சனசக்த்யோ:) திருக்சக்தியான புருஷன், தர்சன சக்தியான சுத்த ஸத்வ குணமயமான புத்தி இவைகளின் **एकात्मतेव**=(ஏகாத்மதேவ) ஒன்றான வுருவமுள்ளதாயிருப்பது போலுள்ள தன்மையானது **अस्मिता**=(அஸ்மிதா) அஸ்மிதா என்ற கிலேசமாக [भवति= (பவதி) ஆகின்றது]

(தா-ம்) ஆத்மாவை போக்தாவென்றும், அனாத்ம பதார்த்தங்களும், பிரகிருதி கார்யங்களுமான புத்தி இந்திரியம் இவைகளை போக்யம் என்றும் சொல்லப் பட்டிருக்கிறது. ஆகவே போக்தாவான ஆத்மாவும், போக்யமான அனாத்ம பதார்த்தங்களும் உண்மையில் வேறு பட்டவைகளாயிருக்க அவித்யையினால் ஆத்மாவை அனாத்மா போலும், அனாத்மாவை ஆத்மாபோலும் எண்ணுதல் அஸ்மிதை எனப்படும். இதையே வேதாந்திகள் **हृदयग्रन्थिः** என்கின்றனர். இந்தச் சூத்திரத்தில் "இவ" என்ற சப்தத்தைப் பிரயோகம் செய்திருப்பதால் ஆத்மா, அனாத்மா இவற்றிற்கு அக்ஞானத்தினால் அபேதமானது தோன்றினபோதிலும், இவ்விரண்டும் உண்மையில் வேறுபட்டவைகளே என்பது தெரிவிக்கப் பட்டது. ஆகவே இவ்விரண்டும் உண்மையில் வேறுபட்டவைகள் என்ற க்ஞானமே விவேகக்யாதி என்றும் அத்தகைய விவேகக்யாதி யுண்டானதும், கைவல்யம் என்ற முக்தியுண்டாகும் என்றும் உபதேசிக்கப்பட்டது. இவ்விதமே

बुद्धितः परं पुरुषमाकारशील विद्यादिभिर्विभक्तमपश्यन् कुर्यात्तत्रात्मबुद्धिं मोहेन ॥

"புத்தியை விடவேறான புருஷனை, ஆகாரம் என்ற ஸ்வரூபம், சீலம் என்ற பிரகிருதி ஸம்பந்த மற்று விலகி நிற்றல், வித்யா என்ற சைதன்யம் இவற்றால் புத்தியை விடவேறாகப் பகுத்தறியாதவனாய் அனாத்மாவான அந்த புத்தியில் ஆத்ம புத்தியை மோஹத்தா லடைகிறான்," என்றதா லுபதேசிக்கப் பட்டிருக்கிறது.

குறிப்பு—இந்தச் சூத்திரத்திற் சொல்லிய அஸ்மிதையும் அஹங்காரம் எனச் சொல்லப்படுவதும் உண்மையில் ஒன்று தானெனச் சிலர் எண்ணுகின்றனர். ஆயினும் அஸ்மிதையும் அஹங்காரமும், ஸ்வரூபத்தில் வேறான தனிப்பட்ட வஸ்துக்களென்றே கொள்ளல்வேண்டும். அதாவது: அந்தக்கரணமானது "அஹம்" (நான்) என்ற தோற்றத்துடன் வெளிநோக்கிச் சென்று எவ்விடத்தில் விஷயங்களையறிகின்றதோ அப்பொழுது அது அஹங்காரம் எனப்படும். அந்தக்கரணமானது அந்தர்முகப் பட்டு அந்தந்த காரியம் அதனதன் காரணத்தி லொடுங்குத லென்ற பிரதிலோமபரிணாமத்தை யொட்டி முறையே சர்வகாரணமான பிரகிருதியிலொடுங்கி ஸ்வரூபமாத்திரமாய் பிரகாசிப்பது அஸ்மிதை எனப்படும் என்பதாம். இவ்விதமே மதுஸூதன ஸரஸ்வதியின் கூடார்த்த தீபிகையில் 6வது அத்தியாயம் 15வது சுலோகத்தி லுபதேசிக்கப்பட்டிருக்கிறது.

(அ-கை) அவித்யை விலகினதும் அஸ்மிதை என்ற அபேதப் பிரமம் விலகி விடுகின்றது; அபேதப் பிரமம் விலகினதும் ராகம் துவேஷம் முதலியன விலகி விடுகின்றன வென்பதை அனுபவத்திற் காண்பது பற்றி அவித்யையாலுண்டு பண்ணப்பட்ட அஸ்மிதையானது ராகாதிகளுக்குக் காரணமாகின்ற படியால் அஸ்மிதையை யுபதேசித்தப் பின்னர் அதன் கார்யமான ராகத்தை யுபதேசிக்கிறார்.

மூ○ ॥ सुखानुशयी रागः ॥ ७ ॥

(ஸூ) ஸுகாநுசயீ ராக: (7)

(ப-ரை) **सुखानुशयी**- (ஸுகாநுசயீ) மோஹத்தினால் அனுபவிக்கப்படுகின்ற சுகத்தையோ, அதன் ஸாதனத்தையோ அனு-

ஸரித்துண்டாகின்ற சித்த விருத்தியானது रागः=(ராக:) ராகம் எனப்படும்.

(தா-ம்) ஸுகத்தையோ, ஸுகசாதனத்தையோ "இது ஸுகம், இது ஸுகசாதனம்" எனத் தெரிந்தனுபவித்தவனுக்கு மறுபடியும் அந்தச் சுக விஷயமாகவோ, ஸுக ஸாதன விஷய மாகவோ நினைவுண்டாகி இதுபோன்ற சுகமோ, ஸுகஸா தனமோ மேன் மேலும் வேண்டுமென சித்தத்தி லுண்டா, கும் விருத்தியானது ராகம் எனப்படும் (எ-று)

குறிப்பு—சுகத்தையோ திருஷ்டமாயும், அதிருஷ்டமாயு முள்ள அதற்குரிய ஸாதனத்தையோ புருஷன் நினைத்தபடி ஸம் பாதித்துத்தரும் ஸாமக்ரீ இல்லாவிடில் உண்டான ராகமானது சித்தத்தைக் கலக்கி விடுகின்றது. ஆனது பற்றியே இந்த ராக மானது கிலேச வகுப்பிற் சேர்ந்ததாக வாகின்றது. ஆனால் ஸுகிகளான பிராணிகளைக் கண்டதும் "சுகானுபவம் செய்யும் இவர்கள் யாவரும் நம்மைச் சேர்ந்தவர்களே யாகையால் இவர் களுக்குண்டாகும் ஸுகம் நமக்குண்டானதாகவே ஆகிவிட்டது" என எண்ணுகின்றவனுக்கு தன்னிடமிருந்து ராஜ்யாதிகாரம் போனபோதிலும் புத்திரனிடமுண்டான ராஜ்யாதிகாரத் தைத் தன்னுடையதாகவே எண்ணுகின்றவனுக்குஅந்த ராஜ்யத் தில் ஆசை ஒழிவது போல ஸுகத்திலோ அதன் ஸாதனத்தி லோ ஆசை ஒழிந்துவிடுகின்றது. ஆசை விலகவே, மழைகாலம் போனதும் ஜலம் தெளிவதுபோல சித்தமானது தெளிவையடை கின்றது.

(அ-கை) அஸ்மிதையின் காரியமான துவேஷத்தை இந்தச் சூத்திரத்தாலுபதேசிக்கிறார்.

ஸூ० ॥ दुःखानुशयी द्वेषः ॥ ८ ॥

(ஸூ-ம்) துக்கானுசயீ த்வேஷ: (8)

(ப-ரை) दुःखानुशयी=(துக்கானுசயீ) மோஹம் காரண மாய் அனுபவிக்கப் படுகின்ற துக்கத்தையோ, அதன் ஸா

தனத்தையோ அனுஸரித்துண்டாகின்ற சித்த விருத்தியானது **द्वेषः**-(த்வேஷ:) த்வேஷம் எனப்படும்.

(தா - ம்.) "இதுதுக்கம்" எனத் தெரிந்தனுபவித்தவனுக்கு மறுபடியும் அத்துக்க விஷயமான நினைவுண்டாகி அத்துக்கத்தை விஷயமாகக் கொண்டு "இதுபோன்றதுக்கமே எனக்கு வரவேண்டாம்" என சித்தத்திலுண்டாகும் சங்கோசவடிவமான விருத்தியோ (மாறுதலோ) அல்லது துக்கத்தை யுண்டுபண்ணியதாக நினைவிற்றோன்றியதாகவோ, துக்கத்தை யுண்டுபண்ணக் கூடியதென நேரில் காணப்படுகின்றதாகவோ உள்ள துக்கசாதனத்தை விஷயமாகக்கொண்டு சித்தத்திலுண்டாகும் ஸங்கோச வடிவமான விருத்தியோ, துவேஷம் எனப்படும்.

குறிப்பு—நேரில் துக்கத்தையோ, திருஷ்டமாயும், அதிருஷ்டமாயுமுள்ள அதன் சாதனமான சத்துரு. வியாதி, புலி, நரகம் முதலியவற்றையோ புருஷன் நினைத்தபடி விலக்கித்தரும் ஸாமக்ரீ இல்லாவிடில் உண்டான அந்தத்வேஷமானது சித்தத்தைப் பொசுக்கிவிடுகின்றது. ஆனதுபற்றியே இந்தத்துவேஷமானது கிலேசவகுப்பிற் சேர்ந்ததாகவாகின்றது. "தனக்குப் போலவே ஏனையபிராணிகட்கும் துக்கமே உண்டாகவேண்டாம்" எனத் துக்கிகளான பிராணிகளிடத்து கருணையைச் செலுத்துகின்றவனுக்கு சத்துருமுதலியன இல்லாமலாகி விடுகின்றபடியால் சித்தமானது தெளிந்து விடுகின்றது. இதுவே துவேஷத்தை விலக்குவதற்குரிய ஸாமக்ரீயாகும்.

(அ - கை) அபிநிவேசத்தின் ஸ்வரூபத்தை யுபதேசிக்கிறார்—

सू॰ ॥ स्वरसवाही विदुषोऽपि तथारूढोऽभिनिवेशः ॥ ९ ॥

(ஸூ) ஸ்வரஸவாஹீ விதுஷோபி ததா ரூடோ அபிநிவேச: (9)

(ப - தை) [**अविदुषः**-(அவிதுஷ:) பகுத்தறிவற்ற பிராணிக்கு **यथा**-(யதா) எவ்விதமோ] **तथा**-(ததா) அவ்விதமே **विदुषोऽपि**-

(விதுஷோபி) சாஸ்திராநுமானங்கள் மூலம் பின்னர் வரும் முக்தி யையும், முன்னருள்ள பந்தத்தையும் நன்கறிந்தவர்க்குங்கூட **स्वरसवाही**=(ஸ்வரஸவாஹீ) முந்தின ஜன்மானுபவத்தினின்று முண்டான வாஸனையை யொட்டி ஏற்படுகின்றதும் **रूढः**=(ரூட:) அநுபவத்திலிருப்பதால் மிக்கபிரசித்தமானதுமான [**मरणत्रासः**= (மரணத்ராஸ:) மரணபயமானது] **अभिनिवेशः**=(அபிநிவேச:) அபி நிவேசம் எனப்படும்.

(தா - ம்) முந்திய ஜன்மங்களில் அடிக்கடி நேர்ந்த மரண துக்கானுபவத்தினின்று முண்டான வாஸனையின் கூட்டம் "ஸ்வ ரஸம்" எனப்படும். அத்தகையவாஸனைக் கூட்டத்தினுல் பண் டிதர்முதல் பாமரரீறுகவும், மனிதன் முதல் புழுவீறுகவுமுள்ள ஸகல பிராணிகளுக்கும் "எனக்கு மரணமுண்டாக வேண்டாம், உயிருடனேயே நானிருக்கவேண்டும்" என்ற விருப்பமானது நித்யமாகவே காணக்கிடக்கின்றது. இதனுல் வேறு பிறவிக ளில் அநுபவிக்கப்பட்ட மரணதுக்கத்தையுடைய ஜீவனுக்கு அவ்வித துக்கம் நினைவுக்கு வந்ததும் அதனின்றும் மரணபயம் என்ற அபிநிவேசமுண்டாகி அம்மரண பயம் காரணமாய் மேற்கூறியபடி எண்ண முண்டாகின்றதென வேற்படுகின்றது. இத்தகைய மரணபயமானது கிலேசத்தை யுண்டு பண்ணுவதால் கிலேசத்தின் வகுப்பிற் சேர்ந்ததாகவே யா கின்றது. மேலும் மேற்சொல்லிய மரணபயமானது அன்று பிறந்த குழந்தைக்கு முண்டாவதை நாம் அநுபவத்திற் காண் கிறோம். அதாவது:—தாயின் மடியிலேறி முலைப்பால் குடிக்கும் தருணத்தில் தைவச் செயலாய்தாயின் கைதவறிக் கீழ்விழ நே ரும் சந்தர்ப்பத்தில் குழந்தை உடல்நடுக்கமுற்று உடனே தா யின் மாங்கல்யக் கயிற்றையோ, அல்லது ஏதோ ஒரு பிடிப்பை யோபற்றிக் கொள்வதை நாம்பலஸமயங்களில் அநுபவத்திற் காண்கிறோம். அக்குழந்தைக்கு அச்சமயமுண்டான சரீர நடுக் கத்தினின்றும் பின்வருமாறு நாமூஹித்தறிய இடமேற்படுகின் றது. அதாவது:—இக்குழந்தைக்கு அச்சமயம் முன்னர் அநுப வித்த மரணதுக்கம் நினைவிற்குவந்து அதனுலேயே உடல்துடிக் கின்றது. இல்லையேல் தன்னையோ உலகத்தையோ, உலகத்தில்

மறித்தவர்களேயோ கண்டறியாத இக்குழந்தைக்கு உடல் நடுங்கக் காரணமில்லை என்பதாம்.

உலகில் கார்யத்தைக் கொண்டு அதற்குரிய காரணத்தை இன்னதென நாமறிய முயற்சி செய்யும் பொழுது அக்காரணம் எவ்விதத்தாலும் திருஷ்டமாக (கண்கூடாகக் காணக்கூடியதாக) இல்லாவிடில் அதிருஷ்டமாயிருப்பதாகவே எண்ணவேண்டியவர்களாயிருக்கிறோம். இங்கு குழந்தைக்கு "சரீரநடுக்கம்" என்ற கார்யமுண்டாயிருப்பதற்கு திருஷ்டமான காரணம் எதுவும் சொல்ல முடியாததாக விருப்பதால் அதிருஷ்டகாரணமான முந்தியஜன்மத்தில் நேர்ந்த மரணபயத்தின் நினைவாலேயே இது ஏற்பட்டிருக்கிறது என எண்ணவேண்டியதாக இருக்கிறது. ஆகவே இக்குழந்தை இப்பிறவியில் நேரில் மரணத்தை யனுபவிக்கவோ, ஊஹித்தறியவோ, பிறர் சொல்லக் கேட்டறியவோ, இது துக்கமென்றோ, துக்கத்திற்குக் காரணமென்றோ அறிந்து கொள்ளவோ சக்தியற்றதாயிருப்பதால் இக்குழந்தையின் சரீர நடுக்கத்திற்கு அக்காலம் நாமறியாதபடி ஓர்வித நினைவு வந்திருக்கவேண்டும். அவ்வித நினைவுவரவேண்டுமானால் சித்தத்திலனுபவத்தாலுண்டாய ஸம்ஸ்கார மிருந்திருக்கவேண்டும். ஸம்ஸ்காரம் வேண்டுமானால் அனுபவம் வேண்டியிருக்கிறது. அனுபவமோ இந்தப் பிறவியிலில்லை. ஆனது பற்றி அனுபவம் முந்திய ஜன்மத்திலிருந்ததென்றும், ஆனது பற்றியே இந்த ஜீவனுக்கு இதற்குமுன் அனேகப்பிறவிகள் நேர்ந்திருக்கின்றனவென்றும் ஏற்பட்டது. இவ்விதம் பலஜன்மமெடுத்த ஜீவனுக்கு மரணகாலத்தில் நேரும் பயமே "அபிநிவேசம்" என இந்தச் சூத்திரத்தாலுபதேசிக்கப்பட்டது. (எ - று)

(அ - கை) இதுவரை அவித்யா, அஸ்மிதா, ராகம், துவேஷம், அபிநிவேசம்என்ற கிலேசங்களும், பிரஸுப்த, தனு, விச்சின்ன, உதாரம், என்ற அக்கிலேசங்களின் நான்கு அவஸ்தைகளும் உபதேசிக்கப்பட்டன. அத்தகைய அவித்யாமுதலிய கிலேசங்கள் ஸ்தூலங்களென்றும், ஸூக்ஷ்மங்களென்று மிருவகைப்படும். அவற்றுள் ஸ்தூலமான கிலேசங்கள் தேயும்படி

செய்யக்கூடிய கிரியாயோகங்களும், மைத்ரீ முதலிய சித்த பரி கர்மங்களு முபதேசிக்கப்பட்டன. இனிமுற்கூறிய கிரியாயோகம் முதலியவற்ருல் தேய்ந்து ஸூக்ஷ்ம நிலையையடைந்த அக்கிலேசங்களை முற்றிலும் போக்குவதற்குரிய சாதனம் உபதேசிக்கப்படுகின்றது.

सू० ॥ ते प्रतिप्रसवहेयास्सूक्ष्माः ॥ १० ॥

(ஸூ) தேப்ரதிப்ரஸவஹேயா: ஸூக்ஷ்மா: (10)

(ப - மை) ते=(தே) அந்த सूक्ष्माः=(ஸூக்ஷ்மா:) ஸூக்ஷ்மமான கிலேசங்கள் प्रतिप्रसवहेयाः=(ப்ரதிப்ரஸவஹேயா:) प्रतिप्रसव=(ப்ரதிப்ரஸவ) தனதுகாரணத்தில் லயம் செய்வித்தலால் हेयाः=(ஹேயா:) போக்கத்தக்கவைகள்.

(தா - ம்) ஸூக்ஷ்மமான நிலையையடைந்த கிலேசங்கள் சித்தத்தைவிட்டு விலகவேண்டுமாளுல் சித்தத்தைத் தனது காரணமான அஸ்மிதையில்லயமடையும்படி செய்யவேண்டும். இவ்விதம் செய்வதால் சித்தத்திலுள்ள ஸூக்ஷ்மமான கிலேசங்கள் விலகிவிடுகின்றன.

சங்கை—கிரியாயோகானுஷ்டானத்தாலும், மைத்ரீ முதலிய சித்த பரிகர்மத்தாலும், பலனைத்தரக்கூடிய கிலேசங்களின் சக்தியானது பொசுக்கப்பட்டதாகவாகி விடுகின்றதென வேற்படுவதால் அக்கிலேசங்கள் எத்தகைய அனர்த்தங்களையும் உண்டு பண்ணக் கூடாதனவாக ஆகி விடுவதால் மறுபடியும் இந்தச் சூத்திரத்தால் ஸூக்ஷ்மமான கிலேசத்தின் நிவிருத்திக்கு உபாயமுபதேசிக்க வேண்டுவதின் அவச்யம் யாதெனின்?

உத்தரம்—புதிய மண்பாத்திரத்தில் கரோஸின் ஆயில் (மண்ணெண்ணை) முதலியவற்றை ஊற்றி வைத்திருக்கிறோம் என்பதை யெடுத்துக் கொள்வோம். இங்கு மண் குடத்தினின்றும் எண்ணையைக் கொட்டிவிட்டோமாயினும் அவ்வெண்ணையின் மணம் அக்குடத்தைவிட்டு விலக வேண்டுமாளுல் அக்குடத்தை நெருப்பிலிட்டு புடம் போட்டு எரிதாலல்லாது அந்த மணம்

போவதில்லை என்பதை நாமனுபவத்தில் காண்கிறோம். இது போலவே சித்தத்திலுள்ள ஸ்தூலமான கிலேசங்கள் கிரியா யோகம் முதலியவற்றால் விலகினபோதிலும் அவ்வித கிலேசங் களின் ஸூக்ஷ்ம நிலையான வாஸனையானது சித்தத்தை விட்டு முற்றிலும் விலகுவதே புருஷார்த்த மாதலாலும், அவ்விதம் ஸூக்ஷ்ம மான கிலேசங்களும் சித்தத்தை விட்டு விலகவேண்டு மானால் சித்தத்தைத் தனது காரணமான அஸ்மிதையில் லயப் படுத்தி அதனின்றும் ஸூக்ஷ்மமான கிலேசங்களையும் விலக்க வேண்டுவது அவசியமாகின்றமையாலும் அதற்கு வேண்டி இந்தச் சூத்திரம் ஆரம்பிக்க வேண்டுவதவசியமாகி விட்டது. (எ-று).

(அ-கை) கிரியாயோகத்தால் குறைக்கப்பட்ட முற்கூறிய கிலேசங்கள் முற்றிலும் விலகிவிடுவதற்கு வேண்டிய புருஷப்பிர யத்தினத்தை இந்தச் சூத்திரத்தாலுபதேசிக்கிறார்.

सू० ॥ ध्यानहेयास्तद्वृत्तयः ॥ ११ ॥

(ஸூ) த்யான ஹேயா: தத்வ்ருத்தய: (11)

(ப-ரை तद्वृत्तयः=(தத்வ்ருத்தய:) கிரியாயோகத்தால் தேயும் படி செய்யப்பட்ட கிலேசங்களின் ஸ்தூல விருத்திகள் ध्यानहेयाः= (த்யானஹேயா:) புருஷனுடைய தியானத்தால் முற்றிலும் விலக் கத்தக்கவைகளாக [भवन्ति=(பவந்தி) ஆகின்றன]

(தா-ம்) வஸ்திரத்திலுள்ள அதிகமான அழுக்கானது ஜலத் தில் நனைத்ததும் வெளிக்கிளம்புகின்றதாயினும் வேஷ்டியோடு பற்றி இருக்கும் அழுக்கை உழவு மண் முதலியவற்றால் பெரும் பாலும் போக்குகிறோம். அதற்கும் விலகாது ஸூக்ஷ்மமாய் எஞ்சியிருக்கும் அழுக்கோ, அழுக்கின் வாசனையோ, அக்னி முத லியவற்றால் வேஷ்டி நாசமடைந்தால்தான் அதைவிட்டு நீங்கு கின்றது என்பதை நாமனுபவத்திற் கண்டிருக்கிறோம். இவ் விதமே மரத்தால் செய்த புதிய பாத்திரத்தில் மண்ணெண்ணை முதலியவற்றை ஊற்றி வைத்தால், பிறகு அதனின்றும் எண்

ணையை எடுத்த பிறகும் அப்பாத்திரத்தில் பெரும்பாலும் பற்றிய எண்ணையை துணி முதலியவற்ருல் துடைத்தும், பின்னும் பற்றி இருக்கும் பாகத்தை அரப்பு, சீக்காய் பொடி முதலியவற்றைக் கொண்டு சுத்தம் செய்தும் போக்குகிறோம். அதிலும் விலகாத அவ்வெண்ணையின் நாற்றமானது அம்மாத்தாலாய பாத்திரத்தை நெருப்பிலிட்டு நாசமாக்கினுல் அத்துடன் நாசமாகி விடுகின்ற தென்பதை நாம் அனுபவத்திற் காண்கின்றோம்.

இவ்விதமே சித்தமாகிறமரப்பாத்திரத்திலிட்ட கிலேசமாகிற மண்ணெண்ணையை மைத்திரீ முதலிய சித்த பரிகர்மத்தால் கீழே கொட்டியும், ஸ்தூல விருத்திகளான எண்ணையின் அதிகப் பற்றை கிரியாயோகம் என்ற சீக்காய் பொடியால் தேய்த்தும், அதற்கும் போகாது எஞ்சி யிருக்கும் ஸூக்ஷ்ம விருத்திகளாகிற வாஸனையை பாத்திரத்தை நெருப்பிலிடுவது போன்ற அஸ்மிதையில் லயப்படுத்தல் என்ற புருஷத்தியானத்தால் ஸ்வரூபநாசம் செய்தும் போக்கவேண்டும். மேலும் கிலேசங்களின் ஸ்தூல விருத்திகள் ஸ்வல்பசத்துருக்களாகவும், ஸூக்ஷ்ம விருத்திகளே அதிகம் சத்துருக்களாகவு மனுபவமூல மேற்படுவதால் அதிக விரோதியான இந்தச் சூக்ஷ்ம விருத்திகளைப் போக்கும் விஷயத்தில் மனிதன் தக்கமுயற்சி எடுத்துக் கொள்ளல் வேண்டும் என்றும் இதனுல் பெறப்பட்டது. (எ - று)

(அ - கை) இதுவரை கிலேசங்கள் இன்னின்னவை என்றும், அதை விலக்கவேண்டி முயற்சி செய்தல் அவசியம் என்றும் உபதேசிக்கப்பட்டிருப்பதால் சித்தத்திலுள்ள வாஸனைகளே சத்துருக்களென வேற்படுவதால் சித்தத்திலுள்ள கர்மவாஸனைகளையே "கிலேசம்" எனச்சொல்லுதல் பொருத்தமாயிருக்க அவித்யை, அஸ்மிதை முதலியவற்றை கிலேசங்களெனச் சொன்னது எங்ஙனம் பொருந்துமெனின் அதற்கு இந்தச் சூத்திரத்தால் பதில் கூறுகிறுர்—

सू० ॥ क्लेशमूलः कर्माशयो दृष्टादृष्टजन्मवेदनीयः ॥ १२ ॥

(ஸூ) க்லேசமூல: கர்மாசயோ த்ருஷ்டாத்ருஷ்ட ஜன்மவேதனீய: (12)

(ப - ரை) **क्लेशमूलः**=(க்லேசமூல:) அவித்யாதிகளைக் காரணமாகவுடைய **कर्माशयः**=(கர்மாசய:) சித்தத்திலுள்ள கர்மவாஸனையானது **दृष्टादृष्टजन्मवेदनीयः**=(த்ருஷ்டாத்ருஷ்டஜன்மவேதனீய:) **दृष्ट**=(த்ருஷ்ட) இந்த ஜன்மத்தாலும் **अदृष्ट**=(அத்ருஷ்ட) இனிவரும் ஜன்மத்தாலும் **वेदनीयः**=(வேதனீய:) அனுபவிக்கத்தகுந்ததாக [**भवति** = (பவதி) ஆகின்றது.]

(தா - ம்) அவித்யை, அஸ்மிதை, ராகம், த்வேஷம் அபிநிவேசம், இவைகளைக் காரணமாகக்கொண்ட, அதாவது: இவற்றினின்று முண்டான கர்மவாஸனையானது பிறப்பு, ஆயுள், போகம் இவற்றைத்தருவது பற்றி அவித்யை முதலியன கிலேசங்களென வேற்படுவதால் அவற்றை விலக்கவேண்டுவதவசியமென வேற்பட்டது. மேலும்—"**कर्माशयः—आशेरते सांसारिकाः पुरुषाः अस्मिन्नित्याशयः, कर्मणां आशयः कर्माशयः धर्माधर्मौ** "ஸாம்ஸாரிக புருஷர்கள் இவற்றுள்ளடங்கி இருக்கின்றனர் ஆனதுபற்றி இது ஆசயம் எனப்படும், கர்மங்களின் ஆசயமானது கர்மாசயமாகும், அந்தக்கர்மாசயமானது தர்மாதர்மங்களாகும்" என வாசஸ்பதிமிச்ரர் தமது பாஷ்ய வியாக்யானத்திற் கூறியிருப்பதால் தர்மாதர்மங்களே கர்மாசயம் என்ற பதத்தால் கூறப்பட்டதாக வேற்பட்டது. இவற்றுள் வாஸனையை முன்னிட்டு காம்யகர்மத்தில் பிரவிருத்தியேற்படும்பொழுது சுவர்க்காதிகளுக்குக்காரணமான தர்மமுண்டாகின்றது. இவ்விதமேலோபத்தினால் பிறரின் திரவ்யாபஹாரத்தில் பிரவிருத்தியேற்படும்பொழுது அதர்மமுண்டாகின்றது. மோஹத்தால் அசாஸ்திரீயமான ஹிம்ஸாதிகளில் தர்மபுத்தியால் பிரவிருத்திப்பவனுக்கும் அதர்மமேயுண்டாகின்றது. தர்மமானது மோஹத்தாலுண்டாவதில்லை. கோபத்தாலோ தர்மமுண்டாகாலம். எவ்விதமெனின்—துருவனுக்கு தனது பிதாவின் அவமானம் காரணமாயுண்டான கோபத்தால் அவரை ஜயிக்கவேண்டி ஸம்பாதிக்கப்பட்ட கர்மவாஸனையாகிற புண்யத்தால் அந்த ரிக்ஷலோக வாஸிகளுக்கும் மேலான ஸ்தானபிராப்தியானது உண்டாயிருக்கிறது என்பதாம். கோபத்தால் அதர்மமுண்டாகின்றதென்பது பிராம்மணவதம் முதலிய விடங்களில் பிரசித்தமானதே.

ஆகவே தர்மாதர்மங்களென்ற கர்மாசயமானது (கர்மவாஸனையானது) திருஷ்டஜன்மவேதனீயம் என்றும், அதிருஷ்டஜன்ம வேதனீயம் என்றும் இரண்டு விதமாகப் பிரிக்கப்படுகின்றது. எந்தத்தேஹத்தால் கர்மமானது செய்யப்பட்டதோ அது திருஷ்டஜன்ம மெனப்படும். அதே தேஹத்தா லனுபவிக்கவேண்டியது திருஷ்டஜன்ம வேதனீயம் எனப்படும். எந்தத்தேஹத்தால் கர்மம் செய்யப்பட்டதோ அந்தத்தேஹமழிந்ததும் பின்னர்வரும் தேஹத்தாலனுபவிக்கப்படுவது அதிருஷ்டஜன்ம வேதனீயம் எனப்படும். அவற்றுள் தீவ்ரவேகத்துடன் செய்யப்பட்ட மந்திரம், தபஸ், ஸமாதி, இவைகளாலோ, ஈசுவரன், தேவதை, மஹருஷிகள், மற்றுமுள்ள மஹான்கள் இவர்களின் ஆராதனைத்தாலோ உண்டான புண்யகர்மவாஸனையானது அதேஜன்மத்தில் பலனைத்தர வாரம்பித்து விடுகின்றது. இவ்விதமே தீவ்ரவேகத்தால், பயந்தவன், வியாதியுள்ளவன், ஏழை, நம்பினவன், அல்லது மஹானுபாவர்கள், தபஸ்விகள் இவர்கள் விஷயத்தில் செய்யப்படும் அபகாரத்தாலுண்டாகும் பாபகர்மவாஸனையும் அதேஜன்மத்தில் பலனைத்தர வாரம்பித்துவிடுகின்றது. இவ்விஷயத்திற்கு திருஷ்டாந்தங்களாக நந்திகேசுவரர், நஹுஷன் இவர்களின் சரித்திரங்களாகும். அதாவது—"நந்திகேசுவரர் குழந்தைப் பருவத்திலேயே ஈசுவராராதன புண்யபிரபாவத்தால் மனுஷ்ய சரீரத்தை மாற்றிக்கொண்டு தேவபாவத்தை யடைந்திருக்கிறார். இவ்விதமே நஹுஷன் என்ற சக்கிரவர்த்தி தேவேந்திர பதவியையடைந்திருந்த போதிலும் மஹானுகிற அகஸ்த்யரிடம் செய்த அபசாரத்தால் தேவசரீரம்போய் மலைப்பாம்பாகப்பிறந்தார்" என்பது முதலியனவாம். ஆனல் நரகயாதனையை அனுபவிக்கும் பிராணிக்கு அதேஜன்மத்தில் பலனைத்தரக்கூடிய புண்யகர்மவாஸனையோ, பாபகர்மவாஸனையோ இரண்டு முண்டாவதற்கிடமில்லை. கிலேசமற்ற யோகிகளுக்கும் அடுத்த ஜன்மத்தில் பலன் தரக்கூடிய கர்மவாஸனை கிடையா. (எ - று)

(அ - கை) கிலேசங்கள் கர்மவாஸனைக்குக் காரணமாவது போலவே, அதன்பலனுன ஜாதி, ஆயுள், போகம், இவற்றிற்கும் காரணமாகின்றனவென்பதை இந்தச்சூத்திரத்தாலுபதேசிக்கிறார்:

सू० ॥ सति मूले तद्विपाको जात्यायुर्भोगाः ॥ १३ ॥

(ஸூ) ஸதிமூலே தத்விபாகோ ஜாத்யாயுர்ப் போகா: (13)

(ப - ரை) **मूले**=(மூலே) கிலேசரூபமான காரணமானது **सति**=(ஸதி) இருக்கும்பொழுது **तद्विपाकः**=(தத்விபாக:) அவற்றின் பலன் [**भवति**=(பவதி) உண்டாகின்றது **तेचविपाकाः**=(தேசவிபாகா:) அந்தப்பலன்களும்] **जात्यायुर्भोगाः**=(ஜாத்யாயுர்ப்போகா:) பிறப்பு, ஆயுள், சுகதுக்கானுபவங்கள் இவைகளாகும்.

(தா - ம்) கிலேசங்கள் சித்தத்தில் வாஸனையை யுண்டாக்கி ஜாதி, ஆயுள், போகம் என்றவாஸனையின் பலனையுமுண்டாக்குகின்றன. எவர்க்குக் கிலேசங்களாகிற காரணங்கள் விலகி விடுகின்றனவோ அவர்க்குக் கர்மவாஸனையோ, அதன்பலனான ஜாதி, ஆயுள், போகம் இவைகளோ உண்டாவதில்லை. காமனையற்றவனுக்கு எத்தகைய கர்ம பலத்திலும் சுகபுத்தியுண்டாவதில்லை. பயத்தையடையாதவன் சோகத்தையடைவதில்லை என்பதை நாமனுபவத்தில் காண்கிறோம். ஆகவே விவேகக்கியாதியாகிற அக்னியால் கிலேசங்காகிற பீஜங்கள் வறுக்கப்பட்டுவிடின், உம்மியில்லாததாகவோ, வறுக்கப்பட்ட உம்மியை உடையதாகவோ உள்ள அரிசியானது தனது கார்யமான முளையை எவ்வித முண்டாக்குவதில்லையோ, அவ்விதமே கர்மவாஸனையோ அதன் கார்யமான ஜாதி, முதலியனவோ உண்டாவதற்கிடமில்லை. அவற்றுள் ஜாதி என்றதால், பிறப்பு அல்லது தேவத்தன்மை முதலியன கூறப்பட்டதாகவும், ஆயுள் என்றதால் வேருகாலம் தேஹம் இந்திரியம் இவற்றின் சேர்க்கை கூறப்பட்டதாகவும், போகம் என்றதால் இந்தியங்களாலுண்டாகும் விஷயானுபவம் கூறப்பட்டதாகவும் கொள்ளல் வேண்டும்.

மேலும் ஒரேதேஹத்தால் விசித்திரமான போக முண்டாவதிலிருந்து மரணகாலத்தில் அபிவ்யக்தியை (பிரகாசத்தை) யடைந்த அநேகம் கர்மங்கள் ஒன்று சேர்ந்தே ஒரு பிறப்பை உண்டாக்குகின்றதெனக் கொள்ளலவசியமாகும். மேலும் இத்

தகையகர்மங்களால் ஓரிடத்தில் பிறப்புமாத்திரமும், சிலவிடத்தில் ஆயுள்மாத்திரமும், சிலவிடத்தில் போகம்மாத்திரமும், சிற்சில விடங்களில் ஜாதி, ஆயுள் இவ்விரண்டும், மற்றும் பலவிடத்தில் ஜாதி, ஆயுள், போகம் ஆகிய மூன்றும் உண்டாகின்றதென பலனிலுள்ள விசேஷத்தைக் கொண்டு நாமூஹித்துக் கொள்ளலாம். இவ்விதமே ஸ்ரீகீதாசாரியனும் "गहनाकर्मणोगतिः கர்மத்தின் போக்கறிதல் (பலனை யறிதல்) சிரமமானது என்றதாலுபதேசித்திருக்கிறார்.

கர்மங்களால் பலனுண்டாகும் முறை.

இவ்விஷயமாய் யோக பாஷ்யத்திற் சொல்லியவற்றை ஈண்டெடுத்தெழுதுவாம். கர்மமூலம் ஜன்ம முண்டாவதாகக் கூறப்படுகின்றது. அவ்விஷயமாகச் சிலவாசங்கைகள் உதயமாகின்றன. அவையாவன—(1) ஒரு கர்மம் ஒரு ஜன்மத்தை மட்டுமுண்டு பண்ணுகின்றதா? அல்லது வெகு ஜன்மத்தை யுண்டு பண்ணுகின்றதா ? (2) அனேகம் கர்மங்கள் சேர்ந்து ஒரு ஜன்மத்தை யுண்டு பண்ணுகின்றனவா? அல்லது அநேகம் கர்மங்கள் சேர்ந்து அனேகம் ஜன்மத்தை யுண்டுபண்ணுகின்றனவா? என்பனவாம்.

இவற்றுள் ஒரு கர்மமானது ஒரு ஜன்மத்திற்குக் காரணமாகின்றது என்பது பொருந்தாது. ஏனெனில் அனாதிகாலம் தொட்டு அந்தந்த ஜன்மங்களிற் சம்பாதிக்கப் பட்டதும், ஆனது பற்றியே அளவு கடந்ததும், பலந்தராது எஞ்சி இருப்பதும், இந்த ஜன்மத்திற் செய்யப்பட்டதுமான கர்மத்திறகுப் பலனுண்டாவதில் இன்ன கர்மபலத்திற்குப் பின்னர் இன்ன கர்மபலனுண்டாகின்றதென கிரமமில்லாமை பற்றி கர்மமூலம் பிறவி முதலியன வுண்டாகின்றதென்ற வாதத்தில் லோகத்திற்கு விசுவாஸக்குறை வுண்டாகும். லோகத்திற்கு விசுவாஸக் குறைவுண்டாக்கு வதை யெவரும் ஒப்புவதற்கில்லை. ஆகவே ஒரு கர்மம் ஒரு ஜன்மத்தை யுண்டாக்கு கின்றது எனச்சொல்லுதல் பொருத்த மில்லாததாகி விட்டது.

"ஒரு கர்மம் அனேகம் ஜன்மத்தையுண்டுபண்ணுகின்றது" என்பதும் பொருத்த மில்லாததே. ஏனெனில்—அநேக கர்மங்கள் பலன் தரவேண்டியவைகளாக மீதமிருக்கும் பொழுது ஒரு கர்மமே அனேகம் ஜன்மங்களைத் தருவதானால் மீதமுள்ள கர்மங்களுக்கு பலனைக் கொடுக்க அவகாச மில்லாமலாகி விடுகின்றது ஆதலால் இதுவும் ஒப்பத்தகாததே.

"அநேக கர்மங்கள் அநேகம் ஜன்மங்களைத் தருகின்றன" என்பதும் பொருந்தாது. ஏனெனில் அனேக ஜன்மாவானது ஒரே ஸமயத்தில் ஸம்பவிக்க முடியாதானதுபற்றி ஒன்றின் பின்னொன்றாகவே வருவதாக ஒப்பவேண்டும். ஆதலால் முற்கூறிய தோஷம் இந்தபக்ஷத்திலும் ஏற்படுவதால் இதுவும் ஒப்பத்தகாததாகவே யாகின்றது.

ஆகவே இம்மூன்று பக்ஷங்களும் ஸம்பவிக்காமல் போகவே அநேகம் கர்மங்கள் சேர்ந்தே ஒரு ஜன்மமானது உண்டாகின்றது என்ற பக்ஷம் மட்டுமீத மிருப்பதால் இப்பக்ஷத்தை யொட்டிப் பார்க்கும் பொழுது பிறப்பு, இறப்பு இவ்விரண்டிற்கும் இடையிலுள்ள காலத்தில் செய்யப் பட்டவைகளும் சுகதுக்க ரூபமான விசித்திர பலன்களைத் தருகின்றவைகளுமான புண்யபாப கர்மங்களுடைய வாஸனையின் கூட்டமானது, ஒன்று பிரதான மாயும், (எந்தக்கர்மம் அடுத்த படியாய் பலனைத் தரக்கூடியதோ அதே பிரதானம் எனப்படும்) மற்றவை அதற்குள் ளடங்கியதாயும் (எது கொஞ்ச காலம் சென்று பலனைத் தரக்கூடியதோ அது அதற்குள்ளடங்கியதாகும்) மரணகாலத்தில் தமது கார்யத்தைச் செய்யத் தொடங்கினவைகளாய்க் கொண்டு ஒரே நோக்கத்துடன் மரணத்தைக் கொடுத்தும், யாவும் ஒன்று சேர்ந்து ஒரே ஜன்மத்தையும் கொடுக்கின்றன வென்றும், அவ்விதம் வரும் ஜன்மமானது அந்தக் கர்மத்தின் வேகமுள்ளவரை ஆயுளுள்ளதாயாகின்ற தென்றும், அதேகர்மத்தால் அந்த ஆயுளில் விஷயானுபவத்தையு மடைகிறான் என்றும் ஏற்படுகின்றது. ஆகவே இந்தக் கர்மாசயமானது ஜன்மம், ஆயுள், போகம் இவற்றிற்கு காரணமாயிருப்பது பற்றி மூன்றுவித பலனுள்ள தென்று சொல்லப்படுகின்றது. ஆதலால் கர்மவாஸனையானது ஜன்மத்தைத்தர

க்கூடியதென்று ஏற்பட்டது.

இதுவரை அடுத்த ஜன்மம், அதனாயுள், அதிலுள்ள போகம், இவைகள் ஒன்றுசேர்ந்த அநேக கர்மங்களின் வாஸனையால் வரும் விதம் எழுதப்பட்டது. எந்தத்தேஹத்தால் எந்தக் கர்மம் செய்யப்பட்டதோ அத்தேஹத்திலேயே ஜன்மம், ஆயுள், போகம் இம்மூன்றும் வரும்விதம் இனி எழுதப்படுகின்றது.

அதாவது :— இந்த ஜன்மத்தில் செய்யப்படும் கர்மம் ஜன்மத்தைத்தருவதன் மூலம் ஒரேபலனைத்தரக்கூடிய தாகவும் ஜன்மம், போகம் இரண்டையுமேதருவதால் இரண்டு பலனைத்தரக்கூடிய தாகவும், ஜன்மம், ஆயுள், போகம் இம்மூன்றையுமே தருவதால் மூன்றுபலனைத் தரக்கூடியதாகவுமாகலாம். நந்திகேசுவரர், துருவஸ்வாமி இவர்களுக்கு பகவதாராதனபுண்யமானது உயர்ந்த ஜன்மம், நீண்டவாயுள் உயர்ந்த போகம் இவற்றைத் தந்திருப்பதால் மேற்சொன்னது பொருத்த முள்ளதாகவே யாகின்றது.

ஆகவே கிலேசம், கர்மம், விபாகம், அநுபவம் இவற்றாலுண்டுபண்ணப்பட்ட வாஸனை களுடன் கலந்ததாகவே அநாதி காலமாய் வந்து கொண்டிருக்கும் இந்தச்சித்தமானது பற்பல முடிச்சுகளுள்ள மீன் வலையானது போல விசித்திரமாக்கப்பட்ட தாகவும், மிக்க விரிவாகவுமாகின்றது. ஆகவே சித்தத்திலுள்ள வாஸனைகள் அனேகம் ஜன்மங்களினின்றேற்பட்டன வென்றும், கர்மங்கள் ஒன்று முக்கியமாகவும், மற்றவை அதற்கடங்கிய தாகவுமிருந்துகொண்டு ஒரே ஜன்மத்தில் தான் தரவேண்டிய பலனைத் தந்து விடுகின்றன வென்றும், ஏற்பட்டது. நினைவை யுண்டு பண்ணக்கூடியவைகளான சித்தத்திலுள்ள ஸம்ஸ்காரங்கள் யாதுண்டோ அவைகளே வாஸனைகள் எனப்படும். இந்த வாஸனைகள் அநாதிகாலம் தொட்டு ஏற்பட்டவைகளாகும். மேலும் ஒரே ஜன்மத்தில் பலனைத்தரும் கர்மாசயம் (ஸம்ஸ்காரம்) யாதுண்டோ அது சில விடத்தில் நிச்சயமாய்த்தனது பலனை ஆரம்பம் செய்யக்கூடிய தாகவும் சிலவிடங்களில் அவ்வித மில்லாததாகவுமாகின்றது. ஆனால் கர்மம் செய்த ஜன்மத்திலேயே அநுபவிக்கக்கூடி

யது என்ற நியமம் பொருந்தும். அடுத்து வரும் ஜன்மத்திலனுபவிக்கக் கூடியதும், நிச்சயமாய் பலன் தரக்கூடியவை என ஏற்படாததுமான கர்மாசய விஷயத்தில் மேற்கூறிய நியமம் பொருந்தாது. ஏனெனில் அடுத்து வரும் ஜன்மத்திலனுபவிக்கக் கூடியதும், அனியதமான பலனையுடையதுமான கர்மங்கள் யாதுண்டோ அவற்றிற்கு மூன்றுவிதமான வழிகள் காட்டப்பட்டிருக்கின்றன. அவையாவன:

1. பரிபக்வமாகாது கர்மம் நாசமடைதல், 2. அல்லது முக்கியமாய் பலன்தரும் கர்மத்தோடு சேர்ந்தே—அம்முக்கிய பலன் கிடைக்கும்பொழுதே—தனது பலனையுமிடையில் கொடுத்தல், 3. நிச்சயமாக அடுத்து பலன்தரக்கூடிய முக்கியகர்மத்தால் தடை செய்யப்பட்டு தன் பலனைக் கொடுக்க முடியாது வெகுகாலமிருத்தல், ஆகிய இம் மூன்றுமே அதிருஷ்ட ஜன்ம வேதனீயமாயும், அனியதவிபாகமாயுமுள்ள கர்மத்தின் வழிகளாகும். இம்மூன்று வழிகளுள் "செய்யப்பட்ட கர்மம் பரிபக்குவமாகாது நாசமடைகின்றது" என முதலாவதாகக் கூறப்பட்டவழி எவ்விதமெனின்? கூறுவாம்—**पुण्येन पापमपनुदति** "புண்யத்தால் பாபத்தைப்போக்குகிறான்" என்றபடி புண்யகர்மம் செய்திருந்தால் அதனால் பாப கர்மமானது தனது பலனைத்தராததாகவாகி விடுகின்றது. "முக்கிய கர்மம் பலனைத்தரும் ஸமயத்தில் மற்றொருகர்மம் தனது பலனையும் தரும்" என்று இரண்டாவதாகக் கூறிய வழியாதெனில்? கூறுவாம்—ஜ்யோதிஷ்டோமம் முதலிய புண்யகர்மத்தை யனுஷ்டிப்பதால் மஹா புண்யமுண்டாகின்றது. ஆனால் அதற்கு அங்கமாக **नहिंस्यात् सर्वा भूतानि** "எந்தப் பிராணிகளையும் ஹிம்ஸிக்கக் கூடாது" என்ற சாஸ்திரத்தை மீறி பசு ஹிம்ஸை செய்யப்படுகின்றது. இந்தப் பாபகர்மத்திற்கு துக்கம் பலனாகச் சொல்லப்பட்டிருக்கிறது. ஆகவே ஜ்யோதிஷ்டோமமாகிற முக்யகர்மத்தின் பலனான ஸ்வர்க்கஸுகத்தை யனுபவிக்கும்பொழுது பசு ஹிம்ஸாரூபமான பாபகர்மத்தாலுண்டாகும் துக்கரூபமான பலனையும் சேர்த்தே அனுபவிக்க நேருகின்றது. ஆனதுபற்றியே தமது புண்யக் குவியலால் கிடைக்கப்பெற்ற சுகமாகிற அமுத மடுவில் மூழ்கிவிளையாடுகின்ற தேவர்களும்கூட சுவல்ப பாபத்

தாலுண்டாகும் துக்கமாகிற நெருப்புப் பொறியை அனுபவிக்க நேர்ந்துவிடுகின்றது.

"நிச்சயமாய் பலன்தரும் கர்மத்தால் தடைசெய்யப்பட்டு வெகு காலம் வரை மற்ற கர்மம் கார்த்திருத்தல்" என்ற மூன்ரு வதாகக் கூறியவழி யாதெனில்? கூறுவாம். அடுத்த ஜன்மத்தில் நிச்சயமாய்பலன்தரும் கர்மங்கள்யாதுண்டோ அக்கர்மங்களுக்கே **மரணப்பிரகாசகம்** என்று பெயர் வைக்கப்பட்டிருக்கிறது. அதாவது:—அக்கர்மங்கள் ஒன்று சேர்ந்து மரணம் முதலிய தமது கார்யத்தைச் செய்யத்தொடங்குகின்றன. நிச்சயமாய் பலன்தரக் கூடிய நிலையையடையாத அதிருஷ்ட ஜன்மவேதனீயங்களான கர்மங்களோ வெனில் மரணகாலத்தில் பிரகாசத்தையடைய நியாயமில்லை. ஆகவே அதிருஷ்ட ஜன்மவேதனீயமாயும் நிச்சயமாய் பலனைத் தரக்கூடிய நிலையையடையாததாயு மிருக்கின்ற கர்மமானது நாசத்தை யடையவோ, பிரதான கர்மம் பலன் தரும் பொழுது சேர்ந்தே தானும் பலனைத் தரவோ, அல்லது தான் பலன் தருவதற்கு வேண்டிய காலத்தை எதிர்பார்த்து வெகுகாலம் கார்த்திருக்கவோ வேண்டிவருகிறது. ஆதலால் கர்மபலன் இன்ன தேசத்தில் இன்ன காலத்தில் இன்ன நிமித்தத்தால் வரும் என உறுதிசெய்யக் கூடாமை பற்றி அதனுண்மை அறியக்கூடாததாயும் விசித்ரமாயு மிருக்கின்றது. (எ - று.)

(அ - கை) இதுவரை கிலேசத்தினின்றும் கர்மங்களும், கர்மத்தினின்று விபாகங்களான ஜாதி, ஆயுள், போகம் இவைகளும் உண்டாகின்றன வென்பது உபதேசிக்கப்பட்டது. இந்தச்சூத்திரத்தால் விபாகத்தினின்று முண்டாகும் பலன் உபதேசிக்கப்படுகின்றது.

सू०॥ ते ह्लाद-परिताप-फलाः पुण्यापुण्यहेतुत्वात् ॥ १४ ॥

(ஸூ) தேஹ்லாத பரிதாப பலா: புண்யாபுண்யஹேதுத்வாத். (14)

(ப - ரை) ते-(தே)-அந்த ஜாதி ஆயுள், போகம் (விஷயானுபவம்) இவைகள் पुण्यापुण्यहेतुत्वात् = (புண்யா புண்யஹேதுத்

வாத்) புண்யம் பாபம் இவற்றைக் காரணமாயுடைத்தாயிருப்ப தால் ह्लादपरितापफलाः=(ஹ்லாத பரிதாபபலா:) ह्लाद = (ஹ்லாத) சுகம் परिताप=(பரிதாப) துக்கம் இவற்றை फलाः=(பலா:) பிரயோ ஜனமாயுடையன. அதாவது: இவற்றைத் தரக்கூடியன.

(தா-ம்) கேவல புண்யத்தாலோ, கேவல பாபத்தாலோ, புண்யம் பாபம் இவ்விரண்டும் சேர்ந்தோ ஜாதி என்ற பிறப்பு, ஆயுள் என்ற மனம் பிராணன் இவைகளின் ஸம்பந்தம், போகம் என்ற விஷயானுபவம் இவையுண்டாவதுபற்றி விபாகம் என்ற ஜாதி, ஆயுள், போகம், இவைகள் கேவல சுகத்தையோ, கேவல துக்கத்தையோ, துக்கம், சுகம் இவ்விரண்டையும் சேர்த்தோ, தருவதால் சுகம், துக்கம் இவைகள் கிலேசகாரியங்களாகின்றன. ஆதலால் இவற்றை நாம் விலக்க முயற்சி செய்தலவச்யமானது. (எ-று)

(அ-கை) பாபகாரியமான துக்கத்தையோ, அத்துக்கத்தை யனுபவிக்கச் செய்யும் ஜாதி, ஆயுள், போகம் இவற்றையோ நாம் வெறுத்து அவற்றை விலக்குவதற்கு முயற்சித்தல் பொருந் தும். புண்யகாரியமான விஷய சுகத்தையோ, அச்சுகத்தை யனுபவிக்கச்செய்யும் ஜாதி, ஆயுள், போகம் இவற்றையோ விலக் கமுயற்சி செய்வதென்பது எங்ஙனம் பொருந்தும்? எனின், கூறு வாம்—துக்கம் பிரதிகூலமாயிருப்பது பற்றி எவ்விதம் நம் போன்றவர்களால் வெறுக்கப்படுகின்றதோ, அவ்விதமே விஷய சுக மும் யோகிக்கு பிரதிகூலமான துக்கமாகவே ஏற்படுகின்றது பற்றி விஷய சுகமும் யோகியால் வெறுக்கத்தக்கதாகவேயாகும். அது எவ்விதமெனின்? அதற்கு இந்தச்சூத்திரத்தால் விடை யளிக்கிறார்—

सू०॥ परिणाम-ताप-संस्कार - दुःखैर्गुणवृत्य*विरोधाच्च दुःखमेव सर्वं विवेकिनः ॥ १५ ॥

(ஸூ) பரிணாம தாபஸம்ஸ்கார துக்கை: குணவ்ருத்ய விரோதாச்ச துக்கமேவ ஸர்வம் விவேகின: (15)

---

* गुणवृत्तिविरोधाच्च எனச் சில விடங்களில் பாடபேத முண்டு.

(ப - ரை) परिणामतापसंस्कारदुःखैः—(பரிணாமதாப ஸம்ஸ்கார துக்கை:) परिणाम=(பரிணாம) துக்கவடிவமானராக (ஆசை)த்தின் மாறுதல் ரூபமாயும் ताप=(தாப) துக்கத்தையோ துக்க ஸாதனத்தையோ எண்ணும் பொழுது உண்டாகும் த்வேஷ ரூபமாயும் संस्कार=(ஸம்ஸ்கார) சுகானுபவத்திலிருந்து சித்தத்திலுண்டாகும் வாஸனாரூபமாயு மிருக்கின்ற दुःखैः=துக்கங்களுடன் (சேர்ந்திருத்தலாலும்)गुणवृत्त्यविरोधात्=(குணவிருத்ய விரோதாத்)ஸ்தூலமான ஸத்வகுணத்திற்கும் ஸூக்ஷ்மமான ரஜஸ்தமோ குணங்களின் விருத்திகளுக்கும் ஒன்றுக்கொன்று விரோதமேற்படாமையாலும் सर्वम्=(ஸர்வம்) திருஷ்டமாயும், அதிருஷ்டமாயுமுள்ள விஷயசுகங்கள் யாவும் विवेकिनः=(விவேகின:) யோகமார்க்கத்தில் பிரவிருத்தித்தவிவேகிக்கு दुःखमेव = (துக்கமேவ) துக்கமாகவே [भवति=(பவதி) ஆகின்றது.]

(தா - ம்) परिणाम-ताप-संस्कार-दुःखैः—परिणामश्च, तापश्च, संस्कारश्च-त एवदुःखानि तैः-பரிணாமம், தாபம், ஸம்ஸ்காரம் ஆகிய இவைகளாகிற துக்கங்களுடன் இம்மைமறுமை இவ்விரண்டிடத்துமுண்டாகும் விஷயஸுகங்கள்யாவும் சேர்ந்தே யிருக்கின்றன. அதாவது :— ஆசையுடன் கலந்ததாகவே தான் எவ்வித சுகானுபவமு முண்டாகின்றது. எவ்விஷயத்திலும் ஆசையில்லாதவன் ஓர் விஷயத்தால் சுகியாகவாகின்றான் என்பதை நாம் அனுபவத்திற்கண்டதில்லை. ஆகவே ஆசையானது ஒரு விஷயத்தில் முதலிலுண்டாகி அவ்விஷயம் கிடைத்ததும் அவ்வாசையே சுகமாக பரிணாமத்தை (மாறுதலை) அடைகின்றது. விஷயத்தில் முன்னருண்டான ஆசையானது ஒவ்வொருக்ஷணத்திலும் விருத்தி யாகிக்கொண்டே வருகின்றது. அவ்விதம் விருத்தியாகிக் கொண்டு வரும் பொழுது ஆசைக்குரிய விஷயம் அவ்விதமே கிடைத்து விடும் என்ற நியமமில்லை. அவ்விதம் கிடைக்காவிடில் உடனே துக்கமுண்டாகின்றது. ஆசைக்குரிய விஷயம் கிடைக்காமைபற்றி உண்டான துக்கத்தை ஒரு பொழுதும் மாற்றவியலாமைபற்றி அந்த ஆசை துக்கரூபமாகவே தானாகின்றது. ஆகவே விஷயங்களினின்றும் இந்திரியங்களைத் திருப்புதல் யாதுண்டோ அதுவே சுகமாகும். ஆசையை முன்னிட்டு இந்திரியங்

கள் விஷயங்களிற் செல்லுதலே துக்கமாகும். விஷயங்களை யனுபவிக்கும் பழக்கத்தால் இந்திரியங்களுடைய ஆசையை அடியோடு ஒரு பொழுதும் போக்கமுடியாது. விஷயானுபவம் செய்தபழக்கத்தை யொட்டி மேன்மேலும் ஆசையும், விஷயானுபவத்திற் கூர்மையு மிந்திரியங்களுக்குப் பெருகிக்கொண்டே தான் வரும். இவ்விதமே,

न जातु कामः कामानामुपभोगेन शाम्यति ।
हविषा कृष्णवर्त्मेव भूय एवा भिवर्द्धते ॥

"எரிந்து கொண்டிருக்கும் நெருப்பை நெய்யைக்கொட்டி அணைக்க முயர்ச்சித்தால், அது அதனால் அணைந்து போகாமல் எவ்விதம் மேன்மேலும் விருத்தியாகிக்கொண்டே வருமோ அவ்விதமே ஆசையை விஷயங்களையனுபவித்தலால் ஒழித்தல் என்பது ஒரு பொழுது மியலாததுடன் மேன்மேலும் பெருகிக்கொண்டே தான் வரும்" என மனுஸ்மிருதியிலு முபதேசிக்கப்பட்டிருக்கிறது. ஆனது பற்றி விஷயசுகம் துக்கவடிவமான ஆசையின் பரிணாமமாக இருப்பதால் துக்கவடிவமாகவே யாகின்றது. துக்கவடிவமான ஆசையாகிற காரணத்திற்கும், கார்யமான விஷயசுகத்திற்கும் எவ்விதவேற்றுமையு மிருக்கக்காரண மில்லாமை பற்றி விஷய சுகமானது துக்கமென்றே ஏற்பட்டது.

மேலும் சுகத்தை யனுபவிக்குங்கால் துக்கசாதனங்களை வெறுக்கிறான். மற்றப் பிராணிகளைப் பீடிக்காமல் விஷயானுபவம் செய்தலென்பது முடியாத தாகும். ஆகவே மற்றபிராணிகளின் ஹிம்ஸையுமிடையில் நேருகின்றது. "துக்கஸாதனங்கள் எனக்கு வேண்டாம்" என மனத்தாற் சங்கற்பிக்கிறான். இந்தச் சங்கற்பமே துவேஷம் எனப்படும். ஆனால் துக்கத்தை விளைவிக்கும் சாதனங்கள் யாவையும் முற்றிலும் விலக்கிவிடுவதென்பது எவனாலும் முடியாதெனப் பிரஸித்தமானதே. இதனால் சுகானுபவகாலத்திலும் கூட அவ்வித சுகத்திற்கு விரோதியினிடத்து துவேஷமானது எப்பொழுதுமே இருக்கக்கூடுமென்று ஏற்படுவதால் தாபதுக்கமானது மாற்றவியலாததாக வாகின்றது. தாபம்

தான் துவேஷமாகும் என்பது வெளிப்படை. இதுபோலவே துக்கசாதனங்களை விலக்கச் சக்தியற்றவனாகும் பொழுது "என்னசெய்வேன்" என மோஹத்தை யடைகின்றான். ஆனது பற்றி மோஹதுக்கமும் கூட சேர்ந்து விடுகின்றது. இவ்விதமே

सर्वस्य च द्वेषानुविद्धश्चेतनाचेतनसाधनाधीनः तापानुभवः ।

"சேதன, சேதனரூபமான ஸாதனங்களைக் கொண்டு ஏற்படும் தாபானுபவமானது துவேஷம் கலந்ததாகவேதானிருக்கிறது" என யோகபாஷ்யத்திலு முபதேசிக்கப் பட்டிருக்கிறது. ஆகவே துவேஷம் கலந்த விஷயானுபவத்தால் துவேஷ வாஸனை மனத்திலுண்டாகின்றது. சுகஸாதனங்களில் விருப்பங்கொண்டு அதற்காக மனமொழிமெய்களால் முயற்சிக்கிறான். அவ்வித முயற்சியால் ஒன்றைப் பக்ஷமாக நடத்தவும், மற்றொன்றை ஹிம்ஸிக்கவும் நேருகின்றது. இதனால் புண்யம், பாபம் இரண்டையும் பெருக்கிக்கொண்டு விடுகின்றான். ஆகவே இவ்விதம் புண்யபாப கர்மவாஸனையானது துவேஷம் மோஹம் இரண்டினாலும் உண்டாகின்றபடியால்தாபதுக்கம் என்றேதான் அது எண்ணப்படுகின்றது. மேலும் நடப்பிலிருக்கும் சுகானுபவமானது தனது விநாச காலத்தில் ஸம்ஸ்காரத்தை யுண்டுபண்ணி விடுகிறது. அந்தச் சம்ஸ்காரம் அனுபவித்த ஸுகத்தின் நினைவைத் தருகின்றது. அந்நினைவு ஆசையை யுண்டாக்குகின்றது. அவ்வாசையானது மனமொழி மெய்களின் சேஷ்டையைத் தருகின்றது. அதனால் புண்ய பாப கர்மவாஸனை யுண்டாகின்றது. அந்த வாஸனையானது ஜாதி, ஆயுள், போகம் இவற்றையுண்டாக்குகின்றது என்பது பற்றி ஸம்ஸ்காரமும் துக்கவடிவமாகவேதானாகிவிடுகின்றது.

இதுவரை கூறியதிலிருந்து சென்ற காலம், நிகழ்காலம், வருங்காலம் ஆகிய மூன்று காலங்களிலும் துக்கத்தின் ஸம்பந்தம் பெற்றதாகவே இருக்கின்ற விஷய ஸுகமானது துக்கமாகவேதானேற்பட்டது. மேலும் விஷயஸுகத்தின் ஸ்வரூபத்தைப் பார்த்தாலும் அது துக்கமாகவேதானேற்படும் என்பது வெளி

யாகும்- எவ்விதமெனின்:—சுக, துக்க, மோஹ ரூபங்களான ஸத்வம், ரஜஸ், தமஸ் என்ற இம்மூன்று குணங்களும் ஒன்றுக்கொன்று நேர்மாறான ஸ்வபாவமுள்ளவைகளா யிருந்தபோதிலும் ஜீவனுடைய போகத்திற்கு உபயோகமாகும் முறையில் இந்த குணங்கள் மூன்றும் ஒத்ததாயிருந்து கொண்டு ஒருகாரியத்தைச் செய்கின்றன. அவற்றுள் ஸத்வகுணம் மேல் நோக்கியிருக்கும் பொழுது மற்ற இரண்டு குணங்களும் அந்த ஸத்வகுணத்தில் அடங்கினதாகவே ஆகின்றன. இதுபோலவே ரஜோகுணம் மேல் நோக்கும்பொழுது ஸத்வ, தமோகுணங்கள் ரஜோகுணத்திலும், தமோகுணம் மேல்நோக்கும்பொழுது ஸத்வரஜோ குணங்கள் தமோகுணத்திலு முள்ளடங்கியதாக வாகின்றன. ஆகவே எந்தக்குணம் முக்கியமாகவிருக்குமோ அதை யொட்டி முக்குணகாரியத்தை, ஸாத்விகம் என்றும், ராஜஸம் என்றும், தாமஸம் என்றும் ஒரேகுணத்தின் பெயரால் வியவஹரிக்கிறோம். சுகானுபவரூபமான சித்த விருத்தியானது பிரகாசத்தை யடைந்த ஸத்வகுணத்தின் காரியமாயிருந்த போதிலும் கூட பிரகாசத்தையடையாத (ஸத்வகுணத்துள் ளடங்கியிருக்கின்ற) ரஜஸ் தமோகுணங்களின் காரியமாகவுமே யாவதால் முக்குணவடிவமானதென்றே தான் சொல்லவேண்டும். ஆதலால் சுகானுபவரூபமான சித்தவிருத்திக்கு சுகாத்மகமாயிருக்கும் தன்மைபோலவே துக்கவடிவமாயிருக்கும் தன்மையும், விஷாதவடிவமாயிருக்குந் தன்மையுமிருப்பதாய் நிச்சயமாகின்றது. ஆனதுபற்றியே விவேகிக்கு விஷயசுகம் யாவுமே துக்கமாகவே தோன்றுகிறது. இத்தகைய ஸுகானுபவமானது நிலைத்திருப்பது மில்லை. ஏனெனில்—குணங்கள் எப்பொழுதும் சலித்துக் கொண்டிருத்தலையே சுவபாவமாயுடையன வாதல் பற்றி குணகாரியமான சித்தமும் அடிக்கடி மாறிக்கொண்டே இருப்பதால் சஞ்சல சுவபாவமுள்ள சித்தத்திலுதயமாகும் சுகப்ரத்யயமும் நிலையற்றதாகவேயாகின்றதுஎன்க.

சங்கை:—சித்தத்திலுண்டாகும் "இது சுகம்" என்ற விருத்தியானது ஒரேசமயத்தில் ஒன்றுக்கொன்று நேர்மாறான சுகம் துக்கம், மோஹம் வடிவமாயிருத்தலை எவ்விதமடையக்கூடும் எனின்?

உத்தரம்:— ஒரே ஸமயத்தில் இம் மூன்று குணங்களும் தத்தமது கார்யங்களைச் செய்யும் பொழுது இக்குணங்களுக்கு ஒன்றுக்கொன்று நேர் விரோத முண்டேயன்றி, ஒரு குணம் முக்கியமாய் தனது கார்யத்தைச் செய்யும் பொழுது மற்ற விரண்டு குணங்களும் முக்கியமான குணத்திற் குள்ளடங்கி இருக்கும் விஷயத்தில் ஒன்றுக்கொன்று விரோதமே ஏற்பட இடமில்லை. இது எவ்வித மெனின்? கூறுவாம் சித்தத்தில் தர்மம், ஞானம், வைராக்யம், ஐசுவர்யம் இவைகளாகிற சத்துவகுண காரியமானது பிரகாசத்தை யடைந்திருக்கும் பொழுது ரஜஸ், தமோகுணகார்யங்களான அதர்மம், அக்ஞானம், அவைராக்யம் இவைகள் பிரகாசியாமல் ஸ்வரூபமாத்திரமாய் சித்தத்தி லடங்கி இருப்பதில் யாதும் விரோதமுண்டோ? எவ்வித விரோதமு மில்லை. முக்கியத்திற்கு முக்கியத்தோடு விரோதமேற்படுமேயின்றி அமுக்கிய (துர்ப்பல) த்துடன் விரோத மேற்படுவதில்லை என உலகானுபவத்திற்கண்ட நீதி இங்கும் பொருத்தமாகுமன்றோ. ஆகவே ஸத்வம், ரஜஸ், தமஸ் என்ற இம் மூன்று குணங்களுக்கும் ஒரே சமயத்தில் பிரதானமாயிருக்கும் விஷயத்தில் விரோத முண்டென்றும், ஏதேனு மொருகுணம் முக்கியமாய் பிரகாசிக்கும் பொழுது மற்ற குணங்கள் ஸ்வரூப மாத்திரமாயிருப்பதில் யாதும் விரோதமேற்படுவதில்லை என்றும் ஏற்பட்டது.

ஆகவே கிலேசாதிகளின் ஸ்வரூபத்தை நன்குணர்ந்த விவேகிக்கு விஷயசுகம் யாவும் பரிணாம, தாப, ஸம்ஸ்கார வடிவமாயிருப்பது பற்றி துக்கமாகப் படுமேயின்றி, கிலேசாதிகளின் ஸ்வரூப மறியாத மூடனுக்கு துக்கமாய்ப்படுவதில்லை. தத்துவமறிந்தவன் கண்ணிலுள்ள கருவிழிக்கு ஒப்பாகவே யாவானன்றோ. மிக்க மெல்லியதான எட்டுக்கால் பூச்சியின் நூலானது கருவிழியிற்பட்ட மாத்திரத்தில் அக்கருவிழிகலங்கிவிடுகிறது. ஏனைய அங்கங்களில் பட்டால் அந்த அங்கங்கள் அதைப்பொருட் படுத்துவதில்லை. இதுபோல தத்துவமறிந்த விவேகிக்கு தேனும் விஷமும் கலந்த அன்னமானது போல எல்லாப்போகசாதனமும் முக்காலத்திலும் கிலேசசம்பந்தம் பெற்றிருத்தலால் துக்கவடிவமாக

வே படுகின்றது. எவ்விததுக்கத்தையும் பொருக்கும் தத்துவ மறியாமூடனுக்கு அவ்விதம் படுவதில்லை. இவ்விதமே கீதாசாரியனும்

ये हि संस्पर्शजा भोगाः दुःखयोनय एव ते ।
आद्यन्तवन्तः कौन्तेय न तेषु रमते बुधः॥ (अ०५,श्लो०२२.)

என்றதாலுபதேசித்திருக்கிறார். (எ - று)

(அ - கை) ஸமாதி நிலையை யடைந்த சித்த முள்ளவன் ஸமாஹித சித்தன் என்றும், ஸமாதி நிலைவிட்டு வெளிப்பட்டு விஷயத்தைநோக்கிச் செல்லும் சித்தமுள்ளவன் வ்யுத்திதசித்தன் என்றும் சொல்லப்படுவன். இவ்விருவருள் வ்யுத்தித சித்தனுக்கு சித்த நிரோதம் ஏற்படுவதற்குச் சாதனமான கிரியாயோகத்தையும், அதன் பயனையும் சொல்லுமிடத்து, "கிலேசங்கள் இன்னவை, அக்கிலேசங்களை விலக்குவதற்குரிய முறை இன்னது, அவற்றை விலக்கவேண்டும் என்ற எண்ணமேற்படுவதற்காக அவற்றால் துக்கமுண்டாகும் விதம், துக்கமின்னது" என்பது போன்ற யோக சாஸ்திரார்த்தமானது இதுவரைச் சுருக்கமாயுபதேசிக்கப்பட்டது. இனி சாஸ்திரம் முடியும் வரையுள்ள ஸூத்திரங்களால் மேற்கூறிய விஷயமே விரிவாயுபதேசிக்கப்படுகின்றது. மேலும், உலகில் வைத்தியசாஸ்திரமானது ரோகம், ரோகத்திற்குக் காரணம், ஆரோக்கியம், ஆரோக்யகாரணமான மருந்து ஆகிய இன்னான்கு விஷயங்களையும் உபதேசிப்பதுபோல இந்த யோக சாஸ்திரமும் ஹேயம், ஹேயஹேது, ஹானம், அதற்கு உபாயம் ஆகிய இன்னான்கையு முபதேசிக்கின்றது. அவற்றுள் துக்கபஹுளமான ஸம்ஸாரமானது ஹேயமென்றும், பிரகிருதி புருஷ ஸம்யோகம் ஹேயஹேது வென்றும், பிரகிருதிக்கும் புருஷனுக்கு முள்ள ஸம்பந்தத்தை அடியோடு ஒழித்தலே ஹானம் (மோக்ஷம்) என்றும்,பிரகிருதியைவிட புருஷன் எவ்விதத்திலும் வேறுபட்டவன் என்ற ஸம்யக் தர்சனமே (விவேகக்கியாதியே) ஹானோபாயம் என்றும் விரிவாயுபதேசிப்பான் தொடங்கி ஹேயமின்னதென்பதை இந்தச்சூத்திரத்தாலுபதேசிக்கிறார்.

ஸூ०॥ हेयं दुःखमनागतम् ॥ १६ ॥

(ஸூ) ஹேயம் துக்கம் அனாகதம் (16)

(ப - ரை) अनागतम्=(அனாகதம்) வரப்போகின்றதான दुःखम्=(துக்கம்) துக்கமானது हेयम्=(ஹேயம்) ஹேயம் (ஸம்ஸாரம்) எனப்படும்.

(தா - ம்) அதீத (சென்ற) துக்கமென்றும், வர்த்தமான (நிகழ்கின்ற) துக்கம் என்றும் அனாகத (இனிவரும்) துக்கம் என்றும் துக்கம் மூன்று வகைப்படும். அவற்றுள் அதீத துக்கமானது அனுபவித்தாகி விட்டமை பற்றி அதை ஹேயமாகச் சொல்லுவதற்கில்லை. வர்த்தமான துக்கமானது அது இருக்கும் க்ஷணத்திலேயே அனுபவிக்கப்பட்டு வருவதால் அதை விலக்குவதற்குரிய சாதனங்களை யனுஷ்டிப்பதற்கு முன்னமேயே. அதுவும் நாசமாகிவிடக்கூடும். ஆகவே இனிவரும் அனாகதது‌க்கம் ஒன்றுதான் கருவிழிக் கொப்பாய யோகியை கிலேசப்படுத்தக்கூடும். ஆனது பற்றியே அனாகத துக்கமே ஸம்ஸாரமென்றும், அதை விலக்குவதுதான் முக்கியமானதென்றும் பெறப்பட்டது. (எ-று)

(அ - கை) ஹேயமான அனாகததுக்கமானது எதனாலுண்டாகின்றதோ அக்காரணத்தை யறிந்து அதைப்போக்கும் விஷயத்தில் புருஷன் முயற்சி செய்தல் அவச்யமாதலால் ஹேயத்தின் காரணம் இன்னதென்பதை இந்தச் சூத்திரத்தாலுபதேசிக்கிறார்.

ஸூ०॥ द्रष्टृदृश्ययोस्संयोगो हेयहेतुः ॥ १७ ॥

(ஸூ) த்ரஷ்ட்ரு த்ருச்யயோ: ஸம்யோகோ ஹேயஹேது: (17)

(ப - ரை) द्रष्टृदृश्ययोः=(த்ரஷ்ட்ருத்ருச்யயோ:) த்ரஷ்டாவான புருஷனுக்கும் த்ருச்யமான புத்திக்கும் संयोगः = (ஸம்யோக:) சேர்க்கையானது हेयहेतुः=(ஹேயஹேது:) हेय=(ஹேய) அனாகத துக்க(ஸம்ஸார)த்திற்கு हेतुः=(ஹேது:) காரணமாக[भवति=(பவதி) ஆகின்றது.

(தா - ம்) புருஷனை த்ரஷ்டாவென்றும், புருஷனைவிடவேறு னதும், சுகம், துக்கம் மோஹம் இவற்றின் வடிவமானதுமான பிரகிருதி, அதன் காரியம் ஆகிய யாவையும் திருச்யமென்றும் பொதுவாய்க் கொள்ளவேண்டும். ஆயினும் ஒவ்வொரு ஜீவனு டைய புத்தியும் சுகதுக்க மோஹவடிவமான ஸத்வ ரஜஸ் தமோ குணங்களின் ஸாம்யாவஸ்தா ரூபமான பிரதானத்தின் (பிரகிரு தியின்) காரியமாதலாலும், இதன் மூலமே மேற்கூறிய ஸுகதுக் கமோஹாத்மகமான விஷயங்களைப்புருஷன் அறிவதாலும் புத்திம ட்டுமே திருச்யமாக இங்கு உபதேசிக்கப்பட்டதாய்க் கொள்ளவே ண்டும். ஆகவே திரஷ்டாவான புருஷனுக்கும் திருச்யமான புத் திக்கும் நேர்ந்துள்ள ஸம்யோகமானது—அதாவது:—புத்திக்கு போக்யமாயிருக்கும் தன்மையையும், புருஷனுக்கு போக்தாவாக இருக்கும் தன்மையையும் நிச்சயமாயுண்டாக்குகின்ற ஜன்மம் எனப் பெயரிய சேர்க்கையானது, யாதுண்டோ அதுவே துக்க பஹுளமான ஸம்ஸாரத்திற்குக் காரணம் என்றேற்பட்டது. அதாவது:— அயஸ்காந்தக் கல்லானது தனதருகிலிருக்கும் இரு ம்பை இழுத்துக்கொள்வதுபோல திருச்யமான புத்தியானது தான் ஸமீபத்தி லிருப்பதால் புருஷனைத் தன்னிடமிழுத்துக் கொள்ளுகிறது. அதாவது:—புத்தியானது தன்னையும், தன்னி டமுள்ள தர்மங்களையும் புருஷனைவிட வேறாகக் காட்டாது புரு ஷனும் தானும் ஒன்று போலவே காட்டுகிறது. அதனின்றும் தன்னிடம் பிரதிபிம்பித்த புருஷனுடைய அனுபவத்திற்கு விஷ யமாகின்றது. இம் முறையை யொட்டியே புத்தியானது திருச்ய மாகவாகின்றது. இதனாலேயே எவ்வஸ்துவுடனும் உண்மையில் சேராதபுருஷன் த்ரஷ்டாவாகவும், போக்யத்திற்கு போக் தாவாகவும், புத்திக்கு சுவாமியாகவும் ஆகின்றான். ஆகவே புருஷனுக்கும் புத்திக்கும் ஏற்படும் சம்யோகமானது தன க்கு வேறுகாரணத்தை யுடைத்தாகாததும் மற்றெல்லாவற் றிற்கும் காரணமாகக் கூடியதுமான அவித்தையால் ஏற் படுவதால் அனாதியென்றே ஏற்படுகிறது. இவ்விதமே க்லே சம், கர்மம், வாசனை இவைகளின் சந்தானமும் (தொடர்ச்சி யும்) அனாதி யாவதால் பிரளயகாலத்தில் அந்தக்கரணத்துடன்

கூடவே பிரகிருதியில் ஒடுங்கினபோதிலும் சிருஷ்டியாரம்ப காலத்தில் காலவசமாகக்கொண்டு முன்போலவே உண்டாகின்றது. எவ்விதமெனின், கோடைக்காலத்தில் மண்ணுடன்மண்ணுகக்கலந்த விதைகள் மழைக்காலத்தில் முளைத்திடுவதை நாம் அனுபவத்தில் காண்பதுபோல் என்க. மேலும் துக்கஹேதுவான இந்த ஸம்யோகத்தை நாம் சாஸ்திரீயமான சாதனனுஷ்டானத்தால் போக்கவும் கூடும். நமது காலே பேத்யம் (முள்ளைக்கக்கூடியது) என்றும் முள் முதலியவற்றை பேதகம் என்றும் நாம் அனுபவத்தில் காண்கிறோம். ஆயினும் பேதகமான (தைக்கின்ற) முள் முதலிய வற்றில் காலே வைக்காமலோ, பாதரக்ஷை முதலியவற்றைக்காலில் மாட்டிக்கொண்டோ நடப்போமாயின் பேதகமான முள்ளினுல் எவ்வித துக்கமும் நமக்கு உண்டாவதில்லை. இது போலவே திருஷ்டா, திருச்யம், இவற்றின் சம்யோகம் ஆகிய இம் மூன்றும் உண்மையில் வெவ்வேறுனவை யென்றே எவனொருவன் அறிகின்றானே அவன் இம் மூன்றின் சேர்க்கையாலேற்படும் துக்கத்தைப் போக்கு வதற்கு வேண்டிய சாதனங்களை அனுஷ்டிக்கத் தொடங்கினவனாய் துக்கத்தை விலக்கி விடுகின்றான். இவ்விடத்தில் ரஜோகுணம் தாபகமாகவும் சித்தஸத்துவம் தப்யமாகவு மாகின்றது. தாபம் என்பது மாறுதலையுடைய சித்தத்திலுண்டாகுமே யொழிய எவ்வித மாறுதலுமற்ற ஆத்மாவினிட முண்டாவதற்கிடமில்லை. சித்தத்திற்குத் தாபமுண்டாவதால் அதில் பிரதிபலித்த ஆத்மாவும் தாபத்தை யுடையவன்போலாகின்றான். (எ - று)

(அ - கை) ஸம்ஸாரத்திற்குக் காரண மின்னது என்பதை உபதேசித்த பின்னர் திருச்யத்தின் ஸ்வரூப மின்னதென்பதையுபதேசிக்கிறார்.

सू०॥ प्रकाशक्रिया-स्थिति-शीलं भूतेन्द्रियात्मकं भोगापवर्गार्थं दृश्यम् ॥ १८ ॥

(ஸூ-) ப்ரகாச க்ரியா ஸ்திதிசீலம் பூதேந்த்ரியாத்மகம் போகாபவர்க்கார்த்தம் த்ருச்யம் (18)

(ப - ரை) दृश्यम्=(த்ருச்யம்) திருச்யம் எனப்படுவது प्रकाश क्रियास्थितिशीलम्=(ப்ரகாசக்ரியாஸ்திதி சீலம்)— प्रकाश = (ப்ரகாச) புத்திவிருத்தியா திரூபமான பிரகாசத்தையும் क्रिया=(க்ரியா) பிர யத்னம்சேஷ்டை முதலியவற்றையும் स्थिति=(ஸ்திதி) முற்கூறிய பிரகாசம், கிரியை இரண்டையும் தடைசெய்தலையும் शीलम्=சுவ பாவமாயுடையதாகவும் भूतेन्द्रियात्मकम्=(பூதேந்த்ரியாத்மகம்) भूत (பூத) ஸ்தூலமான பஞ்சபூதங்கள், ஸூக்ஷ்மமான பஞ்ச பூததந் மாத்திரைகள் इन्द्रिय=(இந்த்ரிய) கர்மேந்திரிய ஞானேந்திரியங்கள் आत्मा (ஆத்ம) சித்தம் இவற்றின் कम्=ஸமூஹமாகவும் भोगापवर्गार्थम् (போகாபவர்க்கார்த்தம்) भोग=(போக) விஷயசுகம், துக்கம் अपवर्ग=(அபவர்க்க) மோக்ஷம் இவற்றை अर्थम् = (அர்த்தம்) பிர யோஜனமா யுடையதாகவும் [भवति=(பவதி) ஆகின்றது.]

(தா - ம்) புத்தி விருத்தி ரூபமான பிரகாசமானது ஸத்துவ குணத்தின் தர்மமாகும். பிரயத்னம், சேஷ்டை முதலிய கிரியை யானது ரஜோகுணத்தின் தர்மமாகும். பிரகாசம், கிரியை ஆகிய இவ்விரண்டையும் தடைசெய்தல் என்ற ஸ்திதியானது தமோ குணத்தின் தர்மமாகும். ஆகவே பிரகாசத்தைத் தர்மமாயுடைய ஸத்வகுணம், கிரியையை தர்மமாயுடைய ரஜோகுணம், பிரகா சம், கிரியை இரண்டையும் தடை செய்தல் என்ற ஸ்திதியை தர் மமாயுடைய தமோகுணம் ஆகிய இம்மூன்று குணவடிவமாக வுள்ளது எதுவோ அதுவே த்ருச்யம் எனப்படும். பிரளயகாலத் தில் பிரகாசாதி கார்யம் இல்லை என்பதையும், சிருஷ்டிக்குப் பின் னரே அத்தகைய பிரகாசாதிகள் காணக்கிடக்கின்றன வென்ப தையும் பிரித்துக்காட்ட வேண்டியே "தர்மம்" என்று கூறுமல் ஸூத்திரத்தில் "சீலம்" என்று கூறினதாய்க் கொள்ளல் வேண் டும். இவ்விதம் திருச்யமாயிருப்பதுடன் ஆகாசாதி பஞ்சபூதங் கள், அதன் காரணமான பஞ்சதந்மாத்திரைகள் இவற்றை யுண் டுபண்ணுவதால் ஸ்திதி சீலமாகவும், ஸ்தூலமான கர்மேந்திரிய ஞானேந்திரியங்களுக்குக் காரணமாயிருப்பதால் கிரியாசீலமாக வும், அந்தக்கரண வடிவமான ஸூக்ஷ்மேந்திரியத்திற்குக் காரண மாயிருப்பதால் பிரகாச சீலமாகவுமாகின்றது. இதனுல் முக்குண வடிவமான திருச்யத்தின் காரியமானது இன்னதென உபதேசிக்

கப்பட்டது. மேலும் திருச்யமானது சுகதுக்க மோஹவடிவ மான புத்தியும் புருஷனும் வேறென்றறியாதிருத்தலாகிற போகம், போக்தாவான புருஷனுடைய ஸ்வரூப நிச்சயம் செய்த லாகிற மோக்ஷம் இவ்விரண்டையும் முக்கியப் பிரயோஜனமாகக் கொண்டது. போகமோ, மோக்ஷமோ புத்தியால் செய்யப்படுவது பற்றி புத்தியையே சார்ந்தனவாயினும், யுத்தவீரனிடமுள்ள ஜயத்தையோ, தோல்வியையோ அவனது யஜமானனான அரச னிடம் "அரசன் தோல்வியுற்றான். ஜயமடைந்தான்" எனச் சொல்லுவது போலவே போகமும், மோக்ஷமும் புருஷனைச்சார் ந்தன வாகச் சொல்லப்படுகின்றன. புருஷன் உண்மையில் அஸங்கனாகையால் போகம் மோக்ஷம் இவ்விரண்டின் ஸம் பந்த மற்றவனாகவே ஆகின்றான் என்றேற்பட்டது. மேலும் திருச்யமானது முக்குணவடிவமாயிருந்த போதிலும் யாதேனும் ஒரு காரியத்தை யுண்டு பண்ணும் ஸமயத்தில் ஒரு குணம் பிர தானமாகவும், மற்றகுணங்கள் அதற்குள்ளடங்கியதாகவு மாகின் றன. அதாவது:—இம் மூன்று குணங்களும் சேர்ந்து தேவசரீ ரத்தை யுண்டாக்கும் பொழுது ஸத்வகுணம் பிரதானமாகவும், பசுமுதல் ஸ்தாவரமீறாகவுள்ள சரீரத்தையுண்டாக்கும் பொழுது தமோகுணம் பிரதானமாகவுமாகின்றது. ஆகவே எக்கார்யத்தை யும் இம்மூன்று குணங்களும் சேர்ந்தேதான் செய்கின்றன. இவ் விதமே கீதாசாரியனும்,

न तदस्ति पृथिव्यां वा दिवि देवेषु वा पुनः ।
सत्वं, प्रकृतिजैमुक्तं यदेभिस्स्यात्त्रिभिर्गुणैः ॥

என்றதானுபதேசித்திருக்கிறார். (எ-று)

(அ - கை) முற்கூறியகுணங்களின் பரிணமத்தை(மாறுதலை) ப்பிரித்து உபதேசிக்கிறார்.

सू॰॥ विशेषाविशेषलिङ्गमात्रालिङ्गानि गुणपर्वाणि ॥ १९ ॥

(ஸூ) விசேஷா விசேஷ லிங்கமாத்ராலிங்கானி குணபர்வாணி (19)

(ப - ரை) **विशेष....नि** (விசேஷ...ணி) **विशेष**=விசேஷ 5-மஹா பூதங்கள், 10 இந்திரியங்கள், மனது ஆகிய 16-விகாரங்களும் **अविशेष**=(அவிசேஷ) பஞ்சதந்மாத்திரைகள், அஸ்மிதை ஆகிய 6-ம் **लिङ्गमात्र**=(லிங்கமாத்ர)=அஹந்தத்துவமும் **अलिङ्गानि**=(அலிங்கானி) பிரதானம்என்றபிரகிருதியும் **गुणपर्वाणि**=(குணபர்வாணி) ஸத்வாதி குணங்களின் மாறுருவங்களாக [**भवन्ति**=(பவந்தி) ஆகின்றன]

(தா - ம்) ஸத்வம், ரஜஸ், தமஸ் என்ற இம் மூன்று குணங்களும் ஒன்றுக்கொன்று உயர்வுதாழ்வற்று சமமாயிருந்தலே பிரதானம் என்றும், பிரகிருதி என்றும் சொல்லப்படும். இதுவே இந்தச்சூத்திரத்திலுள்ள அலிங்க என்ற பதத்தால் உபதேசிக்கப்பட்டதாகக் கொள்ளல் வேண்டும். இத்தகைய ஸாம்யாவஸ்தையினின்றும் மாறி ஸத்வாதி குணங்களுள் ஸத்வகுணமானது பிரதானமாகவும் மற்ற ரஜஸ் தமோ குணங்கள் அந்த ஸத்வகுணத்திற்குள்ளடங்கியதாகவுமுள்ள நிலையையடையும் பொழுது அந்நிலை **மஹத்தத்துவம்** எனப்படும். இதுவே ஸூத்திரத்திலுள்ள **லிங்கமாத்ர** என்ற பதத்தால் உபதேசிக்கப் பட்டதாகக்கொள்ள வேண்டும். மஹத்தத்துவத்தினின்றும் குணங்கள் ஒன்றுக்குள் மற்றொன்று அடங்கி இருத்தல் காரணமாய் அஹந்தத்துவமுண்டாகின்றது. பிறகு தமோகுணப் பிரதானமான அஹந்தத்துவத்தினின்றும் சப்தத்தை அஸாதாரண லக்ஷணமாகவுடைய சப்த தந்மாத்திரை உண்டாகின்றது. "எதற்குப்பின்னர் எது உண்டாகின்றதோ அது முன்னருள்ளதுடன் சேர்ந்தே தானிருக்கும்" என்ற நீதிப்படி சப்தத்தை லக்ஷணமாயுடைய சப்ததந்மாத்திரையினின்றும் ஸ்பர்சத்தை அஸாதாரண லக்ஷணமாயுடைய ஸ்பர்சதந்மாத்திரை உண்டாகின்றது. இந்த ஸ்பர்சதந்மாத்திரையில் சப்ததந்மாத்திரையின் லக்ஷணமான சப்தம், ஸ்பர்சதந்மாத்திரையின் லக்ஷணமான ஸ்பர்சம் ஆகிய இரண்டு குணங்களும் அடங்கியே தானிருக்கும்.

இவ்விதமே சப்தம் ஸ்பர்சம் இரண்டையும் லக்ஷணமாகவுடைய ஸ்பர்சதந்மாத்திரையினின்றும் ரூபத்தை அஸாதாரண

லக்ஷணமாயுடைய ரூபதந்மாத்திரை உண்டாகின்றது. இந்த ரூப தந்மாத்திரையில் சப்தம், ஸ்பர்சம் என்ற முன்னுள்ள இரண்டு குணங்களும், தனது குணமான ரூபம் என்ற குணமும் அடங்கி இருப்பது பற்றி இந்த ரூபதந்மாத்திரையானது சப்தம், ஸ்பர்சம், ரூபம் என்ற மூன்று லக்ஷணமுள்ளதாயாகின்றது. பின்னர் இத்தகைய ரூபதந்மாத்திரையினின்றும் ரஸத்தை அஸாதாரண லக்ஷணமாகக்கொண்ட ரஸ தந்மாத்திரை உண்டாகின்றது. இந்த ரஸதந்மாத்திரையில் முற்கூறிய சப்தம், ஸ்பர்சம் ரூபம் என்ற மூன்று குணங்கள், தனது குணமான ரஸம் ஆகிய 4-குணங்கள் அடங்கி இருக்கின்றன. பின்னர் இத்தகைய ரஸதந்மாத்திரையினின்றும் கந்தத்தை அஸாதாரண லக்ஷணமாயுடைய பிருதிவீ தந்மாத்திரையானது உண்டாகின்றது. இந்தப்பிருதிவீ தந்மாத்திரையில் சப்தம் ஸ்பர்சம், ரூபம், ரஸம் என்ற 4-குணங்கள், தனது குணமான கந்தம் ஆகிய 5-குணங்கள் அடங்கி இருக்கின்றன. ஆகவே மேற்கூறியவாறு அததற்கேற்ற குணங்களுடன் கூடின தந்மாத்திரைகள், இவற்றிற்கு முதல் காரணமான தமோகுண பிரதானமான அஹம் தத்துவம் ஆகிய இந்த 6-ம் ஸூத்திரத்திலுள்ள அவிசேஷ என்றபதத்தால் குறிக்கப்பட்டதாகக்கொள்ளல் வேண்டும்

பின்னர் இத்தகைய அவிசேஷத்தினின்றும் ஸ்தூலமான ஆகாசமும், ஆகாசத்தினின்றும் வாயுவும், வாயுவினின்றும் தேஜஸ்ஸும், தேஜஸ்ஸினின்றும் ஜலமும், ஜலத்தினின்றும் பிருதிவியும் உண்டாகின்றன. அத்துடன் முற்கூறிய ஸத்துவ குண பிரதானமான அஹந்தத்துவத்தினின்றும் மனஸும், ரஜோ குண பிரதானமான அஹந்தத்துவத்தினின்றும் கார்மேந்திரிய ஞானேந்திரியங்களும் உண்டாகின்றன. மேற்கூறிய 16-தத்துவங்களே ஸூத்திரத்திலுள்ள விசேஷ என்ற பதத்தாலுபதேசிக்கப் பட்டதாகக் கொள்ளவேண்டும்.

இதுவரை ஸத்வரஜஸ்தமோகுணாத்மகமான அலிங்கத்தினின்றும் விசேஷம் வரையுள்ள உத்பத்திகிரமம் சொல்லப்பட்டது. 'காரியமானது தனது காரணத்தி லொடுங்கும்'' என்ற முறை

ப்படிப் பிரளயகாலத்தில் உத்பத்திக்கு நேர்மாறான முறையில் அந்தந்தக் காரியத்திற்கும் அதனதன் காரணத்தில் லயம் ஏற்படுகின்றது. அதாவது: பூமியானது ஜலத்திலும், ஜலம் தேஜஸ்ஸிலும், தேஜஸ் வாயுவிலும், வாயு ஆகாசத்திலும், ஆகாசம் தமோகுணப் பிரதானமான அஹங்தத்துவத்திலும் ஒடுங்கும். இதுபோலவே கிராணேந்திரியம் ஜிஹ்வேந்திரியத்திலும், ஜிஹ்வேந்திரியம் சக்ஷுஸ்ஸிலும், சக்ஷுஸ் த்வகிந்திரியத்திலும், த்வகிந்திரியம் சுரோத்திரேந்திரியத்திலும், சுரோத்திரேந்திரியம் ரஜோகுணப்பிரதானமான அஹங்தத்துவத்திலும் ஒடுங்கும். மனதானது ஸத்துவகுணப்பிரதானமான அஹங்தத்துவத்திலொடுங்கும். (ஆனால் கிராணம் முதலிய இந்திரியங்கள் ஒன்றில் மற்றொன்றொடுங்கும் முறையாக கிராணம் முதல் சுரோத்திரம் வரையுள்ள எல்லா இந்திரியங்களும் மனத்திலொடுங்கி மனது அஹங்தத்துவத்திலொடுங்குகின்றது எனக் கூறுவாருமுளர்.) பிறகு அஹங்தத்துவம் மஹத்தத்துவத்திலும, மஹத்தத்துவம் பிரகிருதியிலும் ஒடுங்குகின்றது. இந்த நிலைக்குப் பிரதானவஸ்தை என்று பெயர். இந்தப் பிரதானவஸ்தையானது எத்தகைய நிமித்தத்தையும் முன்னிட்டுண்டாகாமல் இயற்கையிலேயே அமைவதுபற்றி நித்யமாகவே யாகின்றது. மற்ற லிங்கமாத்ராவஸ்தை, அவிசேஷாவஸ்தை, விசேஷாவஸ்தை ஆகிய இம்மூன்று அவஸ்தைகளும், ஆதியில் புருஷார்த்தத்தைக் காரணமாகக் கொண்டே ஏற்படுவதால் புருஷனுடைய பிரயோஜனம் முடிந்ததும் இந்த அவஸ்தைகள் மாறக்கூடியன வாதல்பற்றி இந்த மூன்று அவஸ்தைகளும் அனித்யங்களாகவே யாகின்றன.

ஸத்வம், ரஜஸ், தமஸ் என்ற குணங்கள் எல்லா அவஸ்தைகளிலும் தமது காரியங்களில் தொடர்ந்து வந்துகொண்டிருக்கின்றன வாதல்பற்றி இவற்றிற்கு உத்பத்தியுமில்லை, நாசமுமில்லை. ஆனால் அதீதாவஸ்தா என்ற நாசம், அனாகதாவஸ்தா என்ற உத்பத்தி ஆகிய தர்மங்களுள்ள ஆகிருதி (உருவ) விசேஷத்தை முன்னிட்டு ஸத்வாதி குணங்களும் உத்பத்தி, விநாசம் என்ற தர்மமுள்ளவைகள் போல் தோற்றத்தை யடைகின்றன. எவ்விதமெனின்—தேவதத்தனுடையதனமாகிற பசுக்கள்

மரித்துவிட்டால் அவனைத் தரித்திரன் என்கிறோம். இங்கு பசுக் களின் மரணத்தால் தேவதத்தனுக்கு ஏழ்மையேயின்றி ஸ்வரூப நாசத்தை முன்னிட்டல்ல. இவ்விதமே அதீதாவஸ்தையாகிற நாசம், அனுகதாவஸ்தை யாகிற உத்பத்தி இவைகள் வியக்தியி னிட மேற்படுவதைக்கொண்டு இந்தக்குணங்களும் உத்பத்தி விநாசமுள்ளவைகள் என முடிவு செய்யப்படுகின்றது.

அலிங்கம், லிங்கமாத்திரம், அவிசேஷம், விசேஷம் என்ற தால் சொல்லப்படும் தத்துவங்கள் 24-ஆகும். அவற்றுள் கடை சியிலுள்ள விசேஷம் என்ற பதத்தால் சொல்லப்படும் 16 - பதார்த்தங்களைக் காட்டிலும் வேறு தத்துவம் கிடையாவென்றும் கொள்ளவேண்டும். அதாவது : அலிங்கமான பிரதானத்திற்கு லிங்கமாத்திரமான மஹத்தத்துவ ரூப தத்துவபரிணாமமும், மஹத்தத்துவத்திற்கு அவிசேஷரூபதத்துவ பரிணாமமும், அவி சேஷத்திற்கு விசேஷரூபதத்துவ பரிணாமமு முண்டாவது போல, விசேஷத்திற்கு வேறுதத்துவரூபமான பரிணாமம் கிடை யா என்பதாம். ஆயினும் விசேஷங்களெனப்படும் ஸ்தூல பதார்த் தங்களுக்கு தர்மம், லக்ஷணம், அவஸ்தை இவைகளாகிற பரி ணாமம் மட்டும் (ஸ்வரூப மாறுதல் மட்டும்) உண்டென மூன் றாவது பாதம், 13 - வது ஸூத்திரத்தா லுபதேசிக்கப்போகி றார் (எ - று.)

(அ - கை.) திருச்யத்தின் ஸ்வரூபத்தை யுபதேசித்தபின் னர் த்ரஷ்டாவின் ஸ்வரூபநிச்சயம் செய்வதற்காக இந்தச் சூத் திரமாரம்பிக்கப்படுகின்றது.

सू०॥ द्रष्टा दृशिमात्रः शुद्धोऽपि प्रत्ययानुपश्यः ॥ २० ॥

(ஸூ) த்ரஷ்டா த்ருசிமாத்ர: சுத்தோபி
ப்ரத்ய யானுபச்ய: (20)

ப - கை.) द्रष्टा=(த்ரஷ்டா) புருஷன் दृशिमात्रः=(த்ருசிமாத்ர:) க்ஞானஸ்வரூபமாக மட்டுமுள்ளவன். [अतः - (அத:) ஆனது பற்றி] शुद्धोऽपि - (சுத்தோபி) எவ்விதவிகாரமும் (மாறுதலும்)

அற்றவனுயினும் प्रत्ययानुपश्यः-(ப்ரத்யயானுபச்ய:) प्रत्यय - (ப்ரத்யய) புத்திவிருத்தியை अनु-(அனு) அனுசரித்து पश्यः-(பச்ய:) விஷயங்களை பார்க்கின்றவனுக (அனுபவிக்கின்றவனுக) [भवति= (பவதி)=ஆகிருன்.]

(தா - ம்) புருஷன் "த்ரஷ்டா" எனப்படுவன். அப்புருஷன் க்ஞானஸ்வரூபமாக மட்டுமிருப்பவன். அதாவது: க்ஞானம் அவனது தர்மமாக ஆகாமல் அவனது ஸ்வரூபமாகவே ஆகின்றது என்பதாம். இதை உபதேசிப்பதற்காகவே ஸூத்திரத்தில் த்ருசிமாத்ர: என்றவிடத்தில் மாத்ர என்றபதம் பிரயோகிக்கப்பட்டதென பாஷ்யாதிகளில் சொல்லப்பட்டிருக்கிறது. மேலும் த்ரஷ்டாவான அந்தப்புருஷன் எவ்விதபரிணமமுமற்றவன். புத்தியானது பரிணமமுள்ளது. சப்தம் முதலிய விஷயாகாரத்தை புத்தியானது எப்பொழுது அடைகிறதோ அப்பொழுது சப்தாதிவடிவமான இதன் விஷயம் அறியப்படுகிறது. எப்பொழுது சப்தாதி விஷயாகாரத்தை யடைவதில்லையோ அப்பொழுது சப்தாதி வடிவமான இதன் விஷயம் அறியப்படுவதில்லை. ஆனதுபற்றி ஏதோ ஒரு ஸமயத்தில் மட்டும் இந்தப்புத்தியானது சப்தாதி விஷயாகாரத்தை அடைவதிலிருந்து பரிணமமுள்ளதென்பது தெளிவாகின்றது. புருஷனேவெனில் ஸம்பிரக்ஞாத ஸமாதிகாலத்திலுள்ள ஸூக்ஷ்மமான விஷயங்களையும், ஸமாதி கலைந்து எழுங்காலமான வ்யுத்தான காலத்திலுள்ள ஸ்தூலமான விஷயங்களையும் அறிந்துகொண்டே (பிரகாசப்படுத்திக்கொண்டே) தானிருக்கிருன். ஆனது பற்றி புருஷன் எப்பொழுதும் அறியப்பட்ட விஷயமுள்ளவனுக ஆவதால் எவ்வித பரிணமமுமற்றவன் என்றேற்பட்டது. இத்தகைய அனுபவத்தால் புத்தியைவிடப் புருஷன் வேருனவன் என்றேற்படுகின்றது.

மேலும் புத்தியானது கிலேசம், கர்மம், வாஸனே, இந்திரியம், விஷயம் இவற்றுடன் தானுமொன்ருகச் சேர்ந்துகொண்டு புருஷார்த்தத்தை உண்டுபண்ணுவதாயிருக்கின்றது. ஆனது பற்றியே இந்தப் புத்தியை பரார்த்தம் (பிறர்க்காக ஏற்பட்டது)

என்று சொல்லுகிறோம். புருஷனோ தன்னைவிட மற்றொன்றிற்காக ஏற்பட்டவனல்லன். ஆனதுபற்றி இவனை ஸ்வார்த்தன் (ஸ்வதந்திரன்) என்கிறோம். மேற்கூறிய காரணத்தாலும் புத்தியை விடப் புருஷன் வேறானவன் என்றுதான் ஏற்படும். மேலும் புத்தியானது அந்தந்த விஷயாகாரத்தை யடைந்து சாந்தம், கோரம், மூடம் இவ்வடிவமான எல்லாப் பதார்த்தங்களையும் 'இவைகள் ஸத்வம், ரஜஸ், தமஸ் என்ற மூக்குணங்களின் பரிணாமங்கள்' என நிச்சயிக்கின்றது. ஆனதுபற்றி இந்த புத்தியை முக்குண வடிவமானது என்று சொல்லுகிறோம். புருஷனோவெனில் முற்கூறிய புத்திவிருத்தியில் பிரதிபிம்பத்தையடைந்து அந்தந்தவிஷயங்களைப் பிரகாசப் படுத்துகின்றானேயொழிய புத்தியைப்போல அந்தந்த விஷயாகாரமான மாறுதலையடைவதில்லை. இதிலிருந்தும் 'புருஷன்புத்திக்குச் சமமானரூபமுள்ளவனன்று' என்றேற்படுகின்றது. மேலும் இந்தப் புருஷன் உண்மையில் சுத்தனாயினும் அந்தந்த விஷயாகாரமாக புத்தியிலுண்டாகும் விருத்திகள் யாவையும் அப்புத்தியில் பிரதிபிம்பத்தையடைந்துப் பிரகாசப் படுத்துவதுபற்றி உண்மையில் அந்தந்த விஷயவடிவமாயிருத்தல் என்பது இவனுக்கில்லாவிடினும் அந்தந்த விஷயவடிவமாகயிருப்பவன்போலவே எண்ணப்படுகிறான். இதையே वृत्तिसारूप्यमितरत्र। விருத்திஸாரூப்ய மிதரத்ர என்ற 1-வது பாதம் 4-வது ஸூத்திரத்தாலுபதேசித்திருக்கிறார். ஆனதுபற்றி புருஷன் விஷயாகார புத்தியில் பிரதிபிம்பத்தையடைந்து அந்தப் புத்தி விருத்தியைப் பிரகாசப்படுத்துகின்ற காலத்தில் புத்திக்கு விரூபமில்லாதவன் போலும், புத்தி அதன் காரியம் இவற்றையும், புருஷனது ஸ்வரூபத்தையும் பிரித்தறியும்பொழுது ஸரூபமற்றவன்போலும் தோற்றத்தை யடைவதால் புருஷன் புத்திக்கு முற்றிலும் ஸரூபனாகவோ, விரூபனாகவோ சொல்லக்கூடாதவனாகிறான் (எ - று.)

(அ - கை.) 18, 19 - இந்த இரண்டு ஸூத்திரங்களாலும் த்ருச்யத்தின் ஸ்வரூபமும், 20 - வது ஸூத்திரத்தால் த்ரஷ்டாவின் ஸ்வரூபமும் பிரிந்து உபதேசிக்கப்பட்டது. இந்த ஸூத்திரத்தால் அதே புருஷன் திருச்யத்திற்கு போக்தாவாகவாகிறான் என்பது உபதேசிக்கப்படுகின்றது.

सू०। तदर्थ एव दृश्यस्याऽऽत्मा ॥ २१ ॥

(ஸூ) ததர்த்த ஏவ த்ருச்யஸ்யாத்மா॥ (21)

(ப - ரை) **दृश्यस्य** = (த்ருச்யஸ்ய) திருச்யவஸ்துவினுடைய **आत्मा**=(ஆத்மா) ஸ்வரூபமானது **तदर्थएव**=(ததர்த்தஏவ) **तत्**=(தத்) அந்தத்ரஷ்டாவினுடைய **अर्थ एव**=(அர்த்தஏவ) போகம், அபவர்க்கம் என்றதையே பிரயோஜனமாயுடையதாக [**भवति**=(பவதி) ஆகிறது.]

(தா - ம்.) காரிய காரண வடிவமானதும், முக்குணவடிவமானதுமான திருச்யத்தின் ஸ்வரூபமானது த்ரஷ்டாவான புருஷனுக்குப் போகம், அபவர்க்கம் என்ற முக்தி, இவைகளை யுண்டு பண்ணுதலையே பிரயோஜனமாயுடையதாக ஆகின்றது. "ஸத்வம், ரஜஸ், தமஸ் ஆகிய இந்த குணங்கள் தம்மைவிட மற்றொன்றின் பிரயோஜனத்திற்காகவே ஏற்பட்டவைகள்; ஒன்றுடன் மற்றொன்று சேர்ந்தே தத்தமது காரியத்தைச் செய்யும் சுவபாவமுள்ளனவாயிருத்தலால்; படுக்கை, வீடு முதலியவைபோல" என்ற அனுமானப் பிரமாணத்தால் பிரகிருதி முதலியவற்றைவிடப் புருஷன் வேறானவனென்றும், திருச்யத்திற்கு போக்தாவென்றும், திருச்யத்தின் ஸ்வரூபமானது போகம் அபவர்க்கம் என்ற புருஷார்த்தம் ஏற்படும்வரையிருந்து அவை ஏற்பட்டதும் நிவிருத்தியை யடைவதால் திருச்யமானது புருஷனுக்குப் போக்யமென்றும் ஏற்பட்டது (எ - று.)

(அ - கை.) புருஷனுக்குப் போகாபவர்க்கமாகிற பிரயோஜனத்தை யுண்டுபண்ணவேண்டியே த்ருச்யமானது ஏற்பட்டதென்றால் 'புருஷனுக்கு முக்திநிலை ஏற்பட்டதும் பிருதிவீ முதலிய யாவும் அடியோடு நாசமடையவேண்டிவரும். அவ்விதம் ஒப்பினால் யாதேனும் ஒரு புருஷன் முக்திக்கு முயற்சி செய்வதிலிருந்தே மற்றெல்லா புருஷர்களுக்கும் முக்தி ஏற்படவேண்டிவருவதால் எல்லாப்புருஷர்களும் முக்திக்கு தனித்தனி முயற்சி செய்யவேண்டுவதவசியமாகாது. அத்துடன் இதுவரை கபிலர் முதலிய எவ்வளவோ யோகிகள் முக்தியடைந்திருக்கக் கூடுமா,

தலால் பின்னருள்ள நம்போன்றவர்க்கு இந்தப் பிரகிருதி பந்தம் ஏற்படுவதற்கிடமில்லை' என்றும் சங்கை நிகழ்கின்றது. அதைப் போக்கவேண்டி இந்தச் சூத்திரத்தால் அந்தந்த ஜீவனும் தனித் தனியே முக்திவிஷயத்தில் முயற்சித்தல் அவசியமாகும் என்பதற்குரிய காரணத்தை யுபதேசிக்கிறார்.

सू०॥ कृतार्थं प्रति नष्टमप्यनष्टं तदन्यसाधारणत्वात् ॥ २२ ॥

(ஸூ) க்ருதார்த்தம் ப்ரதி நஷ்டமபி அனஷ்டம் ததன்ய ஸாதாரணத்வாத் (22)

(ப - ரை) [दृश्यम्=(த்ருச்யம்) திருச்யமானது **कृतार्थंप्रति**=(க்ருதார்த்தம்ப்ரதி) முக்தனுன ஒருவனைக்குறித்து **नष्टमपि**=(நஷ்டமபி) நாசத்தை யடைந்தபோதிலும் **तदन्यसाधारणत्वात्**=(ததன்யஸாதாரணத்வாத்) **तदन्य**=(ததன்ய) முக்தனைவிட வேறுன பத்தனுக்கு **साधारणत्वात्**=(ஸாதாரணத்வாத்) பொதுவாயிருத்தலால் **अनष्टम्**=(அனஷ்டம்) நாசமடையாததாகவே (भवति=(பவதி) ஆகின்றது.

(தா - ம்.) இந்தயோக சித்தாந்தத்தில் பிரதானம் என்ற திருச்யமானது ஒன்றென்றும், புருஷன் என்ற ஜீவன் அனேகனென்றும் ஒப்பப்பட்டிருக்கிறது. ஆகவே திருச்யமான பிரதானமானது எந்தப் புருஷனைக் குறித்துப் போகம் அபவர்க்கம் இவ்விரண்டையும் செய்து முடித்துவிட்டதோ அந்தப் புருஷனே கிருதார்த்த (முக்த) னெனப்படுவன். அவ்வித கிருதார்த்தன் விஷயத்தில் பிரதானத்திற்கு இனி செய்யவேண்டியவேலை யெதுவும் மீதமில்லாதிருப்பதால் அது அவன் விஷயத்தில் எவ்வித முயற்சியையும் அடைவதில்லையாதல்பற்றி அவனுக்குஅதுநஷ்டத்தை (அதர்சனத்தை) யடைந்ததாகவே யாகிவிடுகின்றது. முக்தர்களல்லாத ஏனைய ஜீவர்கள் விஷயத்தில் பிரகிருதியானது தான் செய்யவேண்டிய போகாபவர்க்கங்களாகிற காரியங்களைச் செய்து கொண்டுதானிருக்கிறது. முக்தன் விஷயத்தில் பிரதானத்தின் காரியம் எவ்விதத்திலும் பயன்படாததாக விருப்பதைக்கொண்டு முக்தியை யடையாத பத்தஜீவன் விஷயத்தில் அனுபவத்திலிருந்துவரும் பிரதான காரியத்தை இல்லையென்று எவ்விதம்

சாதித்துவிடமுடியும். குருடனால் ரூபமானது பார்க்கப்படவில்லையென்பதற்காக கண்ணுள்ளவனால் பார்க்கப்படும்ரூபத்தை இல்லையென்று சாதித்துவிட முடியுமோ? ஒருபொழுதும் முடியாது. ஆகவே பிரதானத்தின் (பிரகிருதியின்) காரியமானது அமுக்தன் விஷயத்தில் பயன் தருவதாகவே கொள்ளல்வேண்டும் என்றேற் பட்டது. இதிலிருந்து ஒருவன் முக்தியடைந்தால் மற்ற ஜீவன் முக்திக்கு முயற்சிசெய்யவேண்டுவதில்லை என்ற சங்கைக்கிடமில் லாததாயாகிவிட்டது. ஏனெனில் பிரதானம் என்ற பிரகிருதியானது ஒன்றாயிருப்பதுபோல புருஷனெனப்படும் ஜீவனும் ஒருவனாகவே யிருந்தாலல்லவோ ஒருவன் முக்தியை யடைந்தால் எல்லாஜீவர்களும முக்தியை யடையட்டும் என்று சொல்லுதல் பொருந்தும். ஜீவர்கள் அனேகம் என்பது.

अजामेकां लोहितशुक्लकृष्णां बह्वीः प्रजाः सृजमानां सरूपाः।
अजो ह्येको जुषमाणोऽनुशेते जहात्येनां भुक्तभोगामजोऽन्यः॥

"ரஜஸ், ஸத்வம், தமஸ் என்ற முக்குணவடிவமானதும், ஸமானங்களும் அனேகங்களுமான பிரஜைகளை சிருஷ்டிக்கின்றதும் ஒன்றாகவிருக்கின்றதுமான அஜையை (அதாவது: தனக்கு மற்றொரு காரணத்தையுடைத் தாகாத பிரகிருதியை) ஒரு ஜீவன் பிரீதியுடன் கூடினவனாய் அனுசரிக்கிறான். வேறு ஜீவன் புக்தமான போகத்தையுடைய இந்தப் பிரகிருதியை விலக்கிவிடுகிறான்" எனச் சுருதியே உபதேசிப்பதிலிருந்தும், ஜனனம், மரணம், சுகதுக்கானுபவம், மோக்ஷம், முதலியன தனிப்பட்டதாகவே உண்டாவதை லோகானுபவத்தில் காணுவதிலிருந்தும் தெளிவாயேற்படுகிறது. ஆகவே திருச்யமானது ஒரு புருஷனுக்கு நஷ்டமாயினும் வேறு புருஷன் விஷயத்தில் நாசமடையாதிருப்பதால் திரஷ்டாவான புருஷனுக்கும், திருச்யமான பிரகிருதிக்குமுள்ள சம்பந்தமானது பந்தத்திற்குக் காரணமாவதுபற்றி அந்தச் சம்பந்தம் விலகுவதற்காக ஒவ்வொருவனும் முயற்சிசெய்தல் அவசியம் என்று சித்தமாயிற்று (எ - று.)

(அ - கை.) திரஷ்டாவுக்கும், திருச்யத்திற்குமுள்ள ஸம்யோக (ஸம்பந்த) மே ஸம்ஸாரத்திற்குக் காரணமென்று முன்னர்

சொல்லப்பட்டது. இந்த சூத்திரத்தால் ஸம்ஸாரகாரணமான ஸம்யோகத்தின் ஸ்வரூபமுபதேசிக்கப்படுகிறது.

सू०॥ स्वस्वामिशक्त्योः स्वरूपोपलब्धिहेतुस्संयोगः ॥ २३ ॥

(ஸூ) ஸ்வஸ்வாமி சக்த்யோ: ஸ்வரூபோபலப்தி ஹேது: ஸம்யோக: (23)

(ப - ரை.) **स्वस्वामिशक्त्योः** = (ஸ்வஸ்வாமி சக்த்யோ:) **स्व= (शक्ति)**=ஸ்வ (சக்தி) திருச்யமாயிருக்குந் தன்மைக்குரிய யோக்யதை **स्वामिशक्ति** = (ஸ்வாமிசக்தி) திரஷ்டாவாகயிருக்குந் தன்மைக்குரிய யோக்யதை ஆகிய இவ்விரண்டினுடையவும் **स्वरूपोपलब्धिहेतुः**=(ஸ்வரூபோபலப்திஹேது:) **स्वरूप**=(ஸ்வரூப) முறையே பற்பல விஷயவடிவமாயுள்ள திருச்யமான புத்தி ஸ்வரூபத்தினுடையவும், ஸ்வாமியான திரஷ்ட்ரு ஸ்வரூபத்தினுடையவும் **उपलब्धि**=(உபலப்தி) முறையே போகம் அபவர்க்கம் இவ்விரண்டின் தோற்றத்திற்கு **हेतुः** = (ஹேது:) காரணமாகவுள்ளது **संयोगः**= (ஸம்யோக:) ஸம்யோகமெனப்படும். இதுவே ஸ்வஸ்வாமியாவம் (சொத்து, அதற்குடையவனாயிருத்தல்) என்றும், திருச்யமாயும் திரஷ்டாவாயுமிருக்குந்தன்மை என்றும், போக்யமாயும் போக்தாவாயுமிருக்குந்தன்மை யென்றும் சொல்லப்படுகிறது.

(தா - ம்.) பிரகிருதி, அதன் காரியமான புத்தி முதலியன இவையாவும் திருச்யம் என்றும், தனதருகில் எப்பொழுதுமிருப்பதுபற்றி புத்தியில் பிரதிபிம்பத்தையடைந்து புத்தியால் காண்பிக்கப்பட்ட விஷயங்களைப் பிரகாசப்படுத்துகின்ற புருஷன் அந்த திருச்யத்திற்குப் போக்தாவென்றும், முன்னர் சொல்லப்பட்டது. ஆகவே ஒன்று "திருச்ய" மாகவும் மற்றொன்று "திரஷ்டா" வாகவும் ஆகவேண்டுமானல், அவற்றினிடம் அதற்குரிய யோக்யதை அவசியமிருந்தே தீரவேண்டும். ஆகவே பிரகிருதி, அதன் காரியமான புத்தி முதலியன ஆகிய இவை ஜடமாயிருப்பதால் திருச்யமாகவும், போக்யமாகவும் ஆவதுபற்றி புருஷனுக்கு **स्वम्** (ஸ்வம்) ஆக ஆகிறது. புருஷன் சேதனனாயிருப்பதால் திரஷ்டாவாகவும் போக்தாவாகவும் ஆவது பற்றி **स्वामी** (ஸ்வாமீ) யாக

வாகிறான். திருச்யம் போக்யமாகவேண்டுமானால் அதில் போக்யமாவதற்குரிய ஓர்வித யோக்யதையிருந்து தீரவேண்டுவது அவசியமாகிறது. இதுபோலவே த்ரஷ்டா போக்தாவாக ஆகவேண்டுமானால் அவனிடத்தில் போக்தாவாக விருப்பதற்குரிய ஓர்வித யோக்யதை இருந்து தீரவேண்டுவதும் அவசியமாகின்றது. இவ்விதம் திருச்யம், திரஷ்டா இவ்விரண்டிலுமுள்ள யோக்யதையை முன்னிட்டே போகம், அபவர்க்கம் ஆகிய இவ்விரண்டும் நிகழ்கின்றது. திருச்யம், திரஷ்டா இவ்விரண்டிலுமுள்ள திருச்யமாயிருத்தலுக்குறிய யோக்யதை, த்ரஷ்டாவா யிருத்தலுக்குறிய யோக்யதை ஆகிய இவற்றை முன்னிட்ட போகம், அபவர்க்கம் இவ்விரண்டும் எதனால் பிரகாசத்தையடையுமோ அதுவே ஸம்யோகமென்றேற்பட்டது. இந்த ஸம்யோகமே "द्रष्टृदृश्यभावः," "भोक्तृ भोग्यभावः," என்றும்சொல்லப்படுகிறது. எந்த ஸம்யோகமில்லாவிடில் த்ரஷ்டா, திருச்யம்,'இவ்விரண்டினுடையவும் ஸ்வரூபம்தோற்றத்தை யடைவதில்லையோ, எந்த ஸம்யோகமிருந்தால் த்ரஷ்டா, திருச்ய மிவ்விரண்டினுடையவும் ஸ்வரூபம் தோற்றத்தையடையுமோ அந்தகைய ஸம்யோகமானது அதன் காரியத்திலிருந்தே ஊஹித்தறியவேண்டுவதாக வாகின்றது. (எ-று.)

(அ - கை.) இதுவரை ஸம்யோகத்தின் ஸ்வரூபத்தையும் அதனாலேற்படும் காரியத்தையுமுபதேசித்து இந்த சூத்திரத்தால் முற்கூறிய ஸம்யோகத்திற்குக் காரணம் இன்னதென்பதை உபதேசிக்கிறார்.

सू०॥ तस्य हेतुरविद्या ॥ २४ ॥

(ஸூ) தஸ்யஹேதுரவித்யா (24)

(ப - ரை.) **तस्य**=(தஸ்ய) முற்கூறிய த்ரஷ்ட்ரு த்ருச்யஸம்யோகத்திற்கு **अविद्या** = (அவித்யா) பிராந்திக் ஞானவாஸனையானது **हेतुः**=(ஹேது:) காரணமாக (**भवति**=(பவதி) ஆகிறது.)

(தா - ம்.) த்ரஷ்டாவான புருஷனிடத்தும் த்ருச்யமான பிரகிருதியினிடத்தும் ஏற்படும் நான் என்ற அபேத புத்தியானது பிரமம் எனப்படும். அத்தகைய பிரமவாஸனையையுடைய சித்த

மானது பிரளயகாலத்தில் பிரகிருதியில் லயமடைந்து பிறகு சிருஷ்டி காலத்தில் புருஷனைக் குறித்துச் சொத்தாகவே (போக்யமாகவே) இருந்துகொண்டு உண்டாகிறது. அத்தகைய ஸம்யோகத்தால் அவிவேகிக்கு பந்தம் உண்டாகின்றது. அவித்யை விலகி, அதன்மூலம் ஏற்பட்ட ஸம்யோகமும் விலகின விவேகிக்கு பந்தத்திற்குரிய காரணமில்லாமைபற்றி முக்தியேற்படுகின்றது. இவ்விதமே முந்தியுள்ள ஸர்க்கங்களிலுமேற்படுவதால் அனாத்மாவினிடத்து ஆத்மபுத்திரூபமான மித்யாக்ஞான வாஸனையாகிற அவித்யையானது அனாதியென்றே ஏற்படுகின்றது. அவித்யையின் வாஸனையிருப்பதாலேயே பிரளயகாலத்தில் முக்தியேற்படுவதில்லை. எப்பொழுது விவேகக் கியாதியானது தர்மமேக ஸமாதிரூபமான நிலையை யடைகின்றதோ அப்பொழுது வறுபட்ட விதைக்கொப்பான வாஸனையுடன்கூடின சித்தமானது நிவிருத்தியை யடையவே புருஷன் ஸ்வரூபமாத்திரமாய் மீதமாகிறான். இவ்வித புருஷநிலையே மோக்ஷம் எனப்படும். (எ-று.)

(அ - கை.) இதுவரை ஹேயம், அதன் ஹேது இவையுபதேசித்து இனி ஹேயத்தின் ஹானமென்ற மோக்ஷத்தை உபதேசிக்கிறார்.

सू०॥ तदभावात्संयोगाभावो हानं तद्दृशेः कैवल्यम् ॥ २५ ॥

(ஸூ) ததபாவாத் ஸம்யோகா பாவொ ஹானம்தத் த்ருசே: கைவல்யம் (25)

(ப - ரை.) **तदभावात्** = (ததபாவாத்) வாஸனையுடன்கூடிய அவித்யையின் நாசத்தால் **संयोगाभावः**=(ஸம்யோகாபாவ:) புத்தி புருஷன் இவற்றின் ஸம்பந்தரூபமான ஹேயத்திற்கு நாசமான **हानम्**=(ஹானம்) ஹானமானது [**भवति**=(பவதி) உண்டாகின்றது.] **तत्**=(தத்) அந்த ஹானமே **दृशेः**=(த்ருசே:) புருஷனுக்கு **कैवल्यम्**= (கைவல்யம்) முக்தியெனப்படும்.

(தா - ம்.) வாஸனையுடன்கூடின அவித்யையானது தனக்கு விரோதியான வித்யையினால் (விவேகக்யாதியினால்) நாசமடைந்து

விடவே புருஷனுக்கு அவித்யையை முன்னிட்டுண்டான புத்திசம்பந்தமும் விலகிவிடுகின்றது. அவ்வித ஸம்பந்தம் விலகவே புருஷன் தனது ஸ்வரூபமாத்திரத்தில் நிற்கிறான். அதாவது: எத்தகைய சம்பந்தமு மற்றவனாகிவிடுகிறான். இத்தகைய நிலையே புருஷனுக்குக் "கைவல்யம்" என்றும் "முக்தி" என்றும் சொல்லப்படுகின்றது (எ - று.)

(அ - கை.) மோக்ஷம் இன்னதென்பதையுபதேசித்து அதன் காரணத்தை உபதேசிக்கத் தொடங்குகிறார்.

ஸூ०॥ विवेकख्यातिरविप्लवा हानोपायः ॥ २६ ॥

(ஸூ) விவேகக்யாதி: அவிப்லவா ஹானோபாய: (26)

(ப - ரை.) **अविप्लवा**=(அவிப்லவா) மித்யாக்ஞான வாஸனையாலிடையிற்றடை செய்யப்படாத **विवेकख्यातिः**=(விவேகக்யாதி:) பிரகிருதிஸம்பந்தமற்ற புருஷ ஸாக்ஷாத்காரமானது **हानोपायः**=(ஹானோபாய:) மோக்ஷத்திற்குக் காரணமாகின்றது.

(தா - ம்.) 'த்ருச்யமான பிரகிருதியைவிட த்ருக்கான புருஷன் உண்மையில் வேறு' என்ற க்ஞானமானது விவேகக்யாதி எனப்படும். சாஸ்திராப்பியாஸத்தால் இத்தகைய க்ஞானமுண்டானபோதிலும் வெகு ஜன்மப் பழக்கத்தால் நிலைத்த அக்ஞான வாஸனையால் இத்தகைய விவேகக்யாதியானது ஒரு சமயம் நாசமாக்கப்படக்கூடும். ஆதலே சாஸ்திராப்பியாஸமூலம் பிரகிருதியைவிடப் புருஷன்வேறு என்ற பரோக்ஷ க்ஞானம் உண்டானதும் அதே அடிக்கடி மனனம் செய்து (சிந்தித்து) நிலைநாட்டப்பட்டதாக ஆகுமாயின் அப்பொழுது எல்லா விஷயத்திலும் வைராக்யத்தை யடைந்ததும், புருஷாபிமுகமாகவானதுமான சித்தமானது அதையே இடைவிடாது ஆவிருத்திசெய்யத் தொடங்கும். அப்பொழுது அவ்விதத்தியான மஹிமையால் சைதன்யப் பிரதிபிம்பமுள்ளதும், புருஷஸாக்ஷாத்கார ரூபமானதுமான விருத்தியேற்படுகின்றது. அத்தகைய ஸாக்ஷாத்காரரூபமான சித்தவிருத்தியானது வாஸனையுடன்கூடிய மித்யாக்ஞானத்தை

நாசமாக்குகிறதாய்க்கொண்டு எவ்வித உபரோதமு மற்றதாய்க் கொண்டு வைராக்யத்தை முன்னிட்ட நிரோதத்தினுல் ஸம்ஸ்கார சேஷமாயும் பிராரப்தமுமாயுமுள்ள சரீரம் துலைந்ததும் அடியோடு நிவிருத்தியை யடையும் வாயிலாக இனிவரும் துக்க நாசத்தையுடையதான (அதாவது: இனி துக்கமே யேற்படுவதற் கிடமில்லாததான) மோக்ஷத்திற்கு உபாயமாகிறது (எ-று.)

(அ - கை.) மித்யாக்ஞான வாஸனையால் இடையில் பாதிக்கப்படாத விவேகக்யாதியின் லக்ஷணத்தை இந்தச் சூத்திரத்தாலுபதேசிக்கிறுர்.

सू॰॥ तस्य सप्तधा प्रान्तभूमिः प्रज्ञा ॥ २७ ॥

(ஸூ) தஸ்யஸப்ததா ப்ராந்தபூமி: ப்ரக்ஞா (27)

(ப - ரை.) **तस्य**=(தஸ்ய) விவேகக்யாதியை யடைந்த யோகிக்கு **प्रान्तभूमिः**=(ப்ராந்தபூமி:) **प्रान्त**=(ப்ராந்த) முடிவிலுள்ள **भूमिः**=(பூமி:) அவஸ்தைகளையுடையதாயிருக்கிற **प्रज्ञा** = (ப்ரக்ஞா) அறிவானது **सप्तधा**=(ஸப்ததா) ஏழுவிதமாக **भवति**=(பவதி) உண்டாகிறது.

(தா - ம்.) விவேகக்யாதியையடைந்த யோகிக்கு முடிவிலுள்ள ஏழுவிதமான அவஸ்தைகளையுடைய ப்ரக்ஞையானது உண்டாகிறது. அதாவது: 26-வது சூத்திரத்தில் சொல்லியபடி மித்யாக்ஞான வாஸனையால் இடையிடையே தடைசெய்யப்படாதபடி நிலைத்த விவேகக்யாதி உண்டானதும், ஆத்மஸ்வரூபத்தைத் தவிர்த்து வேறு எவ்விததோற்றமுமில்லாமல் அவித்யை முதலியன விலகிவிடவே முடிவில் ஏழுவிதமான அவஸ்தைகளுடன் கூடின பிரக்ஞை உண்டாகின்றது. பிரக்ஞையின் ஏழு அவஸ்தைகளாவன: (1) **जिज्ञासा**, (2) **जिहासा**, (3) **प्रेप्सा**, (4) **चिकीर्षा**, (5) **शोक** (6) **भय** (7) **विकल्पान्तफलाः सप्तप्रज्ञाभूमयः प्रान्ताः॥** (1) அறியவேண்டுமென்ற இச்சை (2) விலக்கவேண்டுமென்ற விருப்பம் (3) புதிதாய் ஒன்றை யடையவேண்டுமென்ற ஆசை (4) புதிதாய் ஒன்றைச் செய்யவேண்டுமென்ற எண்ணம் (5) சோகம் (6) பயம் (7) மித்யாக்ஞானம் ஆகிய இவற்றின் நாசத்தையுடைய

(அதாவது இவ்வேழுமற்ற) ப்ரக்ஞாபூமிகள் உண்டாகின்றன, அவ்விதப்ரக்ஞையுண்டானதும் யோகியானவன் பின்வருமாறு அப்பொழுது எண்ணத் தொடங்குகிறான். அதாவது:—**ज्ञातव्यमखिलं ज्ञातं, अतः परं न किञ्चित् ज्ञातव्यमस्तीत्येका,** "அறியவேண்டியவையாவு மறியப்பட்டது. இதைக்காட்டிலும் வேறாக ஒன்றும் அறியவேண்டுவதாகவில்லை" என்பது ஒன்று. இந்த பிரக்ஞையானது எல்லா ஜிக்ஞாஸையையும் (அறியவேண்டுவதாகவுள்ள விருப்பம் யாவையும்) போக்கிவிடுவதால் முடிவிலுள்ளதாக ஆகிவிடுகிறது. இது ஆத்மக்ஞான மில்லாதவனுக்கு உண்டாவதில்லை. ஆகவே ஆத்ம விஷயமான ஸமாதியினால் பிரதானம் வரையுள்ள ப்ரக்ஞை நிலைத்தபோதிலுங்கூட, மேலும் ஆத்ம விஷயமான ஜிக்ஞாஸா (அறியவேண்டுமென்ற விருப்பம்) இருந்துகொண்டேதானிருக்கும். ஆனதுபற்றி பிரதானம்வரை ப்ரக்ஞையானது மிக்கச் சூக்ஷ்மமாகவாகுமேயொழிய கடைசி ப்ரக்ஞையாகவாகா. இவ்விதம் மேலுள்ள எல்லாவற்றிலும் கடைசி அவஸ்தையாயிருக்குந் தன்மையை ஊஹித்தறியவேண்டும். **हातव्याः सर्वे बन्धहेतवो हताः न किञ्चिन्मम हेयमस्तीति द्वितीया** "விலக்கவேண்டிய பந்தஹேதுக்கள் யாவும் விலக்கப்பட்டன. எனக்கு விலக்கவேண்டுவதாக எதுவும் மீதமில்லை" என்பது இரண்டாவது ப்ரக்ஞையாகிறது. **कैवल्यप्राप्त्या प्राप्तव्यमखिलं प्राप्तम् अतोऽन्यन्नकिञ्चिदपि मम प्राप्तव्यमस्तीतितृतीया** "கைவல்யநிலையேற்பட்டபடியால் அடையவேண்டியவை யாவுமே அடையப்பட்டது. இதைக்காட்டிலும் வேறு கொஞ்சமும் எனக்கு அடையவேண்டுவதாக மீதமில்லை" என்பது மூன்றாவது ப்ரக்ஞையாகிறது. **विवेकख्यातिसंपादनेन कर्तव्यमखिलं कृतं न किञ्चित्कार्यमस्तीति चतुर्थी.** விவேகக்யாதியை சம்பாதித்துக்கொண்டு விட்டபடியால் செய்ய வேண்டியவையாவும் செய்யப்பட்டு விட்டது. இனி செய்யவேண்டுவதாக எதுவும்மீதமில்லை என்பது நான்காவது பிரக்ஞையாகிறது. இந்த நான்கும் காரியத்தை விலக்குதல் என்ற ப்ரக்ஞைகளாகும். சித்தத்தை விடுதல் என்ற பெயருள்ள ப்ரக்ஞைகள் மூன்றுவிதங்களாகும். அவையாவன—

कृतार्थं मे बुद्धिसत्वमित्येका, "எனது புத்தி ஸத்வமானது கிரு

தார்த்தமாகிவிட்டது" என்பது ஒன்ருவது ப்ரக்ஞையாகிறது. **बुद्धयादिगुणा अपि गिरिशिखरच्युता इव ग्रावाणः निरवस्थानाः स्वकारणे प्रळयाभिमुखाः संपातेनास्तमात्यन्तिकं गच्छन्ति, तेषां नास्ति पुनः प्ररोहः प्रयोजनाभावात् इति द्वितीया,** புத்தி முதலிய குணங்கள்கூட மலையின் நுணியிலிருந்து நழுவின கற்பாறைகள்போல பிடிப்பற்றவைகளாய்க்கொண்டு தனது காரணத்தில் லயத்தையடையும் குறிப்புள்ளவைகளாய்க்கொண்டு ஒரேயடியாய் இனி திரும்புதலில்லாதபடி நாசத்தை யடைந்து விடுகின்றன. அவைகளுக்கு பிரயோஜனமில்லாமைப்பற்றி திரும்பவும் உத்பத்தியில்லை. இது இரண்டாவது ப்ரக்ஞையாகிறது. **तथा गुणातीतः स्वस्वरूपमात्रावस्थितश्चिदेकरस इति तृतीया,** அவ்விதமே குணாதீதனுகவும் ஸ்வரூபம் மட்டிலிருப்பவனுகவும் சிதேகரஸனுகவுமாகிருன் என்பது மூன்ருவது ப்ரக்ஞையாகிறது. இங்கு கூறிய **प्रज्ञा**=(ப்ரக்ஞா) என்பதற்கு அவஸ்தையென்பது பொருளாகும். ஆகவே இந்த நிலையை யடைந்த யோகிக்கு முடிவில் மேற்கூறியவாறு ஏழுவிதமான எண்ணமுண்டாகிறது. இதையே ஸூத்திரத்தில் **सप्तधा प्रान्तभूमिः प्रज्ञा** என்றதாலுபதேசித்திருக்கிருர் என்பதாம் (எ-று.)

(அ - கை.) மேற்கூறிய கடைசி ப்ரக்ஞை உண்டாவதற்குரிய சாதனங்கள் உபதேசிக்கப்படுகின்றன.

सू॰ ॥ योगाङ्गानुष्ठानादशुद्धिक्षये ज्ञानदीप्तिराविवेकख्यातेः ॥ २८ ॥

(ஸூ) யோகாங்கானுஷ்டானுத் அசுத்திக்ஷயே , க்ஞானதீப்திராவிவேக க்யாதே: (28)

(ப - ரை.) **योगाङ्गानुष्ठानात्**=(யோகாங்கானுஷ்டானுத்) **योगाङ्ग** (யோகாங்க) யமம் முலிய எட்டுயோகாங்கங்களின் **अनुष्ठानात्**=(அனுஷ்டானுத்) பழக்கத்தால் **अशुद्धिक्षये**=(அசுத்திக்ஷயே) **अशुद्धि**=(அசுத்தி) அவித்யா. அஸ்மிதா, ராகம், த்வேஷம், அபிநிவேசம், புண்ணியம், பாபம், முதலியவற்றின் **क्षये**=(க்ஷயே) தேய்தலேற்பட்டவுடன் **आविवेकख्यातेः** = (ஆவிவேகக்யாதே:) குணம், புருஷன் இவற்றின் ஸ்வரூபக்ஞான முண்டாகும் வரையுள்ள **ज्ञानदीप्तिः**=

(க்ஞானதீப்தி:) ஸம்யக்ஞானத்தின் ஒளியானது (**भवति** = பவதி) உண்டாகின்றது.

(தா - ம்.) எவ்வளவுக் கெவ்வளவு யமம், நியமம் முதலிய சாதனங்களை யனுஷ்டிக்கின்றனோ அவ்வளவுக் கவ்வளவு அவித்யை முதலிய அசுத்தி தேயவாரம்பிக்கிறது. எவ்வளவுக் கெவ்வளவு தேய்கின்றதோ அவ்வளவுக் கவ்வளவு தேய்தலின் முறையை யொட்டி க்ஞானத்தின் பிரகாசமோங்குகிறது. இம் முறைப்படி க்ஞானவொளியின் ஓங்கலானது முடிவான விவேக க்யாதியுண்டாகும்வரை பெருகிக்கொண்டே போகிறது. சத்வாதி குணங்களினுடையவும், புருஷனுடையவும் ஸ்வரூபத்தை இன்னதெனப் பகுத்தறிதலே விவேக க்யாதியாகும். யோகாங்கங்களை அனுஷ்டித்தலானது அவித்யை முதலிய அசுத்தியின் வியோக (விலகுதல்) த்திற்குக் காரணமாகவும் முற்கூறிய விவேகக்யாதியையடைவதற்குக் காரணமாகவும் ஆகிறது. எவ்விதமெனில் பாசு என்ற கோடாரியானது மரம் முதலிய சேத்யவஸ்துக்களின் வியோகத்திற்குக் காரணமாவதுபோலும், சுகம் உண்டாவதற்கு வேறுகாரணமின்றி தர்மமே காரணமாவது போலும் என்க. வேறு காரணமின்றி தர்மமே சுகத்திற்குக் காரணமாகின்றது என்று சொல்லப்பட்டது. அங்ஙனமாயின் சாஸ்திரங்களிற் கூறிய காரணங்கள் எத்தனை விதப்படும் எனின்? கூறுவாம். காரணங்கள் 9-விதங்களாகின்றன. அவைகளாவன.—

उत्पत्तिस्थित्यभिव्यक्ति विकारप्रत्ययाप्तयः ।
वियोगान्यत्वधृतयः कारणं नवधा स्मृतम् ॥

உத்பத்தி, ஸ்திதி, அபிவ்யக்தி, விகாரம், ப்ரத்யயம், ஆப்தி, வியோகம், அன்யத்வம், த்ருதி, என காரணமானது 9-விதமாகக் கருதப்படுகிறது. அவற்றுள் மனதானது விக்ஞானத்தினுடைய இன்னதெனப் பகுத்தறிய வியலாத நிலையைப்போக்கி வர்த்தமானவஸ்தையை உண்டுபண்ணுவது பற்றி விக்ஞானத்திற்கு மனதானது உத்பத்திகாரணமாக ஆகின்றது. இது போலவே ஆஹாரமானது சரீரஸ்திதிக்குக் காரணமாவது போல இனி

வரும் புருஷார்த்தமானது மனத்தின் ஸ்திதிக்குக் காரணமாகின்றது. அதாவது: அஸ்மிதையென்ற அஹந்தத்வத்தினின்றுமுண்டான மனதானது எதுவரை இரண்டுவிதமான புருஷார்த்தத்தைக் கருதாததாகின்றதோ, அதுவரை அது நிலைபெற்று நிற்கின்றது. இரண்டுவிதமான புருஷார்த்தத்தை மனது கருதுமாயின் அப்பொழுது அம்மனது தன் நிலையை விட்டு நழுவினதாக வாகின்றது, ஆகவே தனது காரணமான அஹந்தத்வத்தினின்றும் உத்பத்தியை யடைந்த மனதிற்கு இனிவரும் புருஷார்த்தமானது ஸ்திதிக்கு (நிலைத்து நிற்றலுக்கு)க் காரணமாகின்றது என்பதாம். மேலும் கருப்பு, வெளுப்பு முதலிய ரூபத்திற்கு ஆலோக (பிரகாச) மானதுபோல இந்திரியங்கள் வாயிலாகவோ, அல்லது தானுகவோ ஏற்படும் வஸ்துக்களின் தெளிவு அபிவ்யக்தியெனப்படும். இவ்வித அபிவ்யக்திக்கு ரூபக்ஞானம் காரணமாகிறது. ஆகவே ரூபக்ஞானம் வஸ்துவின் அபிவ்யக்திக்குக் காரணமாகிவிட்டது மேலும் அரிசி முதலிய பாகஞ் செய்யப்படும் வஸ்துக்களின் விகாரத்திற்கு (அவயவத்தளர்ச்சிக்கு) அக்னியானது காரணமாவதுபோல சப்தம்முதலிய வேறு விஷயங்கள் மனத்தின் விகாரத்திற்குக் காரணமாகின்றது. அதாவது: கண்டு என்ற மஹருஷியானவர் நிர்விகற்ப ஸமாதி நிலையை யடைந்திருக்கும்பொழுது அவரது ஸமாதி நிலையைக் கலைக்க வெண்ணங்கொண்ட தேவர்களால் அனுப்பப்பட்ட ப்ரம்லோசா என்ற அப்ஸர ஸ்திரீயானவள் அவரது அருகில் வந்து வல்லகீ என்ற தனது அருமை தங்கிய வீணையில் பஞ்சமஸ்வரமமைத்து கானஞ்செய்யத் தொடங்கவே, பஞ்சமஸ்வரமமைந்த அந்தக் கானத்தைக் கேட்டவுடனேயே ஸமாதி நிலையிற் சென்றிருந்த கண்டுவின் மனது விகார (மாறு) ப்பட்டு இந்திரியங்கள் வழிப்படவே கண்கள் திறந்தன. அப்பொழுது சிறந்த ரூபம், லாவண்யம், யௌவனம், இவற்றுடன் கூடியவளான "ப்ரம்லோசா" என்ற அந்த அப்ஸரஸ்ஸைக் கண்ணுற்றார். உடனே அவருடைய மனதானது ஸமாதி நிலையினின்றும் விலகி அந்த ப்ரம்லோசையினிடத்து பற்றுதலென்ற விகாரத்தை யடைந்தது என்று புராணுதிகளில்

சொல்லப்பட்டிருக்கிறது. ஆகவே வேறுமாதிரியானசப்தம் முதலிய விஷயமானது மனத்தின் விகாரத்திற்கு (ஒருநிலையைவிட்டு மற்றொருநிலையை யடைவதற்கு) காரணமாக வாகின்ற தென்பது இதனால் தெளிவாகிவிட்டது. மேலும் புகையைக்கண்டதும் 'இவ்விடத்தில் நெருப்பு இருக்கிறது' என்ற க்ஞான முண்டாகின்றது. ஆகவே புகையைப்பற்றியுண்டாகும் க்ஞானமானது, இருக்கின்றதாகவே யுள்ள க்ஞேயமான அக்கினியின் க்ஞானத்திற்குக் காரணமாகின்றது பற்றி, தூமக்ஞானம் பிரத்யய காரணமாக வாகிறது. மேலும் யோகாங்கானுஷ்டானமானது விவேகக்யாதியினுடைய பிராப்திக்குக் காரணமாகின்றமை பற்றி இந்த யோகாங்கானுஷ்டானமானது பிராப்திகாரணமாக வாகின்றது. இவ்விதமே அதே யோகாங்கானுஷ்டான மானது அவித்யை முதலிய அசுத்தியைப் போக்குவதில் காரணமாவதால் வியோககாரணமாகவுமாகிறது என்றும் கொள்ள வேண்டும். இதுபோலவே கடகம் முதலியவற்றைச் செய்கின்ற தட்டான் குண்டலத்தை விடவேறாக வில்லாத சுவர்ணத்தினின்றும் வேறொன்றைச் செய்கின்றான். ஆனதுபற்றி தட்டான் சுவர்ணத்தின் அன்யத்வத்திற்குக் (வேறாகவிருக்கும் தன்மைக்கு) காரணமாகவாகிறான். இதுபோலவே ஒரே ஸ்திரீ வியக்தியினிடத்து ஒருவன் மூடனாவதற்கு (மோஹத்தை யடைவதற்கு) அவித்யை காரணமாகவும், மற்றொருவன் துக்கத்தை யடைவதற்குத் துவேஷம் காரணமாகவும், வேறொருவன் சுகப்படுவதற்கு ராகம் காரணமாகவும், மற்றொருவன் நடுநிலைமை வஹிப்பதற்கு அந்தஸ்திரீ வியக்தியின் தத்வக்ஞானமானது காரணமாகவுமாகின்றது. இதுபோலவே சரீரமானது இந்திரியங்கள் நிலைத்து நிற்றலுக்குக் காரணமாகின்றது. ஆகவே சரீரம் திருதிகாரணமாக வாகிறது. இந்திரியங்களும் சரீரநிலைக்குக் காரணமாகின்றன. ஆகாசாதிபஞ்சபூதங்கள் சரீரநிலைக்குக் காரணங்களாகின்றன. சரீரங்களும் மஹாபூதங்களின் நிலைத்திருத்தலுக்குக் காரணமாகவாவதுண்டு. ஆகவே பசுபக்ஷிகள், மனிதன், தேவதை முதலியயாவும் ஒன்றுக்கொன்று தாரகர்களாகவே ஆகின்றமை பற்றி எந்த வஸ்துவும் எந்தவஸ்துக்களுக்கும் தாரகங்களாகவே ஆகிவிடுகின்றன. ஆகவே சாஸ்

திரங்களில் இம்மாதிரியான காரணங்கள் 9-விதங்களாக உபதேசிக்கப்பட்டன. இங்கு சொல்லிய 9,வித காரணங்களையும் ஆங்காங்கு நேருவதற்குத்தக்கபடி ஒவ்வொருபதார்த்தங்களிலும் பொருத்திப் பார்த்துக்கொள்ளவேண்டும். இதுவரை கூறிய 9வித காரணங்களுள் யோகாங்கானுஷ்டானமானது அசுத்திநாசத்திலும், க்ஞானப்பிரகாசப் பிராப்த்தியிலும் காரணமாக வாகிவிடுகின்றது. (எ-று)

(அ-கை) யோகத்திற்கு அங்கங்கள் இன்னின்னவை யென்பதை இதனுலுபதேசிக்கிருர்—

सू० ॥ यमनियमाऽऽसन प्राणायाम प्रत्याहार धारणा ध्यान-समाधयोऽष्टावङ्गानि ॥ २९ ॥

(ஸூ) யம நியம ஆஸன பிராணுயாம பிரத்யாஹார தாரணு த்யான ஸமாதய: அஷ்டா வங்கானி (29).

(ப-ரை) **यम...समाधय:**=யமம், நியமம், ஆஸனம், பிராணுயாமம், ப்ரத்யாஹாரம், தாரணு, த்யானம், ஸமாதி என்ற **अष्टौ**=எட்டும் **अङ्गानि**=யோகாங்கங்களாகும். அடுத்த ஸூத்திரம் தொடங்கி மேற்கூறிய யமம் முதலியவற்றின் சுவரூபமும், அவற்றை யனுஷ்டிக்கும் விதமும் முறையே உபதேசிக்கப்படும்.

(அ-கை) மேற்கூறிய யோகாங்கங்களுள் யமம் என்ற யோகாங்கத்தை இதனுலுபதேசிக்கிருர் :—

सू० ॥ अहिंसासत्याऽस्तेयब्रह्मचर्याऽपरिग्रहा यमा: ॥ ३० ॥

(ஸூ) அஹிம்ஸா, ஸத்ய, அஸ்தேய, ப்ரும்மசர்ய, அபரிக்ரஹா யமா: (30)

(ப-ரை) **अहिंसा...ग्रहा:**=**अहिंसा**=(அஹிம்ஸா) ஹிம்ஸையை விலக்குதல் அதாவது: எவ்விதத்தாலும், எப்பொழுதும் எப்பிராணிகளுக்கும் துரோஹம் செய்யாதிருத்தல் **सत्य**=(ஸத்ய) வாக்கு மனது ஆகிய இரண்டும் உண்மையான விஷயத்திலேயே நிற்றல். **अस्तेय**=(அஸ்தேய) சாஸ்திர ஸம்மதமின்றி பிறர் சொத்தில்

ஆசை கொள்ளாதிருத்தல் ब्रह्मचर्य=(ப்ரும்மசர்ய) ரஹஸ்யேந்திரியத்தை யடக்குதல் अपरिग्रहाः=(அபரிக்ரஹா:)=விஷயங்களை ஏற்காதிருத்தல் [इत्येतेपञ्च (இத்யேதேபஞ்ச)=ஆகிய இவ்வைந்தும்] यमाः– (யமா:)=யமங்களெனப்படும்.

(தா—ம்) மன மொழி மெய்களாலு மெவ்வுயிர்க்கும் தீங்கிழையாதிருத்தலே அஹிம்ஸை எனப்படும். இந்தயோகசாஸ்திரத்திற் கூறிய சாதனங்களுள் இந்த அஹிம்ஸையே மிக்கச்சிறந்தஸாதனமாகும். யமம் முதலிய மற்ற சாதனங்கள் மேற்கூறிய அஹிம்ஸை ஏற்படுவதற்கு வேண்டியே சாஸ்திரத்திலுபதேசிக்கப் பட்டிருக்கின்றன. பிறர்க்குத் தீங்கிழையாதபடி உண்மை பேசல் சத்யம் எனப்படும். சத்யதபஸ் என்ற ஓர் மஹருஷியானவர் காட்டில் கடுந்தவம் புரிந்து வந்ததுடன் எக்காலத்திலுமுண்மை பேசுவதையே தனது விரதமாகவும் கொண்டிருந்தார். இவ்விதம் இவர் தவம் செய்யும் பொழுது ஒருநாளிறவு சில திருடர்கள் அத்தேச வரசனுடைய அரண்மனையிற் புகுந்து ராஜபத்தினியின் ஆடையாபரணங்களைக் களவாடிக்கொண்டு வெளியே யோடிவருவதை யறிந்த ராஜஸேவகர்கள் அவர்களை விரட்டிக்கொண்டு பின் தொடர்ந்தனர். அவ்விதம் ஸேவகர்களால் பின் தொடரப்பட்ட அத்திருடர்கள் காட்டிற்புகுந்து ஓடவாரம்பித்தனர். சேவகர்களும் பின்தொடர்ந்தே விரட்டிச் சென்றனர். இவ்விதம் ஓடின திருடர்கள், காட்டில் தவம் செய்து கொண்டிருக்கும் ஸத்யதபஸ் வஸிக்கு மிடத்திற்கு அருகாமையிலோடினர். அப்பொழுது ஸமாதி நிலை கலைந்து அம்மஹருஷி கண்ணெடுத்துப் பார்க்கவே தனது முன்னிலையில் சிலரோடுவதைக் கண்ணுற்றார். இவ்விதம் பார்த்துத் திரும்புவதற்குள் அத்திருடர்களைப் பின்தொடர்ந்தோடிவரும்சேவகர்களும் மஹருஷியின் அருகில் வந்து, "ஓ மஹருஷே! இவ்வழியே சிலரோடியதைத் தாங்கள் கண்டதுண்டோ" எனவினவினர். அது கேட்டதும் உண்மை பேசுவதையே முக்கிய விரதமாகக் கொண்ட அம்மஹான் தனது கண்ணுற் கண்டபடி "இதோ இவ்வழியாய்ப் பலரோடுகின்றனர்" என்றார். இவர் அவ்வழியைக் காட்டியிராவிட்டால் திருடர்களைச் சேவகர்கள் எப்பாடுபட்டும்

அப்பொழுது பிடித்திருக்க முடிந்திராது. ஆகவே அதுகேட்ட சேவகர்கள் மஹருஷி காட்டிய குறுக்குப் பாதைவழியாகவே ஓடித் திருடர்களைப் பிடித்திழுத்து அவர்களை நையப் புடைக்கும்பொழுது அவர்களுள் ஒருவர் அடிதாங்க மாட்டாமல் உடனே உயிர் துறந்தார். இவ்விதம் நடந்ததும் அவர்களுள் ஒரு ஜீவனை உயிர் துறக்கும்படி செய்த குற்றம் ராஜஸேவகர்களைச் சேர்ந்ததா? அல்லது அரசனைச் சேர்ந்ததா? அல்லது அவர்கள் சென்றவழியைக் காட்டிச் சுலுவில் அவர்களைப் பிடிப்பதற்கு உதவிசெய்த மஹருஷியைச் சேர்ந்ததா? என விசாரிக்குங்கால், ஒருவனை உயிர் துறக்கும்படி சேவகர்கள் செய்தகுற்றமானது மஹருஷியைத்தான் சாரும் எனப் பெரியோர் தீர்மானிக்கலாயினர். ஏனெனில்—திருடர்கள் சென்றவழியை இம்மஹருஷி காட்டாவிடில் சேவகர்கள் அவர்களைப் பிடிக்கப் போவதில்லை. அடிக்கப் போவதுமில்லை. ஆகவே திருடர்களைப் பிடித்து அவர்களுள் ஒருவன் உயிர் துறக்க நேர்ந்ததற்குக் காரணமாக மஹருஷியின் வசனமேயாவதால் அவனைக் கொன்ற குற்றம் இவரைத்தான் சாரும் எனப் பெரியோர் ஓர்வித முடிவுக்கு வந்தனர்.

சங்கை — அங்ஙனமாயின் திருடன் போனதை நேரில் பார்த்த இவர் அதைச் சொல்லாவிடில் அது பொய்யாகவாகிப் பொய் சொல்லுவதாலுண்டாகும் நரகயாதனையை இவர் அநுபவிக்க நேரக்கூடு மாதலால், அவ்வித நரகயாதனை தனக்கு வராதிருக்கவேண்டி இவர் சொன்னது நியாயமாயிருப்பதால் திருடர்களை மாளும்படி செய்த சேவகர்களையாவது, அரசனையாவது தன்றோ இக்குற்றம் சேரவேண்டும். இவ்விதமிருக்க இதற்கு நேர்மாறாக அக்குற்றம் மஹருஷியைச் சேர்ந்ததாகப் பெரியோர் செய்ததீர்மானம் எவ்விதம் நியாயமாக வாகுமெனின்?

உத்தரம்—அதனுண்மையை இங்கு கூறுவாம். இந்த மஹருஷி கேவலம் சாஸ்திரங்களை நம்பிக் காட்டில் தவம் செய்வது இம்மையிற் சுகத்தை யடைவதற்கல்ல வென்பது வெளிப்படை. இவ்விதமிருக்க பிறர்க்கு ஹிம்ஸையை விளைவிக்கக் கூடிய உண்

மை பேசுவதை விட திருடர்களைப் பற்றிச் சேவகர்கள் தன்னைக் கேட்கும் பொழுது இவர் ஒன்றுமே வாய்திறந்து பேசாது மவுனமாயிருந்திருக்க வேண்டும். அவ்விதமிவர் மவுனவிரதத்தை யனுஷ்டிப்பாராஞல் தாங்கள் கேட்ட கேள்விக்குச் சரியானபதில் சொல்லாதிருந்தமைபற்றி இவர்பால் சினங்கொண்ட சேவகர்கள் ஒருசமயம் இவரையும் திருடர் வகுப்பில் சேர்த்து கையப்புடைக்கக் கூடும். அவ்வித மவர்களடிப்பதால் இவருடைய உயிர்போன போதிலும் கேவலம் சாஸ்திரத்தை நம்பித் தவம் செய்யுமிவர்க்கு எவ்விதக் குறைவும் வருவதற்கில்லை. ஏனெனில்? இவர்க்கு மவுன விரதானுஷ்டானத்தாலுண்டான புண்யத்துடன் பிறருயிரைப் காப்பாற்றிய புண்ணியமும் சிபி என்ற சக்கிரவர்த்திக்கு நேர்ந்தது போல நேர்ந்து அதன் மூலம் இவர் கோதிய தவப்பயனை நிச்சயமா யடைந்திருக்கக் கூடும் என்பதில் யாதும் தடையில்லை. ஆகவே சாஸ்திர நம்பிக்கையில்லாத ஏனைய மனிதர்கள் போல கேவலம் தேஹாபிமானங் கொண்டு பிறருயிரை நாசமாக்குவதற் குபயோகப் படக்கூடிய முறையிற் சொல்லிய உண்மையானது எவ்விதப்பயனையு மளிக்காதென்பதிலையமில்லை. ஆகையால்தான் பெரியோர்.

सत्यं ब्रूयात्प्रियं ब्रूयान्न ब्रूयात्सत्यमप्रियम् ।
प्रियं च नानृतं ब्रूयादेषधर्मस्सनातनः ॥

"பிறர்க்குத் தீங்கிழையாத உண்மையையே பேசல் வேண்டும். உண்மையாயினும் அது பிறர்க்குத் தீங்கிழைக்கக் கூடுமாயின் அப்பொழுது மவுனத்தை யனுஷ்டித்தல் வேண்டும். மேலும் பிறர்க்கு நன்மையுண்டாக்க வேண்டிபொய் பேசுதலும் தகா. இவ்விதம் செய்தலே வேதசாஸ்திரங்களிற் சொல்லிய புராதனமான தர்மமாகும்" என மஹாபாரதத்தி லுபதேசிக்கலாயினர். இதை யனுஸரித்துப் பார்க்குங்கால் சத்திய தபஸ் சொல்லிய உண்மையானது வேதசாஸ்திர சம்மதமாவதில்லை எனப் பெரியோர் முடிவு செய்தனர். ஆகவே யோகாங்கமான ஸத்யத்தை யனுஷ்டிப்பவன் மேற்கூறிய முறைப்படி ஸத்யத்தை யனுஷ்டிக்க வேண்டும் என்றேற்பட்டது.

சாஸ்திர ஸம்மதியின்றி பிறர் சொத்தைக் கைப்பற்றுதல் ஸ்தேயம் என்ற திருட்டாகும். ஆகவே அத்தகைய திருட்டை விலக்கல் அஸ்தேயமாகும். இதினின்றும், ஒருவனுக்குக்கொடுக்க மனமில்லா விடினும் பலகாரணங்களால் அவனை கட்டாயப் படுத்தி அவனாகவே கொடுக்கும்படி செய்தலும் பகல் தீவட்டிக் கொள்ளைக் கொப்பான திருட்டாகவே யாகுமாதலால் அதையும் விலக்குவது மிக்க அவசியமானது என்றேற்பட்டது. இந்தத் திருட்டு விஷயமாக மஹாபாரதத்தில் ராஜதர்ம பர்வத்தில் 24 வது அத்தியாயத்தி லோர்கதை எழுதப்பட் டிருக்கிறது: அதை இங்கு எழுதுவாம். அதாவது :

மிக்க உக்ரமான தவமுள்ள சங்கரென்றும் லிகிதரென்றும் இரண்டு சஹோதரர்களி ருந்தனர். அவர்களுக்குப் பாஹுதை என்ற நதிக்கரையில் பூக்களும் கனிகளும் நிறைந்த இரண்டு ஆச்ரமங்கள் தனித்தனியே இருந்தன. ஒரு நாள் லிகிதர் தமயனை சங்கருடைய ஆச்ரமத்திற்கு வந்தார். சங்கரும் தற்செயலாய் அச்சமயம் வெளியிற் சென்றிருந்தார். அப்பொழுது லிகிதர் அங்கு உலாவிக் கொண்டு அங்கு நன்ருய்ப் பழுத்துத் தொங்கும் சில பழங்களைப் பரித்து சற்றும் சங்கை யில்லாமல் அவற்றைப் புஜிக்கத் தொடங்கினர். அச்சமயம் தமயனை சங்கர் வந்து சேர்ந்து தம்பியைப் பார்த்து "இப்பழங்கள் எங்கிருந்து கிடைத்தன" என்று கேட்டார். அதற்கு லிகிதர் "இங்கிருந்து தான் நான் பழங்களை எடுத்துக் கொண்டேன்" என்ருர். அது கேட்ட சங்கர் கடுங்கோபம் கொண்டு "தானகவே பழங்களை நீ எடுத்துக் கொண்டமையால் இது திருட்டாகும். ஆகவே நீ அரசனிடம் சென்று இதற்குத் தண்டனை விதிக்கும்படிக் கேட்டுக் கொள்" என்ருர். உடனே லிகிதரும் ஸுத்யும்னன் என்ற அரசனிடம் சென்று தனது குற்றத்திற்குத் தண்டிக்கும்படி வேண்டினர். என்ன சொல்லியும் இவர் கேளாததால் அரசன் இவரது கைகளை வெட்டும்படி உத்திரவிட்டான். ராஜஸேவகர்களும் அவரது கைகளை வெட்டி விட்டனர். லிகிதரும் சந்தோஷமடைந்து தமயனிடம் போய் தெரிவித்தார். அவரும் சந்தோஷமடைந்து லிகிதரை நதியில் ஸ்னனம் செய்து அர்க்யம்

தர்பணம் முதலியவற்றைச்செய்யும்படி உத்திரவிட்டார். தமயன் சொற்படி லிகிதர் நதியில் ஸ்னானம் செய்து அர்க்யங்கொடுக்க முயர்ச்சிக்குங்கால் அவருடைய இருகைகளும் முன்போலவே வளர்ந்து விட்டன. பிறகு அந்தச்சமாசாரத்தைத் தமயனிடம் அவர் தெரிவித்தபொழுது, அவர் சாஸ்திர ஸம்மதமின்றி பிறர் சொத்தை எடுப்பது திருட்டாகும் என்றும்,அதை நீ அறியாமற் செய்ததாற்றான் உனக்கு இந்தத் தண்டனை ஏற்பட்டதென்றும், ராஜதண்டனையை யடைந்து விட்டபடியால் உனது தவத்திற்கு யாதும் பங்கம் வராதென்றும் சொன்னார் என்பதாம். ஆகவே சாஸ்திர ஸம்மதமின்றி பிறர் சொத்தை எடுப்பது ஸ்தேயமாக வாவதால் யோகாங்கானுஷ்டானம் செய்பவனும் மற்றவரும், பிறர் சொத்திலுள்ள ஆசையை விலக்கவேண்டும் என்று இதனால் பெறப்பட்டது.

ரஹஸ்யமான இந்திரியத்தை யடக்குதல் பிரும்மசர்யம் எனப்படும். இதிலிருந்து யோகாங்கானுஷ்டானம் செய்பவன் அழகு பொருந்திய பரஸ்திரீகளை ஆவலுடன் பார்ப்பதும், அவர்களுடன் நெருங்கிப் பழகுவதும், அவர்களை ஆவலு டன் தொடுவதும் பிரும்ம சரியானுஷ்டானத் திற்குப் பங் கத்தை விளைவிக்குமாதலால் இவற்றையும் விலக்கவேண்டுவ தவசியமான தென்றேற்படுகிறது. விஷயங்களில் ஆசை கொள் ளாதிருத்தல் அபரிக்ரஹமாகும். அதாவது : சாஸ்திர ஸம் மதமான வழியிலும், திடீரென எதிர்பாராத வழியிலும் சில வஸ்துக்கள் கிடைக்கக் கூடும். அவ்விதம் கிடைப்பனவற் றுள் பிரதிக்கிரஹத்தால் கிடைப்பது சாஸ்திரீயமாகும். ஆயி லும் அந்தப் பிரதிக் கிரஹமானது கொடுப்பவனை யொட்டி தோஷமுள்ளதாகவு மாகின்றது. இதையே துஷ்பிரதிக்கிரஹம் என்று சாஸ்திரம் கூறுகின்றது. ஆகவே பிரதிக்கிரஹமானது சாஸ்திரீயம் தானாயினும் சாஸ்திர விருத்தமான ஆசாரமுள்ள வனிடமிருந்து ஒன்றைப் பிரதிக்கிரஹிப்பதானது பிரதிக்கிரஹம் வாங்குகின்றவனுக்கு தோஷத்தையே விளைவிக்கின்றது. அதா வது: பிரதிக் கிரஹிக்கப்படும் வஸ்து எவனுடையதோ அவனு டைய தோஷம் அவ்வஸ்துவுக்கும் வரும் என்பதாம். இவ்விஷ

யமாக புராணங்களிற் கூறப்பட்டிருக்கும் ஓர் கதையை இங்கு கூறுவாம்.

எவ்விதக் குற்றமுமற்ற மஹானை பெரியவரொருவர் பசியால் வாடி ஓர் ஊர் சென்றார். அவ்வூரிலுள்ள ஒருவன் அம் மஹானை வரவேற்று அவருக்குப் போஜனம் செய்துவைத்து தனது வீட்டுத் திண்ணையில் அவரை விடுத்து உடனே உட் சென்று தனது மனைவியுடன் ஒரு மஹான் தனது வீட்டிற்கு வந்து போஜனம் செய்யும்படி நேர்ந்த பாக்கியத்தை நினைத்து நினைத்து எதையுமே மறந்து ஆனந்தமடைந்து கொண்டிருக்கும் பொழுது, திண்ணையிலிருந்த பெரியவர் இவன் வீட்டிற் புஜித்த அன்னம் ஜீர்ணமாகத் தொடங்குங்கால் சித்தத்தில் ஓர்விதக் கல்க்க முண்டாகி தனக்கு ஜலம் குடிப்பதற்காக அவனால் தன தருகில் கொண்டுவந்து வைக்கப்பட்ட ஒரு வெள்ளிப் பாத்திரத்தை எடுத்து தனது காஷாயத் துணியில் மறைத்து வைத்துக் கொண்டு ஒருவருமறியாது குறுக்குவழியாய் வேறிடம் நோக்கி வெகுவேகமாய்ச் செல்லும்பொழுது வெகுதூரம் வழி நடந்த காரணத்தால் அவன் வீட்டில் புஜித்த வாஹாரம் ஜீர்ணமாகவே அவர் ஒரு மரத்தடியி லுட்கார்ந்து களைப்பாறி பின்வருமாறு யோஜிக்கலானார். "அந்தோ! இஃதென்ன அன்னியாயம். நமது தவமெங்கே? இந்தத்திருட்டெங்கே? இது ஒன்றுக்கொன்றுநேர் விரோதமுள்ள தாகுமன்றோ! ஆதலால் இப்பாத்திரத்தை அவனிடம் திருப்பிக் கொடுப்பதன் மூலம் இதன் காரணத்தையும் கண்டறியவேண்டும்" எனத் திருடசங்கற்பம் செய்து கொண்டு திரும்பவும் அவனது வீடுவந்தார். அப்பொழுதும் அந்தத் தம்பதிகள் ஒருமஹான் தனது வீடுவந்து உண்டு சென்றதை எண்ணி ஆனந்தித்துக் கொண்டிருந்தனரே யின்றி பாத்திரத்தைப் பற்றிய எண்ணமே அவர்களுக் குண்டாகவில்லை. இச்சமயம் அம்மஹான் அவ்வீட்டுக்காரனை அழைத்து "அடா! உனது ஜீவனம் எப்படி நடக்கின்றது. அதனுண்மையை மறைக்காமல் சொல்லவேண்டும்" என்றார். அதுகேட்ட அவன் அவரது தவத்திற்குப் பயந்து "இரவில் திருடி ஜீவனம் செய்கிறேன்" என்று உண்மையைச் சொல்லிவிட்டான். அது கேட்டதும்

அம்மஹான் திடுக்கிட்டு அவனிடம் நடந்த வரலாற்றைச் சொல்லி **प्राणायामैर्दहेद्दोषान्** என்ற சாஸ்திர விதிப்படி திருடன் வீட்டிலன்னமுண்ட தோஷத்தைப்பிராணாயாமம் முதலியவற்றால் போக்கிக் கொண்டு மீண்டும் தமது நல்மார்க்கத்திலேயே சென்றார் என்பதாம். இதிலிருந்து எவ்வளவு யோகியாயினும் உண்மையில் தோஷமுள்ளவனுடைய வஸ்துவைச் சாஸ்திர முறைப்படி பெறினும் அவ்வஸ்து இவனைக் கெடுத்துவிடுமாதலால் சாஸ்திரப்படி பிரதிக்கிரஹம் செய்வது நியாயமாயினும், கொடுப்பவன் தோஷமற்றவன்தானா என்பதைக் கவனித்தே பிரதிக்கிரஹம் செய்யவேண்டும் என்று பெறப்பட்டது. (எ—று)

(அ—கை) முற்கூறிய அஹிம்ஸாதிகளில் யோகிகள் நடக்கவேண்டிய முறை யுபதேசிக்கப் படுகின்றது.

सू० ॥ जाति देश काल समयाऽनवच्छिन्नास्सार्वभौमा महाव्रतम् ॥ ३१॥

(ஸூ) ஜாதிதேச கால ஸமயா நவச்சின்னா: ஸார்வபௌமா: மஹாவ்ரதம் (31)

(ப—ரை) **जाति...न्ना:** (ஜாதி...ன்னா:) **जाति** (ஜாதி) பிராம்மணாதி ஜாதியினாலும் **देश** (தேச) தீர்த்தம் முதலிய விடத்தினாலும் **काल** (கால)—சதுர்த்தசீ முதலிய காலங்களாலும் **समय** (ஸமய)—பிராம்மண போஜனம் செய்வித்தல் முதலிய அனியதமான காலங்களாலும் **अनवच्छिन्ना:** (அனவச்சின்னா:)—எவ்விதமும்தடை செய்யப்படாத வைகளாகவும் **सार्वभौमा:** (ஸார்வபௌமா:) எல்லாவித பூமிகளிலும் (அவஸ்தைகளிலும்) தொடர்ந்து வருகின்றவைகளாகவுமாகுமானால் **महाव्रतम्** (மஹாவ்ரதம்) மஹாவிரதமெனப்படும்.

(தா-ம்) 30வது ஸூத்திரத்தாலுபதேசிக்கப்பட்ட அஹிம்ஸை, ஸத்யம், அஸ்தேயம், பிரும்மசர்யம், அபரிக்ரஹம் முதலியவற்றை யனுஷ்டிக்கும் பொழுது பசுவையோ பிராம்மணனையோ ஒருபொழுதும் ஹிம்சிப்பதில்லை என்று சங்கற்பித்துக்கொண்டு, இவர்களுடைய ஹிம்ஸையை விலக்குவதாலேயே அஹிம்

ஸை என்ற யோகாங்கத்தை யனுஷ்டித்ததாகவாகலாமாயினும், இவ்வித ஹிம்ஸாநிவிருத்தியானது பசு,பிராம்மணன் என்ற ஒரு ஜாதியை மட்டும் முன்னிட்டு அனுஷ்டிக்கப் பட்டதாயாவதால் இது ஜாத்யவச்சின்ன மாயாகிறது. அதாவது. பசு, பிராம்மணன் என்ற இந்த ஜாதி விஷயத்தில்மட்டும் ஹிம்ஸையை விலக்குவ தாக ஆகின்றதே யொழிய ஹிம்ஸையையே அடியோடு விலக்கின தாக வாவதில்லை. ஆகவே தன்னைவிட வேறான எந்தப் பிராணி யையும் எச்சமயத்திலும் எக்காரணம் பற்றியும் ஹிம்ஸிக்கா திருத் தலே அஹிம்ஸா னுஷ்டானமாகும். இத்தகைய அஹிம்ஸா னுஷ்டானம் யோகாங்கமாகுமே யொழிய முற்கூறியபடி பசு பிராம்மணன் இவர்களின் ஹிம்ஸையைமட்டும் விலக்குதல் யோகாங்கமாகிய அஹிம்ஸா னுஷ்டான மாகாதென்பதாம்.இவ்வி தமே எந்தப்பிராணியையும் புண்யதீர்த்தம் முதலிய தேசத்தி லோ, சதுர்தசீ முதலிய புண்யகாலத்திலோ ஹிம்ஸிப்பதில்லை என்ற ஹிம்ஸாநிவிருத்தியும், தேசம், காலம் என்ற இவற்றில் மட்டும் ஹிம்ஸையை விலக்கினதாக வாகுமேயொழிய அடியோடு ஹிம்ஸையை விலக்கினதாக வாவதில்லை. இவ்விதமே க்ஷத்திரி யனுக்கு யுத்தஸமயந்தவிர மற்ற சமயத்தில் ஹிம்ஸையை விலக் குதலும் சமயத்தை முன்னிட்டுண்டான அஹிம்ஸா னுஷ்டான மாகுமே யொழிய பூர்ண அஹிம்ஸா னுஷ்டான மாவதில்லை.

ஆகவே எந்தப்பிராணியையும்,எந்தத்தேசத்திலும்,எந்தக்கா லத்திலும், எந்தஸமயத்திலும் எக்காரணம் பற்றியும் ஹிம்ஸிக் காதிருத்தலே யோகாங்கமான அஹிம்ஸையாகும் என்றேற்பட் டது. இதுவே ஜாதி, தேசம், காலம், சமயம் என்ற எந்தப்பூமி களிலும் தொடர்ந்து அனுஷ்டிக்கப்படும் அஹிம்ஸா னுஷ்டான மாவதால் இது மஹாவிரதம் என்றும் சொல்லப்படும். இவ்வித மே ஸத்யம், அஸ்தேயம், பிரும்மசரியம், அபரிக்ரஹம் என்ற விஷயத்திலும் ஜாதி, தேசம், காலம், ஸமயம் இவைகளை முன்னி ட்டு மட்டும் அவைகளை யனுஷ்டிக்காமல் எல்லாஜாதியிலும், எல் லாதேசத்திலும், எல்லாகாலத்திலும், எல்லாஸமயத்திலும் அவற்றை யனுஷ்டித்தல் வேண்டுமென்றும், இதுவே யோகாங்க மான ஸத்யாதிகளின் அனுஷ்டானமாகவும், மஹாவிரத மாகவு

மாகுமென்று முபதேசித்திருப்பதாய்க் கண்டுகொள்ளவேண்டும். இதிலிருந்து ஹிம்ஸை, அஸத்தியம், ஸ்தேயம், அப்பிருமசரியம், பரிக்கிரஹம் இவைகளை எந்தஜாதியிலும், எந்தத் தேசத்திலும், எந்தக்காலத்திலும், எந்தச்சமயத்திலும் அடியோடு விலக்குதலே யோகாங்கமான யமானுஷ்டானம் செய்பவனுக்கு முக்கியமானதொரு கடமையாகும் என்றேற்பட்டது. (எ-று)

(அ-கை)நியமம் என்ற யோகாங்கத்தை யுபதேசிக்கிறார்.—

सू० ॥ शौच- सन्तोष- तपः- स्वाध्यायेश्वरप्रणिधानानि नियमाः ॥ ३२ ॥

(ஸூ) சௌச ஸந்தோஷ தப: ஸ்வாத்யாய ஈச்வரப்ரணிதானானி நியமா: (32)

(ப-ரை) **शौच...नानि** (சௌச...னானி) **शौच** (சௌச)= மண், ஜலம், கோமயம் முதலியவற்றால் வெளியிலுள்ளதைச் சுத்தி செய்தலும், மதம், மானம், அஸூயை முதலிய சித்ததோஷத்தை விலக்குதலும் **सन्तोष** (ஸந்தோஷ)=தைவிகமாய்க் கிடைத்ததைவிட அதிகமான வற்றில் ஆசையின்மையும், **तपः**(தப:) சீதோஷ்ணம், பசிதாகம், கமனுகமனம் ஆகியஇந்த இரட்டையான வற்றைப் பொருத்தலும் **स्वाध्याय** (ஸ்வாத்யாய)= பிரணவ ஜபத்தையோ, மோக்ஷ சாஸ்திராத்யயனத்தையோ செய்தலும் **ईश्वर प्रणिधानानि**(ஈச்வர ப்ரணிதானானி)=தான் செய்யும் எந்தக்கர்மத்தையும் ஈசுவரனிடத்திலர்ப்பணம் செய்தலும் **नियमाः** (நியமா:) நியமங்களெனப்படும்.

(தா-ம்) மேற்கூறிய நியமங்களுள் கடைசியாகச் சொல்லப்பட்ட ஈசுவரப் பிரணிதானத்தைப்பற்றி

शय्यासनस्थोऽथपरिव्रजन्वा स्वस्थः परिक्षीण वितर्कजालः ।
संसार बीजक्षयमीक्षमाणः स्यान्नियुक्तो ऽमृतभोगभागी ॥

என்றதால் மஹான்களும் வேறிடத்திலுபதேசித்திருக்கின்றனர்.

(அ-கை) இதுவரை கூறிய யம நியமங்களை யனுஷ்டிக்கும் பொழுது நேருமிடையூறுகளை விலக்குவதற்குரிய உபாயங்களை இதனுலுபதேசிக்கிறார்.

सू० ॥ वितर्क बाधने प्रतिपक्ष भावनम् ॥ ३३ ॥

॥ஸூ-ர॥ விதர்க்கபாதனே ப்ரதிக்ஷ பாவனம் ॥33॥

(ப-ரை) **वितर्क बाधने** (விதர்க்க பாதனே) ஹிம்ஸை முதலிய யோகாங்கானுஷ்டான விரோதிகளால் இடையூறு நேருங்கால் **प्रतिपक्ष भावनम्** (பிரதிபக்ஷ பாவனம்)= அதற்கு நேர்விரோதியான கார்யத்தையே மனத்தாலெண்ணவேண்டும்.

(தா-ம்) முற்கூறியபடி யமம், நியமம் இவைகளை வெகு ஜாக்கிரதையுடன் அனுஷ்டித்துவரும் ஸமயத்தில் பின்வருமாறு ஹிம்ஸாதிகளான விரோதிகளின் இடையூறுகள் உண்டாகுமாயின், அதாவது: இச்சமயத்தில் இவனை ஹிம்ஸித்தே தீரவேண்டும் என்றும், பொய் சொல்லித்தான் தீரவேண்டும் என்றும், இவனது பொருளை எப்படியாவது அபஹரித்துத்தான் தீருவதென்றும், இவனது பத்தினியுடன் போகம் செய்துதான் தீருவதென்றும், கெட்டவழியிற் செல்லுவதற்கு ஹேதுவான ஓர்விதத் துடிப்பு மனத்திலுண்டானல் அச்சமயத்தில் பின்வருமாறு மனத்தால் பாவிக்கவேண்டும். அதாவது: வெகு ஜன்மங்களால் கொடூரமான ஸம்ஸாரமாகிற நெருப்பால் பொசுக்கப்படும் நாம் எவ்வுயிர்க்கும் அபயமளிக்கும் யோகதர்மத்தைச்சரணமாக அடைந்தோம். அத்தகைய நாம் தீயச்செயல்களை அடியோடு விட்டுவிட்டு திரும்பவும் அத்தீயச்செயல்களையே பின்பற்றுவோமானல் உண்ட உணவை வெளியிற்கக்கிவிட்டு திரும்பவும் கக்கியதையே உட்கொள்ளும் நாய்க்கும் நமக்கும் யாதேனும் வேற்றுமையுண்டோ! ஆகவே இத்தகைய தீயச்செயல்களைக் கனவிலும் செய்தல் தகாதென்று மனத்தால் நினைக்கவேண்டும். இவ்விதம் நினைப்பவனுக்கு அத்தீயச் செய்கைகளில் பிரவிருத்தி யேற்படாது விலகிவிடும். (எ-று)

(அ-கை)முற்கூறியவிதர்க்கங்களின்ஸ்வரூபம்,அவைநேரும்பிரகாரம் (முறை) அதன் காரணம், அவற்றின் உட்பிரிவு, அவற்ருல் நேரும் பலன் ஆகியவைகளை யுபதேசிப்பாந்தொடங்கி பிரதிபக்ஷ பாவனம் செய்யும் முறையை விளக்குகிருர்.

सू० ॥ वितर्काऽहिंसादयः कृत कारिताऽनुमोदिता लोभ क्रोध मोह पूर्वकाः मृदु मध्याऽधिमात्रा दुःखाज्ञानानन्त फला इति प्रतिपक्ष भावनम् ॥ ३४ ॥

(ஸூ) விதர்க்கா ஹிம்ஸாதய: க்ருத காரிதானு மோதிதா: லோப க்ரோத மோஹ பூர்வகா: ம்ருது மத்யா திமாத்ரா: துக்காக்ஞானந்தபலா: இதி ப்ரதி பக்ஷபாவனம்(34)

(ப-ரை) हिंसादय: (ஹிம்ஸாதய:)= ஹிம்ஸைமுதலிய वितर्का: (விதர்க்கா:)= விதர்க்கங்கள் कृत कारिताऽनुमोदिता: (க்ருத காரிதா னுமோதிதா:) कृत (க்ருத) தன்னால் செய்யப்பட்டதாகவும் कारित (காரித)= பிறரைக்கொண்டுசெய்விக்கப்பட்டதாகவும் अनुमोदिता: (அனுமோதிதா:) ஒருவனுக்கு நேர்ந்தஹிம்ஸாதிகளைக் குறித்து 'நல்லவேளையாக நேர்ந்தது' என்று சந்தோஷப் படுவதாகவுமா கும். மேலும், முற்கூறியபடி கிருத காரித அனுமோதித ரூப மான ஹிம்ஸாதிகள் ஒவ்வொன்றும் लोभ क्रोध मोह पूर्वका: (லோ ப க்ரோத மோஹ பூர்வகா:)= லோபம், குரோதம், மோஹம் இவைகளைக் காரணமாகக் கொண்டதாகவும் मृदु मध्याऽधिमात्रा: (ம்ருது மத்யா திமாத்ரா:)= மெதுவாகவும், நடுநிலையிலுள்ளதாக வும், அதிகமானதாகவும், दु:खाऽज्ञानाऽनन्त फला:= நரகாதி துக் கத்தையும், அக்ஞானத் தையும், முடிவில்லாத பிராந்தி சம்சயம் முதலியவற்றையும் பயனாக வுடைய வைகளாகவும் ஆகின்றன इति (இதி)= என்பதாக प्रतिपक्ष भावनम् = (ப்ரதிபக்ஷ பாவனம்) விதர்க்க விரோதிபாவனம்செய்யவேண்டும்.

(தா-ம்) ஹிம்ஸை, அஸத்யம், ஸ்தேயம் முதலிய விதர்க்கங்க ளுள் ஒவ்வொன்றும் பின்வருமாறு மும்மூன்று விதங்களாகும். முதலில் ஹிம்ஸையை எடுத்துக்கொள்ளவோம். அதாவது: ஹிம்ஸையானது தன்னாற்செய்யப்பட்டதாயும், பிறரைக்கொண்டு செய்யும்படி தூண்டியதாலுண்டானதாயும், தைவிகமாக ஒருவ னுக்கு நேர்ந்த ஹிம்ஸையை நினைத்து "இவனுக்குண்டானது நியாயம்தான்" என சந்தோஷப் படுவதாலுண்டான தாயுமாகின்

றது. அதாவது: சரீரம், வாக்கு, மனது என்ற மூன்றினலும் செய்யப்பட்டதாக வாகின்றது என்பதாம். இவற்றுள், தன்னால் செய்யப்படுவதற்கு லோபம் (ஏதோவொன்றிலாசை) குரோதம் (இவன் நமக்கு அபகாரம் செய்தான் என வெண்ணி அதன் மூலமுண்டாகும் கோபம்) மோஹம் (இவனை ஹிம்ஸிப்பதால் நமக்கோ, மற்றவற்கோ நன்மை யுண்டாகும் எனத் தப்பான வெண்ணம் காரணமான அறியாமை) ஆகிய இம்மூன்றும் காரணங்களாகும். ஆகவே தன்னால் செய்யப்படுவதான க்ருத ரூபமான ஹிம்ஸையானது லோபத்தால் செய்யப்பட்டதென்றும், குரோதத்தால் செய்யப்பட்டதென்றும், மோஹத்தால் செய்யப்பட்டதென்றும் மூன்றுவிதமான பிரிவையடைகின்றது. இதுபோல வேகாரிதம்எனப்படும் ஹிம்ஸையும்(பிறரைக் கொண்டு செய்விக்கப்படும் ஹிம்ஸையும்)லோபம், குரோதம், மோஹம் இவற்றாலுண்டாகக் கூடுமாதலால் அதுவும் மூன்று விதமாகவே ஆகின்றது. இதுபோலவே அனுமோதிதமான ஹிம்ஸையும் லோபம், குரோதம், மோஹம் என்ற மூன்றினலும் செய்யப்படலா மாதலால் இதுவும் மூன்றுவிதமாகவே யாகின்றது. ஆகவே க்ருதம் என்ற ஹிம்ஸையானது லோப குரோத மோஹங்களென்ற மூன்று விதகாரணங்களை முன்னிட்ட தாகவும், காரிதம் என்ற ஹிம்ஸையும் லோப, குரோத, மோஹங்களென்ற மூன்றுகாரணங்களை முன்னிட்டதாகவும், அனுமோதிதம் என்ற ஹிம்ஸையும் லோப, குரோத, மோஹங்களென்ற மூன்றுவித காரணங்களை முன்னிட்டதாகவு மாகிவிட்டது. இதிலிருந்து ஹிம்ஸையானது ஒன்பது விதமாகவாவதாகக் கூறப்பட்டதென்றேற்பட்டது.

மேலும் இதுவரை கூறியபடி ஒன்பது விதமாகவான ஹிம்ஸையானது மிருதுவாயும், மத்யமாயும், (நடுநிலையிலும்) அதிமாத்திரமாயும் (அதிகமாகவும்) செய்யப்படலா மானதுபற்றி மெதுவில் மெதுவென்றும், மத்தியமெது வென்றும், தீவ்ரமெது வென்றும் மூன்றுவிதமாகின்றது. இவ்விதமே மிருதுமத்யம் என்றும், மத்யமத்யம் என்றும், தீவ்ரமத்யமென்றும் மூன்று விதமாகவு மாகின்றது. இவ்விதமே மிருது தீவ்ரமென்றும், மத்திய தீவ்ரம் என்றும் தீவ்ரதீவ்ர மென்றும் மூன்றுவிதமாகவாகும். ஆகவே

விதர்க்க மாகக் கூறப்பட்ட ஹிம்ஸையானது 81 விதமாக வாகி ன்றதென்றும், அத்தகைய ஹிம்ஸையைச் செய்வதால் நரகாதி துக்கமும், அல்லது பசுமுதலிய பிறப்பை யடைந்து அக்ஞான மும், அல்லது இதே பிறவியில் பிரமம், சம்சயம் முதலியனவும் உண்டாகிவிடும் என மனதா லெண்ணுபவனுக்கு முற்கூறிய ஹிம்ஸை முதலிய விதர்க்கங்கள் விலகிவிடுகின்றன வென்றேற் பட்டது. இவ்விதமே அஸத்யம், ஸ்தேயம், அப்பிரும்மசர்யம், பரிக்ரஹம், அசௌசம், அஸந்தோஷம், அதபஸ், அஸ்வாத்யா யம், ஈசுவரப்ரணிதானம் செய்யாமை ஆகிய மற்றுமுள்ள விதர் க்கங்களும் தனித்தனி 81 விதங்களாகவு மாவதால், அவ்வித விதர்க்கங்களும் பலவழியிலும் ஆபத்தை விளைவிக்கக் கூடியவை களே என்ற எண்ணமானது, அவைகள் மூலம் நேரும் துக்கம், அக்ஞானம், அனந்தம் என்ற முடிவற்றக்கெடுதல் ஆகிய விபரீ தபலனை மனத்தாலெண்ணு பவனுக்கு உண்டாகலாமாதலால் விதர்க்கபாதம் வரும்பொழுது பிரதிபக்ஷ ப்ாவனம் செய்யவே ண்டுவது அவசியமான தென்றேற்பட்டு விட்டது. (எ—று)

(அ—கை) இதுவரை யமம் நியமம் இவைகளை யுபதேசித்து, அவற்றிற்குப் பாதகங்களாக வரும் விதர்க்கங்களை பிரதிபக்ஷபாவ னையால் விலக்கவேண்டும் என்று முபதேசித்து இனி எவ்வித இடையூறு மின்றி யோகாங்கானுஷ்டானம் செய்பவனுக்கு அவற்றின் சித்தி ஏற்பட்டதற்கு அறிகுறிகள் உண்டாகின்றன வென்பதை உபதேசிப்பான் தொடங்கி அஹிம்ஸையின் சித்தி ஏற்பட்டதற்கு அறிகுறியை இந்தச் சூத்திரத்தா லுபதேசிக் கிறார்.

सू० ॥ अहिंसा प्रतिष्ठायां तत्सन्निधौ वैरत्यागः ॥ ३५ ॥

ஸூ॥ அஹிம்ஸா ப்ரதிஷ்டாயாம் தத்ஸன்னி தௌ வைரத்யாக: ॥35.॥

(ப—ரை) **अहिंसा प्रतिष्ठायां**=(அஹிம்ஸா ப்ரதிஷ்டாயாம்) அஹிம்ஸையானது நிலைத்து நின்றவுடன் **तत्सन्निधौ**=(தத்ஸன்னி தௌ) நிலைத்த அஹிம்ஸை யுள்ளவனுடைய முன்னிலையில் [**नि- सर्ग वैराणाम्**=(நிஸர்க்க வைராணும்) இயற்கையில் வைரமுள்ள

வைகளான **सर्व प्राणिनाम्**=(ஸர்வப்பிராணினும்) எல்லாப் பிராணி களுக்கும்] **वैर त्याग**:=(வைர த்யாக:) விரோதத்தை விடுதலானது [**भवति**=(பவதி) உண்டாகிறது.]

(தா—ம்) எவனொருவன் முற்கூறியபடி 81 விதங்களான ஹிம்ஸைகளையும் விலக்கி சுத்தமான அஹிம்ஸையைக் கடைப் பிடித்து நடத்துவானோ அவனது முன்னிலையில் இயற்கையில் ஒன்றுக்கொன்று நேர்விரோதமுள்ள பசுவும் புலியும், பூனையும் எலியும், பாம்பும் கீரியும் கூட இயற்கை விரோதத்தை விட்டு மிக்கச் சினேஹத்துடனே தான் பழகிவரும் என்றேற்பட்டது. (எ—று)

(அ—கை) முற்கூறியபடி 81 விதமாகவுள்ள அஸத்யத்தை விலக்கி ஸத்யத்தை நிலைநாட்டிய யோகிக்குண்டாகும் சித்தியின் அறிகுறியை யுபதேசிக்கிறார்.

सू०॥ सत्य प्रतिष्ठायां क्रिया फलाऽऽश्रयत्वम् ॥ ३६ ॥

॥ஸூ॥ ஸத்ய ப்ரதிஷ்டாயாம் க்ரியா பலாச்ர யத்வம் ॥36.॥

(ப—ரை) முற்கூறியபடி 81 விதமான அஸத்யத்தையும் விலக்கி **सत्य प्रतिष्ठायाम्** (ஸத்ய ப்ரதிஷ்டாயாம்)=ஸத்தியமானது நிலை நாட்டப் பட்டபொழுது **क्रिया फलाऽऽश्रयत्वम्** (க்ரியா பலாச்ர யத்வம்)=க்ரியை, அதன்பலன் இவற்றை யடைந்திருக்கும் தன் மையானது [**तस्य**=(தஸ்ய) அவனுடைய **वाच**:=(வாச:) வாக்குக்கு [**भवति** (பவதி) உண்டாகின்றது.]

(தா—ம்) ஸத்தியத்தை உள்ளபடி நிலைநாட்டியவன் எவனோ அவன் ஒரு அதார்மிகனைப் பார்த்து 'நீ தார்மிகனாக ஆவாயாக' என்று வாக்கினால் சொல்லுவானானால் அவன் வாக்கினின்றும் வெளிவந்த சொல்லின் மஹிமையால் எவ்வளவு அதார்மிகனும் உடனே தார்மிகனாக வாகிவிடுகிறான். மேலும் 'சுவர்க்கத்தை யடைவாயாக' என்று சொல்லுவானேல் உடனே சுவர்க்கத் தையு மடைந்து விடுகிறான். ஆகவே ஸத்ய பிரதிஷ்டை யுள்ளவ னுடைய வாக்கானது புதிதாய் கிரியையையோ அதன்பலனையோ யுண்டுபண்ணும் திறமையை யடைந்து விடுகின்றது. (எ—று)

(அ—க்க) அஸ்தேய ப்ரதிஷ்டையின் பலன் சொல்லப்படுகின்றது.

सू० ॥ अस्तेयप्रतिष्ठायां सर्वरत्नोपस्थानम् ॥ ३७ ॥

॥ஸூ.॥ அஸ்தேய ப்ரதிஷ்டாயாம் ஸர்வரத்ஞோபஸ்தானம் ॥37.॥

(ப—ரை) अस्तेय प्रतिष्ठायाम् (அஸ்தேய ப்ரதிஷ்டாயாம்)=முற்கூறியபடி அஸ்தேயத்தை உறுதியாய்க் கைக்கொண்டவுடன் सर्वरत्नोपस्थानम् (ஸர்வரத்ஞோபஸ்தானம்)=பூமியிலுள்ள எல்லாரத்தினங்களும் அவனெதிரில் வந்து தோன்றுகின்றன.

(தா—ம்) 81 விதமான விதர்க்கங்களையும் போக்கி அஸ்தேயத்தை நிலைநாட்டியவன் எவனோ அவனது முன்னிலையில் ரத்ஞாகரமான பூமியிலுள்ள ரத்தினங்கள் யாவும் தோற்றத்தை யடைகின்றன. (எ—று)

குறிப்பு—இவ்விஷயத்தில் ஒரு கதையுண்டு. அதையிங்கு எழுதுகிறோம். அதாவது: முற்கூறியபடி அஸ்தேயப்பிரதிஷ்டை முதலியவற்றை யடைந்த மஹான் ஒருவர் காட்டின் வழியாக வரும்பொழுது ஒரு மூங்கில் புதறின் அருகில் ஏராளமான ஸுவர்ணக்குவியலைக் கண்ணுற்றார். அதைக்கண்டதும் இம்மஹான் 'இது ஆட்கொல்லியன்றோ!' என மனத்தாலெண்ணினவராய் அவ்விடம் விட்டு வேறுவழிநடந்து வருங்காலையில் எதிரில் மைமலை போல் கருத்த மேனியும், நறுக்கின மீசையும், குறுக்கின தலைமயிரும், வஜ்ரம் போல இறுகின உடம்பும் உள்ள வர்களாய் மூன்று திருடர்கள் தென்பட்டனர். அவர்களைக் கண்டதும் இம்மஹான் அவர்களை நோக்கி ஓ புருஷர்காள்! நீங்கள் அதோ எதிரில் தென்படும் மூங்கிற் புதற்றினருகிற் செல்லாதீர்கள். அங்கு ஆட்கொல்லி இருக்கின்றது என்றார். அது கேட்ட அத்திருடர்கள் 'இவன் யாரோ ஒருபைத்தியக்காரன், ஏதோ உளறுகிறான், அங்கு போய் மூவரும் பார்ப்போம்' என வெண்ணிக்கொண்டு அவ்விடம் சென்றனர். அங்கு சென்றதும் ஏராளமான சுவர்ணக்குவியலையும் கண்ணுற்றனர். அச்சுவர்ணக்குவியலைக்கண்ணுற்றதும் தங்களது பாக்கியமே இவ்வுருவம் கொண்டு

எதிர்ப்பட்டிருக்கின்றது என்று ஒவ்வொருவரும் தங்கள் தங்கள் மனத்திலெண்ணிக் கொண்டவர்களாய் அக்குவியலி னருகிற் சென்று தங்கள் தங்களிடையிற் கட்டியிருக்கும் கந்தைத் துணியை விரித்துப் போட்டு அத்துணி கொள்ளும் வரை ஒவ்வொருவரும் மூட்டை கட்டித்தலையில் மெதுவாய் எடுத்து வைத்துக் கொண்டு அருகிலுள்ள ஒருபாழும் கிணற்றின் மேல் அம்மூட்டையை ஒவ்வொருவரு மிரக்கிக் களைப்பாறிக் கொண்டு பின்வருமாறு தங்கள் மனத்தில் ஒவ்வொருவரும் எண்ணலாயினர்.

'நம்முடனிருக்கு மிவ்விருவரையும் கொன்று விட்டால் நாமே இச்சுவர்ணத்தை யடைந்து சுகிக்கலாமன்றோ? இதற்கு என்ன ஏற்பாடு செய்தல்தகும்' என வெண்ணி மனத்தில் ஒரு விதம் முடிவுசெய்து கொண்டு முடிவில் மூவரும் வேடிக்கையாக அவ்வனச் சிறப்பைக் கண்ணுற்று பிறகு மூவரும் சேர்ந்து கிணற்றிணருகில் வந்தனர். அவ்விதம் வந்ததும் மூவருள் ஒருவன் 'அண்ணே! இக்கிணறு பாழடைந்திருந்தபோதிலும் எவ்வளவு பெரிதாயும், அழகாயும் உறுதியாயுமிருக்கின்றது பார்த்தாயா' என்றான். மற்றவர்களும் இதுதான் சமயம் என்று நிச்சயம் செய்துகொண்டு 'ஆமாம் தம்பி! நீ நினைத்தபடியே தான் நானும் நினைத்தேன்' என்றான். அது கேட்டதும் மற்றவன் 'அப்படியானல் நாம் மூவரும் சேர்ந்தாப் போல் இக்கிணற்றின் அமைப்பைப் பார்ப்போம்' என்றான். அதற்கு மற்றவர்களும் ஒப்புக் கொண்டனர். உடனே மூவரும் சேர்ந்து தோளுடன் தோள் சேர்த்து அணைத்துக் கொண்டு உல்லாசமாய் கிணற்றினருகிற் சென்று கிணற்றினழகையும். அகழத்தையும் உற்று நோக்கத் தொடங்கினர். அவ்விதமகழத்தை யுற்று நோக்குங்கால் மூவருள் மிக்க பலசாலியான ஒருவன் மற்றவிருவரையும் இடுப்பில் கையைக் கொடுத்து சரேலென்று தூக்கிக் கிணற்றி லெரிந்து விட்டான். அவ்விருவரும் கிணற்றில் விழுந்து உடனே உயிர் துறந்தனர். கரையிலிருக்கும் திருடன் தனதெண்ணம் நிறைவேறி விட்டதென வெண்ணிக் கொண்டு முன்கிணற்றின் மேல் வைக்கப்பட்ட மூன்று மூட்டைகளையும் ஒரே மூட்டையாக வெகுபாடுபட்டுக் கட்டி முடித்து மெள்ளத் தூக்கித் தலையில்

வைத்துக் கொள்ளும் பொழுது மூட்டையிற் சுற்றின கந்தைத் துணியானது கிழிந்து அதனுள்ளிருக்கும் சுவர்ணங்கள் கீழே சிதறுண்டன.

இச்சமயத்தில் அதே காட்டில் வெகுநாளாய் ஆஹாரமின்றி ஆஹாரத்தைத் தேடியலையும் வேங்கைப் புலியானது சிதறுண்டு கீழேவிழுந்த சுவர்ணத்தின் ஒளியைக் கண்ணுற்றதும் 'தைவிக மாய் மாம்ஸ பிண்டங்க ளிங்கிருக்கின்றன. நாமிதைப் புஜித்துப் பசியாறலாம்' என்றெண்ணி ஒரே பாய்ச்சலாய் அக்குழியலினருகே வந்தது. வந்துபார்த்ததும் அதுமாம்ஸமாக இல்லாமலிருக்கக் கண்டு உடனே கடுங்கோபங்கொண்டு சமீபத்தி லிருக்கும் திருடனை ஒரே அறை யாக அறைந்து அவனது இரத்தத்தை யுருஞ்சி ஓடிப்போயிற்று. இது இவ்விதமிருக்க, தனது வார்த்தையை மதியாமற் போன திருடர்களுக்குப் பின்னேவரும் கதியை தமது யோகமஹிமையாலறிந்த அம்மஹான் அதே விடத்தில் நின்று அங்கு நடந்த தையெல்லாம் கண்ணுற் கண்டு மன மிரங்கினவராய் அக்கிணற்றி னருகிற்சென்று பின்வருமாறு யோஜிக்கலானார் 'இம்மூவரும் தீய செயல்புரியும் திருடர்களாயினும் நமது கண்ணிற் பட்ட மாத்திரத்தால் இவர்களுடைய பாபம் யாவும் விலகிவிட்டமை யால் இவர்களைத் திரும்பவும் பிழைப்பித்து நல்வழிப்படுத்து வது தான் நமது தர்மம்.' எனஇவ்விதம் யோஜித்து முடிவுசெய்த அம்மஹான் அம்மூவரையும் பிழைப்பித்து க்ஞானோபதேசம் செய்து காப்பாற்றினார் என்பதாம். ஆகவே அஸ்தேயப்பிரதிஷ்டை முதலிய யோகசித்தி பெற்றவர்க்கு இவ்வுலகில் நடை பெறாத தெதுவுமில்லை என்பது இதனின்றும் தெளிவாகின்றதூ. (எ—று

(அ—கை) பிரும்மசர்யப் பிரதிஷ்டையா லுண்டாகும் சித்தியை இதனுலுபதேசிக்கிறார் :—

सू० ॥ ब्रह्मचर्यप्रतिष्ठायां वीर्यलाभः ॥ ३८ ॥

॥ஸூ.॥ பிரும்மசர்ய பிரதிஷ்டாயாம் வீர்ய லாப: ॥38.॥

(ப—ரை) **ब्रह्मचर्य प्रतिष्ठायाम्** (ப்ரும்மசர்ய ப்ரதிஷ்டாயாம்)= ரஹஸ்யேந்திரியத்தை யடக்கி வீரியத்தை வீணிற் செலவு செய்

பாது நிலைநாட்டுவதால் **वीर्यलाभः** (வீர்யலாப:) ஒப்புயர்வற்ற ஸாமர்த்ய முண்டாகின்றது.

(தா—ம்) முற்கூறியபடி 81 விதமான விதர்க்கங்களையும் பிரதிபக்ஷபாவனத்தால் போக்கி சரீரத்திலுள்ள வீர்யத்தை யடக்கி அதை நிலைக்கும்படி செய்து விட்டால் ஒப்புயர்வற்ற சாமர்த்ய மானது (அணிமா. மஹிமா. முதலிய 8 வித ஐசுவர்யமானது) இவனுக்குண்டாகி விடுவதுடன் இவனுடைய உபதேசமானது உடனே சிஷ்யர்களுக்குப் பலிக்கத் தொடங்குகின்றது. (எ—று)

குறிப்பு—மேற்கூறிய பிரும்மசரிய பிரதிஷ்டை யில்லாதவரிடமுபதேசம் பெற்ற சிலர் ' இக்காலம் மந்திரம் பலிப்பதில்லை ' எனக் கூசாமல் சொல்லத் தலைப்படுகின்றனர். முற்கூறியபடி பிரும்மசரிய பிரதிஷ்டையுள்ள மஹான்களிடம் பெற்ற உபதேசமானது ஒருபொழுதும் பொய்த்துப் போகாதென்பது மட்டும் திண்ணம்.

(அ—கை) அபரிக்கிரஹத்தை நிலைநாட்டியவருக் குண்டாகும் சித்தியை யுபதேசிக்கிறார்:

सू० ॥ अपरिग्रहस्थैर्ये जन्मकथन्तासंबोधः ॥ ३९ ॥

॥ஸூ ௩௯ ॥ அபரிக்ரஹஸ்தைர்யே ஜன்ம கதந்தா ஸம்போத: ॥39॥

(ப—ரை) **अपरिग्रहस्थैर्ये** (அபரிக்ரஹஸ்தைர்யே) அபரிக்ரஹமானது நிலைபெற்ற பொழுது **जन्मकथन्ता संबोधः** (ஜன்மகதந்தா ஸம்போத:) பிறவி எவ்வித மென்பதும், அதைப்பற்றிய அறிவும் தெளிவா யுண்டாகின்றது.

(தா—ம்) முற்கூறியபடி 81 விதமான விதர்க்கங்களையும் பிரதிபக்ஷபாவனையால் விலக்கி அபரிக்கிரஹத்தை நிலைநாட்டியவன் எவனோ அவனுக்கு ' நான் முன்னர் எவ்விதமிருந்தேன், எவனாக விருந்தேன், இப்பொழுது கிடைத்த பிறவியாது ? எதனாலிது உண்டாயிற்று, இனி எப்பிறவி, எதனாலுண்டாகும், அவ்வித முண்டாகும் முறையாது ' என்று சென்ற ஜன்மம், நிகழ்

ஜன்மம், இனிவரும் ஜன்மம் இவற்றைப்பற்றிய அறிவானது தெளிவா யுண்டாகின்றது. (எ—று)

(அ—கை) இதுவரை யமம் என்ற யோகாங்கமானது நிலை பெற்றதாலுண்டாகும் சித்திகள் உபதேசிக்கப்பட்டன. இனி நியமவிஷயமாகக் கூறப்படுகின்றது.

सू० ॥ शौचात्स्वाङ्गजुगुप्सा परैरसंसर्गः ॥ ४० ॥

॥ஸூ॥ சௌசாத்ஸ்வாங்கஜுகுப்ஸா பரைரஸம்ஸர்க்க: ॥40॥

(ப—ரை) [प्रतिष्ठितात्=(ப்ரதிஷ்டிதாத்) நிலைபெற்றதான] **शौचात्** (சௌசாத்)=சௌசத்தினின்றும் **स्वाङ्गजुगुप्सा** (ஸ்வாங்கஜுகுப்ஸா)=தனது சரீரத்தில் வெறுப்பும் **परैः** (பரை:)=பிறர் சரீரத்துடன் **असंसर्गः** (அஸம்ஸர்க்க:)=சேராமையும் [भवति=(பவதி) உண்டாகின்றது.]

(தா—ம்) சௌசத்தில் நிலைபெற்ற யோகிக்கு தனது சரீரத்தில் வெறுப்புண்டாகி விடுகின்றது. அவ்விதம் வெறுப்புண்டானதும் சரீரத்திற்கும் ஆத்மாவுக்கும் இதுவரை அக்ஞானத்தாலிருந்துவந்த நான் என்றதோற்றத்தை வெறுத்து, உண்மையில் சரீரத்தில் எவ்விதப் பற்றுதலு மில்லாதவனாகிறான். இவ்விதம் தனது தேஹத்திலேயே வெறுப்புக் கொண்டவன் பிறர் சரீரத்துடன் எவ்விதம் சம்பந்தத்தை யடைவான்? ஒருபொழுது மடையான்.

குறிப்பு—நமது ஆர்ய சாஸ்திரமான சுருதிஸ்மிருதிகளில் ஒருவனையொருவன் தொடுவது கூடாதென்று விதித்திருப்பதின் கருத்து மிதுவேயாகும். மனிதராய்ப் பிறந்த எவனும் இப்பிறவியிலேயே இனி எப்பிறவியும் வராவண்ணம் தடுப்பதற்கு வேண்டிய சாதனங்களை அனுஷ்டிக்க ல்வசியமானதாதலால் அதற்கு வேண்டியே ஆர்ய சாஸ்திரங்கள் பற்பல கர்மங்களை விதித்தன. அவ்வித சாஸ்திரீய கர்மங்களை யனுஷ்டித்து எவனும் பிறவி நீக்கும் வழியில் பாடுபடுபவனா யிருக்கின்றமையின் மலமூத்திராதிகள் நிறைந்த இந்த சரீரத்திலேயே வெறுப்பையடையவேண்டிய

வனுவதற்கு முன்னர் தன்னைவிட வெருெரு சரீரத்தையும் தொடாமல் பழகிவந்து, பிறகுதனது சரீரத்திலும் வெறுப்பை யடைந்து இனி எவ்வித சரீரமும் வாராவண்ணம் சாஸ்திரீயசாத னங்களை யனுஷ்டித்து முக்தியை யடையவேண்டியவனு யிருக் கிறுன், என்பதுபற்றியே ஒருவனை யொருவன் தொடக்கூடா தெ ன்று விதிக்கப் பட்டிருக்கின்றது. இதனுண்மை யறியாது "எவ ரும் எவரையும் தொடுதல் கூடாதென்று சொல்லுவது சாஸ்திர ஸம்மதமாகாது" என்று சிலர் சொல்லும் வாதமானது அவர்க ளின் அறியாமையையே விளக்கும் என்பதிற் தடையில்லை.

(அ—கை) முந்தின ஸூத்திரத்தால் மிருத், ஜலம் முதலிய வற்றுல் செய்யப்படும் பாஹ்யமான சௌசத்தால் நேரும்பலனை யுபதேசித்து சௌசப்பிரதிஷ்டையால் நேரும் மற்றும் பலமுக்கிய பலன்களும் இதனு லுபதேசிக்கப் படுகின்றன.

सू० ॥ सत्वशुद्धि सौमनस्यैकाग्र्येन्द्रियजयात्मदर्शन योग्य त्वानि च ॥ ४१ ॥

॥ஸூ॥ ஸத்வசுத்தி ஸௌமனஸ்ய ஐகாக்ர்ய இந்திரியஜய ஆத்மதர்சன யோக்யத்வானி ச ॥41॥

(ப—ரை) ஆந்தர சௌசப்ரதிஷ்டையினுல் **सत्वशुद्धि...निच** (ஸத்வசுத்தி...னிச) **सत्वशुद्धि** (ஸத்வசுத்தி)=மனத்தினழுக்கு நீங்கு தலும் **सौमनस्य** (ஸௌமனஸ்ய)=அதன் மூலம் மனத்தெளிவும் **इन्द्रियजय** (இந்திரியஜய)=இந்திரியங்களைத் தன் வசப்படுத்தலும் **आत्मदर्शन योग्यत्वानि च** (ஆத்மதர்சன யோக்யத்வானி ச)=அதன் மூலம் ஆத்மக்ஞானத்திற்கு யோக்யனுயிருக்கும் தன்மையும் [**भवन्ति** (பவந்தி)=உண்டாகின்றன.]

(தா—ம்) மிருத் ஜலம் முதலியவற்றுல் சரீரத்திற்குச் செய் யப்படுவது பாஹ்யசௌசமென்றும், மனத்திலுள்ள காம குரோ தாதிகளைப் போக்குவது ஆந்தரசௌசமென்றும் சொல்லப்படும். அவற்றுள் பாஹ்ய சௌசப் பிரதிஷ்டையை யடைந்தவனுக் குண்டாகும் பலன் 40வது சூத்திரத்தா லுபதேசிக்கப்பட்டது. இந்தச் சூத்திரத்தால் அந்த சௌசப்பிரதிஷ்டையை யடைந்தவ னுக்கு சித்தத்திலுள்ள காமகுரோதாதிகளாகிற அழுக்குநீங்கு

கின்றது. அவ்விதமழுக்கு நீங்கவே சித்தமானது தெளிந்து விடுகின்றது. அதனின்றும் இந்திரியங்கள் தன்வசப்பட்டு விடுகின்றன. இந்திரியங்கள் தன்வசப்பட்டதும் ஆத்மக்ஞானத்தை யடைவதற்குரிய யோக்யதை மனத்திற் குண்டாகின்றது. என்று உபதேசிக்கப் பட்டது. (எ—று)

(அ—கை) ஸந்தோஷ ப்பிரதிஷ்டையை யடைந்தவனுக்குண் டாகும் பலனிதனு லுபதேசிக்கப்படுகின்றது.

सू० ॥ सन्तोषा दनुत्तम स्सुखलाभः ॥ ४२ ॥

||ஸூ|| ஸந்தோஷாதனுத்தம: ஸுகலாப:

(ப—ரை) **सन्तोषात्** (ஸந்தோஷாத்) கிடைத்தவரை போது மென்ற எண்ணத்தால் **अनुत्तमः**=(அனுத்தம:) நிகரற்ற **सुखलाभः** (ஸுகலாப:) ஸுக ப்பிராப்தியானது [**भवति**=(பவதி) உண்டாகின்றது.]

(தா—ம்) தைவிகமாய் எது கிடைத்ததோ அதுவே போதுமான தென்றெண்ணி அதற்கு மேலான வஸ்துவி லுண்டாகுமாசையை யொழித்தலே ஸந்தோஷம் என்று முன்னர் கூறப்பட்டது. அத்தகைய ஸந்தோஷத்தையே நிலைநாட்டினவனுக்கு ஒப்புயர்வற்ற சுகலாபமானது உண்டாகின்றது. இவ்விதமே.

यच्च कामसुखं लोके यच्च दिव्यं महत्सुखम् ।
तृष्णाक्षयसुखस्यैते नार्हतः षोडशीं कलाम् ॥

" உலகில் விஷயானுபவத்தா லுண்டாகும் சுகமும், தேவலோக வஸ்துக்களின் அனுபவமூல முண்டாகும் சுகமும் ஆகிய இவ்விரண்டும் ஆசையை யொழித்தலா லுண்டாகும் சுகத்தின் 16 லொருபங்குக்குக் கூட ஈடாகாது" என்றதால் மனுமுதலியோரு முபதேசித்திருக்கின்றனர். இவ்விதமே தனது யௌவனத்தைத் தானம்செய்த பூருவென்றவரைப் பார்த்து யயாதி என்ற அவரது பிதாவினுல் பின்வருமாறு கூறப்பட்டிருக்கிறது. அதாவது :

या दुस्त्यजा दुर्मतिभि र्या नजीर्यति जीर्यतः ।
तां तृष्णां संत्यजन्प्राज्ञ स्सुखेनैवाऽभिपूर्यते ॥

"எந்த ஆசையானது கெட்டபுத்தி யுள்ளவர்களால் விட முடியாததோ, சரீரேந்திரியங்கள் தளர்ந்து கிழவனுகவான போதிலும் எந்த ஆசையானது கிழத்தனத்தை யடைவதில்லையோ, அத்தகைய ஆசையை எந்தப்புத்திமானுன புருஷன் விலக்குகின்றுனே அவன் சுகத்தாலேயே நிரைந்தவனுக வாகிறுன், அதாவது: ஒப்புயர்வற்ற சுகத்தை யடைந்து விடுகிறுன்." என்பதாம். ஆகவே சந்தோஷத்தை நிலை நாட்டு கின்றவனுக்கு மேலான சுகலாப முண்டாவது திண்ணம் என்றேற்பட்டது.

(அ—கை) தபஸ்ஸின் பிரதிஷ்டை யாலுண்டாகும் பலனுபதேசிக்கப் படுகின்றது.

ஸூ० ॥ कायेन्द्रियसिद्धिरशुद्धिक्षयात्तपसः ॥ ४३ ॥

(ஸூ—ம்) காயேந்திரிய சித்திரசுத்தி க்ஷயாத்தபஸ: (43)

(ப—ரை) **तपसः** (தபஸ:) தபஸ்ஸினின்றும் **अशुद्धिक्षयात्** (அசுத்திக்ஷயாத்) தமோகுணங்களின் காரியமான ஆவரணம் முதலியன தேய்ந்ததும் **कायेन्द्रियसिद्धिः** = (காயேந்திரியஸித்தி:) சரீரசித்தியான அணிமாதிகளும், இந்திரியசித்தியான தூரசிரவணம் தூரதர்சனம் முதலியனவும் [**भवति** (பவதி) உண்டாகின்றது.]

(அ—கை) ஸ்வாத்யாயத்தைக் கடைப்பிடித் தொழுகுவதாலுண்டாகும் பலனுபதேசிக்கப் படுகின்றது.

ஸூ० ॥ स्वाध्यायादिष्टदेवतासंप्रयोगः ॥ ४४ ॥

(ஸூ—ம்) ஸ்வாத்தியாயாத் இஷ்டதேவதாஸம்ப்ரயோக: (44)

(ப—ரை) **स्वाध्यायात्**=(ஸ்வாத்யாயாத்) பிரணவாதி மந்திர ஜபம், அல்லது மோக்ஷசாஸ்திராத்தியயனம் இவற்றைத் திருடமாகச் செய்து வருவதினின்றும் **इष्टदेवता संप्रयोगः** (இஷ்டதேவதா ஸம்ப்ரயோக:) இஷ்டர்களான மகருஷிகளுடையவும், தேவதைகளுடையவும் தரிசனமானது [**भवति**=(பவதி) உண்டாகின்றது.]

(தா—ம்) தேவதைகளும், மஹருஷிகளும் பிரணவாதி மந்திர ஜபத்தையோ, மோக்ஷ சாஸ்திராத்யயனத்தையோ செய்கின்ற வுத்தமாதிகாரிகளுக்குத் தரிசனங் கொடுப்பதுடன், இவனது காரியங்களையும் செய்கின்றனர் என்று பாஷ்யத்திலுபதேசிக்கப்பட்டிருக்கிறது. (எ—று)

(அ—கை) ஈசுவரப் பிரணிதானம் என்ற பக்தியோகத்தாலுண்டாகும் பலனுபதேசிக்கப் படுகின்றது:—

सू० ॥ समाधिसिद्धिरीश्वरप्रणिधानात् ॥ ४५ ॥

(ஸூ) ஸமாதிஸித்தி: ஈசுவரப்பிரணிதானாத். (45)

(ப—ரை) **ईश्वरप्रणिधानात्**=(ஈசுவரப்பிரணிதானாத்) எல்லாவிதமான மனோநிலையையும் ஆண்டவனிடத்திற் செலுத்துவதால் **समाधिसिद्धिः**=(ஸமாதிசித்தி:) ஸமாதி லாபமானது உண்டாகின்றது.

(தா—ம்) பரமகுருவான ஈசுவரனிடத்து சர்வகர்மங்களையும் அர்ப்பணஞ்செய்து அவரிடத்து பக்தி செய்தலே ஈசுவரப் பிரணிதானமாகும். இவ்விதப் பிரணிதானஞ் செய்வதிலிருந்து வேறு தேசத்திலோ, அல்லது வேறு தேகத்திலோ, அல்லது வேறு காலத்திலோ வுள்ள எதையும் எவ்விதத் தடையுமின்றி உள்ளபடி அறிந்துகொள்ளக்கூடிய திறமை யுண்டாகின்றதென்பது இந்தச் சூத்திரத்தாலுபதேசிக்கப் பட்டதெனக் கொள்ள வேண்டும். (எ—று)

(அ—கை) இதுவரை யமம் நியமம் இவைகளும், அவற்றை யனுஷ்டிக்குங்காலுண்டாகும் சித்திகளும் உபதேசிக்கப் பட்டன. இனி யோகாங்கங்களான ஆஸனம் முதலியவற்றை யுபதேசிப்பாந்தொடங்கி இந்தச் சூத்திரத்தால் யோகாங்கங்களுள் 3வதான ஆஸனத்தை யுபதேசிக்கிறார்—

सू० ॥ स्थिरसुखमासनम् ॥ ४६ ॥

(ஸூ) ஸ்திரஸுகமாஸனம் ॥46.॥

(ப—ரை) **स्थिरसुखम्**=(ஸ்திரஸுகம்) ஸ்திரமாயும் அதாவது: அசைவையுண்டாக்காததாயும், சுகத்தை யுண்டுபண்ணக் கூடியு

தாயுமுள்ளது [यत्=(யத்) யாதுண்டோ तत् (தத்) அதுவே] आसनम्=(ஆஸனம்) ஆஸனம் எனப்படும்.

(தா–ம்) आस्यते अनेनेतिवा, आस्ते अनेनेतिवा व्युत्पत्या आसन पदनिष्पत्ति:="எதனுலோரிடத்தில் நிலைத்திருக்கப் படுகின்றதோ, அல்லது எதனுல் ஓரிடத்தில் நிலைத்து நிற்கின்றதோ அது ஆஸனம் எனப்படும்" என்றதால் ஆஸனம் என்றபதத்திற்கு ஓரிடத்தில் எதனுல் நிலைத்து நிற்கக்கூடுமோ அதுவே பொருளாகக் கொள்ளப்படுகின்றது. ஆகவே எவ்வித நிலையால் அசைவற்றிருத்தலும் சுகமும் உண்டாகுமோ அந்நிலையே ஆஸனமாகும் என்றேற்பட்டது. இதினின்றும் இனிகூறப்படும் பத்மாஸனம் முதலியவற்றுள் யாதானு மொன்றிஞலேயே முற்கூறிய நிலை பொருவனுக் குண்டாகுமாஞல், அதுவே போதுமான தென்றும் பெறப்பட்டது. பத்மாஸனம் முதலிய ஆஸனங்களாவன—

(1) பத்மாஸனம், (2) பத்ராஸனம், (3) ஸ்வஸ்திகம், (4) தண்டகாஸனம், (5) ஸோபாச்ரயம், (6) பர்யங்காஸனம், (7) க்ரௌஞ்சநிஷதனம், (8) ஹஸ்திநிஷதனம், (9) உஷ்ட்ர நிஷதனம், (10) ஸமஸம்ஸ்தானம், (11) ஸ்திரசுகம். (இதுவே யதாசுகம் என்றும் சொல்லப்படும்) என ஆஸனம் 11 விதமாகும். இவற்றுள் இரண்டு பாதங்களையும் இருதுடைகளின் மேல் வைத்துட்காருதல்1வது "பத்மாஸனமாகும்." இரண்டு குதிகால்களையும் விருஷண சமீபத்தில் சேர்த்துவைத்து அதன்மேல் இரண்டு கைகளையும் வைத்தல் 2வது பத்திராஸன மெனப்படும். இடதுகாலை மடக்கி வலதுபக்கத்து முழங்கால் துடை இவ்விரண்டிற்கும் நடுவிலும், வலதுகாலை மடக்கி இடதுபக்கத்து முழங்கால் துடை இவ்விரண்டிற்கும் நடுவிலும் வைத்தல் 3வதான "ஸ்வஸ்திகம்" எனப்படும். பூமியிலுட்கார்ந்து கால்களை நீட்டி, இரண்டு குதிகால்களையும் காலிலுள்ள விரல்களையு மொன்று சேர்த்துச் செய்வது 4வதான தண்டாஸனம் எனப்படும். பூமியிலுட்கார்ந்து இரண்டு முழங்கால்களையும் சேர்த்து இடுப்பைச்சுற்றி ஒருவஸ்திரம், அல்லதுபட்டு முதலியவற்ருல் சுத்திக் கட்டிக்கொள்வது 5வதான "ஸோபாச்ரயம்" எனப்படும். முழங்காலில் கையை வைத்துக்கொண்டு படுத்துக்

கொள்ளல் 6வதான "பத்ராஸனம்" எனப்படும். கிரௌஞ்சம் என்ற பக்ஷியானது பூமியிலுட்கார்ந்தா லெவ்வித மிருக்குமோ அம்மாதிரியே தானுமிருத்தல் 7வதான "கிரௌஞ்சநிஷதனம்" எனப்படும். யானை பூமியிற் படுத்தா லெவ்வித மிருக்குமோ அவ்விதமே தானுமிருத்தல் 8வதான "ஹஸ்திநிஷதனம்" எனப்படும். பூமியிற்படுத்த ஒட்டகையைப் போன்று தானுமிருத்தல் 9வதான "உஷ்ட்ர நிஷதனம்" எனப்படும். பூமியிலுட்கார்ந்து இரண்டு முழங்கால்களையும் ஒன்றின் மேலொன்றாய் அமைத்துக் கொள்ளல் 10வதான "ஸமஸம்ஸதானம்" எனப்படும். எவ்விதமிருந்தால் சரீரத்திற்கு நிலையும், சுகமும் உண்டாகுமோ அவ்விதமிருத்தல் 11வதான "ஸ்திரசுகம்" எனப்படும்.

குறிப்பு—இவ்விதம் பத்மாஸனம் முதலியவற்றை வாசஸ்பதி மிச்ரரின் வியாக்கியானத்தை யொட்டியே இங்கு விரித்திருப்பதாயறிந்து கொள்ளவும். (எ—று)

(அ—கை) இவ்விதம் ஆஸனத்தின் ஸ்வரூபத்தை யுபதேசித்து அதைச் சம்பாதித்துக் கொள்ளுவதற்கு வேண்டிய சாதனத்தை யுபதேசிக்கிறார்—

सू० ॥ प्रयत्नशैथिल्याऽनन्तसमापत्तिभ्याम् ॥ ४७ ॥

(ஸூ) ப்ரயத்ன சைதில்யா னந்த ஸமாபத்திப்யாம் (47)

(ப—ரை) **प्रयत्न...भ्याम्** (ப்ரயத்ன...ப்யாம்) **प्रयत्नशैथिल्य**=(ப்ரயத்னசைதில்ய) சரீரம் நிலைத்திருப்பதற்கு வேண்டி இயற்கையிலமைந்துள்ள முயற்சியைக் குறைத்துக் கொள்ளுவதாலும் **अनन्तसमापत्तिभ्याम्** (அனந்தஸமாபத்திப்யாம்) ஆதிசேஷனிடத்தில் மனத்தைச் செலுத்துதலாலும் [**आसनजयोभवति** (ஆஸனஜயோபவதி) ஆஸன ஜயமான துண்டாகின்றது.]

(அ—கை) ஆஸனஜய மேற்பட்டதற்கறிகுறியை யுபதேசிக்கிறார்.

सू० ॥ ततो द्वंद्वाऽनभिघातः ॥ ४८ ॥

(ஸூ) ததோத்வந்த்வானபிகாத: (48)

(ப—ரை) **तत:** (தத:)=ஆஸனஜயத்தினால் **द्वन्द्वानभिघात:** (த்வந்த்வாநபிகாத:)=சீதோஷ்ணம் முதலியவற்றால் பீடையான்துண்டாவதில்லை.

(அ—கை) இவ்விதமாஸன சித்தியேற்பட்ட பிறகே பிராணயாமம் செய்ய வேண்டுமென்பதைச் சொல்லுவதுடன் பிராணயாமத்தின் லக்ஷணத்தையு முபதேசிக்கிறார்.

सू० ॥ तस्मिन् सति श्वासप्रश्वासयो र्गतिविच्छेद: प्राणायाम:

(ஸூ) தஸ்மின் ஸதி ச்வாஸப்ரச்வாஸயோ: கதிவிச்சேத: ப்ராணயாம: ||49||

(ப—ரை) **तस्मिन्सति**=(தஸ்மின்ஸதி) அந்த ஆஸனஜய மேற்பட்டவுடன் **श्वासप्रश्वासयो:**= (ச்வாஸப்ரச்வாஸயோ:) =வெளியிலுள்ளவாயுவை உள்ளிழுத்தலாகிற சுவாஸமென்ன, உள்ளிருக்கும் வாயுவை வெளிவிடுதலென்ற ப்ரச்வாஸமென்ன இவைகளுடைய **गतिविच्छेद:** (கதிவிச்சேத:)=கதியைத் தடைசெய்தலாகிற **प्राणायाम:** (ப்ராணயாம:) ப்ராணயாமமானது [**कर्तव्य:** கர்த்தவ்ய: செய்யத்தக்கது]

(தா—ம்) மேற்கூறியபடி ஆஸனத்தைச் செய்து கொண்ட பிறகே பிராணயாமாப்யாஸம் செய்யவேண்டும். பொதுவாய் வெளியிலுள்ள வாயுவை சரீரத்திற்குள்ளிழுத்தல் சுவாஸம் எனப்படும். இதுவே பூரகமாகும். சரீரத்திற் குள்ளிருக்கும் வாயுவை வெளிவிடுதல் ப்ரச்வாஸம் எனப்படும். இதுவே ரேசகமாகும். பூரகம் ரேசகம் என்ற இவ்விரண்டிற்கு மன்யமாய் சரீரத்திற்குள் காற்றை எவ்வித அசைவுமில்லாமல் நெருத்துவது கும்பகமென்று சொல்லப்படும். ஆகவே பூரகம், ரேசகம், கும்பகம் என்ற இம்மூன்றிலும் வாயுவுக்கு ஓட்டம் இயற்கையாகவே நேருவதுண்டு. அவ்விதமியற்கையில் நேரும் ஓட்டமற்றதாய்க் காற்றையடக்குவது ப்ராணயாம மாகயேற்படும். இது பிராணயாமத்தின் பொது லக்ஷணமாகும். (எ—று)

(அ—கை) மூன்றுவிதப் பிராணயாமங்களின் பொது லக்ஷணத்தைக் கூறி, விசேஷலக்ஷணத்தை இதனாலுபதேசிக்கிறார்.

सू० ॥ बाह्याभ्यन्तर स्तंभवृत्ति र्देश काल संख्याभिः परिदृष्टो दीर्घ सूक्ष्मः ॥ ५० ॥

(ஸூ) பாஹ்யாப்யந்தர ஸதம்பவ்ருத்திர் தேச கால ஸங்க்யாபி: பரித்ருஷ்டோ தீர்க் ஸூக்ஷ்ம: (50)

(ப—ரை) [सः (ஸ:)=அந்தப் பிராணாயாமமானது बाह्य...त्तिः (பாஹ்ய...த்தி:) बाह्य (वृत्तिः) (பாஹ்ய-வ்ருத்தி:) சரீரத்திற்கு வெளியில் விருத்தியை (நிறுத்தலை) யுடையதாகவும் आभ्यन्तर (वृत्तिः) (ஆப்யந்தர-வ்ருத்தி:) சரீரத்திற்குள்ளில் விருத்தியை (நிறுத்தலை) யுடையதாகவும் स्तंभवृत्तिः=(ஸ்தம்பவ்ருத்தி:)=வெளியிற் செல்லுதல் உள்ளிழுத்தல் என்ற இவ்விரண்டுமே யில்லாது ஒரே அடியாய்உள்ளில் வ்ருத்தியை (நிறுத்தலை) யுடையதாகவும் [भवेत्=(பவேத்) ஆகும்.] त्रिविधः, सः, प्राणायमः=(த்ரிவித: ஸ: ப்ராணாயாம:) அந்த மூன்றுவித ப்ராணாயாமமானது] देश काल संख्याभिः (தேசகால ஸங்க்யாபி:) நிற்கும்தேசம், நிற்கும்காலம், நிற்கும் மாத்திரையின்எண் இவைகளால் परिदृष्टः= (பரிதிருஷ்ட:) பார்க்கப் பட்டதாய்க் கொண்டு दीर्घ सूक्ष्मः (தீர்க்க ஸூக்ஷ்ம:) दीर्घ=(தீர்க்க)=நீளமுள்ளதாகவும் सूक्ष्मः=(ஸூக்ஷ்ம:) மிக்க ஸூக்ஷ்மமாகவும் [भवति=(பவதி) ஆகின்றது.]

(தா—ம்) பிராணாயாமமானது ரேசகம், பூரகம், கும்பகம், துரீயம் எனநான்கு வகைப்படும். இந்நான்குமே முறையே பாஹ்யவிருத்தி என்றும், ஆப்யந்தரவிருத்தி என்றும், ஸ்தம்ப விருத்தி என்றும், இம்மூன்று மற்ற நான்காவது நிலையிலுள்ள தான துரீயம் என்றும் சொல்லப்படும். அவற்றுள் சரீரத்திற்குள்ளிருக்கும் வாயுவை ரேசனம் செய்து வெளியிற் கொண்டு வந்து வெளியிலேயே நிறுத்தல் ரேசகம் என்ற பாஹ்ய விருத்தியாகும். இவ்விதமே சரீரத்திற்கு வெளியிலுள்ள வாயுவைப் பூரகம்செய்து உள்ளிழுத்து சரீரத் திற்குள்ளிலேயே நிறுத்தல் பூரகம் என்ற ஆப்யந்தா விருத்தியாகும். இவ்விதமே உள்ளிழுத்தல் என்ற பூரகத்தையும், வெளி விடுதல் என்ற ரேசகத்தையும் செய்யாது, ஒரே முயர்ச்சியுடன் உள்ளிலேயே வாயுவை

நிறுத்தல் கும்பக மென்றஸ்தம்ப விருத்தியாகும். இந்தக் கும்பக விருத்தியில் குடத்தில் அசைவற்றிருக்கும் ஜலம்போல வாயுவானது தேஹத்திற்குள் நிற்பதால் இதுஸ்தம்பவிருத்தி என்று சொல்லப்பட்டது.

முற்கூறிய பூரகம், ரேசகம், கும்பகம், என்ற மூன்றுவித பிராணயாமமும், நிற்கும் தேசம், நிற்கும் காலம்,நிற்கும் மாத்திரையின் எண் ஆகிய இவைகளால் தீர்க்கமாகவும், ஸூக்ஷ்மமாகவும் ஆகும். அவற்றுள் சரீரத்திற்கு வெளியில் ரேசனம் செய்து வாயுவை நிறுத்தும்பொழுது இயற்கையில் எவ்வளவு தூரத்தில் வாயு நிற்குமோ அதற்கு அதிகமான தேசத்தில் வாயு நிற்கும்படி கொஞ்சம் கொஞ்சமாகப் பழக்கி அவ்விதப் பழக்கத்தை யொட்டி வெளியில் காற்றில்லாத விடத்தில் நுட்பமான பஞ்சு முதலியவற்றை வைத்து வாயு நிற்பதைக் கண்டறிந்து பழகிவருதல் தேசபரிதிருஷ்டமாகும். இவ்விதமே வெளியிலுள்ள வாயுவைச் சரீரத்திற்குள் ளிழுத்து நிறுத்திப் பூரகாப்யாஸம் செய்யும்பொழுது சரீரத்திற்குள் எவ்வளவு தூரத்தில் வாயு நிற்கின்றதென்பதைக் கண்டறிந்து கொள்வதும் தேசபரிதிருஷ்டமாகவே யாகும். அதாவது: வெளியிலுள்ள வாயுவை உள்ளிழுத்து நிறுத்துங்கால் அந்த வாயு உள்ளிற் செல்லும்பொழுது உள்ளில் எறும்பூருவது போன்ற தோற்றத்தைக் கொடுக்குமாதலால் அவ்விதத் தோற்றத்தைக் கொண்டு அந்தப் பூரகவாயு தேஹத்திற்குள் எவ்வளவு தேசம் சென்றிருக்கிறதென்பதைக் கண்டறியக் கூடுமாதலால் இவ்விதம் கண்டறிந்து செய்தல் ஆந்தர தேச பரித்ருஷ்டப் பிராணாயாம மாகவேயாகும் என்பதாம். இவ்விதமே கும்பக விஷயத்திலு மாந்தரதேச சம்பந்தத்தையறிந்து கொள்ளவேண்டும். மேலும் முற்கூறியபடி ரேசகம், பூரகம், கும்பகம் என்ற இம்மூன்றிலும் வாயுநிற்கும் தேசத்தையறிந்த பின்னர் அது எவ்வளவுகாலம் அந்தத்தேசத்தில் நிற்கின்றதென்பதையும், நிற்கும் க்ஷணம்முதலியவற்றைக்கொண்டு கண்டு கொள்ளவேண்டும். இவ்விதம் காண்பது காலபரிதிருஷ்டமாகும்.

தனது முழங்காலை யொருதடவை கையினாற் சுற்றி ஒரு தடவை விரலை சப்திக்கச் செய்வது மாத்திரை எனப்படும். அந்த மாத்திரை என்பது சுகசரீரியாயுள்ளவனுக்கு ஒருசுவாஸம் வெளி விட்டுப் பிறகு உள்ளிழுப்பதற்கு எவ்வளவு காலம் பிடிக்குமோ அவ்வளவு காலமாகவாகும். அவ்வித மாத்திரைகளுள் 26 மாத்திரை காலத்தில் அப்யசிப்பது ஸங்கியா பரிதிருஷ்டமாக வாகும். இம்முறைப்படி அப்யாஸம் செய்து வரும்பொழுது முன்னைவிட அதிகதேசமோ அதிககாலமோ, அதிகமாத்திரையின் சங்கியையோ, வாயு நிரோதமேற்படுமானால் அதுவே தீர்க்கநிரோத மெனப்படும். தீர்க்க நிரோத மதிகமாகவாக, அந்தநிரோதமே சூக்ஷ்மமாகவுமாகி விடுகின்றது. இம்முறைப்படி அப்யாஸத்தில் கொண்டுவந்தும், அவ்விதம் கொண்டுவந்திருப்பதை அனுபவத் திலறிந்து கொண்டும் பிராணுயாமம் செய்ய வேண்டும். (எ—று)

(அ—கை) சென்ற ஸூத்திரத்தால் ரேசகம், பூரகம், கும்பகம் என்ற மூன்றுவிதமான பிராணுயாமத்தின் லக்ஷணத்தை யுபதேசித்து, இந்தச் சூத்திரத்தால் நான்காவதான துரீயப்பிராணுயாமத்தை யுபதேசிக்கிருர்.

सू० ॥ बाह्याभ्यन्तर विषयाऽऽक्षेपी चतुर्थः ॥ ५१ ॥

(ஸூ) பாஹ்யாப்யந்தர விஷயாக்ஷேபீ சதுர்த்த: (51)

(ப—ரை) **बाह्य...पी** (பாஹ்ய...பீ) **बाह्य** (பாஹ்ய) வெளியிலும் **आभ्यन्तर** (ஆப்யந்தர) உள்ளிலும் சென்றுள்ள **विषय** (விஷய) தேசமாகிற விஷயத்தை **आक्षेपी** (ஆக்ஷேபீ) அறிந்து செய்தலையுடைய பிராணநிரோதமானது **चतुर्थः** (சதுர்த்த:) நான்காவதான துரீயமான ஸ்தம்பவிருத்திப் பிராணுயாமமாகும்.

(தா—ம்) வெளியில் வாயுநிற்கும் தேசமென்றும், உள்ளில் நாபிசக்கிரம் முதலிய வாயுநிற்கும் தேசமென்றும், தேசமானது இரண்டுவிதமாகச் சொல்லப்பட்டது. அத்தகைய தேசத்தைப் பற்றிய அறிவுடன் அதாவது: "இன்னதேசத்தில் வாயுநிற்கின்

றது என்ற அறிவுடன்செய்யப்படுவது துரீயப் பிராணாயாமம் என்றேற்படுகின்றது.

சங்கை—முன்னர் சொன்ன 3வதான கும்பகமென்றப் பிராணாயாமத்திற்கும், இந்தத் துரீயப்பிராணாயாமத்திற்கும் எத்தகைய வித்தியாஸமுமில்லாமைபற்றி இதை வேறுபோலத் தனியாயுபதேசிக்க வேண்டுவதில்லையன்றோ ?

உத்தரம்—3வதான கும்பகப் பிராணாயாமத்தில் ரேசகம், பூரகம், இவ்விரண்டின் அப்பியாஸத்தை முன்னிட்டு பாஹ்ய, ஆப்யந்தர, விஷய நிச்சயமில்லாமலே ஒரே முயற்சியில் விருத்திநிரோதம் செய்யப்படுகின்றது. இந்தத் துரீயப் பிராணாயாமத்திலோ பாஹ்ய ஆப்யந்தர விஷய நிச்சயத்துடனேயே வெகுப்பிரயாஸையுடன் வாயு நிரோதம் செய்யப்படுகின்றது. ஆகவே இந்தத் துரீயப் பிராணாயாமமானது உண்மையில் கும்பகப் பிராணாயாமத்தை விட வேறாகவே யாகிவிடுகின்றது. (எ—று)

(அ-கை) இவ்விதப் பிராணாயாமத்தால் ஸமாதிஸித்தி என்ற உத்தம பலனேற்படுமாயினும், அவாந்தர (இடையிலுண்டாகும்) பலனுமிதற் குண்டென்பதை இதனுலுப தேசிக்கிறார்.

सू० ॥ ततः क्षीयते प्रकाशावरणम् ॥ ५२ ॥

(ஸூ-ம்) ததःக்ஷீயதேப்ரகாசாவரணம் (52)

(ப-ரை) ततः (ததः) பிராணாயாமாப்யாஸத்தால் प्रकाशावरणम् (ப்ரகாசாவரணம்) प्रकाश (ப்ரகாச) புத்திஸத்வத்தினுடைய கிலேசபாபரூபமான மறைவான்து क्षीयते= (க்ஷீயதே) க்ஷயவாரம்பிக்கின்றது.

(தா-ம்) முற்கூறியபடி பிராணாயாமஞ் செய்வதால் சுத்த ஸத்வமயமான சித்தத்திலுள்ள அவித்யாதிதோஷங்களும் அதன் காரியமானபாபாதிகளும் க்ஷயவாரம்பித்துவிடுகின்றன. (எ-று)

(அ-கை) மேலும் பிராணாயாமத்தாலுண்டாகும் பலனுபதேசிக்கப்படுகின்றது.

सू० ॥ धारणासु च योग्यता मनसः ॥ ५३ ॥

(ஸூ) தாரணாஸு ச யோக்யதா மனஸ: (53)

(ப-ரை) **मनसः** (மனஸ:) மனத்திற்கு **धारणासु** (தாரணாஸு) ஸூக்ஷ்மலக்ஷ்யதாரணைகளில் **योग्यताच** (யோக்யதாச) யோக்யதையும் [**भवति** (பவதி) உண்டாகின்றது]

(அ-கை) இதுவரை கூறிய யமம், நியமம், ஆஸனம், பிராணாயாமம் இவைகளால் சுத்தம்செய்யப்பட்ட மனத்தையுடையவனுக்கு பிரத்யாஹார சித்தியுண்டாகின்றதெனக் கருதி இந்தச் சூத்திரத்தால் பிரத்யாஹாரமின்னதென்பதை யுபதேசிக்கிறார்.

सू० ॥ स्वविषयाऽसंप्रयोगे चित्तस्वरूपानुकार इवेन्द्रियाणां प्रत्याहारः ॥ ५४ ॥

(ஸூ) ஸ்வவிஷயாஸம்ப்ரயோகே சித்தஸ்வரூபானுகார இவேந்திரியாணாம் ப்ரத்யாஹார: 54

(ப-ரை) **इन्द्रियाणाम्** =(இந்திரியாணாம்) இந்திரியங்களுக்கு **स्वविषयासंप्रयोगे** (ஸ்வவிஷயாஸம்ப்ரயோகே) தத்தமது விஷயங்களானசப்தாதிகளுடன் சம்பந்தமானதுவிலகின பொழுது **चित्तस्वरूपानुकारइव** (சித்தஸ்வரூபானுகாரஇவ) சித்தத்தின்ஸ்வரூபத்தையனுஸரித்தலானது [**यः**= (ய:) யாதுண்டோ **सः** (ஸ:) அதுவே] **प्रत्याहारः** (ப்ரத்யாஹார:) ப்ரத்யாஹாரமாக [**भवति** (பவதி) ஆகின்றது]

(தா-ம்) மோஹம், ராகம் இவைகளை யுண்டுபண்ணக்கூடிய சப்தாதிகளான விஷயங்களில் இந்திரியங்களின் பிரவிருத்தியேற்படுதல் யோகப்பிரதிபந்தகமாகும். ஆகவே இதுவரைகூறிய யமம், நியமம், ஆஸனம், பிராணாயாமம் இவைகளைவழுவாது அனுஷ்டித்துவருபவனுக்கு சித்தத்திலுள்ள ராகம், கோபம் இவைகள் விலகிவிடவே சித்தமானது சுத்தஸத்வமயமான தனது இயற்கையானஸ்வரூபத்தை யடைந்து விடுகின்றது. அவ்விதம் சித்தம் தெளியவே மனோதீனமான இந்திரியங்களுக்கும் மோஹம், ராகம், கோபம், இவைகளை யுண்டு பண்ணும் ஸ்வபாவமுள்ள விஷயங்களில் பற்றுதல் குறைந்து விடுகின்றது. அவ்விதம் விஷயப்பற்று குறையவே சித்தத்தின் ஸ்வரூபம் எவ்விதம்

சுத்த ஸத்வமயமாக விருக்கின்றதோ அவ்விதமே இந்திரியங்களும் சுத்த ஸத்வமயமானஸ்வரூபமுள்ளனவாக வாகி விடுகின்றன. ஆகவே இந்திரியங்கள் வெளியிற் சென்றலைவதற்கு ஹேதுவான தோஷமற்றவைகளாய்க் கொண்டுசித்தத்தைப் போலவே நிருத்தங்களாகி விடுகின்றன என்றேறப்பட்டது. மேலும் இந்திரியங்கள் விஷயங்களை நோக்கிச்செல்லும் ஸ்வபாவமுள்ளன. மனதோ இந்திரியங்கள் வாயிலாக விஷயங்களிலும், இந்திரியங்களின் ஸம்பந்தம் பெறுவிடில் எவ்வித தோஷமுமற்றதாய்க் கொண்டு தத்துவத்திலும் செல்லும் ஸ்வபாவமுள்ளதா யிருக்கின்றது. ஆகவே மனத்தை மெள்ள மெள்ள தமக்குரிய விஷயங்களிலிழுக்கும் இந்திரியங்கள், விஷயப்பற்றை நீக்கி விடுமானல் மனத்திற்கு இந்திரியங்கள் வாயிலாக யேற்படும் விஷயப்பற்று விலகி அதற்கு இயற்கையாக அமைந்துள்ள தத்துவாபிமுக்ய முண்டாகி விடவுதுடன் மனத்தின் ஸம்பந்தமற்ற இந்திரியங்களும் சித்த ஸ்வரூபத்தை யனுஸரித்தவைகளாகி விஷயப்பற்றையே முற்றிலும் விலக்கி விடுகின்றன. ஆகவே சித்தத்தின் ஸ்வரூபத்தையேஇவைகளுமடைந்து விடுகின்றன. அதாவது: மனது தத்துவத்தை நாடி நிற்கும் விஷயத்தில் இந்திரியங்கள் எவ்வித இடையூறையும் செய்வதில்லை என்பதாம். இதை விளக்குவதற்காகவே இந்தச் ஸூத்திரத்திரத்தில் इव என்ற பதமுபயோகிக்கப் பட்டிருக்கிறது. சித்தத்தின் ஸ்வரூபத்தை யொற்ற ஸ்வரூபமுள்ள. வைகள் போலாகின்றது என்பது அதன் பொருள்.

(அ-கை) பிரத்யாஹாரத்தினின்று முண்டாகும் யோகத்திற் குபயோகப்படும் பலனை இதனுலுபதேசிக்கிருர்.

सू० ॥ ततः परमा वश्यतेन्द्रियाणाम् ॥ ५५ ॥

(ஸூ) ததः பரமா வச்யதேந்திரியாணும் (55)

(ப-ரை) ततः= (ததः) முற்கூறிய பிரத்யாஹாரத்தினின்றும் इन्द्रियाणाम्= (இந்திரியாணும்) இந்திரியங்களுக்கு परमा= (பரமா) மேலான वश्यता (வச்யதா) வசப்பட்டிருக்கும் தன்மையானது [भवति (பவதி) உண்டாகின்றது.]

(தா-ம்) இந்திரியங்கள் சித்தாதீனமாக வாகும் பொழுது தத்தமக்குரிய விஷயங்கள் இந்திரியங்களை எவ்வளவு வெளியிலி ழுக்க போதிலும் தமது சித்தாதீனமானநிலையை விட்டு விலகா திருத்தலே மேலான வச்யதையாகும். அதாவது: ராக்ஷஸாதம ஞன ராவணன் சீதையைத் தன்வசப்படுத்த வேண்டி எப்பாடு பட்டும் சீதையானவள் ஸ்ரீராகவனை விட்டு எவ்விதத்திலும் விலகாத மனதுடையவளாக எவ்வித மிருந்தனளோ, அவ் விதமே விஷயங்கள் இந்திரியங்களைத் தன்வசமாக்க வேண்டி எப்பாடுபடினும் சித்தசுவரூபத்திற்கு அடங்கினவைகளாகவே இந்திரியங்களின் நிலை ஏற்படுதலே மேலான வச்யதையாகும் என்று இதனுல் பெறப்பட்டது. (எ-று)

இரண்டாவது ஸாதனபாதம் முற்றிற்று.

மூன்ருவது விபூதிபாதம்.

(அ-கை) யமம், நியமம், ஆஸனம், பிராணுயாமம், பிரத்யா ஹாரம் என்றயோகங்கள் இதுவரை உபதேசிக்கப்பட்டன. இவ் கள் யோகத்திற்கு பஹிரங்க ஸாதனங்களாகும். இனி யோகத் திற்கு அந்தரங்க சாதனங்களான தாரணை, தியானம், ஸமாதி இவைகளைச் சொல்லுவாந் தொடங்கி இந்தச் சூத்திரத்தால் தார ணையின் ஸ்வரூபத்தை யுபதேசிக்கிருர்.

सू० ॥ देशबंधश्चित्तस्य धारणा ॥ १ ॥

(ஸூ) தேசபந்த: சித்தஸ்ய தாரணு (1)

(ப—ரை) **चित्तस्य** (சித்தஸ்ய)=சித்தத்தினுடைய **देशबंध:** (தேசபந்த:) சரீரத்திற்குள்ளும்,வெளியிலுமுள்ள இடத்தில் ஸ்திரீ கரணமானது (அசைவற்று நிற்றலானது) **धारणा**=(தாரணு)தாரணு எனப்படும்.

(தா—ம்) முதலாவது பாதத்தால் சமாதியும், இரண்டாவது பாதத்தால் அதற்குச் சாதனமு முபதேசிக்கப்பட்டது. மூன்ரு வது பாதத்தில் ஸமாதி ஸாதன னுஷ்டானத்தில் பிரவிருத்தி ஏற்படுவதற்கு வேண்டியும், சிரத்தையுண்டாவதற்கு வேண்டியும் சில விபூதிகள் (சித்திகள்) சொல்லப்படுகின்றன. ஆனதுபற்

றியே இந்த மூன்றுவது பாதத்திற்கு விபூதிபாதம் என்று பெயர் அத்தகைய சித்திகளோ ஸம்யமத்தா லுண்டாக வேண்டியவை களாக விருக்கின்றன. தாரணை, த்யானம், சமாதி என்ற இந்த மூன்றும் ஸம்யமம் என்று சொல்லப் படுகின்றது. ஆகவே இந்தப் பாதத்தி லுபதேசிக்கப்படும் விபூதிகளுக்கு யமம், நியமம், ஆஸனம், பிராணாயாமம், பிரத்யாஹாரம் ஆகிய இவ்வைந் தும் பஹிரங்க ஸாதனங்களாகவும், தாரணை, தியானம், சமாதி இவைகள் அந்தரங்க சாதனங்களாகவு மாகின்றன. ஆனது பற்றியே இந்த மூன்றுவது பாதத்தில் அந்தரங்க சாதனங்க ளான இம்மூன்றும் பிரித்து உபதேசிக்கப் படுகின்றன. மேலும் தாரணைக்குப் பிறகு தியானமும், தியானத்திற்குப் பிறகு சமாதி யும் ஏற்படவேண்டி வருவதால் முதலில்தாரணையுபதேசிக்கப்பட் டது. முற்கூறிய பஹிரங்க ஸாதனானுஷ்டானத்தால் சித்தத்தி லுள்ள சாஞ்சல்யரூபமான தோஷமானது விலகிவிட்டதாயினும் मनश्चञ्चलमस्थिरम् என்றபடி நிலையற்றிருத்தலையும் சாஞ்சல்யத் தையும் சுவபாவமாயுள்ள இந்த மனதானது யாதேனுமோர் வஸ்துவின் சம்பந்தத்தை (சேர்க்கையை) அடைந்தாலல்லாது நிலைபெறாதாகையால் அம்மனது நிலைத்து நிற்பதற்கு ஓர்பிடிப்பு வேண்டுவதவசிய மாகின்றது. பந்தத்தைத் தரக்கூடிய வஸ்துக் களின் ஸம்பந்தத்தையோ முற்கூறியபடி பஹிரங்கசாதனானுஷ் டானத்தினால் அடியோடு விலக்கி யாகிவிட்டது. இனி எந்த வஸ்துவின் ஸம்பந்தத்தை யடைந்தால் அது பந்தஹேதுவாக வாகாமல் முறையே நிர்விகல்ப ஸமாதிவரையுள்ள உத்தம பல னுண்டாகுமோ அத்தகைய வஸ்துவுடன் மனத்திற்கு ஸம்பந் த்தை யுண்டுபண்ணுவதே பொருத்த முள்ளதும் அவசியமுமாகி றது. ஆனதுபற்றி இந்த முதல் ஸூத்திரத்தால் அத்தகைய வஸ்துவுடன் மனத்திற்கு ஸம்பந்தமேற்படுத்தும் முறை யுபதே சிக்கப்படுகின்றது. பொதுவாய் மனது எந்த வஸ்துவின் ஸம் பந்தத்தை யடைந்தால் விக்ஷேபமும், அதன் மூலம் பந்தமும் ஒருபொழுது மேற்படுவதில்லையோ அவ்வஸ்து சுபாச்ரயம் எனப் படும். அந்தச் சுபாச்ரயமானது பாஹ்ய மென்றும், ஆந்தர மென்றும் இருவகைப் படும். வெளியிற் சாஸ்திர முறைப்படி

பஞ்சலோகங்களைக் கொண்டு பகவன்மூர்த்திகளைத் தயார்செய்து குருபதேச மூலம் கிடைத்த மந்திரத்தைக் கொண்டு அதில் தேவதையை ஆவாஹனம் செய்து அம்மூர்த்தியினிடத்தில் மனத்தை நிறுத்தல் பாஹ்யதேச பந்தமென்ற தாரணையாகும். பாஹ்ய தேசத்திலுள்ள இந்த பகவன்மூர்த்தியில் மனத்திற்கு யேற்படும் ஸம்பந்தமானது, பின்னர் கூறப்படும் ஆந்தரதேச சம்பந்தம் போன்று மனத்தின் ஸ்வரூபலயமாகாதாயினும், வெளியிலுள்ள பகவன் மூர்த்தியைப் பற்றின விருத்தியானது மனத்தில் ஒருவாறு உண்டாகலா மாதலாலிதுவும் தாரணையாகவே யாகின்றது. இவ்விதம் பழக்கி வருவதுடன் சரீரத்திலுள்ள நாபிசக்கிரம் ஹிருதய புண்டரீகம், ஸஹஸ்ராரம், நாஸிகையின் நுனி, நாக்கின் நுனி ஆகிய இம்மாதிரியான விடங்களில் மனத்திற்குச் சம்பந்தத்தை யுண்டுபண்ணுதல் ஆந்தரதேச சம்பந்த மாகவாகுமாதலால் இந்த ஆந்தர தாரணையையும் செய்துவர வேண்டும். இவ்விதமே,

प्राणायामेन पवनं प्रत्याहारेण चेन्द्रियम् ।
वशीकृत्य ततः कुर्याच्चित्तस्थानं शुभाश्रये ॥

பிராணாயாமத்தால் வாயுவையும், பிரத்யாஹாரத்தால் இந்திரியத்தையும், வசப்படுத்திப் பிறகு சுபமான ஆச்ரயத்தில் மனத்திற்கு நிலையை யேற்படுத்த வேண்டும். அத்துடன்

मूर्तं भगवतोरूपं सर्वोपाश्रयनिस्पृहम् ।
एषा वै धारणा ज्ञेया यच्चित्तं तत्र धार्यते ॥
तच्च मूर्तं हरेरूपं यद्विचिन्त्यं नराधिप ।
तच्छ्रूयतामनाधारा धारणा नोपपद्यते ॥
प्रसन्नवदनं चारु पद्मपत्रनिभेक्षणम् ।
सुकपोलं सुविस्तीर्णललाटफलकोज्वलम् ॥
समकर्णान्तविन्यस्तचारुकुण्डलभूषणम् ।
कंबुग्रीवं सुविस्तीर्णश्रीवत्साङ्कितवक्षसम् ॥
वलीविभङ्गिना मग्ननाभिना चोदरेण च ।
प्रलंबाष्टभुजं विष्णुमथवापि चतुर्भुजम् ॥
समस्थिरोरुजंघं च स्वस्तिकांघ्रिवरांबुजम् ।

चिन्तयेद्ब्रह्मभूतं तं पीतनिर्मलवाससम् ॥
किरीटचारुकेयूरकटकादिविभूषितम् ।
शार्ङ्गचक्रगदाखड्गशङ्खाक्षवलयान्वितम् ॥
चिन्तयेत्तन्मयो योगी समाधायात्ममानसम् ।
तावद्यावद्दृढीभूता तत्रैव नृप धारणा ॥
व्रजतस्तिष्ठतोऽन्यद्वा स्वेच्छया कर्मकुर्वतः ।
नापयाति यदा चित्तं सिद्धां मन्येत तां तदा ॥

என்றது முதலிய வாக்கியங்களால் கூறியபடி பகவத்ஸ்வரூபத்தில் மனத்தை நிறுத்துவது ஆந்தரதாரணையாகும் என்றும், இந்தத் தாரணையை தியானமேற்படும் வரை யனுஷ்டிக்க வேண்டுமென்றும் விஷ்ணுபுராணத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. ஆகவே மனத்தை பாஹ்யமான பகவன் மூர்த்தியில் நிறுத்திப் பிறகு ஆந்தரமாக இங்கு சொல்லியபடி யெல்லாமுள்ள பகவன் மூர்த்தியில் தியானம் சித்திக்கும் வரை நிறுத்தல் தாரணை என்றேற்பட்டது. (எ—று).

(அ—கை) இங்கு கூறிய தாரணையினு லுண்டாகும் தியானத்தை இதனுலுபதேசிக்கிறார்.

सू० ॥ तत्र प्रत्ययैकतानता ध्यानम् ॥ २ ॥

(ஸூ) தத்ர ப்ரத்யயைகதானதா த்யானம்(2)

(ப—ரை) तत्र (தத்ர)=முற்கூறிய விஷயத்தில் प्रत्ययैकतानता (ப்ரத்யயைகதானதா) प्रत्यय (ப்ரத்யய) தியேயமான வஸ்துவைப் பற்றியுண்டான சித்தவிருத்தியி னுடைய एकतानता (ஏகதானதா) விஷயத்தில் பற்றுள்ள வேறு விருத்தியுடன் கலப்பில்லாத தொடர்ச்சியான பிரவாஹமானது ध्यानम्= (த்யானம்) தியானம் எனப்படும்.

(தா—ம்) எந்த விஷயத்தில் மனத்தைச் சம்பந்தப்படுத்தித் தாரணை செய்தோமோ அதே விஷயத்தில் தொடர்ச்சியான (அதாவது: வேறுவிஷயத்தி னுண்டான சித்தவிருத்தியின் கலப்பில்லாததான) சித்த விருத்தியானது தியானம் எனப்படும். தாரணையும் சித்தவிருத்தி தானுயினும் தாரணை செய்யும்பொழுது

வேறுவிஷயமான சித்தவிருத்தியை விலக்குவதில் அதிகம் யத்நம் செய்யவேண்டி வருகிறது. தியானத்திலோ வேறுவிஷயமான சித்தவிருத்தியின் சம்பந்தமானது எவ்வித முயற்சியுமின்றித்தானே விலகிவிடுகின்றது. இதுவே தாரணைக்கும், தியானத்திற்கு முள்ள வேற்றுமையாகும். இவ்விதமே

तद्रूप प्रत्ययैकाग्र्य सन्ततिश्चान्यनिस्पृहा।
तद्ध्यानैः प्रथमैरङ्गैः षड्भि निष्पाद्यते नृप॥

"ஒரே மாதிரியான சித்தவிருத்தியின் ஒருமுகப்பட்ட ஸந்ததியானது வேறொரு விருத்தியின் கலப்பில்லாததாக வாகும் பொழுது "தியானம்" என்று கூறப்படும். அந்தத்தியானமானது இதற்கு முந்திய யமம், நியமம், ஆஸனம், பிராணாயாமம், பிரத்யாஹாரம், தாரணை என்ற ஆறு யோகாங்களா லுண்டாக்கப் படுகின்றது." என்று விஷ்ணு புராணத்தில் கூறப்பட்டிருக்கிறது. ஆனால் இந்தத் தியானத்தில் சித்தவிருத்தியும், த்யேயமான வஸ்துவும் தனித்தனித் தோற்றத்தை யடைந்தே வந்து கொண்டிருக்கும். (எ—று)

(அ—கை) யோகாங்கமான ஸமாதியின் ஸ்வரூபத்தை யுபதேசிக்கிறார்.

सू० ॥ तदेवार्थमात्र निर्भासं स्वरूप शून्यमिव समाधिः ॥ ३ ॥

(ஸூ) ததேவார்த்தமாத்ர நிர்ப்பாஸம் ஸ்வரூப சூன்யமிவஸமாதி: (3)

(ப—ரை) **तदेव** (ததேவ)=முற்கூறிய தியானமே **अर्थमात्र निर्भासम्** (அர்த்தமாத்ர நிர்ப்பாஸம்) த்யேய வஸ்துவின் வடிவமான தோற்றமுள்ளதாய் **स्वरूप शून्यमिव**=(ஸ்வரூப சூன்யமிவ) சித்தவிருத்தியின் ஸ்வரூபமே இல்லாதது போன்ற நிலையானது **समाधिः** (ஸமாதி:) ஸமாதி எனப்படும்.

(தா—ம்) வேறு விஷயமாயுண்டான சித்தவிருத்தியின் கலப்பில்லாதத் த்யேயவஸ்து விஷயமான சித்தவிருத்திப் பிரவாஹமானது தியானம் என்று முன்னர் சொல்லப்பட்டது. ஆனால் இந்தத்தியானத்தில் த்யேயவஸ்துவும், அதுவிஷயமான சித்த

விருத்தியும் தோற்றமடையுமென்றும் சொல்லப்பட்டது. இந்தச் சமாதியில் தியானமாகிற சித்தவிருத்தியின் தோற்றமேயில்லாமல், தியேயமான வஸ்துஸ்வரூபத்தில்¹ நன்குகலந்து விட்டமைபற்றி தியேயமான வஸ்துவின் தோற்றம் மட்டுமே ஏற்பட்டு சித்தவிருத்தியின் ஸ்வரூபமே முற்றிலுமில்லாததுபோன்ற நிலை யாதுண்டோ இன்னிலையே யோகாங்கமான ஸமாதி எனப்படும். (எ—று)

(அ—கை) தாரணை, தியானம், ஸமாதி என்ற இம்மூன்றையும் ஒரே சொல்லால் வியவஹரிப்பதற்கு வேண்டி. இம்மூன்றிற்கும் "ஸம்யமம்" என்ற பெயரை இந்தச் சூத்திரத்தா னுபதேசிக்கிறார்.

सू० ॥ त्रयमेकत्र संयमः ॥ ४ ॥

(ஸூ) த்ரயமேகத்ர ஸம்யம: (4)

(ப—ரை) **एकत्र** (ஏகத்ர) ஒரே விஷயத்தில் செய்யப்படும் **त्रयम्**=(த்ரயம்) இம்மூன்றும் **संयमः** (ஸம்யம:) ஸம்யமம் எனப்படும்.

(அ—கை) அந்த ஸம்யமாப்யாஸத்தின் பலனை யுபதேசிக்கிறார்.

सू० ॥ तज्जयात्प्रज्ञालोकः ॥ ५ ॥

(ஸூ) தஜ்ஜயாத் ப்ரக்ஞாலோக: (5)

(ப—ரை) **तज्जयात्** (தஜ்ஜயாத்) அந்தஸம்யமத்தின் பிராப்தியால் **प्रज्ञालोकः** (ப்ரக்ஞாலோக:) ஸமாதி பிரக்ஞையின் பிரகாசமானது [**भवति** (பவதி)=உண்டாகின்றது.]

(தா—ம்) ஸம்யமமானது எவ்வளவுக் கெவ்வளவு நிலைபெறுகின்றதோ அவ்வளவுக்கவ்வளவு ஸமாதியின் அறிவும் தெளிவாயுண்டாகின்றது.

(அ—கை) மேற்கூறிய ஸம்யமத்தை எந்தவிஷயத்தில் செய்தால் இங்கு கூறிய பலனுண்டாகுமோ அதை இதனாலுபதேசிக்கிறார்.

सू० ॥ तस्य भूमिषु विनियोगः ॥ ६ ॥

(ஸூ) தஸ்ய பூமிஷு விநியோக: (6)

(ப—ரை) **तस्य** (தஸ்ய) அந்தஸம்யமத்திற்கு **भूमिषु** (பூமிஷு) மேலுள்ள நிலைகளில் **विनियोग:** (விநியோக:) உபயோகமான துண்டாகின்றது.

(தா—ம்) கீழுள்ள நிலையைச் சாதித்தவன் அதற்குமே லுள்ள நிலையிலாவலுண்டாகும் பொழுது தன்னால் ஸாதிக்கப்பட்ட நிலைக்கு அடுத்த நிலையாதுண்டோ அதில் ஸம்யமத்தைச் செய்யவேண்டும். கீழுள்ள நிலையை யடையாதவனுக்கு மேலுள்ள நிலையிலாசையுண்டானால் அந்த ஆசை அவலமாகவேதான் முடியும். ஆகவே யோகவிஷயத்தில் கீழுள்ள நிலையையடைந்த பிறகு மேலுள்ள நிலையிலாசை யுண்டாகுங்கால் அம்மேலுள்ள நிலையை இந்த ஸம்யமத்தால் அடைந்து விடலாம். அதாவது: ஸம்யமத்தால் ஸ்தூலமான விஷயத்தையுடைய ஸவிதர்க்க ஸமாதியை யடைந்த பிறகு ஸூக்ஷ்மவிஷயமான நிர்விதர்க்க ஸமாதியில் ஆசையுண்டாகும்பொழுது இந்த ஸம்யமத்தைச் சூக்ஷ்மவிஷயமான நிர்விதர்க்க ஸமாதிவிஷயத்தில் செய்வதால் நிர்விதர்க்க ஸமாதி சித்தியுண்டாகும் என்பதாம். இவ்விதமே ஸவிசார ஜயத்தை யடைந்தவன் ஸம்யமத்தால் நிர்விசார ஜயத்தையுமடைவதற்கு முயற்சித்தல் வேண்டும். ஈசுவரப்பிரஸாதத்தால் மேல் நிலையை யடைந்தவன் கீழ்நிலையில் ஸம்யமம் செய்தலும் அனுவச்யமானதே. மேலும் இந்த யோகவிஷயத்தில் இன்ன பூமி மேலுள்ளது, இன்னபூமி கீழுள்ளது என்றவிஷயத்தை அவனவனது யோகப் பழக்கத்தைக் கொண்டு அறிந்து கொள்ளவேண்டுமே யொழிய இன்னது மேலான நிலை, இன்னது கீழான நிலை என்பதைச் சாஸ்திரமூலம் எவனும் சொல்ல வியலாது. இவ்விதமே

योगेन योगो ज्ञातव्यो योगो योगात्प्रवर्तते ।
योऽप्रमत्तस्तु योगेन स योगे रमते चिरम् ॥

என்றதால் வேறிடத்திலும் சொல்லப்பட்டிருக்கிறது (எ-று)

(அ—கை) தாரணை, தியானம், ஸமாதி என்ற இம்மூன்றும் ஸம்ப்ரக்ஞாத ஸமாதிக்கு அந்தரங்க (நெருங்கின) ஸாதனங்களென்பதை இதனுலுபதேசிக்கிறார்.

ஸூ० ॥ त्रयमन्तरङ्गं पूर्वेभ्यः ॥ ७ ॥

(ஸூ) த்ரயமந்தரங்கம்பூர்வேப்ய: (7)

(ப—ரை) **पूर्वेभ्य:** (பூர்வேப்ய:) முன்னர் கூறியயமாதிகளைக் காட்டிலும் **त्रयम्** (த்ரயம்) இங்குகூறிய தாரணை, தியானம், ஸமாதி இம்மூன்றும் **अन्तरङ्गम्** (அந்தரங்கம்) ஸம்ப்ரக்ஞாத சமாதிக்கு அந்தரங்க ஸாதனமாயுள்ளது.

(தா—ம்) யமம், நியமம், ஆஸனம், பிராணாயாமம், ப்ரத்யாஹாரம் ஆகிய இவ்வைந்தும், ஸம்ப்ரக்ஞாதஸமாதிக்கு பஹிரங்க ஸாதனங்களென்றும், தாரணை, தியானம், ஸமாதிஎன்ற இம்மூன்றும் அந்தரங்க ஸாதனங்களென்றும் கொள்ளவேண்டும். (எ—று)

(அ—கை) தாரணை, தியானம், ஸமாதி என்ற இம்மூன்றும் ஸம்ப்ரக்ஞாத ஸமாதிக்கு அந்தரங்க ஸாதனங்களாகுமே யொழிய அஸம்ப்ரக்ஞாத ஸமாதிக்கு பஹிரங்க ஸாதனங்களாகவே யாகின்றன என்பதை இதனாலுபதேசிக்கிறார்,

सू०॥ तदपि बहिरङ्गं निर्बीजस्य ॥ ८ ॥

(ஸூ) ததபி பஹிரங்கம் நிர்ப்பீஜஸ்ய (8)

(ப—ரை) **निर्बीजस्य** (நிர்ப்பீஜஸ்ய) நிர்விகல்பஸமாதிக்கு **तदपि** (ததபி) முற்கூறிய அந்தரங்க ஸாதனமான மூன்றும் **बहिरङ्गम्** (பஹிரங்கம்) பஹிரங்கமானதே.

(தா—ம்) தாரணை முதலிய மூன்றும் ஸம்ப்ரக்ஞாதஸமாதிக்கு அந்தரங்க ஸாதனமாகுமே யொழிய அஸம்ப்ரக்ஞாத ஸமாதிக்கு அந்தரங்க ஸாதனமாவதில்லை. (எ—று)

(அ—கை) இந்த மூன்றாவது பாதம் 16வது ஸூத்திரத்தில் தர்ம, லக்ஷண, அவஸ்தாரூபமான மூன்று பரிணாமங்களிலும் ஸம்யமம் செய்வதால் அதீதாநாகதக் ஞானமானதுண்டாகும் என **परिणामत्रयसंयमा दतीतानागतज्ञानम्** என்றதாலுபதேசிக்கப் போகிறார். அத்தகைய பரிணாமங்கள் இன்னின்னவை என்பதையுபதேசிக்கத் தொடங்குகிறார். அவற்றுள் வ்யுத்தானாவஸ்தை, ஸம்ப்ரக்ஞாதாவஸ்தை ஆகிய இவ்விரண்டிலும் சித்தத்தினுடைய பரிணாமம் இத்தகையதென் இதுவரை யுபதேசித்திருப்பதி

விருந்து நன்கு தெரிந்துகொள்ளக் கூடும். நிருத்தமான அவஸ்தையில் சித்தமானது எவ்வித பரிணாமத்தை யடைகின்றது என்பது மட்டு மறியக்கூடாததாக விருக்கின்றது. அவ்விதமறியக் கூடாததாக விருப்பதிலிருந்து நிருத்தாவஸ்தையில் சித்தத்திற்கு எவ்வித பரிணாமமுமில்லை என்று சொல்லிவிடமுடியாது. **चलंगुणवृत्तम्** என்றபடி சித்தமானது த்ரிகுணாத்மகமானதால் ஒரு க்ஷணமும் அதற்குப் பரிணாமமில்லாமலிருக்க முடியாது. ஆகவே இந்த நிருத்தாவஸ்தையிலும் சித்தத்திற்கு பரிணாமமிருக்க வேண்டுவ தவசியமாகின்றமை பற்றி அவ்வித நிருத்தாவஸ்தையிலுள்ள சித்தபரிணாமம் இவ்விதமானதென்பதை இதனுலுபதேசிக்கிறார்.

सू० ॥ व्युत्थाननिरोधसंस्कारयोरभिभवप्रादुर्भावौ निरोधक्षण चित्तान्वयो निरोधपरिणामः ॥ ९ ॥

(ஸூ) வ்யுத்தான நிரோதஸம்ஸ்கார்யோ ரபி பவப்ராதுர்ப்பாவௌ நிரோதக்ஷண சித்தாந்வய: நிரோதபரிணாம: (9)

(ப—ரை) [यदा=(யதா) எப்பொழுது **व्युत्थान निरोधसंस्कारयोः** (வ்யுத்தான நிரோதஸம் ஸ்காரயோ:) க்ஷிப்தம், விக்ஷிப்தம், மூடம் என்ற மூன்று அவஸ்தையினுடையவும், எவ்விதமாறுதலுமில்லாது சுத்தஸத்வமயமாக ஆவதற்குரிய நிரோத நிலையினுடையவும் **अभिभवप्रादुर्भावौ** (அபிபவப்ராதுர்ப்பாவௌ) வ்யுத்தானத்தின் குறைவும், நிரோதத்தின் விருத்தியும் [**भवतः**=(பவத:) உண்டாகின்றனவோ **तदा**=(ததா) அப்பொழுதுள்ள] **निरोधक्षणचित्तान्वयः**= (நிரோதக்ஷணசித்தாந்வய:) நிரோத மேற்படும் காலத்தில் சித்தத்திற்கேற்படும் சேர்க்கையானது **निरोधपरिणामः** (நிரோதபரிணாம:) நிரோதபரிணாமம் எனப்படும்.

(தா—ம்) சித்தத்தை தர்மி என்றும், வ்யுத்தானம், நிரோதம் இவ்விரண்டையும், அதன் தர்மமென்றும் கொள்ளவேண்டும். ஆகவேதர்மியான சித்தத்தில் வ்யுத்தானம் என்ற தர்மமானது குறைந்து, நிரோதம் என்ற தர்மமானது விருத்தியாகும்பொழுது வெகுகாலமாக வெளிக்கிளம்பின பழக்கத்தாலுண்டான வ்யுத்

த்தான ஸம்ஸ்காரமாகிற தர்மமானது அடியோடு மறைந்துவிடுகின்றது. அவ்விதம் மறைந்ததும் நிரோதஸம்ஸ்கார ரூபதர்மமானது விருத்தியடைய வாரம்பித்து விடுகின்றது. இவ்விதம் நிரோத ஸம்ஸ்கார ரூபதர்மமானது விருத்தியாகுங்கால் தர்மியான சித்தத்திற்கு நிரோத ஸம்ஸ்கார ரூபமான தர்மத்துடன் அன்வயம் (ஸம்பந்தம்) உண்டாகின்றது. அதாவது:—சித்தமானது மேன்மேலும் நிரோதஸம்ஸ்காரத்தை யடைகின்றது. இதுவே நிரோதபரிணமம் என்று சொல்லப்படும். அச்சமயத்தில் சித்தமானது நிரோதஸம்ஸ்கார மாத்திர சேஷமாக யிருக்கின்றதென முன்னர் சொல்லப்பட்டிருக்கிறது. (எ—று)

(அ—கை) மிக்கவலுவுள்ள நிரோதஸம்ஸ்காரத்தால் வ்யுத்தானஸம்ஸ்காரமானது குறைந்தபொழுது சித்தத்தினுடைய பரிணமமானது எவ்வித மேற்படுகின்றதென்பதையுபதேசிக்கிறார்.

सू० ॥ तस्य प्रशान्तवाहिता संस्कारात् ॥ १० ॥

(ஸூ—ம்) தஸ்ய ப்ரசாந்தவாஹிதா ஸம்ஸ்காராத் (10)

(ப—ரை) **तस्य**=(தஸ்ய) நிரோதமடையும் சித்தத்திற்கு **संस्कारात्**=(ஸம்ஸ்காராத்) நிரோத ஸம்ஸ்காரப் பெருக்கின் மூலம் **प्रशान्तवाहिता** (ப்ரசாந்தவாஹிதா) விக்ஷேபவாஸனையற்ற நிரோத ஸம்ஸ்காரப் பிரவாஹத்தை யுடையதாயிருக்கும் தன்மையானது [**भवति**=(பவதி) உண்டாகின்றது.]

(அ—கை) இந்தச் சூத்திரத்தால் ஸமாதிபரிணம முபதேசிக்கப்படுகின்றது.

सू०॥ सर्वार्थतैकाग्रतयोः क्षयोदयौ चित्तस्य समाधि परिणामः ॥ ११ ॥

(ஸூ—ம்) ஸர்வார்த்ததை காக்ரதயோ: க்ஷயோதயௌ சித்தஸ்ய ஸமாதி பரிணம: (11)

(ப—ரை **सर्वार्थतैकाग्रतयोः** (ஸர்வாத்ததைகா க்ரதயோ:) **सर्वार्थता** (ஸர்வார்த்ததா) = விக்ஷிப்தத் தன்மையினுடையவும், **एकाग्रता** (ஏகாக்ரதா) ஏகாக்ரத்தன்மையினுடையவும், அதாவது:

ஒருமுகப்பட்டிருக்கும் தன்மையினுடையவும் **क्षयोदयौ** (க்ஷயோதயௌ)=விக்ஷிப்தத் தன்மைக்கு **क्षय** (க்ஷய)=தேய்வும், எகாக்ரத் தன்மைக்கு **उदयौ** (உதயௌ) ஆவிர்ப்பாவமும் (பெறுக்கும்) **चित्तस्य** (சித்தஸ்ய) மனத்திற்கு [**भवत:** (பவத:) உண்டாகின்றன. **सएव** (ஸஏவ) அதுவே] **समाधि परिणाम:** (ஸமாதிபரிணாம:) ஸமாதிபரிணாமம் எனப்படும்.

(தா—ம்) தன்னிலைவிட்டு வெளி வந்து சித்தமானது க்ஷிப்தம், மூடம். விக்ஷிப்தம்முதலிய அவஸ்தைகளையடைதல் **सर्वार्थता** எனப்படும். இந்த ஸர்வார்த்ததையானது தர்மியான சித்தத்தின் தர்மமாக வாகின்றது. இவ்விதமே ஒருமுகப்படுதல் ஏகாக்ரதை எனப்படும். இதுவும் சித்தத்தின்தர்ம மாகவேயாகும். ஸர்வார்த்ததையானது விலகி எகாக்ரதையானது சித்தத்திற்கு எப்பொழுது உண்டாகின்றதோ அது ஸமாதிபரிணாமம் எனப்படும் (எ—று)

(அ-கை) முந்தின ஸூத்திரத்தில் அப்யாஸத்தால் சித்தத்திற்குள்ள விக்ஷேபமானது குறைந்ததும் ஏகாக்ரதையில் நிலை பெறுதலுண்டாகின்றதென்று உபதேசித்து, இந்தச்சூத்திரத்தால் விக்ஷேப ரூபமான விருத்திவிலகுவதற்கும் ஏகாக்ரதை என்ற விருத்தி யுண்டாவதற்குமிடையில் சித்தத்தில் வேறு விதமான விருத்தியொன்று முண்டாவதில்லை என்றும், விக்ஷேப விருத்தி விலகுவதும், எகாக்ரதா ரூபமான விருத்தியுண்டாவது மாகிய இவ்விரண்டும் ஒரே விஷயத்தில் ஒரேக்ஷணத்தி லுண்டாகின்றதென்றுமுபதேசிக்கப் படுகின்றது.

सू० ॥ शान्तोदितौ तुल्यप्रत्ययौ चित्तस्यैकाग्रतापरिणाम: १२

(ஸூ) சாந்தோதிதௌ துல்யப்ரத்யயௌ சித்தஸ்யைகாக்ரதா பரிணாம: (12)

(ப—ரை) **चित्तस्य**= (சித்தஸ்ய) சித்தத்தினுடைய **शान्तोदितौ** [சாந்தோதிதௌ] **शान्त**= (சாந்த) சென்றதும், **उदितौ**= (உதிதௌ) உண்டானதுமான **तुल्यप्रत्ययौ** (துல்யப்ரத்யயௌ) சமானங்களான விருத்திகளிரண்டும் **एकाग्रतापरिणाम:** (ஏகாக்ரதாபரிணாம:) ஏகாக்ரதை என்ற பரிணாம மாகும்.

(தா—ம்) ஸர்வார்த்ததை என்ற விக்ஷேபவிருத்தி யானது நிச்சேஷமாக விலகினதும், வினஷ்டமானதும் உத்பன்னமானது மான ஸமான பிரத்ய யங்கள் (விருத்திகள்) சித்தத்திலுண்டாகின்றன, அதாவது: சித்தத்திற்கு விக்ஷேபவாஸனையே முற்றிலும் விலகினதும் ஏகாக்ரதை (ஒரு முகப்பட்டிருத்தல்) யுண்டாகின்றது. இவ்வித மொருமுகப்பட்டிருத்த லேற்பட்டதும் நிரோதப்பெறுக்கையுண்டாக்கும் விருத்திகள் மேன்மேலு மேற்படத் தொடங்கும் பொழுது நிரோதமார்க்கத்திலுள்ள முன்னுள்ள விருத்தி விலகுவதும், அதே ஸமயத்தில் புதிதாக ஒரே மாதிரியான மேலானநிலைக்குக் கொண்டு போய்ச் சேர்க்கும் புதியவிருத்தி யுண்டாவது மாகவே இருக்கும். இவ்விதமிருக்கும் பொழுது முன்னுள்ள விருத்தியின் விலகுதல், புதிதான விருத்தியுண்டாதல் என்ற இரண்டுமெச்சமயமேற் படினும், இவ்விரண்டும் தனித்தனியே ஏற்படாமல், ஒரே மாதிரியான விருத்திகளாகவே ஆகின்றன. இத்தகைய சித்தவிருத்தியே நிரோதபரிணமம் என்பீடும். பொதுவாய் முந்தின தர்மமானது போனதும், வேறு தர்மமுண்டாவதே பரிணமம் எனப்படுவதால் மேற்கூறிய நிலை ஏற்படலாகும் என்று மேற்பட்டது. (எ-று)

(அ—கை) நிரோதம், ஸமாதி, ஏகாக்ரதை என்ற இம்மூன்று விதமான சித்தவிருத்திகளிற் சொல்லிய நியாயமானது பிருதிவீ முதலிய மஹாபூதங்களிலும், சக்ஷுஸ் முதலிய இந்திரியங்களிலும் பொருந்து மென்பதை யுபதேசிக்கிறார்—

सू०॥ एतेन भूतेन्द्रियेषु धर्मलक्षणाऽवस्थापरिणामा व्याख्याताः ॥ १३ ॥

(ஸூ) ஏதேன பூதேந்திரியேஷு தர்ம லக்ஷணவஸ்தாபரிணமா வியாக்யாதா: (13)

(ப—ரை) **एतेन=** (ஏதேன) மனத்தின் பரிணமத்தை யுபதேசித்ததினலேயே **भूतेन्द्रियेषु** (பூதேந்திரியேஷு) பிருதிவீ முதலிய மஹாபூதங்களிலும், சக்ஷுஸ் முதலிய இந்திரியங்களிலும் [**वर्तमानाः** (வர்த்தமாநா:) இருக்கின்ற] **धर्मलक्षणावस्थापरिणामाः** (தர்ம

லக்ஷணவஸ்தாபரிணாமா:) தர்மம், லக்ஷணம், அவஸ்தை இவைக ளாகிற பரிணாமங்கள் (மாறுதல்கள்) व्याख्याता: (வ்யாக்யாதா:) விரித்துக் கூறப்பட்டன.

(தா—ம்) தர்மபரிணாமம் என்றும், லக்ஷணபரிணாமம் என் றும், அவஸ்தாபரிணாமம் என்றும் பரிணாமம் மூன்று விதமா கும். அவற்றுள் முதலாவதான தர்மபரிணாமமாவது:— மிருத் தான தர்மியில் உருண்டை ரூபமான தர்மமானது விலகினதும் குடரூபமான தர்மமானதுண்டாகின்றது. இது போலவேசித்த மாகிறதர்மியில் வியுத்தானம் என்ற தர்மமானது விலகினதும் நிரோத ரூபமான தர்மமானது உண்டாகின்றது. இதுவே தர்ம பரிணாமமாகும். லக்ஷண பரிணாமமாவது. लक्षयतिकार्यरूपं धर्मं व्यावर्तयतीति लक्षणम्= कालत्रयम् கார்யரூபமான தர்மத்தை வில க்கிக் குறிக்கின்றது எதுவோ அதுவே லக்ஷணமாகும் என்ற பாகுபாட்டால் காலத்ரயமேலக்ஷணம் என்ற சப்தத்தால் கூறப் படுகின்றது. அதாவது: அநாகத வழியென்றும் (இனிவரும் வழியென்றும்) வர்த்தமான வழி (நிகழ்காலத்திலுள்ள வழி) என்றும், அதீதவழி (சென்ற காலத்திலுள்ள வழி) என்றும் வழி மூன்று விதமாகின்றது. ஆகவே சென்றகாலம், நிகழ்காலம், எதிர்காலம் என்ற இம் மூன்றுகாலங்களே மூன்று உபாதிகளெ ன்றும் சொல்லப்படுகின்றன. இவற்றுள் மிருத் என்ற தர்மியில் குடம் என்ற தர்மமானது அநாகத வழியை அதாவது: எதிர்கா லத்தை யடைந்ததாக வாகும் பொழுது அந்த அநாகத வழியான து வர்த்தமானவழி, அதீதவழி என்ற இவ்விரண்டினின்றும் தன் னைவேறு படுத்திக்காட்டுகின்றது. அதாவது: மிருத்ரூபமான தர் மியில் குடம் என்ற தர்மமானது இனிவரப்போவதாக விருந்தா ல் அப்பொழுது அது எதிர்கால வழியைப்பற்றியதாக விருப்ப தால் கடரூபமான தர்மமானது வர்த்த மானம், அதீதம் என்ற இவ்விரண்டையும் விடவேறாக வாகிவிடுகின்றது என்பதாம். அவஸ்தாபரிணாம மாவது :— மிருத் என்ற தர்மியின் தர்ம்மான குடத்தை எடுத்துக் கொள்வோம். இந்தக் குடரூபமான தர்மமானது வெகுகாலத்திற்குப் பின்னருண்டாவ தென்றும், அதாவது: அடுத்தகல்பத்தி லுண்டாவதென்றும்,

மறுநாளுண்டாவதென்றும், அப்பொழுதே உண்டாவதென்றும் வைத்துக் கொள்வோம். இவ்விடத்தி லடுத்த கல்பத்திலுண்டாகும் கடரூபமான தர்மமே மிருத்ரூபமான தர்மியினுடைய அனுகததமமான அவஸ்தாபரிணமம் என்றும், நாளைக்குண்டாவது அனுகதாவஸ்தா பரிணமம் என்றும், உடனே யுண்டாவது வர்த்தமானவஸ்தா பரிணமம் என்றும் சொன்னதாய்க் கொள்ள வேண்டும். மேலும் **प्रतिक्षण परिणामिनोहि भावा ऋते चिति शक्तेः** "சிதிசக்தி என்ற சைதன்யத்தைத் தவிற மீதமுள்ளபாவங்கள் (பதார்த்தங்கள்) யாவும் ஒவ்வொருக்ஷணத்திலும் பரிணமமுள்ளவைகளே" என்ற பாஷ்ய வசனப்படி புதிதாயிருக்குந்தன்மை, பழையதாயிருக்குந்தன்மை முதலியனவும் அவஸ்தா பரிணமங்களாகவே யாகும் என்றும் கொள்ளவேண்டும். (எ—று)

(அ—கை) தர்ம லக்ஷண அவஸ்தாரூபமான மூன்று பரிணமங்கள் எந்தத் தர்மியான வஸ்துவுக்குச் சொல்லப்பட்டதோ அந்தத்தர்மி இன்னதென்பதை இதனுலுபதேசிக்கிறார்.

सू० ॥ शान्तोदिताऽव्यपदेश्यधर्मानुपाती धर्मी ॥ १४ ॥

(ஸூ) சாந்தோதிதா வ்யபதேச்ய தர்மானுபாதீ தர்மீ (14)

(ப—ரை) **शान्त...ती** (சாந்த...தீ) **शान्त=** (சாந்த) தனது வேலையைச் செய்து சென்றகாலத்தில் பிரவேசத்தை யடைந்ததும், **उदित=** (உதித) ஜலாஹரணம் முதலிய கார்யத்தி லுபயோகப்பட்டு வர்த்தமான காலத்தை யடைந்ததும் **अव्यपदेश्य** (அவ்யபதேச்ய) சக்தி மாத்திரமாய் மிருத்ரூப தர்மி யிலுள்ளது மான **धर्म=** (தர்ம) தர்மத்தை **अनुपाती** (அனுபாதீ) தொடர்ச்சியா யனுபவிப்பது [**यः** (ய:) யாதொன்றோ **सः=** (ஸ:) அதுவே] **धर्मी=**(தர்மீ) தர்மியான வஸ்து வெனப்படும்.

(தா—ம்) இந்த யோக சித்தாந்தத்தில் காரணத்தைத் தர்மி என்றும், கார்யத்தைத் தர்மமென்றும் கொள்ளப்படுகிறது அதாவது: மண்ணைத்தர்மி என்றும், குடத்தைத் தர்மமென்றும் சொன்னதாக ஏற்பட்டது. ஆகவே சென்ற காலம், நிகழ் காலம், எதிர்காலம் என்ற மூன்று கால ஸம்பந்தத்தையும் அவ்வப்பொ

பூது தர்மமான (கார்யமான) குடமானது உடைந்த போதி லும், கார்யமான குடத்தில் தொடர்ச்சியாகவே மண் என்ற கார ணமானது இருந்து வருவதால் இந்த மிருத்தைத் தர்மி என்று சொன்னதாக வேற்பட்டது. மேலும் எந்தக் காரியமும் உத் பத்திக்கு முந்தி தனது காரணமான வஸ்துவில் சக்தி வடிவ மாக இருந்து தான் பின்னர் வெளியாகின்றது. காரணவஸ்தை யில் கவனிக்கும் பொழுது எந்தக் காரணத்தில் எந்தக் காரிய மிருக்கின்றதென்பதை நம்போன்ற வர்கள் பிரித்தறிய முடியாத தாக விருப்பது பற்றி காரணத்தில் காரியத்திற்கு சக்தி மாத்திர மா யிருக்கும் நிலையானது அவ்யபதேச்யநிலை என்று சூத்திரத்தி லுபதேசிக்கப்பட்டது. (எ—று)

(அ—கை) ஒரே தர்மியான வஸ்துவுக்கு அனேக விதமான மாறுத லுண்டாவதற்குரிய காரணத்தை இதனுலுபதேசிக்கிறார்:

सू० ॥ क्रमान्यत्वं परिणामान्यत्वे हेतुः ॥ १५ ॥

(ஸூ) க்ரமான்யத்வம் பரிணாமான்யத்வே ஹேது:

(ப—ரை) [मृदि=(ம்ருதி) மண்ணில்] தோன்றும் **क्रमान्यत्वम्=** (க்ரமான்யத்வம்) முறையின் வேறுபாடானது **परिणामान्यत्वे=**(பரி ணாமான்யத்வே) பொடி முதலிய தர்மங்களின் வேறுபாட்டிற்கு **हेतुः=**(ஹேது:) க்ஞாபகமாக (தெரிவிப்பதாக அவ்விஷயமான அறிவை யுண்டாக்குவதாக) [भवति=(பவதி) ஆகின்றது]

(தா—ம்) தர்மியான மண்ணை எடுத்துக் கொள்வோம். இந்த மண்ணில், பொடி, உருண்டை இரண்டிற்கும் கிரமமானது தென் படுகின்றது. அதாவது: முதலில் பொடியும், பிறகு உருண்டையு மேற்படுகின்ற தென்பதாம். இவ்விதமே பிண்டத்திற்கும், குடத்திற்கும் கிரமமேற்படுகின்றது. அதாவது: முதலில் பிண்ட மும், பிறகு குடமுமேற்படுகின்ற தென்பதாம். இவ்விதம் ஒன்று முன்னதாகவும், மற்றொன்று பின்னதாகவும் ஏற்படுவதிலிருந்து கிரமத்தில் வேற்றுமை ஏற்படுவதாகச் சொல்லப் படுகின்றது. இவ்விதக் கிரமவேற்றுமையானது மிருத் ரூபமான தர்மியி னுடைய சூர்ணம் (பொடி) முதலிய தர்மங்களின் வேற்றுமையை

நன்கு தெரிவிக்கின்றதாக வாகின்றது. இவ்விதமே லக்ஷணபரி ணும விஷயத்திலும், அவஸ்தா பரிணுமவிஷயத்திலும் காண்க. ஒரு குதுறில் நெல்லைக் கொட்டி வைத்தோமானுல் கொஞ்சகால மானதும் அந்த நெல்லைக் கையினு லெடுத்தால் பொடியாகிவிடுவ தைக் காண்கிறோம். ஆகவே காலக்கிரமமாய் சூர்ணுவஸ்தை யுண்டாவதாக யேற்படுகின்றது. இந்த விடத்தைக் கவனிப் போம். குதுறில் கொட்டிய தான்யத்தில் ஒவ்வொருக்ஷணத்தி லும் சூர்ணுவத்தைக் குரிய பரிணுமம் ஏற்படுவதாக ஒப்பவேண் டுமே யொழிய திடீரென அவ்விதம் சூர்ணுவஸ்தை யுண்டாவ தாகச் சொல்லவியலாது. ஆகவே பரிணுமியாயும், நித்யமாயு மிருக்கின்ற தர்மியினுடைய ஸ்வரூபத்தை விட தர்மங்கள் வேறு பட்டவைகள் என்றும், லக்ஷணங்களைவிட அவஸ்தைகள் வேறு பட்டவை களென்றும், ஏற்பட்டது. மேலும் காமம், ஸுகம் முதலிய சிலபரிணுமங்கள் மனத்திற்குப் பிரத்யக்ஷமாகத் தெரி கிறது. சில பரிணுமங்கள், ஆகமம், அனுமானம் இவைகளைக் கொண்டு ஊஹித்தறிய வேண்டியவைகளாக யிருக்கின்றன. அவைகள் ஏழுவிதங்களாகும். அவையாவன:—

निरोधकर्मसंस्काराः परिणामोऽथ जीवनम् ।
चेष्टा शक्तिश्च चित्तस्य धर्मा दर्शनवर्जिताः ॥

(1)நிரோதம்(2)கர்மம்(3)ஸம்ஸ்காரம்(4)பரிணுமம்(5)ஜீவனம் (6)சேஷ்டை(7)சக்தி ஆக இவ்வேழு விதமான விருத்திகளும் பரோக்ஷமானவைகளாகும். இவற்றுள் புண்ய பாபங்களே கர்மங்கள் எனப்படும். சித்தமானது முக்குணவடிவமானது பற்றி அதில் ஒவ்வொரு க்ஷணத்திலுமேற்படும் பரிணுமமானது அனு மேயமாகவே யாகின்றது. ஜீவனம் சுவாஸாதிகள் வருவதிலிரு ந்து ஊஹித்தறியவேண்டிய பிராணதாரணமாகும். சரீராதிக ளின் சேஷ்டையினின்று மூஹித்தறியக்கூடிய சித்தத்திலுள்ளக் கிரியையே சேஷ்டை எனப்படும். கார்யங்களின் ஸூக்ஷ்மாவ ஸ்தையே சக்தி எனப்படும் (எ—று)

(அ—கை) இதுவரை ஸம்யமத்தின் தர்மங்களான தர்மம், லக்ஷணம், அவஸ்தை இவைகளுபதேசிக்கப்பட்டன. இனி இந்தப் பாதம் முடியும் வரை ஸம்யமத்தினின்று மந்தந்த விஷயவசீகாரக்

ஞானத்திற்கு வேண்டிய விபூதிகளு . பதேசிக்கப் படுகின்றன. அவற்றுள் அதீதாஞகதக்ஞானத்தை யடைவதற்கு வேண்டிய முறையை இந்தச் சூத்திரத்தா லுபதேசிக்கிறார்.

ஸூ॰ ॥ परिणामत्रय संयमा दतीतानागतज्ञानम् ॥ १६ ॥

(ஸூ) பரிணாமத்ரய ஸம்யமா ததீதாஞகதக் ஞானம் (16)

(ப-ரை) **परिणामत्रयसंयमात्=** (பரிணாமத்ரயஸம்யமாத்) தர்ம, லக்ஷண, அவஸ்தா ரூபமாகச் சொல்லப் பட்ட மூன்று வித பரிணாமங்களிலும் ஸம்யமம் செய்வதால் **अतीतानागतज्ञानम्** (அதீதாஞகதக்ஞானம்) சென்ற காலத்திலுள்ளதும், எதிர்காலத்திலுள்ளதுமான வஸ்துவைப்பற்றிய க்ஞானமானது சுலுவாயுண்டாகின்றது.

(தா-ம்) சித்தமானது இயற்கையில் சுத்தஸத்வ குணமயமானது பற்றி எதையும் பிரகாசப்படுத்தும் ஸ்வபாவமுள்ளதென்பதில் யாதுமாக்ஷேபமில்லை. ரஜோகுண தமோகுண ரூபமான யாதொரு அழுக்குண்டோ அதனல் மேற்கூறிய இயற்கைகுணத்தை யடையாதிருந்திருக்கின்றது. ஸம்யமத்தினல் ரஜஸ் தமோகுண ரூபமான அழுக்கைப் போக்கினவுடன் எந்த இந்திரியங்களுடையவுமுதவியின்றியே எதையுமறிந்து விடுகின்றது. ஆகவே சுத்தஸத்வமயமான சித்தரூபமானதர்மியில், இந்தத்தர்மமும், இந்தலக்ஷணமும், இந்த அவஸ்தையும் எதிர்காலம்விட்டு நிகழ்காலத்தில்வந்து கூடித்தனது வேலையைச்செய்து சென்றகாலத்தையடைந்திருக்கின்றது என்பதாய், ஸம்யமம் செய்வதிலிருந்து சென்றகாலஸம்பந்தமுள்ள வஸ்துவையும், எதிர்காலஸம்பந்த முள்ளவஸ்துவையும், வர்த்தமான காலசம்பந்த முள்ளவஸ்துவையறிவது போலவே கண்கூடாக அறிந்து விடுகிறான்.

(அ-கை) ஸம்யமமூலம் பிராணிகள் பேசுவதையறிதல் என்ற சித்தியை இந்தச்சூத்திரத்தா லுபதேசிக்கிறார்.

ஸூ॰ ॥ शब्दार्थप्रत्ययानामितरेतराध्यासा त्संकर स्तत्प्रविभाग संयमा त्सर्वभूतरुतज्ञानम् ॥ १७ ॥

(ஸூ) சப்தார்த்தப்ரத்யயானு மிதரேதராத்யாஸாத் ஸங்கர: தத்ப்ரவிபாகஸம்யமாத் ஸர்வபூத ருதக்ஞானம் (17)

(ப—ரை) **शब्दार्थप्रत्ययानाम्** (சப்தார்த்தப்ரத்யயானும்) **शब्द=**(சப்த) சுரோத்திரேந்திரியத்தால் கிரஹிக்கப்படுவதும், தொடர்ச்சியாயும் ஒரே விதமாயு முள்ள வர்ணங்களை யுடையதும், ஒரேவிதமான பொருளைப் போதிப்பதுமான சப்தத்திற்கும் **अर्थ** (அர்த்த) ஜாதிகுண க்ரியாரூபமான அதன் பொருளுக்கும் **प्रत्ययानाम्** (ப்ரத்யயானும்) முற்கூறிய சப்தம் அர்த்தம் இவற்றின் மூலமேற்படும் விஷயாகாரமான புத்திவிருத்திக்கும் **इतरेतराध्यासात्** (இதரேதராத்யாஸாத்) பரஸ்பராத்யாஸத்தால் **संकर:=** ஸங்கர: கலந்திருத்தலானது [**भवति=**(பவதி) உண்டாகின்றது.] **तत्प्रविभागसंयमात्=**(ததப்ரவிபாகஸம்யமாத்) சப்தம்வேறு, அர்த்தம்மேறு, க்ஞானம்வேறு என்பதாக மூன்றையும் வெவ்வேருகப் பிரித்து அந்தப் பிரிவில் ஸம்யமஞ் செய்வதால் **सर्वभूतरुतज्ञानम्=**(ஸர்வபூத ருதக்ஞானம்) எந்தப் பிராணிகளுடைய சப்தத்தைப்பற்றிய அறிவும் [**भवति** (பவதி) உண்டாகின்றது].

(தா—ம்) **गामानय** "பசுவைக் கொண்டுவா" என்ற சொல்லைக் கேட்டதும் கோத்வம் என்ற பசுத்தன்மை பொருந்தியதும், கழுத்தில் சதை, வால் முதலியதுடன் கூடியதுமான ஒரு வியக்தியையும், அந்த வியக்தியைக் குறிக்கும் **गौ:** என்ற சப்தத்தையும், அந்த **गौ:** என்ற சப்தத்தால் சித்தத்தி லுண்டாகும் விருத்திரூபமான க்ஞானத்தையு மொன்ருகவே யெண்ணி அந்தப்பசுவைக் கொண்டு வரப்போகிருனேயன்றி 'கௌ: என்ற சப்தமானது இந்த வியக்தியைக் குறிக்கின்றது, இந்த வியக்தி கோசப்தத்தால் குறிக்கப்படுகின்றது, அந்த சப்தம், வியக்தி இரண்டையும் பற்றிய அறிவு தனியாய் நமது மனத்திலுண்டா யிருக்கின்றது' என்று ஒவ்வொன்றையும் பற்றித் தனித்தனிப் பிறித்தறிவதில்லை. அதாவது: சப்தம் என்பது என்னை? அர்த்தம் என்பது என்னை? ஞானம் என்பது என்னை? என்று கேட்கும் பொழுது எல்லாவற்றிற்கும் கௌ: என்ற ஒருபதிலையே சொல்லுகிருனே யொழிய மூன்றையும் பிரித்துச் சொல்லுவதில்லை

என்பதாம். இதைக் கவனித்தால், சப்தம், அர்த்தம், க்ஞானம் என்ற இம்மூன்றும் இவன் விஷயத்திலொன்று பட்டிருப்பது நன்கு விளங்கும். இவ்விதமொன்றாகவே தோற்றமேற்படுகின்றதாயினும்வாசகமான சப்ததத்துவமானது வேறு, வாச்யமான அர்த்ததத்துவம் வேறு, இவ்விரண்டையும் விட பிரகாசகமான க்ஞானதத்துவம் வேறு எனப்பிரித்தறிந்து, அந்தப்பிரிவில் எவனொருவன் தாரணை, தியானம் ஸமாதி என்ற ஸம்யமத்தைச் செய்கின்றானோ அவன் உலகிலுள்ள பசு, பக்ஷி, எறும்பு, முதலிய எல்லாப்பிராணிகளுடைய சப்தத்தைக் கேட்டதும் இன்ன எண்ணத்துடன் இந்தப் பிராணியானது சப்திக்கின்றது என்பதைத் தெளிவாயறிந்து கொண்டு விடுகிறான்.

இவ்விதமே ஸ்ரீமத்ராமாயணத்தில்—கேகயராஜன் தனது பத்தினியுடன் ஏகாந்தமாக விருக்கும்பொழுது திடீரென நகைக்கவே, அதுகேட்ட அவனது பத்தினீ 'திடீரென நகைத்ததின் காரணம் என்னே? சொல்லவேண்டும்' எனக்கணவனை வற்புறுத்தினாள். என்ன சொல்லியும் அவள்கேளாதபொழுது ராஜன் 'இங்கு நமது கட்டிலின்கீழ் சஞ்சரிக்கும் எறும்புகள் ஒன்றுக்கொன்று பேசிக்கொள்வதைக் கேட்டேன், அதனால் எனக்கு சிரிப்பு உண்டாயிற்று' என்றான். அதுகேட்ட பத்தினியானவள் சிறிப்புண்டாகும்படி எறும்பு என்ன பேசிற்றோ அதைச் சொல்லவேண்டுமென்று வற்புறுத்தினாள். அப்பொழுது அரசன் யோகாங்கமான சத்திய ப்ரதிஷ்டை முதலியவற்றில் சித்திபெற்ற ஒரு பெரியவர் பிராணிகள் பேசுவதை அறியும்முறையை யுபதேசித்திருப்பதாயும், அதை நீ எவரிடமாவது சொன்னால் அப்பொழுதே உனக்கு ஆபத்து வருமென்று சொல்லியிருப்பதாயும் சொல்லி அதை வெளிவிடமறுத்தார், என்றதால் இவ்விதசித்தியானது அனுபவத்திலுமிருந்து வந்திருப்பதாகத் தெளிவாயுபதேசிக்கப்பட்டிருக்கின்றது. (எ—று)

(குறிப்பு) இவ்விடத்தில் வியாஸபாஷ்யத்தில் "ஸ்போடம்" என்ற விஷயமாக விரிவாகக் கூறப்பட்டிருக்கின்றது. அவ் விஷயத்தை இங்கு எழுதுவதானால் கிரந்தமானது விரிவடையுமாதலாலும், வடமொழி மூலம் குருக்களிடமிருந்து நேரில் படித்

துப் பலதடவை சிந்தித்துத் தெளிந்து கொள்ளக்கூடிய விஷய மாதலாலும் அவ்விஷயமாக நாம் எழுதாமல்விடுத்திருக்கிறோம். (எ—று)

(அ—கை) முற்பிறவியை யறிவதற்குபாயத்தை யுபதேசிக்கிறார்.

सू० ॥ संस्कार साक्षात्करणात्पूर्वजाति ज्ञानम् ॥ १८ ॥

(ஸூ) ஸம்ஸ்கார ஸாக்ஷாத்கரணாத் பூர்வ ஜாதி க்ஞானம் (18)

(ப—ரை) **संस्कारसाक्षात्करणात्** (ஸம்ஸ்காரஸாக்ஷாத்கரணாத்) சித்தத்திலுள்ள ஸம்ஸ்காரத்தைச் சம்யமம் செய்து ஸாக்ஷாத் கரிப்பதால் **पूर्वजातिज्ञानम्** (பூர்வஜாதிக்ஞானம்) முற்பிறவியைப் பற்றிய அறிவானது [भवति=(பவதி) உண்டாகின்றது].

(தா—ம்) சித்தத்திலிரண்டு விதங்களான வாஸனு ஸம்ஸ்காரங்களிருக்கின்றன. அவற்றுள் ஒன்று நினைவை மட்டுமுண்டு பண்ணக் கூடியது. மற்றொன்று ஜாதி (பிறப்பு) ஆயுள், ஸுக துக்கானுபவம் முதலிய பலனையுண்டாக்கக் கூடியது. இவைகளே தர்மாதர்மங்களெனப்படும்.

नाभुक्तं क्षीयते कर्म कल्पकोटिशतैरपि ।

"கோடி கல்பங்களானாலும் கர்மங்கள் பலனைத்தராது தேய்வதில்லை" என்றும்,

कदाचित्स्वकृतं कर्म कूटस्थमिव तिष्ठति ।

"ஒருஸமயத்தில் தன்னால் செய்யப்பட்ட கர்மமானது ஸம்ஸ்காரரூபமாய் அசைவற்றதாய் தனது பலனுண்டாகும் வரை இருக்கின்றது" என்றும், ஸ்மிருதிகளிற் கூறப்பட்டிருப்பதும் இந்த ஸம்ஸ்காரங்களே யாகும். அத்தகைய ஸம்ஸ்காரங்களில் ஸம்யமம் செய்து அவற்றை நேரில் கண்டவனுக்கு இந்த ஸம்ஸ்கார ஹேதுவான அனுபவமானது சென்ற எந்த ஜன்மத்திலுண்டாயிற்றோ அந்தப் பூர்வஜன்ம க்ஞானமானது உண்டாகிவிடுகின்றது.

சங்கை—எங்கு எவன் ஸம்யமம் செய்கின்றனோ அங்குள்ள வற்றை ஸம்யம பலத்தாலறிந்து கொள்ளக் கூடுமென்று பொதுவாய் இதுவரை கூறியதிலிருந்தே ஏற்படக் கூடியதாயிருக்க

திரும்பவும் அவ்விஷயத்தையே இந்தச் சூத்திரத்தால் சொன்னதின் கருத்து யாதெனின்?

உத்தரம்—அதனுண்மை பின்வருமாறு:—தன்னை விடப் பிறருடைய மனத்திலுள்ள ஸம்ஸ்காரத்தில் ஸம்யமம் செய்து அதை ஸாக்ஷாத்கரிக்கும் யோகிக்கு பிறருடைய முற்பிறவிக்ஞானமும் உண்டாகின்றது என்பதைக் காட்டவே இங்கு இந்தச் சித்தியை யுபதேசித்ததாகக் கொள்ளவும். (எ—று).

அ-கை) பிறருடைய சித்தத்தையறிவதற்கு பாயத்தையுபதேசிக்கிறார்—

सू० प्रत्ययस्य परचित्तज्ञानम् ॥19॥

(ஸூ) ப்ரத்யயஸ்ய பரசித்தக்ஞானம் (19)

(ப-ரை) **प्रत्ययस्य**=(ப்ரத்யயஸ்ய) ராகம் முதலிய வற்றுடன் கூடினதனது சித்தவிருத்தியினுடைய [**संयमात्**=ஸம்யமாத்) ஸம்யமத்தினால்] **परचित्तज्ञानम्**= (பரசித்தக்ஞானம்) பிறருடையமனத்தைப் பற்றிய அறிவானது உண்டாகிவிடுகின்றது.

(தா—ம்) ராகம் முதலிய வற்றிற்கு ஆசிரயமான தனது சித்தத்தில் ஸம்யமம் செய்வதால் பிறருடைய சித்தமானது எத்தகையது என்ற அறிவானது உண்டாகி விடுகின்றது. (எ—று)

(அ-கை) 18வது சூத்திரத்தில் ஸ்ம்ஸ்காரஸாக்ஷாத்கரணத்தால் தன்னுடையவோ, பிறருடையவோ முற்பிறவியறியப்படும் என்று உபதேசித்திருப்பதிலிருந்தே ராகாதிகளுடன்கூடின தனது சித்தத்தில் ஸம்யமம்செய்வதிலிருது பிறருடைய சித்தத்திலுள்ள ராகாதிகளையும் அறிந்து விடக்கூடும், என்ற சங்கைநிகழும். எனக்கருதி அந்தச் சங்கையை இதனால் விளக்குகிறார்—

सू० ॥ न च तत्सालंबनं तस्याऽविषयीभूतत्वात् ॥ २० ॥

(ஸூ) நச தத்ஸாலம்பனம் தஸ்ய அவிஷயீபூதத்வாத் (22)

(ப—ரை) **सालंबनम्**=(ஸாலம்பனம்) ராகாதிகளுடன் கூடின **तत्**=(தத்) அந்தப் பிறருடைய சித்தமானது **न** (**साक्षात्क्रियते** (ந (ஸாக்ஷாத்க்ரியதே) ஸம்யமத்தாலறியப் படுவதில்லை **तस्य**= (தஸ்ய

அந்த ஸம்யமத்திற்கு **अविषयीभूतत्वात्** (அவிஷயீபூதத்வாத்) விஷய மாக ஆகாததால்.

(தா—ம்) முந்தின சூத்திரத்திற் சொல்லிய ஸம்யமத்தால் பிற ருடைய சித்தம் மட்டும் பொதுவாய் அறியப்படுமே யொழிய ராகாதிகளான விஷயங்களுடன் கூடினதான பிறர் சித்தமானது அறியப்பட மாட்டாது. ஏனெனில், ராகாதி விஷயங்களுடன் கூடின சித்தத்தைப் பற்றியறிந்திருந்தா லல்லாது ஸம்யமத்தால் அதையறிய முடியாது. ஏதேனும் ஒரு அடையாளத்தைக் கொண்டு எதை யறிகின்றனோ அது விஷயமாக ஸம்யமம் செய்ய முடியுமே யல்லாது எவ்விதத்தாலு மறியப்படாத வொன்றில் ஸம்யமமே யேற்படுவதற் கிடமில்லை, ஆனால் முந்தின 18வது சூத் திரத்திற் சொல்லிய ஸம்ஸ்கார ஸாக்ஷாத் காரத்திற்கும், பிறர் சித்தத்திலுள்ள ஸம்ஸ்காரத்திற்கும் ஸம்ஸ்காரத்வ (ஸம்ஸ்காரத் தன்மை) மானது ஒன்றாகவே யிருப்பதிலிருந்து ஸம்ஸ்காரத் தன்மையுடன் கூடிய தனது சித்தத்திலுள்ள ஸம்ஸ்காரத்தை ஸாக்ஷாத்கரிக்கும் பொழுது ஒரே மாதிரியான ஸம்ஸ்காரத் தன்மை பொருந்திய பிறருடைய சித்த ஸம்ஸ்காரத்தையும் ஸம்ய மத்தால் ஸாக்ஷாத்கரிக்கக் கூடியதாக வாகிவிடுகிறது. இந்த 19வது சூத்திரவிஷயத்திலோ வெனில், சித்தத்தன்மை பொருந் திய தனது சித்தஸாக்ஷாத்காரத்தால் பிறருடைய சித்தத்தன்மை பொருந்திய சித்தத்தை மட்டும் அறியலாமே யொழிய தனது சித்தத்தில் விஷயமாகத் தோன்றுவதற்கு நேர்மாறான பதார்த் தங்களும் அந்தப் பிறர்சித்தத்தில் விஷயமாகத் தோன்றலாமாத லால் தனது சித்தத்தில் செய்யப்படும் ஸம்யமத்தைக் கொண்டு, பிறர் சித்தம், அதில் புதிது புதிதாய்த் தோன்றும் விஷயம், ஆகிய இவ்விரண்டையும் ஒருபொழுது மறியமுடியாது என்று பகுத்தறியவும். (எ—று)

(அ—கை) ஒருவரு மறியாமல் மறைந்திருப்பதற்குறிய உபா யத்தை இதனாலுபதேசிக்கிறார்—

सू० ॥ कायरूपसंयमात्तद्ग्राह्यशक्तिस्तंभे चक्षुष्प्रकाशासंप्र योगेऽन्तर्धानम् ॥ २१ ॥

(ஸூ) காயரூபஸம்யமாத் தத்க்ராஹ்யசக்தி ஸ்தம்பே சக்ஷுஷ்ப் பிரகாசாஸம்ப்ரயோகே அந்தர்த்தானம் (21).

(ப—ரை) **कायरूपसंयमात्**=(காயரூபஸம்யமாத்) தனது சரீரத்திலுள்ள ரூபத்தில் ஸம்யமம் செய்வதால் **तद्ग्राह्यशक्तिस्तंभे**=(தத்க்ராஹ்யசக்திஸ்தம்பே) அந்தத் தனது சரீர ரூபத்திலுள்ள கிராஹ்ய சக்தியானது (அதாவது:பிறர்கண்ணுக்குப்புலப்படக்கூடியதன்மையானது) மறைக்கப்பட்டதாக ஆகிவிடவே **चक्षुष्प्रकाशासंप्रयोगे**=(சக்ஷுஷ்பிரகாசா ஸம்ப்ரயோகே) பிறருடைய கண்ணின் ஒளியினுடைய சேர்க்கையானது படாமலாகிவிடும்பொழுது **अन्तर्धानम्**=(அந்தர்த்தானம்) பிறர் கண்ணுக்குப் புலப்படாது மறைந்திருத்தலானது உண்டாகின்றது. இவ்விதமே தன்னுடைய, சப்தம், ஸ்பர்சம், ரஸம், கந்தம் முதலியவற்றிலும் ஸம்யமம் செய்வதால் தான் பேசுவதைப் பிறர்கேட்கமுடியாமலும், தான் ஒருவன் மேலிடித்தாலும் அதையும் பிறரறிய முடியாமலும், தான் ஒன்றை ருசிபார்த்தாலும் அதைப்பிறர் அறியமுடியாமலும், தன்னிடமுள்ள மணத்தைப் பிறரறிய முடியாமலுமாகக் கூடிய உத்தமமான சித்திகளை யடையக் கூடுமென்றும் ஏற்பட்டது.

(அ—கை) கர்மாவில் செய்யப்படும் ஸம்யமத்தினின்றும் மரணகாலநிச்சய மேற்படுகின்ற தென்பதை இதனுலுபதேசிக்கிறார்—

सू० ॥ सोपक्रमं निरुपक्रमं च कर्म तत्संयमादपरान्तज्ञानमरिष्टेभ्यो वा ॥ 22 ॥

(ஸூ) ஸோபக்ரமம் நிருபக்ரமஞ்ச கர்ம தத்ஸம்யமாத் அபராந்த க்ஞானமரிஷ்டேப்யோவா(22)

(ப—ரை) **कर्म**= (கர்ம) கர்மமானது **सोपक्रमम्**= (ஸோபக்ரமம் பலனைக் கொடுக்கும் நிலையிலுள்ளதும் சீக்கிரகாலத்தில் முடியும் பலானுபவத்தை யுடையதும், **निरुपक्रमञ्च**= (நிருபக்ரமஞ்ச) வேறு காலத்தில் பலனைத் தரக்கூடியது இப்பொழுது பலனைக்கொடுப்பதில் வேலையற்றது [**इति** (இதி)=என்றும் **द्विविधम्**=(த்விவிதம்)

இரண்டு விதமானது] **तत्संयमात्=** (தத்ஸம்யமாத்) அத்தகைய கர்மத்திற் செய்யும் ஸம்யமத்தினின்றும் **अपरान्तज्ञानम्=** (அபராந்தக்ஞானம்) மரணகால க்ஞானமானது ண்டாகின்றது. **वा=** (வா) அல்லது **अरिष्टेभ्यः=** (அரிஷ்டேப்ய:) அசுபக் குறிகளினின்றும் மரணகால க்ஞானமுண்டாகின்றது.

(தா—ம்) நல்ல வெய்யிலுள்ள விடத்தில் உணங்கும்படி விரித்து ஒருவஸ்திரத்தைக் கட்டினுல் அவ்வஸ்திரத்திலுள்ள ஈரமானைப்பானது எவ்விதம் வெகுசீக்கிரம் துணியை விட்டு நீங்குமோ, அவ்விதமே முந்தின ஜன்மங்களிற் செய்த புண்ணிய பாப கர்மங்கள் பலனைக்கொடுக்க வாரம்பஞ்செய்து வெகு சீக்கிரத்தில் தனது பலனைக்கொடுத்து முடியக்கூடியதாக வுள்ள நிலையி லிருக்குமானுல் அக்கர்மம் ஸோபக்கிரமகர்மம் எனப்படும். காற்ரூ, வெய்யிலோ, ஒன்றுமே இல்லாத விடத்தில் ஒருதுணியைத் தண்ணியில் நனைத்து ஜலத்தைப் பிழியாமலும், சுருட்டியும், வைத்தால் அவ்வஸ்திரத்திலுள்ள ஜலம் எவ்விதம் சுளுவிலுணங்காதோ, அவ்விதமே சித்தத்தில் ஸம்ஸ்காரரூபமாக இருந்து கொண்டு தனது பலனைச் சமீபத்தில் கொடுக்காமலிருக்கும் கர்மமானது நிருபக்கிரமகர்மம் எனப்படும். இத்தகைய கர்மத்தில் ஸம்யமத்தைச் செய்வதால் தனது ஆயுளின் முடிவுகாலம் இன்னதென்ற அறிவுண்டாகின்றது. அதாவது: இன்ன தேசத்தில், இன்னகாலத்தில், தேஹ வியோகமுண்டாகும் என்ற அறிவு உண்டாகி விடுகின்றது. அவற்றுள் ஸோபக்கிரம கர்மத்தை ஸம்யமத்தால் ஸாக்ஷாத்கரிப்பவன் அதன் பலனைச் சீக்கிரம் அநுபவிப்பதற்கு வேண்டி யோகமஹிமையால் அனேகம் தேஹங்களை யெடுத்துக்கொண்டு அப்பலனை அநுபவித்து விடுகிறுன். இவ்விதம் வெகு சரீரத்தை யெடுக்காமல் ஒரே சரீரத்தால் அந்தக்கர்ம பலனை யனுபவிப்பதானுல், மோக்ஷப்பிராப்திக்கு விளம்பம்வரும். ஆதலால் ஒரே சமயத்தில் அனேக சரீரங்களை யெடுத்து அப்பலனை யனுபவிப்பது யோகிகளின் வழக்கத்திலிருந்து வருகின்றது.

மேலும், யோகப்பயிற்சி யில்லாதவன் கூட தனக்கு நேரும் மரணகாலத்தைச் சுளுவில் அறிந்து கொள்ளலாம், அதாவது;

ஆத்யாத்மிகாரிஷ்டம் என்றும், ஆதிபௌதிகாரிஷ்டம் என்றும், ஆதிதைவிகாரிஷ்டம் என்றும் அரிஷ்டம் (அசுபக்குறி) மூன்று விதமாகும். அவற்றுள் இருகைகளாலும் தனது இருகாது களையும் பொத்திக் கொண்டால் உள்ளிலுள்ள பிராணன்களின் சப்தமானது அறியப்படாமலிருந்தால் அது ஆத்யாத்மிகாரிஷ்ட மாகும். நிமித்தமின்றியே யமதூதர் முதலியோரைக் காண்பது ஆதிபௌதிக அரிஷ்டமெனப்படும். எவ்வித நிமித்தமுமின்றி திடீரென ஸ்வர்க்கம் முதலியலோகங்களைக் காணுதல் ஆதிதைவிக அரிஷ்டங்களெனப்படும். இவ்வித முண்டாகும் அசுபக் குறிகளைக்கொண்டு மரணகாலத்தையறிந்து விடலாம். மேலும், இவ்விஷயமாய் யோகரத்னகரம் என்ற வைத்தியசாஸ்திரத்திற் சொல்லி யிருப்பதையும் இங்கு எழுதுகிறோம்.

अरुन्धतीं ध्रुवञ्चैव विष्णोस्त्रीणि पदानि च ।
आयुर्हीना न पश्यन्ति चतुर्थं मातृमंडलम् ॥
अरुन्धती भवेज्जिह्वा ध्रुवो नासाग्रमेव च ।
विष्णुस्तु भ्रूद्वयोर्मध्यंभ्रूद्वयं मातृमंडलम् ॥

தனது நாக்கையும், மூக்கின் நுனியையும், இரண்டுபுருவங் களின் நடுவையும். இரண்டுபுருவங்களையும் ஆயுளின் குறைவை யடைந்தவர்கள் பார்ப்பதில்லை. அதாவது:மரணம்எவனுக்குச்சமீ பித்துவிட்டதோ அவனுடைய கண்ணுக்கு மேற்கூறியவைகள் புலப்படாதென்பதாம்.

अकस्माच्च भवेत्स्थूलो ह्यकस्माच्च कृशो भवेत् ।
अकस्मादन्यथाभावः षण्मासैश्च विनश्यति ॥

திடீரென பெருத்தும், திடீரென இளைத்தும், திடீரென வேறுவிதமாக மாறியும் விடுபவன் 6-மாதங்களுள் நாசத்தை யடைந்து விடுவான்.

स्वेदो ललाटे हिमवन्नरस्य शीतार्दितस्यापि सुपिच्छिलस्य ।
कण्ठेस्थितो यस्य नयाति वक्षो नूनं यमस्यैति गृहं नरस्सः ॥

குளிரால் பீடிக்கப்பட்டவனாயினும், நல்ல சரீரபுஷ்டியுள்ள வனாயினும், எந்த மனிதனுடைய நெற்றியில் பனிபோன்ற வியர் வை யுண்டாகிக்கழுத்துக் குழியில் தங்கி அங்கிருந்து தனது

மார்பு வரைவழிந்தோடுகின்றதில்லையோ, அந்தமனிதன் யமனுடைய வீட்டைச்சமீபத்தில் அடைந்து விடுவது நிச்சயம்.

रात्रौ दाहोऽभितपति दिवा जायते शीतलत्वं
कण्ठे श्लेष्मा विरसवदनं कुंकुमाकारनेत्रे ।
जिह्वा कृष्णा वहति च सदा स्थूलसूक्ष्मा च नाडी
तत्भैषजत्वं स्मरणमधुना रामरामेति नाम्नः ॥

ராத்திரிகாலங்களில் உடம்பில் எரிச்சலும்,பகற்காலங்களில் குளிரும், கண்டத்தில் ஸிலேஷ்மமும், நாக்கில் வறட்சியும், குங்குமம் போன்று கண்களில் சிவப்பும்,நாக்கு கறுநிறமடைந்து எப்பொழுதும் அங்கிருந்து நீர்வடிதலும், நரம்புகள் மிக்கஸ்தூலமாகவும், ஸூக்ஷ்மமாகவும் இருப்பதுமாகிய இவ்வடையாளமுள்ளவனுக்கு, இச்சமயம் ராம ராம என்ற மந்திரஜபத்தைத் தவிர வேறுமருந்தேகிடையா. அதாவது இவன்மரணமடைவது நிச்சயம்.

(அ—கை) மைத்ரீ, கருணை, முதலிய வற்றில் செய்யப்படும் ஸம்யமத்தாலுண்டாகும் பலன் இதனாலுபதேசிக்கப் படுகின்றது

सू० ॥ मैत्र्यादिषु बलानि ॥ २३ ॥

(ஸூ) மைத்ர்யாதிஷு பலானி (23)

(ப—ரை) **मैत्र्यादिषु**=(மைத்ர்யாதிஷு) மைத்திரீ முதலிய வற்றில் செய்யப்படும் ஸம்யமத்தினின்றும் **बलानि**= (பலானி) வெகுவிதசக்திகளுண்டாகின்றன.

(தா—ம்) உலகில் சுகிகளாயுள்ளவர்களிடத்தில் மைத்ரீயை (மித்ரத்தன்மையை) பாவிப்பதால் ஸர்வ ஜீவர்களையும்சுகிகளாகச் செய்யக்கூடிய திறமை யுண்டாகின்றது. இவ்விதம் துக்கிகளாயுள்ள வர்களிடத்தில் கருணையைப் (அவர்களது துக்கத்தைப் போக்கவேண்டுமென்ற எண்ணத்தை) பாவிப்பவனுக்கு துக்கத்தினின்றே, துக்க காரணத்தின்றே அப்பிராணிகளைக் காப்பாற்றும் திறமை யுண்டாகின்றது. புண்ணியஞ் செய்கின்றவர்களிடத்தில் முதிதையை (மனத்தின்திருப்தியை) எண்ணுகின்றவனுக்கு எதிலும் நடுநிலைமை வஹிக்கும் திறமை யுண்டாகின்றது. பாபிகளிடத்தில் உபேக்ஷை செய்தலென்பது ஸம்யமமாகாதாகையால் அதன் மூலம் எவ்விதபலனும் சொல்லுவதற் கில்லை.

(அ—கை) யானை முதலியவற்றிலிருக்கும் வலுவில் ஸம்யமம் செய்வதாலுண்டாகும் பலனுபதேசிக்கப்படுகின்றது—

सू० ॥ बलेषु हस्तिबलादीनि ॥ २४ ॥

(ஸூ) பலேஷு ஹஸ்திபலாதீனி (24)

(ப—ரை) **बलेषु=** (பலேஷு)யானை, கருடன். வாயு இவர்களுடைய பலன்களில் [**संयमात्=** (ஸம்யமாத்) ஸம்யமஞ் செய்வதால்] **हस्तिबलादीनि=** (ஹஸ்திபலாதீனி) யானை முதலியவற்றின் பலன்கள் உண்டாகின்றன.

(தா—ம்) சித்தத்திற்கு இயற்கையிலேயே எதையும் சாதிக்கக் கூடிய திறமையிருப்பதால் இங்கு கூறிய ஸம்யமபலமும் நேரும் பொழுது அடையமுடியாத வஸ்து ஒன்றுமே உலகிலிருக்க முடியாதென்றேற்பட்டது. (எ—று)

(அ—கை) ஸூக்ஷ்மமாயும், மறைந்தும். வெகு தூரதேசத்திலுமிருப்பது மான வஸ்துக்களை யறிவதற்கு பாயத்தை இதனுலுபதேசிக்கிறார்—

सू० ॥ प्रवृत्त्यालोकन्यासात्सूक्ष्मव्यवहितविप्रकृष्टज्ञानम् ॥२५॥

(ஸூ) ப்ரவ்ருத்யாலோகந்யாஸாத் ஸூக்ஷ்ம வ்யவஹித விப்ரக்ருஷ்டக் ஞானம் (25)

(ப—ரை) **प्रवृत्त्यालोकन्यासात्=** (ப்ரவ்ருத்யாலோகங்யாஸாத்) * ஜ்யோதிஷ்மதீ ப்ரவ்ருத்தியிலுள்ளஜோதிஸ்ஸில் ஸம்யமம் செய்வதால் **सूक्ष्मव्यवहितविप्रकृष्टज्ञानम्=** (ஸூக்ஷ்ம வ்யவஹித விப்ரக்ருஷ்ட க்ஞானம்) மிக்க நுட்பமாயுள்ள பரமாணுமுதலிய வற்றினுடையவும், பூமிக்குள்ளிருக்கும் புதையல் முதலியவற்றினுடையவும், வெகு தூரதேசத்திலுள்ள மஹாமேரு முதலியவற்றினுடையவும், அறிவானது உண்டாகிவிடுகின்றது.

(அ—கை) உலகங்களைப்பற்றிய அறிவுண்டாகும் முறையுபதேசிக்கப் படுகின்றது—

सू०॥ भुवनज्ञानं सूर्ये संयमात ॥ २६ ॥

* 1வதுபாதம். 36 வதுசூத்திரம் பார்க்கவும்.

(ஸூ) புவனக்ஞானம் ஸூர்யே ஸம்யமாத் (26)

(ப—ரை) सूर्ये= (ஸூர்யே) ஸூர்யமண்டலத்தில் संयमात्= (ஸம்ய மாத்) ஸம்யமம் செய்வதினின்றும் भुवनज्ञानम्= (புவனக்ஞானம்) புவனங்களைப்பற்றிய அறிவானதுண்டாகின்றது.

(தா—ம்) புவனவிஷயமாய் வியாஸபாஷ்யத்திற் சொல்லியி ருப்பதை எழுதுகிறோம். புவனங்கள் ஏழுவிதமாகும். பூமியின் சுற்றளவிற்குச் சரியான நடுவில் தூண்போல மஹாமேரு வென்ற பர்வதமிருக்கின்றது. அந்தப்பர்வதத்தின் கீழ்ப்பாகத் தின் கோடியில் அவீசி என்ற நரகம் இருக்கின்றது. அந்த அவீசி முதற்கொண்டு மேருவின் பிருட்டபாகம்வரை யுள்ளவிடம் பூலோகமெனப்படும். அந்த அவீசி யென்ற நரகத்திற்கு மேன் மேலுள்ள விடங்களில் முறையே மஹாகாலம், அம்பரீஷம், ரௌ ரவம், மஹாரௌரவம், காலஸூத்திரம், அந்ததாமிஸ்ரம், எனப்பெ யரிய ஆறு நரகங்க ளிருக்கின்றன. இவற்றுள் 1 வதான மஹாகால நரகமானது பூமியிலும், 2வதான அம்பரீஷ நரகமானது ஜலத் திலும், 3வதான ரௌரவ நரகமானது நெருப்பிலும், 4வதான மஹாரௌரவ நரகமானது வாயுவிலும், 5 வதான காலஸூத்திர நரகமானது ஆகாசத்திலும், 6வதான அந்ததாமிஸ்ர நரகமானது தமஸ் என்ற இருளிலும் நிலையையுடையன. அவீசியென்ற நரக மோ, எல்லாவற்றிற்கும் கீழ் மஹாமேருவின் கடைசி பாகத்தி லிருக்கின்றது. ஆகவே மஹாகாலம் முதல் அவீசி முடிய வுள்ள நரகங்கள் ஏழுவிதங்களாகின்றன. (இந்த 7 நரகங்களையே अपि च सप्त=(அபிசஸப்த)என்றதால் பிரும்ம ஸூத்திரத்திலும் உபதேசி த்திருக்கிறார்) இந்த நரகங்களில் தனது பாபகர்மபலனை யனுபவி ப்பதற்காகப் பாபிகளான பிராணிகள் ஜன்மத்தை யடைந்துபாப கர்மத்தின் பலனுண்டாகும் வரை அழியாத ஆயுளை யடைந்து பலானுபவ காலத்தில் சொல்லொணாத் துயரத்தை யனுபவிக்கின் றனர். பாபகர்மம் செய்யும் பொழுது சற்று இந்த நரகங்களைக் கவனித்திருப்பார்களானல் பாபச்செயல் செய்திருக்கமாட்டார். அப்பொழுது இந்த நரகத்தை யடைந்திருக் கவும் மாட்டார். பாபஞ் செய்யும் பொழுது நரகத்தைப் பற்றிய யோசனையே யில்

லாமல் செய்பவர்தான் பலானுபவகாலத்தில் தாபப்படுகின்றனர். இவ்விதமே.

पुण्यस्य फलमिच्छन्ति पुण्यं नेच्छन्ति मानवाः ।
न पापफलमिच्छन्ति पापं कुर्वन्ति यत्नतः ॥

"புண்ணிய பலனான சுகத்தை விரும்புகின்றனரேயன்றி புண்ணியத்தை மட்டும் செய்வதில்லை, பாபபலனான துக்கத்தை வெறுக்கின்றனர், ஆவலுடன் பாபத்தைமட்டும் செய்கின்றனர்" என்றதால் பெரியாருமுபதேசிக்கின்றனர். மேலும், மஹாதலம், ரஸாதலம், அதலம், சுதலம், விதலம், தலா தலம் பாதாளம் எனப் பெரிய ஏழுபாதாளங்களுமிருக்கின்றன. ஏழு தீவுகளுடன் கூடின இந்தப்பூமியானது எட்டாவதாக விருக்கின்றது.

இந்தப் பூமியினுடைய நடுவில் ஸுமேரு வென்ற சுவர்ண மலை யானது இருக்கின்றது. அம்மலைக்கு வெள்ளிமயமாயும், வைடூர்ய மயமாயும், ஸ்படிக மயமாயும் ஸ்வர்ணமயமாயும் உள்ள நான்கு கொடிமுடிகளுண்டு. அவற்றுள் வைடூர்ய ரத்தினத்தின் ஒளியால் ஆகாசத்தின் தென்பாகமானது கருநீலபுஷ்பத்தினிதழ் போன்று கறுப்பாகவே தென்படுகின்றது. கிழக்குப்பாகமானது வெளுப்பாகவும், மேற்குப் பாகமானது ஸ்வச்சமாகவும், வடபாகம் பொன்னிறமாகவும் காணப்படுகின்றது. இந்த மலையின் தென் பார்ச்வத்தில் ஒரு நாகை மரமிருக்கின்றது ஆனதுபற்றியே இந்தத் தீவமானது ஜம்பூத்வீபம் என்று சொல்லப்படுகின்றது. மேலும் சூரியனுடைய சஞ்சாரத்தை யொட்டி இந்தமலையை இரவும், பகலும் எப்பொழுதுமே ஒட்டிக்கொண்டே யிருப்பது போலத் தோற்றுகின்றது. அந்த மஹாமேருவுக்கு வடக்குதிக்கில், நீலநிறமுள்ளதும், வெண்ணிற முள்ளதுமான கொடிமுடிகளுள்ளவைகளும், இரண்டாயிர யோஜனை தூரமுள்ளவைகளுமான மூன்று மலைகளிருக்கின்றன. அம்மூன்று மலைகளுக்கும் இடையில் ஒவ்வொன்றும் ஒன்பது ஒன்பது ஆயிர யோஜன தூரமுள்ளவைகளான, ரமணகம், ஹிரண்மயம், உத்தாகுரு என்ற பெயருள்ளவை களுமான மூன்று வர்ஷங்கள் (பிரதேசங்கள்) இருக்கின்றன. மேலும் அந்த மஹாமேருவுக்குத் தெற்கில் இரண்டாயிரம் யோஜனை தூரமுள்ள வைகளான நிஷதம், ஹேம

கூடம், ஹிமாலயம், என்ற பர்வதங்களிருக்கின்றன. அவற்றினிடையில் ஒவ்வொன்றும் ஒன்பது ஒன்பது ஆயிர யோஜனை தூரமுள்ளவைகளும், ஹரிவர்ஷம், கிம்புருஷம், பாரதம், என்று பெயருள்ள வைகளுமான மூன்று வர்ஷங்கள் (பிரதேசங்கள்) இருக்கின்றன. மஹாமேருவுக்குக் கிழக்கில் பத்ராச்வம், மால்யவான் என்ற எல்லைகளிருக்கின்றன. மேற்கில் கேதுமாலம், கந்தமாதனம் என்ற எல்லைகளிருக்கின்றன. எல்லாவற்றிற்கும் நடுவில் இளாவிருதம் என்ற வர்ஷமிருக்கின்றது. மொத்தமான நூறுயிரயோஜனை தூரமும் மஹாமேருவின் ஒவ்வொருபக்கத்திலும் ஐம்பாதாயிரம் யோஜனை தூரமாகப் பிரிந்திருக்கின்றது. ஆகவே நூறுயிரயோஜனை தூரமுள்ளதான இந்த ஜம்பூத்வீபமானது அதைவிட இரண்டு மடங்கு அதிகமான, அதாவது: இருநூறுயிரயோஜனைதூரமுள்ள லவண (உப்பு) சமுத்திரத்தால் வட்டமாகச் சூழப்பட்டிருக்கின்றது.

இந்த ஜம்பூத்வீபத்திற்கு அடுத்தபடியில் சாகம் என்ற த்வீப மிருக்கின்றது. இந்த த்வீபமானது இருநூறுயிரம் யோஜனை தூரமுள்ளது. நானூராயிரம் யோஜனை தூரமுள்ளதும், கருப்பஞ்சார் போன்ற ஜலமுள்ளதுமான சமுத்திரத்தால் சூழப்பட்டிருக்கின்றதுடன் இந்த த்வீபத்தினிடையில் விசித்திரமான பலசிறுமலைகளால் அலங்கரிக்கப் பட்டதும், கடுகின் குவியல் போன்றதுமான அனேகம்மலைகளும் இருக்கின்றன. இதற்குப்பிறகு குசம் என்ற தீவும், அதற்கு அடுத்தபடி க்ரௌஞ்சம் என்றதீவும், அதற்கு அடுத்தபடி சால்மலம் என்ற தீவும், பிறகுகோமேதம் என்ற தீவும்,(இதையேப்லக்ஷம் என்றும் சொல்லுவதுண்டு.) அதற்கடுத்தபடி புஷ்கரம் என்ற தீவும் இருக்கின்றது. இந்தத் தீவுகள் ஒவ்வொன்றும் தனக்கு முன்னுள்ள தீவைவிட இரண்டு மடங்கு அதிகமான சுற்றளவுள்ளனவாயும், சுற்றளவைவிட இரண்டு மடங்கு அதிக நீளமுள்ள அவ்வவற்றிற்குச்சொல்லிய சமுத்திரத்தாற் சூழப்பட்டவைகளாயு மிருக்கின்றன. அத்துடன் குசத்வீபத்தைச் சுற்றி, ஸுரை போன்ற ஜலமுள்ள சமுத்திரமும், க்ரௌஞ்ச த்வீபத்தைச்சுற்றி நெய் போன்ற ஜலமுள்ள சமுத்திரமும், சால்மலத்வீப த்தைச் சுற்றித் தயிர் போன்று கட்

டியாய்த் தோய்ந்த ஜலமுள்ள சமுத்திரமும், கோமேதத்வீபத்தைச் சுற்றிப் பால் போன்ற ஜலமுள்ள சமுத்திரமும், புஷ்கர த்வீபத்தைச் சுற்றி நல்ல ருசியுள்ள ஜலம் நிறைந்த சமுத்திரமும் சூழ்ந்து கொண்டிருக்கின்றது. இவையாவும் முற்கூறிய ஏழு சமுத்திரங்களால் வட்டமாகச் சூழப்பெற்றும், லோகாலோகம் என்ற பர்வதத்தை பக்கவாட்டி லுடையவைகளாகவும், 50 கோடி யோஜனை தூரமுள்ளவைகளாகவு மிருக்கின்றன. இதுவறை கூறியுவை யாவும் தனித்தனி நிலைத்த அவயவ முள்ளவைகளாய் பிரும்மாண்டத்தில் அடங்கி யிருக்கின்றன. அந்தப் பிரும்மாண்டமானது ஆகாசத்திலுள்ள மின்னல் பூச்சி போல பிரதானத்தின் அவயவங்களாகி ஓரோரத்தி லடங்கி விடுகின்றது.

மேலும், பாதாளத்திலும், சமுத்திரத்திலும் முற்கூறிய பர்வதங்களிலும், அசுரர், கந்தர்வர், கின்னரர், கிம்புருஷர், யக்ஷர், ராக்ஷஸர், பூத, ப்ரேத, பிசாச, அபஸ்மார, அப்ஸரஸ், பிரும்ம ராக்ஷஸ, கூச்மாண்ட, விநாயகர் முதலியவர்கள் வாஸஞ் செய்கின்றனர். முற்கூறிய எல்லாத் தீவுகளிலும் புண்ணியாத்மாக்களான தேவர்களும், மனிதர்களும் வாஸஞ்செய்கின்றனர். பூமியின் நடுவிலிருக்கும் மஹாமேரு மலையானது தேவர்களுக்கு உத்தியான பூமிபோன்றது. அதில் மிச்ரவனம், நந்தனம், சைத்ரரதம், ஸுமானஸம், என்ற அழகிய தோட்டங்களிருக்கின்றன. "சுதர்மா" என்ற தேவஸபை யொன்றும், சுதர்சனம் என்ற பட்டினமும், வைஜயந்தம் என்ற பிராசாதமும் இருக்கின்றன. மேலும், கிரஹங்கள், நக்ஷத்திரங்கள், மற்றுமுள்ள தாரைகள் த்ருவசக்கிரத்தில் கட்டுண்டவைகளாய் வாயுவின் கதியை யனுசரித்து சஞ்சரிக்கின்றவை களாய் மஹாமேருவில் ஒன்றிற்கு மேல் மற்றொன்றாக மேல் மேலான விடங்களிலிருந்து கொண்டு ஆகாசத்தில் மேருவைச்சுத்தி வருகின்றன. இவ்விதம் மஹாமேருவின் மேலுள்ள பிரதேசத்திலிருக்கும் ஸ்வர்லோகத்தில் த்ரிதசர், அக்னிஷ்வாத்தர், யாம்யர், துஷிதர், அபரிநிர்மித வசவர்த்திகள், பரிநிர்மித வசவர்த்திகள், என்ற ஆறு தேவஜாதிகள் வாஸஞ் செய்கின்றனர். இவர்கள் யாவரும் ஸங்கல்ப மாத்திரத்தாலேயே எதையும் சாதித்துக் கொள்ளக் கூடியவர்களாகவும், அணிமாதி அஷ்டைசு

வரிய முள்ளவர்களாகவும், ஒரு கல்பம் வரை ஆயுளுள்ளவர்களா கவும், யாவராலும் பூஜிக்கத் தக்கவர்களாகவும், ஸ்திரீ சுகத்தில் அதிகம் பற்றுள்ளவர்களாகவும், மாதாபிதாக்களின் சேர்க்கை யில்லாமல் தனதிஷ்டப்படி உண்டாக்கிக் கொள்ளப்பட்ட தேஹ முள்ளவர்களாகவும், எவ்விதத்திலும் சிறந்தவர்களும், அனுகூலர் களுமான அப்ஸரஸ்திரீகளால் பணிவிடை செய்யப் பெற்றவர்க ளாகவும் இருக்கின்றனர்.

மஹர் லோகத்தில், குமுதர், ரிபு, ப்ரதர்த்தனர், அஞ்ஜனபர். பிரசிதாபர், என்ற ஐந்துவித தேவஜாதிகள் வசிக்கின்றனர். இவர் கள் ஆகாசாதி மஹாபூதங்களை வசமாக்கிக் கொண்டவர்களாக வும், (அதாவது: இவர்கள் விரும்புவதை யெல்லாம் மஹாபூதங்க ளே தருகின்றனவென்பதாம்) தியானமாத்திரத்தாலேயே சரீர புஷ்டியை யடைந்தவர்களாகவும் ஆயிரங்கல்பமா யுளுள்ளவர்களா கவுமிருக்கின்றனர்.

அதற்கடுத்துள்ள ஜனலோகத்தில் பிரும்மபுரோஹிதர், பிரும் மகாயிகர், பிரும்மமஹாகாயிகர், அமரர், என்றநால்வகை தேவகுப் பினர் வாசஞ்செய்கின்றனர். அவர்கள் யாவரும் மஹாபூதங்களை யும், இந்திரியங்களையும் எங்கெந்த விதமாக ஆகவேண்டுமென ஆக் ஞாபிக்கின்றனரோ அவ்விதமெல்லாம் அவைகளாகி இவர்களுக்கு வசப்பட்டுக் கிடக்கின்றன. அதுடன் இங்குள்ள ஒருவரைவிட மற்றவர் இரண்டுமடங்கு அதிகமான ஆயுளுள்ளவர்களாகவு மிருக்கின்றனர். அதற்கடுத்துள்ள தபோலோகத்தில், அபாஸ்வரர், மஹாபாஸ்வரர், ஸத்தியமஹாபாஸ்வரர், என்ற மூன்றுவிததேவ ஜாதிகள் வசிக்கின்றனர். அவர்கள் ஆகாசாதி மஹாபூதங்கள், இந்திரியங்கள், பிரகிருதி எல்லாவற்றையும் வசப்படுத்தினவர்க ளாகவும், ஒருவரை விட மற்றவர் இரண்டுமடங்கு அதிகமான ஆயுள்பெருக்கை யுடையவர்களாகவும், இருப்பதுடன் இவர்கள் யாவரும் தியானத்தினாலேயே சரீரபுஷ்டியைச் செய்து கொள்ளு கின்றவர்களாகவும், ஊர்த்துவ ரேதஸ்ஸுகளாகவும், மேலுள்ள எதையும் அறிவதில் தடையில்லாத அறிவை யுடையவர்களாக வும், தனக்குக் கீழுள்ள விடங்களில் நடப்பவை யாவையும் நன்கு தெரிந்து கொள்ளக் கூடியவர்களாகவும் இருக்கின்றனர், அதற்

கடுத்துள்ள ஸத்திய லோகத்தில், அச்யுதர் என்றும், சுத்தநிவாஸர் என்றும், ஸத்தியாபர் என்றும், ஸம்க்ஞாஸம்க்ஞிகள் என்றும் நால்வகை தேவவகுப்பினர் வசிக்கின்றனர். இவர்களுள் முதலாவதான அச்யுதர் ஸவிதர்க்கத் தியானஞ் செய்வதாலுண்டான சுகானுபவஞ் செய்கின்றவர்களாகவும், இரண்டாவதான சுத்த நிவாஸர் ஸவிசாரத் தியானஞ் செய்வதாலுண்டான சுகானுபவஞ் செய்கின்றவர்களாகவும், மூன்றாவதான ஸத்யாபர் ஆநந்த மாத்திர த்யானஞ் செய்வதாலுண்டான சுகானுபவஞ் செய்கின்றவர்களாகவும், நான்காவதான ஸம்க்ஞா ஸம்க்ஞி என்பவர் அஸ்மிதா மாத்திரத்தியானஞ் செய்வதாலுண்டான சுகானுபவஞ் செய்கின்ற வர்களாகவும் இருக்கின்றனர். ஆனல் இவர்கள் யாவரும் இந்த ஸர்க்கமுள்ளவரை ஆயுளுள்ளவர்களாகவு மிருக்கின்றனர்.

இதுவரை சொல்லிய வையாவும் த்ரைலோக்யத்திலேயே சேர்ந்தவைகளாகின்றன. இதையே ஏழுலோகங்களாகவும் சொல்லுவதுண்டு. இதுவரை சொல்லிய பிரும்ம லோகவாஸிகள் யாவரும்ஸம்ப்ரக்ஞாத ஸமாதிஜயத்தை யடைந்தவர்களே யாவர். அஸம்ப்ரக்ஞாத ஸமாதிஜய மடைந்தவர்களை முற்கூறிய லோக மத்தியில் சேர்ப்பதற்கில்லை. ஆகவே சூரியத்துவாரத்தில் முற்கூறியபடி ஸம்யமம் செய்யும் யோகிக்கு இதுவரை கூறிய லோகங்களின் க்ஞானமானது தெளிவா யுண்டாகி விடுகின்றது. இவ்விதம் கூறியதிலிருந்து வேறு எந்த விடத்தில் புத்தியைச் செலுத்தி ஸம்யமம் செய்தாலும் அங்குள்ளவை யாவையும் தெளிவாய் அறிந்துகொண்டு விடலாம் என்றேற்பட்டது. (எ—று)

(அ—கை) நக்ஷத்திரங்களைப் பிரித்தறிவதற்கு வேண்டிய ஸம்யமத்தை யுபதேசிக்கிறார்.

सू० ॥ चन्द्रे ताराव्यूहज्ञानम् ॥ २७ ॥

(ஸ—ரு) சந்த்ரே தாராவ்யூஹக்ஞானம் (27)

(ப—ரை) चन्द्रे=(சந்த்ரே) சந்திரமண்டலத்தில் [संयमात्=(ஸம்யமாத்) ஸம்யமஞ்செய்வதால்] ताराव्यूहज्ञानम्=(தாராவ்யூஹக்ஞானம்) நக்ஷத்திரங்களுடைய தனித்தனியான நிலையின் க்ஞானமானதுண்டாகின்றது.

(அ—கை) நக்ஷத்திரங்களின் சஞ்சாரத்தை யறிவதற்குபாயத்தை இதனாலுபதேசிக்கிறார்.

ஸூ० ॥ ध्रुवे तद्गतिज्ञानम् ॥ २८ ॥

(ஸூ) த்ருவே தத்கதி க்ஞானம் (28)

(ப—ரை) **ध्रुवे**=(த்ருவே) த்ருவமண்டலத்தில் ஸம்யமஞ்செய்வதால் **तद्गतिज्ञानम्**=(தத்கதிக்ஞானம்) அந்த நக்ஷத்திரங்களின் சஞ்சாரத்தைப் பற்றிய அறிவான துண்டாகின்றது.

(அ—கை) இதுவரை பாஹ்யமான ஸித்திகளுண்டாகும் முறையை யுபதேசித்து, இனி ஆந்தரமான ஸித்திகளுண்டாகும் முறையை யுபதேசிக்கத் தொடங்குகிறார்.

ஸூ० ॥ नाभिचक्रे कायव्यूहज्ञानम् ॥ २९ ॥

(ஸூ) நாபிசக்ரே காயவ்யூஹக்ஞானம் (29)

(ப—ரை) **नाभिचक्रे**=(நாபிசக்ரே) நாபிசக்கிரத்தில் ஸம்யமஞ்செய்வதால் **कायव्यूहज्ञानम्** = (காயவ்யூஹக்ஞானம்) சரீரத்தின் அமைப்பைப் பற்றிய அறிவான துண்டாகின்றது.

(தா—ம்) நாபிசக்கிரமென்பது சரீரத்தின் நடுப்பாகத்திலிருந்து கொண்டு உடல்முழுதும் பரவிநிற்கும் நாடிகளுக்கு ஆதாரமாகயிருப்பதால், அதில் ஸம்யமம் செய்வதால் சரீரத்தின் அமைப்பைப்பற்றிய தெளிவான க்ஞானமுண்டாகி விடுகின்றது.

(அ—கை) பசி, தாஹம் இரண்டையும் விலக்குவதற்குரிய ஸித்தியை இதனாலுபதேசிக்கிறார்—

ஸூ० ॥ कण्ठकूपे क्षुत्पिपासानिवृत्तिः ॥ ३० ॥

(ஸூ) கண்டகூபே க்ஷுத்பிபாஸா நிவிருத்தி:

(ப—ரை) **कण्ठकूपे**=(கண்டகூபே) உள்நாக்குக்குக்கீழ் கிணறு போன்றுள்ளப் பிரதேசமானது கண்டகூப மெனப்படும். அந்தக் கண்டகூபத்தில் ஸம்யமம் செய்வதால் **क्षुत्पिपासानिवृत्तिः** (க்ஷுத்பிபாஸாநிவிருத்தி:) பசி, தாஹம் ஆகிய இரண்டும் விலகிவிடுகின்றன.

(அ—கை) சித்தம் நிலைபெறு முபாய முபதேசிக்கப்படுகின்றது.

सू० ॥ कूर्मनाड्यां स्थैर्यम् ॥ ३१ ॥

(ஸூ) கூர்மநாட்யாம் ஸ்தைர்யம் (31)

(ப—ரை) **कूर्मनाड्याम्**=(கூர்மநாட்யாம்) கண்ட கூபத்திற்குக் கீழ் ஆமைவடிவமாயுள்ள நாடியானது கூர்மநாடி எனப்படும். அந்தக்கூர்மநாடியில் ஸம்யமம் செய்வதால் **स्थैर्यम्**=(ஸ்தைர்யம்) மனத்தின் அசைவற்றிருத்தலான துண்டாகின்றது.

(அ—கை) சித்தபுருஷர்களை நேரில் காண்பதற்கு வேண்டிய உபாயமுபதேசிக்கப் படுகின்றது—

सू० ॥ मूर्द्धज्योतिषि सिद्धदर्शनम् ॥ ३२ ॥

(ஸூ) மூர்த்தஜ்யோதிஷி ஸித்ததர்சனம் (32)

(ப—ரை) **मूर्द्धज्योतिषि**=(மூர்த்தஜ்யோதிஷி) பிரும்மரந்திரத்தில் ஸம்யமம் செய்வதால் **सिद्धदर्शनम्**=(ஸித்ததர்சனம்) சித்தபுருஷர்களின் தரிசனமான துண்டாகின்றது.

(அ—கை) ஊஹ மாத்திரத்தா லுண்டாகும் சித்தியை யுபதேசிக்கிறார்—

सू० ॥ प्रातिभाद्वा सर्वम् ॥ ३३ ॥

(ஸூ) ப்ராதிபாத்வா ஸர்வம் (33)

(ப—ரை) **प्रातिभात्**=(ப்ராதிபாத்) எவ்விதக் காரணத்தையும் எதிர் பாராமலும், முன்பின்னுலோசனை யின்றியும், திடீரென மனத்திலுண்டாகும் ஓர்விதக்ஞானம் ப்ரதிபா எனப்படும். அத்தகைய ப்ரதிபாவிஷயமான ஸம்யமத்தால் **सर्वम्**=(ஸர்வம்) எல்லாவிதமான லாபமுமுண்டாகின்றது.

(தா—ம்) சூரிய னுதயமாவதற்கு முன்னர் அருணன் உதயமாகவே அவனது ஒளியால் ஒருவாறு இருள் நீங்கினதும் உலகிலுள்ள ஸகல பதார்த்தங்களையும் எவ்விதம் பார்க்கின்றோமோ, அவ்விதமே விவேகக்கியாதி யென்ற சூரிய னுதயமாவதற்கு முன்னர், பின்னர்வரும் விவேகக்கியாதிக்கு சூசகமாக சித்தத்தில் திடீரென ஓர்வித அறிவுண்டாகின்றது. அந்த அறிவே பிரதிபை

யெனப்படும். இத்தகையப் பிரதிபையில் ஸம்யமம் செய்யும் யோகி யானவன் வேறுவிதமான ஸம்யமங்களி னுதவியின்றியே ஸர்வ பதார்த்தங்களையும் அறிந்து விடுகின்றான். (எ—று)

(அ—கை) சித்தத்தையும் அதிலுள்ள வாஸனைகளையும் அறிவதற்குபாயத்தை இதனாலுபதேசிக்கிறார்—

सू० ॥ हृदये चित्तसंवित् ॥ ३४ ॥

(ஸூ) ஹ்ருதயே சித்தஸம்வித் (34)

(ப—ரை) **हृदये**=(ஹ்ருதயே) சரீரத்திற்குள் மார்பில் தாமரை மொக்குபோன்று தலைகீழாகத் தொங்கும் மாம்ஸபிண்டம் ஹிருதய மெனப்படும். அந்தஹிருதயத்தில் ஸம்யமம் செய்வதால் **चित्तसंवित्** = (சித்தஸம்வித்) வாஸனையுடன் கூடின சித்தத்தினுடைய அறிவானது உண்டாகின்றது.

(அ—கை) ஜீவனை ஸாக்ஷாத்கரிப்பதற்குரிய ஸம்யமத்தை யுபதேசிக்கிறார்—

सू० ॥ सत्वपुरुषयोरत्यन्ताऽसंकीर्णयोः प्रत्ययाऽविशेषो भोगः परार्थात्स्वार्थसंयमात्पुरुषज्ञानम् ॥ ३५ ॥

(ஸூ) ஸத்வபுருஷயோ: அத்யந்தாஸங்கீர்ணயோ: ப்ரத்யயாவிசேஷோ போக: பரார்த்தாத் ஸ்வார்த்த ஸம்யமாத் புருஷக்ஞானம் (35)

(ப—ரை) **अत्यन्ताऽसंकीर्णयो:**=(அத்யந்தாஸங்கீர்ணயோ:) உண்மையில் வேறானவைகளான **सत्वपुषयो:**= (ஸத்வபுருஷயோ:) புத்தி ஆத்மா இவ்விரண்டி னுடையவும் **प्रत्ययाऽविशेष:**=(ப்ரத்யயாவிசேஷ:) உண்மையில் வேறென்ற க்ஞானமில்லாமை யானது **भोग:**=(போக:) போகமெனப்படும். **परार्थात्**=(பரார்த்தாத்) புருஷனுக்காக யேற்பட்ட அந்தப் போகத்தைக் காட்டிலும் [**अन्यस्मात्**=(அன்யஸ்மாத்) வேறானதான] **स्वार्थसंयमात्**=(ஸ்வார்த்தஸம்யமாத்) **स्वार्थ**=(ஸ்வார்த்த) சித்தஸ்வரூபப் பிரதிபிம்ப விஷயகமான **संयमात्**=(ஸம்யமாத்) ஸம்யமத்தினால் **पुरुषज्ञानम्**=(புருஷக்ஞானம்) ஜீவஸ்வரூப க்ஞானமான துண்டாகின்றது.

(தா—ம்) முக்குணவடிவமான புத்தியும், உண்மையில் குண ங்களின் சம்பந்தமற்ற புருஷனும் ஒன்றுக்கொன்று வேறுபட்ட ஸ்வரூபமுள்ளவர்களா யிருப்பினும் ‘உண்மையில் இவ்விரண்டும் வேறுபட்டவைகள்’ என்ற தோற்றமில்லாமையாலேயே ‘நான் சுகீ நான் துக்கீ’ என்று சுக, துக்கானுபவ ரூபமான போக முண்டாகின்றது. இந்த விடத்தில் புத்தியானது தனக்கென்று எவ்விதப் பிரயோஜனத்தையும் எதிர்பாராமல் புருஷனுன ஜீவ னுடைய போகம் அபவர்க்கம் இவ்விரண்டையுமே பிரயோஜன மாகக் கொண்டு தனதுவேலையைச் செய்கின்றது. ஆகவே புத்தி மூலமேற்படும் போகமானது புருஷனுடையதாகவே தாகுகின் றது. இங்கு புருஷார்த்த விஷயமாகச் சேஷ்டிக்கும் கண்ணுடி போல் ஸ்வச்சமான புத்தியில் சித்சக்திரூபனுன புருஷனுடைய பிரதிபிம்பமேற்பட்டு புத்தியால் காண்பிக்கப்படும் விஷயங்களைப் புருஷன் அனுபவிக்கிறுன். ஆனது பற்றியே புத்தியைப் ‘பரார்த் தம்’ என்றும் புருஷனை ‘ஸ்வார்த்தன்’ என்றும் சொல்லுகிறேம் இந்த விடத்தில் புத்திதத்துவத்தில் பிரதிபிம்பத்தை யடைந்த புருஷனுடைய ஸ்வரூபத்தில் ஸம்யமம் செய்வதே ஸ்வார்த்த ஸம்யமமெனப்படும். இவ்வித ஸ்வார்த்த ஸம்யமத்தால் உண் மையில் புத்திமுதலிய வற்றின் பிரதிபிம்பம் முதலிய சம்பந்த மற்ற புருஷனுடைய க்ஞானம் உண்டாகி விடும் என்றேற்பட் டது. (எ—று).

(அ—கை) 35வது சூத்திரத்தா லுபதேசிக்கப்பட்ட ஸம்யம மூலமுண்டாகும் வேறு பலனும் இந்தச் சூத்திரத்தா லுபதேசிக் கப்படுகின்றது—

ஸூ० ॥ ततः प्रातिभश्रावणवेदनाऽऽदर्शाऽऽस्वादवार्ता जायन्ते

(ஸூ) ததः ப்ராதிப ச்ராவண வேதன ஆதர் ச ஆஸ்வாத வார்த்தாः ஜாயந்தே (36)

(ப—ரை) **ततः**=(ததः) அப்பியாஸத்திலிருந்து வரும் புருஷ ஸம்யமத்தினின்றும் **प्रातिभ...र्ताः**=(ப்ராதிப...ர்த்தாः) **प्रातिभ**=(ப்ரா திப) 33வது சூத்திரத்திற் சொல்லிய க்ஞானமும், **श्रावण**=(ச்ராவ ண) சுரோத்திரேந்திரியத்தால் எவ்வித சப்தத்தையும் கேட்கு

தலும் **वेदना**=(வேதந) த்வகிந்திரியத்தினல் எவ்வித் தொடுகை யையும்அறிதலும், **आदर्श**=(ஆதர்ச) சக்ஷுரிந்திரியத்தால் எவ்வித ரூபத்தையும் பார்க்குதலும், **आस्वाद**=(ஆஸ்வாத) ரஸனேந்திரி யத்தால் எவ்வித ருசியையு மறிதலும, **वार्ता:**=(வார்த்தா:)கிராணே ந்திரியத்தால் எவ்வித மணத்தையும் அறிதலும் **जायन्ते**=(ஜாயந் தே) உண்டாகின்றன.

(தா–ம்) சரீரத்திலுள்ள த்வக், சக்ஷுஸ், சுரோத்ர,ஜிஹ்வா கிராணம் என்ற இவ்வைம்புலன்களாலும் இவ்வுலகிலுள்ள அத னதன் விஷயங்களை மட்டும் அறிதல் இயல்பாயினும் முற்கூறிய புருஷஸம்யமம் செய்து ஸமாதிகலைந்து வியுத்தானதசையிலுங் கூட, மேற்கூறிய இந்திரியங்களைக் கொண்டே தேவாதி லோகங் களிலுள்ள சப்தாதி விஷயங்களையும் சுலுவி லறிந்துவிடக்கூடிய திறமை யுண்டாகின்ற தென்பது இதனு லேற்பட்டது. (எ–று).

(அ–கை) இதுவரை கூறிய சித்திகளிலிருந்தே யோகியான வன் தான் அடைய வேண்டியவையாவையும் அடைந்தவனுக ஆகக்கூடும் என்ற சங்கை நிகழவே அச்சங்கையை விளக்க வேண்டி இதுவரை கூறிய ஸமாதியின் மூலமேற்படும் பயனின் னது தானென்பதை உபதேசிக்கிறார்—

सू० ॥ ते समाधावुपसर्गा व्युत्थाने सिद्धयः ॥३७॥

(ஸூ–ம்) தேஸமாதௌ உபஸர்க்கா: வியுத்தா னேஸித்தய: (37)

(ப–ரை) **व्युत्थाने**=(வியுத்தானே) ஸமாதி நிலைகலைந்து வெளி வந்த பொழுது ஏற்படும் **सिद्धयः**=(சித்தய:) இதுவறை கூறிய சித் திகள் [**या:**=(யா:) எவைகளுண்டோ] **ते**=(தே) அவைகள் **समाधौ**= (ஸமாதௌ) நிர்விகல்ப ஸமாதிவிஷயத்திற் **उपसर्गा:**=(உபஸர்க்கா:) விரோதிகளாக [**भवन्ति**=(பவந்தி) ஆகின்றன.]

(தா–ம்) இதுவரை கூறிய சித்திகளைக் கொண்டு யோக சாஸ்திரத்திற் சொல்லிய விஷயங்கள் யாவும் உண்மையானவை கள் என்று நம்பி பரமப்பிரயோஜனமான நிர்விகல்பஸமாதியில் பாடுபடவேண்டுவது மிகவும் அவசியமானது. சாஸ்திரத்திற்

சொல்லி யிருப்பதற்காக வேண்டி- இந்தச் சித்திகளிலேயே நின்று விடுவதானது நிர்விகல்பசமாதி யேற்படுவதற்குத் தடையாக ஆகிவிடுகின்றது. ஆகவே இதுவரை கூறிய ஸமாதியிலும் ஆசையை யொழித்து நிர்விகல்ப ஸமாதிவிஷயத்தில் பாடுபடவேண்டுவது அவசியமான தென்றேற்பட்டது. (எ—று)

(அ—கை) இதுவரை ஸம்யமத்தினின் றுண்டாகும் ஆத்ம தர்சனம் வரையுள்ளக் ஞானரூபமான விபூதியானது உபதேசிக்கப்பட்டது. இனி கிரியாரூபமான சித்தியை உபதேசிப்பாக் தொடங்கி பரசரீரப் பிரவேசரூபமான சித்தியை யடைவதற்குபாயத்தை இதனுலுபதேசிக்கிருர்—

सू० ॥ बंधकारणशैथिल्यात्प्रचारसंवेदनाच्च चित्तस्य परशरीरावेशः ॥३८॥

(ஸூ) பந்தகாரண சைதில்யாத் ப்ரசாரஸம்வேதனாச்ச சித்தஸ்ய பரசரீராவேச: (38)

(ப—ரை) **बंधकारणशैथिल्यात्**= (பந்தகாரணசைதில்யாத்) எங்கும் பரவிநிற்கும் சித்தத்திற்கு தனது சரீரமாத்திரத்தில் நிற்றலானது பந்தமெனப்படும். அத்தகைய **बंध**= (பந்த) பந்தத்திற்கு **कारण** = (காரண) காரணமான தர்மாதர்மங்களுக்கு **शैथिल्यात्**= (சைதில்யாத்) ஸம்யமமூலம் தளர்ச்சி யேற்பட்டிருப்பதினின்றும் **प्रचारसंवेदनाच्च**=(ப்ரசாரஸம்வேதனச்ச) **प्रचार**= (ப்ரசார) நாடிகளில் **संवेदनाच्च**=(ஸம்வேதனச்ச) ஸம்யமத்தினுலும் **चित्तस्य**= (சித்தஸ்ய) மனத்திற்கு **परशरीरावेशः**= (பரசரீராவேச:) தனது சரீரத்தை விடப்புதிதான வேறுயுள்ள சரீரப்பிரவேசமானது [**भवति**=(பவதி) உண்டாகின்றது]

(தா—ம்) சித்தமானது இயற்கையில் வியாபகமா (எங்கும் நிறைந்தது) யினும் அந்தந்த ஜீவர்களின் தர்மாதர்மம் காரணமாய் அந்தந்த சரீரத்தில் மட்டும்நிலையை யடைந்திருக்கின்றது. இதுவரை கூறிய ஸம்யமத்தால் பந்தகாரணங்களான அந்தக்கர்மங்கள் தளர்ச்சியை யடைந்து விடுகின்றன. மேலும் நாடிகளில் செய்தஸம்யமத்தால்சித்தத்தின்ஸஞ்சாரஸ்தானமும்அறியப்பட்டு

விடுகின்றது. ஆகவே பந்தப்படுத்தும் கர்மங்கள் தேய்ந்ததும், தனது ஸஞ்சாரஸ்தானமான நாடிகளைப் பற்றிய தெளிவான க்ஞா முமுண்டாகவே சித்தமானது இன்னிலையில் புதிதாய் வேறெந்த சரீரத்திலும் சுலுவில் பிரவேசத்தை யடைகின்றது. இவ்விதம் சித்தம் பிரவேசத்தை யடைந்ததும், சித்தாதீனமான பிராணன், இந்திரியம் இவைகளும் பிரவேசத்தை யடைந்து விடுகின்றன. இதுவே பரசரீராவேசம் என்ற சித்தியாகும். (எ—று)

(அ—கை) உதானம் என்ற வாயுஜயத்தாலுண்டாகும் ஜலம் முதலியவற்றில் ஸம்பந்தமில்லாமை, ஆகாசகமனம், முதலிய சித்திகளை இதனுலுபதேசிக்கிறுர்—

सू०॥ उदानजयाज्जलपङ्ककण्टकादिष्वसंग उत्क्रान्तिश्च॥ ३९ ॥

(ஸூ) உதானஜயாத் ஜலபங்ககண்டகாதிஷு அஸங்க: உத்க்ராந்தி:ச (39)

(ப—ரை) **उदानजयात्**= (உதானஜயாத்) உதானம் என்ற வாயுவின்ஜயத்தால் **जलपङ्ककण्टकादिषु**=(ஜலபங்ககண்டகாதிஷு) ஜலம் சேறு, முள் முதலியவற்றில் **असंगः**= (அஸங்க:) ஸம்பந்தமின்மையும் **उत्क्रान्तिश्च**= (உத்க்ராந்தி:ச) ஆகாசகமனமும் உண்டாகின்றது.

(தா—ம்) இந்திரியங்களுடைய விருத்தியானது பாஹ்யமென்றும், ஆப்யந்தரமென்றும் இருவகைப்படும். அவற்றுள் பாஹ்ய விருத்தியானது ரூபம், சப்தம் முதலியவிஷயங்களைப் பற்றிய அறிவை யுண்டாக்குவதாக இருக்கின்றது. ஆப்யந்தரவிருத்தியானது சரீரத்திலுள்ள வாயு மூலமேற்படுகின்றது. இதிலிருந்து ஜீவனத்திர்க்கு நிமித்தமான பிரயத்னரூபமாகவுள்ளது எதுவோ அதுவே ஆப்யந்தரவிருத்தி யென்றேற்பட்டது. இந்த ஆப்யந்தரவிருத்தியானது எல்லா இந்திரியங்களுக்கும் பொதுவாயுள்ளது. ஏனெனில், இந்த விருத்தியிருக்கும் பொழுது இந்திரியங்களின் பிரவிருத்தி யிருப்பதும். இந்தவிருத்தியில்லாவிடில் அவற்றின் பிரவிருத்தியில்லாதிருப்பதுமே அதன் காரணமாகும். இவ்விதம் இந்திரியப் பிரவிருத்திக்குக் காரணமான வாயு

விருத்தியானது பிராணன், அபானன், வியானன், உதானன் ஸமானன்என ஐந்து விதமாக யிருக்கின்றது. அவற்றுள் மூக்கின் நுனிமுதல் ஹிருதயம் வரையுள்ள விருத்தி பிராணன் எனப்படும். ஹிருதயம் முதல் நாபிவரை யுள்ளது ஸமானன் எனப்படும். இந்த விருத்தியே உட்கொண்ட ஆகாரத்தை ரக்தமாக்கு கின்றது. நாபிமுதல் பாததலம் வரையுள்ளது அபானன் எனப்படும். இதுவே சரீரத்திலுள்ளமலம் முதலியவற்றை வெளிப்படுத்து கின்றது. மூக்கின் நுனிமுதல் சிரஸ்வரை யுள்ள விருத்தியானது உதானன் எனப்படும். இவ்விருத்தியே உயரக்கிளம்புவதற்கு ஹேதுவாகின்றது. ஹிருதயம் முதல் சிரஸ்வரை யுள்ளது உதான விருத்தியென்றும் வேறு கிரந்தத்திற்சோல்லப்பட்டிருக்கிறது. தேஹம் முழுவதிலும் நிறைந்து நிற்கும் விருத்தி வியானன் எனப்படும். இந்த எல்லாவிருத்திகளுக்குள்ளும் பிராண விருத்தியே சிறந்ததாகவாகும். ஆகவே இந்த ஐந்துவிதமான விருத்திகளுக்குள் உதானவிருத்தியை ஸம்யமத்தால் ஜயித்தவனுக்கு ஜலம், பங்கம் (சேறு) முள்முதலியவற்ருல் எவ்விதப்பிரதிபந்தமு மேற்படுவதில்லை. அதாவது: ஜலம், சேறு, முள் முதலியவற்றிலும் பூமியில் நடப்பது போலவே நடந்து செல்லும் திறமையுண்டாகின்றது என்பதாம். மேலும் மரண காலத்தில் அர்ச்சிராதி மார்க்கவழியாக மேலான லோகங்களை யடையும் சக்தியும் உண்டாகின்றது. இந்த விடத்திலுள்ள உத்க்ராந்தி,என்றபதத்திற்கு "**स्वेच्छयामरणञ्चलभतइत्यर्थः**=தனதிஷ்டப்படிமரணத்தையும் அடைகிருன் என்பது பொருள்" எனமணிப்பிரபை என்ற வியாக்கியானத்திற் சொல்லப்பட்டிருக்கின்றது.

(அ-கை) அக்னிபோல் ஜ்வலிப்பதற்குரிய ஜ்வலனம் என்ற சித்தியை இதனுலுபதேசிக்கிருர்—

सू० ॥ समानजयाज्ज्वलनम् ॥ ४० ॥

(ஸூ) ஸமானஜயாத் ஜ்வலனம் (40)

(ப-ரை) **समानजयात्**=(ஸமானஜயாத்) ஸம்யம மூலமேற்படும் ஸமானவாயு ஜயத்தினின்றும் **ज्वलनम्**=(ஜ்வலனம்) சரீரத்தின் ஜ்வலனமானது [**भवति**=(பவதி) உண்டாகின்றது.]

(தா—ம்) ஸ்மானன் என்ற வாயுவை ஸம்யமத்தால் தன்வசமாக்கி விட்டால், நாபிசக்கிரத்தின் ஸமீபத்திலிருக்கும் அக்னியால் தன்து சரீரத்தையே எரித்துக் கொண்டுவிடலாம். **सती सती योगविसृष्टदेहा तां जन्मने शैलवधूंप्रपेदे** "தாக்ஷாயணி யானவள் தன்து தகப்பனால் அவமதியை யடைந்த ஸந்தர்ப்பத்தில் யோகாக்கினியால் தன்து பழைய சரீரத்தை நீக்கி புதியசரீரத்தை யடைவதற்காக பர்வதராஜனின் பார்யையான மேனுதேவியை வந்தடைந்தாள்" என்று காளிதாஸன் கூறியிருப்பதும் மேற்கூறிய சித்தியையே குறிப்பிடுகின்றது. (எ-று)

(அ—கை) திவ்யசுரோத்திரம் முதலியவற்றை யடைவதற்குரிய உபாயத்தை இதனாலுபதேசிக்கிறார்.

सू० ॥ श्रोत्राकाशयोस्संबंधसंयमाद्दिव्यं श्रोत्रम् ॥ ४१ ॥

(ஸூ) ச்ரோத்ராகாசயோஸ் ஸம்பந்த ஸம்யமாத்திவ்யம் ச்ரோத்ரம் (41)

(பதை) **श्रोत्राकाशयोः** (ச்ரோத்ராகாசயோ:) **श्रोत्र** (ச்ரோத்ர)=சுரோத்திரம் என்ற இந்திரியம் **आकाश** (ஆகாச)=ஆகாசம் இவற்றின் **संबंधसंयमात्** (ஸம்பந்தஸம்யமாத்) **संबंध** (ஸம்பந்த)=சேர்க்கையை **संयमात्** (ஸம்யமாத்)=தாரணாதிகளால் ஸாக்ஷாத்கரிப்பதால் **श्रोत्रम्** (ச்ரோத்ரம்)=சுரோத்திரேந்திரியமானது **दिव्यम्** (திவ்யம்)=மறைந்ததாயும், தூரத்திலிருப்பதாயும், ஸூக்ஷ்மமாயுமிருக்கின்ற சப்தத்தைக் கிரஹிக்கும் திறமையாகிற திவ்யத்வமுடையதாக [**भवति** (பவதி)=ஆகின்றது.]

(தா—ம்) சுரோத்திரேந்திரியமானது அஹங்காரத்தின்விகாரமாயிருந்த போதிலும் அதற்கு, பிராணிகளின் காது என்ற மாம்ஸபிண்டமாகிற உபாதியிலடங்கிய ஆகாசமானது ஆதாரமாகின்றது. காது என்ற உபாதி ஒழுங்காயிருத்தலையும், கெட்டிருத்தலையுமனுஸரித்து சுரோத்திரேந்திரியத்திற்கும் உபகார அபகாரங்கள் காணப்படுவதே மேற்கூறியபடி அங்கீகரிப்பதில் காரணமாகும். இவ்விதமே அஹங்காரத்தின் விகாரமான கிராணம் ரஸனம், த்வக், சக்ஷுஸ் என்ற இந்திரியங்களுக்கு முறையே பிரு

திவீ, ஜலம்,வாயு, தேஜஸ் என்ற பூதங்கள் ஆதாரங்களாகின்றன. இவ்விதமே அந்தந்தப்பூதங்கள் அந்தந்த இந்திரியங்களா லறியப் படும் குணங்களுக்கு மாதாரங்களாகின்றன. அதாவது: சப்தங் களுக்கு ஆகாசமும், கந்தத்திற்குப் பிருதிவியும், ரஸத்திற்கு ஜலமும், ஸ்பர்சத்திற்கு காற்றும், ரூபத்திற்கு தேஜஸ்ஸும் ஆதாரங்களாகின்றன. இவ்விதம் அந்தந்த இந்திரியங்கள் அவ் வவற்றால் கிரஹிக்கப்படும் விஷயத்துடன் ஸமாநாதிகரணமாய் (ஒரே ஸ்தானத் திலிருப்பதாய்) இருப்பதாலேயே அந்தந்த குணங்களின் உதவியால் அந்தந்த இந்திரியங்கள் வெளியிலுள் ள பிருதிவீ முதலியவற்றி லிருக்கின்ற சப்தம் முதலியவற்றைக் கிரஹிக்கின்றன. பாஹ்யேந்திரியங்களுள் அஹங்காரத்தின் விகாரமான சுரோத்திரம் என்ற இந்திரியமானது, இரும்பானது அயஸ்காந்த மணியால் இழுக்கப் படுவது போல பேசுகிறவனின் முகத்திலிருக்கும் சப்தத்தால் இழுக்கப்பட்டதாய்க்கொண்டு தன து விருத்தியின் கிரமத்தால் பேசுகிறவனின் முகத்தையடைந்து அங்கிருக்கின்ற சப்தத்தைக் கிரஹிக்கின்றது. இவ்விதம் சுரோத் திரேந்திரியமானது* சப்தமிருக்குமிடம் சென்று கிரஹிப்பதாயங் கீகரித்த படியாலேதான் "அந்தவிடத்தில் சப்தமுண்டாயிற்று" "இந்தவிடத்தில் சப்தமுண்டாயிற்று" என்று தேசம் திக்கு முதலியவற்றுடன் கூடினதாய் ஏற்படும் சப்தக் கிரஹணமானது பொருத்த முள்ளதா யாகின்றது. இதிலிருந்து சுரோத்திர மிருக்கு மிடத்திற்கு சப்தம் வருகின்றது என்று சொல்லும் தார்க்கிகர் முதலிய வாதிகளின் மதம் அனுபவவிருத்தமான தென்பது வாசஸ்பதிமிச்ரரின் கொள்கை. தார்க்கிகர் முதலி யோர் சொல்லுகிறபடியே தான் அனுபவமிருக்கின்றது.

ஆகவே சுரோத்திரம், சப்தம் இவ்விரண்டிற்கும் ஆதாரமா யிருத்தல் ஆகாசலக்ஷணம் என்றேற்பட்டது. இவ்விதமே அனா வரணமும் (இடைவெளியும்) ஆகாசத்தின் லக்ஷணமாகும். அதா

*சுரோத்திரேந்திரிய மானது சப்தமிருக்குமிடஞ் செல்வதாக வா சஸ்பதி மிச்ரர் தமது உரையில் எழுதியிருக்கிறாராயினும் சப்தமான து சுரோத்திரேந்திரியத்தினிடம் வருகின்றதெனச் சொல்லுவது தான் பொருத்தமானது என்பது நமது அபிப்பிராயம்.

வது: உலகிலுள்ள ஒவ்வொருவஸ்துவும் இடைவெளியுள்ளதாக வே இருக்கின்றது. இவ்விதமிடை வெளியை ஒவ்வொருவஸ்து விலு மங்கீகரிக்காவிடில் ஊசியினுலும் ஒருவஸ்துவைப் பேதிக்க முடியாமை ஏற்பட்டு விடும். அவ்விடைவெளியை மூர்த்தத்தி ரவியத்தின் (பிருதிவீ முதலியவற்றின்) அபாவமாக (இல்லாமை ரூபமாகச்) சொல்ல வியலாது. ஏனெனில்—அபாவம் எனத்தனி யாய் ஒரு வஸ்துவை யே அங்கீகரிப்பதில்லை என்பது பற்றியே என்க. மேலும் அபாவம் என்பதை அங்கீகரித்தாலும் அதுவும் ஓர்விஜாதிய திரவியத்தை யாச்ரயித்திருப்பதாகவே அங்கீகரிக்க நேரிடும். அவ்விதமாயினும் அத்தகைய விஜாதீயதிரவிய மாக ஆகாசத்தை ஒப்பியே தீரவேண்டியதாய் ஏற்படும். மேலும் வஸ் துக்களிலிருக்கும் இடைவெளியை புருஷனுல் செய்யப்பட்டதா கவும் சொல்லவியலாது. ஏனெனில் புருஷன் பரிணுமமற்றிருப் பது பற்றியே என்க. ஆகையால் சப்த தந்மாத்திரையின் பரி ணுமவிசேஷமான ஆகாசமே இடைவெளியை வஸ்துக்களில் செய்வதாக வாகின்றது. ஆகாசம் தான் அந்தந்த விஜாதீய உபா திஸம்பந்தத்தால் திக் என்ற வியவஹாரத்தையு மடைகின்றதே யன்றி ஆகாசத்தைவிட திக்என்று தனியே ஒருதிரவியம் கிடை யாது. இடைவெளி என்பது எங்கும் காணப்படுவதால் ஆகாசம் விபுவாக வாகின்றது. அதாவது: எங்கு மிருக்கின்ற வஸ்துவாக வாகின்றது. ஆகவே இத்தகைய சுரோத்திரம், ஆகாசம் இவற் றின் ஸம்பந்தத்தை ஸம்யமத்தால் ஸாக்ஷாத்கரித்து விட்டால் அவனுடைய சுரோத்திரேந்திரியமானது தூரதேசத்திலிருக்கும் ஸ்தூலசப்தம் ஸூக்ஷ்மசப்தம் முதலியவற்றைக் கிரஹிப்பதற் குத்தகுதியுள்ள தாயிருத்தல் என்ற திவ்யத்வத்தை யடைந்து விடுகின்றது.

இங்கு **श्रोत्राकाशयोस्संबंधसंयमात्** என்று கூறியதை உபலக்ஷ ணமாக வைத்துக்கொண்டு த்வக்வாதம், சக்ஷுஸ் தேஜஸ், ரஸனு ஜலம், கிராணம், பிருதிவீ, இவற்றின் ஸம்பந்தத்தை ஸம் யமத்தால் ஸாக்ஷாத்கரித்து விட்டால் மேற்கூறிய இந்திரியங்க ளுக்கு வெகு தூரத்திலிருக்கும் ஸ்பர்சம் முதலியவற்றைக் கிர

ஹிப்பதற்குத் தகுதியாயிருக்கும் தன்மை என்ற திவ்யத்வமானது உண்டாகின்றது என்றும் கண்டு கொள்ளவேண்டும்.

(அ—கை) ஆகாசகமனத்தை அடைவதற்குரிய உபாயத்தை இதனுலுபதேசிக்கிருர்.

सू० ॥ कायकाशयोः संबंधसंयमाल्लघुतूलसमापत्तेश्चाऽऽकाशगमनम् ॥ ४२ ॥

(ஸூ) காயாகாசயோ: ஸம்பந்தஸம்யமாத் லகுதூலஸமாபத்தேச்ச ஆகாசகமனம் (42)

(ப—ரை) **कायाकाशयोः** (காயாகாசயோ:)=சரீரம் ஆகாசம் இவற்றினுடைய **संबंधसंयमात्** (ஸம்பந்த ஸம்யமாத்)=ஸம்பந்தத்தில் ஸம்யமம் செய்வதாலும், **लघुतूलसमापत्तेश्च** (லகுதூலஸமாபத்தேச்ச)=மிகவும் மெல்லியதான பஞ்சு முதலியவற்றில் தாரணைத்யான ஸமாதிகளாலுண்டான லகுத்வம் என்ற குணத்தின் ஸாக்ஷாத்காரத்தினுலும் **आकाशगमनम्** (ஆகாசகமனம்)=ஆகாசத்தில் ஸஞ்சரித்தலானது [**भवति** (பவதி)=உண்டாகின்றது.]

(தா—ம்) இடைவெளியில்லாத விடத்தில் சரீரத்திற்கு ஸ்திதியானது ஸம்பவிக்காதானது பற்றி 'எந்தெந்த விடத்தில் சரீரமிருக்குமோ அந்தந்த விடங்களில் ஆகாசமு மிருக்கும்' என்று சரீரத்திற்கும் ஆகாசத்திற்கும் வியாப்தி என்ற ஸம்பந்தமிருக்கின்றது. அந்த ஸம்பந்தத்தில் தாரணை, த்யான ஸமாதிகளைச் செய்து ஸாக்ஷாத்கரிப்பவனுக்கு பக்ஷிகளைப் போல் ஆகாசத்தில் ஸஞ்சரித்தலானது உண்டாகின்றது. அல்லது மிகவும் மெல்லியதான பஞ்சு முதல் பரமாணுவரையுள்ள வஸ்துக்களில் ஸம்யமம் செய்து லகுத்வம் என்ற குணத்தை ஸாக்ஷாத்கரிப்பதினின்றுவது ஆகாசகமனமுண்டாகின்றது. (எ—று)

(அ—கை) பரசரீராவேசத்திற்குரிய மற்றொரு ஸம்யமத்தையும், க்லேசம் கர்மம், விபாகம் இவற்றின் நாசத்திற்குச் சாதனமான ஸம்யமத்தையு மிதனுலுபதேசிக்கிருர் :—

सू० ॥ बहिरकल्पिता वृत्तिर्महाविदेहा ततः प्रकाशावरणक्षयः ॥ ४३ ॥

(ஸூ-ம்) பஹிரகல்பிதா வ்ருத்திர்மஹாவிதேஹா தத: ப்ரகாசாவரணக்ஷய: (43)

(ப-ரை) [**मनसः** (மனஸ:)=மனத்தினுடைய] **बहिः** (பஹி:)= சரீரத்திற்கு வெளியில் ஏற்பட்ட **अकल्पिता** (அகல்பிதா)=அகல்பிதை என்ற **वृत्तिः** (வ்ருத்தி:)=விருத்தியானது **महाविदेहा** (மஹாவிதேஹா)=மஹாவிதேஹா எனப்படும். **ततः** (தத:) அந்த மஹாவிதேஹா என்ற சித்தியால் **प्रकाशावरणक्षयः** (ப்ரகாசாவரணக்ஷய:)= ப்ரகாசஸ்வபாவமுள்ள புத்திஸத்துவத்தினுடைய ஆவரணமான கிலேசம், கர்மம், ஆசயம் இவற்றின் நாசமானது [**भवति** (பவதி)= உண்டாகின்றது.]

(தா-ம்) சரீரத்திற்கு வெளியில் மனத்திற்கு விருத்தி ஏற்படுதல் விதேஹதாரணை எனப்படும். அந்த விதேஹதாரணையானது மனத்திற்கு சரீரஸம்பந்தத்துடன் கூடியிருந்தவிருக்கும் பொழுது, ஏற்படுமானால் அது கல்பிதா எனப்படும். அதாவது: சரீரத்தில் நான் என்ற எண்ணமிருக்கும் பொழுதே எனது மனதானது பாஹ்யவஸ்துக்களில் விருத்தியை யடையட்டும் என்ற ஸங்கல்பத்தை முன்னிட்டு ஏற்படும் விருத்தியானது கல்பிதா எனப்படும். இதுவே விதேஹதாரணை எனப்படும். சரீரத்தில் நான் என்ற புத்தியானது விலகிவிட்டால் சரீரஸம்பந்தம் ஸங்கல்பம் இவற்றை எதிர்பாராமலே மனத்திற்கு வெளியில் விருத்தி யுண்டாகின்றது. இந்த விருத்தியே அகல்பிதா என்றும், மஹாவிதேஹா என்றும் சொல்லப்படும். இந்த மஹாவிதேஹா என்ற சித்தியால் யோகிகள் பரசரீரத்திற்குள் பிரவேசிக்கின்றனர். மேலும், பிரகாசஸ்வபாவமுள்ள புத்திஸத்துவத்தை மறைக்கின்ற ரஜஸ் தமோ மூலகமான *கிலேசம், கர்மம், ஆசயம் இவற்றின் நாசமானது ஏற்படுகின்றது. அதனால் ஸர்வக்ஞனாயிருக்கும் தன்மை ஏற்படுகின்றது. (எ-று)

---

* கிலேசம், கர்மம், ஆசயம் இவற்றின் ஸ்வரூபத்தை 1-வது பாதம் 24-வது சூத்திர உரையிற் பார்க்க.

(அ—கை) கிராஹ்யஸம்யமத்தாலுண்டாகும் சித்தியை இத னுலுபதேசிக்கிருர்.

सू०॥ स्थूल स्वरूप सूक्ष्माऽन्वयाऽर्थवत्वसंयमाद्भूतजयः ॥४४॥

(ஸூ) ஸ்தூல ஸ்வரூப ஸூக்ஷ்மாந்வயார்த் தவத்வஸம்யமாத் பூதஜய: (44)

(ப—ரை) **स्थूल...त्** (ஸ்தூல...த்) ஸ்தூலம், ஸ்வரூபம், ஸூக்ஷ்மம், அந்வயம், அர்த்தவத்வம் இவற்றில் ஸம்யமம் செய்வதால் **भूतजय:** (பூதஜய:) பூதங்களின் ஜயமானது [**भवति** (பவதி) உண் டாகின்றது.]

(தா—ம்) பிருதிவீ, ஜலம், தேஜஸ், வாயு, ஆகாசம் என்ற 5 பூதங்களில் ஒவ்வொன்றிற்கும் ஐந்தைந்துவிதமான ஸ்வரூபங்க ளிருக்கின்றன. அவையாவன—(1) ஸ்தூலம் (2) ஸ்வரூபம் (3) ஸூக்ஷ்மம் (4) அந்வயம் (5) அர்தவத்வம் இவைகளே யாம். அவற்றுள் சப்தம் முதலிய விசேஷங்களுடனும் ஆகாரம் முதலியதர்மங்களுடனும் கூடிய அவயவிவஸ்துவானது ஸ்தூலம் எனப்படும். ஷட்ஜம், ரிஷபம், காந்தாரம், முதலிய த்வனிகளும் சீதம், உஷ்ணம் முதலியஸ்பர்சங்களும், கருப்பு மஞ்சள் முதலிய ரூபங்களும் உவர்ப்பு, தித்திப்பு முதலிய ரஸங்களும், நல்ல வாஸனை கெட்டவாஸனை என்ற கந்தங்களும், பெயர், ஸ்வரூ பம், கார்யம் இவற்ருல் ஒன்றை விடமற்றவைகள் வேறுபட்ட வைகளாகின்ற படியால் விசேஷங்கள் எனப்படுகின்றன. விசே ஷங்க ளெனப்படும் சப்தம், ஸ்பர்சம், ரூபம், ரஸம், கந்தம் என்ற 5 குணங்களுள், 5 குணங்களும் பிருதிவியிலும், கந்தத் தைத்தவிர்த்து மற்ற 4 குணங்களும், ஜலத்திலும், கந்தம் ரஸம் இவ்விரண்டையும் தவிர்த்து மற்ற மூன்று குணங்களும் தேஜஸ்ஸிலும், கந்தம், ரஸம், ரூபம் இம்மூன்றையும் தவிர்த்து மற்ற இரண்டுகுணங்களும் வாயுவிலும், சப்தம் என்ற குணம்மட் டும் ஆகாசத்திலுமிருக்கின்றன. பஞ்சபூதங்களின் அஸாதாரண யான ஆகாரம் முதலியதர்மங்களின்னின்னவை என்பதுமுறையே சாஸ்திரங்களில் கூறப்பட்டிருக்கின்றன. அதாவது: பூமியின் ஆகாரம் முதலியதர்மங்கள் பின்வருமாறு

आकारो गौरवं रौक्ष्यं वरणं स्थैर्यमेव च ।
वृत्तिर्भेदः क्षमाकार्ष्ण्यं काठिन्यं सर्वभोग्यता ॥

விஜாதீயமான அவயவங்களின் சேர்க்கை, கனம் (பளு) கரடு மொரடாயிருத்தல், தடைசெய்தல், ஸ்திரமாயிருத்தல், எல்லாப் பூதங்களுக்கும் ஆதாரமாயிருத்தல், பிளவு, எல்லாவற்றையும் தரிப்பதற்குரிய ஸாமர்த்தியம், கருப்புநிறம், கடினமாயிருத்தல், எல்லோராலேயும் அனுபவிக்கப்படுதல் இவைகள் பிருதிவியின் தர்மங்கள்

स्नेहः सौक्ष्म्यं प्रभा शौक्ल्यं मार्दवं गौरवं च यत् ।
शैत्यं रक्षा पवित्रत्वं संधानं चौदका गुणाः ॥

ஸ்னேஹம் என்ற குணம், ஸூக்ஷ்மமாயிருத்தல், காந்தி வெள்ளை நிறம், மெதுத்தன்மை, கனம், குளிர்ச்சி, ரக்ஷித்தல், பரிசுத்தமாயிருக்தல், சேர்த்துவைத்தல் இவைகள் ஜலத்தின், தர்மங்களாகும்.

ऊर्ध्वभाक्पाचकं दग्धृ पावकं लघु भास्वरम् ।
प्रध्वंस्योजस्वि वै तेजः पूर्वाभ्यां भिन्नलक्षणम् ॥

மேல்நோக்கிச் செல்லுதல், வேகும்படி செய்தல், பொசுக்குதல் பரிசுத்தி செய்தல், லகுவாகவிருத்தல், பிரகாசத்துடன் கூடியிருத்தல், நாசத்தை யடைவித்தல் காந்தியுடன் கூடியிருக்தல், இவைகள் தேஜஸ்ஸின் தர்மங்களாகும்,

तिर्यग्यानं पवित्रत्वमाक्षेपो नोदनं बलम् ।
चलमच्छायता रौक्ष्यं वायोर्धर्माः प्रकीर्तिताः ॥

குறுக்கானகதி, பரிசுத்தமாயிருத்தல், ஓர்வஸ்துவை கீழே தள்ளுதல், அசைத்தல், ஓர்வஸ்துவை வேறிடத்திற்குப் போகும்படி செய்தல், பலம், எப்பொழுதும் சலனத்துடன்கூடியிருத்தல் நிழலற்றிருத்தல், மொரமொரப்பை யுண்டுபண்ணுதல் இவைகள் வாயுவின் தர்மங்களாகும்.

सर्वतो गतिरव्यूहो ऽविष्टंभश्चेति तेत्रयः ।
आकाशधर्मा व्याख्याताः पूर्वपूर्वविलक्षणाः ॥

எங்கும் வியாபித்திருத்தல், எல்லாவஸ்துக்களிலும் இடை

வெளியைச் செய்தல், இடைவெளி, இவைகள் ஆகாசத்தின் தர்மங்களாகின்றன, ஆகவே மேற்கூறிய முறைப்படி சப்தம் முதலியகுணங்களுடனும், ஆகாரம் முதலியதர்மங்களுடனும் கூடின் அவயவியானது பஞ்சபூதங்களின் ஸ்தூலரூபம் எனப் பெறப்பட்டது. பஞ்சபூதங்களின் ஸ்வரூபம் என்றரூபத்தை இனி நிரூபணம் செய்கிறோம்— ஸ்வபாவசித்தமான காடின்யமுள்ளவி டத்திலிருக்கின்ற பூமித்வம் என்ற தர்மம் பூமியின் ஸ்வரூபம் என்ற இரண்டாவதுரூபமாகவும், ஸ்நேஹம் (தனிப்பட்ட இரண் டுவஸ்துக்கள் ஒன்றுடன் ஒன்றாய்ச் சேருவதற்கு நிமித்தமான குணம்) என்ற குணமிருக்கு மிடத்திலிருக்கும் ஜலத்வம் என்பது ஜலத்தின் ‘ஸ்வரூபம்’ என்ற இரண்டாவது ரூபமாகவும், சுடுகை என்ற குணமுள்ள விடத்திலிருக்கும் தேஜஸ்த்வம் என்பது தேஜஸ்ஸின் ‘ஸ்வரூபம்’ என்ற இரண்டாவது ரூபமாகவும், சுமந்து செல்லுதல் என்ற கிரியை இருக்குமிடத்திலிருக்கும் வாயுத்வம் என்பது வாயுவின் ‘ஸ்வரூபம், என்ற இரண்டாவது ரூபமாகவும், எங்கும் பரவியிருத்தல் என்ற தர்ம முள்ள விடத் திலிருக்கும் ஆகாசத்வமானது ஆகாசத்தின் ஸ்வரூபம், என்ற இரண்டாவது ரூபமாகவு மாகின்றது.

சங்கை—மேற்கூறிய பிருதிவீத்வம் முதலியனவும் பிருதிவீ முதலியவற்றின் தர்மங்களாகவே யாகின்றபடியால் இவற்றை ஸ்வரூபமாகச் சொன்னது எங்ஙனமெனின்? உத்தரம்— மேற்கூறிய தர்மங்களின் ஸமுதாயவடிவமான திரவியத்தை ஸ்வரூபம் என்று கூறியதாயறியவேண்டும். அதாவது: பிருதி வீத்வம் முதலிய ஸாமான்னியம், கந்தம் முதலிய விசேஷம் இவ ற்றின் ஸமுதாயம் திரவ்யம் எனப்படும். அந்தத்திரவியமேஸ்வ ரூபம் என்ற தாலிங்கு குறிக்கப்படுகின்றது.

சங்கை—ஸாமான்யம் விசேஷம் இவற்றின் ஆதாரத்தை திரவ்யமாயங்கீகரிக்க வேண்டியிருக்க ஸாமான்யவிசேஷங்களின் ஸமுதாயத்தை திரவ்யம் என்று சொன்னது எங்ஙனம் பொருந்து மெனின்? உத்தரம்—கூறுவாம், “ஸாமன்யவிசேஷாதாரம் த்ர வ்யம்” என்று அங்கீகரிப்பவனும் ஸாமான்ய விசேஷஸமுதா

யத்தை யங்கீகரித்தே தீரவேண்டும். * அவ்வித மங்கீகரிக்கா விடில் திரவியம் ஸாமான்ய விசேஷாச்ரயமாகின்ற தென்பது பொருந்தாது. ஆகவே அவசியமா யங்கீகரிக்க வேண்டியஸமுதாயத் தையே திரவியம் என்று அங்கீகரிப்பதை விடுத்து திரவ்யத் வாதாரமாக வேறு வஸ்துவை கல்பிப்பது நியாயவிருத்தமானதே என்றேற்படுகின்றது.

அங்ஙனமாயின் மரங்களின் ஸமுதாயமான வனம் என்றதும் திரவியமாயாகி விடாதோ எனின்? கூறுவாம். அவயவங்களின் மத்தியில் இடைவெளியில்லாத அவயவவிசேஷத்தை அனுஸரித்த ஸமுதாயம் தான் திரவியம் என்று அங்கீகரிப்பதால் வனம் முதலியவற்றில் திரவ்யத்வம் என்பது சித்திபெறாது. ஏனெனில் வனத்தின் அவயவங்களான மரங்கள் தனிப்பட்டிருப்பதே அதன்காரணமாகும். திரவ்யத்வமுள்ள சரீரம், மரம் முதலியஸமுதாயத்தின் அவயவமோ வெனில் மத்தியில் இடைவெளியின்றி ஒன்றுடனொன்றாய்ச் சேர்ந்திருப்பதால் அந்தஸமுதாயத்தை திரவியம் என்கிறோம். இத்தகைய அவயவத்தையே அயுதஸித்தாவயவம் என்றும், இதற்குமாறாய் பிரிந்திருக்கின்ற அவயவத்தை யுதஸித்தாவயவம் என்றும் சொல்லுகிறோம். அந்த யுதஸித்தாவயவ விசேஷத்தை யனுஸரித்த ஸமுதாயமானது பின்னமாய் (அவயவத்தினும் தனிப்பட்டதாய்) விவக்ஷிக்கப்பட்டதென்றும், அபின்னமாய்(தனிப்பட்டதாயில்லாததாய்) விவக்ஷிக்கப் பட்டதென்றுமிருவகைப்படும். பின்னமாய் விவக்ஷிக்கபட்டதற்கு உதாஹரணம்:—பிராம்மணர்களின் கூட்டம், வஸ்திரத்தின் வெண்மை என்பது முதலிய வியவஹாரஸ்தலம். அபின்னமாய் விவக்ஷிக்கப் பட்டதற்கு உதாஹரணம்—மாங்காடு, பிராம்மணர்கூட்டம் என்பது முதலிய வியவஹாரஸ்தலம். மேலும் ஒவ்வொரு அவயவங்களிலுமிருக்கின்ற குருத்வங்

---

*எந்த விடத்தில் அனேகம் வஸ்துக்களை ஓரிடத்திலிருப்ப தாயங்கீகரிக்கின்றேமோ அங்கு ஆதேயமாயிருக்கின்ற அநேகவஸ்துக்களுக்கு ஸமுதாயமுமிருப்பதாயங்கீகரித்ததாகவேதானேற்படும். ஏனெனில்ஸமுதாயம் என்பது ஸமுதாயிகளான வஸ்துக்களை விடத் தனிப்பட்டவையல்லவென்பதுபற்றியே என்றுகருத்து.

களின் (பளுக்களின்) ஸமுதாயந்தான் குடம் முதலிய காரியங்க ளில் தோன்றுவதால் குருத்வம் என்றதற்கு ஆதாரமாக அவய வங்களின் ஸமுதாயத்தினும் வேறுபட்டதாய் ஓர்திரவ்யத்தை யங்கீகரிக்கவேண்டுவதில்லை. ஒருகல் துண்டைப் போட்டுநெரு த்தால் ஒருஎடையும், பத்துகற்களைப் போட்டுநெருத்தால் வேறு எடையு மிருப்பதால் நாம் அங்கு பத்துகற்களும் சேர்ந்து தனி யாய் ஓர்திரவ்யமிருப்பதாய் எவ்விதமங்கீகரிப்பதில்லையோ அவ் விதமே குடம் முதலியதிரவ்யஸ்தலத்திலு மங்கீகரிப்பதால் குருத் வாதாரமாய் ஓர்தனிப்பட்ட திரவ்யத்தை யங்கீகரிக்கவேண்டுவ தில்லை. இதுவரை பஞ்சபூதங்களின் ஸ்வரூபம் என்ற ரூபமின்ன தென்று நிரூபிக்கப்பட்டது.

இனி ஸூக்ஷ்மரூபமின்னதென்பதை நிரூபிப்பாம்.—பஞ்ச பூதங்களின் தந்மாத்திரைகள் ஸூக்ஷ்ம ரூபங்களெனப்படும். இதன்பரிணமம் பரமாணுவாகும். பரமாணுவும் சப்தம்முதலிய விசேஷமுள்ள அயுதஸித்தமான அவயவவிசேஷத்தை யனுஸரித் த ஸமுதாயமேயொழிய அதுசரமாவயவமன்று. அதாவது:பரமா ணுதான்கடைசி அவயவமென்றும் அதற்குக்கீழ் அவயவப்பிரி வில்லை என்றும் சொல்லவியலாது. அல்லது தந்மாத்திரைகளென் பது பரமாணுக்களை விடஸூக்ஷ்மாவயவரூபமாகவோ, அல்லது பரமாணுக்கொப்பாகவோ இருக்கட்டும். ஆயினும்தந்மாத்திரை கள் ஸூக்ஷ்மரூபங்கள் என்பதில் யாதும் தடையில்லை. பிரகிருதி எனப்படும் ஸத்வம் ரஜஸ் தமஸ் என்ற மூன்று குணங்களும் பஞ்சபூதங்களின் அந்வயம் என்ற ரூபமாகும். ஸத்வாதிகுணங் கள் எல்லாக்காரியங்களிலும்ஸங்கிரமித்திருப்பதால் அந்வயம் என் று கூறப்படுகின்றன. பஞ்சபூதங்களிலிருக்கும் ஸுகதுக்காதி ரூபமான புருஷார்த்தமானது அர்த்தவத்வம் எனப்படும். ஆக வே மேற்கூறிய பூதங்களின் 5 விதமான ரூபங்களிலும் ஸம்ய மம்செய்வதால் பஞ்சபூதங்களும் இவனது ஸங்கல்பத்தை யனுஸ ரித்து நடக்கின்றவைகளாக வாகின்றன. (எ—று)

(அ—கை) பஞ்சபூதங்களும் ஸங்கல்பானுஸரியாக வாவதிலி ருந்துண்டாகின்ற மூன்று ஸித்திகளை இதனுலுபதேசிக்கிறார்.

सू० ॥ ततोऽणिमादिप्रादुर्भावः कायसंपत्तद्धर्मानभिघातश्च ॥

(ஸூ) ததோ அணிமாதிப்ராதுர்பாவ: காயஸம்பத் தத்தர்மானபிகாதச்ச. (45)

(ப-ரை) **ततः** (தத:) *பூதஜயத்தால்* **अणिमादिप्रादुर्भावः** (அணிமாதிப்ராதுர்ப்பாவ:) *அணிமா, லகிமா முதலிய ஸித்திகளின் லாபமும்* **कायसंपत्** (காயஸம்பத்) *அடுத்த ஸூத்திரத்தால் நிரூபிக்கப்போகின்ற சரீரஸம்பத்தும்* **तद्धर्मानभिघातश्च** (தத்தர்மானபிகாத: ச) *பஞ்சபூததர்மங்களால் தாக்கப்படாமையும்* [**भवति**(பவதி)*உண்டாகின்றது*]

(தா-ம்) சென்ற ஸூத்திரத்தில் சொல்லிய பூதஜயலாபத்தால் அணிமா முதலிய ஸித்திகள், காயஸம்பத்து, பஞ்பூததர்மங்களால் தாக்கப்படாமலிருத்தல் என்ற மூன்று விதமான ஸித்திகள் உண்டாகின்றன. அணிமாமுதலியஸித்திகளாவன. (i) *அணிமா—சரீரத்தின் அணுபரிமாணம்—அதாவது அணுபரிமாணமுள்ள சரீரத்துடன் கூடினவனுயிருத்தல்.* (2) *மஹிமா—ஒரு யோஜனை, அல்லது இரண்டு யோஜனை தூரம் பர்வதம் முதலியவற்றைப் போல் வியாபித்திருத்தல்.* (3) *கரிமா—மிக்க பளுவுள்ளவனு யிருத்தல்.* (4) *லகிமா—பஞ்சைப் போல் கனமற்றிருத்தல்* (5) *ப்ராப்தி :—எந்தவஸ்துவையும் தானிருந்தவிடமிருந்தே அடையும் திறமை, உதாஹரணம்—பூமியிலிருந்தபடியே சந்திரனைத் தொடுதல் முதலியன.* (6) *ப்ராகாம்யம்—கேழ்க்கப்பட்டதாகவோ பார்க்கப்பட்டதாகவோ உள்ள விஷயங்களில் தனது இச்சைக்குத்தடையேற்படாமை, உதாஹரணம்—ஜலத்தில் மூழ்கி ஸ்னனம் செய்வதுபோல் பூமியிலும் முழுகுதல் முதலியன.* (7) *ஈசித்வம்—ஸகலவிதமான பூதபௌதிக பதார்த்தங்களையும் தனது சரீரத்தைப்போல ஸங்கல்பமாத்திரத்தால் தூண்டும் திறமை.* (8) *வசித்வம்—பூதபௌதிககுணங்களைத் தன்வசமாக்கிக்கொள்ளுதல் அதாவது ஸத்யஸங்கல்பதா-எவ்விதம் ஒருவஸ்து இருக்கவேண்டுமென்று ஸங்கல்பிக்கிறானே அவ்விதமே அவ்வஸ்து வாகுதல், உதாஹரணம்—விஷத்தையும் அமிருதமாக பாவித்துக் கொடுத்துப் புஜிப்பிப்பதால் பிழைக்கும் படி செய்தல் முதலியன. இவை*

களை எட்டுவித மான ஸித்திகள் எனப்படும். * ஸத்யசங்கல்பத்வம் என்ற சித்தியானது ஒருவனுக்கிருந்த போதிலும் சந்திரனைச் சூரியனாகவோ, சூரியனைச்சந்திரனாகவோ மாற்ற வியலாது. ஏனெனில் எந்தஸங்கல்பம் ஈசுவரஸங்கல்ப விருத்தமாக வில்லாதிருக்குமோ அந்தஸங்கல்பம்தான் ஸித்திபெறுமே யின்றி ஈசுவரஸங்கல்ப விருத்தமான ஸங்கல்பம் ஸித்திபெறாது என்பது பற்றியே என்க. ஸூரியனைச் சந்திரனாக வாகும்படி ஸங்கல்பிப்பது ஈசுவரஸங்கல்பவிருத்தம். அவ்விதம் ஸங்கல்பிப்பானேயாகில் ஈசுவரனுடைய த்வேஷத்திற்குப் பாத்திரமாகி சித்தியினின்றும் நழுவியும் விடுவான். ஸூத்திரத்திலுள்ள **अणिमादि** என்ற பதத்தால் **प्राकाम्य** என்ற ஸித்தியைத் தவிர்த்து மற்ற ஸித்திகளை மட்டும் கிரஹித்துக் கொள்ளவேண்டும். ஏனெனில் **तद्धर्मानभिघातः** என்றதால் ஷடி ஸித்தியானது மறுபடியும் கிரஹிக்கப்படுவதே அதன் காரணமாகும். **तद्धर्मानभिघातः**=பஞ்சபூதங்களின் விருத்த தர்மங்களால் தாக்கப்படாமை. உதாஹரணம்—கல்லுக்குள்ளும் நுழைதல், எவ்வளவு காலம்ஜலத்தில் வஸித்தாலும் சரீரத்திற்கு ஒப்புலம் ஏற்படாமை, அக்கினியால் எறிக்கப்படாமை, காற்றினால் அசைக்கப்படாமை, ஆவரணமற்ற ஆகாசத்திலும் மறைவையடைதல் முதலியவைகளுண்டாகின்றன வென்பதாம்.

(அ—கை) காயஸம்பத் என்ற ஸித்தியின் ஸ்வரூபத்தையுபதேசிக்கிறார்.

ஸூ० ॥ रूपलावण्यबलवज्रसंहननत्वानि कायसंपत् ॥ ४६ ॥

(ஸூ) ரூபலாவண்ய பல வஜ்ர ஸம்ஹனனத்வானி காயஸம்பத் (46)

(ப—ரை) **रूप...त्वानि** (ரூப...த்வாநி) **रूप** (ரூப) கண்ணுக்குப் பிடித்தமான ரூபமும், **लावण्य** (லாவண்ய)=அழகும் **बल** (பல) வீரியமும் **संहननत्वानि** (ஸம்ஹனனத்வானி) வஜ்ரம் போல்கெட்டியான அவயவங்களின் சேர்க்கையும் **कायसंपत्** (காயஸம்பத்) காயஸம்பத் என்ற ஸித்தி எனப்படும்.

---

* இவ்விஷயம் நாகோஜிபட்டரின் உரையில் கூறப்பட்டுள்ளது.

(அ—கை) இந்திரியஜயத்தை ஸம்பாதிப்பதற்குறிய உபாயத்தை உபதேசிக்கிறார்—

सू० ॥ ग्रहण स्वरूपाऽस्मिताऽन्वयार्थवत्वसंयमादिन्द्रिय जयः॥

(ஸூ) க்ரஹண ஸ்வரூபாஸ்மிதாந்வயார்த்தவத்வ ஸம்யமாதிந்திரிய ஜய: (47)

(ப—ரை) **ग्रहण...त्** (க்ரஹண...த்)=**ग्रहण**=(க்ரஹண)ஸாமான்ய விசேஷரூபமான சப்தம் முதலியவிஷயங்களில் இந்திரியங்களுக்குண்டாகும்விருத்தி, அதாவது: அந்தந்த விஷயவடிவமாக மாறுதல் **स्वरूप** (ஸ்வரூப)=பதினொருவிதமான இந்திரியங்கள் **अस्मिता** (அஸ்மிதா)=ஸாத்விகாஹங்காரம் என்ற இந்திரியங்களின் காரணம், **अन्वय** (அந்வய)=ஸத்வம் முதலிய குணங்கள். **अर्थवत्व** (அர்த்தவத்வ)ஸுகதுக்காதி ரூபமான புருஷார்த்தம் இவற்றில் **संयमात्** (ஸம்யமாத்)தாரணாதியானஸமாதிகளைச் செய்வதால் **इन्द्रियजय:** (இந்திரியஜய:)=இந்திரியங்களின் ஜயமுண்டாகின்றது.

(தா—ம்) இந்திரியங்களுக்கு ஐந்துவிதமான ஸ்வரூபங்களிருக்கின்றன. அவற்றுள் க்ரஹணம் என்பது முதலாவது ஸ்வரூபம். அதாவது: ஸாமான்ய விசேஷ ரூபமான சப்தாதிவிஷயங்களைப் பற்றிக்கொண்டு உண்டாகும் இந்திரியவிருத்தியேயாம். ஸ்வரூபம் என்பது இரண்டாவதுரூபம். அதாவது: ஸத்வப்ரதானமான அஹங்காரத்தினின்று முண்டாயிருத்தல், சப்தாதிரூபமான அந்தந்தவிஷயங்களை மாத்திரம் கிரஹித்தல் இவைகள் இந்திரியங்களின் இரண்டாவது ரூபமாகும். இந்திரியங்களின் காரணமான ஸாத்விகாஹங்காரம் மூன்றுவதான அஸ்மிதா என்ற ரூபமாகும். ஸத்வம் முதலியகுணங்களுக்கு வ்யவஸேயாத்மகத்வம் என்றும் வ்யவஸாயாத்மகத்வம் என்றும் இரண்டு ரூபங்களிருக்கின்றன. அந்தக் குணங்கள் வ்யவஸேயம் எனப்படும் கிராஹ்யத்தின் ஸ்வரூபமாயிருத்தல் என்றதர்மத்தை முன்னிட்டு ஐந்து தந்மாத்திரைகளையும் பஞ்சபூதங்களையு முண்டு பண்ணுகின்றன. வ்யவஸாயாத்மகத்வம் என்ற தர்மத்தை முன்னிட்டு அஹங்காரத்துடன் கூடிய இந்திரியங்களை யுண்டு பண்ணுகின்றன. ஆகவே கார்யமான இந்திரியங்களி லிருக்கும்

ஸத்வம் முதலிய குணங்கள் அந்வயம் என்ற இந்திரியங்களின் நான்காவதுருபமாகும். இந்திரியங்களி லிருக்கும் ஸுகம், துக்கம் முதலியன அர்த்தவத்வம் என்ற ஐந்தாவது ரூபமாகும். இவற்றில் ஸம்யமம் செய்வதால் இந்திரிய ஜயமுண்டாகின்றது.

(அ—கை) இந்திரிய ஜயத்தாலுண்டாகின்ற ஸித்திகளை யுபதேசிக்கிறார்—

सू० ॥ ततो मनोजवित्वं विकरणभावः प्रधानजयश्च ॥ ४८ ॥

(ஸூ) ததோ மனோஜவித்வம், விகரணபாவ: ப்ரதான ஜயச்ச (48)

(ப—ரை) **ततः** (தத:)=இந்திரியஜயத்தால் **मनोजवित्वम्** (மனோ ஜவித்வம்) மனத்தைப் போல் சரீரத்திற்கு நிகரற்ற வேகமான கதியும் **विकरणभावः** (விகரணபாவ:)=ஸ்தூல தேஹாபேக்ஷையின்றியே இந்திரியங்களுக்கு விப்ரகிருஷ்டமான தேசகாலஸம்பந்தியான வஸ்துக்களில் விருத்திலாபமும், **प्रधानजयश्च** (ப்ரதான ஜயச்ச)=தனது இச்சையை யனுசரித்து பிரகிருதியில் மாறுதலை ஏற்படுத்தக்கூடிய திறமையும் [**भवति** (பவதி)=உண்டாகின்றது.]

(தா—ம்) 47வது ஸூத்திரத்திற் சொல்லிய படி இந்திரியங்களின் ஐந்து ரூபங்களில் ஸம்யமம் செய்து இந்திரியஜயத்தைப் பெறுவதால் சரீரத்திற்கு மனத்தைப் போன்ற சீக்கிரகதியும், தூரதேசம், சென்ற காலம், வரும் காலம் முதலியவற்றி லிருக்கும் விஷயம், ஸூக்ஷ்மமான விஷயம் இவற்றில் இந்திரியங்களின் விருத்தி லாபமும், பிரகிருதியை தனது இஷ்டப்படி மாற்றக்கூடிய சக்தியு முண்டாகின்றது. இம்மூன்று சித்திகளும் மதுப்ரதீகா எனப்படும். (எ—று)

(அ—கை) இதுவரையில் ஸம்யமத்தா லுண்டாகின்றதாயும், நேரிலோ, சிரத்தையை யுண்டுபண்ணும் வாயிலாகவோ விவேகக்யாதிக்குச் சாதனமாயுமிருக்கின்ற க்ஞானம், கிரியை இவைரூபமான ஸித்திகள் நிரூபிக்கப்பட்டன. இப்பொழுது விவேகக்யாதியின் அவாந்தரஸித்திகளை யுபதேசிக்கிறார்.

सू९ ॥ सत्वपुरुषान्यता ख्यातिमात्रस्य सर्वभावाधिष्ठातृत्वं सर्वज्ञातृत्वं च ॥ ४८ ॥

(ஸூ) ஸத்வ புருஷாந்யதா க்யாதிமாத்ரஸ்ய ஸர்வ பாவாதிஷ்டாத்ருத்வம் ஸர்வக்ஞாத்ருத்வம் ச (48)

(ப—ரை) **सत्त्व पुरुषान्यता ख्यातिमात्रस्य** (ஸத்வபுருஷான்யதாக்யாதி மாத்ரஸ்ய)=**सत्व** (ஸத்வ)=பிரகிருதி **पुरुष** (புருஷ)=புருஷன் இவர்களின் **अन्यता ख्यातिमात्रस्य** (அங்யதாக்யாதி மாத்ரஸ்ய)= பேதத்தைப்பற்றியக் ஞான ஆவிருத்தியில் மட்டும் முயற்சியுள்ள யோகிக்கு **सर्वभावाधिष्ठातृत्वम्** (ஸர்வபாவாதிஷ்டாத்ருத்வம்)=எல்லாவித பொருள்களையும் நியமனம் செய்யக்கூடிய சக்தியும் **सर्वज्ञातृत्वं च** (ஸர்வக்ஞாத்ருத்வம்ச)=முக்காலங்களிலு முள்ள வஸ்துக்களைப் பற்றிய அறிவும் [**भवति** (பவதி)=உண்டாகின்றது.]

(தா—ம்) ஸம்யமத்தால் சித்தத்திலுள்ள ரஜஸ், தமஸ், இவைகளாகிற அழுக்கை நீக்கி கொண்டவனும், மேலான சித்தசுத்தியை யடைந்தவனும், ஆனது பற்றியே வசீகார ஸம்க்ஞை என்ற பரவைராக்யத்தை யடைந்தவனுமான யோகியானவன் பிரகிருதி புருஷபேதக்ஞானத்தை மட்டும் ஆவிருத்தி செய்து வருவானேயாகில் அவனுக்கு ஈசுவரனைப்போல் ஸகலவிதமான வஸ்துக்களையும் நியமனம் செய்யக்கூடிய சக்தியும், முக்காலத்திலுமுள்ள வஸ்துக்களைப் பற்றிய விசேஷக்ஞானமும் உண்டாகின்றது. இந்தச் சித்தியே விசோகா எனப்படும். (எ—று)

(அ—கை) விவேகக்யாதியினின்று முண்டாகின்ற முக்கியமான ஸித்தியை யுபதேசிக்கிறார்—

सू० ॥ तद्वैराग्यादपि दोषबीजक्षये कैवल्यम् ॥ ५० ॥

(ஸூ) தத்வைராக்யாதபி தோஷபீஜக்ஷயே கைவல்யம் (50)

(ப—ரை) **तद्वैराग्यादपि** (தத்வைராக்யாதபி)=விசோகஸித்தியில் வைராக்ய மேற்பட்டு அதன் காரணமான விவேகக்யாதியிலும் வைராக்யமேற்படுவதால் **दोषबीजक्षये** (தோஷபீஜக்ஷயே)=

அவித்யை முதலிய கிலேசங்களுக்குக் காரணமான ப்ராந்தி ஸம்ஸ்காரம் விலகி விடுமாயின் **कैवल्यम्** (கைவல்யம்)=புருஷனுக்கு ஸ்வஸ்வரூபப்ரதிஷ்டை என்ற கைவல்யமானது [**भवति** (பவதி)=உண்டாகின்றது.]

(தா—ம்) விசோகை என்ற சித்தியிலும் வைராக்யத்தையடைந்து, அதன்காணரனமான விவேகக்யாதியிலும்வைராக்யமுண்டாகி விடுமாயின் கிலேசகாரணமான ப்ராந்திஸம்ஸ்காரம் முற்றிலும் விலகிவிடும். இவ்விதம் முற்றிலும் ப்ராந்தி ஸம்ஸ்காரம் விலகிவிடுமாயின் சித்தமானது பரவைராக்ய ஸம்ஸ்காரசேஷமாக வாகும். அன்னிலே ஏற்பட்டதும் சிதிசக்திரூபமான ஸ்வஸ்வரூபத்தில் புருஷனுக்கு ப்பிரதிஷ்டையுண்டாகின்றது. (எ—று)

(அ—கை) கைவல்யம் என்ற மோக்ஷத்தைச் சாதிப்பதற்குப் பிரவிருத்தித்தயோகிக்கு விக்கினங்கள் நேரிடுமாயின் அவற்றைத் தடுப்பதற்கு உபாயத்தை உபதேசிக்கிறார்—

सू० ॥ स्थान्युपनिमन्त्रणे सङ्गस्मयाकरणं पुनरनिष्टप्रसङ्गात्

(ஸூ) ஸ்தான்யுபநிமந்த்ரணே ஸங்கஸ்மயாகரணம் புனரனிஷ்ட ப்ரஸங்காத் (51)

(ப—ரை) **स्थान्युपनिमन्त्रणे** (ஸ்தான்யுபநிமந்த்ரணே)=இந்திராதி ஸ்தானத்திலிருக்கும் தேவர்களால் பிரார்த்திக்கப்படினும் **पुनः** (புன:)=மறுபடியும் **अनिष्टप्रसङ्गात्** (அனிஷ்டப்ரஸங்காத்)=அனிஷ்டமான ஸம்ஸாரபந்தம் ஏற்படும் என்ற பயத்தால் **सङ्गस्मयाकरणम्** (ஸங்கஸ்மயாகரணம்)—**सङ्ग** (ஸங்க)=ஆசை **स्मय**(ஸ்மய)=கர்வம் இவற்றை **अकरणम्** (அகரணம்)=செய்யாதிருத்தலானது [**योगविघ्न निरासो पाय**:(யோகவிக்ன நிராஸோபாய:)=யோகத்திற்கு ஏற்பட்ட விக்னங்களைப் போக்குவதற்குரிய உபாயமாகும்.]

(தா—ம்) ப்ரதமகல்பிகன், மதுபூமிகன், ப்ரக்ஞாஜ்யோதி: அதிக்ராந்த பாவனீயன் என்று யோகிகள் நான்கு வகைப்படுவர். பிறர் சித்தமறிதல் முதலிய சித்திகளை யடையாதவனும், ஸம்யமத்தில் பிரவிருத்தியை மட்டும் செய்து வருபவனுமான யோகியானவன் ப்ரதமகல்பிகன் எனப்படுவன். எந்தயோகியானவன் ஸம்ப்ரக்ஞாத ஸ்மாதியால் **ऋतंभरातत्प्रज्ञा** என்றதால் கூறிய

ருதம்பராப்ரக்ஞாவஸ் தாரூபமான மதுமதீ என்ற சித்தபூமியை படைந்து, பஞ்சபூதங்கள் இந்திரியங்கள் இவற்றை ஸாக்ஷாத்க ரித்து அவற்றின் ஜயத்தை யடைய விரும்புகின்றானோ, அவற் றின் ஜயம் வாயிலாக மதுப்ரதீகா, விசோகா, ஸம்ஸ்கார சேஷா என்ற மூன்று விதமான பூமிகளை அடைய விரும்புகின்றானோ அவன் இரண்டாவதான மதுபூமிகன் எனப்படுவன். எந்த யோகி யானவன் ருதம்பராப்ரக்ஞை,பூதேந்திரியங்களின் ஜயம் இவற்றை படைந்து இந்திராதி தேவர்களாலும் கலக்கக்கூடாத வனுயும் விசோகா, ஸம்ஸ்காரசேஷா, என்ற ஸித்திகளை யடையவிரும்பி அதனதன் ஸாதனத்தில் ஸம்யமம் செய்வதில் முயற்சியுள்ளவனு யாகின்றானோ அவன் மூன்றுவதான ப்ரக்ஞாஜ்யோதி: எனப்ப டுவன். விசோகா ஸம்ஸ்காரசேஷா என்ற சித்தபூமிகளையு மடைந் தவனும், கடைசி சரீரத்திலுள்ள சித்தத்தின்லயம் என்ற பலனை மட்டும் அடைய வேண்டியவனும், கிருதகிருத்யனுமான யோகி யானவன் நான்காவதான அதிக்ராந்த பாவனீயன் எனப்படுவன், அவர்களுள் முதலாவது படியிலிருக்கும் யோகிக்கு, மர்யாதை யைப் பெறவேண்டும் என்று தேவர்களால் வேண்டப்படக்கூ டிய யோக்யதைகிடையாது. மூன்றுவது, நான்காவது படியிலி ருப்பவர்களுக்கோ வெனில் பூதம் இந்திரியம் இவற்றை ஜயித்து விட்டபடியால் இந்திராதி போகங்களால் கலக்கப்படக்கூடிய நிலை கிடையாது. ஆதலால் பரிசேஷ நியாயத்தை யனுஸரித்து இரண்டாவது படியிலிருக்கும் யோகிக்கு இந்திராதி களின் போகங்களால் சித்தத்திற்கு க்கலக்கமுண்டாக நேரும்பொழுது அவன் விஷயத்தில் இந்தச் ஸூத்திரம் பிரவிருத்தித்து சித்தத் தைக்கலங்க விடாமலிருப்பதற்கு ரிய உபாயத்தை உபதேசிப்ப தாய் ஏற்பட்டது.

மதுபூமிகன் என்ற இரண்டாவது படியிலுள்ள யோகியா னவன் தன்னை இந்திராதிதேவர்கள் நேரில்வந்து "ஐயா! ஸ்வர்க் கலோகத்தில் வஸியுங்கள், மனோஹரையான இந்த அப்ஸரஸ்திரீ யுடன் ரமியுங்கள், நிகரற்ற போக்யவஸ்துக்கள் இங்கிருக்கின் றன, ஜரை, மரணம் இவற்றை நிவிருத்திசெய்கின்ற ரஸாயனத் தைச் சாப்பிடுங்கள்" என்று பிரார்த்தனை செய்தபோதிலும் அந்

தப்போகங்களில் ஆசையையும், ஆஹா! என்னநம்து யோகப்ர பாவம் என்று கர்வத்தையு மடையக்கூடாது. இதற்குமாறுக "கோரமான ஸம்ஸாரமாகிற நெருப்பினல் பொசுக்கப்படுபவனும், ஜனனமரணரூபமான ஸம்ஸார சக்கிரத்தில் ஏறி சுழலுகின்றவனுமான என்னால் ஏதோ தைவவசத்தால் கிலேசம், கர்மம் இவைகளாகிற இருளைப்போக்குகின்ற யோகமாகிற தீபம் ஸம்பாதிக்கப்பட்டது. அதற்கு ஆசையைக் காரணமாயுடைய விஷயங்களாகிற காற்றுகள் நேர்விரோதிகள். விவேகியான நான் கானல் ஜலத்திற் கொப்பான விஷயங்களால் ஏமாற்றப் படலாகுமா! மறுபடியும் நம்மை ஸம்ஸாரமாகிற தீக்கிரையாக்கிக் கொள்வது உசிதமாகுமா? என்றது முதலிய பாவனத்தால் ஸங்கம், ஸ்மயம் இவற்றை விலக்கிக்கொள்ள வேண்டும். ஸங்கத்தை யடைவதால் கீழ்விழுதலும், (யோகமார்க்கத் தினின்றும் நழுவுதலும்) கர்வத்தை யடைவதால் கிருதகிருத்யனாகிவிட்டோம் என்ற எண்ணமுண்டாகி அதன் மூலம் மேல் பட்ட யோகபூமிகளின் லாபமின்மையுமுண்டாகும். ஆதலால் ஸங்கம், ஸ்மயம் இவற்றை ஒழித்துவிடவேண்டும். (எ—று)

(அ—கை) விவேகஜக்ஞான முண்டாவதற்குரிய வேறொரு உபாயத்தை உபதேசிக்கிறார்—

सू० ॥ क्षणतत्क्रमयोस्संयमाद्विवेकजं ज्ञानम् ॥ ५२ ॥

(ஸூ—ம்) க்ஷணதத்க்ரமயோஸ்ஸம்யமாத் விவேகஜம் க்ஞானம் (52)

(ப—ரை) **क्षणतत्क्रमयोः** (க்ஷணதத்க்ரமயோ:)=க்ஷணம் என்ற காலம், அவற்றின் கிரமம் இவற்றினுடைய **संयमात्** (ஸம்யமாத்)= ஸம்யமத்தால் **विवेकजम्** (விவேகஜம்)=எல்லாவஸ்துக்களையும் பகுத்தறிவதைமுன்னிட்ட **ज्ञानम्** (க்ஞானம்)=ஸாக்ஷாத்காரரூபக் ஞானமானது [**भवति** (பவதி)=உண்டாகின்றது.

(தா—ம்) எதற்குக் கீழ் சிறிய காலம் கிடையாதோ அக் காலம் க்ஷணம் எனப்படும். அதாவது முன்பாகம், பின்பாகம் என்றபிரிவினையற்ற காலகலையானது க்ஷணம் எனப்படும். என்றேற்பட்டது. அல்லது ஓர்பரமாணுவானது தனதுபரிமாண

முள்ள தேசத்தை எவ்வளவுகாலத்திற்குள் கடக்குமோ அந்தக் காலம் "க்ஷணம்" எனப்படும் என்றும் சொல்லலாம், க்ஷண ப்ரவாஹத்திற்கு விச்சேதமற்றிருத்தல் கிரமம் எனப்படும். அதாவது: முன் உண்டானவஸ்து வினின்றும் பின்னுண்டாகும் வஸ்துவிலிருக்கின்ற ஆனந்தர்யம்.(அடுத்தபடியாயிருத்தல்) என்ற தர்மம் கிரமம் எனப்படும், அந்த ஆனந்தர்யம் என்பது 'அனந்தர: (அடுத்தபடியிலிருக்கிறது) என்ற புத்தியில் விஷயமாயிருத்தல் என்பதை விட தனிப்பட்டவஸ்து வல்ல. ஆதலால் க்ரமப்ரத்யயமானது விகல்ப்பம் என்ற பிரிவினையில் சேர்ந்ததாகவே தான் ஆகும். க்ஷணங்களின் ஸமூஹம் வருஷம், மாதம் முதலிய காலங்களாகும். ஒரே ஸமயத்தில் ஸ்திதியானது க்ஷணங்களுக்கு ஸம்பவிக்காதாகையால் அவற்றின் ஸமுதாயமும் உண்மையானதல்ல. க்ஷணஸமுதாயத்தையும் விகல்பக்ஞான விஷயமாகவே தானங்கீகரிக்க வேண்டும். இத்தகைய க்ஷணம். அவற்றின் கிரமம் இவற்றில் ஸம்யமம் செய்து ஸாக்ஷாத் கரிப்பதால் எல்லாவஸ்துக்களையும் அவ்வற்றிலுள்ள ஸகல விசேஷத்துடன் ஸாக்ஷாத்கரித்தல் என்ற ஸர்வக்ஞதையானது உண்டாகின்றது. உலகிலுள்ள ஒவ்வொரு வஸ்துவும் ஒவ்வொருக்ஷணத்திலும் மாறுதலையடைகின்றது. ஆகையால் க்ஷணம், அதன்கிரமம் இவற்றைஸாக்ஷாத்கரிப்பதால் ஸகலவஸ்து பரிணமம், அதன் கிரமம் இவற்றின் ஸாக்ஷாத்காரமும் ஏற்படுவதால் மற்றெல்லாவற்றிலும் வேறுபட்டவனுய் புருஷனிருக்கிறுன் என்றக்ஞானமுமுண்டாகின்றது. (எ—று)

(அ—கை) முற்கூறிய விவேகஜக்ஞானத்திற்கு உதாஹரணம் கூறப்படுகின்றது—

सू० ॥ जातिलक्षणदेशैरन्यतानवच्छेदात्तुल्ययोस्ततः प्रपत्तिः ॥ ५३ ॥

(ஸூ) ஜாதிலக்ஷணதேசைரன்யதாநவச்சேதாத் துல்யயோ ஸ்தத: ப்ரதிபத்தி: (53)

(ப—ரை) **तुल्ययोः** துல்யயோ:)=ஜாதி லக்ஷணம் தேசம் இவற்றால் ஒத்திருக்கின்ற இரண்டு வஸ்துக்களுக்கு **जातिलक्षणदेशैः**

(ஜாதிலக்ஷணதேசை:)—जाति(ஜாதி)=கோத்வம்(கோவின்தன்மை) முதலியஜாதி **लक्षण** (லக்ஷண)=வெளுப்பு கருப்புமுதலிய லக்ஷணம் **देशैः** (தேசை:)=முன், பின் முதலியதேசம் இவற்ருல் **अन्यतानवच्छेदात्** (அன்யதாநவச்சேதாத்)=பேதநிச்சயம்ஸம்பவிக்காதாகையால் **ततः** (தத:)=க்ஷணஸம்யமத்தாலுண்டாகின்ற விவேகஜக்ஞானத்திஞல்தான் **प्रतिपत्तिः** (ப்ரதிபத்தி:)=பேதக்ஞானமானது உண்டாகின்றது.

(தா—ம்) லோகத்தில் வஸ்துக்களுள் பரஸ்பரபேதத்தை நிச்சயிப்பதற்குரிய ஸாதனங்கள் ஜாதி, லக்ஷணம், தேசம் என்று மூன்று விதமாக விருக்கின்றன. தேசத்திஞலும், லக்ஷணத்திஞலும் ஒற்றிருக்கின்ற வஸ்துக்களுக்கு பேதநிச்சயமானது ஜாதியாலுண்டாகின்றது உதாஹரணம்—பசு, கவயம் என்ற மிருகம் இவ்விரண்டும் லக்ஷணத்திஞலும், தேசத்திஞலும் ஒற்றிருப்பதால் கோத்வம், (கோவின்தன்மை) கவயத்வம் (கவயத்தின்தன்மை) என்ற ஜாதியால் தான் பேதநிச்சயமுண்டாகின்றது. இரண்டு பசுக்கள் தேசம், ஜாதி இவற்ருல் ஒற்றிருப்பதால் அவற்றுள் ஒன்றுக்கொன்று பேதக்ஞானமானது கருப்பு,சிவப்பு முதலிய லக்ஷணத்தாலுண்டாகின்றது. இரண்டுநெல்லிக்கனிகள் ஜாதி லக்ஷணங்களால் ஒற்றிருக்குமாயின் அவற்றுள் ஒவ்வொன்றைப்பற்றிய பேதக்ஞானமானது முன்தேசம் பின்தேசம் என்பதைக்கொண்டு உண்டாகின்றது.

யோகியின் க்ஞானத்தை பரீக்ஷைசெய்வதற்காக இரண்டு நெல்லிக்கனிகளுள் ஒன்றை முந்தியதேசத்திலும் மற்ருென்றை பிந்தியதேசத்திலுமாக முதலில் வைத்து, யோகியானவன் மற்ருென்றில் கவனத்தைச் செலுத்தி யிருக்கும் பொழுது 1வதுஸ்தானத்தில் வைத்திருந்த நெல்லிக்கனியை 2வது நெல்லிக்கனியின் ஸ்தானத்தில் வைத்து விட்டு, 2வதுஸ்தானத்திலிருந்த நெல்லிக்கனியை ஒருவன் எடுத்து விட்டான் என்று வைத்துக் கொள்வோம். இங்கு முதலில் 2வது ஸ்தானத்தில் வைத்திருந்த நெல்லிக்கனியை விட பின்னர் வைக்கப்பட்டிருக்கும் நெல்லிக்கனியானது உண்மையில் வேறுபட்டதாகை யால் அதில் முன்னிருந்த நெல்லிக்கனியின் வேற்றுமையானது ஜாதி, லக்ஷணம்,

தேசம் இவற்ருல் அறியக்கூடாததாக விருக்கின்றது. ஏனெனில் ஆமலகத்வம் என்ற ஜாதியும், தேசமும், லக்ஷணமும் முன்னி ருந்த நெல்லிக்கனிக்கும், இப்பொழுதிருக்கும் நெல்லிக்கனிக்கும் ஒன்ருயிருப்பது பற்றியே என்க. ஆகவே இவ்விடத்தில் முன் னிருந்த நெல்லிக்கனிக்கும், தற்சமய மிருக்கும் நெல்லிக்கனிக் குமுள்ள வேற்றுமையானது க்ஷணம், அதன் கிரமம் இவற்றில் ஸம்யமம் செய்வதால் ஏற்பட்ட விவேஜகக்ஞானத்திருல்தான் அறியப்படுவதாக ஏற்றுக்கொள்ளவேண்டும். அதாவது: நெல் லிக்கனியிலிருக்கின்ற உத்தரதேசஸம்பந்தக்ஷணம்தொடங்கி ஏற் பட்ட க்ஷணஸம்பந்தத்தை ஸாக்ஷாத்கரித்து அதன் வாயிலாக இந்தநெல்லிக்கனியானது இந்தக்ஷணத்தில் இந்த தேசஸம்பந்தத் தை யடைந்தது. ஆதலால் இதற்கு முன்னிருந்த நெல்லிக்கனி யினும் இது வேறுப்பட்டது என்று யோகியானவன் அறிந்து விடுகிருன். ஆதலால் க்ஷணம். அதன் கிரமம் இவற்றின் ஸம்ய மத்தா லுண்டான விவேகக்ஞானத்திற்கு எல்லாவஸ்துக்களும் ஸகலவிதமான பாகுபாட்டுடன் விஷயமாகின்றன என்று ஏற்பட் டது (எ—று)

(அ—கை) விவேக ஜக்ஞானத்திற்கு விஷயமாகின்ற வற்றுள் ஒருவிஷயத்தை மட்டும் தனிமையில் குறிப்பிட்டு க்காண்பித் துவிட்டு இந்தச்சூத்திரத்தால் விவேகஜக்ஞானத்திற்கு லக்ஷணம் கூறுகிருர்.

सू० ॥ तारकं सर्वविषयं सर्वथा विषयमक्रमं चेति विवेकजं ज्ञानम् ॥ ५४ ॥

(ஸூ) தாரகம் ஸர்வ விஷயம் ஸர்வதா விஷ யம் அக்ரமம் சேதி விவேகஜம் க்ஞானம் (54)

(ப—ரை) **विवेकजं, ज्ञानम्** (விவேகஜம், க்ஞானம்)=க்ஷணம், அதன்கிரமம் இவற்றின் ஸம்யமத்தாலுண்டான விவேகக்ஞான மானது **तारकम्** (தாரகம்)=ஸம்ஸாரமாகிற ஸமுத்திரத்தினின் றும் கரையேற்றுவதாகவும் **सर्वविषयम्** (ஸர்வவிஷயம்)=ஸ்வரூபத் தால் எல்லாவஸ்துக்களையும் விஷயீகரித்ததாகவும், **सर्वथाविषयम्**

(ஸர்வதாவிஷயம்)=பிரகாரத்தாலும் எல்லாவஸ்துக்களை விஷயீ கரிக்கின்றதாயும் **अक्रमम्** (அக்ரமம்)=ஒரே க்ஷணத்தில் எல்லாவற் றையும் விஷயீகரிக்கின்றதாயும் [**भवति** (பவதி)=ஆகின்றது.

(தா—ம்) **सर्व** என்ற பதத்திற்கு இரண்டு விதமான பொருள் ஏற்பட்டிருக்கிறது. " **रसवत्यांनिष्पन्नैस्सर्वैर्व्यंजनैः भुक्तम्** சமயலறை யில் தயாரித்த எல்லாவிதமான காய்கறிகளாலும் போஜனம் செய்யப்பட்டது " என்று கூறுமிடத்தில் **सर्व** என்ற பதமானது ப்ரகாரத்தை முன்னிட்டு எல்லாம் என்ற பொருளைக் குறிப்பிடு கின்றது. அதாவது: சமயல் செய்யப்பட்ட வைகள் எவை எவையுண்டோ அவையாவும் சாப்பிடப்பட்டன என்று பொருள் ஏற்படுகின்றதே யின்றி மற்றவர் சாப்பிடுவதற்கு மீதம்வைக்கா மல் பாத்திரத்தைக் காலிசெய்து விட்டதாய் பொருள் ஏற்பட வில்லை என்பதாம். **पात्रस्थं सर्वमपि भुक्तम्** என்று சொல்லுமிடத்து பாத்திரத்தில் மீதமின்றியாவும் சாப்பிடபட்டது என்று பொருள் ஏற்படுகின்றது. முதல் உதாஹரணத்தில் **सर्व** என்ற சப்தம் பிரகாரத்தால் எல்லாம் என்ற பொருளையும், இரண்டாவது உதா ஹரணத்தில் **सर्व** என்ற சப்தம் ஸ்வரூபத்தால் எல்லாம் என்ற பொருளையும் குறிக்கின்றது. ஆகவே ஸ்வரூபத்தை முன்னிட் டும், பிரகாரத்தை முன்னிட்டும் எல்லாவஸ்துவும் இந்த விவேக ஜக்ஞானத்திற்கு விஷயமாகின்றது என்பதைக் காட்டவே **सर्व-विषयम् , सर्वथा विषयम्** என்று இரண்டுபதங்கள் போடப்பட்டன. மேலும் இந்தக்ஞானத்தில் சென்றகாலம், நடக்கும்காலம், வரும் காலம் இவற்றிலுள்ள வஸ்துக்கள் யாவும் ஒரேஸமயத்தில் விஷ யமாகின்றன. இத்தகையக் ஞானமுண்டானதும் எல்லாவற்றி லும் தோஷத்தைக் கவனித்தல் மூலமாக வைராக்யமுண்டாகி, அதன் வாயிலாக மோக்ஷமுமுண்டாகின்றது. ஆதலால் இது தாரகம் என்றும் சொல்லப்படுகின்றது. (எ—று)

(அ—கை) மேற்சொல்லிய ஸித்திகள் யாவும் ஏற்பட்ட பிற குதான் மோக்ஷமுண்டாகுமா ? அல்லது அவையில்லாமலுமுண் டாகுமா எனச்சந்தேஹமுண்டாவதால் அது இந்தச் சூத்திரத் தால் விளக்கப்படுகிறது.

सू० ॥ सत्वपुरुषयोः शुद्धिसाम्ये कैवल्यम् ॥ ५५ ॥

(ஸூ) ஸத்வபுருஷயோ: சுத்திஸாம்யே கைவல்யம் (55)

(ப—ரை) **सत्वपुरुषयोः** (ஸத்வபுருஷயோ:)=புத்திதத்துவம் புருஷன் இவ்விரண்டிற்கும் **शुद्धिसाम्ये** (சுத்திஸாம்யே)=சுத்திவிஷயத்தில் ஒற்றுமை ஏற்படின் **कैवल्यम्** (கைவல்யம்)=மோக்ஷமானது [**भवति** (பவதி)=உண்டாகின்றது.]

(தா—ம்) புத்திதத்துவத்திலுள்ள ரஜஸ், தமஸ் இவைகளாகிற தோஷங்கள் விலகி விவேகக்யாதி பலத்தால் எல்லாவிருத்திகளும் ஸம்ஸ்கார சேஷமாகி எவ்வித விருத்தியுமற்றிருக்கும் நிலையே புத்திதத்துவத்திற்கு சுத்தி எனப்படும். இயற்கையில் எவ்விததோஷமுமற்ற புருஷனுக்கு புத்திதத்துவத்தில் பிரதிபிம்ப பலத்தால் கல்பிக்கப்பட்ட போகமற்றுவிடுதலே சுத்தி எனப்படும். இத்தகைய சுத்தியானது ஏற்பட்டு விடின் கைவல்யம் என்ற மோக்ஷமுண்டாகின்றது. இதுவரை உண்டாகாதிருந்த துக்கங்கள் இனியும் இவ்விதமே உண்டாகாதிருக்குமானால் அது "கைவல்யம்" எனப்படும். ஆகவே கைவல்யமானது புத்திதத்துவத்தைவிட எவ்விதத்திலும் வேறுபட்டவனான புருஷனின்ஸாக்ஷாத்காரம் ஒன்றினாலேயே உண்டாகின்றது. யோகசாஸ்திரத்திற்சொல்லிய ஸாதனானுஷ்டானத்தில் சிரத்தை யுண்டாக வேண்டிஅந்தந்தவிதமான ஸித்திகள் உபதேசிக்கப்பட்டன என்றேற்பட்டது.

மூன்றாவது விபூதிபாதம் முற்றிற்று.

நான்காவது கைவல்ய பாதம்.

(அ—கை) இவ்விதம் மூன்று பாதங்களால் ஸமாதி, அதன் ஸாதனம், அதன் விபூதிகள் இவைகள்முக்கியமாகவும், மற்றவைகள் பிரஸங்கம், உபோத்காதம்என்றஸங்கதியை*முன்னிட்டுமுப

---

* முன்னர் நிரூபணம் செய்தவிஷயத்திற்கும், அடுத்தபடியாய் பின்னர் நிரூபிக்கப்படும் விஷயத்திற்குமுள்ள தொடர்பு ஸங்கதி எனப்படும். அந்த ஸங்கதியானது உபோத்காதம், பிரஸங்கம், அவஸரம்,

தேசிக்கப்பட்டன. இந்தப்பாதத்தில் அந்த ஸமாதியாலுண்டாகின்ற கைவல்யம் நிரூபிக்கப்படுகின்றது. அந்தக்கைவல்யநிரூபணமானது கைவல்யத்தை யடையக்கூடிய சித்தம், பரலோகம், விக்ஞானத்தைவிட வேருனவனும், சித்தம் வாயிலாக ஸுகாதிகளை யனுபவிக்கின்ற வனுமான ஆத்மா, க்ஞானத்தின் மேலானநிலை இவற்றைநிரூபணம் செய்யாவிடில் ஸம்பவிக்காதாகையால் அவைகளும், மற்றும் சிலவைகளும் நிரூபணம் செய்யப்படுகின்றன. ஸித்தியையடைந்த சித்தங்களுள் கைவல்யத்தை யடையக்கூடிய யோக்யதையையடைந்த சித்தம் இன்னது என்பதை நிச்சயிப்பதற்காக முதன்முதலில் 5விதமான ஸித்திகளை யுபதேசிக்கிருர்.

सू० ॥ जन्मौषधिमन्त्रतपः समाधिजाः सिद्धयः ॥ १ ॥

(ஸூ) ஜந்மௌஷதி மந்த்ரதப: ஸமாதிஜா: ஸித்தய: (1)

(ப—ரை) **सिद्धयः** (ஸித்தய:)=ஸித்திகள் **जन्मौ...जाः** (ஜந்ம...ஜா:) **जन्म** (ஜந்ம)=பிறவியாலும் **ओषधि** (ஓஷதி)=ரஸாயநாதிஸேவையாலும் **मन्त्र** (மந்த்ர)=மந்திரஜபத்தாலும் **तपः** (தப:)=தவத்தினுலும் **समाधि** (ஸமாதி)=சென்றபாதத்தில் நிரூபணம் செய்யப்பட்ட ஸம்யமத்தாலும் **जाः** (ஜா:)=உண்டானவைகளாக [**भवन्ति** (பவந்தி)=ஆகின்றன.]

(தா—ம்) பொதுவில் ஸித்திகள் 5 வகைப்படும். (1) ஜன்மஜம் (2) மந்த்ரஜம் (3) ஓஷதிஜம் (4) தபோஜம் (5) ஸமாதிஜம். மானிடப் பிறவியிலனுஷ்டிக்கப் பட்டதும், ஸ்வர்க்க

உபஜீவ்ய உபஜீவகபாவம் என்று பலவிதமாய்ப் பிரிக்கப்பட்டிருக்கிறது. स्मृतस्य उपेक्षानर्हत्वं प्रसङ्गः। ஓர் விஷயத்தை நிரூபணம் செய்தவுடன், ஸாதிருச்யம் முதலிய தொடர்பால் மற்ருெரு விஷயமும் ஸ்மரிக்கப்பட்டு அவ்விஷயமும் அங்கு நிரூபிக்கப்படுமாயின் அங்கு பிரஸங்கம் என்ற ஸங்கதியாகும். चिन्तां प्रकृतसिद्ध्यर्थामुपोद्घातं विदुर्बुधाः। அவச்யமாய் மேல் நிரூபிக்கவேண்டிய விஷயத்திற்காக முகவுரையாய் முன்னர் கூறப்படும் விஷயத்திற்கும், பின்னர் கூறப்படும் விஷயத்திற்குமுள்ள ஸம்பந்தமானது உபோத்காதம் எனப்படும்.

போகத்தைத் தரக்கூடியதுமான கர்மாவானது பலனைக் கொடுக்க வாரம்பிக்கும் பொழுது யாதானும் ஓர் தேவவகுப்பில் பிறவியை யடைகிறான். அப்பொழுது அவனுக்குப்பிறவி யேற்பட்டவுடனே யே அணிமாமுதலிய ஸித்திகளுண்டாகின்றன. இந்த ஸித்திக்கு ஜந்மஜஸித்தி என்றுபெயர். ஓர்மனிதன் ஏதோ ஒருகாரணத்தால் அஸுரராஜனின் வீட்டை யடைந்து அங்குள்ள அஸுரகன்னி கைகளால் கொடுக்கப்பட்ட ரஸாயனத்தைப்பானம் செய்து ஜரை, மரணம் முதலியனவற்றிருத்தல் என்றது முதலிய ஸித்தி களைப் பெறுகிறான் என்றோ, அல்லது இவ்விடத்திலேயே ரஸா யனஸேவையால் மேற்கூறியஸித்திகளைப்பெறுகிறான் என்றோ வைத்துக்கொள்வோம். இத்தகைய ஸித்தியானது ஒஷதிஜஸித்தி எனப்படும். மந்திரஜபத்தா லுண்டாகும் ஆகாசகமனம் முத லிய ஸித்திகள் மந்திரஜஸித்தி எனப்படும். விச்வாமித்திராதிக ளுக்கு தபோபலத்தாலுண்டான ஸித்தியானது தபோஜஸித்தி எனப்படும். மூன்றுவது பாதத்தில் அந்தந்த வஸ்துக்களில் ஸம்யமத்தா லுண்டாவதா யுபதேசிக்கப்பட்ட ஸித்திகள்யாவும் ஸமாதிஜ ஸித்திகள் எனப்படும். ஆகவே ஸித்திகள் 5 விதங்களா கின்றன. (எ—று)

(அ—கை) தபோபலத்தால் நந்திகேசுவரருக்கு பரமேசுவ ரானுக்கிரஹ முண்டாகி மானிடசரீரமே தேவசரீரமாக மாறி விட்டதாய்ச் சொல்லப்படுகின்றது. இவ்விடத்தில் நந்திகேசுவர ருக்கு ஏற்பட்ட தேவசரீரத்திற்கு மனுஷ்யதேஹமே உபா தானகாரணம் என்று சொல்ல முடியாது. ஏனெனில் மனு ஷ்ய சரீரமிருக்கும் பொழுதே தேவாதிசரீராந்தர பரிணமம் ஸம்பவிக்கா தென்பதுபற்றியே என்க. நஷ்டமானவஸ்துவுக்குக் காரணமாகும் தன்மைஸம்பவிக்காதானது பற்றி நஷ்டமான மனுஷ்யசரீரம் காரணம் என்றும் சொல்லவியலாது. மனுஷ்ய சரீரத்தை யுண்டுபண்ணின அவயவங்களேதேவாதிசரீரத்திற்கும் காரணமாகின்றன என்றுமங்கீகரிக்கமுடியாது. மனுஷ்யதே ஹத்தை மாத்திரமுண்டு பண்ணச்சக்தி பெற்ற அவயவங்களுக்கு மனுஷ்ய தேஹத்தைக்காட்டிலும் வேறுன கார்யத்தை யுண்டாக் குதல் சம்பவிக்காதென்பதுபற்றியே என்க. ஆகவே நந்தீசுவரா

திகளுக்கு தேவாதிசரீரப்பிராப்தி எவ்விதம்ஸம்பவிக்கும்எனின்? இதனுல் பதிலளிக்கிருர்.

सू० ॥ जात्यन्तरपरिणामः प्रकृत्यापूरात ॥ २ ॥

(ஸூ) ஜாத்யந்தரபரிணும: ப்ரகிருத்யாபூராத்

(ப–ரை) [मनुष्यादिजातिपरिणतानां कायेन्द्रियाणाम् (மனுஷ்யாதிஜாதிபரிணதானும் காயேந்திரியாணும்) மனுஷ்யாதி வடிவமாய் மாறுபாட்டை யடைந்த சரீரம், இந்திரியம் இவற்றின் அவயவத்திற்கு] **जात्यन्तरपरिणाम:** (ஜாத்யந்தரபரிணும:)=தேவாதி சரீரரூபமான மாறுதலானது **प्रकृत्यापूरात्** (ப்ரக்ருத்யாபூராத்)=தேவாதி சரீரத்திற்கு பிரகிருதியின் (அவயவத்தின்) அனுப்ரவேசத்தால் [**भवति** (பவதி)=உண்டாகின்றது]

(தா–ம்) பிரதானம் முதல் பிருதிவீ முதலிய பஞ்சபூதங்கள் வரையுள்ள தத்துவங்களை இங்குள்ள **प्रकृति** என்ற பதத்தால் கிரஹித்துக்கொள்ள வேண்டும். இவைகள் தான் மானிடசரீரத்திற்கும், தேவசரீரத்திற்கும் பொதுவான காரணமாகின்றன. அந்தப்பிரகிருதிகள் எங்குமிருப்பதால் தேவாதி சரீராரம்பகமான பிரதானம் முதல்பிருதிவி முடியவுள்ள பிரகிருதியினுடைய அவயவங்களின் அனுப்ரவேசமானது மனுஷ்யசரீராவயவங்களில் எப்பொழுது ஸம்பவிக்கின்றதோ அப்பொழுது மனுஷ்ய சரீரத்திற்கு நாசமும், தேவாதிசரீரவடிவமான பரிணுமமும் உண்டாகின்றது. மனுஷ்யசரீராவயவங்களில் தேவசரீராரம்பகமான பிரகிருதியின் அனுப்ரவேசமேற்படுவதற்கு, அதர்மம் முதலியபிரதிபந்தகநிவிருத்திவாயிலாக யோகியின் ஸங்கல்பம், யோகத்தாலுண்டான தர்மம் இவைகளை நிமித்தகாரணமா யங்கீகரிப்பதால் எப்பொழுதுமே தேவாதிசரீர பரிணுமமுண்டாகட்டும் என்ற ஆசங்கைக்கிடமில்லை. (எ–று)

(அ–கை) மேற்சொல்லியபிரகிருதியின் ஆபூரமானது தர்மம் முதலிய நிமித்தத்தை அபேக்ஷிக்கின்றதா? இல்லையா? அபேக்ஷிக்காவிடில் எங்கும் ப்ரகிருத்யாபூரம், என் உண்டாகக்கூடாது? தர்மாதி நிமித்தத்தை அபேக்ஷிக்குமாயின் தர்மாதிகளுக்கே பிர

கிருதியைத்தூண்டுதல் என்பது ஏற்படுமாதலால் புருஷார்த்தமானது பிரகிருதிப்பிரவர்த்தகமாகின்றது என்ற ஸித்தாந்தபங்கம் ஏற்படுமன்றோ, என்று ஸங்கேஹித்து பதிலளிக்கிறார்.

सू० ॥ निमित्तमप्रयोजकं प्रकृतीनां वरणभेदस्तु ततः क्षेत्रिकवत् ॥ ३ ॥

(ஸூ) நிமித்தமப்ரயோஜகம் ப்ரக்ருதீனும் வரணபேதஸ்து தத: க்ஷேத்ரிகவத் (3)

(ப—ரை) **निमित्तम्** (நிமித்தம்)=தர்மாதர்மாதிகள் **प्रकृतीनाम्** (ப்ரக்ருதீனும்)=பிரகிருதிகளுக்கு அதாவது: காரணங்களுக்கு **अप्रयोजकम्** (அப்ரயோஜகம்)=தூண்டுவதாக வாவதில்லை. அதாவது: பிரகிருதியின் பிரவிருத்திக்குக் காரணமாவதில்லை. **तु** (து)= ஆனல் **ततः** (தத:)=அந்தத்தர்மத்தினுல் **वरणभेदः** (வரணபேத:)= பிரதிபந்தக நிவிருத்தியானது **क्षेत्रिकवत्** (க்ஷேத்ரிகவத்)=பயிர்த் தொழில் செய்பவனுல் போல [**भवति** (பவதி)=உண்டாகின்றது]

(தா—ம்) நிரீஶ்வர ஸாங்கியஸித்தாந்திகள் தான், உண்டாக வேண்டிய நிலையிலிருக்கின்ற புருஷார்த்தம் பிரகிருதியின் பிரவிருத்திக்குக்காரணம் என்று அங்கீகரிக்கின்றனரே யொழியயோகிகள் அவ்விதமங்கீகரிப்பதில்லை. புருஷார்த்தத்தை யுத்தேசித்து ஈசுவரன் பிரகிருதியை பிரவிருத்திக்கும்படி தூண்டுகின்றான் என்பதே ஸேஶ்வரயோகிகளின் ஸித்தாந்தமாகும். ஆகவே புருஷார்த்தமுத்தேச்யமாவதுபற்றி பிரவர்த்தகம் என்று வியவஹரிக்கப்படுகின்றதே யின்றி ஸ்வதந்திரமாய் புருஷார்த்தமே பிரகிருதிப்பிரவிருத்திக்கு ஹேதுவாக வாவதில்லை. லோகத்தில் குடத்தையுண்டுபண்ணுகின்ற குயவனில்லாவிடில் குடத்தினுல் மட்டும் அதன்காரணங்களான மண், சக்கிரம் முதலியவைகள் தூண்டப்பட்டு அதனதன் கார்யத்தைச் செய்வதாய்க் காண்கின்ரோமா? இல்லை. அவ்விதமே தான் பிரகிருதிப் பிரவிருத்தி விஷயத்திலும் அங்கீகரிக்க வேண்டும். தர்மாதிகளும் பிரகிருதியின் கார்யமாயிருப்பதால் பிரகிருதியின் பிரவிருத்திக்குக் காரணமாவதில்லை. அதாவது: கார்யமானது காரண பாதந்திரமாயி

ருப்பதால் பிரகிருதியைய னுஸரித்துண்டாகின்ற தர்மாதிகளுக்கு பிரகிருதிப்பிரவிருத்தியில்நிமித்தமாகுதல்என்பதுஸம்பவிக்காது. ஆனால் தர்மாதிகளால் பிரகிருதியின் பிரவிருத்திக்குப் பிரதிபந்தகமானது விலக்கப்படுகின்றது. அதாவது: பயிர்களுக்குத் தண்ணீர் பாய்ச்சும் குடியானவன் ஜலம் நிறைந்த ஒரு வயலினின்றும் மற்றொரு வயலுக்கு அந்த ஜலத்தைப் பாயும்படி செய்யவிரும்பி தடைசெய்து கொண்டிருந்த வரப்பை மட்டும் ஓரிடத்தில் வெட்டிவிடுகின்றான். அவ்விதம் செய்தவுடன் ஜலம் தானாகவே மறு வயலில் பாய்ந்து விடுவதுபோல தர்மாதிகளால் தேவாதிசரீரமாக மாறுவதற்குப் பிரதிபந்தகமாகவிருந்த அதர்மம் விலக்கப்படுகின்றது. பிரதிபந்தகம் விலகினபடியால் பிரகிருதியின் பிரவிருத்தியுண்டாகிறது. ஆகவே தர்மாதிகளுக்கு பிரதிபந்தக நிவிருத்தியில் நிமித்தத்வமேயின்றி பிரகிருதிப்பிரவிருத்தியில் நிமித்தமாகுந்தன்மை கிடையா என்று ஏற்பட்டது. தர்மத்தினால் அதர்மம் பிரதிபந்திக்கப்படுவது போலவே அதர்மத்தால் தர்மமும் பிரதிபந்திக்கப்படலாம். நஹுஷன் தேவசரீரத்தை இழந்து மலைப்பாம்பாகவானதே இதற்கு உதாஹரணமாகும். (எ-று)

(அ—கை) யோகியானவன் ஒரேஸமயத்தில் அனேகவிஷயங்களை யனுபவிப்பதற்காக அனேக சரீரங்களை எடுத்துக்கொள்ளுவானேல் அவையாவற்றிற்கும் சித்தம் என்பது ஒன்றா? அல்லது ஒவ்வொரு சரீரத்திற்கும் ஒவ்வொரு சித்தம் வீதம் அனேகமா? என்று ஸந்தேஹித்து சித்தம் அனேகம் என்று உபதேசிக்கிறார்.

सू० ॥ निर्माण चित्तान्यस्मिता मात्रात् ॥ ४ ॥

(ஸூ) நிர்மாண சித்தாந்யஸ்மிதா மாத்ராத்

(ப—ரை) **अस्मिता मात्रात्** (அஸ்மிதா மாத்ராத்)=அஹங்காரத்தினின்றும் **निर्माण चित्तानि** (நிர்மாண சித்தானி)—**निर्माण** (நிர்மாண)=யோகியின் ஸங்கல்பத்தை யனுஸரித்த அஹங்காரரூப பிரகிருதியின் அவயவானு ப்ரவேசத்தாலுண்டான **चित्तानि** (சித்தானி)=மனதுகளை யுடையனவாக [**भवन्ति** (பவந்தி)=ஆகின்றன.]

(தா—ம்) யோகியானவன் பிரகிருத்யாபூரத்தால் அனேகம் சரீரங்களை யடைவதுபோல, அஸ்மிதை என்ற சித்தகாரணமான

பிரகிருதியின் ஆபூரத்தால் அநேகம் சித்தங்களை யடைகின்றான். லோகத்தில்சரீரபேதமிருந்தால்சித்தபேதமிருப்பதைக்கண்கூடாகக் கண்டிருப்பதால் இங்கும் ஒவ்வொரு சரீரத்திற்கும் ஒவ்வொரு சித்தம் வீதம் அநேகம் சித்தங்களேயே அங்கீகரிக்க வேண்டும். (எ-று)

(அ—கை) காயவ்யூஹஸ்தலத்தில் சித்தத்தை அநேகமாயங்கீகரித்தால் எல்லா சித்தங்களுக்கும் அபிப்ராயமொற்றிருத்தலும், மற்றொரு சரீரத்தில் அனுபவித்ததை மற்றொரு சரீரத்திலுள்ள சித்தம் நினைத்தலும் ஸம்பவிக்காதாகையால் சித்தத்தையொன்றாகத்தான் அங்கீகரிக்கவேண்டும் என்ற ஆக்ஷேபத்திற்குப்பதிலளிக்கப்படுகின்றது.

सू० ॥ प्रवृत्तिभेदे प्रयोजकं चित्तमेकमनेकेषाम् ॥ ५ ॥

(ஸூ) ப்ரவ்ருத்திபேதே ப்ரயோஜகம் சித்தமேகமனேகேஷாம் (5)

(ப—ரை) **अनेकेषाम्** (அனேகேஷாம்)=யோகியால் உண்டுபண்ணப்பட்ட அனேகம் சித்தங்களுக்கு **प्रवृत्ति भेदे** (ப்ரவ்ருத்தி பேதே)=அததற்கேற்பட்டத் தனித்தனி வியாபாரத்தில் **प्रयोजकम्** (ப்ரயோஜகம்)=தூண்டுகின்ற **एकम्** (ஏகம்)=ஒரு **चित्तम्** (சித்தம்)= (மனத்தை [**निर्मिमीते** (நிர்மிமீதே)=உண்டுபண்ணுகிறான்.]

(தா—ம்) யோகியானவன் தனது ஸங்கல்பமாத்திரத்தாலேயே அனேகம் சித்தங்களை யுண்டுபண்ணி அவற்றை அந்தந்தவியாபாரத்தில் தூண்டுகின்ற வேறு சித்தமொன்றையும் ஏற்படுத்திக்கொள்ளுகிறான். ஆகவே பிரதானமான அந்த ஒருசித்தத்தின் தூண்டுதலை யனுஸரித்தே மற்ற சித்தங்கள் பிரவிருத்திப்பதால் விரோதம் யாதும் ஸம்பவிக்காது. ஓர் மஹாராஜனானவன் எவ்விதம் தனது ராஜ்யத்தை அநேகம் இலாகாக்களாகப் பிரித்து அவற்றிற்குத் தனித்தனியே பலவதிகாரிகளை நியமித்த போதிலும், எல்லா இலாகாக்களையும் மேற்பார்வை பார்க்கக்கூடிய மற்றொரு அதிகாரியை நியமித்து அவனது ஆக்ஞைக்குக்கீழ்ப்படியும்படி செய்து அவன் வாயிலாகத்தான் கோறியதை யெல்லாம்

அடைகின்றானோ அவ்விதமே இங்கும்யோகியானவன் முதலில்அ னேகம் சரீரங்களைப் படைத்து அவற்றில் அதிகாரிகளைப் போல மனத்தையும் கற்பிக்கிறான். பிறகு ஒன்றுடன் மற்றொன்றுவிரோ தமின்றி பிரவிருத்திக்குமாறு அவற்றை தூண்டக்கூடியதும், ஸகலசித்த அபிப்பிராயத்தை யறிந்ததுமான வேறொரு சித்தத் தையு முண்டுபண்ணுகிறான். (எ-று)

(அ—கை) **मन्त्रौषधि** என்ற முதல் ஸூத்திரத்தால் கூறிய ஐந்துவித சித்திபெற்ற சித்தங்களுள் மோக்ஷத்தை யடையக் கூடிய யோக்யதை பெற்ற சித்தமின்னதென்பதை நிரூபணம் செய்கிறார்:—

ஸூ० ॥ तत्र ध्यानज मनाशयम् ॥ ६ ॥

(ஸூ) தத்ர த்யானஜ மனாசயம் (6)

(ப—ரை) **तत्र** (தத்ர)=சித்திபெற்ற சித்தங்களுள் **ध्यानजम्** (த்யானஜம்)=ஸமாதியால் ஸம்ஸ்கரிக்கப்பட்ட சித்தமே **अनाशयम्** (அனாசயம்)=கர்மவாஸனை கிலேசவாஸனை இவைகளற்றதாகவா கும். ஆதலால் அதுவே கைவல்யத்தை யடையக்கூடிய யோக்ய தை யுள்ளதாகவுமாகும் என்று கருத்து.

(அ—கை) ஆறாவது ஸூத்திரத்தால் கூறியவிஷயத்திற்கு காரணமுபதேசிக்கப்படுகின்றது

ஸூ० ॥ कर्माऽशुक्लाकृष्णं योगिनस्त्रिविधमितरेषाम् ॥ ७ ॥

(ஸூ) கர்மாசுக்லாக்ருஷ்ணம் யோகின: த்ரி விதமிதரேஷாம். (7)

(ப—ரை) **योगिनः** (யோகின:)=யோகியினுடைய **कर्म** (கர்ம)= கர்மாவானது **अशुक्लाकृष्णम्** (அசுக்லாகிருஷ்ணம்)=சுக்லமாகவும், கிருஷ்ணமாகவுமிலாததாக [**भवति** (பவதி)=ஆகின்றது.] **इतरेषाम्** (இதரேஷாம்)=மற்றவர்களுடைய **कर्म** (கர்ம)=கர்மாவானது **त्रिविधम्** (த்ரிவிதம்)=சுக்லமாகவும், கிருஷ்ணமாகவும்,சுக்லகிருஷ்ண மாகவு மாகின்றது.

(தா—ம்) கர்மாவானது சுக்லம், கிருஷ்ணம், சுக்லகிருஷ் ணம், அசுக்லாகிருஷ்ணம் எனநான்குவிதமாகும். இவற்றையே

புண்ணியம் என்றும், பாபம் என்றும், புண்ணிய பாபம் என்றும், அபுண்ணியா பாபம் என்றும் சொல்லுவர். அவற்றுள் சிறிதும் துக்கஸம்பந்தமற்ற ஸுகத்தையே பயனாகவுடைய கர்மம் சுக்லம் எனப்படும். இஃதே புண்ணியமெனப்படும். அத்தகைய கர்மாவானது ஸ்வாத்யாயாத்யயனம், தவம் இவற்றை மட்டும் செய்து வருபவருக்கு ஸம்பவிக்கும். துக்கத்தை மாத்திரம் பயனாகவுடைய கர்மம் கிருஷ்ணம் எனப்படும். இஃதே பாபமெனப்படும். இத்தகைய கர்மமானது ஹிம்ஸை, பொய் முதலிய கார்யங்களிலேயே பற்றுள்ளவர்களுக்கு ஸம்பவிக்கும். ஸுகம், துக்கம் இரண்டும் கலந்த பயனையுடையதும், வெளியிலுள்ள தயிர், நெய், நெல் முதலியஸாதனங்களைக் கொண்டு செய்யக்கூடியதுமான கர்மம் சுக்லகிருஷ்ணம் எனப்படும். இஃதே புண்ணிய பாபமெனப்படும். அதாவது: யாகாதிகள் சுக்லகிருஷ்ணம் எனப்படும். ஏனெனில் யாகாதிகர்மங்களில் நெல்முதலியவற்றைக்குத்தி அரிசி யெடுக்கும்பொழுது எறும்பு முதலியவற்றின் ஹிம்ஸையும், தக்ஷிணாதானம் முதலியவற்றால் பரோபகாரமும் ஸம்பவிப்பதால் இக்கர்மம் சுக்லகிருஷ்ணம் எனப்படுகின்றது. யோகியின்,அல்லது ஸன்னியாஸியின் கர்மம் அசுக்லாகிருஷ்ணம் எனப்படும். இஃதே அபுண்ணியாபாப மெனப்படும். யோகியானவன் பாஹ்யவஸ்துக்கள் யாவற்றையும் விலக்கி விட்டபடியால் அவனுக்கு வெளியிலுள்ள வஸ்துக்களால் ஸாதிக்கக்கூடிய யாகாதிரூபமான சுக்லகிருஷ்ண கர்மமானது ஸம்பவிப்பதற்கில்லை. அவித்யா அஸ்மிதாதிரூபமான க்லேசங்கள் யாவும் விலகிவிட்டபடியால் கிருஷ்ணம் எனப்படும் பாபகாரியமும் ஸம்பவிப்பதற்கில்லை. யோகானுஷ்டானத்தாலுண்டான தர்மத்தையும் அதன் பலனையும் விரும்பாமல், ஈசுவரனிடம் ஸமர்ப்பணம் செய்துவிட்டபடியால் கேவல சுக்லரூபமான (புண்யரூபமான) கர்மமும் ஸம்பவிப்பதற்கிடமில்லை. ஆதலால் யோகியின் யோகானுஷ்டானத்தாலுண்டான தர்மமானது சித்தசுத்தி, வைராக்யம் இவை வாயிலாக மோக்ஷம் ஒன்றையே பயனாகவுடையதாக வாகின்றபடியால் அசுக்லா கிருஷ்ண கர்மாவாக வாகின்றது என்று பெறப்பட்டது. ஆகவே யோகி ஒருவனுடைய சித்தம்மட்டுமே

பந்தஹேதுவான கர்மாவற்றதாயாகின்றதே யன்றி மற்றவர்க ளின் சித்தமவ்வித மாவதில்லை. ஆதலால் யோகியின் சித்தமே மோக்ஷயோக்யமாகின்றது என்று தீர்மானிக்கப்பட்டது.

(அ—கை) யோகிகளைத்தவிர மற்ற வர்களுக்கு மேற்கூறிய கர்மங்கள் இருந்தபோதிலும் போக வாஸனையானது அபிவ்யக் தமாக வாகாமலிருக்குமாயின் ஓர்ஸமயம் ஏன் மோக்ஷமுண் டாகக்கூடாது ? ஆகவே தியானத்தால் ஸம்ஸ்கரிக்கப்பட்ட சித் தம் ஒன்றுதான் கைவல்யத்தை யடையக்கூடியதாக வாகும் என்று சொன்னது எங்ஙனமெனின் ? பதிலளிக்கிறார்.

ஸூ० ॥ ततस्तद्विपाकानु गुणानामेवाऽभिव्यक्तिर्वासनानाम् ॥

(ஸூ) ததஸ்தத்விபாகானு குணாநாமே வாபி வ்யக்திர்வாஸனாநாம். (8)

(ப—ரை) **ततः** (தத:)=மேற்கூறிய மூன்றுவிதமான கர்மங்க ளினின்றும் **तद्विपाकानुगुणानाम्** (தத்விபாகானுகுணாநாம்)=அந்தந்த கர்மபலனான ஜாதி, ஆயுஸ், போகம் இவற்றிற்கு அனுகுணமான **वासनानाम्** (வாஸனாநாம்)=ஸம்ஸ்காரங்களுக்கு **अभिव्यक्तिः** (அபி வ்யக்தி:)=வெளிப்படுதலானது **(भवति एव)** (பவதி, ஏவ)=நிச்சய மாயுண்டாகியே தீருகின்றது.

(தா—ம்) ஓர்கர்மாவானது தனதுபயனைக் கொடுக்க வாரம் பிக்கும் பொழுது தேவமனுஷ்யாதி ஜன்ம, அதற்குரிய ஆயுள், அந்தப் பிறவியிலேற்படவேண்டிய ஸுகதுக்கானுபவம் ஆகிய மூன்றுவிதமான பயனைக்கொடுக்கின்றது. ஆதலால் எந்தக்கர்மத் தால் எந்தப்பிறவி முதலியன வுண்டாகின்றனவோ அவற்றிற்கு அனுகுணமான வாஸனைகளும் அச்சமயத்தில் நிச்சயமாய் அபிவ் யக்தியை யடைந்தே தீருகின்றன. அதாவது: ஜீவனுக்கு ஜன்ம பரம்பரை என்பது அநாதியாகையால் ஒரு ஜீவன் பசு, பக்ஷி, தேவன், மனுஷ்யன் முதலிய பலஜன்மங்களை யடைந்து அவ்வவற் றிற்குரிய விஷயங்களை யனுபவித்து, அதன் மூலமவற்றின் ஸம்ஸ் காரங்களையு மடைந்திருக்கக்கூடு மாதலால் எந்தக்கர்மத்தினால் எத்தகைய பிறவியுண்டாகின்றதோ அந்தப்பிறவியில் அந்தப்பிற

விக்குத் தகுதியான போகவாஸனைகள் அந்தப்பிறவியைக் கொடுத்த கர்மத்தினலேயே அபிவ்யக்தியை யடைகின்றன. தேவனுய் பிறவியையடைந்தால் முந்திய தேவஜன்மத்திலனுபவித்த போக வாஸனைகளும், மிருகமாய் பிறந்தால் முந்திய மிருகஜன்மத்திய போகவாஸனைகளும் அபிவ்யக்தியை யடைகின்றன. அதாவது: ஒருவன்முந்தினபிறவியில் மனிதனுயிருந்து தனது கர்மங்காரணமாய் பூனையாய்ப்பிறந்தான் என்று வைத்துக்கொள்வோம். இப் பூனைப் பிறவியில் அம்மனிதப் பிறவிக்கு முந்திய பூனைப்பிறவியில் நேர்ந்துள்ள எலியைப் பிடிப்பதற்குறிய ஸம்ஸ்காரமானது அபிவியக்தியை யடைந்துவிடுகின்றது. என்று கொள்ளவேண்டும். இவ் விதம் அந்தந்த ஜன்மாவுக்குத் தகுதியான வாஸனைகளின் அபிவ்யக்தியை மட்டும் அங்கீகரிப்பதில் யாதுகாரணம் எனின்? அந்தந்த ஜன்மாவைக் கொடுக்கின்ற கர்மமே காரண மென்கிறோம். ஆதலால் மானிட ஜன்மத்தில், தேவபோக வாஸனைக்கு அபிவ்யக்தி ஏன் உண்டாகக்கூடாது? என்ற ஆசங்கை செய்யக்கூடாதென்று மேற்பட்டது. வாஸனை என்றால் யாது? எனின், கூறுவாம். விஷயங்களை யனுபவிப்பதால் சித்தத்திலுண்டாகின்ற ஓர்வித தர்மமோ அல்லது அனுபவத்தின் ஸூக்ஷ்ம நிலையோ வாஸனை எனப்படும். (எ—று)

(அ—கை) ஸ்வர்க்கத்தில் தேவசரீரத்துடன் பிறந்த பொழுதுண்டான அனுபவத்தால் ஏற்பட்ட வாஸனைகள் அனேகஜன்மங்கள் கடந்த பிறகு மறுபடியுமுண்டாகின்ற அத்தேவப் பிறவியில் அபிவ்யக்தியை யடைகின்றன வென்பது எங்ஙனம்? தேவ ஜன்ம முண்டாவதற்கு அவ்யவஹித பூர்வமான (அடுத்தபடியாய் முந்தியதான) ஜன்மத்தில் ஸம்பாதிக்கப்பட்ட வாஸனைகள் தான் மிகவும் ஸமீபித்திருப்பதால் அவற்றிற்கேயன்றோ அடுத்த தேவாதிப் பிறவியில் அபிவ்யக்தியை யங்கீகரித்தலுசிதமாகும் என்று ஸந்தேஹித்து இதனல் பதிலளிக்கிறார்.

सू० ॥ जातिदेशकालव्यवहितानामप्यानन्तर्यं स्मृतिसंस्कारयोरेकरूपत्वात् ॥ ९ ॥

(ஸூ) ஜாதி தேச கால வ்யவஹிதா நாமப்யா

நந்தர்யம் ஸ்மிருதி ஸம்ஸ்காரயோ ரேகரூபத்வாத்

(ப—ரை) जातिदेश कालव्यवहितानामपि (ஜாதிதேச காலவ்ய வஹிதா நாமபி)—जाति (ஜாதி)=பிறவி देश (தேச)=ஸ்வர்க்க மனுஷ்யலோகாதி தேசம் काल (கால)=பல்லாயிர வருஷம் முதலிய காலம் இவற்றால் व्यवहितानामपि (வ்யவஹிதா நாமபி)=விலகிஇருந்தபோதிலும் [वासनानाम् (வாஸனானாம்)=வாஸனைகளுக்கு] आनन्तर्यम् (ஆனந்தர்யம்)=வ்யவதான மற்றதுபோல் கார்யத்தைச் செய்யும் சக்தியானது [कल्पते (கல்ப்யதே)=அங்கீகரிக்கப்படுகின்றது]. स्मृतिसंस्कारयोः (ஸ்மிருதிஸம்ஸ்காரயோ:)=நினைவு, அதன் காரணமான ஸம்ஸ்காரம் இவ்விரண்டிற்கும் एकरूपत्वात् (ஏகரூபத்வாத்)=நினைவு, அதன் ஸம்ஸ்காரம் இரண்டு மொற்றிருப்பது அவச்யமாதல் பற்றியே [एवमङ्गीक्रियते (ஏவமங்கீக்ரியதே)=இவ்வித மங்கீகரிக்கப் படுகின்றது.]

(தா—ம்) ஒருஜீவனுக்கு மானிடஜன்ம மேற்படின் இம்மானிட ஜன்மமேற்படுவதற்கு கல்பகோடி காலம் முந்தியாவது உண்டாயிருக்கின்ற முந்திய மானிட ஜன்ம வாஸனைகள் தான் அபிவ்யக்தியை யடைகின்றனவே யின்றி இம்மானிட ஜன்மத்திற்கு முந்தியதான தேவாதி ஜன்ம வாஸனைகள் அபிவ்யக்தியை யடைவதில்லை. ஏனெனில் அவ்வித மனுபவமிருப்பதே அதன் காரணமாகும். அதாவது: பிறந்த வுடனேயே குழந்தைக்கு ஸ்தன்யபானத்தில் பிரவிருத்தி யுண்டாகின்றது என்பது யாவருமறிந்தவிஷயம். அந்த முதலாவது ஸ்தன்யபானப் பிரவிருத்தியானது, "ஸ்தன்யபானம் இஷ்டஸாதனம்" என்ற ஸ்மிருதிரூபமான க்ஞானத்தை முன்னிட்டே ஏற்பட்டிருக்கவேண்டும். அந்த ஸ்மிருதியானது அதற்கனுகுணமான வாஸனையின் அபிவ்யக்தியன்றியில் ஏற்படமாட்டாது. அந்த ஸ்தன்யபான வாஸனையோ அவ்யவஹித பூர்வமான தேவஜன்மத்தைச் சேர்ந்ததல்ல. பின்னேயோ வெனில் மனுஷ்ய ஜன்மாவைச் சேர்ந்ததாகவேயாகும். ஆதலால் ஒரு மனிதஜன்மம் ஏற்பட்டு பல்லாயிறம் பசு பக்ஷயாதி ஜன்மங்கள் கடந்து பிறகு மற்றொரு மனித ஜன்மமேற்படினும் முந்திய மனிதஜன்ம வாஸனைகள் மட்டுமே இந்த

மனிதஜன்மாவில் அபிவ்யக்தியை யடைகின்றன. இவ்வித மங்கீகரிக்காவிடில் அனுபவ விரோதம் வரும். இவ்விதமே மற்றஸம்ஸ்காரங்கள் விஷயத்திலு மூஹிக்கவேண்டும். (எ—று)

(அ—கை) இந்த ஜன்மத்திற்கு முந்தியதாய் வேறொரு ஜன்மமிருந்தாலல்லவோ அந்த முந்தியஜன்மவாஸனைகள் அபிவ்யக்தியை யடைகின்றன வென்று சொல்வது பொருந்தும்? அவ்விதம் இந்தஜன்மத்திற்கு முந்தியதாய் வேறொரு ஜன்மமிருக்கின்றதென்று அங்கீகரிப்பதில் பிரமாணமில்லாததால் அதை அங்கீகரிப்பதில்லை என்று சொல்லும் சார்வாகர்களின் ஸித்தாந்தத்தைக் கண்டிக்கிறார்.

सू० ॥ तासामनादित्वं चाशिषो नित्यत्वात् ॥ १० ॥

(ஸூ) தாஸாமநாதித்வம் சாசிஷோ நித்யத்வாத் (10)

(ப—ரை) **आशिषः** (ஆசிஷ:)=எப்பொழுதும் உயிருடனேயே இருக்கவேண்டும், மரணத்தை யடையக்கூடாது என்ற பிரார்த்தனைக்கு **नित्यत्वात्** (நித்யத்வாத்)=எல்லாப் பிராணிகளிடத்திலுமிருத்தல் என்பதிருப்பதால் **तासाम्** (தாஸாம்)=முந்திய ஜன்மவாஸனைகளுக்கு **अनादित्वं च** (அனாதித்வம் ச)=ஆதியற்றிருத்தலும் அங்கீகரிக்கத்தக்கது.

(தா—ம்) பொதுவில் எல்லாப் பிராணிகளுக்கும் "நான் எப்பொழுது மிருக்கவேண்டும். மரணத்தையடையக்கூடாது" என்ற எண்ணமானதிருக்கின்றதென்பது யாவருமறிந்த விஷயம். பால் குடிக்கும் குழந்தையும் மாதாவின் மடியினின்றும் சிறிதளவு நழுவி விடின் உடம்பில் ஓர்விதநடுக்கத்தை யடைந்து கெட்டியாய் தனதுதாயின் மாங்கள்யஸூத்திரத்தையோ, புடவையையோ பிடித்துக்கொள்ளுகின்றதை நாம் நேரில் பார்க்கிறோம். இதிலிருந்து அக்குழந்தைக்கும் நாம் எப்பொழுதுமே உயிருடனேயே இருக்கவேண்டும் என்ற எண்ணமானதிருப்பதாய் ஊஹிக்கப்படுகின்றது, இவ்வெண்ணத்திற்குக் காரணம் மரணபயம் என்றே அங்கீகரிக்கவேண்டும். பொதுவாய் லோகத்தில்

ஒருவஸ்துவில் பயம்(த்வேஷம்) என்பது, "இவ்வஸ்து அநிஷ்டத்தை விளைவிக்கக்கூடியது" என்ற க்ஞானமின்றி ஸம்பவிப்பதில்லையாதலால் இங்கும் மரணத்வேஷம் என்பது மரணத்தில் அநிஷ்ட ஸாதன க்ஞானமுண்டாகியே ஏற்பட்டிருப்பதாய் அங்கீகரிக்கவேண்டும். மரணவிஷயமான அனிஷ்டஸாதனக் ஞானமானது இப்பிறவியில் குழந்தைக்கு அனுபவரூபமாய் ஏற்பட்டிருப்பதாய்ச்சொல்லமுடியாதாகையால் இந்தக்ஞானத்தை ஸ்மிருதிரூபமாகவே தான் ஸ்வீகரிக்கவேண்டும். ஆகவே ஸ்மிருதியானது (நினைவானது) அதற்கனுகுணமான வாஸனையின் அபிவ்யக்தியின்றி ஸம்பவிக்காதாகையாலும், அவ்வாஸனையானது அதற்கனுகுணமான அனுபவமின்றி ஸம்பவிக்காதாகையாலும், மரணானுபவமுள்ள முந்தியஜன்ம மொன்றிருப்பதாய்அவச்யமங்கீகரித்தே தீரவேண்டும், அம்முந்திய ஜன்மத்திலும் மரணபயமானது இருக்கக்கூடுமாதலால் அதுவும் மேற்கூறியமுறைப்படி அதற்கு முந்திய ஜன்மத்தைக்கல்பிக்கின்றது. ஆகவே இம்முறைப்படி ஒவ்வொரு ஜன்மமும் தனக்கு முந்தியதாய் ஜன்மமிருப்பதைக் கல்பித்தலால் வாஸனைகளுக்கும் ஆதியற்றிருத்தல் என்பது ஏற்பட்டது. (எ—று)

(அ-கை) மேற்சொல்லியபடி வாஸனைகள் அனாதியாக விருந்தபோதிலும் அவைகளை முற்றிலும் அழித்த லென்பது ஸாதிக்கக்கூடியதே என்பதை உபதேசிக்கிறார்—

ஸூ॰ ॥ हेतु फलाश्रयालंबनैस्संगृहीतत्वादेषामभावे तदभावः॥

(ஸூ) ஹேது பலாச்ரயாலம்பனைஸ்ஸம் க்ருஹீதத்வா தேஷாமபாவே ததபாவ: (11)

(ப—ரை) हेतुफलाश्रयालंबनैः (ஹேது பலாச்ரயாலம்பனை:)—
हेतु (ஹேது)=அவித்யா அஸ்மிதா முதலிய கிலேசரூபமான காரணம் **फल** (பல)=ஜாதி (பிறவி) ஆயுள், போகம் இவைகளாகிற பலன் **आश्रय** (ஆச்ரய)=மனதாகிற ஆச்ரயம் **आलंबनैः** (ஆலம்பனை:)=சப்தாதி விஷயங்களாகிற ஆச்ரயம் இவற்றால் **संगृहीतत्वात्** (ஸம்க்ருஹீதத்வாத்)=வ்யாப்தியுள்ள தாயிருப்பதால் அதா

வது: இவைகளுடன் சேர்ந்தே இருப்பதால் **एषाम्** (ஏஷாம்)= மேற்கூறிய ஹேது முதலியவற்றின் **अभावे** (அபாவே)=இல்லாமை ஏற்பட்டால் **तदभावः** (ததபாவ:)=வாஸனையின் இல்லாமையும் [**भवति** (பவதி)=உண்டாகின்றது.]

(தா—ம்) அனித்யமாயுள்ளதை நித்யம் என்றும், அசுத்தமா யுள்ளதை சுத்தமென்றும், துக்கத்தை ஸுகமென்றும், ஆத்மா வாகவில்லாததை ஆத்மாவென்றும் எண்ணுவது "அவித்யை" என்று 2வது பாதம் 5வது ஸூத்திரத்தி லுபதேசிக்கப்பட்டிருக் கிறது. இத்தகைய அவித்யையே வாஸனைக்கு க்காரணம் எனப் படும். தேவாதிஜன்மா, 100 வருஷ ஜீவிதம் முதலிய ஆயுஸ், ஸுகதுக்கானுபவம் என்றபோகம் இவைகள் வாஸனையின்பலன் கள் எனப்படும். மனதானது வாஸனைக்கு ஆதாரம் எனப்படும். சந்தனம், மாலை, வஸ்திரம், ஸ்திரீகள் முதலிய விஷயங்கள் ஆலம் பனம் எனப்படும். ஆகவே வாஸனைகள் யாவும் மேற்கூறிய நான்குவிஷயங்களை யண்டியிருப்பதால் ஹேது முதலியவைகள் விவேகக்யாதியால் நாசமடையுமாயின் வாஸனைகளும்நாசமடைந்து விடுகின்றன. (எ—று)

(அ—கை) **नासतो विद्यते भावः नाऽभावो विद्यते सतः** "இல்லாதது உண்டாவதில்லை, இருப்பதற்கு இல்லாமை கிடையா" என்று கீதாசாரியின் உபதேசித்திருப்பதால் ஸத்தாகவிருக்கின்ற வாஸனைகளுக்கு நாசம் எங்ஙனம் ஸம்பவிக்கும் எனின்? பதிலளிக்கிறார்—

सू० ॥ अतीतानागतं स्वरूपतोऽस्त्यध्वभेदाद्धर्माणाम् ॥ १२ ॥

(ஸூ) அதீதாநாகதம் ஸ்வரூபதோஸ்தி அத்வபேதாத்தர்மாணாம் (12)

(ப—ரை) **धर्माणाम्** (தர்மாணாம்)=குடம் முதலிய கார்யங்களுக்கு **अध्वभेदात्** (அத்வபேதாத்)=அதீதம்,வர்த்தமானம், பவிஷ்யத் என்ற அவஸ்தைகள் ஒவ்வொரு வஸ்துவிலும் தனித்தனியே அனுபவிக்கப்படுவதால் **अतीतानागतम्** (அதீதாநாகதம்)=சென்ற காலம், வருங்காலம் இவற்றை ஸம்பந்தித்த வஸ்துவும் **स्वरूपतः** (ஸ்வருபத:)=சத்திருபமாய் **अस्ति** (அஸ்தி)=இருக்கின்றது.

(தா—ம்) ஸத்தாக விருக்கக்கூடிய வஸ்துவுக்கு முற்றிலும் இல்லாமை ஸம்பவிக்காதென்பதை நாமும் அங்கீகரிக்கிறோம். அதாவது: ஒருகாரியத்திற்கு மூன்றுவிதமான அவஸ்தைகளிருக்கின்றன. (1) அதீதாவஸ்தா (2) வர்த்தமானுவஸ்தா (3) அனுகதாவஸ்தா என்பனவாம். எந்தக்காரியத்திற்கு அபிவ்யக்தி (வெளிப்படுதல்) ஏற்பட்டு மறைந்து விட்டதோ அந்தக்காரியத்தை அதீதாவஸ்தை என்கிறோம். எந்தக் காரியத்திற்கு எச்சமயத்திற் றனது காரியத்தைச்செய்யும் திறமை ஸம்பவிக்கின்றதோ அந்த நிலையானது வர்த்தமானுவஸ்தை எனப்படும். உதாஹரணமாய்—ஒரு குடத்தை எடுத்துக்கொள்வோம். அது அதன் காரியமான ஜலத்தைக் கொண்டுவருதல் என்பது முதலியகாரியத்தைச் செய்வதற்கு எப்பொழுது ஸமர்த்தமாகின்றதோ அந்நிலையையே அதற்கு வர்த்தமானுவஸ்தை என்கிறோம். எந்தக் காரியத்திற்கு அபிவ்யக்தி (வெளிப்படுதல்) என்பது இனி வரப்போகின்றதோ அந்நிலையை அனுகதா வஸ்தை என்கிறோம். இம்மூன்றுவித அவஸ்தைகளுள் யாதானுமோர் அவஸ்தையை எக்கார்யமும் அடைந்துகொண்டுதா னிருக்கும். ஆகவே இம்மூன்றுவித அவஸ்தைகளும் அதற்கு ஆதாரமான காரியம் ஸ்திரமாக (அழிவற்றதாக) இல்லாவிடில் ஸம்பவிக்காதாகையால் காரியமான வஸ்துவும் எப்பொழுது மிருப்பதாகவே தானங்கீகரிக்க வேண்டும். ஆனதுபற்றியே பகவான் கீதையில் "**वेदाहं समतीतानि वर्तमानानि चार्जुन। भविष्याणि च भूतानि॥** நான் சென்ற வஸ்துக்களையும், நிகழ்காலஸம்பந்தியான வஸ்துக்களையும், இனிவரப்போகின்ற வஸ்துக்களையும், நேரில் ஸாக்ஷாத்கரிப்பேன்" என்று சொல்லியது பொருத்தமுள்ளதாகவே யாகின்றது. கார்யமானது உண்டாவதற்கு முன்னும், பின்னும் முற்றிலு மில்லாதிருக்குமாயின் அதற்கு ப்ரத்யக்ஷவிஷயத்வம் என்பது எவ்விதம் ஸம்பவிக்கும். ஆதலால் கார்யமானது உண்டாவதற்கு முன்னும், நாசமடைந்ததற்குப் பின்னும் சக்திரூபமாய் காரணத்திலிருப்பதாகவே தான் அங்கீகரிக்கவேண்டும். இவ்விதம் சக்திவடிவமாய் காரணத்திலொடுங்கியிருக்கும் கார்யங்களையே யோகிகள் **परिणामत्रयसंयमा**

दतीतानागतज्ञानम् என்று கூறியபடி ஸம்யமம் செய்வதால் நேரில் ஸாக்ஷாத்கரிக்கின்றனர்.

ஆகவே வாஸனைகளும் ஸத்கார்ய வஸ்துக்களாகையால் முற்றிலும் நாசமடைய மாட்டாவாயினும் அவைகள் வர்த்தமானாவஸ்தையை எப்பொழுது அடைகின்றனவோ, அப்பொழுதே சித்தமானது துக்காதிவாஸனாபி வ்யக்தியுள்ளதாய்க்கொண்டு கணக்கிட முடியாத பரிணாமத்தை யடையக்கூடியதாக வாகின்றன. அந்நிலையே "பந்தம்" என்றும் "ஸம்ஸாரம்" என்றும் சொல்லப்படும். தத்துவக்ஞானத்தினால் வாஸனைகள் அதீதாவஸ்தையை யடைவிக்கப்படுமாயின் அப்பொழுது சித்தமானது அதிகாரமற்றதா யாகின்றபடியால் பந்தகமாக ஆவதில்லை. மறுபடியும் வர்த்தமானாவஸ்தை என்ற அபிவ்யக்தியை யடைவதற்கு நிமித்தமான "செய்யவேண்டியபுருஷார்த்தம்" என்பது விவேகக்கியாதியை யடைந்த சித்தமுள்ளவனுக்கு ஸம்பவிக்காதாகையால் வாஸனைகள் மறுபடியும் அபிவ்யக்தியை யடைவதில்லை. ஆதலால் மோக்ஷநிலையிலும் வாஸனைகள் சக்திவடிவமாயிருந்தபோதிலும் அவைபந்தகமாக வாவதில்லை என்றேற்பட்டது. (எ—று)

(அ—கை) சென்றகாலம், வருங்காலம் இவற்றைஸம்பந்தித்த வஸ்துவும் ஸ்வரூபத்தால் அக்காலங்களிலுமிருக்கின்றனவென்று முந்திய ஸூத்திரத்தா லுபதேசிக்கப்பட்டது. அத்தகைய ஸ்வரூபம் என்பது யாது? என்பதை இந்தச் சூத்திரத்தாலுபதேசிக்கிறார்.

सू० ॥ ते व्यक्तसूक्ष्मा गुणात्मानः ॥ १३ ॥

(ஸூ) தே வ்யக்தஸூக்ஷ்மா குணாத்மான:

(ப—ரை) **व्यक्तसूक्ष्माः** (வ்யக்தஸூக்ஷ்மா:)—**व्यक्त** (வ்யக்த)= வர்த்தமான காலஸம்பந்தத்தை யடைந்தனவாயும் **सूक्ष्माः** (ஸூக்ஷ்மா:)=சென்றகாலம், வருங்காலம் இவற்றின் ஸம்பந்தத்தை யடைந்தனவாயுமுள்ள **ते** (தே)=மஹத்தத்துவம் முதல் குடம் முதலிய விசேஷமிருகவுள்ள கார்யங்கள் **गुणात्मानः** (குணாத்மான:) ஸத்வம், ரஜஸ், தமஸ் என்ற மூன்று குணங்களின் ஸ்வரூபமாக விருக்கின்றன.

(தா—ம்) உலகிலுள்ள எல்லாப்பொருள்களும் ஸுகம், துக்கம், மோஹம் என்ற குணம்பொருந்தியிருப்பதுபற்றி அவற்றிற்கு ஸுகதுக்க மோஹரூபமான ஸத்வம், ரஜஸ், தமஸ் என்ற குணங்களைப் பிரகிருதியா யடைந்திருத்தல் (காரணமா யடைந்திருத்தல்) என்பது நிச்சயிக்கப்படுவதால் அக்கார்யங்களை முக்குண ஸ்வரூபமாகவே யங்கீகரிக்கவேண்டும். உதாஹரணம்—குடம் முதலிய கார்யங்கள் மண்ணுடன் எப்பொழுதும் சேர்ந்தே இருப்பதால் குடம் முதலிய கார்யங்களை மண்ஸ்வரூபமாகவே யங்கீகரிப்பதுபோலவே இங்கும் காண்க. மேற்கூறிய உதாஹரணத்திற்கண்ட அனுபவத்தையனுஸரித்து காரியம் காரணம் இவ்விரண்டிற்கும் பேதாபேதரூபமான தாதாத்மியத்தை (அதாவது: சில பாகத்தால் பேதத்தையும், சில பாகத்தால் வேற்றுமையில்லாமையையும்) அங்கீகரித்திருப்பதாலும் கார்யங்களுக்கு காரணமான முக்குண வடிவமாயிருத்தல் என்பது நிலைநாட்டப்படுகின்றது. ஸத்வம் முதலிய குணங்கள் நித்யமானவைகள். அதன் பரிணமங்களான கார்ய வஸ்துக்கள் யாவும் ஒவ்வொரு க்ஷணத்திலும் மாறும் ஸ்வபாவ முள்ளவைகளாகவும், ஒவ்வொரு க்ஷணத்திலும் நாசத்தையடைகின்றன வாகவுமாகின்றன. புருஷன் எனப்படும் தத்துவமோ வெனில் பிரகிருதியான ஸத்வம் முதலிய குணங்கள், விகிருதியான மஹத்முதலிய காரியங்கள் இவற்றை விட வேறுபட்டதா யிருக்கின்றது. ஆனது பற்றியே புருஷன் கூடஸ்தன் எனப்படுவன். இவ்விதமே பாஷ்யத்திலும்,

गुणानां परमं रूपं न दृष्टिपथमृच्छति ।
यत्तु दृष्टिपथं प्राप्तं तन्मायेव सुतुच्छकम् ॥

"ஸத்வம் முதலிய குணங்களின் பாரமார்த்திக ரூபமானது (உண்மையான ஸ்வரூபமானது) கண்ணுக்குப் புலப்படுவதில்லை. எந்தஸ்வரூபம் கண்ணால் பார்க்கப்படுகின்றதோ அது மாயையைப் போல் க்ஷண காலத்திற்குள் நாசத்தை யடையக்கூடியது. அதாவது: இந்திரஜாலத்தால் காண்பிக்கப்பட்ட பொருளுக்கொப்பானது" என்றதாலுபதேசிக்கப் பட்டிருக்கிறது.

சங்கை—உலகிலுள்ள கார்யங்கள் யாவற்றிற்கும் ஸத்வம் முதலிய மூன்று குணங்கள் மட்டுமே காரணமாக வாகுமாயின் கார்யங்களில் காணப்படும் வேற்றுமை எவ்விதம் பொருந்தும்? காரண வைசித்திரியம் (வேற்றுமை) இல்லாவிடில் கார்யத்திலும் வைசித்திரியம் ஸம்பவிக்காதன்றோ! எனின்?

உத்தரம்—ஸகல காரியங்களுக்கும் மூலகாரணமான பிரகிருதியில் அநாதியாய் விசித்திரமான,* கிலேசவாஸனைகளிருக்கின்றன. அவற்றின் பேதத்தை யனுஸரித்து கார்யத்திலும் வேற்றுமை ஏற்படுகின்றது. வாயுபுராணத்திலும் **वैश्वरूप्यात्प्रधानस्य-परिणामोयमद्भुत:** என்றதாலிவ்விதமே உபதேசிக்கப்பட்டிருக்கிறது. இவ்விஷயம் வாசஸ்பதி மிச்ரரின் உரையில் கூறப்பட்டிருக்கிறது. (எ—று)

(அ—கை) மஹத்தத்துவம் முதலிய கார்யங்கள்யாவும் ஸத்வம் முதலிய மூன்று குணங்களின் பரிணாமரூபமா யாகுமாயின் பரிணாமமான மஹத், அஹங்காரம் முதலியவற்றில் "மஹத்தத்துவம் என்பது ஒன்று, அஹந்தத்துவம் என்பது ஒன்று" என்ற வியவஹாரம் எவ்விதம் பொருந்தும்? உண்மையில் அவற்றில் முக்குணங்களைத் தவிர்த்து வேறுவிதமான ஸ்வரூபமில்லை என்று கூறப்பட்டிருப்பதால் மூன்றை ஒன்று என்று வியவஹரித்தலானது, ஒன்று என்று வியவஹரிப்பதற்குவேண்டிய அஸாதாரண நிமித்தமில்லாவிடில் சம்பவிக்காதன்றோ! என்று ஸந்தேஹித்து பதிலளிக்கிறார்.—

सू० ॥ परिणामैकत्वाद्वस्तुतत्त्वम् ॥ १४ ॥

(ஸூ) பரிணாமைகத்வாத் வஸ்துதத்வம் (14)

(ப—ரை) [**गुणानाम्** (குணானாம்)=ஸத்வம் முதலிய குணங்களுக்கு] **परिणामैकत्वात्** (பரிணாமைகத்வாத்) – **परिणाम** (பரிணாம)= ஒரு குணம் பிரதானமாகவும், மற்றகுணங்கள் அதற்கு அங்கமாகவுமிருத்தல் என்ற முறையில் **एकत्वात्** (ஏகத்வாத்)=ஒற்றுமை

* அவித்யை, அஸ்மிதை, ராகம், த்வேஷம், அபிநிவேசம்; இவ்வைந்தும் கிலேசங்களெனப்படும்.

என்பதிருப்பதால் **वस्तुतत्त्वम्** (வஸ்துதத்வம்)=மஹத் முதலியதத் துவங்களில் ஏகத்வம் (ஒறுமை) [**संभवति** (ஸம்பவதி)=ஏற்படுகின் றது.]

(தா—ம்) லோகத்தில் அநேகம் வஸ்துக்கள் ஒன்றுகச் சேர்ந்து ஒரேவிதமான பரிணமத்தை யடைகின்றன வென்பதை நாம் கண்டிருக்கிறோம். உதாஹரணம்—திரி, எண்ணெ முதலிய வைகள் ஒன்றுகச் சேர்ந்து தீபமாய் மாறுகின்றன. இவ்விதமே ஸத்வம் முதலிய குணங்களும் ஒன்றுகச் சேர்ந்து ஒரேவிதமான தர்மமுள்ள வஸ்துவாகமாறுகின்றன. ஆனல் அவ்விதம் மாறும் பொழுதுமூன்றுகுணங்களும்ஸமப்பிரதானமா யிருந்துகொண்டு மாறுவதில்லை. ஒருகுணம் பிரதானமாகவும், மற்றவை அதற்கு அங்கமாகவுமாகின்றன. ஆகவே பரிணமத்திலிருக்கும் ஸத்வம் முதலிய குணங்களின் அப்பிரதான பிரதான பாவமுறை என் பது ஒன்றுகையால் அதை யனுஸரித்தே "மஹத்தத்துவம் என்பது ஒன்று, அஹங்தத்துவம் என்பது ஒன்று" என்றது முதலிய பரிணமத்தை யாச்ரயித்த ஏகத்வ (ஒறுமை) வியவ ஹாரமானது ஏற்படுகின்றது. ஸத்வகுணம் பிரதானமாகவும், மற்ற ரஜஸ் தமஸ் என்ற குணங்கள் அப்பிரதானமாகவுமாகும் பொழுது அம்மூன்று குணங்களுக்கும் மஹத் என்ற பரிணம முண்டாகின்றது. ரஜஸ் என்ற குணம் பிரதானமாகவும், மற்ற குணங்கள் அப்பிரதானமாகவு மாகும்பொழுது அம்மூன்று குணங்களுக்கும் அஹங்காரம் என்ற பரிணமமுண்டாகின்றது. தமஸ் என்ற குணம் பிரதானமாகவும், மற்றவைகள் அதற்கு அங்கமாகவு மாகும்பொழுது அம்மூன்று குணங்களுக்கும் பஞ்ச தந்மாத்திரைகள் என்ற பரிணம முண்டாகின்றது. இவ்வித மே ஸத்வப்பிரதானமான அஹங்காரத்தினின்றும் க்ஞானேந்திரி யங்களும், ரஜோகுணபிரதானமான அஹங்காரத்தினின்றும், கர்மேந்திரியங்களும், ஸத்வம், ரஜஸ் இரண்டும் ஸமமாகவுள்ள அஹங்காரத்தினின்றும் மனஸ் என்ற இந்திரியமு முண்டாகின் றன. தந்மாத்திரை என்ற தத்துவம் ஐந்து விதமாகும். அவை யாவன. (1) சப்ததந்மாத்திரை (2) ஸ்பர்ச தந்மாத்திரை (3) ரூபதந்மாத்திரை (4) ரஸதந்மாத்திரை (5) கந்ததந்மாத்

திரை இவைகளேயாம். இவ்வைந்துள் சப்த தந்மாத்திரை பிரதானமாகவும் மற்றதந்மாத்திரைகள் அங்கமாகவு மாகும்பொழுது ஆகாசம் என்றபரிணமமும்,ஸ்பர்சதந்மாத்திரை பிரதானமாகவும், மற்றதந்மாத்திரைகள் அங்கமாகவு மாகும்பொழுது வாயு என்ற பரிணமமும், ரூபதந்மாத்திரை பிரதானமாகவும், மற்ற தந்மாத்திரைகள் அங்கமாகவு மாகும்பொழுது தேஜஸ் என்ற பரிணமமும், ரஸதந்மாத்திரை பிரதானமாகவும், மற்ற தந்மாத்திரைகள் அங்கமாகவு மாகும்பொழுது ஜலம் என்ற பரிணமமும், கந்ததந்மாத்திரை பிரதானமாகவும் மற்றதந்மாத்திரைகள் அங்கமாகவு மாகும்பொழுது பிருதிவீ என்ற பரிணமமுமுண்டாகின்றது. இவ்விதமே மற்றபரிணமங்கள் விஷயத்திலுமூஹித்தறியவேண்டும். ஆகவே மேற்கூறிய முறைப்படி குணங்களின் அங்கப்பிரதானபாவத்தையனுஸரித்து பரிணமத்தில் ஏகத்வம் என்பது ஸம்பவிக்கின்றது என்று ஏற்பட்டது. (எ—று)

(அ—கை) சங்கை—ஒவ்வொரு க்ஷணத்திலுமுண்டாகி நாசமடைகின்ற விக்ஞானத்தைத் தவிர்த்து லோகத்தில் வேறு வஸ்துவே கிடையா. எது அறியப்படுகின்றதோ அது அறிவைக் காட்டினும் வேறுபட்டதல்ல. க்ஞானம் என்பது தன்னாலேயே அறியப்படுகின்றது பற்றி எவ்விதம் ஞானத்தினும் வேருகவாவதில்லையோ அவ்விதமே குடம் முதலிய வஸ்துக்களும் அறியப்படக்கூடிய நிலையிலிருப்பதுபற்றி க்ஞானத்தினும் வேறுபட்டதல்ல. க்ஷணிக விக்ஞானங்கள் தான் அநாதியான விசித்திர வாஸனை யுள்ளனவாய்க்கொண்டு குடம், வஸ்திரம் முதலிய ரூபமாய்த் தோற்றத்தை யடைகின்றன. ஆதலால் க்ஞானத்தைக் காட்டிலும் வேருனவஸ்துவே இல்லாதிருப்பதால் "கார்யங்களின் உண்மையான ஸ்வரூபம் ஸத்வம் முதலிய குணங்களே" என்று சொன்னது எங்ஙனம் பொருந்தும்? என்று ஆக்ஷேபிக்கின்ற பௌத்தர்களின் மதத்தைக் கண்டிக்கிருர்.

सू० ॥ वस्तुसाम्येऽपि चित्तभेदात्तयोर्विभक्तः पन्थाः ॥ १५ ॥

(ஸூ) வஸ்துஸாம்யேபி சித்தபேதாத் தயோர்விபக்த: பந்தா: (15)

(ப—ரை) **वस्तुसाम्येऽपि** (வஸ்துஸாம்யேபி)=அறியப்படும் வஸ்துவானது ஒன்றாக விருந்தபோதிலும் **चित्तभेदात्** (சித்தபேதாத்)= சித்தம் எனப்படும் க்ஞானத்திற்கு பேதமானது (வேற்றுமையானது) இருப்பதால் **तयोः** (தயோ:)=க்ஞானம், அறியப்படும்பொருள் இவற்றினுடைய **पन्थाः** (பந்தா:)=மார்க்கமானது **विभक्तः** (விபக்த:)=பிறிந்திருக்கின்றது.

(தா—ம்) அறியப்படும் வஸ்துவானது ஒன்றாக விருந்தபோதிலும் அறிகின்ற மனிதர்களின் பேதத்தை யனுஸரித்து வெவ்வேறான அறிவுகள் உண்டாகின்றன. உதாஹரணமாய் ஒரு ஸ்திரீ வியக்தியை எடுத்துக்கொள்வோம். அவளைப்பற்றி அவளது கணவனுக்கு ஸுகக்ஞானமும், சக்களத்திமார்களுக்கு துக்கக்ஞானமும், அவளிடம் ஆசைகொண்ட மற்ற புருஷனுக்கு மோஹக்ஞானமும், ஆசையற்ற புருஷனுக்கு உபேக்ஷாக்ஞானமுமுண்டாகின்றது. இவ்விஷயம் யாவருக்கு மனுபவத்தி லிருக்கக் கூடியதே. இவ்விடத்தைக் கவனிப்போம். ஒரே ஸ்திரீவியக்தி என்ற வஸ்துவில் கணவன், சக்களத்தி, காமுகன் விவேகி இவர்களுக்கு வெவ்வேறான க்ஞானமுண்டாகின்றது. ஆகவே வஸ்து ஒன்றாக விருப்பினும் அவற்றைப்பற்றிய க்ஞானம் அனேகமாயுண்டாகலாமென்று ஏற்படுவதிலிருந்து க்ஞானம்,விஷயம் இவ்விரண்டிற்கும் வேற்றுமை நன்கு அறியப்படுவதால் க்ஞானத்தையும், விஷயத்தையும் ஒன்றாகச்சொல்வது முற்றிலு மனுபவத்திற்குப் பொருந்ாததே. அதாவது: எது ஒன்றாகவிருக்கின்றதோ அது அனேகமா யிருப்பதினும் வேறுபட்டதென்பதை நீயும் அங்கீகரித்திருக்கிறாய். ஒன்றாக விருக்கின்ற நீல விக்ஞானத்தையும், அனேமாயிருக்கினற பீதாதிவிக்ஞானத்தையும் நீயே ஒன்றாகவொப்பாமல் தனிப்பட்டதா யங்கீகரிக்கின்றாயன்றோ, அதுபோல் வஸ்துவானது ஒன்றாகவும், அதைப்பற்றி யுண்டாகின்ற விக்ஞானங்கள் அனேகமாகவு மிருப்பதால் இரண்டையுமொன்றாகச் சொல்லுதல் பொருந்தாது.

மேலும் க்ஞானத்தைவிட பாஹ்ய வஸ்துக்களில்லாவிடில் விக்ஞானங்களுக்கு நீலம், ரக்தம் முதலிய ஆகாரங்கள் எவ்விதம்

ஸம்பவிக்கும்? ஆதலால் க்ஞானத்தைக் காட்டினும் வேறாய் வெளியில் வஸ்துக்களை யங்கீகரித்தேதான் தீரவேண்டும். ஒரே விதமான வஸ்துவில் அநேகரூபமான புத்தி எவ்விதம் உனது மதத்தில் பொருந்துமெனின்? கூறுவாம். உதாஹரணமாய்— ஒரு ஸ்திரீ வியக்தியையே எடுத்துக்கொள்வோம். இந்த ஸ்திரீ வியக்தி என்ற அர்த்தமானது ஸத்வம், ரஜஸ், தமஸ் என்ற மூக் குண வடிவமாயிருப்பதால் அந்தஸ்திரீ வியக்தியைப்பார்க்கின்ற வர்களின் தர்மாதி நிமித்தபேதங்களை யனுஸரித்து ஸுக, துக்க, மோஹ, உபேக்ஷாக்ஞானங்க ளுண்டாகின்றன. அதாவது: அந்த ஸ்திரீ வியக்தியைப்பார்க்கின்ற அவளது கணவன் விஷயத் தில் அவனிட முள்ள தர்மம் என்ற காரணத்தால் அவளிடம் ஸத் வம் என்ற குணம் விருத்தியடைவதால் கணவனுக்கு அந்தஸ்திரீ வியக்தியினிடம் ஸுகக்ஞானமும், சக்களத்திமார்களிடமுள்ள அதர்மத்தினால் மேற்கூறிய ஸ்திரீயினிடம் ரஜோகுணம் தலைத் தூக்குவதால் சக்களத்திமார்களுக்கு துக்கக்ஞானமும், மேற் கூறிய ஸ்திரீ வியக்தியினிடம் ஆவல்கொண்ட காமுகன் விஷயத் தில் அந்தக்காமுகனிடமுள்ள அவித்தை காரணமாய் அவளிடம் தமோகுணம் விருத்தியடைவதால் அந்தக்காமுகனுக்கு மோஹக் ஞானமும், விவேகியின் விஷயத்தில் அவளிடம் மூன்று குணங்க ளும் ஸாம்யாவஸ்தையை யடைவதால் விவேகிக்கு உபேக்ஷாக் ஞானமுமுண்டாகின்றது. ஆகவே ஒரே வஸ்துவினிடம் அனேகம் க்ஞானமுண்டாவதில் யாதும் விரோதமில்லையாதலால் க்ஞானம், அர்த்தம் இவற்றிற்கு பேதமில்லை என்று சொல்லுவதுதான் அனுபவத்திற்கும், யுக்திக்கும் பொருந்தாததாகவாகின்றது.

(அ—கை) "விக்ஞானத்தைக் காட்டினும் வேறாய் வஸ்து வானது இருக்கின்றதாயினும் அது ஜடமாயிருப்பதால் க்ஞா னத்தினால் தான் பிரதிபாஸத்தை (தோற்றத்தை) அடையவேண் டியதாக விருக்கின்றது. ஆதலால் அறியப்படும் வஸ்துக்கள்யா வும் க்ஞானமிருக்கும் ஸமயத்தில் மட்டுமே இருக்கின்றன. மற்ற ஸமயத்திலு மிருப்பதா யங்கீகரிப்பதற்குவேண்டிய பிரமாண மில்லாதபடியால் வஸ்துவைப்பற்றிய அறிவில்லாத ஸமயத்தில் அவ்வஸ்து விருப்பதா யங்கீகரிப்பதில்லை. மேலும், ஸுகம்,

துக்கம் இவைகள் அனுபவிக்கக் கூடியதாயிருப்பதால் அவற்றை அனுபவதசையில் மட்டுமிருப்பதாய் எவ்விதம் அங்கீகரிக்கின்றோமோ அவ்விதமே மற்றகுடம் முதலியவஸ்துக்களும் அனுபவிக்கக்கூடியதாயிருப்பதால் அனுபவதசையில் மட்டுமே தானிருப்பதாயங்கீகரிக்கவேண்டும்." என்று சொல்லும் * திருஷ்டி ஸிருஷ்டிவாதிகளின் மதமிதனால் கண்டிக்கப்படுகின்றது.

सू०॥ नचैकचित्ततन्त्रं वस्तु तदप्रमाणकं तदा किं स्यात् ॥१६॥

(ஸூ) நசைகசித்ததந்த்ரம் வஸ்து ததப்ரமாணகம் ததா கிம் ஸ்யாத் (16)

(ப—ரை) **वस्तु** (வஸ்து)=குடம்முதலிய வெளிவஸ்துவானது **एकचित्ततन्त्रम्** (ஏகசித்ததந்த்ரம்)=ஒருவனுடைய சித்தாதீனமாக அதாவது: ஒருவனது க்ஞானத்தாலுண்டுபண்ணப் பட்டதாக **न** (ந)=ஆகமாட்டாது. **तदा** (ததா)=ஒரு வஸ்துவை யுண்டு பண்ணின சித்தமானது வேறொரு விஷயத்தில் பிரவிருத்திக்கும் பொழுது **तत्** (தத்)=முதலாவது க்ஞானத்தால் உண்டுபண்ணப் பட்ட குடம் முதலிய வஸ்துவானது **अप्रमाणकम्** (அப்ரமாணகம்) தன்னையுண்டுபண்ணிய க்ஞானமாகிற பிரமாணமற்றிருப்பதால் **किंस्यात्** (கிம்ஸ்யாத்)=இருக்குமா என்ன? இருக்கமாட்டாது.

(தா—ம்) திருஷ்டி ஸிருஷ்டி வாதியை நாம் அடியில் வரும் முறைப்படி கேழ்வை கேட்கவேண்டும். அதாவது :—வெளியிலுள்ள வஸ்துக்கள் யாவும் க்ஞானத்தாலுண்டாவதாய் நீ சொல்லுகிறாய். அவ்விதமாயின் குடம் என்ற வஸ்துவானது சைத்திரன், மைத்திரன் முதலிய பலபுருஷர்களின் சித்தத்தாலுண்டு பண்ணப்படுகின்றதா? அல்லது யாதானுமொருவனது சித்தத்தால்மட்டு முண்டுபண்ணப்படுகின்றதா? இவற்றுள் அனேகர்களின் க்ஞானத்தால் ஒருவஸ்து உண்டு பண்ணப்படுகின்றதென்பது பொருந்தாது. ஏனெனில் — க்ஞானஸமகாலிகமாகமட்டுமுள்ள வஸ்துக்கள்யாவும், ஸ்வப்னதசையில் அனுபவிக்கப்படும் வஸ்துவைப்போல ஒருவனது சித்தத்தாற் கற்பிக்கப்பட்டதாக

* இது நாகோஜி பட்டரின் வியாக்கியானத்தை யனுஸரித்தது.

வாகுமேயொழிய அனேக சித்ததந்திரமாக வாகமாட்டாது. ஸ்வப்பினத்தில் அனுபவிக்கப்படும் வஸ்துக்கள்யாவும் ஸ்வப்ன ஸமகாலிகமேயொழிய அதற்குப்பிறகு அவை இருப்பனவாயங்கீ கரிப்பதில்லை. அந்த ஸ்வப்ன தசையிலனுபவிக்கப்படுகின்ற வஸ் துக்கள் ஒருவனது சித்தாதீனமே யொழிய அனேக சித்தாதீன மல்ல. இது எவ்விதமோ அவ்விதமேதான் ஜாக்கிரத்காலத்திய வஸ்துக்களையும் சித்தாதீனமாயங்கீகரித்தால் ஒரு சித்தாதீன மாக மட்டுமே தானங்கீகரிக்கவேண்டும். மேலும், வஸ்துக்களை அனேக சித்தாதீனமா யங்கீகரித்தால்—ஒருவன் முதலில் ஒரு குடத்தைப்பார்த்துக் கொண்டிருக்கும்பொழுது பிறகு பலர்கள் அதே குடத்தைப்பார்க்க ஆரம்பிப்பார்களாயின் காரணபேத மேற்படுவதால் முந்திய குடத்தைக்காட்டினும் வேறாய் ஒரு குடம் உண்டாகவேண்டி நேரிடும். அவ்விதமுண்டாவதாகவோ நாமனுபவத்தில் காணவில்லை. ஆதலால் பாஹ்ய வஸ்துக்கள் அனேக சித்தகாரியம் என்பது பொருந்தாது. ஒருவனது சித் தத்தினால் குடம் முதலியன வுண்டுபண்ணப்படுகின்றன என்ப தும் பொருந்தாது. ஏனெனில்—சைத்ரான் என்ற ஒருபுருஷனை எடுத்துக்கொள்வோம். அவனுக்கு "இது குடம்" என்ற க்ஞா னமுண்டாகுமாயின் அந்தக்ஞானத்தில் விஷயமான குடம் என்ற வஸ்துவானது சைத்திரனுடைய க்ஞானத்தாலுண்டு பண்ணப் பட்டதா யங்கீகரிக்கவேண்டும். அதே சைத்திரன் குடத்தை விடுத்து "இது வஸ்திரம்" என்றக்ஞானத்தை யடைவானாயின் முந்திய "குடம்" என்ற க்ஞானமில்லாதிருப்பதால் "குடம்" என்ற வஸ்துவுமில்லை என்றேதான் அங்கீகரிக்கவேண்டிவரும். அவ்விதமோ அங்கீகரிக்கமுடியாது. ஏனெனில்—அதே சைத் திரன் முந்திய குடத்தையே மறுபடியும் பார்க்கும்பொழுது "அதே குடம்" என்று பிரத்யபிக்ஞையை அடைகிறான். (முன்னர் அனுபவித்த வஸ்துவும், இப்பொழுது அனுபவிக்கப் படும் வஸ்துவும், ஒன்றே என்ற அறிவு "பிரத்யபிக்ஞை" எனப் படும்). இது பொருந்தாம லாகிவிடும். ஏனெனில்—முந்திய க்ஞானதசையிலிருந்த குடத்தைவிட, தற்சமயமிருக்கும் குடமா னது வேறுபட்டிருப்பதுபற்றியே என்க. ஆகவே பிரத்யபிக்

ஞைக்குப்பங்கம் என்ற தோஷமிந்த இரண்டாவது கக்ஷியில்வரு கின்றது. மேலும், சைத்திரனுடைய சித்தாதீன மாகமட்டும் குடம் ஆகுமாயின் சைத்திரனுடைய சித்தமானது குடத்தைத் தவிர்த்து மற்ற வஸ்துக்களில் பற்றியிருக்கும்பொழுது குடமே இராதாகையால் மற்றவர்கட்குக் "குடம்" என்ற அனுபவம் உண்டாகாம லிருக்கும்படியும் நேரிடும். இதுவும் அனுபவ விருத்தம். ஆதலாலும் ஒருவனது சித்தாதீனமாக பாஹ்யவஸ் துக்களை யங்கீகரிக்கக் கூடாது.

மேலும், ஒருவன் ஒரு குடத்தின் ஒருபாகத்தை மட்டுமே பார்ப்பானுயின் மற்றபாகங்களைப் பார்க்காதபடியால் அவை யில்லை என்றே தீர்மானிக்கவேண்டிவரும். அங்ஙனமாயின் நம் மால் காணப்படும் பாகத்திற்கு வியாபகமான மற்றபாகங்களில் லாதபடியால் "வ்யாபகமில்லாவிடில் வியாப்யமிருக்காது" என்ற முறைப்படி நம்மால் காணப்படும் பாகமுமில்லை என்றுதான் அங் கீகரிக்க நேரிடும். அதுவோ அனுபவவிருத்தம். ஆதலால் வஸ்துக்கள் க்ஞானகாலத்தில் மட்டுமிருந்து பின்னர் நசிக்கக் கூடியதல்ல; க்ஞான முண்டாயினு முண்டாகாவிடினும் க்ஞேய மான வஸ்துக்கள் ஸ்திரமா யிருக்கக்கூடியனவென்றே ஏற்பட் டது. (எ—று)

குறிப்பு—இந்த 16வது சூத்திரத்திற்கு நாகோஜிபட்டரின் வியாக்யானத்தை யனுஸரித்தே உரை எழுதப்பட்டிருக்கிறது.

(அ—கை) யோகிகளின் ஸித்தாந்தப்படி சித்தம் என்பது விபு (எங்கு மிருக்கக்கூடியது) வாகையால் அதன் ஸம்பந்தம் எல்லாவிஷயங்களுக்கு மிருப்பதுபற்றி எல்லா விஷயங்களும் எப் பொழுதும் ஏன் அறியப்படக்கூடாது? ஒரு ஸமயத்தில் ஏதோ ஒரு விஷயம் மட்டும்தானே அறியப்படுகின்றது என்று ஆசங் கித்துப் பதிலளிக்கிறுர்.

सू० ॥ तदुपरागापेक्षत्वाच्चित्तस्य वस्तुज्ञाताऽज्ञातम् ॥ १७ ॥

(ஸூ) தது பராகாபேக்ஷத்வாத்சித்தஸ்ய வஸ் து க்ஞாதாக்ஞாதம். (17)

(ப—ரை) **चित्तस्य** (சித்தஸ்ய)=அந்தக் கரணத்திற்கு **तदुपरागापेक्षत्वात्** (ததுபராகாபேக்ஷத்வாத்)—**तत्** (தத்)=விஷயத்தின் **उपराग** (உபராக)=ஸம்பந்தத்தை **अपेक्षत्वात्** (அபேக்ஷத்வாத்)=எதிர்பார்த்தலிருப்பதால் **वस्तु** (வஸ்து)=வஸ்துவானது **ज्ञाताज्ञातम्** (க்ஞாதாக்ஞாதம்)=அறியப் பட்டதாகவும், அறியப் படாததாகவு மாகின்றது.

(தா—ம்) சித்தம் என்பது விபுவாக விருப்பதுபற்றி எங்கும் விஷய ஸம்பந்தத்தை யடைந்திருந்தபோதிலும், அந்த விஷயஸம்பந்தமானது சித்தத்தில் விஷயாகாரத்தை யுண்டுபண்ண ஸமர்த்தமாயாவதில்லை. சரீரத்திற்குள்ளிருக்கும் சித்தத்திற்கு இந்திரியங்கள் வாயிலாக பாஹ்ய வஸ்துக்களுடன் நேரும் ஸம்பந்தமே விஷயாகார ஸமர்ப்பணத்தைச் செய்வதற்குச் சக்தியுள்ளதாயாகின்ற தென்று அங்கீகரிக்கிறோம். இதுவே **तदुपरागापेक्षत्वात्** என்ற ஸூத்திரபதத்தால் குறிக்கப்படுகின்றது. ஆகவே எந்த விஷயமானது சரீரத்திலிருக்கும் இந்திரியங்கள் வாயிலாக சித்த ஸம்பந்தத்தை யடைந்து சித்தத்திற்கு விஷயவடிவமான ஆகாரத்தை ஸமர்ப்பணம் செய்கின்றதோ அந்த விஷயம் அறியப்பட்டதென்றும், அவ்விதமில்லாதது அறியப்படாதது என்றும், ஏற்பட்டது. (எ—று)

(அ—கை) சித்தம், அர்த்தம் இவ்விரண்டிற்கு முள்ளபேதத்தை பரீக்ஷைசெய்து முடித்து விட்டு, இனி சித்தம் புருஷன் இவ்விரண்டிற்குமுள்ள பேதத்தை பரீக்ஷை செய்கிறார்—

सू० ॥ सदा ज्ञाताश्चित्तस्य वृत्तय स्तत्प्रभोः पुरुषस्य ऽपरिणामित्वात् ॥ १८ ॥

(ஸூ) ஸதா க்ஞாதாச்சித்தஸ்ய வ்ருத்தய: தத்ப்ரபோ: புருஷஸ்ய அபரிணாமித்வாத் (18)

(ப—ரை) **तत्प्रभोः** (தத்ப்ரபோ:)=சித்தவிருத்திகளையனுபவிக்கின்ற **पुरुषस्य** (புருஷஸ்ய)=புருஷனுக்கு **अपरिणामित्वात्** (அபரிணாமித்வாத்)=பரிணாம மற்றிருத்தல் என்பதிருப்பதால் **चित्तस्य** (சித்தஸ்ய)=சித்தத்தினுடைய **वृत्तयः** (வ்ருத்தய:)=விருத்திகள் **सदाज्ञा**

ताः (ஸதாக்ஞாதா:)=எப்பொழுது மறியப்பட்டவைகளாக [भवन्ति (பவந்தி)=ஆகின்றன.]

(தா—ம்) சித்தத்திற்கு இந்திரியங்கள் வாயிலாக வெளிவஸ்துக்களின் ஸம்பந்த மேற்பட்டவுடன் அந்தந்த விஷயவடிவமாக பரிணும (மாறுதல்) முண்டாவதால் எந்தவிஷய வடிவமான மாறுதல் சித்தத்திற்குண்டாயிற்ருே அது அறியப்பட்டதென்றும், எந்த விஷயவடிவமான பரிணுமமுண்டாகவில்லையோ அது அறியப்படாததென்றும், முந்திய ஸூத்திரத்தா லுபதேசிக்கப்பட்டிருக்கிறது. ஆகவே சித்தவிஷயமான சப்தாதிகள் ஒரு ஸமயமறியப் படாததாயுமாகின்றது. புருஷனுக்கு விஷயமான சித்தவிருத்திகளோவெனில் எப்பொழுதும் புருஷனுல் அறியப்பட்டவைகளாகவே ஆகின்றன. சித்தத்தைப்போல் புருஷன் பரிணுமத்துடன் கூடியிருப்பானேயாகில் சப்தாதி விஷயங்களுக்குப்போல் சித்தவிருத்திகளுக்கும், அறியப்படாதநிலையும் ஸம்பவிக்கும். புருஷனே பரிணுமமற்றவன். ஆதலால் அவனது விஷயமான சித்தவிருத்திகளுக்கு அறியப்படாதநிலேயே ஸம்பவிப்பதில்லே. ஆகவே புருஷனுக்கும், சித்தத்திற்கும் "பரிணும மற்றிருத்தல்" "பரிணுமத்துடன் கூடியிருத்தல்" என்ற தர்மபேதத்தை யனுஸரித்து "எப்பொழுது மறியப்பட்ட விஷயத்துடன் கூடியிருத்தல்" "யாதானுமோர் ஸமயத்திலறியப்பட்ட விஷயத்துடன் கூடியிருத்தல்" என்ற தன்மையானது வேறுபடுவதால் புருஷன் சித்தம் இரண்டிற்கும் பேதம் நன்கு ஸித்திக்கின்றது. (எ—று)

(அ—கை) சித்தவிருத்திகள் அக்கினியைப்போல விஷயப்பிரகாசகமா யாவதுபோல, தன்னையும்பிரகாசப்படுத்துவதாயாகலாமாதலால் சித்தவிருத்திகளே யறிகின்றதாயும் (பிரகாசப் படுத்துகின்றதாயும்) சித்தத்தைவிட வேறுபட்டதாயு மிருப்பதாய் புருஷன் என்ற ஒரு தத்துவத்தை எதற்காக அங்கீகரிக்கவேண்டும்? என்று ஆசங்கித்து இதனுல் பதிலளிக்கிருர்—

सू० ॥ न तत्स्वाभासं दृश्यत्वात् ॥ १९ ॥

(ஸூ-ம்) ந தத்ஸ்வாபாஸம் த்ருச்யத்வாத் (19)

(ப-ரை) तत् (தத்)=அந்தச் சித்த விருத்திரூபமானது स्वाभासम् (ஸ்வாபாஸம்)=ஸ்வப்ரகாசமாக அதாவது:—தன்னைத்தானே பிரகாசப்படுத்துவதாக (அறிவதாக) न (ந)=ஆவதில்லை. दृश्यत्वात् (த்ருச்யத்வாத்)=நீலம், பீதம் முதலிய ரூபங்களைப்போல் "கோபமுள்ளவனாயிருக்கிறேன், சுகமுள்ளவனாயிருக்கிறேன்" என்ற விருத்திக்ஞானத்திற்கு விஷயமாயிருப்பதால்.

(தா-ம்) 'சித்தவிருத்திகள் ஸ்வப்ரகாசம்' என்ற விடத்திலுள்ள ஸ்வப்ரகாசம் என்ற பதத்திற்கு பொருள்யாது? தன்னைத்தவிர்த்து வேறுபடாததான ப்ரகாசக்கிரியைக்குக் கர்மமாயிருத்தல் ஸ்வப்ரகாசமாயிருத்தல் என்று கூறமுடியாது. ஏனெனில் கிரியைக்கும் கர்மாவுக்கும் ஒறுமை ஸம்பவிக்காதென்பது பற்றியே என்க. அதாவது :— தேவதத்தன் கிராமத்திற்குச் செல்லுகிறான் என்ற விடத்தை எடுத்துக்கொள்வோம். இங்கு கிராமம் என்பது கர்மா என்றும், செல்லுதல் என்பது கிரியை என்றும் சொல்லப்படும். இங்கு கர்மாவும் கிரியையும் தனிப்பட்டதாய்க் காணப்படுகின்றது. இவ்விதமே தான் பிரகாசம் என்ற கிரியாஸ்தலத்திலு மங்கீகரித்துத் தீரவேண்டும். ஆதலால் தன்னிலும் வேறுபடாத பிரகாசக்கிரியைக்குக் கர்மமாயிருத்தல் ஸ்வப்ரகாசமாயிருத்தல் என்பது பொருந்தாது. தன்னிலும் வேறுபட்ட பிரகாசக்கிரியைக்கு விஷயமாகாதிருத்தல் என்பது ஸ்வப்ரகாச பதத்தின் அர்த்தம் என்றும் சொல்ல வியலாது. ஏனெனில் "எனதுமனது கோபமுள்ளதா யிருக்கிறது" என்ற அனுபவரூபமான விருத்தியில் கோபரூபமான சித்த விருத்தி விஷயமாகின்றதுபற்றியே என்க. ஆதலால் சித்தவிருத்திகளில் ஸ்வப்ரகாசத்வம் என்பது எவ்விதத்தாலும் ஸம்பவிக்காதாகையால் சித்தவிருத்திப் பிரகாசகனைப் புருஷனை யங்கீகரிக்கவேண்டும் என்றேற்பட்டது. (எ-று)

(அ-கை) சித்தவிருத்திகளுக்கு ஸ்வப்ரகாசத்வம் என்பது ஸம்பவிக்காதென்பதில் வேறு காரணத்தை இதனாலுபதேசிக்கிறார்—

सू० ॥ एकसमये चोभयाऽनवधारणम् ॥ २० ॥

(ஸூ) ஏகஸமயே சோபயானவதாரணம்(20)

(ப—ரை) **एकसमये** (ஏகஸமயே)=ஒரே க்ஷணத்தில் **उभयानवधारणम्** (உபயாநவதாரணம்)=இரண்டு வஸ்துக்களைக் கிரஹித்தல் என்பது ஸம்பவிக்காது.

(தா—ம்) நீலம் முதலிய ரூபத்தை விஷயீகரித்த சித்தவிருத்யே தன்னையும் விஷயீகரிப்பதாய்ச் சொல்லமுடியாது. ஏனெனில் ஒரேவிதமான வியாபாரமானது விலக்ஷணமான இரண்டு காரியத்தைச் செய்வதாய் நாமெங்கும் கண்டதில்லை என்பது பற்றியே என்க. ஆதலால் சித்தவிருத்தியில் விலக்ஷணமான வியாபாரத்தை யங்கீகரிக்கவேண்டும். அவ்விதம் சித்தவிருத்தியில் "உத்பத்தி" என்ற வியாபாரத்தைத் தவிர்த்து வேறுவிதமான வியாபாரமிருப்பதாகவும் சொல்ல வியலாது. ஒரே விதமான உத்பத்தி என்ற வியாபாரத்திற்கே விஷயப்ரகாசமும், சித்தவிருத்திப் பிரகாசமும் காரியமாயாவதா யங்கீகரித்தாலோ காரணபேதமின்றியே கார்யபேதத்தை யங்கீகரித்ததா யேற்படும். அதுவோ அனுபவ விருத்தம். ஒரு தடவை யுண்டானதற்கு மறுபடியு முண்டாகுதல் என்பது ஸம்பவிக்காதாகையால் வேறொரு உத்பத்திக் கிரியையால் சித்தவிருத்தி கிரஹிக்கப்படுவதாகவும் சொல்லவியலாது. ஆதலால் சித்தவிருத்தியை ஸ்வப்ரகாசமா யங்கீகரிக்கமுடியாது. (எ—று)

(அ—கை) ஒரு சித்தவிருத்தியானது மற்றொரு சித்தவிருத்தியால் கிரஹிக்கப்படுவதா யங்கீகரிப்பதால் முற்கூறியதோஷம் ஸம்பவிக்காதாகையால் சித்தவிருத்தியினும் வேறாய் ஆத்மா ஒருவனை அங்கீகரிக்க வேண்டுவதில்லை என்று ஆசங்கித்து இதனால் பதிலளிக்கிறார்.

सू० ॥ चित्तान्तरदृश्ये बुद्धिबुद्धेरतिप्रसङ्गः स्मृतिसंकरश्च ॥

(ஸூ) சித்தாந்தரத்ருச்யே புத்திபுத்தேரதிப்ர ஸங்க: ஸ்மிருதிஸங்கரச்ச (21)

(ப—ரை) [**चित्तवृत्तौ** (சித்தவ்ருத்தௌ)=சித்தவிருத்தியானது] **चित्तान्तरदृश्ये** (சித்தாந்தரத்ருச்யே)=வேறொரு சித்தவிருத்தியால் கிரஹிக்கப்படுவதா யங்கீகரித்தால் **बुद्धिबुद्धेः** (புத்திபுத்தே:)=சித்த விருத்தி விஷயமான சித்தவிருத்திக்கு **अतिप्रसङ्गः** (அதிப்ரஸங்க:)=அனவஸ்தையும் (முடிவில்லாமையும்) **स्मृतिसंकरश्च** (ஸ்மிருதி ஸங்கரச்ச)=ஸகல சித்த விருத்திகளுக்கும் ஸ்மரணமும் [**भवेत्** (பவேத்)=ஏற்படும்.]

(தா—ம்) ஒரு சித்தவிருத்தியானது மற்றொரு சித்தவிருத்தியால் கிரஹிக்கப்படுவதா யங்கீகரித்தால் சித்தவிருத்திகளுக்கு முடிவின்மை என்ற அனவஸ்தா தோஷம் ஸம்பவிக்கும். அதாவது: முதல் க்ஷணத்திலுண்டான சித்தவிருத்தியானது, இரண்டாவது க்ஷணத்திலுண்டான சித்தவிருத்தியாலும், இரண்டாவது க்ஷணத்திலுண்டான சித்தவிருத்தியானது மூன்றாவது க்ஷணத்திலுண்டான சித்தவிருத்தியாலும் கிரஹிக்கபபடுவதா யங்கீகரித்துக் கொண்டே போவோமாயின் சித்தவிருத்திதாரைகளுக்கு அனவஸ்தை என்பது ஏற்படுவதுடன் ஒரு சித்தவிருத்தியும் நிர்ணயிக்கப்பட்டதா யாகமாட்டாது. மேலும், எவ்வளவு சித்தவிருத்திகள் உண்டாயிருக்கின்றனவோ அவை யாவற்றிற்கும் ஸ்மரணமு (நினைவு)ம் ஏற்படவேண்டிவரும். அவ்விதமோ ஒருகுடத்தை நினைக்குங்கால் அக்குடத்தைப்பற்றிய சித்தவிருத்தி விஷயமாய் எவ்வளவு சித்தவிருத்திகளுண்டாயினவோ அவையாவும் நினைவுக்கு வருவதில்லை. ஆதலால் ஒரு சித்தவிருத்தியானது மற்றொரு சித்த விருத்தியால் கிரஹிக்கப் படுவதா யங்கீகரித்தல் முற்றிலும் பொருத்தமில்லாததே என்றேற்பட்டது. (எ—று)

(அ—கை) யோகிகளின் ஸித்தாந்தத்தில் புருஷன் என்பவன் கிரியையற்றவனாகையால் அவனுக்கு சித்தவிருத்திகளின் அனுபவம் எங்ஙனம் ஸம்பவிக்கும்? எவன் கிரியை யுள்ளவனோ அவனே கர்த்தாவாகவாவான். எவன் கர்த்தாவோ அவனே போக்தாவாகவாவான். ஆதலால் புருஷனுக்கு போக்திருத்வம் என்பது எவ்விதமேற்படும் என்று ஸந்தேஹித்து பதிலளிக்கிறார்—

सू०॥ चितेरप्रतिसंक्रमायास्तदाकारतापत्तौ स्वबुद्धिसंवेदनम्॥

(ஸூ) சிதேரப்தி ஸங்க்ரமாயாஸ்ததாகாரதா பத்தெள ஸ்வபுத்திஸம்வேதனம் (22)

(ப—ரை) **अप्रति संक्रमायाः** (அப்ரதி ஸங்க்ரமாயா:) விஷயத்துடன் கிரியையை முன்னிட்டு ஏற்படுகின்ற ஸம்பந்தமற்ற **चितेः** (சிதே:) புருஷனுடைய [**सान्निध्यात्** (ஸாந்நித்யாத்) ஸந்நிதிபலத்தால்] **तदाकारतापत्तौ** (ததாகார தாபத்தெள) புத்திவிருத்தியானது புருஷனின் பிரதி பிம்பமுள்ளதாயாகும் பொழுது **स्वबुद्धिसंवेदनम्** (ஸ்வபுத்திஸம்வேதனம்) புருஷனுக்கு அவனால் போக்யமான சித்தவிருத்தியின் அனுபவமானது [**भवति** (பவதி) உண்டாகின்றது.]

(தா—ம்) புத்திக்கு கிரியையைமுன்னிட்டு குடம் முதலிய வெளிவஸ்துக்களுடன் எவ்விதம் ஸம்பந்தம் ஏற்படுகின்றதோ அவ்விதம் புருஷனுக்கு சித்தவிருத்தியுடன் ஸம்பந்த மேற்படுவதில்லை. ஏனெனில் புருஷன் பரிணமமற்றிருப்பதுபற்றி கிரியையற்றிருப்பதாலென்க. ஆனல் விஷயாகாரமாக பரிணமத்தையடைந்த சித்தவிருத்தியில், சன்னிதிபலத்தால் புருஷனுக்கு பிரதிபிம்பமேற்படுகின்றது. இத்தகைய பிரதிபிம்பம் வாயிலாக ஏற்படும் ஸம்பந்தத்தைத் தவிர்த்து வேறுவிதமாக புருஷனுக்கு சித்தவிருத்தியுடன் ஸம்பந்த மெதுவுமில்லை. சித்தவிருத்தியில் சுத்தசேதனனுக்கு பிரதிபிம்பமேற்படுதலே புருஷனுக்கு போகம் என்றும், அனுபவம் என்றும் சொல்லப்படும். சுத்தஜலத்தில் பிரதிபலனத்தை யடைந்த சூரியபிம்பமானது உண்மையில் ஸ்வயம் அசைவற்றதா யிருந்தபோதிலும் ஜலத்திலுள்ள அசைவால் அதில் பிரதிபலித்த சூரியபிம்பமும் அசைவுள்ளதாயாவது போல, புருஷன் உண்மையில் எவ்வித விகாரமுமற்றவனயினும் சித்தத்திலுள்ள விருத்திரூபமான கிரியையால், சித்தத்தில் பிரதிபலனத்தையடைந்த புருஷனும் க்ஞானம், ஸுகம் முதலியவற்றுடன் கூடியவன் போலாகிறன். ஆகவே உண்மையில் புருஷனுக்கு க்ஞான ஸுகாதிகளுடன் எவ்விதஸம்பந்தமும் கிடையாதாகையால் கிரியாதிகள் புருஷனுக்கில்லாவிடினும் அதாத்விகமான

(உண்மையிலில்லாத)கர்த்ருத்வ,போக்திருத்வாதிகள் மேற்கூறிய முறைப்படி ஸம்பவிப்பதில் யாதும் விரோதமில்லை என்று ஏற்பட்டது. (எ—று)

(அ—கை) சித்தத்தினும்வேறுபட்டவனும் புருஷன் ஒருவன் இருக்கிறான் என்பதை பிரத்யக்ஷப் பிரமாணத்தாலும் ஸாதிக்கிறார்.

ஸூ० ॥ द्रष्टृदृश्योपरक्तं चित्तं सर्वार्थम् ॥ २३ ॥

(ஸூ) த்ரஷ்ட்ரு த்ருச்யோபரக்தம் சித்தம் ஸர்வார்த்தம் (23)

(ப—ரை) **चित्तम्** (சித்தம்)=சித்தமானது **द्रष्टृदृश्योपरक्तम्** (த்ரஷ்ட்ரு த்ருச்யோபரக்தம்)=திரஷ்டாவெனப்படும் புருஷன், திருச்யம் எனப்படும் குடம் முதலிய வெளிவஸ்துக்கள் இவற்றுடன் கூடியிருப்பதால் **सर्वार्थम्** (ஸர்வார்த்தம்)= எல்லாவஸ்துக்களையும் ஸாதிப்பதில் பிரமாணமாக [**भवति** (பவதி)=ஆகின்றது.]

(தா—ம்) "நீலரூபத்தை நான் அறிகிறேன், குடத்தை நான் அறிகிறேன்" என்று க்ஞானமுண்டாகின்றதென்பது யாவர்க்கு மனுபவத்திலிருக்கக்கூடிய விஷயமாகும். இவ்வனுபவமானது "நீலரூபம்" என்றதால் நீலரூபாகாரமாய் பரிணாமத்தையடைந்த சித்தத்தையும், "நான்" என்றதால் புருஷப்பிரதிபிம்பமுள்ள சித்தத்தையும் விஷயீகரிக்கின்றது. ஆதாவது: மேற்கூறியதைப் பற்றிக்கொண்டு உண்டாகின்றது என்று மங்கீகரிக்கவேண்டும். ஆகவே சித்தத்திற்கு நீலம், பீதம் முதலிய ஆகாரங்கள் வெளியில் நீலம் பீதம் முதலிய ரூபங்களில்லாவிடில் ஸம்பவிக்காதானதுபற்றி, ஆகாரஸமர்ப்பகமான வெளிவஸ்துக்களை எவ்விதமிருப்பனவா யங்கீகரிக்கின்றோமோ, அதாவது:—நீலம் என்ற சித்தவிருத்தியையேவெளியில்நீலாதிரூபங்களிருப்பனவாய்ஸ்வீகரிப்பதில்பிரமாணமாய் எவ்வித மங்கீகரிக்கின்றோமோ, அவ்விதமே நான் என்று மனுபவமிருப்பதாலும், அவ்வனுபவமானது சைதன்யஸம்பந்த முள்ள சித்தத்தை விஷயீகரித்ததாகையாலும் சித்தத்திற்கு சைதன்யப்பிரதிபிம்பமானது சுத்தசைதன்யமில்லா

விடில் ஸம்பவிக்காதாகையாலும், நான் என்ற அனுபவமே சித்தத்தினும்வேறாய் புருஷனிருக்கிறான் என்பதில் பிரமாணமாயாவதா யங்கீகரிக்கிறோம். இவ்விதம் நீலாதிவஸ்துக்களைப்போல் புருஷனும் பிரத்யக்ஷ ஸித்தனாயிருந்தபோதிலும், ஜலத்தில் பிரதிபலனத்தை யடைந்த சந்திரபிம்பமானது ஜலத்தினும் வேறாய் எவ்விதம் அவிவேகிகளால் அறியப்படுவதில்லையோ அவ்விதமே புருஷனும் சித்தத்தில் பிரதிபிம்பத்தை யடைந்திருப்பதால், சித்தத்தினும் வேறாய் அறியப்படாதவனாய்க்கொண்டு சித்தமே புருஷன் என்று எண்ணப்படுகின்றான். ஆகவே ஸர்வார்த்தஸாதகமான சித்தமே புருஷன் ஒருவன் தனியாயிருக்கிறான் என்று ஸாதிப்பதில் பிரமாணமாயாகின்றது. (எ-று)

(அ-கை) சித்தத்தினும் வேறாய் புருஷனொருவனிருக்கிறான் என்பதில் வேறுபிரமாணத்தை இதனாலுபதேசிக்கிறார்.

सू०॥तदसंख्येयवासनाभिश्चित्रमपि परार्थं संहत्यकारित्वात् ॥

(ஸூ) ததஸங்க்யேயவாஸனாபிச்சித்ரமபி பரார்த்தம் ஸம்ஹத்ய காரித்வாத் (24)

(ப-ரை) **तत्** (தத்)=அந்தச்சித்தமானது **असंख्येयवासनाभिः** (அஸங்க்யேயவாஸனாபி:)=கணக்கிடமுடியாதவாஸனைகளால் **चित्रमपि** (சித்ரமபி)= சித்திரமுள்ளதற்கு ஒப்பாக இருந்தபோதிலும் **संहत्यकारित्वात्** (ஸம்ஹத்யகாரித்வாத்) மற்றொன்றின் ஸஹாயத்தை எதிர்பார்த்தே தனதுகார்யத்தைச் செய்வதால் **परार्थम्** (பரார்த்தம்)=தன்னினும் வேறான ஒருதத்துவத்திற்கு அங்கமாயாகின்றது.

(தா-ம்) யோகிகளின் ஸித்தாந்தப்படி சித்தமானது கணக்கிலடங்காத வாஸனைகளுடன் கூடியிருப்பதால், வாஸனாதீனமான விபாகங்களும் (ஸுகதுக்கங்களும்) சித்தத்திலேயே இருப்பன வா யங்கீகரிக்கவேண்டுவது அவச்யமாதல்பற்றி சித்தமே போக்தாவாக ஏற்படும். அங்ஙனமாயின் " அனுபவிக்கப்படும் பொருள்கள், அனுபவிப்பவனுக்காகஏற்பட்டது, அதாவது: அவனுக்கு அங்கமானது " என்ற முறைப்படி உலகிலுள்ள பொருள்கள்

யாவும் சித்தார்த்தம் (சித்தத்திற்கு சேஷபூதம்) என்றே சித்தி பெறுமேயொழிய புருஷார்த்தம் (புருசேஷம்) என்று சித்திபெருதாகையால் புருஷன் என்ற தனிப்பட்ட தத்துவமே வேண்டுவதில்லை என்றும் ஆசங்கையுண்டாகலாம். ஆயினும் சித்தமானது தன்னினும் வேருன தேஹும் இந்திரியம் முதலியவற்றின் ஸஹாயத்தை யடைந்த பிறகே தனது காரியத்தைச் செய்வதாயாகின்றபடியால் வீடு, தோட்டம் முதலியவற்றைப்போல் தன்னினும் வேருன ஒருதத்துவத்திற்கு அங்கபூதமாகவே(போக்யமாகவே) அந்தச் சித்தத்தை அங்கீகரிக்கிறேம். கிருஹம், க்ஷேத்திரம் முதலியவைகளை கிருஹக்ஷேத்திராதிகளுக்காகவே ஏற்பட்டனவாய் எவ்விதமங்கீகரிப்பதில்லையோ, ஆனல் அதற்கு மாருய் வேருெரு புருஷனுக்கு போக்யமாகவே அவற்றை எவ்வித மங்கீகரிக்கின்றேமோ, அவ்விதமேதான் கிருஹக்ஷேத்திராதிகளுக்கு ஸமானமான சித்தத்தையும் பரார்த்தமா யங்கீகரிக்கவேண்டும். சித்தம் என்பது எந்த தத்துவத்திற்கு போக்யமோ அதுவே புருஷன் எனப்படும். (எ—று)

(அ—கை) இனி மோக்ஷத்தைப் பற்றி நிரூபணம் செய்வதற்காக மோக்ஷத்தை யடைவதற்குத் தகுதியுள்ள அதிகாரியை இதனல் நிரூபணம் செய்கிருர்.

सू० ॥ विशेषदर्शिन आत्मभावभावनानिवृत्तिः ॥ २५ ॥

(ஸூ) விசேஷதர்ச்சின ஆத்மபாவபாவனநிவிருத்தி: (25)

(ப—ரை) **विशेषदर्शिनः** (விசேஷதர்சின:)=மேற்கூறிய யுக்தி பரிசீலனத்தால், தேஹேந்திரிய சித்தாதிகளைக் காட்டிலும் புருஷன் எனப்படுவன் வேறுபட்டவன் என்ற விசேஷக்ஞானத்தை யடைந்தவனுக்கு **आत्मभावभावनानिवृत्तिः** (ஆத்மபாவபாவனநிவிருத்தி:) **आत्मभाव** (ஆத்மபாவ)=ஆத்மதத்துவ விஷயமான **भावना** (பாவன)=ஜிக்ஞாஸையின் **निवृत्तिः** (நிவிருத்தி:)=முடிவானது **भवति** (பவதி)=உண்டாகின்றது].

(தா—ம்) முந்திய ஜன்மங்களில் செய்த புண்ய கர்மாதீன மாய் ஏதோ ஒருபுருஷ சிரேஷ்டனுக்குத்தான் "நான் என்பது யார்? அவனுக்கும், மற்ற வஸ்துக்களுக்கும் யாது ஸம்பந்தம்" என்ற ஆத்மதத்துவத்தைப்பற்றிய ஜிக்ஞாஸையானது (அறிய வேண்டும் என்ற எண்ணமானது) உண்டாகின்றது. அந்த ஜிக் ஞாஸையானது மேற்கூறிய யுக்தி பரிசிலனத்தால் "நான் என்று அறியப்படுபவன் தேஹேந்திரியாதிகளல்ல, அவன் புத்தி முத லியவற்றினும் வேறுபட்டவன், க்ஞானஸ்வரூபன்" என்று விவேகக்ஞானத்தை யடைவதால் விலகுகின்றது. இவ்விதம் கூறியதிலிருந்து எவனுக்கு தேஹம் இந்திரியம் முதலிய வஸ் துக்களில் ஆத்மா என்ற பாவனை ஸ்திரமாக விருக்கின்றதோ, அவனுக்கு மோக்ஷத்தில் அதிகாரம் கிடையாதென்றும், எவன் ஆத்மதத்துவத்தை யறியவிரும்புகின்றானோ அவனுக்கே மோ க்ஷத்தில் அதிகாரம் உண்டென்றும் ஏற்பட்டது. எந்தப்புருஷ னுக்கு மோக்ஷமார்க்கத்தைக்கேட்பதால் ரோமாஞ்சமும், (மயிர் கூச்சலும்) ஆனந்தபாஷ்பமும் உண்டாகின்றதோ, அவனிடம் ஆத்மதத்துவத்தை யறிவதற்கு வேண்டியதாயும், ஜன்மாந்தரீய க்ர்மங்களால் ஸம்பாதிக்கப்பட்டதாயுமுள்ள ஏதோ ஒருகாரண மிருப்பதாயூஹிக்கிறோம். அவனுக்கு ஸ்வபாவத்தாலேயே ஆத் மதத்துவத்தை யறிவதில் ருசியுண்டாகின்றது. அவனே மோக்ஷ த்திற்கதிகாரியாவன் என்று பாஷ்யத்திற் கூறப்பட்டிருக்கிறது.

(அ—கை) ஆத்மதத்துவத்தை யறிந்தவனுடைய சித்தம் எவ்விதமிருக்கும் என்பதை இதனாலுபதேசிக்கிறார்.

सू० ॥ तदा विवेकनिम्नं कैवल्यप्राग्भारं चित्तम् ॥ २६ ॥

(ஸூ) ததா விவேகநிம்னம், கைவல்யப்ராக் பாரம் சித்தம் (26)

(ப—ரை) **तदा** (ததா)=ஆத்மதத்துவத்தை யறிந்தபிறகு **चित्तम्** (சித்தம்)=சித்தமானது **विवेकनिम्नम्** (விவேகநிம்னம்)=**विवेक** (வி வேக) புருஷன், அவனைக்காட்டிலுமுள்ள மற்றவஸ்துக்கள் இவற் றின் பேதத்தை **निम्नम्** (நிம்னம்) அவலம்பித்ததாகவும், அதாவ

து: பற்றியதாகவும் **कैवल्यप्राग्भारम्** (கைவல்யப்ராக்பாரம்) **कैवल्य** (கைவல்ய) மோக்ஷத்தை **प्राग्भारम्** (ப்ராக்பாரம்) முடிவிலுள்ள பலனுயுடையதாகவும் [**भवति** (பவதி) ஆகின்றது.]

(தா—ம்) புத்தி முதலியவற்றில் ஆத்மா என்ற பிரமமான திருந்தபோழுது எந்தச் சித்தமானது விஷயத்தில் பற்றுள்ளதாகவும், ஜனனமரணரூபமான ஸம்ஸாரமாகிற பலனையுடையதாகவுமிருந்ததோ அந்தச் சித்தமே ஆத்மதத்துவத்தை யறிந்தபிறகு ஆத்மா, ஆத்மபின்னம் இவற்றின் பேதத்தைச் சிந்தனம் செய்வதிலேயே மிக்கப்பற்றுள்ளதாயும், கைவல்யம் என்ற மோக்ஷரூபபலனை யடைவதாயுமாகின்றது. அதாவது: தர்மமேகம் என்ற த்யானத்தில் பற்றுள்ளதாக வாகின்றது. (எ—று)

(அ—கை) விவேகக்யாதியிலேயே பற்றுள்ள சித்தத்திற்கும் சிலஸமயங்களில் "நான், என்னுடையது" என்றது முதலிய* வ்யுத்தான பிரத்யயங்களுண்டாவதற்குக் காரணம் யாது? என்பதை இதனுலுபதேசிக்கிருர்.

सू० ॥ तच्छिद्रेषु प्रत्ययान्तराणि संस्कारेभ्यः ॥ २७ ॥

(ஸூ) தச்சித்ரேஷு ப்ரத்யாந்தராணி ஸம்ஸ்காரேப்ய: (27)

(ப—ரை) **तच्छिद्रेषु** (தச்சித்ரேஷு)=விவேகக்யாதி ரூபமான சித்தவிருத்தி தாரையின் இடைவெளிகளில் **संस्कारेभ्यः** (ஸம்ஸ்காரேப்ய:)=வேறுவிதமான சித்தவிருத்தியை யுண்டுபண்ணுகின்றதாயும், வாஸனுரூபமாயு மிருக்கின்ற ஸம்ஸ்காரங்களினின்றும் **प्रत्ययान्तराणि** (ப்ரத்யயாந்தராணி)=நான், என்னுடையது என்றது முதலிய வேறுவிதமான க்ஞானங்கள் [**भवन्ति** (பவந்தி)=உண்டாகின்றன.]

(தா—ம்) ஒவ்வொருதினமும் விவேகக்யாதியை யாவிருத்தி செய்து வருபவனுக்கு வ்யுத்தான பிரத்யத்தைக்கொடுக்கும் ஸம்ஸ்காரங்கள் குறைந்து கொண்டே வருகின்றனவாயினும் விவே

* ப்ரகிருதி புருஷபேதத்தைத்தவிர்த்து மற்றவஸ்துக்களைப் பற்றி யுண்டாகும் பிரத்யயங்கள் "வ்யுத்தான பிரத்யயங்கள்" எனப்படும்.

க்யாதியின் மத்தியில் சிலவ்யுத்தானபிரத்யய ஸம்ஸ்காரங்கள் தலைக்கிளம்புவதால் வேறுவிதமான க்ஞானங்களு முண்டாகின்றன. (எ—று)

(அ—கை) விவேகக்யாதியிருக்கும் பொழுதும் வ்யுத்தான ஸம்ஸ்காரங்கள் தமது காரியத்தைச்செய்யத் துவங்குமாயின் அவற்றை முற்றிலும் அழித்தல் எவ்விதம் ஸம்பவிக்கும் என்று சந்தேஹித்து இதனால் பதிலளிக்கிறார்.

ஸூ०॥ हानमेषां क्लेशवदुक्तम् ॥ २८ ॥

(ஸூ) ஹானமேஷாம் க்லேசவதுக்தம் (28)

(ப—மை) एषाम् (ஏஷாம்)= இந்த வ்யுத்தானஸம்ஸ்காரங்களுக்கு हानम् (ஹானம்) முற்றிலும் விடுபடுதலானது क्लेशवत् (க்லேசவத்)=அவித்யை அஸ்மிதை முதலிய கிலேசங்களுக்குப் போல [उक्तं वेदितव्यम् (உக்தம் வேதிதவ்யம்) சொல்லப்பட்டதாயறியவேண்டும்.]

(தா—ம்) அவித்யை, அஸ்மிதை, ராகம், துவேஷம், அபிநிவேசம் என்ற ஐந்துவிதமான கிலேசங்களும், तपस्स्वाध्यायेश्वरप्रणिधानानिक्रियायोग: என்ற 2வதுபாதம் முதல் ஸூத்திரம் முதல் தொடங்கி உபதேசித்த கிரியா யோகானுஷ்டானத்தால் தேய்தலையடைவிக்கப்பட்டு பிறகு, விவேகக்யாதி என்ற அக்னியால் பொசுக்கபடுவதால், விவேகக்யாதியை யடைந்த பிறகு எவ்விதம் சித்தத்தில் ஸம்ஸ்காரத்தையுண்டுபண்ணுவதில்லையோ அவ்விதமே வ்யுத்தான ஸம்ஸ்காரங்களும், விவேகக்யாதியின் முதிர்ச்சி ஏற்படாததருணத்தில், வேறுவிதமான பிரத்யயங்களையுண்டு பண்ணின போதிலும், விவேகக்யாதியின் முதிர்ச்சி ஏற்பட்டு விடின் அதனால் அந்தவ்யுத்தானஸம்ஸ்காரங்கள் வறுக்கப்பட்ட விதைக்கொப்பானவைகளாய்த் தமது காரியமான விபரீத(வேறுவிதமான) பிரத்யயங்களை யுண்டுபண்ணுவதில்லை. (எ—று)

(அ—கை) வியுத்தானஸம்ஸ்காரங்கள் * விவேகபிரஸங்க்யா

---

* மூலப்பிரகிருதி முதலிய 26 தத்துவங்களை நன்கு பகுத்தறிந்தவனுக்கு, புருஷனுக்கும் மற்றதத்துவங்களுக்குமுள்ள பேதத்தைப்பற்றி

னத்தால் முற்றிலும் நாசமடைகின்றனவென்று உபதேசித்து, இனி விவேகப்பிரஸங்க்யானத்திற்கும் நிரோதமேற்படுவதற்குரிய உபாயத்தை இதனுலுபதேசிக்கிறார்.

सू० ॥ प्रसंख्यानेप्यकुसीदस्य सर्वथा विवेकख्यातेः धर्ममेघः समाधिः ॥ २९ ॥

(ஸூ) ப்ரஸங்க்யானேப்யகுஸீதஸ்ய ஸர்வதா விவேகக்யாதே: தர்மமேக: ஸமாதி: (29)

(ப—ரை) **प्रसंख्यानेऽपि** (ப்ரஸங்க்யானேஅபி)=பிரகிருதிபுருஷ விவேகக்ஞானத்தின் பலனான ஸர்வபாவாதிஷ்டாதிருத்வம், ஸர்வக்ஞாதிருத்வம் முதலிய பலனிலும் **अकुसीदस्य** (அகுஸீதஸ்ய) ஆசையற்றவனுக்கு **सर्वथा** (ஸர்வதா)=நிரந்தரமாய் **विवेकख्यातेः** (விவேகக்யாதே:)=விவேக ஸாக்ஷாத்கார மேற்படுவதால் **धर्ममेघः** (தர்மமேக:)=தர்மமேகம் என்ற **समाधिः** (ஸமாதி:)=ஸமாதியானது [**भवति** (பவதி)=உண்டாகின்றது.]

(தா—ம்) விவேகக்கியாதியின் பலனான எல்லாவற்றிற்கும் நாயகனாகவிருத்தல், எல்லாவற்றையுமறிந்தவனுயாகுதல் முதலியவற்றிலும் பரிணாமம் முதலிய தோஷத்தைக் கவனிப்பதால் எவனொருவன் ஆசையை யடைவதில்லையோ, அப்பலன்களினாலும் துக்கத்தையே யடைகின்றானே, அவனுக்கு எப்பொழுதும் விவேக ஸாக்ஷாத்காரமே உண்டாகிக்கொண்டு வருகின்றது. வேறு எந்த விதமான பிரத்யயமுமுண்டாவதில்லை. இந்நிலைக்கே தர்மமேகஸமாதி என்று பெயர். **धर्मम्= अशुक्लाकृष्णं कैवल्यफलं मेहति=सिञ्चति इति धर्ममेघः** * அசுக்லா கிருஷ்ணமான யோகஜ தர்மத்தை இந்த ஸமாதி வர்ஷிப்பதால் இதற்கு தர்மமேகம் என்று பெயரிடப்பட்டது. (எ—று)

முதலிலுண்டாகின்றதும், सत्वपुरुषान्यताख्यातिमात्रस्य सर्वभावाधिष्ठातृत्वं सर्वज्ञातृत्वंच என்ற 3வதுபாதம் 49வது சூத்திரத்தால் கூறிய ஸர்வபாவாதிருஷ்டாதிருத்வம்,ஸர்வக்ஞாதிருத்வம் என்ற பலனை யுடையதாயுமிருக்கின்ற விவேகக்ஞானத்திற்கு விவேக பிரஸங்க்யானம் என்று பெயர்.

* யோகசூத்திரம் 4-வது பாதம் 7-வது சூத்திரத்தில் இதன் விவரணத்தைக் காண்க.

(அ—கை) தர்மமேக ஸமாதியின் பலனை இதனுலுபதேசிக்கிருர்.

सू० ॥ ततः क्लेशकर्म निवृत्तिः ॥ ३० ॥

(ஸூ) தத: க்லேசகர்ம நிவிருத்தி: (30)

(ப—ரை) **ततः** (தத:)=தர்மமேக ஸமாதியால் **क्लेशकर्म निवृत्तिः** (க்லேசகர்ம நிவிருத்தி:)=அவித்யா, அஸ்மிதாமுதலிய ஐந்துவித கிலேசங்களுடையவும், புண்யம், பாபம், என்ற கர்மங்களுடையவும் முற்றிலும் நிவிருத்தியானது [**भवति**(பவதி) உண்டாகின்றது.] அதாவது: கிலேசம், கர்மம் இவைகள் மறுபடியுமுண்டாவதில்லை, ஜீவன் முக்தனுயாகின்ருன் என்று கருத்து.

(அ—கை) தர்மமேகஸமாதியை யடைந்தவனின் சித்தம் எவ்விதமிருக்கும் என்பதை இதனுலுபதேசிக்கிருர்.

सू० ॥ तदा सर्वावरणमलापेतस्य ज्ञानस्यानन्त्याज्ज्ञेयमल्पम् ॥

(ஸூ) ததா ஸர்வாவரணமலாபேதஸ்ய க்ஞானஸ்ய ஆனந்த்யாத் க்ஞேயமல்பம் (31)

(ப—ரை) **तदा** (ததா) தர்மமேகஸமாதி ஏற்பட்டவுடன் **सर्वावरणमलापेतस्य** (ஸர்வாவரணமலாபேதஸ்ய) சித்தஸத்வத்தை மறைத்துக்கொண்டிருந்த, கிலேசம், கர்மம் முதலியனவாகிற ஸகலவிதமான அழுக்குகளும் விலகியிருக்கின்ற **ज्ञानस्य** (க்ஞானஸ்ய)=சித்தத்திற்கு **आनन्त्यात्** (ஆனந்த்யாத்) பரிச்சேதமற்றிருத்தல் ஏற்படுவதால் **ज्ञेयम्** (க்ஞேயம்) அறியத்தக்கதான சேதனுசேதனுத்மகஸகல பிரபஞ்சமும் **अल्पम्** (அல்பம்) ஸ்வல்பமாகவே [**भवति** (பவதி) ஆகின்றது.]

(தா—ம்) தர்மமேகஸமாதி ஏற்படாத நிலையில் சித்தமானது தமோகுணமாகிற அழுக்கினுல் மூடப்பட்டிருந்தபடியால் ரஜோ குணத்தினுல் ஏதோ ஒருவிஷயத்தில் மட்டும் தூண்டப்பட்டதாயும், சிறிதளவு தமோகுணம் விலகினதாயாகும் பொழுது யாதானுமொருவஸ்துவை மட்டுமே கிரஹிப்பதற்குச் சக்தியுள்ளதாயிருந்து தர்மமேகஸமாதி ஏற்பட்டபிறகோ வெனில் சித்தஸத்வத்தை மறைத்துக் கொண்டிருந்த அவித்யாதிகள் முற்றி

னும் விலகிவிடுவதால் நிர்மலமாயாகிவிடுவதுபற்றி அறியத்தக்க தான ஸகலபிரபஞ்சமும் ஸொல்பமாகவே ஆகின்றது. அதாவது: நடுப்பகலில் மேகம்முதலியவற்றால் மறைக்கப்படாமல் ஸூரியன் பிரகாசித்துக் கொண்டுவரும் பொழுது மலை, ஸமுத்திரம், ஆகாசம் முதலியனவும் பிரகாசப்படுத்தப்படுவதால்,குடம்முதலியசிறியவஸ்துக்கள் எவ்விதமவனது பிரகாசத்திற்குப் போதுமானதாயாகாதோ, ஸமுத்திரஜலத்தைஉள்ளடக்குவதற்குக் குடம் எவ்விதம்போதுமானதாயாகாதோ, ஆகாசத்தை மறைப்பதற்கு சிறிய பூச்சியானது எவ்விதம் போதுமானதாயாகாதோ, அவ்விதமே நிர்மலமான சித்தத்திற்கு சேதனசேதனத்மக பிரபஞ்சமானது அறியப்படும் முறையில் போதுமானதாயாவதில்லை. அதாவது: சித்தமானது எல்லாப்பொருள்களையும் ஒரேஸமயத்தில் கிரஹிப்பதற்குத் திறமையுள்ளதாயாகின்றது. இதுவேபரவைராக்யம் எனப்படும் (எ—று)

(அ—கை) தர்மமேகத்யானத்தின் பலனை பரவைராக்ய மேற்பட்ட பிறகும் ஸ்வபாவத்தினலேயே பரிணமத்தையடைகின்ற குணங்கள் சரீரேந்திரியாதிகளை ஏன் உண்டுபண்ணக்கூடாதென்று ஸந்தேஹித்து இதனல் பதிலளிக்கிறார்.

सू० ॥ ततः कृतार्थानां परिणामक्रमसमाप्तिर्गुणानाम् ॥ ३२॥

(ஸூ) ததः கிருதார்த்தாநாம் பரிணாமக்ரமஸமாப்திர்குணாநாம். (32)

(ப—ரை) **ततः** (ததः)=பரவைராக்யமேற்பட்டபிறகு **कृतार्थानाम्** (கிருதார்த்தாநாம்)=செய்ய வேண்டுவனவற்றைச் செய்துமுடித்த **गुणानाम्** (குணாநாம்) ஸத்வம் முதலிய குணங்களுக்கு **परिणामक्रमसमाप्तिः** (பரிணாமக்ரமஸமாப்திः)=மாறுதலினுடைய வரிசையின் முடிவானது [**भवति** (பவதி)=உண்டாகின்றது.]

(தா—ம்)பிரகிருதியில்சரீரேந்திரியாதிரூபமாய்விகாரமேற்படுவதற்கு உண்டாகவேண்டிய நிலையிலிருக்கின்ற போகம், விவேகக்யாதிஎன்ற பலன்களே காரணமாகும். அவ்விரண்டுபலன்களையும் எந்தப்புருஷன்விஷயத்தில் பிரகிருதியானது அடைந்து விட்ட

தோ அந்தப்புருஷன் விஷயத்தில் பரிணமத்தை யடைவதற்கு வேண்டிய காரணமில்லாமை பற்றி விவேகக்யாதி ஏற்பட்டபிறகும் சரீரேந்திரியாதிகளை யுண்டுபண்ணுவதில்லை. இது குணங்களின் ஸ்வபாவமாகும். (எ—று)

(அ—கை) முந்திய ஸூத்திரத்தால் விவேகக்யாதியை யடைந்தபுருஷன் விஷயத்தில் பரிணமக்கிரமஸமாப்தி யுண்டாவதாயுபதேசிக்கப்பட்டது. பரிணமத்திலிருக்கிற கிரமம் என்பது யாது? என்பதை இதனுலுபதேசிக்கிறுர்.

सू० ॥ क्षणप्रतियोगी परिणामाऽपरान्त निर्ग्राह्यःक्रमः ॥३३॥

(ஸூ) க்ஷணப்ரதியோகீ பரிணமாபராந்த நிர்க்ராஹ்ய:க்ரம: (33)

(பரை) **क्रमः** (க்ரம:) கிரமம் என்பது **परिणामापरान्त निर्ग्राह्यः** (பரிணமாபராந்த நிர்க்ராஹ்ய:) **परिणाम** (பரிணம) மாறுதலின் **अपरान्त** (அபராந்த) முடிவினுல் **निर्ग्राह्यः** (நிர்க்ராஹ்ய:)=ஊஹிக்கப்படுவதாயும் **क्षणप्रतियोगी** (க்ஷணப்ரதியோகீ) க்ஷணஸமூஹத்தை நிமித்தமாயுடையதாயும் [**भवति** (பவதி) ஆகின்றது.]

(தா—ம்) **प्रतिक्षणपरिणामिनोऽहि भावाः ऋते चितिशक्तेः** புருஷனைத் தவிர்த்து மற்றெல்லாவஸ்துக்களும் ஒவ்வொருக்ஷணத்திலும் மாறிக்கொண்டே இருக்கின்றன என்பது யோகிகளின் ஸித்தாந்தமாகும். அவ்விதமங்கீகரிப்பதில் பிரமாணமிதனுலுபதேசிக்கப்படுகின்றது. புருஷனைத்தவிர்த்து மற்றவஸ்துக்கள் யாவும், ஒவ்வொருக்ஷணத்திலும் மாறிக்கொண்டே வருகின்றன. சிலவஸ்துக்களில் மாறுதலின் கிரமமானது பிரத்யக்ஷஸித்தமாகவும், சிலவஸ்துக்களில், அனுமானத்தா லறியக்கூடியதாகவுமிருக்கின்றது. உதாஹரணமாய் மண்ணை எடுத்துக்கொள்வோம். அது முதலில் ஒருபிண்டமாக மாறுகின்றது. பிறகு அந்தப்பிண்டமே குடமாகமாறுகின்றது. அந்தக்குடமே உடைந்துபோனுல் கபாலமாக (சில்லாக) மாறுகின்றது. அந்தக்கபாலமும் உடைந்துபோனுல் பொடியாக மாறுகின்றது. அதுவும் உடைந்துபோனுல் பொடிக்கும் சிறிய தூளியாக மாறுகின்றது. இவ்

விடத்தில் முதல்பரிணாமமானபிண்டமும், முடிவில் ஏற்படக்கூடிய பரிணாமமான "கணம்" என்பதும் பிரத்யக்ஷஸித்தமாயிருப்பதுபோல் இடையிலுள்ள மாறுதல்களும் பிரத்யக்ஷஸித்தமாகவே இருப்பதால் பரிணாமக்ரமம் பிரத்யக்ஷ ஸித்தமாகின்றது. புதிதாய் ஒருவஸ்திரத்தை வாங்கி பெட்டியில் ஸாவதானமாய் வைத்திருந்த போதிலும் கொஞ்சகாலம் சென்றபிறகு அந்வஸ்திரத்தையே எடுத்துப்பார்ப்போமாயின் முன்னிருந்த உறுதிமுதலியன வற்றதாய் பழைமையை யடைந்திருப்பதையும் நாம் இங்கு காண்கிறோம். இதனால் இந்தவஸ்திரமானது முன்னிருந்த நிலையிலேயே இருக்காமல் வேறுநிலைகளை ஒன்றின்பின்னொன்றாய் அடைந்து கொண்டு வந்திருப்பதா யூஹிக்கப்படுகின்றது. இங்கு பரிணாமக்ரமமானது அனுமிக்கத்தகுந்ததா யாகின்றது. அவ்விதம் ஏற்படும் மாறுதலானது ஒவ்வொருக்ஷணத்தையுமாச்ரயித்தே யுண்டாகின்றது. அவ்விதம் ஒவ்வொருக்ஷணத்திலும் மாறுதலை யங்கீகரிக்காமல் எந்தெந்த வஸ்துவுக்கு எவ்வளவு எவ்வளவு காலத்தால் பரிணாமம் பிரத்யக்ஷஸித்தமாயாகின்றதோ அவ்வளவு காலத்தையாச்ரயித்தே மாறுதல்கள் உண்டாவதாயங்கீகரித்தால் காரணவிஷயத்தில் அனனுகமம் (ஒருமைபற்றிருத்தல்) என்ற தோஷம் பிரஸங்கிக்கும். ஆதலால் லாகவத்தை யனுஸரித்து க்ஷணம் என்ற ஸூக்ஷ்மகாலத்தையே ப்ராக்ருத வஸ்துக்களின் பரிணாமத்தில் காரணமாயங்கீகரிக்கிறோம். ஆகவே புருஷனைத் தவிர்த்து மற்றவஸ்துக்கள் யாவும் ஒவ்வொருக்ஷணத்திலும் பரிணாமத்தை யடையக்கூடியன வென்றேற்பட்டது.

மேற்கூறியபரிணாமக்ரமமானது அநித்யவஸ்துக்களுக்குமட்டுமே உள்ளதா? அல்லது நித்யவஸ்துக்களுக்கு முள்ளதா? எனின் சிலநித்யவஸ்துக்களுக்குமுள்ளதென்றே அங்கீகரிக்கிறோம். நித்யம் எனப்படுவது (1) கூடஸ்தநித்யம் (2) பரிணாமிநித்யம் என்று இருவகைப்படும். புருஷன் எனப்படும் தத்துவம் கூடஸ்தநித்யமாகும். அதில் உண்மையில் எவ்விதபரிணாமமும் கிடையா. ஸத்வம் முதலியகுணங்கள் பரிணாமி நித்யங்களெனப்படும். அநித்யமான புத்திமுதலியவற்றிற்கு ஏற்படுகின்ற ஆகாதிருபமானபரிணாமத்திற்கு விவேக்யாதி என்ற முடிவுஇருக்கின்

றது. அது ஏற்பட்டதும் உத்பத்திக்கிரமத்திற்கு மாறுனகிரமத் தால் லயத்தையடைந்து விடுகின்றன. பரிணுமிநித்யமான ஸத் வாதி குணங்களிலோ வெனில் பரிணுமதாரைக்கு முடிவு என் பது கிடையாது. முக்தபுருஷன் விஷயத்தில் அவை தமது காரியத்தைச் செய்யாவிடினும், பத்தர்களான புருஷர்களுக்காக பரிணுமமேற்பட்டுக்கொண்டேதான் இருக்கிறது.

ஒருவர்பின் மற்றவர் என்ற கிரமமாய் புருஷர்கள் முக்தி யையடைந்துகொண்டுவருவார்களேயாஞல்ஜகத்ஸிருஷ்டியேஇல் லாமலாகி விடக் கூடுமென்றே எனின்? அவ்விதம் ஒருபொழு தும் ஸம்பவிக்காது. உலகிலுள்ள பிராணிகள் அனேகம். கல்ப கோடிகாலம் சென்றாலும் ஒருவன் முக்தியடைகின்றானே இல்லை யோ என்று ஸந்தேஹிக்கவேண்டியிருக்கிறது. இவ்விதமிருக்க எல்லோருக்கும் முக்தி என்பது எங்ஙனம் ஸம்பவிக்கும். ஆனது பற்றியே புராணுதிகளில் ஸிருஷ்டி பிரளயம் இவற்றிற்கு முடிவி ன்மை கூறப்பட்டிருக்கிறது. (எ—று)

(அ—கை) சாஸ்திரத்தால் நிரூபணம் செய்யப்படுகின்ற யோ கத்தின் பலனுன கைவல்யத்தின் ஸ்வரூபத்தை இதனுலுபதேசிக் கிறார்.

सू०॥ पुरुषार्थशून्यानां गुणानां प्रतिप्रसवः कैवल्यं स्वरूपप्रति-ष्ठा वा चितिशक्तेरिति* ॥ ३४ ॥

(ஸூ) புருஷார்த்தசூன்யானும் குணுனும் ப்ர திப்ரஸவ: கைவல்யம் ஸ்வரூபப்ரதிஷ்டா வாசிதி சக்தேரிதி (34)

(ப—ரை) **पुरुषार्थशून्यानाम्** (புருஷார்த்தசூன்யானும்) இனி செய்யவேண்டிய புருஷார்த்தமற்ற **गुणानाम्** (குணுனும்) புத்யாதி ரூபமாய் பரிணுமத்தை யடைந்த ஸத்வாதிகுணங்களுக்கு **प्रतिप्रसवः** (ப்ரதிப்ரஸவ:) தத்தமது காரணத்தில் லயமேற்படும் முறை யால் பிரகிருதியிலொடுங்கிவிடுதலானது **कैवल्यम्** (கைவல்யம்)= கைவல்யம் எனப்படும். **वा** (அல்லது) **चितिशक्तेः** (சிதிசக்தே:)=

* "स्वरूपप्रतिष्ठावाचितिशक्तिः" इत्यपि पाठः ।

புருஷனுக்கு स्वरूपप्रतिष्ठा (ஸ்வரூபப்ரதிஷ்டா) தனதுஸ்வரூபத்திலேயே நிலைபெறல் कैवल्यम् (கைவல்யம்)=கைவல்யம் எனப்படும் மோக்ஷம்எனப்படும். इति (இதி)=இத்துடன் சாஸ்திரம் முடிவு பெறுகின்றது.

(தாௗம்) புத்யாதிரூபமாய் பரிணாமத்தை யடைந்த ஸத்வாதிகுணங்கள் எந்தப் புருஷன் விஷயத்தில் போகம், விவேகக்யாதி என்ற இரண்டு கார்யங்களைச் செய்து முடித்து விட்டதோ அந்தப் புருஷன் விஷயத்தில் இனி உண்டுபண்ணவேண்டிய புருஷார்த்தம் எதுவுமில்லாதபடியால் அவையவைகள் தத்தமது காரணத்தில் லயத்தை யடைகின்றன. அதாவது: மனத்திலுள்ள வ்யுத்தானம், ஸமாதி, நிரோதம் இவற்றின் ஸம்ஸ்காரங்கள் மனத்திலும், மனத்திற்கு அஹம்தத்துவத்திலும், அஹம் தத்துவத்திற்கு மஹத்தத்துவத்திலும், மஹத்தத்துவத்திற்கு பிரதானத்திலும் லயமேற்படுகின்றது. இதுவே ஒருபுருஷன் விஷயத்தில் பிரதானம் மோக்ஷத்தை யடைந்ததாகவாகும். இதன்படிப் பார்க்கும்பொழுது மோக்ஷம் என்பது பிரதானத்திற்கே என்று ஏற்படுகின்றது.

அல்லது சுத்தசைதன்ய ரூபனான புருஷனுக்கு அந்தக்கரணம் முதலிய உபாதிகள் விலகி தனது உண்மையான ஸ்வரூபத்தில் நிலைபெறுதல் மோக்ஷம் எனப்படும். இதன்படிப்பார்த்தால் மோக்ஷம் என்பது புருஷனிடமுள்ளதாக வாகின்றது. ஆகவே ஒவ்வொரு புருஷனும் இந்த யோகசாஸ்திரத்திற்சொல்லிய ஸாதனானுஷ்டானத்தால் பிரகிருதி புருஷவிவேகக்ஞானத்தையடைந்து மோக்ஷத்தையடைய முயற்சிக்க வேண்டும் என்று பெறப்பட்டது.

श्रीकृष्ण: प्रीयताम्.

நான்காவது கைவல்யபாதம் முற்றிற்று.

யோகஸூத்திரம் முற்றிற்று.

சுபம்.

योगसूत्राणामकारादिक्रमः ॥

பக்கம். பக்கம்.

अ

अतीतानागतं स्वरूपतोऽस्त्यध्वभेदाद्धर्माणाम् ...260

अथ योगानुशासनम् ... 4

अनित्याऽशुचिदुःखानात्मसु नित्यशुचिसुखात्मख्यातिरविद्या ... 98

अनुभूतविषयासंप्रमोषः स्मृतिः 24

अपरिग्रहस्थैर्ये जन्मकथंतासंबोधः ...168

अभावप्रत्ययालंबना वृत्तिर्निद्रा 21

अभ्यासवैराग्याभ्यां तन्निरोधः. 25

अविद्यास्मितारागद्वेषाभिनिवेशाः क्लेशाः ... 95

अविद्या क्षेत्रमुत्तरेषां प्रसुप्ततनुविच्छिन्नोदाराणाम् ... „

अस्तेयप्रतिष्ठायां सर्वरत्नोपस्थानम् ...165

अहिंसाप्रतिष्ठायां तत्सन्निधौ वैरत्यागः ...163

अहिंसासत्याऽस्तेयब्रह्मचर्याऽपरिग्रहा यमाः ...150

ई

ईश्वरप्रणिधानाद्वा ... 44

उ

उदानजयाज्जलपङ्ककण्टकादिष्वसंग उत्क्रान्तिश्च ... 222

ऋ

ऋतंभरा तत्र प्रज्ञा ... 85

ए

एकसमयेचोभयानवधारणम्... 275

एतयैव सविचारा निर्विचारा च सूक्ष्मविषया व्याख्याता ... 80

एतेन भूतेन्द्रियेषु धर्मलक्षणाऽवस्थापरिणामाव्याख्याताः 194

क

कण्ठकूपे क्षुत्पिपासानिवृत्तिः.. 216

कर्माऽशुक्लाकृष्णं योगिनस्त्रिविधमितरेषाम् ... 253

क्रमान्यत्वं परिणामान्यत्वे हेतुः. 197

कायरूपसंयमात्तद्ग्राह्यशक्तिस्तंभे चक्षुःप्रकाशासंप्रयोगे ऽन्तर्धानम् ... 204

कायाकाशयो संबंधसंयमाल्लघुतूलसमापत्तेश्चआकाशगमनम् ... 227

कायेन्द्रियसिद्धिरशुद्धिक्षयात्तपसः172

பக்கம். பக்கம்.

कूर्मनाड्यां स्थैर्यम् ...217

कृतार्थं प्रति नष्टमप्यनष्टं तदन्यसाधारणत्वात् ...138

क्रमान्यत्वं परिणामान्यत्वे हेतुः.197

क्लेशकर्मविपाकाशयैर परामृष्टः पुरुषविशेष ईश्वरः ... 46

क्लेशमूलः कर्माशयो दृष्टादृष्टजन्मवेदनीयः ...110

ग

ग्रहण स्वरूपास्मितान्वयार्थवत्त्वसंयमादिन्द्रियजयः ...236

च

चन्द्रे ताराव्यूहज्ञानम् ...215

चित्तान्तरदृश्ये बुद्धिबुद्धेरतिप्रसङ्गः स्मृतिसंकरश्च ..275

चितेरप्रतिसंक्रमायास्तदाकारतापत्तौ स्वबुद्धिसंवेदनम्..277

ज

जन्मौषधिमन्त्रतपः समाधिजाः सिद्धयः ...247

जातिदेशकालव्यवहितानामप्यानन्तर्यं स्मृतिसंस्कारयोरेकरूपत्वात् ...256

जातिदेशकालसमयानवच्छिन्नाः सार्वभौमा महाव्रतम्...157

जातिलक्षणदेशै रन्यताऽनवच्छेदात्तुल्ययोस्ततः प्रतिपत्तिः ...242

जात्यन्तरपरिणामः प्रकृत्यपूरात् ...249

त

तच्छिद्रेषु प्रत्ययान्तराणि संस्कारेभ्यः ... 282

तज्जपस्तदर्थभावनम् ... 58

तज्जयात्प्रज्ञालोकः ... 188

तज्जस्संस्कारो अन्यसंस्कारप्रतिबंधी ... 89

ततः कृतार्थानां परिणामक्रमसमाप्तिर्गुणानाम् ... 286

ततः क्लेशकर्मनिवृत्तिः ... 285

ततः परमावश्यतेन्द्रियाणाम्... 182

ततः पुनश्शान्तोदितौ तुल्यप्रत्ययौ चित्तस्यैकाग्रतापरिणामः ... 193

ततः प्रत्यक्चेततनाधिगमोऽप्यन्तरायाभावश्च ... 59

ततःप्रातिभश्रावणवेदनादर्शाऽस्वादवार्ताजायन्ते ... 219

ततस्तद्विपाकानु गुणानामेवाभिव्यक्तिर्वासनानाम् ... 255

ततः क्षीयते प्रकाशावरणम् ... 180

ततोऽणिमादिप्रादुर्भावःकायसंपतद्धर्मानभिघातश्च ... 234

ततो द्वंद्वानभिघातः ... 175

ततो मनोजवित्वं विकरणभावः प्रधानजयश्च ... 237

तत्परं पुरुषख्यातेर्गुणवैतृष्ण्यम्. 31

तत्प्रतिषेधार्थमेकतत्वाभ्यासः... 63

तत्र प्रत्ययैकतानता ध्यानम्... 186

तत्र ध्यानजमनाशयम् ... 253

பக்கம். பக்கம்.

तत्र निरतिशयं सर्वज्ञबीजम् ... 50
तत्रशब्दार्थज्ञानविकल्पैस्संकीर्णा सवितर्का समापत्तिः... 76
तत्रस्थितौ यत्नोऽभ्यासः ... 27
तदर्थ एव दृश्यस्यात्मा ...137
तदपि बहिरङ्गं निर्बीजस्य ...190
तदभावात्संयोगाभावो हानं तद्दृशेः कैवल्यम् ...142
तदसंख्येयवासनाभिश्चित्रमपि परार्थसंहत्यकारित्वात्...279
तदा द्रष्टुः स्वरूपेऽवस्थानम्. 9
तदा विवेकनिम्नं कैवल्यप्राग्भारं चित्तम् ...281
तदा सर्वावरणमलापेतस्य ज्ञानस्यानन्त्याज्ज्ञेयमल्पम्...285
तदुपरागापेक्षित्वाच्चित्तस्य वस्तु ज्ञाताज्ञातम् ...271
तदेवार्थमात्रनिर्भासं स्वरूपशून्यमिव समाधिः ...187
तद्वैराग्यादपि दोषबीजक्षये कैवल्यम् ...238
तपस्स्वाध्यायेश्वरप्रणिधानानि क्रियायोगः ... 93
तस्मिन् सति श्वासप्रश्वासयोर्गतिविच्छेदः प्राणायामः .176
तस्य प्रशान्तवाहिता संस्कारात् ...192
तस्य भूमिषु विनियोगः ...188
तस्य वाचकः प्रणवः ... 56
तस्य सप्तधा प्रान्तभूमिः प्रज्ञा...144
तस्य हेतुरविद्या ... 141
तस्यापि निरोधे सर्वनिरोधान्निर्बीजः समाधिः ... 90
ता एव सबीजः समाधिः ... 82
तारकं सर्वविषयं सर्वथा विषयमक्रमं चेति विवेकजं ज्ञानम् ... 244
तासामनादित्वंचाशिषोनित्यत्वात् ... 258
तीव्रसंवेगानामासन्नः ... 43
ते प्रतिप्रसवहेयास्सूक्ष्माः ... 108
ते ह्लादपरितापफलाःपुण्यापुण्यहेतुत्वात् ... 118
तेव्यक्तसूक्ष्मा गुणात्मानः ... 262
ते समाधावुपसर्गा व्युत्थाने सिद्धयः ... 220
त्रयमन्तरङ्गं पूर्वेभ्यः ... 189
त्रयमेकत्र संयमः ... 188

द

दुःखदौर्मनस्याङ्गमेजयत्वश्वासप्रश्वासा विक्षेपसहभुवः ... 62
दुःखानुशयी द्वेषः ... 104
दृग्दर्शनशक्त्योरेकात्मतेवाऽस्मिता ... 102
दृष्टानुश्रविकविषयवितृष्णस्य वशीकारसंज्ञा वैराग्यम् 29
देशबन्धश्चित्तस्य धारणा ... 183
द्रष्टादृशिमात्रःशुद्धोऽपिप्रत्ययानुपश्यः ... 134

பக்கம். பக்கம்.

द्रष्टृदृश्ययोस्संयोगो हेयहेतुः ...126
द्रष्टृदृश्योपरक्तं चित्तं सर्वार्थम् 278

ध

धारणासु चयोग्यता मनसः ...180
ध्यानहेयास्तद्वृत्तयः ...109
ध्रुवे तद्गतिज्ञानम् ...216

न

न च तत्सालंबनं तस्याऽविषयीभूतत्वात् ...203
नचैकचित्ततन्त्रं वस्तु तदप्रमाणकं तदा किं स्यात् ...269
न तत्स्वाभासं दृश्यत्वात् ...273
नाभिचक्रे कायव्यूहज्ञानम् ...216
निमित्तमप्रयोजकं प्रकृतीनां वरणभेदस्तु ततः क्षेत्रिकवत् ...250
निर्माणचित्तान्यास्मितामात्रात् .251
निर्विचारवैशारद्ये ऽध्यात्मप्रसादः ... 84

प

परमाणुपरम महत्वान्तोऽस्य वशीकारः ... 73
परिणामतापसंस्कारदुःखैर्गुणवृत्तिविरोधाच्च दुःखमेव सर्वं विवेकिनः ...119
परिणामत्रयसंयमादतीतानागतज्ञानम् ...199
परिणामैकत्वाद्वस्तुतत्वम् ...204
पुरुषार्थशून्यानां गुणानां प्रतिप्रसवः कैवल्यं स्वरूप प्रति
ष्ठावा चितिशक्तेरिति ... 289
प्रकाशक्रियास्थितिशीलं भूतेन्द्रियात्मकं भोगापवर्गार्थं दृश्यम् ... 128
प्रच्छर्दनविधारणाभ्यां वा प्राणस्य ... 66
प्रत्यक्षानुमानागमाः प्रमाणानि.. 14
प्रत्ययस्य परचित्तज्ञानम् ... 203
प्रमाण विपर्यय विकल्पनिद्रा स्मृतयः ... 14
प्रयत्नशैथिल्यानन्तसमापत्तिभ्याम् ... 175
प्रवृत्तिभेदेप्रयोजकं चित्तमेकमनेकेषाम् ... 252
प्रवृत्त्यालोकन्यासात्सूक्ष्मव्यवहितविप्रकृष्टज्ञानम् ... 209
प्रसंख्यानेप्यकुसीदस्य सर्वथाविवेकख्यातेर्धर्ममेघः समाधिः ... 284
प्रातिभाद्वा सर्वम् ... 217

ब

बंधकारणशैथिल्यात्प्रचारसंवेदनाच्च चित्तस्य परशरीरावेशः ... 221
ब्रह्मचर्यप्रतिष्ठायां वीर्यलाभः... 167
बलेषु हस्तिबलादीनि ... 209
बहिरकल्पिता वृत्तिर्महाविदेहा ततः प्रकाशावरणक्षयः ... 228
बाह्याभ्यन्तरविषयाक्षेपी चतुर्थः ... 179

பக்கம். பக்கம்.

बाह्याभ्यन्तर स्तंभवृत्तिर्देश कालसंख्याभिः परिदृष्टो दीर्घसूक्ष्मः ...177

भ

भवप्रत्ययो विदेहप्रकृतिलयानाम् ... 38

भुवनज्ञानं सूर्ये संयमात् ...209

म

मूर्द्धज्योतिषि सिद्धदर्शनम् ...217

मृदुमध्याधिमात्रत्वात्ततोऽपि विशेषः ... 44

मैत्रीकरुणामुदितोपेक्षाणांसुख दुःखपुण्यापुण्यविषयाणां भावनातश्चित्तप्रसादनम् ... 65

मैत्र्यादिषु बलानि ...208

य

यथाभिमतध्यानाद्वा ... 73

यमनियमासनप्राणायामप्रत्याहार धारणा ध्यानसमाधयोऽष्टावङ्गानि ...150

योगश्चित्तवृत्तिनिरोधः ... 5

योगाङ्गानुष्ठाना दशुद्धिक्षये ज्ञानदीप्तिराविवेकख्यातेः ...146

र

रूपलावण्य बलवज्रसं हननत्वानि कायसंपत् ...235

व

वस्तुसाम्येऽपि चित्तभेदात्तयोर्विभक्तः पन्थाः ...266

वितर्कबाधने प्रतिपक्षभावनम् . 160

वितर्क विचारानन्दास्मितारूपानुगमात्संप्रज्ञातः ... 32

वितर्काहिंसादयः कृतकारिताऽनुमोदिता लोभक्रोध मोहपूर्वका मृदुमध्याधिमात्रा दुःखाज्ञानानन्तफला इति प्रतिपक्षभावनम्... 161

विपर्ययो मिथ्याज्ञानमतद्रूपप्रतिष्ठम् ... 18

विरामप्रत्ययाभ्यासपूर्वः संस्कारशेषोऽन्यः ... 36

विवेकख्यातिरविप्लवाहानोपायः 143

विशेषदर्शिन आत्मभावभावनानिवृत्तिः ... 280

विशेषाविशेष लिङ्गमात्राऽलिङ्गानि गुणपर्वाणि ... 130

विशोका वा ज्योतिष्मती ... 70

विषयवती वा प्रवृत्तिरुत्पन्ना मनसः स्थितिनिबंधनी ... 68

वीतरागविषयं वा चित्तम् ... 71

वृत्तयः पञ्चतय्यः क्लिष्टाक्लिष्टाः ... 12

वृत्तिसारूप्यमितरत्र ... 10

व्याधिस्त्यानसंशयप्रमादालस्याऽविरति भ्रान्तिदर्शनाऽलब्धभूमिकत्वाऽनवस्थितत्वानि चित्तविक्षेपास्तेऽन्तरायाः ... 61

व्युत्थान निरोधसंस्कारयोर

பக்கம். பக்கம்.

भिभवप्रादुर्भावौ निरोध क्षणचित्तान्वयो निरोध परिणामः ...191

श

शब्दज्ञानानुपाती वस्तुशून्यो विकल्पः ... 19
शब्दार्थ प्रत्ययाना मितरेतराध्यासा त्संकरस्तत्प्रविभागसंयमात् सर्वभूतरुतज्ञानम्..199
शान्तोदिताऽव्यपदेश्यधर्मानुपाती धर्मी ...196
शौचसन्तोष तपस्स्वाध्यायेश्वरप्रणिधानानि नियमाः...159
शौचात्स्वाङ्गजुगुप्सा परैरसंसर्गः ...169
श्रद्धावीर्य स्मृतिसमाधिप्रज्ञापूर्वक इतरेषाम् ... 41
श्रुतानुमानप्रज्ञा सामान्यविषया विशेषार्थत्वात् ... 85
श्रोत्राकाशयोः संबंधसंयमाद्दिव्यं श्रोत्रम् ...224

स

सति मूले तद्विपाको जात्यायुर्भोगाः ...113
स तु दीर्घकालनैरन्तर्यसत्काराऽसेवितो दृढभूमिः ... 27
सत्यप्रतिष्ठायां क्रियाफलाश्रयत्वम् ...164
सत्व पुरुषयोरत्यन्तासंकीर्णयोः प्रत्ययाविशेषो भोगः परार्थात्स्वार्थसंयमात्पुरुषज्ञानम् ... 218
सत्वपुरुषयोश्शुद्धिसाम्ये कैवल्यमिति ... 246
सत्वपुरुषान्यता ख्यातिमात्रस्य सर्वभावाधिष्ठातृत्वं सर्वज्ञातृत्वं च ... 238
सत्वशुद्धिसौमनस्यैकाग्र्येन्द्रियजयात्मदर्शनयोग्यत्वानिच. 170
सदा ज्ञाताश्चित्तस्य वृत्तयस्तत्प्रभोः पुरुषस्याऽपरिणामित्वात् ... 272
समाधिभावनार्थः क्लेशतनूकरणार्थश्च ... 94
समाधिसिद्धिरीश्वर प्रणिधानात् ... 173
समानजयाज्ज्वलनम् ... 223
सन्तोषादनुत्तमःसुखलाभः... 171
संस्कारसाक्षात्करणात्पूर्वजातिज्ञानम् ... 202
सर्वार्थतैकाग्रतयोः क्षयोदयौ चित्तस्य समाधिपरिणामः... 192
सुखानुशयी रागः ... 103
सूक्ष्मविषयत्वं चालिङ्गपर्यवसानम् ... 81
सोपक्रमं निरुपक्रमं च कर्म तत्संयमादपरान्त ज्ञानमरिष्टेभ्यो वा ... 205
स्थान्युपनिमन्त्रणे सङ्गस्मयाकरणंपुनरनिष्ट—

பக்கம். பக்கம்.

प्रसंगात् ...239
स्थिरसुखमासनम् ...173
स्थूलस्वरूप सूक्ष्मान्वयार्थवत्व संयमाद्भूतजयः ...229
स्मृतिपरिशुद्धौ स्वरूपशून्ये वाऽर्थमात्रनिर्भासा निर्वितर्का ... 78
स्वप्ननिद्राज्ञानालंबनं वा ... 72
स्वरसवाही विदुषोऽपि तथा रूढोऽभिनिवेशः ...105
स्वविषयासंप्रयोगे चित्तस्वरूपानुकारइवेन्द्रियाणां प्रत्याहारः ...181
स्वस्वामिशक्त्योःस्वरूपोपलब्धिहेतुस्संयोगः ...140
स्वाध्यायादिष्टदेवतासंप्रयोगः . 172

ह

हानमेषां क्लेशवदुक्तम् ... 283
हृदये चित्तसंवित् ... 218
हेतुफलाश्रयालंबनैस्संगृहीतत्वादेषामभावे तदभावः... 259
हेयं दुःखमनागतम् ... 126

क्ष

क्षणतत्क्रमयोःसंयमाद्विवेकजं ज्ञानम् ... 241
क्षणप्रतियोगी परिणामापरान्तनिर्ग्राह्यः क्रमः ... 287
क्षीणवृत्तेरभिजातस्येव मणेःग्रहीतृग्रहणग्राह्येषु तत्स्थतदंजनता समापत्तिः ... 74

अकारादिक्रमस्समाप्तः ॥

பிருஹத் ஜாதகம்

தமிழ் மொழிபெயர்ப்பு

இதையே ஹோரை என்றும், வராஹ ஹோரை என்றும் சொல்லுவர். இதற்குப் பல வியாக்யானங்களுக் கிணங்கவும், நமது சொந்தமான பல அனுபவங்களுக் கிணங்கவும் சுலபமான தமிழ் நடையில் பதவுரை, கருத்துரை, விசேஷவுரை இவைகளை எழுதி தேவநாகரலிபியில் மூலத்துடன் வெளியிட் டிருக்கிறோம். யாவராலும் மிக்க கடினம் எனக் கருதப்படும் ஆயுர்த்தாயம், தசாந்தர்த்தசை, நஷ்ட ஜாதகம் முதலிய பாகங்களுக்கு யாவர்க்கும் புரியக்கூடிய நிலையில் மிக்க விரிவாக உரை எழுதப்பட் டிருக்கின்றது. உதாஹரணமாய் பல அனுபவ ஜாதகங்களும் கட்டங்களும் ஆங்காங்கு கொடுக்கப்பட் டிருக்கின்றன. கர்க்கர், பராசரர், சத்தியா சாரியர், யவனேசுவரர் முதலியோரின் கிரந்தங்களினின்றும், ஸாராவளியினின்றும் அந்தந்த விடத்திற்குத் தேவையான வசனங்களை எடுத்து எழுதி தமிழில் உரையுமெழுதப்பட் டிருக்கிறது. இதன் முகவுரையில் சோதிட சாஸ்திரம் நம்பத்தக்கதல்ல என்றது முதலிய வாதகங்களுக்குத் தக்க சமாதானமும், வராஹமிஹிரரின் கால நிர்ணயமும் செய்யப்பட் டிருக்கிறது. ஒவ்வொரு மனிதனும் தனது எதிர்கால நிலையை யறிந்து கொள்வது அவச்யமாதலால் சோதிடத்தை யப்பசிக்க விருப்பமுள்ளோரும், பல சாஸ்திரத்திற் பழகுகின்றவர்களும் இப் புஸ்தகத்தைப் படிப்பது மிகவுமவசியம். புஸ்தகம் டிம்மி எட்டு பக்க அளவில் சுமார் 750 பக்கங்களுள்ளது. கிலிட்டு எழுத்துடன் உயர்ந்த காலிகோ பைண்டு செய்தது. கிளேஸ். ரூ. 8 ரப். ரூ. 7

மூன்றுவேதிகளின் ஸந்தியாவந்தனம் (இரண்டாவது பதிப்பு.)

இதில் தேவநாகரம், கிரந்தம், தமிழ் ஆகிய மூன்று எழுத்துக்களிலும் ருக், யஜுஸ், ஸாமவேதிகளின் ஸந்தியா மந்திரங்களும், தமிழில் பதவுரை, கருத்துரை, விசேஷவுரைகளும் அச்சிடப்பட்டிருக்கின்றன. முந்திய பதிப்பிலில்லாத பல அபூர்வ விஷயங்கள் இப்பதிப்பில் சேர்க்கப்பட்டுள்ளன. அத்துடன் மூலம் மாத்திரமாய் மூன்று வேதிகளின் ஸந்தியா மந்திரங்களை தேவநாகரம், கிரந்தம், தமிழ் ஆகியமூன்று எழுத்துக்களில் அச்சிட்டு வெளியிட்டிருப்பதுடன் மூன்று வேதிகளுடையவும்—ஸமிதாதானம், ஔபாஸனம், பிரும்மயக்ஞம், யக்ஞோபவீததாரணம், பீஷ்மதர்ப்பணம் முதலிய கர்மங்களின் மந்திரங்களையும், கிரந்தம் தேவநாகரம் என்றஇரண்டெழுத்துக்களில் அச்சிட்டும்வெளியிட்டிருக்கிறோம். இப்பதிப்பானது கிரந்தம், தேவநாகரம் தமிழ் இம்மூன்றில் யாதானுமொன்று தெரிந்தவர்க்கும் அர்த்தமறிய மிக்க உபகாரமாயிருக்கும் என்பதில்யாதும் ஐயமில்லை. கிரௌன் 1க்கு 16 அளவில் 400 பக்கங்கள் கொண்டது. ரப் ரூ. 2-4-0. கிளேஸ் ரூ. 3.

கடலங்குடி நடேச சாஸ்திரிகள்,
72, பெரியதெருவு, திருவல்லிக்கேணி, சென்னை,